D
31 'N75
31 N75 6,
6/16 86

வெளியீடு—23—7—1975]
[Issued—23—7—1975]

வன்ட் Volume—LXIII
2, 3, 4

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

# பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை 1975 பிப்ரவரி 28

**Friday 28th February 1975**

தொகுதி LXIII—எண் 1

**Volume LXIII—No. 1**

©
*தமிழ் நாடு அரசு*
*1975*

GOVERNMENT OF TAMIL NADU
1975

*சட்டமன்றப் பேரவைத் துறை*
*சென்னை-600009.*

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-600009.*

விலை 50 காசுகள்]
PRICE 50 Paise].

D
N211,31 N75
31N25-6B
61686

# Tamil Nadu Legislative Assembly Debates

Thirteenth Session of the Fifth Legislative Assembly under the Constitution of India.

*28th February and 1st and 3rd to 5th March* 1975.

VOLUME LXIII (Nos. 1 to 5).

TABLE OF CONTENTS

*Friday, 28th February* 1975.


| | Pages. |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i—vi |
| Principal Officers of the Tamil Nadu Legislative Assembly ... ... ... ... | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Assembly with their constituencies ... | ix—xvi |
| 1. Questions and Answers ... ... ... | 1—33 |
| 2. Government Bill— | |
| The Tamil Nadu Contingency Fund (Amendment) Bill, 1975 (L.A. Bill No. 1 of 1975) ... | 33-45 |
| 3. Government Motion— | |
| Change in the order of Business of the House | 46 |

PAGES.

*Friday, 28th February 1975.—cont.*

4. Non-official Business—
   (i) The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1975 ... 46
   (ii) The Mettur Township (Abolition and Extension of Municipality) Bill, 1974 (L.A. Bill No. 57 of 1974) ... ... ... ... 47—48
   (iii) The Tamil Nadu Legislature Proceedings (Protection of Publication) Bill, 1975 ... 88
   (iv) The Tamil Nadu Agriculturists and Agricultural Labourers Debts Adjustment Bill, 1974 (L.A. Bill No. 59 of 1974) ... ... 88–100
5. Papers laid on the Table ... ... ... 100–101

*Saturday, 1st March 1975.*

1. Questions and Answers ... ... ... ... 103–136
2. Point of Order—
   Supply of Budget documents to Members ... 136
3. Presentation of the Budget for the year 1975–76 137–172
4. Papers laid on the Table ... ... ... 173

*Monday, 3rd March 1975.*

1. Questions and Answers ... ... ... 293–324
2. General discussion on the Budget for the year 1975–76 ... ... ... ... 325–388, 392–402
3. Statement by Minister for Food and Co-operation *re.*—Case referred to by Dr. H. V. Hande ... 388–392
4. Correction Statement by Minister for Public Works ... ... ... ... 399–400
5. Papers laid on the Table ... ... ... 402–404



*Tuesday, 4th March 1975*

PAGES.

1. Questions and Answers ... ... ... 411–451
2. Announcement—
   Message from the Governor ... ... 451
3. Points of Order—
   (*a*) Correction statement by Minister for Public Works ... ... ... ... 452–464
   (*b*) Opportunities for Ruling Party Members to speak ... ... ... 464–465
4. Calling Attention—
   Drinking water scarcity in Trichy Town ... 462–464
5. General discussion on the Budget for the year 1975–76—*cont.* .. ... ... 465–543
6. Papers laid on the Table ... ... ... 543–544

*Wednesday, 5th March 1975.*

1. Obituary reference—
   Demise of Thiru R. Thangavelu, ex-M.L.A. 549
2. Questions and Answers ... ... ... 550–583
3. Announcement—
   Business of the House ... ... ... 583
4. General discussion on the Budget for the year 1975-76—*cont.* ... ... ... ... 583–664
5. Papers laid on the Table ... ... ... 664–665

## *How to use the Index.*

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g. (M) for Motion, (C. A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)' 'Council(s)' 'Corporation(s)', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below :—

| | | |
|---|---|---|
| A.M./Ad. Motion | ... | Adjournment Motion. |
| Ann. | ... | Announcement. |
| B. O. H. | ... | Business of the House. |
| C. A. | ... | Calling Attention to a matter of urgent public importance. |
| C. A. St | ... | Calling Attention Statement |

| | | |
|---|---|---|
| Consid. | ... | Consideration stage of a Bill.<br>This stage includes—<br>(i) Motion to refer to Select/Joint Select Committee.<br>(ii) Amendment to refer to Select/Joint Select Committee.<br>(iii) Amendment to circulate.<br>(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.<br>(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc. |
| Consid. Cl. | .. | Consideration of clauses of a Bill. |
| D. E. E. | ... | Demands for Excess Expenditure. |
| Dis. S. D. or D.S.D. | ... | Discussion for Short Duration on an urgent matter of administration. |
| D. S. G. | ... | Demands for Supplementary Grants. |
| G. A. | ... | Governor's Address. |
| G. D. | ... | General Discussion. |
| H. A. H Dis./H. H. D. | ... | Half-hour Discussion. |
| Int. | ... | Introduction stage of a Bill. |
| L. A. | .. | Legislative Assembly. |
| L. C. | ... | Legislative Council. |
| M. | ... | Motion. |
| P. M. | ... | Privilege Motion. |
| R./Res. | ... | Resolution. |
| St. | ... | Statement. |

## தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

---

### தமிழ் நாடு ஆளுநர்.

மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.

---

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, ஆயத்துறை.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** (கல்வி சுற்றுலாத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்டமன்றம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன்** (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுச் சுகாதாரம், மருத்துவம், நகர அமைப்பு.

4. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன்** (பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பின்தங்கிய வகுப்பினர் நலன், பத்திரப் பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான-கிராம தான இயக்கங்கள்.

5. **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

6. **மாண்புமிகு திரு. செ. மாதவன்** (உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறுநிதி உதவி, ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

7. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு நுகர்வுக் கட்டுப்பாடு, கம்பெனிகள், மின்சாரம், முகமதியர் அறக் கட்டளைகள்.

8. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பகுதி, வேளாண்மை பொறியியல் சம்பந்தமான பகுதிகள், வட்டாரக் கூட்டுறவுச் சங்கங்கள், இணைப்பு அளவிலான கழகங்கள் உட்பட்ட மாவட்டச் சங்கங்கள்.

9. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சி தலைவர்கள், இனுர் அணி சேரணி.

10. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், குடிநீர் வாரியம்.

11. மாண்புமிகு திரு. க. இராசாராம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர், வீட்டு வசதி, இட வசதிக் கட்டுப்பாடு, எடைகள், அளவைகள் குறித்த சட்டம், புள்ளிவிவரம், வேலை வாய்ப்பும் பயிற்சி அளித்தலும், குடிசை மாற்று வாரியம்.

12. மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மகளிர்-சிறுவர் நலம் உட்பட சமூக நலம், மீனவர் இரவலர்கள் விடுதி, அநாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகளும் கண்காணிப்புப் பணிகளும்.

13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (வணிக வரித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வணிக வரிகள், சிங்கோனு உட்பட காடுகள், கால்நடை வளர்ப்பு, கடன் கொடுத்தல் குறித்த சட்டம், கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல், சீட்டுகள் குறித்த சட்டம்.



14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள்-அச்சுத்துறை, அரசு அச்சகம்.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அற நிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அறக் கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில் கள் திட்டம், பால் வழங்குத் துறை, பால்வள முனைப்புத் திட்டங் கள், தமிழ் நாடு பால்வள நிறுவனங்கள், விளம்பரம், பொதுத் தொடர்பு, படச் சுருள் தொழில் நுட்பவியல்.

16. மாண்புமிகு திரு. என். இராசாங்கம் (அரிசன நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அரிசன நலம், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள், திரைப்படச் சட்டம்.

8. THE HON. THIRU Si. Pa. ADITANAR : (Minister for Agriculture) in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing, Agro-Engineering and Services Co-operative Societies at the Block, District and apex level including the Federation.

9. THE HON. THIRU A. P. DHARMALINGAM : (Minister for Revenue) in-charge of Revenue, Board of Revenue, Districts Revenue Establishment, Deputy Collectors, Youth Service Corps and Prosperity Brigade.

10. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY : (Minister for Local Administration), in-charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions and Water Board.

11. THE HON. THIRU K. RAJARAM : (Minister for Labour), in-charge of Labour, Housing, Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics, Employment and Training and Slum Clearance Board.

12. THE HON. THIRU C. V. M. ANNAMALAI : (Minister for Social Welfare), in-charge of Social Welfare including Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages and Approved Schools and Vigilance Service.

13. THE HON. THIRU O. P. RAMAN : (Minister for Commercial Taxes in-charge of Commercial Taxes, Forest including Cinchona, Animal Husbandry, Legislation on Money Lending, Rural Indebtedness and Legislation on Chits.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Transport), in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE HON. THIRU M. KANNAPPAN : (Minister for Religious Endowments), in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk, Operation Flood Project, Tamil Nadu Dairy Development Corporation, Information and Public Relations and Film Technology.

16. THE HON. THIRU N. RAJANGAM : (Minister for Harijan Welfare) in-charge of Harijan Welfare, Indians Oversees and Refugees and Evacuees, Newsprint Control, Passports and Cinematograph Act.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன், பி.ஓ.எல்., எம்.ஏ.

### பேரவைத் துணைத் தலைவர்

திரு. என். கணபதி, பி.எஸ்.ஸி., பி.எல்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. டாக்டர் க. நாகராசன்.
2. திரு. துரைமுருகன்.
3. திரு. கு. காமாட்சி.
4. திரு. கா. காளிமுத்து.
5. திரு. என். டென்னிஸ்.
6. திரு. கே. கந்தசாமி.

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

### குழு அலுவலர்

திரு. ப. சுப்பராயன், எம். ஏ.

### உதவிச் செயலாளர்கள்

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ.
திரு. கே. பாலகுரு, பி.ஏ.

### விவாதப் பதிப்பாளர்

திரு. கே. சுந்தரராசன்.

### எஸ்டேட் அதிகாரி

திரு. வி. சீதாராமன், பி.காம்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 30 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்) | பண்ருட்டி. |
| 31 இராமநாதன், திரு. சி. .. . | அறந்தாங்கி. |
| 32 இராமலிங்கம், திரு. இரா. .. .. | தூத்துக்குடி. |
| 33 இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி (செ.வ.). |
| 34 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.). |
| 35 இராமன், திரு. மூ. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 36 இராஜாங்கம், மாண்புமிகு திரு. என். (அமைச்சர்). .. | குறிஞ்சிப்பாடி (செ.வ.). |
| 37 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. .. .. | கன்னியாகுமரி. |
| 38 இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 39 இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |
| 40 எட்டியப்பன், திரு. பூ. .. .. .. | பெரணமல்லூர். |
| 41 எட்மண்ட், திரு. க. உரோ. .. .. | திருச்செந்தூர். |
| 42 கணபதி, மாண்புமிகு திரு. என். (பேரவைத் துணைத் தலைவர்). .. | பாபநாசம். |
| 43 கணபதி, திரு. டி. .. .. .. | நாங்குநேரி. |
| 44 கணேசன், திரு. எல். .. .. | ஒரத்தநாடு. |
| 45 கணேசன், திரு. சி. .. .. .. | குற்றாலம். |
| 46 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | கிணத்துக்கடவு. |
| 47 கண்ணன், திரு. எம். ஆர். .. .. | பேசின் பிரிட்ஜ். |
| 48 கதிரவன், திரு. கா. மு. .. .. .. | தென்காசி. |
| 49 கந்தசாமி, திரு. கே. .. .. .. | உசிலம்பட்டி. |
| 50 கந்தசாமி, திரு. கே. பி. .. .. .. | சாத்தான்குளம். |
| 51 கந்தசாமி, திரு. எம். .. .. .. | குளித்தலை. |
| 52 கந்தப்பன், திரு. செ. .. .. .. | திருச்செங்கோடு. |
| 53 கரிவேங்கடம், திரு. மா. வெ. .. .. | பாலக்கோடு. |
| 54 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 55 கருணாநிதி, திரு. தாழை மு. .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 56 கருணைநாதன், திரு. சோ. .. .. | கூனூர். |
| 57 கருப்பையா, திரு. ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ.வ.) |
| 58 காசிராமன், திரு. நா. .. .. .. | கும்பகோணம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 59 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு. | முதுகளத்தூர். |
| 60 காமாட்சி, திரு. கு. .. .. .. | திருவரம்பூர். |
| 61 கார்த்திசன், திரு. வீ. .. .. .. | இராதாபுரம். |
| 62 காவேரிமணியம், திரு. சொ. .. .. | திருப்பரங்குன்றம். |
| 63 காளிமுத்து, திரு. கா. .. .. .. | சிவகாசி. |
| 64 கிட்டப்பா, திரு. என். .. .. .. | மாயூரம். |
| 65 கிருட்டிணன், திரு. நா. .. .. .. | பேரணம்பட்டு (செ. வ.). |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. .. | நெல்லிக்குப்பம். |
| 67 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 68 கிருஷ்ணன், திரு. கே. ஆர். .. .. | ஊத்தங்கரை. |
| 69 குப்பல் இராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 70 குமாரசாமி, திரு. அ. சே. .. .. | திருக்கோயிலூர். |
| 71 குமாரசாமி, திரு. கே. என். .. .. | பல்லடம். |
| 72 குருசாமி, திரு. நா. வெ. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 73 கேசவலு, திரு. தே. .. .. .. | கள்ளக்குறிச்சி |
| 74 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். .. | உதனப்பள்ளி |
| 75 கோபால், திரு. எம். .. .. .. | குன்னத்தூர் (செ. வ.). |
| 76 கோபால், திரு. கே. பி. .. .. .. | கம்பம் |
| 77 கோவிந்தசாமி, திரு. வி. செ. .. .. | காவேரிப்பட்டிணம். |
| 78 கோவிந்தராசன், திரு. ஆர். .. .. | கடலூர் |
| 79 கோவிந்தராசன் துரை, திரு. .. .. | கந்தர்வகோட்டை. |
| 80 கோவிந்தன், மாண்புமிகு புலவர் கா. (பேரவைத் தலைவர்). | செய்யாறு |
| 81 கோவை செழியன், திரு. .. .. | காங்கேயம் |
| 82 சகாதேவன், திரு. எஸ். .. .. | செஞ்சி |
| 83 சங்குமுத்து தேவர், திரு. ச. .. .. | அம்பாசமுத்திரம் |
| 84 சதாசிவம், திரு. செ. .. .. .. | ஆண்டிமடம். |
| 85 சண்முகசுந்தரம், திரு. அ. ப. .. .. | பொள்ளாச்சி. |
| 86 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 87 சண்முகம், திரு. பெரி. .. .. .. | திருவாடானை |
| 88 சண்முகம், திரு. மு. .. .. .. | விழுப்புரம் |
| 89 சத்தியமூர்த்தி, திரு. மு. .. .. | புதுக்கோட்டை. |
| 90 சத்தியவாணிமுத்து, திருமதி .. .. | பெரம்பூர் (செ.வ.). |
| 91 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. . | இராமநாதபுரம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 92 சம்பத், திரு. டி. வி. | செம்பனூர்கோவில். |
| 93 சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 94 சாரதி, திரு. மா. பா. | வேலூர். |
| 95 சிதம்பரம், திரு. சித. | காரைக்குடி. |
| 96 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. | சேரன்மகாதேவி. |
| 97 சிவபெருமான், திரு. கோ. | அரியலூர். |
| 98 சிறைமீட்டான், திரு. தொ. க. | பரமக்குடி (செ.வ.) |
| 99 சீனிவாசன், திரு. பெ. | விருதுநகர். |
| 100 சீனிவாசன், திரு. தொ. ப. | போளூர். |
| 101 சின்னசாமி, திரு. அ. | செயங்கொண்டம் (செ.வ.) |
| 102 சின்னசாமி, திரு. ஆர். | தர்மபுரி. |
| 103 சின்னசாமி திரு. மு. | மொடக்குறிச்சி. |
| 104 சின்னசாமி, திரு. வ. | ஏற்காடு (ஆ. வா.) |
| 105 சின்னராசு, டாக்டர் ச. அ. | ஓசூர் (செ. வ.) |
| 106 சின்னவெள்ளையன், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 107 சுந்தரம், திரு. ஒ. என். | திண்டுக்கல். |
| 108 சுப்பிரமணியம், திரு. எ. | சிங்காநல்லூர். |
| 109 சுப்பிரமணியம், திரு. எஸ். கே. | சத்தியமங்கலம். |
| 110 சுப்பிரமணியம், திரு. கே. எம். | தியாகராயநகர். |
| 111 சுப்பிரமணியன், திரு. மா. | ஈரோடு. |
| 112 சுப்பிரமணியன், திரு. வீ. | உளுந்தூர்பேட்டை. |
| 113 சுப்பு, திரு. க. | ராஜபாளையம். |
| 114 சுப்பையா, திரு. ஆ. கு. | கோட்டூர் (செ. வ.) |
| 115 சுப்பையா, திரு. கே. வி. | ஆலங்குடி. |
| 116 சுப்பையா, திரு. ச. | சங்கரன்கோவில் (செ. வ. |
| 117 சுப்பையா, திரு. எ. ஆர். | கடையநல்லூர். |
| 118 சுருளிவேல், திரு. மு. | போதிநாயக்கனூர். |
| 119 சுரேந்திரன், திரு. எம். | மேட்டூர். |
| 120 சுவாமிதாஸ், திரு. எ. | பத்மநாபபுரம். |
| 121 செபமாலை, திரு. கோ. | மங்களூர் (செ. வ. |
| 122 ஜெயராமன், திரு. சி. | சேலம்-1. |
| 123 செல்லத்துரை, திரு. வீ. | ஓமலூர்.(செ. வ |
| 124 செல்லையா, திரு. குழ | பேராவூரணி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 125 செல்வராஜ், திரு. எம். | விருத்தாசலம். |
| 126 சேதுராமன், திரு. சி. | சிவகங்கை. |
| 127 சோணையா, திரு. த. | மானாமதுரை. |
| 128 சோமசுந்தரம், திரு. ந. | வலங்கைமான் (செ. வ.) |
| 129 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். | அருப்புக்கோட்டை. |
| 130 சௌந்தரபாண்டியன், திரு. பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 131 டென்னிஸ், திரு. என். | கிள்ளியூர். |
| 132 தங்கமணி, திரு. கே. டி. கே. | மதுரை-மேற்கு. |
| 133 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 134 தருமலிங்கம், திரு. ந. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 135 தவமணித்தேவர், திரு. வி. | சேடப்பட்டி. |
| 136 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. | நாட்ராம்பள்ளி |
| 137 தியாகராசன், திரு. அ. | திருமயம். |
| 138 தியாகராசன், திரு. இ. எஸ். | திருத்தணி. |
| 139 திருப்பதி, திரு. கு. | மதுரை (சென்ட்ரல்) |
| 140 துரைசாமி திரு. வ. க. | குடியாத்தம். |
| 141 துரைசாமி, திரு. சு. | திருப்பூர். |
| 142 துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 143 துரைராஜ், திரு. சு. ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 144 தூயமணி, திரு. மே. சி. | மேட்டுப்பாளையம். |
| 145 தேவராசன், திரு. எம். | உதகமண்டலம். |
| 146 தேவேந்திரன், திரு. அ. | நன்னிலம் (செ. வ.) |
| 147 தோப்பூர் திருவேங்கடம், திரு. | கணியம்பாடி. |
| 148 நடராசன், திரு. ஈ. எம். | அந்தியூர். |
| 149 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 150 நரசிம்மன், திரு. எ. சி. | ஆரணி. |
| 151 நல்லசாமி, திரு. எஸ். | கரூர். |
| 152 நாகராஜன், டாக்டர் க. | வடமதுரை. |
| 153 நாகலிங்கம், திரு. பா. | பொன்னேரி (செ.வ. |
| 154 நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டன்சத்திரம் |
| 155 நாச்சியப்பன், திரு. வ. எம். டி. | ஆத்தூர். |
| 156 நாச்சியப்பன், திரு. ந. | சங்கராபுரம். |
| 157 நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 158 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்). | திருவல்லிக்கேணி. |
| 159 நைனுமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 160 பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 161 பத்மாவதி, திருமதி. எ. கே. | மூகையூர். |
| 162 பரந்தாமன், திரு. ஆ. | கடம்பத்தூர். |
| 163 பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம். |
| 164 பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 165 பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 166 பழனிசாமி, திரு. என். கே. | பெருந்துறை. |
| 167 பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில். |
| 168 பழனிச்சாமி, புலவர் சி. | பழனி (செ.வ.) |
| 169 பழனியப்பன், டாக்டர் ச. மு. | கோபிசெட்டிபாளையம். |
| 170 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 171 பழனிவேலன், திரு. க. | வாசுகி. |
| 172 பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 173 பழனிவேலு, திரு. பி. | ஆத்தூர். |
| 174 பழனிவேல் ராஜன், திரு. | தேனி. |
| 175 பன்னீர் செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ. வ.) |
| 176 பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ. வ.) |
| 177 பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 178 பாலசுந்தரம், திரு. வை. | அச்சரபாக்கம் (செ.வ.) |
| 179 பாலையா, திரு. வ. | கொளச்சல். |
| 180 பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 181 பெரியசாமி, திரு. தி. ஏ. | அவிநாசி. |
| 182 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில் |
| 183 பெருமாள், திரு. எ. ஆர். | காரியப்பட்டி. |
| 184 பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ. வ.) |
| 185 பொன் சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 186 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 187 பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 188 பொன்னுரங்கம், திரு. எ. எம். | சோளிங்கபுரம். |
| 189 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 190 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 191 மதியழகன், திரு. கே.எ. | ஆயிரம் விளக்கு. |
| 192 மருதாசலம், திரு. என். | பேரூர் (செ. வ.). |
| 193 மலைக்கண்ணன், திரு. வீ. | இளையாங்குடி. |
| 194 மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |
| 195 மாணிக்கம், திரு. என். | பென்னகரம். |
| 196 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 197 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். (இராமநாதபுரம் மாவட்டம்), |
| 198 மாரிமுத்து, திரு. எ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 199 மாரிமுத்து, திரு. மூ. | தலைவாசல் (செ.வ.) |
| 200 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |
| 201 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 202 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. | லால்குடி. |
| 203 முத்து, திரு. வ. | சங்கரி (செ. வ.) |
| 204 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 205 முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிறி. |
| 206 முத்துவேல், திரு. ந. | வானூர் (செ. வ.) |
| 207 முத்தையா, திரு. கே. கே. | கடலூர். |
| 208 முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 209 முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 210 முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 211 முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 212 முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 213 மொய்தீன், திரு. திருப்பூர் எ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 214 மோசஸ், திரு. ம. | நாகர்கோயில். |
| 215 ரங்கநாதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 216 ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 217 ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர் (வட ஆர்க்காடு மாவட்டம்). |
| 218 ராமதாசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ. வ.) |
| 219 இராஜா, திரு. எ. எம். | பவானி. |
| 220 ராஜாராம், திரு. ஜி. | திண்டிவனம். |
| 221 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 222 லத்தீப், திரு. எம். ஏ. | வாணியம்பாடி. |
| 223 வகாப், திரு. கே. ஏ. | ராணிப்பேட்டை. |
| 224 வடிவேலு, திரு. சீ. க. | தொட்டியம். |
| 225 வடிவேல், திரு. எஸ். | சீர்காழி (செ. வ.) |
| 226 விசுவநாதன், திரு. செ. கோ. | செங்கற்பட்டு. |
| 227 வீராசாமி, திரு. நா. | ஆற்காடு. |
| 228 வெங்கடசாமி, திரு. பி. | ஹோசூர். |
| 229 வெள்ளத்துரை, திரு. அ. | வாசுதேவநல்லூர். |
| 230 வேதாசலம், திரு. மு. | வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்). |
| 231 வேலப்பன், திரு. சி. வே. | கபிலமலை. |
| 232 வேழவேந்தன், திரு. கா. | கும்மிடிபூண்டி. |
| 233 ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டார். |
| 234 ஜோதி வெங்கடாசலம், திருமதி. | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 235 ஹாண்டே, டாக்டர் எச். வி. | பார்க் டவுன் (சென் நகரம்). |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்:—

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.

2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.

3 திரு. கோவிந்த் சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## வெள்ளிக்கிழமை, 1975 பிப்ரவரி 23

சென்னை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

**நட்சத்திரக்குறியிட்ட வினாக்கள்.**

**நீராறு உபரி நீர்.**

*2 குறுகியகால வினா—திரு. ஏ. சுப்பிரமணியம்,
திரு. கோவை செழியன்,
திரு. என. கே. பழனிசாமி,
திரு. ஆ. கு. சுப்பையா: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் பரம்பிக்குளம்-ஆளியாறு பாசனத் திட்டத்தைச் சார்ந்த நீராறு ஆற்றின் உபரி நீர் கோவை மாவட்டத்தின் சோலையாற்றில் விடப்படாமல் பிப்ரவரி 1-ந் தேதி முதல் கேரளத்திற்குள் சென்று விடுகிறது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்குக் காரணம் யாது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) தலைவர் அவர்களே, நீராறு நீர் தமிழ்நாட்டுக்கு பிப்ரவரி 1-ஆம் நாளிலிருந்து திருப்பி விடப்பட்டிருக்கவேண்டும். நீரைத் திருப்பி விடுவதில் சில நாட்கள் தாமதம் ஏற்பட்டது. நீர் விடுவதை முறைப்படுத்தும் "ஷாப்ட்" அமைப்புப் பணி நடந்துகொண்டிருக்கையில், பாறை ஒன்று தொழிலாளி ஒருவரின்மேல் விழுந்து அவர் இறந்ததால் இத்தாமதம் ஏற்பட்டது. வினாடிக்கு 17 கன அடி வரையறுக்கப்பட்ட அளவுக்கு நீரைத் திருப்பி விடுகிற வகையில் 24-2-1975 முதற்கொண்டு இப்பணி போதிய அளவுக்கு முன்னேறியுள்ளது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, "ஷாப்ட்" அமைப்பதற்கான முடிவு எடுத்து, இங்கே பொதுப்பணித்துறையிலிருந்து டிசைன் அப்ரூவ் ஆகிச் செல்வதற்குத் தாமதம் ஏற்பட்ட காரணத்தினால், இம்மாதிரி ஏற்பட்டது என்பது உண்மையா? அப்படியானால், அதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, நீராற்றின் நீர் வந்துகொண்டிருக்கும்போது நீரைத்தடுத்து நிறுத்தி டன்னல் வழியாக தமிழ் நாட்டுக்குத் திருப்பிவிடுகிறோம். அந்த டன்னல் வழியாக போகும்போது டன்னலுக்கு கண்ட்ரோல் ஷாப்ட் போடவேண்டியிருக்கிறது.

எப்போதாவது டன்னலுக்குப் பழுது ஏற்பட்டு, அதைப் பழுதுபார்க்க வேண்டுமானால், தண்ணீரை நிறுத்திவிட்டு, உள்ளே கண்ட்ரோல் ஷாப்ட் (கதவு) போடவேண்டியிருக்கிறது. அதற்கான டிசைன் இங்கே போட்டுக் கொண்டிருந்தார்கள். அதில சிறிது தாமதம் ஆயிற்று என்பதை ஒத்துக்கொள்ளுகிறேன். டிசைன் போடுவதில் கொஞ்சம் காலதாமதம் ஆகி யிருக்கிறது. நானும் விசாரித்தேன். இப்பொழுது பிப்ரவரி 1-ஆம் தேதியிலிருந்து நாம் தண்ணீரைத் திருப்பி விட்டுக்கொள்ளலாம், நமக்கிருக்கும் ஒப்பந்தப்படி. ஆனால், அதற்குள்ளாக, கதவு பொருத்துவதற்கு கான்க்ரீட் போடவேண்டும். கான்க்ரீட் போடுவதற்குக் கொஞ்சம் தாமதம் ஆகியிருக்கிறது. கான்க்ரீட் போட்டுக்கொண்டிருக்கும் போது மேலேயிருந்து பெரிய பாறையொன்று விழுந்த காரணத்தினால் ஒரு தொழிலாளி அங்கே நசுங்கிச் செத்துவிட்டான். அதனால் தொழி லாளிகள் வேலை செய்வது பத்துப் பதினைந்து நாட்கள் நின்றுவிட்டது. ஒருவருக்கு அத்தகைய நிகழ்ச்சி நேர்ந்துவிட்டதால் தொழிலாளர்கள் சற்றுத் தயக்கம் காட்டியதனால் வேலை நின்றிருந்து, இப்பொழுது தண்ணீர் தமிழ்நாட்டுக்கு திருப்பிவிடப்பட்டுவிட்டது என்பதை தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு கோவை செழியன்</u>; தலைவர் அவர்களே, பத்திரிகைச் செய்திகளின்படி ஏறத்தாழ ஐயாயிரம் ஏக்கரா நிலம் இதனால் தண்ணீர் இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது தெரிகிறது. சில பத்திரிகைகளில் 500 ஏக்கரா என்று போட்டிருக்கிறார்கள். ஆனால், எது சரி என்பதை அமைச்சர் சொல்ல வேண்டும். ஏறக்கெனவே தண்ணீர் இல்லாமல் பரம்பிக்குளம் – ஆழியாறு திட்டத்தின் கீழுள்ள பகுதிகளில் பயிர்களெல்லாம் காய்ந்துகொண்டிருக்கின்றன. அரசாங்கத் தின் கவனக் குறைவினால் இத்தகைய காரியங்களெல்லாம் நடைபெற்றிருக் கின்றன. ஒரு தொழிலாளி நசுங்கி கீழே இறந்து போய்விட்டார் என்றும், அதற்காக பத்து நாட்கள் வேலை நின்றுவிட்டது என்று சொல்வது உண்மையிலேயே சரியான காரியம் அல்ல. அரசாங்க அதிகாரிகளுடைய கவனக் குறைவுதான் இதற்குக் காரணமாக இருக்கவேண்டும். அப்படிப்பட்ட அதிகாரிகளை உடனடியாக வேலையிலிருந்து நீக்கவோ அல்லது உரிய தண்டனை வழங்கவோ இந்த அரசு உத்தரவிட்டதா? அதற்குக் காரணமாக இருந்தவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறியலாமா?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்</u>; தலைவர் அவர்களே, பிப்ரவரி மாதம் 1-ஆம் தேதியிலிருந்து அந்த ஆற்றிலே வந்த தண்ணீரினுடைய அளவு குறித்து குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். ஒரு நாளைக்கு 17 க்யூ செக்ஸ் தண்ணீர் போயிருக்கிறது. மிகக் குறைவான தண்ணீர்தான் போயிருக்கிறது. ஒருவேளை அண்டை மாநிலத்திற்குப் போய்ச் சேர்ந் திருந்தால் எவ்வளவு போய்ச் சேர்ந்திருக்கும் என்று நான் அதிகாரி களைக் கேட்டேன். அவர்கள் கொடுத்திருக்கும் கணக்குப்படி பார்த்தால் தண்ணீர் அண்டை மாநிலத்திற்குப் போய்ச் சேர்வதற்குள் வழியிலேயே "எவாபரேஷன் லாஸ்" ஆகியிருக்கும் என்றார்கள். தண்ணீர் போயிருக் கிறதென்றாலும், பத்திரிகைகளில் பயங்கரமாகப் போடப்பட்டிருக்கிற அந்த அளவுக்கு ஏற்பட்டுவிடவில்லை. மேலேயிருந்து பெரிய பாறை



யொன்று கீழே விழுந்து, அதன் காரணமாக ஒரு தொழிலாளி நசுங்கிச் செத்துவிட்டான். அதனால் மற்ற தொழிலாளிகள் அங்கே போய் வேலை செய்வதற்கு இயற்கையாகவே அச்சம் ஏற்படும். பயம் காரண மாக வேலைக்குச் செல்லவில்லை. இடத்தைச் சரிபார்த்தவுடன் தொழி லாளர்கள் வேலைக்குத் திரும்பிவிட்டார்கள். தைரியமாக வேலையை முடித்த அதிகாரிகளைப் பாராட்டவேண்டும். நடவடிக்கை எடுக்கத் தேவையிருந்தால் எடுக்கலாம். ஆனால், அவர்கள் வேலையை முடித்து விட்டார்கள். இருந்தாலும், ஓரளவு காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. அதற்காக மேற்கொண்டு நான் விளக்கம் கேட்டிருக்கிறேன் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. என். கே. பழனிசாமி</u>: தலைவர் அவர்களே, "ஆக்ஸிடெண்ட்" ஏற்பட்டதற்கு விவசாயிகள் பொறுப்பல்ல. தண்ணீர் வராததன் காரணமாக பயிர்கள் வாடி வதங்கியிருப்பதால், இந்தச் சந்தர்ப் பத்தை உபயோகப்படுத்தி அவர்களுக்கு வரி வஜா செய்வதற்கு சர்க்கார் சிபார்சு செய்யுமா?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்</u>: தலைவர் அவர்களே, இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வரி வஜா செய்யவேண்டிய தில்லை. நியாயமாக வரி வஜா செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டால் அதனை வருவாய்த்துறை கவனிக்கும்.

<u>திரு. ஆ. கு. சுப்பையா</u>: தலைவர் அவர்களே, மேல் நீராற்றி லிருந்து வள்ளிமலையிலுள்ள கால்வாய் மதகுகள் அமைப்பதற்கு எவ்வளவு ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டது? மதிப்பீடு செய்வதில் ஏற்பட்ட தவற்றினால் இந்தக் கால தாமதம் ஏற்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU P. U. SHANMUGAM : The cost of control structure is Rs. 30 lakhs and the cost of shutters would be about Rs, 12 lakhs.

<u>திரு. நா. வீராசாமி</u>: தலைவர் அவர்களே, ஒரு பாறை விழுந்து தொழிலாளி இறந்ததால் இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி இறந்துவிட்ட தொழிலாளி யின் குடும்பத்திற்கு நம்முடைய அரசாங்கம் ஏதாவது உதவி செய்திருக்கிறதா?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்</u>: தலைவர் அவர்களே அரசாங்கம் அந்த ஒப்பந்தக்காரிடத்திலிருந்து பணத்தைப் பிடித்து வைத்திருக்கிறார்கள். பின்னர் தொழிலாளி குடும்பத் திற்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பணம் அந்தக் குடும்பத்தாருக்குக் கொடுக்கப்படும்.

திரு. கே. என். குமாரசாமி : அடிக்கடி யானைகள் விழுந்து அதனால் தண்ணீர் வருவது பாதிக்கப்பட்டு விவசாயம் பாதிக்கப் படுகிற சூழ்நிலை அடிக்கடி ஏற்படுகிறது. அதைத் தவிர்க்க நட வடிக்கை எடுப்பது பற்றி செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: யானை விழுவதைத் தடுக்க ஃபென்ஸ் போடப்பட்டிருக்கிறது. இதனால் இப்போது தண்ணீரின் கொள்ளளவு குறைந்திருப்பதால் அதுபற்றி அதிகாரிகள் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இறந்துபோன தொழிலா ளிக்கு குறைந்தபட்சம் எவ்வளவு தொகை தர அரசு உத்தேசித் திருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: என்னிடத்தில் அதுபற்றிய புள்ளி விவரம் இல்லை. ஏறக்குறைய 6,000 ரூபாய் என்று நினைக்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: அமைச்சர் அவர்கள் அளித்த விடை யில் இருந்து இரண்டு விஷயங்கள் தெளிவாகிறது. ஏற்கனவே, கோவை மாவட்டம் பாசன வசதியற்ற மாவட்டம். அங்கு டிசைன்கள் தயாரிப்பதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. அது ஒரு கடுமை யான நிலை. அது ஏன் ஏற்பட்டது? யானை விழுவது பற்றி அமைச்சர் அவர்கள் சொல்லும்போது ஃபென்ஸிங் போட்டதால் தண்ணீரின் கொள்ளளவு குறைந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். இலாகா அதிகாரிகள், தொழில் நுட்பம் அறிந்த வர்கள் அதை எல்லாம் கணக்கில் எடுத்து அதைப் போடவில்லையா? ஆகவே, அந்த இலாகாவில் கோளாறு என்பது தெளிவாகிறபடி யால் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து அதைத் திருத்த முயலுவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இலாகாவிலே கோளாறு இருப்பதாகச் சொல்லுகிறார்கள். டிசைன் போட பூண்டியில் ஒரு இடம் வைத்திருக்கிறார்கள். டிசைன் போடுவதில் அதிகாரிகளுக்குள் கருத்து வேறுபாடு வந்திருக்கிறது. இஞ்சினியர்கள் அதைப் பரிசீ லித்து முடிவு எடுத்தார்கள். முடிவு எடுப்பதில் சிறிது காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அறிந்து தலைமைப் பொறியாளருக்குத் தகவல் தந்து காலதாமதத்திற்குக் காரணம் என்ன என்று விளக்கம் கேட்கப்பட்டிருக்கிறது. விளக்கம் வந்த பிறகு ஏதேனும் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆ. கு. சுப்பையா: பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தில் நமது அரசுக்கும் கேரள அரசுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் என்ன?





மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மேல் நீராறுத் தண்ணீரை அக்டோபர், நவம்பர், டிசம்பர், ஜனவரி ஆகிய நான்கு மாதங்கள் தவிர மீதி மாதங்களில் உபயோகத்திற்கு எடுத்துக் கொள்ளலாம் என்பதுதான் ஒப்பந்தம்.

## தொழில் நுட்பக் கல்விக் கழகம்

*101 வினா —திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழில் நுட்பக் கல்வி போர்டு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் முக்கிய பணிகள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) மாநிலத்தின் தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி அபி விருத்தித் திட்டங்களை ஒருங்கிணைத்து செயலாக்க அரசுக்கு ஆலோசனை கள் கூறுவதும், மாநிலத்தில் உள்ள தொழில் நுட்பப் பயிலகங்களில் பயிற்றுவிக்கப்படும் பொறியியல் பயிற்சியின் தரத்தை மேம்படுத்துவதும், அப்பயிலகங்களில் பயிற்றுவிக்கும் பயிற்சி வகுப்புகளுக்கு அனுமதி வழங் குவதும், பயிலகங்களுக்கும், தொழில்கூடங்களுக்கும் இடையே நட்புறவைப் பேணுவதும். மற்றும் தொழில் நுட்பக் கல்வித் தேர்வுகள் நடத்துவதும் அதன் தலையாய பணிகளாகும் .

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த போர்டு உருவாக்கப்பட்ட பிறகு தொழில் நுட்ப வளர்ச்சிக்கு புதிய திட்டம் வகுக்கப் பட்டிருக் கிறதா ? விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆறு மாதத்திற்கு ஒரு தடவை இந்த போர்டு கூடுகிறது. புதிய வகுப்புகள் ,துறைகள் எல்லாம் பொறியியல் கல்லூரிகளிலும், பல் தொழில் நுட்பப்பள்ளிகளிலும் ஏற்படுத்தப் பட்டு வருகிறது. "சாண்ட்விச் கோர்ஸ்" பல்தொழில் நுட்பப் பள்ளிகளில் தொடங்கப்பட்டிருக்கிறது. தொழிற்கூடங்களில் தொடர்பு வைத்து நடைமுறைப் பயிற்சிக் கல்வி பெற ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்பது போர்டின் யோசனை. அவ்வப்போது ஏற்படுகிற தேவை என்ன என்று பார்த்து அந்தந்த துறைகளை உருவாக்க திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. முழு விவரக் குறிப்புகள் வேண்டுமென்றால் தனிக் கேள்வி போட்டால் அளிக்கலாம்.

திரு. அர். பொன்னப்ப நாடார்: இந்தக் குழுவானது அண்மையில் டெக்னலாஜிகல் யூனிவர்சிடி நிறுவவேண்டுமென்று அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்திருக்கிறதா ? விவரங்களை அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களா ?

மென்று சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றியும் நாம் கண்காணித்துக் கொண்டு வருகிறோம். அந்தநேரத்தில் நம்முடைய கொள்கையை யும் தொடர்ந்து வற்புறுத்திக்கொண்டு வருகிறோம்.

திரு. கே. என். குமாரசாமி: தொழில் நுட்பப் போர்டு அமைக்கப் படுவதன் நோக்கம் கல்வியில் பெரிய மாற்றம் வேண்டும் என்ற அடிப்படையில்தான் செய்யப்படுகிறது. ஆகவே, கல்வியில் தொழில் நுட்ப அறிவை அதிகமாகப் புகுத்தவேண்டுமென்பதில் ஆர்வம் காட்ட இந்தக் கமிட்டி ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் முதலிலேயே எடுத்துச் சொல்லியபடி அந்தக் கமிட்டியில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அரசாங்க அதிகாரிகள், தனிப்பட்ட தொழில் நிறுவனங்களைச் சேர்ந்த ஜெனரல் மேனேஜர்கள் இருக் கிறார்கள். இவர்கள் மூலமாக தொழில் நிறுவனங்களுக்கும் கல்வி நிலையங்களுக்கும் இடையே நல்லதொரு தொடர்பு ஏற்படுத்த வாய்ப்பு இருக்கிறது. பொறியியல் கல்லூரி மாணவர்களும், தொழில் நுட்ப பயிற்சி பெறும் மாணவர்களும் பக்கத்தில் இருக்கும் தொழிற்சாலைக்குப் போய் அப்ரண்டிஸ் முறையில் பயிற்சிபெற மிகமிக வாய்ப்பாக இருக்கிறது. 4, 5 ஆண்டுகளாக இந்த முறை நன்கு செயல்பட்டு வருகிறது. ஓரளவிற்கு மகிழ்ச்சி தரத்தக்க அளவுக்கு இதனுடைய பணிகள் பயன்பட்டு வருகின்றன.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, மத்திய அரசு அஃபிலியே ஷனை ஒத்துக்கொள்ளவில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இது ஓரளவிற்கு உண்மைதான். என்றாலும் தற்போது கோவை நகரத்தைப் பொறுத்தவரையில் நிறைய தொழில் நுட்பக் கல்லூரிகள் இருக்கின்றன. ஆகவே முதல்படியாக கோவையில் தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்க அரசு முயற்சி செய்யுமா ? ஏற்கனவே அரசிடம் கோவையில் ஒரு பல்கலைக் கழகம் துவங்குவதற்கான செயற்குறிப்பு இருந்தது, அதை வலி யுறுத்தும் வகையில் கோவையில் பல்கலைக்கழகம் ஆரம்பிக்க முயற்சி செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, கோவையில் ஆரம்பிப்பதற்கான செயற்குறிப்பு அரசிடம் இல்லை. எல்லா வாய்ப்பு வசதிகளையுடைய பொறியியல் கல்லூரியை பல்கலைக் கழகமாக ஆக்குவது என்று முடிவு எடுத்து முதலில் கிண்டியிலுள்ள பொறியியல் கல்லூரியை பல்கலைக்கழகமாக மாற்றவேண்டுமென்று கோரிக்கை அனுப்பியிருக்கிறோம். முதலில் எல்லாப் பொறியியல் கல்லூரிகளையும் ஒன்றாகச் சேர்த்து பல்கலைக்கழகம் துவக்கலாம், பிறகு தனியாக இருக்கும், தனித்து இயங்கும் நிலையில் இருக்கும் பொறியியல் கல்லூரிகளையும் பல்கலைக்கழகமாக மாற்றலாம் என்று கூறுவார்களானால் அந்த வகையில் கோவையில் இருக்கிற தொழில் நுட்பக் கல்லூரியையும்



பல்கலைக்கழகமாக மாற்ற இயலும். அந்த நேரத்தில் அங்கேயுள்ள தொழில் நுட்பக் கல்லூரிகள் அந்த வசதி வாய்ப்புகளை பெற்று இருந்தால் அந்த நேரத்தில் கோவை முதலிடம் பெறும்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, பொறியியல்துறை, தொழில்நுட்பத் துறை ஆகியவற்றைக் கண்காணிக்க போர்ட் ஆப் டெக்னிகல் எஜுகேஷன் என்ற அமைப்பு வைத்து இருப்பது வரவேற்கத்தக்கது. நான் பல ஆண்டு காலமாகச் சொல்லிவருகிறேன். இந்த போர்ட் ஆப் டெக்னிகல் எஜுகேஷன் கமர்ஷியல் சப்ஜெக்ட்ஸ் பற்றி ஒன்றும் சொல்வது இல்லை. கமர்ஷியல் சப்ஜெக்ட்ஸ் பற்றி பல பேருக்கு அக்கறை இல்லாமல் இருக்கிறது. இந்தப் பாடத்தை கல்லூரி வரைக்குங்கூட நாம் பெருக்க முடியும். இன்றைய தினம் பி. காம் இருக்கிறது. (குறுக்கீடு) டைப் அடிப்பது மட்டுமல்ல, சுருக்கெழுத்து, அக்கௌண்டன்சி, பேங்கிங், கமர்சியல் ஜாகர்பி போன்ற சப்ஜெக்ட்கள் இருக்கின்றன. இவைகளையெல்லாம் போர்ட் ஆப் டெக்னிகல் எஜுகேஷன் கீழ் கொண்டுவர முடியும். இப்படிப்பட்ட தொழில் நுட்ப கல்வியை 8-வது வகுப்பிலிருந்து கொண்டு வந்தால் நன்றாக இருக்கும் என்ற முறையில் பொதுக் கல்வியில் இணைப்பதற்கு அந்த போர்ட் ஆப் டெக்னிகல் எஜுகேஷன் ஏதாவது அரசாங்கத்திற்கு அறிக்கை அனுப்பி இருக்கிறார்களா. அல்லது அறிக்கை அனுப்ப வேண்டு மென்று அமைச்சர் அவர்கள் வற்புறுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தொழில் நுட்ப அறிவை வளர்ப்பதற்காக டெக்னிகல் ஸ்கூல்ஸ் என்ற வகையில் தனியாக உயர்நிலைப் பள்ளிகளை அமைத்து தொழில் நுட்ப அறிவைக் கொடுத்து வருகிறோம். அது மட்டுமல்லாமல் 10, 11 வகுப்புகளில் எலக்டிவ்ஸ் எடுப்பதற்குப் பதிலாக டைவர்சிபைடு கோர்ஸ் எடுத்துக் கொள்வதற்கும் வழி வகை செய்து இருக்கிறோம். மேலும், வேறு பல வழிகளும் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் கூறியது போல் வர்த்தக சம்பந்தமான துறையில் தேர்வுகளை நடத்தும் முழுப் பொறுப்பை யும் இந்தத் தொழில் நுட்ப இயக்கமே மேற்கொண்டு வருகிறது. இதை தொழில் நுட்பத் துறையே நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பதைச் சிந்திக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். இதை நடைமுறைப்படுத்த இயலும் என்று கருதப்படுமானால் அந்தப் போர்டில்வைத்து இதுபற்றி பரிசீலிக்கலாம்.

*Institute of Science Education.*

*102 *Q.*—Thiru G. R. EDMUND: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state :

(*a*) whether the Government have set up recently any Institute of Science education in this State ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) மாநில அறிவியல் கல்வி நிறுவனத்தை ஏற்படுத்தி 1974 சனவரியில் ஆணை வெளியிடப்பட்டது. அந்நிறுவனம் 1974–75 முதல் செயல்படுகிறது.

திரு. எ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, இந்த நிறுவனத்தின் பணிகள் என்னென்ன என்பதை அமைச்சர் அவர்கள் தயவு செய்து அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாநில அறிவியல் நிறுவனம் சென்ற ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இது மாநில கல்வி ஆய்வு நிறுவனத்தின் ஒரு பிரிவாக சென்ற ஆண்டிலிருந்து ஏற்படுத்தப்பட்டது. இதனுடைய முக்கிய நோக்கம் பள்ளிகளில் அறிவியல் கல்வித் தரத்தை உயர்த்துவதாகும். அறிவியல் பாடத் திட்ட சீர்திருத்தம், அறிவியல் ஆசிரியர்களுக்கு அறிவியல் போதனையில் மறு பயிற்சி அளித்தல், அறிவியல் கல்வி போதனை பற்றி ஆராய்ச்சிகள் செய்தல், விரிவுப் பணி நடவடிக்கைகள் ஆகியவற்றின் மூலம் அந்நோக்கத்தை நிறைவேற்ற இந்த நிறுவனம் முயற்சி செய்யும். இதிலே அறிவியலின் பல்வேறு துறைகளில் (இயல்பியல், வேதியல், கணக்கு, உயிரியல் போன்றவை) உள்ள நான்கு வல்லுநர்களும் இடம் பெற்று ஆராய்ச்சி செய்து வருகின்றனர். ஆராய்ச்சி உதவியாளர்கள் மூன்று பேர் இருக்கின்றனர். இந்த நியமிக்கப்பட்ட 7 பேரும் சேர்ந்து அந்தப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இப்போது மாலை நேர சட்டக் கல்லூரி, கலைக்கல்லூரி ஆகியவற்றிற்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. இதுமாதிரி அறிவியல் கல்வியாக இருந்தாலும், தொழில் நுட்பக் கல்வியாக இருந்தாலும் மாலை நேர வகுப்புகளில் படிப்பதற்கும், டிப்ளமா வாங்குவதற்கும் அரசு ஆவன செய்யுமா ?.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாலை நேரக் கல்லூரிகளில் பட்டப் படிப்பு படிப்பதற்கும், தொழில் நுட்பப் பயிற்சி பெறுவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. பொறியியல் கல்லூரியில் டிப்ளமா பெற்றவர்கள் பட்டப்படிப்பு படிக்கவும் ஒரு சில முறைகளின் அடிப்படையில் வசதி செய்யப்பட்டுள்ளது. அதிலே அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. எம். சுரேந்திரன் : சார், கல்வி என்று வருகிறபோது வெவ்வேறு துறைகளில் கல்வி கற்றுக்கொள்வதற்கு பயிற்சி பெற வாய்ப்பு இருக்கிறது. அப்படி இருக்கிற காரணத்தால் அறிவியல் என்று சொல்வது ஒரு பொதுவான பதம் ஆயிற்றே, அந்த அறிவியல் என்பதற்கு ஸ்பெஷலான அர்த்தம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தொழில் நுட்ப அறிவு பெறுவதற்கு அறிவியல் அடிப்படையாக இருக்கிறது முதலிலே சயன்ஸில் மட்டும் பயிற்சி தரப்பட்டு, பிறகு டெக்னாலஜி,





தொழில் நுட்ப அறிவு பெறவேண்டியவர்களாக இருந்தது. அறிவியல் வளர்ப்பதற்கான முயற்சிகளைப் பற்றி இப்போது நாம் மேற்கொண்டு வருகிறோம். புதிய சயன்ஸ், புதிய கணிதம் ஆகியவற்றை 3-ம் வகுப்பிலிருந்தே சொல்லிக் கொடுக்கிறோம். அறிவியல் சொல்லிக்கொடுக்கவும் முயற்சி எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று சொல்லி இருக்கிறோம். ஏற்கெனவே 6–7 வகுப்பிலிருந்து அறிவியல் சொல்லிக்கொடுக்கும் நிலை இருந்தது. இப்போது அதை 2–3 வகுப்பிலிருந்தே தொடங்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். 1–5 வகுப்பு வரை உள்ள அறிவியல் பாடத்தை மாற்றியிருக்கிறோம். 6-வது வகுப்புக்கு அறிவியல் பாடத்தை புதிய திட்டத்தின் கீழ் நடைமுறைக்குக் கொண்டு வந்து இருக்கிறோம். 1975–76-ம் ஆண்டிலிருந்து 7, 8, 9, வகுப்புகளில் அறிவியல் பாட வகுப்பு புகுத்தப்படும். தொழில் நுட்ப அறிவு பெற அறிவியல் வளர்ச்சி மிகமிகத் தேவை என்று தோன்றுகிறது.

*Tourist Bungalow, Courtallam.*

***103 *Q.*—Thiru N. K. PALANISAMY.—Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state the stage at which the proposal to construct a Tourist Bungalow at Courtallam by the Tamil Nadu Tourism Development Corporation Limited stands at present ?**

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் குற்றாலத்தில் சுற்றுலாப் பயணிகள் மாளிகை ஒன்றைக் கட்டுவதற்குப் பொருத்தமான மனையைத் தேடிக் கொண்டிருக்கிறது.

(முற்பகல் 9–30)

திரு. என். கே. பழனிசாமி : சார், அதனுடைய எஸ்டிமேட் என்ன ? அந்த வேலை எப்போது ஆரம்பித்து முடிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அங்கே ஒரு சுற்றுலா மாளிகை கட்டுவதற்கு சுற்றுலா வாரியம் ஏற்கெனவே முடிவு செய்திருக்கிறது. அதற்கான தொகையும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இடம் கிடைப்பதில் சில இடையூறுகள் இருக்கின்றன. சுற்றுலா மாளிகை கட்டுவதற்கு இரண்டு இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஒன்று திருக்கோயிலுக்கு சொந்தமான நத்தம் புறம்போக்கு நிலம் அந்த இடத்தை அவர்கள் தரமுடியாது என்று சொல்லிவிட்டார்கள். மற்றொரு இடம் குற்றாலம் நகரியத்திற்குச் சொந்தமான இடம். நகரியத்தின் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த வேண்டியிருப்பதால் அந்த இடத்தை தர முடியாது என்று அவர்கள் சொல்லிவிட்டார்கள்.

சுற்றுலா மாளிகை கட்டுவது என்றால் கூடுமான வரையில் நீர்வீழ்ச்சிக்கு அருகிலேயே கட்டப்படவேண்டும். தொலைவில் கட்டினால் அது பயணிகளுக்கு பயன்படாமல் போய்விடும்; அதனால் சுற்றுலா வாரியத்திற்கு வருவாய் இழப்பும் ஏற்படும். ஆகவே, குறைந்த தொலைவில் ஒரு இடத்தைத் தேர்ந்தெடுக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். தகுந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் கட்ட வேலை ஆரம்பிக்கப்படும்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, சுற்றுலா வாரியத்தினால் நடத்தப்படுகின்ற விடுதிகளில் பெரும்பாலும் கட்டணம் அதிகமாகவே இருக்கிறது என்றும் அங்கே, சுற்றுலா வாரியத்தினால் நடத்தப்படும் "மெஸ்" செலவு அதிகமாக இருக்கிறது என்றும் பொதுமக்கள் புகார் செய்கிறார்கள். செலவு அதிகரிப்பினால் சாதாரண மக்கள் அங்கே தங்கி செயல்பட முடியவில்லை. ஆகவே, சர்க்கார் அதைப் பரிசீலனை செய்து கட்டணத்தைக் குறைக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, யாரோ அங்கத்தினர் அவர்களுக்கு தவறான தகவலைத் தெரிவித்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். மற்றுள்ள விடுதிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது இந்த சுற்றுலா வாரியத்தினால் நடத்தப்படுகின்ற விடுதிகளின் கட்டணம் மிகக் மிககுறைவாக இருக்கிறது. மதுரை, திருச்சி சுற்றுலா விடுதிகளில் நூற்றுக்கு நூறு எப்போதுமே நிரம்பியிருக்கிறது; போதுமான இடங்கள் இல்லை என்ற நிலை ஏற்படுகிறது. அதனால் மதுரையில் இப்போது கூடுதலாக 30, 40 அறைகள் கொண்ட விடுதி ஒன்று கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதேமாதிரி திருச்சியிலும் இருக்கிறது.

4, 5 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த வசதிகளைவிட இப்போது கூடுதல் வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதனால் முன்னைவிட கட்டணம் சற்று கூடுதலாக இருக்கிறது. ஒவ்வொரு அறைக்கும் டெலிபோன் வசதி, ரேடியோ சானல் 3 வசதிகள் செய்யப்பட்டு, அப்படிப்பட்ட அறைகளுக்கு 10 ரூபாய், 15 ரூபாய் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. இதே வசதிகள் கொண்ட ஸ்டார் ஓட்டல்களில் 85 ரூபாய், 100 ரூபாய், 120 ரூபாய் வாடகையாக வசூல் செய்யப்படுகிறது. இன்னும் சில பெரிய ஓட்டல்களில் இதே வசதிகள் கொண்ட "சூட்" ஒன்றுக்கு 400, 500 ரூபாய் கூட வசூல் செய்கிறார்கள். ஆனால் சுற்றுலா மாளிகைகளில் குறைந்த கட்டணம்—10, 15, 20 ரூபாய்தான் வசூல் செய்கிறார்கள். அதுவும் சீசன் காலங்களில் இந்த வாடகை, மற்ற காலங்களில் இன்னும் குறைவாகத்தான் வாடகை வசூல் செய்யப்படுகிறது.

திரு. தோப்பூர் திருவேங்கடம்: தலைவரவர்களே, தமிழ்நாட்டில் வேறு எந்தெந்த மாவட்டங்களில் சுற்றுலா வாரியத்தின் மூலம் பயணிகள் விடுதிகள் கட்டுவதற்கான செயற்குறிப்புகள் இருக்கின்றன? குறிப்பாக, வடாற்காடு மாவட்டத்தில் உள்ள ஏலகிரி மலையில் ஒரு சுற்றுலா மாளிகை அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட காலமாக இருந்து





கொண்டிருக்கிறது; அமைச்சரவர்களும் அதை அறிவார்கள். அப்படிப்பட்ட இடங்களிலே பயணிகள் விடுதிகள் சுற்றுலா வாரியம் மூலம் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா? அதைப்போல காஞ்சிபுரம் போன்ற நகரங்களிலும் சுற்றுலா வாரியத்தின் மூலம் பயணிகள் விடுதிகள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சுற்றுலா வாரியத்தின் மூலமாக சுற்றுலா மாளிகைகள் கட்டப்படுவது குறித்து தனிக் கேள்வி போட்டால் எந்தெந்த இடங்களில் என்று சொல்லலாம். ஏலகிரி மலையைப் பொறுத்தவரையில் ஓரளவு சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்துக்கொண்டிருக்கிறது என்ற எண்ணம் இருக்கிறது. ஏற்கெனவே பொதுப்பணித் துறையைச் சேர்ந்த தங்கும் விடுதி ஒன்று அங்கு இருக்கிறது. ஒரு சுற்றுலா மாளிகையை கட்டுவது என்றால் எவ்வளவு பேர் அங்கு வருகிறார்கள், வந்து தங்கிச் செல்வதற்கான வாய்ப்புகள் இருக்கிறதா, அதற்கான வசதிகள் இருக்கின்றனவா என்பதை எல்லாம் பார்த்துத்தான் கட்ட வேண்டும். இல்லா விட்டால் கட்டின செலவு கூட வராது என்ற நிலை ஏற்பட்டுவிடும்.

திருச்செந்தூரில் ஒரு பெரிய சுற்றுலா மாளிகை கட்டப்பட்டது. ஆனால் அங்கே வரக்கூடியவர்கள் மாளிகையில் தங்காமலேயே, இடத்தைப் பார்த்துவிட்டு போய்விடுகிறார்கள். அதனால் அந்த சுற்றுலா மாளிகை பயன்படாமல் இருக்கிறது. அந்த சுற்றுலா மாளிகையை திருநெல்வேலியில் அல்லது கன்னியாகுமரியில் கட்டியிருந்தால் சுற்றுலா பயணிகளுக்கும் உபயோகமாகவே இருந்திருக்கும்; சுற்றுலா வாரியத்திற்கும் வருவாய் வந்திருக்கும். ஆகவே, மக்கள் வருகிற எண்ணிக்கை, எத்தனை நாள் தங்குவார்கள் என்ற கணக்கைப் பார்த்துதான் சுற்றுலா மாளிகை கட்ட முடியும். ஏலகிரி மலையைப்பொறுத்த வரையில் அத்தகைய கணக்குகளை எடுக்கச்சொல்லி, பரிசீலனை செய்துபார்த்த பின்னால் சுற்றுலா மாளிகை கட்டுவது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

### தென் சென்னைக்குப் பொது மருத்துவ மனை.

*104 வினா—திருமதி த. ந. அனந்தநாயகி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென் சென்னை நகரப்பகுதியில் ஒரு பொது மருத்துவ மனை (General Hospital) ஆரம்பிப்பது பற்றி அரசிடம் ஏதாவது செயற்குறிப்பு உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, 100 படுக்கைகள் கொண்ட அரசுப் பொது மருத்துவ மனை ஒன்று தென் சென்னையில் கலைஞர் கருணாநிதி நகரில் கட்டப்படுவதற்கு அரசு ஆணை பிறப்பித்து அதனுடைய பணிகள் தொடங்கப்படுகின்றன.

அரசு மருத்துவமனை, திருவாரூர்.

*105 வினா—திரு. தாழை மு. கருணாநிதி. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவாரூரில் அரசினர் மருத்துவ மனையில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: புதிதாகக் கட்டப்பட்ட இந்த மருத்துவமனையில் 70 படுக்கைகள் உள்ளன. மேலும் தனியார் நன்கொடைகள் மூலம் 16 படுக்கைகள் கொண்ட தனிப் பகுதிகள் கட்டுவது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு தாழை மு. கருணாநிதி: தலைவரவர்களே, மேலும் ஸ்பெஷல் வார்டுகள் கட்டும் திட்டம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. அன்பழகன்: எழுபது படுக்கைகள் கொண்டுள்ள ஒரு பெரிய மருத்துவ மனை என்பது சிறப்பான அமைப்புதான். அதனுடன் அந்த பகுதியில் உள்ள செல்வந்தர்கள் சிலர் தந்திருக்கிற நன்கொடையை கொண்டு ஆண்களுக்கு 6 படுக்கைகள் கொண்ட வார்டு ஒன்றும், பெண் களுக்கு 6 படுக்கைகள் கொண்ட வார்டு ஒன்றும, குழந்தைகளுக்கு 4 படுக்கைகள் கொண்ட வார்டு ஒன்றும் அமைக்கப்பட வேண்டுமென்ற ஆலோசனை இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, திருவாரூரில் அதிகமான படுக்கைகள் கொண்ட மருத்துவமனை ஒன்றை ஏற்படுத்துவதுபோல தஞ்சை மாவட்டத்தில் வேறு தாலுகா தலைமை இடங்களிலும் ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, ஒவ்வொரு மருத்துவ மனையிலும் என்னென்ன வேண்டுமென்று மக்களின் தேவை யின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படுகிறது. நிதிவசதியைப் பொறுத்து ஆண்டுதோறும் ஏதாவது சில இடங்களில் முறைப்படி தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. தனிப்பட்டவர்கள் நன்கொடை அளிக்க முன்வந்தால் அந்த இடங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

*Research Centre for Chest diseases.*

*106 Q.—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Health be pleased to State—

(a) whether it is a fact that the Government propose to start a Research Centre for Chest diseases in Madras in collaboration with the Indian Council of Medical Reaserch ; and

(b) if so ; the details thereof ?





மாண்புமிகு திரு. க. அன்பழகன்:

(அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. என். கே. பழனிசாமி: சார், இந்த இருதய நோய் அதிகப்படி யாக பரவலாக இருப்பதால் இப்போது இருக்கக்கூடிய சிகிச்சை முறை போதவில்லை. ஆகவே, அமெரிக்க நாட்டில் டெக்சாஸ் நகரில் இருப்பதைப் போன்ற சிகிச்சை முறைகளை கையாள்வதற்கு இங்கும் பெரிய ஆஸ் பத்திரிகளைத் திறக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இப்போது சென்னை பொது மருத்துவ மனையிலும், ஸ்டான்லி மருத்துவ மனையிலும் இருக்கிற சில மருத்துவர்கள் இருதய நோய் (செஸ்ட் டிஸ்வீஸஸ்) சம்பந்த மாக ஓரளவு தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். இருதய நோயாளிகளுக்கு அங்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. தனியாக ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்துவது என்பது இப்போது இல்லை. ஆனால் சென்னை மாநகரில் காச நோய்—அதுவும் செஸ்ட் டிஸ்வீசில் ஒரு வகை தான்—அடிப்படையில் ஒரு ஆராய்ச்சி நிலையம் ஏற்கெனவே அமைந்திருக்கிறது. அந்த மருத்துவ மனை மத்திய அரசினுடைய ஐ. சி. எம். ஆர். என்று கருதுகிறேன். அதன் சார்பில் உலக நிதிவசதி கொண்டு மேலும் சிறந்த ஆராய்ச்சி நிலையம் அமைக்க சென்னை மாநகரில் ஏற்பாடு நடைபெறுகிறது.

*Eradication of mosquitos in Puthukadai area.*

***107 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state the steps taken by the Government to combat the mosquitos nuisance in Puthukadai and suburbs in Vilavancode taluk, Kanyakumari district ?**

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கொசுத் தொல்லையை ஒடுக்கு வதற்கும் யானைக்கால் நோய் பரவுவதைக் கட்டுப்படுத்தவும், யானைக் கால் நோய் தடுப்பு நடவடிக்கைகள் திட்டம் ஒன்றை சுகாதாரப்பணிகள்—குடும்பநலத்திட்டத்துறை இயக்குநர் தயாரித்து முஞ்சிறை ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கு 23—10—74 அன்று அனுப்பினார். அத்துடன் கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டத்தில் புதுக்கடையிலும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் யானைக்கால் நோய் தடுப்புத்திட்டத் தைச் செயற்படுத்த ஒப்புதல் வழங்கும்படி அரசுக்கு எழுதுமாறும் ஆணை யாளர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

சாயத் தொழிற்சாலைகள்.

*108 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு தொழில்—மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் மேற்கொண்டுள்ள சாயத் தொழிற்சாலைகள் துவங்குவது பற்றிய திட்டங்களின் விவரம் மாவட்டவாரியாக என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : சாயங்கள், பாச்சை உருண்டைகள் ஆண்டு ஒன்றுக்கு 700 டன்கள் வரை தயாரிப்பதற்கு தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் ஒரு இசைவு கடிதத்தைப் பெற்றுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலை எங்கு அமைய இருக்கிறது? எங்கள் பகுதியில் ப்ளீடிங் மெட்ராஸ் என்பதான வண்ணம் மாறும் கைத்தறித்துணிகள் வெளிநாட்டுக்கு அனுப்ப தயாரிக்கப்படுகிற இடமாக இருக்கிறது. ஆகவே இந்தச் சாயத் தொழிற்சாலையை மாதரபாக்கம் பகுதியில் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: எந்த இடத்தில் அமைப்பது என்பது பற்றி முடிவு எடுக்கப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற நல்ல கருத்தும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

*Manufacture of caustic soda.*

*109 *Q.*—Thiru G. R. EDMUND : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether any Caustic Soda Plant is to be set up near Ennore in the Private Sector ; and

(*b*) if so, the details *thereof* ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: (அ) and (இ) திருவாளர்கள் கோத்தாரி (மெட்ராஸ்) லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்திற்கு ஆண்டொன்றுக்கு 33,000 டன்கள் காஸ்டிக் சோடா உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்குப் பூர்வாங்க அனுமதிக்கடிதம் ஒன்றை மத்திய அரசு வழங்கியுள்ளது. அத்தொழிற்சாலையை எண்ணூரில் நிறுவ அந்த நிறுவனம் தீர்மானித்துள்ளது.





திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்தத் தொழிற்சாலையின் மொத்த மதிப்பீடு எவ்வளவு? தொழிற்சாலை துவங்கப்படுமானால் எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

*Manufacture of Borax.*

*110. *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for industries and Electricity be pleased to state :

(*a*) whether a Borax Plant is to be set up in this State ; and

(*b*) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) and (இ) கூட்டுத் துறையில் நிறுவப்பட்ட சதான் போராக்ஸ் லிமிடெட் ஆண்டொன்றுக்கு 15,000 டன் போராக்ஸும் 3,000 டன் போரிக் அமிலமும் தயாரிப்பதற்காக தொழிற்சாலை ஒன்றை நிறுவி வருகிறது. 1975-ஆம் ஆண்டு மத்தியில் உற்பத்தி தொடங்கப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : இந்தத் தொழிற்சாலை எந்த இடத்தில் எவ்வளவு தொகையில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : இது செங்கல்பட்டு கிராமத்தில் சோழவரம் பஞ்சாயத்து, தாசகூா கிராமத்தில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. இதன் மதிப்பீடு 94 லட்சம் ரூபாய்.

திரு. கே. எ. வகாப் : இந்தத் தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்க இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளாகும். ஆனால் நமது மாநிலத்தில் தொழில்களுக்குத் தேவைப்படுகிற போராக்ஸ் மொரார்ஜி போராக்ஸ் கம்பெனியில் இருந்துதான் வருகிறது. நூறு ரூபாய் மூட்டை 200 ரூபாய்க்கு வாங்கவேண்டியதாக இருக்கிறது. ஆகவே, மத்திய அரசோடு தொடர்பு கொண்டு தமிழகத்திற்கு வேண்டிய பொராக்சை மொரார்ஜி பொராக்ஸ் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு தருவித்துக்கொடுக்க நமது அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: இந்தத் தொழிற்சாலை 75 ஆம் ஆண்டு மத்தியில் உற்பத்தியைத் துவங்கிவிடும் என்று சொல்லப்படுகிறது. அதற்கான நடவடிக்கையும் விரைவாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்தும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். (பேரவை மண்டபத்தில் விளக்குகள் அணைந்தன.)

[1975 பிப்ரவரி 28

திரு. சோலை செழியன்: யாராவது வேண்டுமென்றே செய்கிறார்களா? இயற்கையாகவே மின் சப்ளை தடைபடுகிறதா சட்டசபையில் இப்படி ஒரு அபசகுனம் இருக்கக்கூடாது.

### ஊராட்சி மன்றங்களில் பயன்படுத்தப்படும் மின்சாரம்

*111 வினா—திரு. கா. வேழவேந்தன் :
திரு. பெ. சௌந்தரபாண்டியன்:
திரு. தா. சோலையா:
திரு. எஸ். கணேசன்:
திரு. கே. எ. வகாப்:

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி மன்றங்களில் பயன்படுத்தப்படும் மின்சாரத்தைக் கணக்கிட தனி மீட்டர்கள் அமைக்கும் திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஊராட்சி மன்றங்களில் தெருவிளக்குகளுக்குப் பயன்படுத்தப்படும் மின்சாரத்தைக் கணக்கிட தனி மீட்டர் அமைக்கவும் மேற்படி திட்டத்தை ஓராண்டுக்குள் எல்லா இடங்களுக்கும் அமுல்செய்து முடிக்கவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : ஒவ்வொரு ஊராட்சி மன்றமும் எந்த அளவுக்கு தெருவிளக்குகளைப் பயன்படுத்துகிறதோ அந்த அளவுக்கு மின் கட்டணத்தைச் செலுத்தவும், ப்யூஸ் ஆகிற பல்புகளை உடனடியாக மாற்றவும் மின்சாரத்துறை உள்ளாட்சித்துறையோடு இணைந்து ஆவன செய்ய செயல்படுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அப்படிப்பட்ட நடவடிக்கை எடுப்பதற்குத்தான் 20—11—74-ல் தகுந்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மீட்டர் பொருத்துகிற திட்டம் நீண்ட காலமாக இருந்து வருகிறது. எப்போது ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்த திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : 20—11 —74-ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. இதற்கான நடவடிக்கையும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



1975 பிப்ரவரி 28]

திரு. கே. எ. வகாப் : மீட்டர் பொருத்த வேண்டுமென்று தீர்மானம் போட்டுக்கொடுத்து 6 மாதம் ஆகிறது. ஆணைப்பிறப்பித்திருப்பதைப் பற்றிச் சொன்னார்கள். இப்போதுள்ள கஷ்டம் என்னவென்றால் மீட்டர் கிடையாது என்று சொல்லுகிறார்கள். தேவையான மீட்டர்களை உடனடியாகப் பொருத்தி, ப்யூஸ் ஆகிற பல்புகளை உடனடியாக ஊராட்சி மன்றங்களை மாற்றிக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : மீட்டர்களை சீக்கிரமாகப் பெற்றுத்தர மின்சாரத்துறை அமைச்சர் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்.

திரு. ஆ. ஆறுமுகம் : தெருவிளக்குகள் அடிக்கடி ப்யூஸ் ஆகி விடுகின்றன. அதை மின்சார இலாக்கா உடனடியாக மாற்று வது இல்லை. காலதாமதம் ஆகிறது. இப்படி மாற்றிக்கொள்ள பஞ்சாயத்துக்களுக்கே அதிகாரம் வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இப்படிப்பட்ட அதிகாரம் கொடுக்கவேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதற்கான முடிவினை மின்சாரத்துறை பரிசீலித்து—புதிய முறைகளை வகுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. தி. பொன்னுமலை : தலைவர் அவர்களே, ஒரு ஆண்டாக ப்யூஸ் ஆகிக்கிடக்கிற பல்புகளைக்கூட ஊராட்சிகள்சொல்லியும் ,மாற்றாமல் இருக்கிறது. அப்பேர்ப்பட்ட இடங்களுக்காவது முதலிடம் கொடுத்து உடனடியாக அங்குள்ள பல்புகளை மாற்றிக்கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : எல்லாவற்றையும் ஓராண்டுக்குள் முடிப்பதற்கே ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி மன்றங்களில் குடிநீர் விசையேற்றங்களுக்குத்தனியாக கனெக்ஷன் இருப்பதில்லை. தற்போது இருக்கக்கூடிய மின்விசை வெட்டின் காரணமாக குடிநீர் விசையேற்றம் தடைப்பட்டுவிடுகிறது. ஆகவே, இனியாவது ஊராட்சி மன்றங்களில் உள்ள குடிநீர் விசையேற்றங்களுக்கு தனி லைன் அமைத்து தனி கனெக்ஷன் கொடுக்க உரிய ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: மின்சாரத்தட்டுப்பாட்டின் காரணமாக இதுபோன்ற சங்கடங்களைத் தவிர்க்க மின்சார இலாக்கா தக்க கவனம் செலுத்தி வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : பல ஊராட்சி மன்றங்களில் பல்புகள் ப்யூஸ் ஆகிவிட்டால் அவர்களே அதனை வாங்கிப்போட்டுக்கொண்டு பில்லை அனுப்புகிற போது மின்சார இலாகா பல்புக்காக நிர்ணயித்திருக்கிற விலைக்கு மேல் அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தினால் நிராகரித்துவிடு

கிறார்கள், இவர்கள் என்ன விலைக்கு வாங்கிப்போடுகிறார்களோ, அந்த விலையைக்கொடுக்கவேண்டுமென்று மின்சார இலாகாவுக்கு ஆணைபிறப்பிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அப்படிச் செய்ய வேண்டுமென்றுதான் 20—1—75-இல் உத்தரவு பிறப்பித்திருக்கிறோம். இவ்வுத்தரவின் முக்கிய அம்சங்கள்—

(1) ஊரக வளர்ச்சி இயக்குநர், மின்சார வாரியத்தைச் சேர்ந்த ஒரு பிரதிநிதி, மற்றும் பொதுப்பணித்துறையைச் சார்ந்த மின்துறை பொறியாளர் ஆகிய மூவர் கொண்ட குழு ஒன்று ஒவ்வொரு ஆண்டிலும் வெவ்வேறு விதமான பல்புகளுக்கு விலையினை நிர்ணயித்து அந்த அங்கீகரிக்கப்பட்ட விலையினை ஊராட்சி மன்றங்களுக்குத் தெரிவிக்கும்.

(2) ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் செலவில் அங்கீகரிக்கப்பட்ட விலைக்கு மேற்படாமல் மூன்று மாதத்திற்கு ஒரு முறை தமக்குத் தேவையான பல்புகளை அரசிலிருக்கும் வியாபாரிகளிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று வாங்கிக் கொள்ள வேண்டியது.

(3) ஒன்றியம், அதைச்சார்ந்த ஊராட்சிகள் இவைகளுக்குத் தேவைப்படும் பல்பு எவ்வளவு என்பதை ஊராட்சி விஸ்தரிப்பு அதிகாரி கணக்கிட்டு ஆணையாளருக்கு தெரிவிக்க வேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): ரொம்ப நேரமாக நான் கேள்வி கேட்கவேண்டுமென்று கையைத்தூக்கிக்கொண்டிருக்கிறேன். நான் கேள்வி போடுவதனால் பல சங்கடங்கள் வருகின்றன, ஆகவே, நான் கேள்வி போடக்கூடாது என்று சொன்னால் அப்படிச் சொல்லி விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இந்தக் கேள்விக்குத் தான் கையைத் தூக்கினீர்கள். இதைத்தான் நான் பார்த்தேன். உங்கள் கேள்வியைப் போடுங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): கிராமங்களில் மின்சார விளக்குகள் எரியவில்லை. எரியாத விளக்குகளுக்கு எல்லாம் சேர்த்து ஊராட்சிகள் மின்சாரத் துறைக்கு பணத்தைக் கட்டிக் கொண்டிருக்கின்றன. இதற்காகத்தான் மீட்டர்கள் பொருத்த வேண்டுமென்று நான்கைந்து ஆண்டுகளாகவே சொல்லப்பட்டு வருகிறது. இந்தக் கேள்விக்குப் பதிலை மின்சார இலாகா அமைச்சர் சொன்னால் பொருத்தமாக இருக்கும். மீட்டர்கள் எங்கோ கனடாவில் இருந்து, அமெரிக்காவிலிருந்து வரவேண்டும் என்றாலும் சரி, காலதாமதமாவதற்கு அர்த்தமுண்டு. மீட்டர்கள் இந்தியாவிலேயே கிடைக்கின்றன. மின்சார இலாகா ஏன் மீட்டர்களைப் பொருத்தவில்லை? எரியாத விளக்குகளுக்கெல்லாம் ஊராட்சி, நகராட்சி மன்றங்களில் இருந்து ஏன் பணம் கட்டவேண்டும்? இதற்கு அந்த இலாகா அமைச்சர் பதில் சொல்வாரா?



மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, மின்சார இலாகாவைக் கலந்துதான் நான் பதில் சொல்கிறேன். சென்ற ஆண்டு நவம்பர் மாதம்தான் இந்த முடிவிற்கு வந்திருக்கிறோம். அதைப்பற்றி மின்சார இலாகாவோடு விவாதித்துக் கொண்டிருக்கிறோம். அவர்களும் இதைச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். ஒரு ஆண்டிற்குள் (குறுக்கீடு) பஞ்சாயத்திற்கும் போடுவதற்கான ஏற்பாட்டைச் செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): I am not satisfied with the answer. கேள்வி நேரத்திலே மெம்பரைத் திருப்திபடுத்துவதற்குத் தான் கேள்வி இருக்கிறது. மின்சார இலாகா அமைச்சர் இங்கே இருக்கிற நேரத்தில் பதிலை அவர் சொல்லவேண்டும்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மீட்டர் பொருத்துவது ஊராட்சியினது வேலை என்பதால், அந்தக் கேள்விக்கு உள்ளாட்சித் துறை அமைச்சர் பதில் சொல்கிறார்.

Thiru B. VENKATASWAMY: May I know from the Hon. Minister how many meters are required for the entire Tamil Nadu State and how many meters have been fixed so far ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அதற்குத் தனி கேள்வி போட வேண்டும், அதற்கான கணக்கை எடுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 112—திரு. என். கிட்டப்பா—மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[திரு. கோவை செழியன், திரு. ஆலடி அருணா, திரு. நா. வீராசாமி, திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) ஆகியோர்] குறுக்கீடு.

(திரு. கோவை செழியன் நின்றுகொண்டிருந்தார்)

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அந்த உறுப்பினரை உட்கார வைத்தால் தேவலாம். (திரு. கோவை செழியன் உட்கார்ந்தார்).

மாவட்ட வளர்ச்சிக் கழகங்கள்.

*112 வினா. திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மாவட்ட வளர்ச்சி போர்டுகள் தற்போது எந்தெந்த மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன?

(இ) அதன் பணி முறைகள் யாவை ?

[1975 பிப்ரவரி 28

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) and (இ) இராமநாதபுரம், தருமபுரி, கோயமுத்தூர், தஞ்சாவூர் மாவட்டங்களில் மாவட்ட வளர்ச்சிக் கழகங்கள் நிறுவுவது சம்பந்தமான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். இட்டப்பா : தலைவரவர்களே, மாவட்ட வளர்ச்சி போர்டுகள் எந்தெந்த அதிகாரிகளை உள்ளடக்கியதாக இருக்கும்? அதைச் செயல்படுத்தக்கூடிய தலைமை அதிகாரியாக யார் இருப்பார்? அதிலே அங்கம் வகிக்கக்கூடியவர்கள் எத்தகைய வகையினரை, பிரிவினரைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள் என்ற விவரங்களை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவரவர்களே, இதில் தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவர் இருப்பார். உறுப்பினர்களாக, விவசாய இலாகாவைச் சேர்ந்தவர்கள், கால்நடைத் துறை, கூட்டுறவுத்துறை, மின்சாரத்துறை, நீர்பாசனத்துறை, பெருவழித்துறை. மாவட்ட வளர்ச்சிக் குழுவிலிருந்து 2 உறுப்பினர்கள், உள்ளூர் சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளூர் ஊராட்சி ஒன்றியத்தலைவர் ஆகியோர் இருப்பர்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Already the District Development Councils have been made non-democratic and they are only official dominated. There is no non-official President in the District Development Councils. May I know from the Hon. Minister whether the District Development Boards will have a non-official Chairman or whether the democratic institutions will continue to be official dominated ? May I know from the Hon. Minister whether democracy should be denied to the District Development Councils ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அப்படி ஒன்றுமில்லை.

திரு. ஆலடி அருணா : சார், டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் போர்ட் என்று சில மாவட்டங்களிலே மட்டும் அரசு அமைக்க முன்வந்திருப்பதாகத் தெரிகிறது. அதை ஏன் எல்லா மாவட்டங்களுக்கும் அமைக்க அரசு முன்வரவில்லை. மாவட்ட வளர்ச்சி மன்றத்தை ஏற்கனவே செயல்படுத்தும்போது, டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் போர்ட் அமைக்க என்ன அவசியம் ஏற்பட்டது ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவரவர்களே, மாவட்ட வளர்ச்சி மன்றம் ஏற்கனவே இருக்கிறது. இப்பொழுது அமைக்க முன்வந்திருப்பது கழகம். இது மாவட்ட வளர்ச்சிப்பணிகளுக்குத் தேவையான பணத்திற்காக தேசிய வங்கிகளிடத்திலிருந்து பணம் வாங்கி, மாவட்ட வளர்ச்சிக்குப் பணம் போதாமலிருக்கிற இடங்களிலே அளிக்க, தனிக்கழகமாக அமைக்கப்பட்டிருக்கிறது.



1975 பிப்ரவரி 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 113—திரு. கா. வேழவேந்தன். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்......

(திரு. ஆலடி அருணா குறுக்கிடு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படிச் செய்வது முறையல்ல.

திரு. ஆலடி. அருணா : நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கம் தரவில்லையென்றால்..

திரு. ஆலடி. அருணா : நான் கேட்ட கேள்வியைக் கவனியாமல் இருக்கலாம். என் கேள்வியிலே..........................

It is a new scheme. We want clear informatian from the Government.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேள்வி கேட்பதற்கு நான் குறுக்கே நிற்கவில்லை. அதற்குப் பேரவைத் தலைவரின் அனுமதி பெற்று நீங்கள் கேள்வி கேட்க வேண்டும். நீங்களாக கேள்வி கேட்பதென்றால் பேரவைத் தலைவரே வேண்டியதில்லை.

*113—வினா. திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் மாவட்ட வளர்ச்சிக் கழகம் (District Development Board) அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, எந்தத் திட்டத்தையும் முன்னோடியாக செங்கல்பட்டு மாவட்டத்திலேதான் துவங்குவது வழக்கம். எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் என்ற திட்டம் வந்தபோதுகூட, செங்கல்பட்டு மாவட்டத்தில்தான் துவங்கப்பட்டது. இந்தத் திட்டத்தை 4 மாவட்டங்களிலே ஆரம்பிக்கும்போது, செங்கல்பட்டு மாவட்டம் எப்படி விடப்பட்டது.? அடுத்து, மற்ற மாவட்டங்களை எடுக்கும் செயற்குறிப்பை அரசாங்கம் பரிசீலிக்கும்போது, செங்கல்பட்டைச் சேர்த்துக்கொள்ள பரிசீலனை செய்யுமா?

(அவையில் சில உறுப்பினர்கள் தனித்தனியாக பேசிக்கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தனித்தனிக்கேள்வியாகக் கேட்டால் அமைச்சருக்குப் புரியும். அவரவர்கள் பேசிக்கொண்டிருந்தால் எங்களுக்குப் புரியவில்லை. சபாநாயகர் அவர்கள் கொஞ்சம் அமைதியாக இருக்கும் வகையில் அவையை நடத்தவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் அந்தந்த உறுப்பினர்கள் அவரவர் இடத்தில் இருக்கவேண்டும். அதுதான் அவையின் மரபு.

THIRU V. KRISHNAMOORTHI (Nellikuppam) : It is a serious allegation against a member.

MR. SPEAKER : It is not a serious allegation. நீங்கள் கடைப்பிடிக்கவேண்டிய மரபு, கேள்வி நேரத்தில் அவரவர் இடத்தில் இருக்க வேண்டுமென்பது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு வேழவேந்தன் அவர்கள், எல்லாவற்றையும் முதன்மையாக செங்கல்பட்டு மாவட்டத்திற்குக் கொடுத்தீர்கள், இதை மட்டும் ஏன் வேறு மாவட்டங்களுக்கு மாற்றியிருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். எல்லாவற்றையும் அம்மாவட்டத்திற்குக் கொடுத்த காரணத்தாலேதான் வேறு மாவட்டத்திற்கு என்று மற்ற மாவட்டங்களுக்கு சான்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, இதற்கு முந்திய கேள்விக்குப் பதில் அளிக்கும்போது டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் போர்டுக்குச் சில ஃபங்ஷன்ஸ் இருப்பதாகச் சொன்னார்கள். இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கும்போது, மற்றவற்றில் செங்கல்பட்டுக்கு முதன்மையளித்திருப்பதால், வேறு சில இடங்களுக்குக் கொடுத்திருக்கிறோம் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆகவே, இந்த மாவட்டத்திற்குக் கொடுக்கவில்லையென்று சொன்னார்கள். இந்த டெவலப்மெண்ட் போர்ட் என்பது தனியான அமைப்பா? மாவட்ட வளர்ச்சி மன்றத்திற்கு உதவி செய்வதற்காக, நிதி பெற்றுத் தருவதற்காக இந்தக் கழகம் இருக்கிறது என்று சொன்னார்கள். டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சில்கள் எல்லா மாவட்டங்களிலும் இருக்கின்றன. எல்லா மாவட்டங்களுக்கும் நிதி தேவைப்படுகிறது. அப்படி வரும்போது........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கம் வேண்டாம்.

திரு. எ. சுப்பிரமணியம் : மாவட்ட வளர்ச்சி மன்றம் இருக்கும்போது, இந்த டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் போர்ட் எதற்காக அமைக்கப்பட்டிருக்கிறது ? சில மாவட்டங்களுக்கு மட்டும் ஏன் அமைக்கப்படுகிறது? டெவலப்மெண்ட் கவுன்சில்களின் பணியை அது எடுத்துக்கொள்ளுமா?



மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்திலே சொன்னதை பற்றிய விளக்கமெல்லாம் கேட்டுக் கொண்டிருக்க முடியாது. எல்லா மாவட்டங்களுக்கும் உண்டா என்று கேளுங்கள். அப்படித்தான் உண்டே தவிர துணைக்கேள்விகள் ஏதாவது ஒன்றிரண்டு தகவல்களைத் தெரிந்து கொள்ளத்தான் போடலாமே தவிர, பெரிய விளக்கம் பெற முடியாது

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : முன்னமேயே சொல்லியிருக்கிறேன். மாவட்ட வளர்ச்சி கவுன்சில மாவட்ட வாரியாக இருக்கிறது. இது போர்டு கழகம். டெவலப்மெண்டிற்காக சர்க்கார் கொடுக்கும் பணம் போதாத காரணத்தாலே, தேசிய மயமாக்கிய வங்கியிலிருந்து தனியாகப் பணம் பெற்று, அந்தந்தப் பகுதியிலே வளர்ச்சி செய்ய வேண்டுமென்று மாநிலம் பூராவுக்கும் திட்டம் போட்டு, முதலாவதாக 4 மாவட்டங்களை எடுத்திருக்கிறார்கள், மற்ற மாவட்டங்கள் அடுத்தடுத்து வரும்.

குழந்தை நல ஒருங்கிணைப்புத் திட்டம்.

*114. வினா.—திரு. கா. வேழவேந்தன். மாண்புமிகு சமூக நல அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பிற்பட்ட பகுதியான கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் "இணைப்பு குழந்தை நலத் திட்டம்" ( Integrated Child Welfare Project) துவங்கும் செயற்குறிப்பு காலதாமதமாவதேன் ?

(இ) இது எப்போது நிறைவேறும் ?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை ; (அ) குழந்தை நல ஒருங்கிணைப்புத்திட்டங்கள் (Integra ed Child Development Service Projects) இம் மாநிலத்தில் துவங்குவது குறித்து மத்திய அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் இத்திட்டத்தில் கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியம் இடம் பெறவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இப்படி மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிற இந்தத் திட்டத்தில் எத்தனையோ ஒன்றியங்கள் இருக்கின்றன. ஆனாலும் வட கோடியிலிருக்கிற பிற்பட்ட கும்முடிப்பூண்டி ஒன்றியத்தை எப்படியாவது இணைக்க அரசு முயற்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை பொதுவாகவே இந்தியப் பேரரசு அறிமுகம் செய்கிறது. அது எந்தெந்தப் பகுதிகளில் எந்தெந்த அடிப்படையில் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்பதைப்பற்றி தமிழக அரசைக் கேட்டு, அதை எந்த அடிப்படையில் அனுப்ப வேண்டுமென்ற குறிப்பையும் அனுப்பியிருக்கிறது. அதன்படி ஏழை மக்கள் அதிகமாக இருக்கிற பகுதியாகவும், அரிசனங்கள், பழங்

குடிமக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதியாகவும், மற்றும் இளம் சிசுக்கள் அதிகமாக மரணம் அடைகின்ற பிற்பட்ட பகுதிகளுக்கும் மட்டுமே இதுபோன்ற திட்டத்தை அமுல் நடத்தவேண்டுமென்று குறிப்பை அனுப்பியிருக்கிறது.

அந்த அடிப்படையிலேதான் மத்திய அரசு 10 வட்டங்கள் குறிப்பிடவேண்டுமென்று கேட்டிருக்கிறது. அவர்கள் இந்தியா பூராவுக்கும் குழந்தைகள் நல ஒருங்கிணைப்பு திட்டம் என்ற பெயரிலே 1000 தொடங்கப்பட வேண்டுமென்றும் அதிலே நம்முடைய மாநிலத்திற்கு 10 இடங்கள் அளிக்கப்பட இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கனவே நான் இதைப்பற்றி விளக்கமாகக் கூறி இருப்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நிம்மதி அளிக்கும் என்று கருதுகிறேன். குழந்தைகள் நல ஒருங்கிணைப்புத் திட்டம் என்ற பெயரிலே இந்தியத் துணைக் கண்டத்திலே முறையாகச் செயல்படுவது தமிழக அரசுதான். நம்முடைய அரசின் சத்துணவுத் திட்டத்தோடு மத்திய அரசு சொல்லும் பல திட்டங்களையும் அரசு இதிலே இணைத்திருக்கிறது. அதற்காக 10 இடங்கள் தருவோம் என்கிறார்கள். நாம் 10 இடங்கள் என்பதை 20 இடங்களாக உயர்த்தித் தரவேண்டுமென்று 1974ஆம் ஆண்டிலேயே கேட்டிருக்கிறோம். சென்ற ஆண்டிலேயே நாம் இதற்கான பரிந்துரையை மத்திய அரசிற்குச் செய்திருக்கிறோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

திருமதி ஜோதி வெங்கடாசலம்: இந்த இண்டக்ரேட்டட் சைல்ட் வெல்ஃபேர் ப்ராஜக்ட் மிகவும் முக்கியமானது. அதுவும் குழந்தைகளுடைய நலத்தைக் காப்பதற்கு பிற்போக்கான பகுதிகளிலே ஆரம்பிப்பதற்கு மாநில அரசுக்கு மத்திய அரசு எழுதிக்கேட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மாநில அரசு அதற்கு அடிப்படையான திட்டத்தை வகுத்து இருக்கிறதா? அவர்கள் கொடுக்கப்போகிற 10 இடங்களில் விரிவுபடுத்தினால் மட்டும் போதாது. மாநில அரசினுடைய பங்கு இதிலே என்ன? இதற்கென்று அடிப்படையான நலத் திட்டத்தை அமைத்து அதைக் கிராமங்களுக்கு விரிவுபடுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: தலைவர் அவர்களே, ஒரு மையம் என்பது 100 இடங்களைக் கொண்டது. அதுபோன்று 1000 இடங்களைக் கொண்டதுதான் 10 இடங்கள் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். தமிழக அரசு 2000 இடங்களுக்கு அனுமதி கொடுக்கவேண்டுமென்று கேட்டு இருக்கிறோம். ஏற்கனவே தமிழக அரசு நடத்தி வருகின்ற சத்துணவுத் திட்டத்தை இதோடு இணைத்து செயல்படவேண்டுமென்பதுதான் தமிழக அரசினுடைய கொள்கை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா: அமைச்சர் அவர்கள் 10 இடங்களில் ஆரம்பிக்கப்போவதாகச் சொன்னார்கள். அந்த 10 இடங்கள் எந்த எந்த மாவட்டங்களில் எந்த எந்த இடங்களில் ஆரம்பிக்கப்போகிறார்கள் என்பதைத் தெரிவிப்பார்களா?



மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: தலைவர் அவர்களே, நான் ஆரம்பத்திலேயே சொன்னதுபோல் எந்த எந்தப் பகுதியிலே இளஞ்சிறார்கள் இறப்பு அதிகமாக இருக்கிறதோ எந்த எந்தப் பகுதிகளிலே மலைஜாதியினர் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக இருக்கிறார்களோ எந்த எந்த பகுதியிலே முற்போக்கு அடையாத மக்கள் அதிகமாக இருக்கிறார்களோ அப்படிப்பட்ட பகுதிகளாக இருபது இடங்களைச் சொல்லியிருக்கிறோம். சேலம் மாவட்டத்திலே மலைஜாதியினர் வாழுகிற ஏற்காடு, செங்கற்பட்டு மாவட்டத்திலே திருவள்ளூர் சேலம் மாவட்டத்தில் பெத்த நாயக்கன் பாளையம், தென் ஆற்காடு மாவட்டத்தில் கண்டமங்கலம் மதுரை, மாவட்டத்திலே பழனி, இராமநாதபுரம் மாவட்டத்திலே பரமக்குடி, வட ஆற்காடு மாவட்டத்திலே தெள்ளாறு, மதுரை மாவட்டத்திலே நிலக்கோட்டை, திருநெல்வேலி மாவட்டத்திலே தென்காசி, செங்கோட்டை, கோயம்பத்தூர் மாவட்டத்திலே தாராபுரம், வட ஆற்காடு மாவட்டத்திலே ஆரணி, தர்மபுரி மாவட்டத்திலே களி, இராமநாதபுரம் மாவட்டத்திலே காளையார்கோயில், கன்னியாகுமரி மாவட்டத்திலே திருவட்டாறு, தஞ்சாவூர் மாவட்டத்திலே திருவாரூர், திருச்சி மாவட்டத்திலே பெரம்பலூர், நீலகிரி மாவட்டத்திலே கடலூர், புதுக்கோட்டை மாவட்டத்திலே கரம்பக்குடி மற்றும் சென்னையிலே இரண்டு இடங்கள் ஆகிய 20 இடங்கள் பரிந்துரை செய்யப்பட்டு இருக்கின்றன.

## அனாதைக் குழந்தைகளுக்கு உதவி.

* 115 வினா.—டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு சமூகநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அனாதை இல்லத்தில் பயிலும் குழந்தைகளுக்கு அரசாங்கத்தில் இருந்து கொடுக்கப்படும் உதவித் தொகை எவ்வளவு? np(இ) இந்த உதவித் தொகையினை அதிகரிக்கும் செயற் குறிப்பு ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:

(அ) பெரிய நகரங்களான சென்னை மதுரை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், சேலம் ஆகியவற்றில் உள்ள குழந்தைகள் இல்லங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு குழந்தைக்கு ரூ. 14 மற்ற ஊர்களில் உள்ள (மலைப் பிராந்தியங்கள் அல்லாதவை) குழந்தைகள் இல்லங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு குழந்தைக்கு ரூ. 13 மலைப்பிராந்தியங்களில் உள்ள குழந்தைகள் இல்லங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு குழந்தைக்கு ரூ. 18.

(இ) இல்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, மாதம் ஒன்றிற்கு ஒரு குழந்தைக்கு 16 ரூபாய் கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் பதிலளித்தார்கள். இது எந்தக்காலத்திலே நிர்ணயிக்கப்பட்டது? எனக்குக் கிடைத்த தகவல்படி இருபது ஆண்டுகளுக்கு முன்பு பிரிட்டிஷார் காலத்திலே நிர்ணயிக்கப்பட்டது என்பது. அதை

மீண்டும் பரிசீலனை செய்து தற்போதுள்ள விலைவாசி ஏற்றத்திற்குத தகுந்தபடி ஜாஸ்தியாக்குவதற்கு குறிப்பு இருக்கிறதா? இப்போது சீப் மினிஸ்டர் பண்டிலிருந்துகூட தொகையைக் கொடுக்கலாம், ஆகவே அதற்கான ஏற்பாடுகள் இருந்தால் அவைகளினுடைய விவரத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி. வி. எம். அண்ணாமலை: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கொடுக்கப்பட்டு வந்த தொகை ஒருபிள்ளைக்கு மலைப்பிரதேசமாக இல்லாத பகுதிகளாக இருந்தால் மாதம் ஒன்றுக்கு 12 ரூபாய் கொடுக்கப்பட்டு வந்தது. மலைப்பகுதிகளாக இருந்தால் மாதம் ஒன்றுக்கு—அந்தப் பகுதிகளில் உணவுத் தட்டுபாடு இருக்கும் என்ற காரணத்தினாலும் வண்டி போக்குவரத்து வசதிகள் இல்லாமல் இருக்கும் என்ற காரணத்தினாலும்—18 ரூபாய் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் போன்ற நண்பர்களுடைய ஆலோசனையின்பேரில் சென்ற ஆண்டு எப்ரல் திங்களிலிருந்து 12 ரூபாய் என்று இருந்தது 13 ஆகவும் 14 ஆகவும் உயர்த்தப்பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப்போல் விலைவாசி ஏற்றத்தின் காரணமாக இந்தத் தொகை குறைவாகத்தான் இருக்கிறது. நிதி நிலைக்குத் தக்கபடி அடுத்து வருகிற ஆண்டில் உயர்த்தலாமா என்பதுபற்றி யோசிக்கப்பட்டு வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஒரு குழந்தைக்கு 16 ரூபாய் என்று இருப்பதை 30 ரூபாயாக ஆக்கவேண்டுமென்று சமீப காலத்திலே கோரிக்கை கொடுக்கப்பட்டதா? அதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு சி. வி. எம். அண்ணாமலை: பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்ததைப்போல் கோரிக்கையின் அடிப்படையிலேதான் தொகை கூட்டப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டிலே உயர்த்தியிருக்கிறார்கள். விலையுயர்வைக் கருதிப்பார்த்தால் அந்தத் தொகை குறைவு என்பதை அரசாங்கம் உணர்கிறது. இப்போது அதை ஆராய்ந்து உயர்த்துவதற்கு யோசிக்கப்படுகிறது. என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### பிரமனூருக்குப் பேருந்துப் பணி.

• 116. வினா.—திரு. த. சோனையா:—மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம் திருப்புவனம் ஒன்றியம் பிரமனூருக்கு பஸ் விடும்படி பொதுமக்களிடமிருந்து கோரிக்கை வந்துள்ளதா?

(இ) ஆம், எனில் அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்—

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.



### ஸ்ரீ பாண்டியன் மோட்டார் சர்வீசால் இயக்கப்படும் பேருந்துகள்

• 117—வினா:—திரு. க. சுப்பு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) அருப்புக்கோட்டை ஸ்ரீ பாண்டியன் பஸ் சோதனைக்காக (On Test) என்ற பலகையைப் போட்டுக்கொண்டு பயணிகளை ஏற்றிச் செல்வதாக அரசுக்குப் புகார் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்—

(அ) ஆம்.

(இ) புகாரில் குறிப்பிட்ட தகவல் குறித்து விசாரித்ததில் உறுப்பினர் குறிப்பிட்ட வழித்தடங்களில், அருப்புக்கோட்டை ஸ்ரீ பாண்டியன் மோட்டார் சர்வீஸ் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தைச் சேர்ந்த பேருந்துக்கள் உரிய செல்திறனுள்ள அனுமதியுடன் ஓடினவென்றும், நடப்புக் கால அளவில் அவற்றிற்கான வரியும் செலுத்தப்பட்டிருந்தது என்றும் தெரிய வந்தது.

திரு. க. சுப்பு:— அனுமதிக்கப்பட்ட வழித்தடங்களில் அதிகமாக வசூலாகவில்லை என்ற காரணத்தால் அனுமதி இல்லாத இடங்களில் ஜனநெரிசல் அதிகமாக உள்ள இடங்களில் இப்படி பஸ்களை விடுவதால் மக்கள் அதிகமாக அவதிக்குள்ளாகிறார்கள். ஆகவே, இதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா? நாங்கள் இப்படிப்பட்ட புகார்கள் எழுதிக்கொடுக்கிறபோது எல்லாம்—நானே கூட டிக்கட்டை வைத்திருக்கிறேன்—ஏதோ விசாரித்ததாகவும் உண்மையில்லை என்றும் பதில் கொடுக்கிறார்கள். அதற்குக் காரணம் அந்த உரிமையாளர்களுக்கு உறவினர்களாக இருப்பவர்கள் எப்படியோ மீண்டும், மீண்டும் அதிகாரிகளாக வந்துவிடுகிறார்கள் என்பதுதான் என்பதை அரசு உணருகிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்:—கேள்வி நேரத்தின்போது குற்றச்சாட்டுகள் இருக்கக்கூடாது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, "ஆன் டெஸ்ட்" என்று போட்டு அருப்புக்கோட்டை பாண்டியன் பஸ் போனதாகப் புகார் ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தந்தார்கள் அது சம்பந்தமாக, அரசாங்கத்தைச் சேர்ந்த போக்குவரத்துத் துறை அதிகாரிகள் திடீர் சோதனைகள் செய்து பார்த்ததில் தவறான முறைகேடுகள் எதுவும் அங்கே நடைபெறவில்லை என்று தெரிந்திருக்கிறது. அங்கு ஓடிய பேருந்துக்கள் அனைத்துக்கும் உரிமங்கள் ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கின்றன. அந்த பேருந்துக்கள் அனைத்துக்கும் ஒழுங்காக மோட்டார் வாகன வரிகள் செலுத்தப்பட்டிருக்கின்றன என்றும் தகவல் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இங்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

வேறு ஒரு ரூட்டில் ஓடுகிற பேருந்தை இந்த ரூட்டில் விட்டார்கள் என்ற குற்றச்சாட்டை சொல்லியிருக்கிறார்கள். அந்தகைய புகார்கள் இருக்குமேயானால் அவற்றைப் பற்றி அரசாங்கத்தைச் சேர்ந்த அதிகாரிகள் தீவிரமான நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர் பேசுகின்ற போது இன்னொன்றையும் சொன்னார்கள். அதாவது அந்தப் பேருந்து உரிமையாளருக்கு வேண்டிய உறவினர்கள் அந்தத் துறையில் இருக்கின்றார்கள். நான் அவருக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நாம் எல்லோருமே உறவினர்கள் தான். ஆகையினால் இதிலே நான் வேறு, நீ வேறு என்று பிரித்துப் பேசுவதில் பயனில்லை. எவ்வளவுதான் அதிகாரிகள் தீவிரமாக முயற்சித்தாலும், என்னுடைய அனுபவத்தை வைத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவிக்கிறேன். இந்திய அரசு இயற்றி நாம் செயல் படுத்தி வருகின்ற மோட்டார் வாகன சட்டம் "மேக்னா கார்ட்டா ஆப் தி பிரைவெட் செக்டர்" தனியார் பஸ் முதலாளிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற மகா சாசனம் என்று சொன்னால் அது பொருந்தும். எவ்வளவுதான் தீவிரமாகச் செயல்படுத்தினாலும் கூட, அதிலே இடையூறுகள், குறைகள் இருக்கத்தான் செய்யும். ஆகவேதான் எல்லா பஸ்களையும் தேசியமயமாக்க வேண்டுமென்று ஒரு சட்டத்தை இந்தச் சட்ட மன்றம் நிறைவேற்றியது.

### *Film Finance Corporation.*

118. *Q.* Thiru N. K. PALANISAMY :—Will the Hon. the Minister for Harijan Welfare with reference to Question No. 758 answered on 4th April 1974 be pleased to state the present stage of the proposal to set up Film Finance Corporation for the State ?

மாண்புமிகு திரு. என். ராஜாங்கம்: தென்னகத்துக்கென்று தனியாகத் திரைப்பட நிதியுதவிக் கழகம் ஒன்றை நிறுவுமாறு கேட்டு, இந்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டது. இம்மாநில அரசின் கருத்தை அவர்கள் ஏற்கவில்லை.

திரு. என். கே. பழனிசாமி. தலைவரவர்களே, முன்பு ஒரு முறை, இந்தச் சபையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது குறித்து பேசுகிறபோது, மத்திய சர்க்கார் உதவி கிடைக்காவிட்டாலும், இந்த மாநில சர்க்கார் அதற்கான முயற்சியைச் செய்யும் என்று சொன்னார்கள். இப்பொழுது திரைப்படங்களின் தரம் மிகவும் மோசமாக இருக்கின்றன. ஆகவே சர்க்கார் இந்த மாதிரியான கார்ப்பரேஷன் ஒன்றை அமைத்து, நல்ல தரமான படங்களுக்கு நிதியுதவி செய்ய முன் வந்தால் வசதியாக இருக்கும், அம்மாதிரி செய்வதற்கு இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. என். ராஜாங்கம்: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதார்த்தத்தின் அடிப்படையில், வடநாடு பம்பாயில் ஒரு நிதி உதவி கழகம் இருப்பது போன்று தென்னகத்தில் ஒன்று தேவை என்று குறிப்பிட்டிருந்தார். மத்திய அரசுக்கு எழுதிக் கேட்டதற்கு என்று கொடுக்கப்பட்ட விளக்கத்திலிருக்கும் கருத்துப்படி தமிழ், கன்னடம், மலையாளம், தெலுங்கு ஆகிய நான்கு மொழிகளிலிருந்தும் படம் தயாரிப்பவர்களிடமிருந்து மனுக்கள் கோரப்பட்டதில், 245 விண்ணப்பங்கள் வந்தன. 34, 35 விண்ணப்பங்கள் மட்டுமே தமிழ் நாட்டிலிருந்து வந்தன. ஆகவே தனி உதவிக் கழகம் ஒன்று அமைக்க முடியாது என்று கருதப்பட்டது. இப்பொழுது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணம் தமிழ் நாட்டுக்கு மட்டும் ஒரு உதவிக் கழகத்தை அமைக்கலாகாதா என்பதுதான். அதற்கான நிதி தேவை, வசதி முதலியவை இருக்கின்றதா என்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத்தான் கேட்க வேண்டும். அதற்கு அவர்கள் தான் பதில் சொல்ல வேண்டும்.

திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தைத் தமிழகம் பெற்றிருக்கிறது. பம்பாயில் "பிலிம் பைனான்ஸ் கார்ப்பரேஷன்" என்று இருப்பதுபோன்று என் தமிழ் நாட்டில் ஒன்றை அமைக்க கூடாது என்று அறிய விரும்புகிறேன். தமிழக அரசே ஸ்லம் கிளியரன்ஸ் போர்டு வாட்டர் போர்டு என்று வைத்திருப்பதுபோன்று பிலிம் பைனான்ஸ் போர்டு என்ற பெயரில் ஒன்றை ஆரம்பித்து இப்பொழுது சுமார் 90—100 படங்களுக்கு மேல் எடுக்கப்பட்டு வெளியிடப்படாமல் இருந்து வருகின்றன—அந்த படங்களுக்காவது நிதி உதவி செய்ய முன் வந்தால் நலமாக, இருப்பதோடு இப்பொழுது சினிமாத்துறையில் இருந்து வருகின்ற சில தவறான ஒழுங்கீனங்களைச் சரி செய்வதற்கும் அவைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன். இம்மாதிரி ஏதாவது செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தின்போது யோசனை சொல்லக்கூடாது. கேள்வியிலிருந்து தகவல்கள்தான் பெறலாம். நம்முடைய யோசனைகளைச் சொல்வதற்கு இது நேரமல்ல.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, இது சம்பந்தமாக அரசாங்கம் யோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். மைசூர் மாநிலத்தில் ஒரு படம் எடுப்பதற்கு சுமார் 1½ இலட்சம் ரூபாய் நிதி உதவி கிடைப்பதாகச் சொல்கிறார்கள். அம்மாதிரி இங்கும் கிடைக்க வழி செய்ய அரசாங்கம் யோசிக்குமா என்பதுதான் நான் அறிய விரும்புவது.

மாண்புமிகு திரு. என். ராஜாங்கம்: தலைவரவர்களே, உறுப்பினர் செழியன் அவர்கள் கேட்ட வினாவின் அடிப்படையிலும், அதைத் தொடர்ந்து நம்முடைய பழனிசாமி கேட்டுள்ள வினா, ஆகிய இந்த இரண்டையும் சேர்த்துத்தான்

பதில் அளித்தேன். இப்பொழுது இருக்கின்ற விண்ணப்பங்கள் குறைவு என்ற காரணத்திற்காக பம்பாயில் இருக்கின்ற நிதி உதவிக் கழகம் எதுவும் செய்ய முடியாது என்று சொல்லி விட்டார்கள். ஆகவே இங்கே தென் பகுதியில் உள்ள நான்கு மாநிலங்களில் எடுக்கப்படும் படங்களுக்கு உதவி செய்ய அதாவது இந்த நான்கு மொழிகளைக் கொண்ட திராவிட பகுதிக்கு ஒரு கழகம் அமைப்பதா, அல்லது தமிழகத்திற்கு மட்டும் வைப்பதா என்ற கருத்தினை உறுப்பினர் அவர்கள் தனியாக எழுதிக் கேட்டால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விடை அளிப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

* 119 வினா : திரு. எம். முத்தையா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) திருநெல்வேலி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தாலுக்கா சில்லாங்குளம் பஞ்சாயத்து ஓ. சரவணாபுரம் கிராமத்து அரிசன மக்கள் வீட்டுமனைப் பட்டாக்கோரி அரசுக்கு மனுச் செய்துள்ளார்களா?

(இ) ஆமெனில், அதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?.

மாண்புமிகு திரு. என். ராஜாங்கம் (அ) ஆண்டு (இ) ஆம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, தற்போது விதி முறைகளின்படி பல அலுவலகங்களின் பரிசீலனைக்குச் சென்று அரசாங்கத்திடமிருந்து ஒப்புதல் வாங்க நீண்ட கால தாமதமாகிறது. அந்த காலதாமதத்தை தவிர்ப்பதற்கு அரசாங்கம் விதி முறைகளைத் தளர்த்த ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். ராஜாங்கம் : தலைவரவர்களே, அநேகமாக எல்லாவற்றிற்கும் கொடுத்தாகிவிட்டது. இப்பொழுது கிடைக்கப் பெற்றுள்ள மனுக்கள் மீதும் தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு 31—3—75 தேதிக்குள் அவைகள் யாவும் முடித்துவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மனுவதி : தலைவரவர்களே, தனியார் இடங்களை அரசாங்கம் விலைக்கு வாங்கி அரிசனங்களுக்கு பட்டா செய்து வழங்கும் உத்தேசம் அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். ராஜாங்கம் : தலைவரவர்களே, அந்த கொள்கைதான் இன்றைய தினம் நடைபெற்று வருகிறது.



* வினா 120. திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

செங்கற்பட்டு மாவட்டம், இருகுன்றம்பள்ளி கிராம அரிசன மக்களுக்கு வீட்டுமனை வழங்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. என். ராஜாங்கம் : ஆம்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இது ஓராண்டுக்கு முன்னால் நான் அங்கு சென்று பார்த்து வந்து போட்ட கேள்வி. அதற்கு இப்பொழுது பதில் வந்திருக்கிறது. இது எப்பொழுது அவர்களுக்கு வழங்கப்பட்டது. அவர்கள் மனு செய்து கொண்டு எவ்வளவு காலத்திற்கு பின் வழங்கப்பட்டது, என்று அறிய விரும்புகிறேன். மேலும் எந்த இடத்தில் வழங்கப்பட்டது என்று தெரிந்து கொள்ளவும் விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். ராஜாங்கம் : தலைவரவர்களே, செங்கல்பட்டு மாவட்டத்தில இருபபங்குன்றம் என்ற இடத்தில் 4.85 எக்கர் நிலம் 6—8—71-ல ஆர்ஜிதம் செய்யப்பட்டு ஆறு அரிசன குடும்பங்களுக்கு 1970—71-ல் வழங்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அது உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## 2. அரசினர் சட்டமுன் வடிவு

தமிழ்நாடு 1975-ம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 1/75),

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, "தமிழ்நாடு 1975-ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி திருத்தச் சட்ட முன் வடிவு * (சட்ட மன்றப் பேரவை சட்ட வரைவு எண். 1/75) ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும்" என முன் மொழிகிறேன்.

இந்திய அரசியல் அமைப்பின் 267 (2) பிரிவின்படி மாநிலச் சட்ட மன்றம் முன் தொகைத் தன்மையொத்த எதிர்பாராச் செலவு நிதி ஒன்றை ஏற்படுத்தலாம். எதிர்பாராது ஏற்படும் செலவுகளுக்குச், சட்ட மன்றம் 205 அல்லது 206-வது பிரிவின்

*24—2—1975-ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா] [1975 பிப்ரவரி 28

கீழ் சட்டம் இயற்ற அதிகாரம் அளிக்கும் வரை அச்செலவுகளைச் சமாளிப்பதற்காக, மேற்சொன்ன நிதியிலிருந்து முன் தொகை வழங்க மாநில ஆளுநருக்கு இயலும் வகையில் இந்நிதி மாநில ஆளுநரின் பொறுப்பில் வைக்கப்படும்.

தமிழ்நாடு 1950-ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதிச் சட்டத்தின் கீழ் (தமிழ் நாடு சட்டம் 14/1950) 1 கோடி ரூபாயைக் கொண்ட எதிர்பாராச் செலவு நிதி ஏற்படுத்தப்பட்டது. இத்தொகை வருவாய் வைப்பு நிதியிலிருந்து பெறப்பட்டது. 1953—54-ல் இம்மாநிலம் பிரிக்கப்பட்டபோது தமிழ்நாடு 1954-ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 2/1954) இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் எதிர்பாராச் செலவு நிதி 75 லட்சம் ரூபாய் என்று வரையறுக்கப்பட்டதுடன் இத்தொகை மாநிலத் தொகுதி நிதியிலிருந்து எதிர்பாராச் செலவு நிதிக்கு மாற்றப்படவேண்டுமென்றும முடிவு செய்யப்பட்டது. 1959-ஆம் ஆண்டில் சட்டமன்றத்தில் திருத்தச் சட்டம் இயற்றப்பட்டதன் மூலம் எதிர்பாராச் செலவு நிதி மீண்டும் 1.50 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது. அதிலிருந்து அரசின் பணிகள் பெருமளவில் அதிகமாயின. 1965-ஆம் ஆண்டில் சென்னை மாநகருக்கும் பிற பகுதிகள் சிலவற்றிற்கும் உணவு பொருள்களைத் தொடர்ந்து வழங்குவதற்காக அரச பெருமளவில் உணவுப் பொருள்களை வாங்க வேண்டி வந்தால் எதிர்பாரா செலவு நிதியை உயர்த்துவதற்கான அவசியம் உணரப்பட்டு இந்நிதி 5 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது. அது முதற்கொண்டு இம்மாநிலத்தில் வறட்சித் துயர் தணிப்புப் பணிகளை நிறைவேற்றுவதற்காக கணிசமான செலவை செய்யவேண்டி வந்தது. எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து இச் செலவு செய்யப்பட்டது. எனவே, 1969-ல் இந் நிதி 5 கோடி ரூபாயிலிருந்து 10 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது.

கடந்த பல திங்கள்களாக தமிழகத்தில் இதற்கு முன் காணா வகையில் வறட்சி நிலவி வருவதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். வறட்சித்துயர் தணிப்பு பணிகள் பலவற்றை அரசு மேற்கொண்டுள்ளது. 5 கோடி ரூபாய் அளவிற்குச் செலவிட இதுவரை அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. துயர்தணிப்புப் பணிகள் குறித்த செலவையும் ஏனைய முக்கிய வளர்ச்சிப் பணிகள் குறித்த செலவையும் ஒத்திப் போட இயலாதென்பதால் எதிர்பாராச் செலவு நிதியை 10 கோடி ரூபாயிலிருந்து 20 கோடி ரூபாயாக உயர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மேற்சொன்ன நோக்கத்தை வைத்து இச்சட்ட முன்வடிவு விழைகிறது. இச்சட்ட முன் வடிவை ஏற்குமாறு இம்மாமன்றத்தை நான் வேண்டிக் கொள்கிறேன்.



1975 பிப்ரவரி 28]

DR. H. V. HANDE : Mr. Speaker, Sir, on the surface, this Bill may look very innoccuous, a matter of fact and routine one. But, I personally feel that it is not so. Because, all these days we have been allowing the Government to draw Rs. 10 crores from the Contingency Fund. Suddenly from today onwards, the Government will be able to draw Rs. 20 crores . It is a very,very huge portion of the Budget, if we take into consideration the percentage of this to the entire Budget. how much it is to the 400 odd crores, we should know. Tomorrow, it may be 450 crores it is not to arm the Government with such extra-ordinary powers. May be it will be misused. There are instances for it, if only we look into the Audit Reports. There are instances.

I have in my hands the Report of the Comptroller for the year 1972-73 and there you will find a large number of variations pointed out. Budgetary variations up to 6 per cent 10 per cent, and 12 per cent have been pointed out If we now arm the Government with such wide discretionary powers, vast powers it may be abused by the Government. Without coming to the Legislature they will spend the twenty crores. It is a very serious thing.

No other State has armed itself with 20 crores in the Contingency Fund. I do not know. In fact, the Constitution itself in Art. 267 has laid down very clearly that for the purposes of meeting unforeseen expenditure, pending authorisation of such expenditure by Parliament under Arts 115 and 116 it is clearly and specifically laid down there. Now, the Minister says that it will be required for famine relief. That can be done after taking the sanction of the Legislature. You have all the time during the Budget session. Or you can even take a token grant of Rs. 100 for new service.

If we trace the history of this fund, it was Rs. 75 lakhs in 1955. Then it was 1.5 crores and then it become 10 crores Now a very huge amount is asked by the Government. What is the proportion of this the Budget. It has not been done in Parliament or in any other State Assembly.

This is something very, very serious. I am afraid that if this particular Bill is passed,the officials concerned and the Government concerned-whoever it is that ruling today or tomorrow-with these wide powers, may be misused. There are instances for such misuse. Therefore, I have briefly mentioned that this is wrong.

[Dr. H.V. Hande] [1975 பிப்ரவரி 28

I wish every member should be vigilant before this Bill is passed. Every member should contribute his ideas on this Bill. This Bill should not be allowed without resistance. If we do that our conscience will be clear that we had protested againt this earlier. I wish that this Bill should not be passed straightway. It can be referred to a small committee if not a select committee of leaders of parties. It should be seen whether the amount could be reduced to Rs. 15 crores instead of Rs 20 crores.

We have not been told how much of the ten crores previously allowed had been spent and was this Government pushed to a corner because of want of funds? Have they spent Rs. 9.9 crores and they were short of funds? Simply beacuse we are here to rubber stamp whatever the Minister brings forward, this should not be passed in the Assembly. This sort of unconcern and callousness for the feelings the Members should not be there. Therefore, I strongly make a protest that this Bill should not be allowed to be passed. I oppose this Bill, Sir.

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற எதிர்பாராச் செலவுகள் நிதியை 20 கோடி ரூபாயாக உயர்த்தக் கோரி இருப்பதை நான் வரவேற்றுப் பேசுகிறேன். ஏனென்று கேட்டால் இன்று நாட்டிலே எதிர்பாராச் சம்பவங்கள் நிறைய நடந்து கொண்டே இருக்கின்றன. அதுவும் குறிப்பாக இந்த ஆண்டு வெள்ளம் வருகிறது, அடுத்த ஆண்டு வறட்சி வருகிறது, இல்லையென்றால் எங்காவது தீ பிடிக்கிறது, குடி நீர் பற்றாக்குறை வருகிறது. இப்படிப்பட்ட பிரச்சனைகளையெல்லாம் கவனித்து அரசாங்கம் உடனுக்குடனே மக்களுக்கு நன்மை செய்யவேண்டிய காரணத்தினால் இப்படிப்பட்ட செலவுகளை அனுமதிப்பதிலே தவறு இல்லை என்று நான் நினைக்கிறேன். அதுமட்டுமல்ல 1954-ம் ஆண்டில் 75 லட்ச ரூபாயாக இருந்தது, இன்றைக்கு 20 கோடியாக மிக அதிகமாக உயர்த்தப்படுகிறது என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். 1954-ம் ஆண்டில் இருந்த பணத்தின் மதிப்பிற்கும் இன்று உள்ள பணத்தின் மதிப்பிற்கும் உள்ள நிலையைப்பார்த்தால் அதிக வித்தியாசம் இருக்க முடியாது. அதுமட்டுமல்ல, இன்றைக்கு நாட்டில் இருக்கிற நிலையை எடுத்துக்கொண்டால் வறட்சிக்காக உடனடியாக உதவி செய்ய வேண்டுமென்றால் அதற்கு இப்படிப்பட்ட நிதிகள் இருந்தால் தான் மக்களுக்கு உதவி செய்யமுடியும். சென்னை நகரில் குடி நீர் இல்லை என்று எல்லா அங்கத்தினர்களும் பேசினார்கள். உடனே உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் ஒரு திட்டத்தை வெளியிட்டார்கள். $1\frac{1}{4}$ கோடி ரூபாய் செலவில் பாலாற்றிலிருந்து குடி நீர் கொண்டுவரப்படும் என்றார்கள். இப்படிப்பட்ட திட்டத்தை உடனடியாக செயல்படுத்துவதற்கு இப்படிப்பட்ட நிதிகளைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும். இப்படிப்பட்ட நிதிகள் இருக்கின்ற காரணத்தினால் தான், சமீபத்தில் வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கிற குடியேற்றத்தில் தீ விபத்தினால்



1975 பிப்ரவரி 28] [திரு. கே. எ. வகாப்]

பல ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டபோது அரசாங்கம் அவர்களுக்கு உடனடியாக உதவி செய்வதற்கு பணத்தைச் செலவு செய்வதற்கு வாய்ப்புகள் வருகிறது. 1972-ம் ஆண்டு வெள்ளம் வந்தது என்றால் வெள்ளத்துயர்துடைப்பு வேலைகள் செய்வதற்கு, இவைற்றிற்கெல்லாம் இப்படிப்பட்ட நிதி அரசாங்கத்தின் பொறுப்பில் இருக்கவேண்டியது மிக மிக அவசியமானது. அரசாங்கத்தில் அவர்கள் செலவு செய்கிற கணக்குகளை வேண்டுமானால் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னது போல அடிக்கடி கேட்டுக் கொண்டிருக்கலாம். விவரங்களைக் கேட்கலாம். இப்படிப்பட்ட நிதியானது நிச்சயம் அரசாங்கத்தினிடத்தில் கணிசமான அளவிலே இருப்பது அத்தியாவசியமான ஒன்றாக இருக்கிறது. இன்றைக்கு வறட்சி ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில் இன்னும 55 கோடி ரூபாய்க்கு வறட்சியை ஒழிப்பதற்கு திட்டங்கள் போட்டிருந்தாலும் கூட இந்த வரட்சியானது இன்னும் 5, 6 மாதங்களுக்கு நீடிக்குமென்றால் 100 கோடி ரூபாயை தாண்டிப்போகக்கூடிய சூழ்நிலை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

(முற்பகல் 10-30)

ஆகவே இப்படிப்பட்ட நிதியின் மூலமாக நாட்டிலேயுள்ள மக்களுக்கு உடனடியான தேவைகளைச்செய்து துயர் தடுப்பைச் செய்ய முடியும். குறிப்பாக குடிநீர்ப்பிரச்னை அத்தியாவசியமான, அவசரமான பிரச்னையாகும். இப்படிப்பட்ட பிரச்னைகளுக்கெல்லாம் இங்கே சட்டமன்றத்திலே பேசும்பொழுது அரசாங்கம் செய்யவில்லை அரசாங்கம் செய்யவில்லை என்று சொல்கிறார்கள். அதே நேரத்திலே அவைகளைச் செய்வதற்கு வேண்டிய வசதிகளையும், பொருளாதாரத்தையும் அனுமதித்து விட்டு அப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்டால் அதில் அர்த்தம் இருக்கும் அப்படியல்லாமல் இந்த நிதியைக் கொடுக்கக் கூடாது, இதைக் கொடுத்தால் எப்படிச் செலவு செய்வார்கள் என்று கேட்கிறார்கள். அவர்களிடத்திலே 20 கோடி ரூபாயைக் கொடுத்துவிட்டு அதற்குப் பிறகு எப்படிச் செலவு செய்தார்கள் என்று கேட்பதற்கான கடமையையும் உரிமையையும் பெற்றிருக்கிறோம். ஆகவே இப்படிப்பட்ட நிதி அரசாங்கத்தின் கையில் நிச்சயமாக இருக்கவேண்டும். இந்த நிதியைக்கொண்டு எதிர்காலத்திலே எந்தவிதமான துயரும் நாட்டிலே வரக்கூடாது என்றுதான் நினைக்கிறோம். எதிர்பாராமல் நாட்டிலே துயர் வரும் நேரத்திலே உதவும் வகையில் "உடுக்கை இழந்தவன் கைபோல" என்று சொல்வார்களே அதைப்போல அதை உடனடியாகச் செய்வதற்கு அவசரகால நிதியாக அரசாங்கத்திற்கு அனுமதிப்பது எல்லாவிதத்திலேயும் பொருத்தம் என்று கூறி இதை வரவேற்று அமர்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, இந்த எதிர்பாராச்செலவு நிதி மசோதாவை எதிர்க்கட்சி அங்கத்தினர் என்ற முறையிலே அதிலேயுள்ள கடுமையான குறைகளை எடுத்துச் சொல்வதற்குக்

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1975 பிப்ரவரி 28

கடமைப்பட்டிருக்கிறேன் என்று நான் நினைக்கிறேன். ஏற்கனவே தமிழக அரசு வரவு செலவிலே இன்றைக்கு சுமார் 12 சதவிகிதம்கூட வேறுபாடுகள் இருக்கும் அளவில் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கியது போதாது என்று வருடத்திற்கு மூன்று சப்ளிமெண்டரி பட்ஜெட்டுகளையாவது கொண்டு வருகிறார்கள். ஏதோ நாற்காலி வாங்க மறந்து விட்டோம், மேசை வாங்க மறந்து விட்டோம் என்று ஒவ்வொரு இலாக்காவிற்கும் வேண்டுமென்று கிட்டத்தட்ட மூன்று சப்ளிமெண்டரி பட்ஜெட்டுகளைக் கொண்டு வருவதைப் பார்க்கிறோம். ஏறக்குறைய நம்முடைய வரவு செலவுத் திட்டத்தில் எவ்வளவோ கோடிக்கணக்கான ரூபாயை ஒதுக்கி வைத்திருந்தாலும் அது போதாது என்று சப்ளிமெண்டரி பட்ஜெட்டில் வேறு கேட்கிறார்கள். அதிலேயும் நம்முடைய நிதி நிலையை ஒழுங்காக வைத்திருக்கிறோமா என்றால் கறுப்புப் புள்ளியாக இருக்கிறது. இன்றைக்கு இந்த அரசு எதிர்பாராச் செலவுகளுக்காகப் பணம் கேட்கிறது. என்றால், வெள்ளம் பஞ்சம் போன்ற "நேச்சுரல் கலாமிட்டிஸ்" திடீரென்று வரும் நேரத்தில், அந்தக்கஷ்டங்களைச் சமாளிக்கும் விதத்தில் செய்வதற்கோ அல்லது உணவுப் பங்கீட்டிற்காகத் திடீரென்று அரிசியையோ அல்லது இம்மாதிரி அத்தியாவசியப் பொருட்களையோ வாங்க வேண்டுமென்றால் பணம் இருக்க வேண்டுமென்று இப்படி ஒதுக்கி வைத்துக்கொள்ளுகிறார்கள்.

1954-ஆம் வருஷத்தில் 75 இலட்சமாக இருந்தது, 1965-ல் ஐந்து கோடியாக இருந்தது, 1969-ஆம் வருஷத்தில் 10 கோடியாக இருந்தது. ஆனால் இன்றைக்கு 1975-ஆம் ஆண்டிலே 20 கோடி ரூபாய் தேவை என்று கேட்கிறார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால் இந்த அரசு 1969-லே இப்படித்தான் கடுமையான பஞ்சம் என்று பலவற்றைச் செய்தார்கள். 1972 லே வெள்ளம் என்று சொல்கிறார்கள். ஆனால் இன்னும் பஞ்சத்தைச் சமாளிக்க முடியவில்லை. வெள்ளத்தைச் சமாளிக்க முடியவில்லை இந்த ஆண்டுக்காவது ஆகிலும், கொஞ்சம் அதிகமாக மழை பெய்து விட்டால் உடனே வெள்ளம் வெள்ளம் என்று சொல்வது, அதேபோல் பருவமழை கொஞ்சம் தவறிவிட்டால் உடனே பஞ்சம் பஞ்சம் என்று பஞ்சாய்ப்பறப்பது. எதற்கெடுத்தாலும் திருவோடு எடுத்துக்கொண்டு மத்திய அரசாங்கத்திடம் 17 கோடி ரூபாய் கொடு வெள்ளத்தைச் சமாளிப்பதற்கு, 14 கோடி ரூபாய் கொடு பஞ்சத்தைச் சமாளிப்பதற்கு என்று திருவோடு தூக்கிக் கொண்டு மத்திய அரசாங்கத்திடம் போகிறார்கள்.

இது போதாது என்று மக்கள் மத்தியிலே என்ன பிரசாரம் செய்கிறார்கள் என்றால், மத்திய அரசாங்கத்திடம் 50 கோடி ரூபாய் கேட்டோம், 60 கோடி ரூபாய் கேட்டோம், இன்னும் கொடுக்கவில்லை; கொடுத்தால்தான் செய்வோம் என்று மக்கள் மத்தியிலே விஷப்பிரசாரம் செய்கிறார்கள். மத்திய அரசாங்கத்திற்கு



1975 பிப்ரவரி 28] [திருமதி த. ந. அனந்தநாயகி]

மாநிலங்களைப்பற்றிக் கவலை இல்லாதது போலவும், உடனடியாகப் பஞ்ச நிவாரணத்திற்காக உதவி தராதது போலவும் ஆகவே, பஞ்ச நிவாரணத்தைச் செய்யவில்லை என்பது போலவும் விஷப் பிரச்சாரம் செய்துகொண்டு இருக்கிறீர்கள்.

இப்படி எதிர்பாராத செலவுகளுக்காக என்று ஒதுக்கப்பட்ட நிதி இருக்கும்பொழுது மத்திய அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறோம், மத்திய அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறோம் என்று பிரச்சாரம் செய்ய வேண்டிய அவசியம் இல்லையே. அந்த 10 கோடி ரூபாயிலிருந்து இன்றைக்குள்ள பஞ்சத்தைப் போக்குவதற்கான வேலையைச் செய்திருக்கிறார்களா? எதிர்பாராத செலவுகளுக்காக என்று 10 கோடி ரூபாய் இருக்கிறது. அதிலிருந்து மாநில அரசு வேலை செய்திருக்கிறதா? அதிலிருந்து கொஞ்சம் கொடுத்தால் என்ன? மத்திய அரசாங்கம் $7\frac{1}{2}$ கோடி ரூபாய்தான் கொடுத்தது, அதை வைத்துக் கொண்டு செலவு செய்கிறோம் என்று சொல்கிறீர்கள். அப்படி என்றால் உங்களுக்கு எதற்காக 20 கோடி ரூபாய்? இருக்கின்ற 10 கோடி ரூபாயையே ஒழுங்காகச் செலவழிக்கத் தெரியாத இந்த அரசு, அந்த 10 கோடி ரூபாயை முன்பணமாக வைத்துக்கொண்டு, இராமநாதபுரத்தில் கடுமையான பஞ்சம் நிலவும் பகுதிகளில் கஞ்சித்தொட்டிக் கூட திறப்பதற்குச் சரியான நிர்வாக இயந்திரம் இல்லை என்று மக்கள் தலைச்சுமையாக இருக்கின்ற தட்டுமுட்டுச் சாமான்களைத் தூக்கிக்கொண்டு வேறு ஊர்களுக்குப் போகும் நிலையில், எதிர்பாராச் செலவுக்காக ஒதுக்கப்பட்ட பணத்திலேயிருந்து இந்த அவசரக் காலத்திலே ஒழுங்காகச் செலவு செய்யாத இந்த அரசுக்கு 20 கோடி ரூபாய் எதற்காக? வரவு-செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணம் போதாது என்று மூன்று சப்ளிமெண்ட் பட்ஜெட் வரையில் போடுகிறீர்கள். டோக்கன் கிராண்ட் என்று செலவழித்துவிட்டு பிறகு சப்ளிமெண்டரி பட்ஜெட்டில் "ரேட்டிஃபை" செய்கிறீர்கள். 5-வது ஃபைனான்ஸ் கமிஷனுக்குப் பிறகு, நேச்சுரல் கலாமிட்டீஸுக்காக ஒரு ஃபண்ட் வைத்து எல்லா அரசாங்கங்களும் ஆண்டுதோறும் இவ்வளவு ரூபாய் கொடுக்க வேண்டும். அதிலிருந்து திடீரென்று செலவுகள் ஏற்பட்டால் ஒத்தாசை செய்கிறோம் என்றும் மாநிலங்கள் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி இருக்கும்பொழுது இந்த 20 கோடி ரூபாய் எதற்காக ?

உணவுப் பஞ்சத்தைச் சமாளித்திருக்கிறீர்களா ? ஆங்காங்கு நியாய விலைக் கடைகளை திறந்து அரிசியை உடனடியாக விநியோகம் செய்ய வழி செய்தீர்களா ? அத்தியாவசியப் பொருட்களின் விலை விஷம்போல் ஏறுகிறது, அத்தியாவசியப் பொருட்கள் என்பது ஒவ்வொரு குடும்பத்திற்கும் தேவை, இன்றைக்கு அத்தியாவசியப் பொருட்கள் என்றால், கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிகள் 13, 18 என்று போட்டாலும்கூட, அத்தியாவசியப் பொருட்கள் என்பது 6 அல்லது 8-க்கு மேல் போகாது. உப்பு, புளி, மிளகாய், பருப்பு, எடிபிள் ஆயில் என்று இப்படி 6, 8 அயிட்டத்திற்கு மேல்

போகாது. இவைகளையாவது நியாய விலையிலே கூட்டுறவு அங்காடிகளின் மூலமாகவோ வேறு ஏதாவது கடைகளைத் திறந்தோ விநியோகம் செய்தீர்களா என்றால் அதுவும் இல்லை.

இன்றைக்குக் கூட்டுறவுத் துறையின் மூலமாக நெல்லையும், அரிசியையும் கொள்முதல் செய்கிறீர்கள். ஏழாண்டுகளாக கூட்டுறவை வைத்திருக்கிறீர்கள். நான் முன்பே சொன்னபடி, ஏற்கனவே கூட்டுறவுத் துறையிலே கூட்டுக் கொள்ளை அடிப்பதாக மக்கள் மத்தியிலே பீதியிருக்கிறது. இது போதாது என்று இதையும் சேர்த்துக் கொடுத்திருக்கிறீர்கள். 25,000 ரூபாய், 30,000 ரூபாய என்று வாங்கிக் கொண்டு நெல் பிடிக்கிறேன், அரிசி பிடிக்கிறேன் என்று சுற்றிக்கொண்டு இருக்கிறார்களே தவிர, வேலை நடக்கவில்லை. இப்படிப்பட்ட பல குற்றங்களையும் கண்டுபிடித்து, தண்டித்து, மக்களுக்கு நன்மை செய்யும் அளவில் நிர்வாக இயந்திரம் முடுக்கப்பட்டு, திருத்தப்பட்டிருந்தால் இப்பொழுது 20 கோடி ரூபாய் கேட்டாலும் கொடுக்கலாம், சரி, கொடுத்தால் நியாயமாக நடக்கும் என்று நம்பலாம். ஆனால், இருக்கிற பணமே எங்கே போகிறது என்று புரியவில்லை. இதைப்பற்றி பிரதம மந்திரி முதல் கடைசியிலே உள்ள சாதாரண மக்கள் வரையில் பேசிக்கொண்டு இருக்கிறார்கள்.

துயர் தணிப்பு துயர் தணிப்பு, என்று சொல்லிக்கொண்டு துயரைத் திணித்திருத்திக்கிறீர்கள். துயர் திணிப்பு வேலைதான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எங்கே பார்த்தாலும் காண்ராக்டர்களின் சொர்க்கமாக இருக்கிறது. கவர்னர் பெருமானிடத்திலேயே ஒரு கூலி, என்ன நடக்கிறது என்று சொல்ல முடியாமலும், சொல்லாமல் இருக்க முடியாமலும் திண்டாடிக்கொண்டிருக்கிறான். இப்படிப்பட்ட முறையில் பணம் பாழாகும் நேரத்தில், இந்தப் பணத்தைக் கொடுங்கள் என்று கேட்பதிலே என்ன நியாயம் இருக்கிறது ? சட்டமன்றத்திற்கு இருக்கின்ற கொஞ்ச நஞ்சம் அதிகாரத்தையும் பறிமுதல் செய்வது மாதிரி, 20 கோடி ரூபாயைப் பாழாக்குவதற்காக என்று கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த அவசரச் சட்டம் தேவையில்லை என்பதை சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : தலைவர்களே, இந்த மன்றத்தில் கொண்டு வரப்பட்டிருக்கின்ற எதிர்பாராச் செலவுகள் குறித்த இந்தத் தீர்மானத்தில் நான் அதனை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

ஒரு அரசாங்கத்திற்கு, நடைமுறையிலே, நிர்வாகத்திலே பல்வேறு செலவுகள் இடையிலே ஏற்படுமானால் எதிர்பாராச் செலவுகள் ஏற்படத்தான் செய்யும். அப்படிப்பட்ட செலவுகளுக்காக ஆண்டு முதலிலே பட்ஜெட்டில் ஒதுக்கப்படும் தொகை போதவில்லையென்றால் சட்ட மன்றத்தின் அனுமதியைப் பெற்று மீண்டும் அந்தச் செலவுகளைச் செய்வதற்காகப் பணத்தை எடுப்பது என்பது ஜனநாயக முறையிலே ஒத்துக்கொள்ளப்



பட்ட ஒரு மரபு. அந்த மரபின் அடிப்படையிலேதான் நாட்டிலே பல நேரங்களிலே எதிர்பாராத நிலைமைகள் ஏற்படும் பொழுது அதற்காகப் பல்வேறு சூழ்நிலைகளின் அடிப்படையிலே ஏற்படும் எதிர்பாராச் செலவுகளுக்காக நம்முடைய சட்ட மன்றத்தின் அங்கீகாரத்தைக் கேட்கிறார்கள். நான் பார்க்கிறேன், அம்மையார் அவர்கள் பேசும் பொழுது, நான் பேச்சைக் கொஞ்சம் உற்றுப் பார்த்தேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி; பார்த்தாரா, கேட்டாரா ?

திரு. துரை முருகன் : பார்த்தேன், கேட்டேன். "கண்ணே செவியாகவும்" என்று ஒரு பாடல் கூட இருக்கிறது. "கட்செவி"என்றும் சொல்வார்கள். இரண்டாலும் உற்றுப் பார்க்கும்பொழுது, அவர்கள் பட்ஜெட்டிலே பேசுவதைக் கேட்போமானாலும் சரி, வேறு மானியங்களிலே பேசும் பொழுது கேட்போமானாலும் சரி, அல்லது கவர்னர் உரை மீது பேசும்பொழுது கேட்டாலும் சரி, எல்லாம் ஒரே ராகத்தில்தான் பாடுவேன் என்று சொல்வது மாதிரி, இதிலே சரியில்லை, அதிலே சரியில்லை, மத்திய அரசாங்கத்திற்குச் சொல்ல வேண்டிய அளவில்தான் இருக்கிறது என்று சொல்கிறார்கள்.

சொல்லுவது சுலபம். நான் கூடச் சொல்லிவிடலாம். ஆனால் நிர்வாகத்தில் இருக்கிறபோதுதான் அது புரியும். அடிக்கடி மத்திய அரசைப் பணம் கேட்கிறீர்களே என்று அம்மையார் அவர்கள் கூறினார்கள். மத்திய அரசு பணம் தேவை என்றால் என்ன செய்கிறது ? நோட்டு அடிக்கிறார்கள் ; ஆங்காங்கு வெளிநாட்டுக்குத் திருவோடு தூக்கிக்கொண்டு போகிறார்கள். ஒன்றும் இல்லாவிட்டால் நகர்வாலாக்களை அழைத்துக் கொள்கிறார்கள். இந்த நிலை மத்திய சர்க்காரில் இருக்கிறது.

இங்கே நாம் நமக்கிருக்கும் அதிகாரத்தை வைத்துக் கொண்டு மன்றத்தைக் கலந்து முடிவு எடுக்க வேண்டியிருக்கிறது. எதிர்பாராத செலவுக்கு, வறட்சிப் பணிக்கு மத்திய சர்க்காரைப் பணம் கேட்பதைப் பற்றி இப்போது சொல்லுவது பொருந்தாது. நான் பார்க்கிறேன்—இந்த மன்றத்திலே இருக்கின்ற எந்த எதிர்க்கட்சியானாலும் எதிர்க்கட்சியாக இல்லாமல் எதிரிக் கட்சியாகவே செயல்படுகிறார்கள். வராந்தாவில் அவர்களுக்குள்ளாகவே சண்டை போட்டுக் கொள்கிறார்கள். கடைசியில் சண்டை போட ஆள் இல்லாமல் கண்ணாடி முன்னால் நின்று கொண்டு "நீ யார்" என்று சண்டை போட்டுக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. மேலவை உறுப்பினர் தாக்கப்பட்டார்கள்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த சப்ஜக்ட் வேண்டாம்.

THIRU R. PONNAPPA NADAR: The hon. Member should not cast aspersions on the other members.

MR. DEPUTY SPEAKER: Let him leave that subject.

டாக்டர் எச். வி ஹாண்டே: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். மத்திய சர்க்காரைக் குறிப்பிட்டுப் பேசுவது கண்டிஜன்ஸி பில்லில் எப்படி வரும்?

There is a limit. It is out of context and irrelevant. The subject under discussion is Contingency Fund (Amendment) Bill. I am just trying to point out to the Hon. Deputy Speaker that whenever we speak anything out of context or out of the Bill, the Speaker pulls us up and says. 'You must speak on the Bill'. We stick to it. As far as possible when it is out of context and when the discussion is about something absolutely unconnected with the subject, it should not be allowed. I am not trying to fight with the hon. Member. We have got nothing against each other.

MR. DEPUTY SPEAKER: The same thing applies to all Members. I have already pulled him up.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இப்படிப்பட்ட விஷயத்தில் உரிய இடத்தில் நின்று இங்கே பேசுகிற மற்ற உறுப்பினர்கள் பேசினால் இந்தப் பிரச்சினை எழுந்திருக்காது. முதலில் பேசிய திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் வறட்சி நிதி சேட்டு திருவோடு தூக்கிக் கொண்டு போனதாகக் குறிப்பிட்டார்கள். அந்தத் திருவோட்டில் என்ன விழுகிறது என்று இவர் ஆரம்பித்தார். அந்தத் திருவோட்டில் இருந்துதான் இந்தத் திருவோடு எழுந்ததே தவிர வேறு அல்ல.

THIRUMATHI T. N. ANANTHANAYAKI: It is not irrelevant. You have got Rs. 10 crores and you have not spent that. Before that you are rushing up for more money. You have not exhausted that amount.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கண்டிஜன்ஸி பண்ட் என்றால் என்ன என்று வழக்கறிஞராக இருக்கும் அம்மையார் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அரசாங்கம் அவசரத் தேவையை முன்னிட்டு செலவழிப்பதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையே தவிர வேறு அல்ல. திடீரென்று மருத்துவ மனைகளுக்கு நிதி போதவில்லை என்றால்கூட கண்டிஜன்ஸி பண்டிலிருந்து எடுத்துச் செலவு செய்ய முடியும். அப்படி ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்வது என்பது வேறு. மொத்த வரவு செலவில் மத்திய அரசு ஒரு தொகையைத் தர வேண்டுமென்று கேட்பது வேறு. அதைத்தான் மத்திய அரசிடத்தில் திருவோடு தூக்கிச் சென்றதாக அம்மையார் அவர்கள் சொன்னார்கள். அப்படி எடுத்துச் சொல்லப்பட்ட திருவோடு முதன்முதலில் ராஜாஜி அவர்கள் காலத்தில் அவர்கள் கையில் கொடுக்கப்பட்ட திருவோடுதான். கருணாநிதி கண்டுபிடித்த திருவோடு அல்ல. ராஜாஜி, காமராஜர், பக்தவத்சலம் அவ்வளவு பேரிடமும் இருந்த திருவோடுதான் இப்போதும் இருக்கிறது.



திருமதி த. ந. அனந்தநாயகி: அந்தத் திருவோட்டை நாங்கள் தூக்கிய காலத்தில் "காவடி தூக்குகிறார்கள்" என்று சொன்ன திருவாய்கள்தான் இன்று திருவோடு தூக்கிக் கொண்டிருக்கிறது என்று சொன்னேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஒரு கட்சி ஆட்சி நடக்கிறபோதே இவ்வளவு திருவோடு தூக்கியும் கிடைக்கவில்லையே என்பதற்காக வலியுறுத்திச் சொல்லப்பட்டதே தவிர வேறு அல்ல.

திரு. துரைமுருகன்: ஒரு குடும்பத்திலே எதிர்பாராத செலவு ஏற்படுவது போல் ஒரு நாட்டுக்கும் ஏற்படும். அதற்காக இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதை நான் வரவேற்று என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: துணைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவைக் கொண்டு வந்து எதிர்பாராத செலவுக்காக கண்டின்ஜென்ஸி பில்லில் 10 கோடி ரூபாய் இருப்பதை 20 கோடி ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆப்ஜக்ட்ஸ் அண்டு ரீசன்சில்—

In view of the increase in the volume of Budgetary transactions

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பட்ஜெட் இப்போது வரப் போகிறது. ஒரு வேளை அடுத்த ஆண்டு பொதுத் தேர்தல் வருகிற நிலையில் பட்ஜெட்டில் போடப்போகின்ற வரியைச் சற்றுக் குறைத்து இந்தத் தொகையை எடுத்துச் செலவழித்துக்கொள்ளலாம் என்ற நோக்கத்துடன் இது அதிகப்படுத்தப் படுகிறதோ என்று எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. கண்டின்ஜன்ஸி பண்ட் அத்தியாவசியமான சமயங்களில்தான் உபயோகப்படுத்தப்படுகிறது. இந்த கண்டின்ஜன்ஸி பண்டில் எவ்வளவு ஏற்கனவே செலவாகியிருக்கிறது என்ற கணக்கை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது விளக்க வேண்டும். 10 கோடி ரூபாயாக இருப்பதை 20 கோடி ரூபாயாக உயர்த்த நினைப்பது உசிதமல்ல. மேலும் 5 கோடி அதிகப்படுத்தி 15 கோடியாக உயர்த்தினால் போதுமானது. 20 கோடி என்று அனுமதிக்கப்படுமானால் பிறகு அரசாங்கத்திற்கேகூட எதிர்பாராத தொந்தரவுகள் ஏற்படும். ஆகவே, 15 கோடி போதும் என்று மாற்றும்படி கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, அவையின் முன் இருக்கும் மசோதாவின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். தவறான செலவுகளுக்குப் பயன்படுத்தி விடுவார்களோ என்ற அச்சத்தோடு 10 கோடி ரூபாயை 20 கோடி என்று ஆக்குவது சரியல்ல என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். இது சட்ட மன்றத்தின் அதிகாரத்தைப் பறித்துக் கொள்ளுகிற முறையில் இருக்கிறது என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். இந்த மசோதா சட்டத்திற்கு உட்பட்டு அதிகாரத்திற்கு உட்பட்டுத்தான் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அரசியல் சட்டத்தின்படி — பிரிவு 267 சப் கிளாஸ் 2-ன் படி—

"The Legislature of a State may by law establish a Contingency Fund in the nature of an imprest to be entitled "the Contingency Fund of the State" into which shall be paid from time to time such sums as may be determined by such law, and the said Fund shall be placed at the diposal of the Governor of the State to enable advances to be made by him out of such Fund for the purposes of meeting unforeseen expenditure pending authorisation of such expenditure by the Legislature of State by the law under article 205 or article 206".

அப்படி கொண்டுவர உரிமை இருக்கிறது. இந்திய அரசியல் சட்டத்தில் குறிப்பிட்டிருக்கிற சட்டமுறைகளுக்கு உட்பட்டுத்தான் இந்த மசோதா இங்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. எதிர்பாராத செலவினங்களுக்கு இந்தத் தொகை ஒதுக்கப்பட வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே, 10 கோடி ரூபாயாக இருக்கும்போது இதைச் செலவழிக்க என்ன முறைகள் பின்பற்றப்பட்டனவோ அந்த முறைகள்தான் இனியும் பின்பற்றப்படும். இந்தத் தொகை 1954-ம் ஆண்டில் 75 லட்சம் ரூபாயாக இருந்தது. 1959-ம் ஆண்டு 1½ கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. 1965-ம் ஆண்டில் 5 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. 1969-ம் ஆண்டில் 10 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்போது 20 கோடி ரூபாய்க்கு அனுமதி கேட்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் மத்திய அரசு இந்தத் தொகையை எந்த அளவுக்கு உயர்த்தியிருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1972-ம் ஆண்டில்,

*The Contingency Fund of India (Amendment) Act*, 1972.

2. Amendment of section 2. To section 2 of the Contingency Fund of India Act, 1950 (hereinafter referred to as the principal Act), 1950 the following proviso shall be added, namely:

Provided that during the period beginnig on the 9th day of February 1972 and ending on the 30th day of April 1972, this section shall have effect subject to the modification that for the words "thirty crores of rupees", the words" "one hundred crores of rupees" shall be substituted.

30 கோடி ரூபாயாக இருந்தது 100 கோடி ரூபாய் அளவுக்குப் போயிருக்கிறது. குஜராத் மாநிலத்தில் இதற்கு 20 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அத்தியாவசியமான செலவுகளுக்காக எதிர்பாராத செலவுகளுக்காகச் செய்யப்படுகிற முறையே தவிர வேறு அல்ல.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மத்திய அரசு பிப்ரவரி மாதத்திலிருந்து ஏப்ரல் 30-ம் தேதி வரை என்று ப்ரொவிசோ போட்டிருக்கிறார்கள். அந்த மாதிரி ப்ரொவிசோ இங்கு போடப்பட்டிருக்கிறதா?



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கனவே இருக்கின்ற முறைகளைப் பின்பற்றித்தான், இப்பொழுது நிதி ஒதுக்கப்பட்டு வருகிறது. இப்பொழுது செலவு செய்கின்ற தொகை கூட the existing criteria of bringing to the notice of the Legislature when the corpus was 10 crores will continue when the corpus is raised to 20 crores.
ஏற்கனவே இருக்கின்ற விதி முறைகளின்படி, சட்ட மன்றத்தின் அனுமதி பெற்றுத்தான் செலவிடப்படுகிறது. என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த எதிர்பாராத பணிகளுக்காக கொடுக்கப்படுகின்ற தொகை செலவிடப்படவில்லையே, அப்படி இருக்கலாமா என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். நேற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னபடி 19 கோடி ரூபாயில் மத்திய சர்க்கார் 7·3 கோடி ரூபாய் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறது. ஆகவே இந்த அரசாங்கம் செலவு செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு சரியானதல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த ஆண்டு கண்டின்ஜண்ட் செலவுக்கான விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது.

The expenditure was Rs. 8.92 crores while the totl amount required was Rs. 13·43 crores.

13·43 கோடி ரூபாய் தேவைப்பட்டது. ஆனால் 8·92 கோடி ரூபாய்தான் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே தவறு எதுவும் நடந்துவிடவில்லை என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே இந்த மசோதா அவசியமான மசோதா, இதில எந்தவிதமான தவறும் ஏற்படாது, இந்த அவசியமான மசோதாவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன்னுள்ள கேள்வி," 1975-ஆம் ஆண்டு, எதிர் பாராத செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண் 1/75) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."
தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாகஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவரவர்களே,

1975-ஆம் ஆண்டு, எதிர்பாராத செலவு நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 1/75) நிறைவேற்றப்பட வேண்டும்

என்று கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(3) அரசினர் தீர்மானம்.

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, சட்ட மன்றப் பேரவை விதி 21 (3)-ன் கீழ் இன்றைய நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ளவை களில், இனங்கள் 3, 4, ஆகியவற்றை முன்னதாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் திரு. தங்க மணி அவர்கள் இருக்கையில் இல்லை. எனவே இனங்கள் 3, 4 ஆகிய வற்றை முன்னதாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தீர்மானத்தை அவையின் முடிவுக்கு விடுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(4) தனியார் அலுவல்கள்.

சட்ட முன்வடிவுகள்.

(i) தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, தமிழ் நாடு 1975-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, 1975-ஆம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.



THIRU B. VENKATASWAMY: Sir, I move—"That leave be granted to introduce the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1975"

The motion was put and carried and leave was granted.

THIRU B. VENKATASWMAY: Sir, I introduce the Bill.

MR. DEPUTY SPEAKER: The Bill is introdudec.

(ii) *1974-ஆம் ஆண்டு மேட்டூர் நகரியம் (ஒழிப்பு—நகராட்சியை விரிவுபடுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 57/74.

திரு. எம் சுரேந்திரன் : தலைவரவர்களே, "1974-ஆம் ஆண்டு மேட்டூர் நகரியம் (ஒழிப்பு-நகராட்சியை விரிவு படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை முன்வடிவு எண். 57/74) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள' வேண்டும். என முன்மொழிகிறேன்.

திரு. கே. என். குமாரசாமி : மேற்படி தீர்மானத்தை நான் வழி மொழிகிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : உதவித் தலைவரவர்களே, இந்த மேட்டூர் நகரியக் குழுவைக் கலைத்து, அங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட நகரசபையை உண்டாக்க வேண்டுமென்று இந்த மசோதாவை இன்று இங்கு முதன் முறையாக நான் சமர்ப்பிக்கவில்லை. 1970-ஆம் வருஷத்தில் இம்மாதிரியான மசோதா ஒன்று தயாரிக்கப்பட்டு, இந்தச் சபையின் அனுமதிக்கு வந்தது. ஆனால் 1971-ம் வருஷம் சபை கலைக் கப்பட்ட காரணத்தினால், அந்த மசோதா சபைக்கே வராமல் போய் விட்டது. 1971-ம் வருஷம் டிசம்பர் மாதம் மீண்டும் இந்த மசோதா சபைக்கு கொண்டுவரப்பட்டு, அனுமதிக்கப்பட்டது. அப்படி அனுமதிக்கப் பட்டபோது, பல உறுப்பினர்கள் திருவாளர்கள் கே. டி. கே. தங்கமணி, ஏ. சுப்பிரமணியம், எம். ஏ. லத்தீப், கே. எம். சுப்பிரமணியம் போன்ற வர்கள் எல்லாம் அந்த மசோதாவை ஆதரித்துப் பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அன்று அந்த இலாகாவிற்குப் பொறுப்பிலிருந்த இன்றைய கல்வி அமைச்சர் அவர்கள் அந்த மசோதா மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதில் கூறுகின்றபோது மேட்டூர் டவுன ஷிப் கமிட்டியைக் கலைப்பதிலே எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை, ஆனால் சிலவிடங்களில் இம்மாதிரியான நகரிய குழுக்களை வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இருக்கின்ற காரணத்தினால்தான், அது வும் இன்னும் இருந்துகொண்டிருக்கிறது என்று கூறினார். காலப் போக்கில் நிலைமைகளை ஆராய்ந்து அதைக்கலைத்து, நகரசபையாக்குவதில் ஆட்சேபனை இல்லை என்று குறிப்பிட்டார். அவர் அவ்வாறு கூறியதை அடுத்து அந்த மசோதா என்னால் அப்பொழுது வாபஸ் பெறப்பட்டது.

* 8-1-1975 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. எம். சுரேந்திரன்] [1975 பிப்ரவரி 28

1971-க்குப் பின்னால் இன்று 1975-ம் வருஷம், நான்கு ஆண்டுகள் கழிந்ததற்குப் பின்னாலும், அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. இன்றுவரையில் அரசாங்கத்தின் தரப்பிலிருந்து அதற்கான ஒரு மசோதா வராத காரணத்தினால், மீண்டும் அதே மசோதாவை இங்கு கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. நான் ஏற்கெனவே கூறியிருக்கிறேன். மேட்டூர் நகரியக் குழு மற்ற இடங்களில் ஏற்பட்டுள்ளதுபோன்று ஏற்பட்ட ஒரு நகரிய குழு அல்ல. இதை ஏற்கெனவே வற்புறுத்தியிருக்கிறேன்.

இப்பொழுது ஏற்படுத்தப்படுகின்ற நகரிய குழுக்கள் எல்லாம் அந்தப் பகுதியின் மக்கள் தேவையை உணர்ந்து, அந்தப் பகுதிகள் வளர்ச்சி அடைய வேண்டுமென்ற காரணத்தினால், அங்குள்ள நிலைமைகளை கருத்தில் கொண்டு அமைக்கப்படுகின்றன. ஆனால் மேட்டூர் நகரியக் குழு இந்த அரசாங்கம் வந்ததற்குப் பின்னால்

(திரு. கு. காமாட்சி தலைமை)

அல்லது அதற்கு முன்னதாக காங்கிரஸ் ஆட்சி இருந்த காலத்திலோ ஏற்பட்டது அல்ல. அதற்கு முன்னதாகவே, 1936-ம் வருஷம் ஒரு சிறு குழுவாக, நகரியக் குழு என்ற பெயரில் இல்லாமல், அந்தப் பகுதியில் அணைக்கட்டு வேலைக்கு வந்திருந்த மக்கள் ஆயிரக் கணக்கானவர்கள் இருந்த காரணத்தினால், அவர்களுடைய சுகாதாரம், குடிநீர்த் தேவை, போன்ற வசதிகளைக் கவனிப்பதற்காக அமைக்கப்பட்டது ஒரு குழு. ஆகவே நகரியக் குழுவிற்கு அது அவ்திவாரமாக அமைந்ததே தவிர, அதுவே நகரியக் குழு என்ற அளவில் அமையவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1936-க்குப் பின்னால் 1940-ம் வருஷம்தான் மேட்டூர் நகரியக் குழு என்ற ஒரு தனிச் சட்டம் உருவாக்கப்பட்டு, அந்தச் சட்டத்தின்கீழ்தான் இது அங்கீகரிக்கப்பட்டது என்பதுதான் இந்த மேட்டூர் நகரியத்தின் சரித்திரமாகும். 1920-ல் ஏற்பட்ட நகராட்சிகள் சம்பந்தமான சட்டத்தின் கீழ் இந்த நகரியக் குழு கொண்டு வரப்படவில்லை. அதற்காக 1940-ல் ஒரு சட்டம் செய்யப்பட்டு, அதன் கீழ் இந்த நகரியம் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-00)

அப்படி அங்கீகரிக்கப்படுகிற நேரத்தில் அது நகரசபையாக ஆக்கப்பட வேண்டுமென்று நோக்கம் இருந்தது என்றும், அதனுடைய வரி வருவாய் கணக்கெடுத்துப் பார்க்கிறபோது 15 சதவிகிதம் வருவாய்கூட இல்லாத காரணத்தால் அதை ஒரு நகரசபையாக ஆக்குவது நல்லதல்ல என்ற காரணத்தைக்கூறி, அதை நகர அமைப்புக் குழுவாக அமைத்து இருக்கிறார்கள். இது அதனுடைய சரித்திரத்தில் காணுகிற உண்மையாகும்.

1940-க்குப் பின்னால் 1948-ல் ஒரு திருத்தம் கொண்டுவந்து, அந்த நகர அமைப்புக்குழுவில் இன்னும் சில் பேர் வருவதற்கான வழிமுறைகளைக் கொண்டு வந்தார்கள். 1971-ம் வருஷத்திலே நான் இந்த மசோதாவைக் கொண்டுவந்த போது அங்கேயிருக்கிற சட்டமன்ற, பாராளுமன்ற



1975 பிப்ரவரி 28] [திரு. எம். சுரேந்திரன்]

உறுப்பினர்களையும் அதிலே அங்கம் வகிப்பதற்கான ஏற்பாட்டைச் சொல்லி அதற்கான ஏற்பாட்டையும் செய்து, அதிலே நான் இப்போது அங்கத்தினராக இருக்கிறேன். இப்படியே படிப்படியாக மாற்றங்களை அது அடைந்து இருந்தாலும் அந்த நகரியக்குழுவின் அமைப்பை அப்படியே வைத்து இருப்பது தேவைதானா, நியாயம் தானா என்பதைச் சிந்தித்து பார்க்கவேண்டும்.

அதை நகரசபையாக ஆக்காமல் இருப்பதால் இருக்கின்ற சிரமங்களைப் பற்றி இந்த மன்றத்தின் கவனத்திற்கு நான் சிலவற்றைக் கொண்டு வர விரும்புகிறேன். அவற்றைச் சீராக ஆராய்ந்து ஒரு முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

முக்கியமாக நகர அமைப்பு என்று சொன்னால், நகரத்தில் வாழும் மக்களின் சாதாரணத் தேவைகளை—குடிநீர், சாக்கடை வசதி, சுகாதாரம், கக்கூஸ் வசதி, பூங்கா வசதி, கல்வி வசதி—இதுபோன்ற காரியங்களை முறையாக கவனித்து செய்வதற்காகத்தான் இருக்கிறது. நாம் ஒவ்வொரு நகரத்திலும் இதனுடைய தேவைகளை நன்கு உணருகிறோம். 1958-ம் ஆண்டிலே நிறைவேற்றப்பட்ட சட்டத்திற்குப் பின்னால், ஒவ்வொரு கிராமத்தையும் பஞ்சாயத்துக்களாக மாற்றி, அந்தக் கிராம அபிவிருத்திக்கு அந்தக் கிராமத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதிநிதிகளைக் கொண்டு காரியங்களைச் செய்ய வேண்டுமென்று முடிவு எடுத்து இருக்கிறோம். 500 பேர் கொண்ட கிராமமாக இருந்தால் அது கிராமப் பஞ்சாயத்தாக தகுதி பெறுகிறது என்று நாம் சொல்லி இருக்கிறோம். அதற்குப் பிறகு 10,000, 20,000 மக்கள் தொகை, வருமானம் ஆகியவற்றைக் கணக்கிட்டு, அது படிப்படியாக நகரப் பஞ்சாயத்து, நகரசபை ஆகியவையாக மாற்றுவதற்கான வழிமுறைகளைச் சட்டத்தில் செய்து இருக்கிறோம்.

கடந்த வருஷத்திற்கு முன்புகூட பல நகரப் பஞ்சாயதுக்களை நகராட்சியாக மாற்றுவதற்கான உத்திரவுகளைப் போட்டு பல நகரசபைகளுக்கு ஸ்பெஷல் ஆபீசர்கள் போட்டு, நகரசபைகளாக அவற்றை அறிவித்து இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் கவனத்தில் கொள்ளவேண்டும். ஆனால் இது 1936-லிருந்து ஒரு கமிட்டி, 1940-ல் இருந்து நகரியக்குழு அமைப்பு என்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்றாலும், சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு என்று இருந்தாலும் அந்தப் பகுதியில் இருக்கும் மக்களுக்கு என்னென்ன மாதிரியான காரியங்களை அது செய்து இருக்கிறது என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். எங்கேயாவது நகரிய அமைப்புக்குழு ஏற்படுத்துவோமானால் அந்த நகரம் முழுவதையும், அந்த நகரத்தின் சரித்திரத்தையே மாற்றுகிற விதத்தில் அதனுடைய அபிவிருத்திப் பணிகள் இருக்கவேண்டும், அதை நிறைவேற்றுவதற்காக விசேஷ சலுகைகளை அரசாங்கம் கொடுத்து அந்தப் பணிகளை நிறைவேற்ற வேண்டும். இம்மாதிரியான காரியங்கள் பல இடங்களில் நடந்து இருக்கின்றன.

ஆனால் மேட்டூரை எடுத்துக்கொண்டால் 1936-ம் ஆண்டு அங்கே அணை கட்டும்போது கூலி வேலை செய்து வந்தவர்கள், அங்கேயே வீடுகள் கட்டிக் கொண்டு தங்கி விட்டார்கள். அவற்றிற்கு இன்றைக்கும் "கூலி லேன்" என்றுதான் பெயர் இருக்கிறது. அந்த வீட்டிற்கு சுமார் 200 சதுர அடி தான் விஸ்தீரணம் இருக்கிறது. இப்படி 20 வீடுகள் கொண்ட வரிசை யாக பல கூலி லேன்கள் கட்டப்பட்டு இருக்கின்றன. நகரசபை என்று இருந்தாலும் சரி, டவுன்ஷிப் என்று இருந்தாலும் சரி, அங்கே கட்டப் படுகிற வீடுகள் ஒரு பிளான் அடிப்படையில் கட்டப்படவேண்டும். ஆனால் இது நகர அமைப்பு என்று இருந்தாலும் நகரசபை என்று இருந்தால் என்னென்ன மாதிரி வேலைகளை எந்தெந்த முறையில் அதிகாரத்தைப் பயன்படுத்திச் செய்யவேண்டுமோ, அந்த வீடுகளை மாற்றிக் கட்டித் தரு வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமோ, அந்த நிலைமை களையெல்லாம் இது செய்து இருக்கிறதா என்று பார்த்தால், அந்த வேலை செய்யப்பட வில்லை. அப்படி செய்யப்படாத காரணத்தால் சட்டத்தில் நகரம் என்று இருந்தாலும், பார்வையில் அது மாற்றப்படவில்லை. ஒரு திட்டத்தின் அடிப்படையில், சட்டத்தின் அடிப்படையில் அந்த வீடுகள் கட்டப்படவில்லை என்பதால், அந்த நகரத்தின் சுகாதாரம், அழகு, சாக் கடை, ரோடுகள் எல்லாமே மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

அங்கே குடிநீர் வசதியை எடுத்துக்கொண்டால், பக்கத்தில் மேட்டூர் அணை இருக்கிறது என்று சொன்னாலும் அந்த மக்களுக்கு குடிநீர் சரிவர கிடைப்பது இல்லை. பல இடங்களில பைப் போட்டு கொடுத்து இருக்கிறோம். அப்படிக்கொடுத்து இருந்தாலும் அந்தக் குடி நீருக்காக அதிக வரி செலுத்தி வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அந்த அளவுக்கு வரி உயர்த்தப்பட்டு இருக்கிறது. அப்படி வரி அதிகமாக வாங்கிய போதிலும், 24 மணி நேரமும் தண்ணீர் வருகிறதா என்று சொன் னால் அப்படிக் கொடுத்ததும் இல்லை. கொடுக்கவும் இல்லை. இம் மாதிரி குடிநீர் விஷயத்தில் ஒரு நகரசபை செய்ய வேண்டிய பிரதான பங்கைக்கூட நகரமைப்பு செய்யவில்லை என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

குடிநீர் என்று சொல்கிறபோது குடிநீரோடு சேர்ந்து கழிவு நீரும் வந்து விடுகிறது. கழிவுநீர் தனியே செல்வதற்கு சாக்கடை இருக்க வேண்டும். ஒரு நகரத்தின் சுகாதாரத்திற்கு பிரதானமாக இருப்பது சாக்கடை வசதிதான். அந்தச் சாக்கடை அமைப்பு சரியான வகையில் அமைக்கப்படவேண்டும். ஒவ்வொரு வீடும் பக்கம் பக்கமாக இருப்பதால், வீட்டின் ஓரமாகவே சாக்கடை போவதால் வீட்டை உயர்த்தித் தூக்கவேண்டி இருக்கிறது. நிறையப் படிகளைப்போட்டு தூக்கவேண்டி இருக்கிறது. ஆகவே சாக்கடை வசதி மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது என்பதை உங்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இவற்றை டவுன்சிப் மாற்ற முடியுமா என்று பார்த்தால் கட்டாயமாக அதை மாற்ற முடியாது. ஏனெனில் ஜனங்களின் பிரதிநிதிகள் வந்தால்தான் அந்தப்



பகுதியில் இருக்கும் வீட்டின் நிலைமைகளை ஆராய்ந்து, அவர்களுக்கு வேண்டிய காரியத்தைச் செய்யமுடியுமே தவிர நியமனம் செய்யப்பட்டவர்கள் ஜனங்களிடம் சம்மந்தப்படாதவர்கள் அந்தக் காரி யத்தில் கவனம் செலுத்துவதற்கு முடியாமல் இருக்கிறது என்ற உண்மையை நாம் உணரவேண்டும்.

திரு. செ. கந்தப்பன்: நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதிலே நியமனம் பெற்று இருக்கிறார்கள். ஆகவே, ஜனங்களோடு சம்பந்தப்படாதவர்கள் அதிலே இருக்கிறார்கள் என்று சொல்லவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு எம். சுரேந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் கந்தப்பன் அவர்கள் முன்பு மசோதா கொண்டுவந்தபோதும் எதிர்த்துப் பேசி னார்கள். இன்றும் எதிர்த்துப் பேசினார் என்று சொன்னால் ஆச்சரியப் படமாட்டேன். நானும் உறுப்பினனாக இருக்கிறேன் என்று முதலிலேயே சொன்னேன்.

திரு. செ. கந்தப்பன்: நான் எதிர்க்கிறேன், ஆதரிக்கிறேன் என்ற கருத்தைச் சொல்லவில்லை. அதிலே உள்ளவர்கள் ஜனங்களோடு சம்மந்தப்படாதவர்கள் என்ற ஒரு வார்த்தை யைச் சொன்னதால், அதிலே அவரும் அங்கம் வகிக்கிறார், அவர்கள் மக்களோடு நெருங்கித் தொடர்பு கொண்டவர் என்ற காரணத்தால் அப்படிச் சொல்லவேண்டாம் என்று கேட்டுக்கொண்டேன்.

திரு எம். சுரேந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் கந்தப்பன் அவர்கள் தாமதமாக வந்ததால் நான் முதலில் சொன்னது காதில் விழுந்து இருக்காது என்று நினைக்கிறேன். நான் அங்கே அங்கத்தினனாக இருப்பதால்தான் மேலும் நல்ல முறையில் அதனுடைய நன்மை தீமைகளைப்பற்றி புரிந்துகொள்ள வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இன்றுள்ள உண்மை நிலையை அறிந்து பேச முடிகிறது. இந்த விஷயத்தில் பல விவகாரங்களை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரமுடிகிறது என்று சொல்லிக்கொள்றேன்.

அந்தப் பகுதியில் வீடுகள் அருகருகே கட்டப்பட்டு இருப்பதால் பாதைகள் சரிவர இல்லை. ஒரு நகரத்தின் பாதைகளைச் சீர் செய்ய, நகரத்தை அழகு படுத்த சுகாதார வசதிகள் செய்ய அதற்கு வேண்டிய நிதி வசதிகளைப் பெறுவதற்கு வரிவசூல் செய்யவேண்டும். நான் ஒரு புத்தகத்தில் படித்தேன். அமெரிக்காவில் ஒரு நகரத்தின் சிறப்பை எப்படி மதிப்பிடுகிறார்கள் என்றால் ஒரு நகரத்தின் ரோடுகளின் அளவென்ன, அந்த அடிப் படையில் வீடுகளின் அளவு என்ன என்று கணக்கிட்டு, அந்த நகரம் எத்தனைய தூரம் வளர்ந்து இருக்கிறது என்பதைக் கணக்கிடுகிறார்கள் என்று ஒரு செய்தியை நான் படித்து இருக்கிறேன்.

இந்த மேட்டூர் பகுதி மலைப்பகுதியாக இருக்கிறது. ஒரு பகுதி, மேடாக இருக்கிறது. ஒரு பகுதி பள்ளமாக இருக்கிறது. மேலே பாதி வீடுகள், கீழே பாதி வீடுகள் என்று அமைக்கப்பட்டு இருக்கிறது. அவைகள் ஒரே சீராக அமைக்கப்படவில்லை. இந்த நகரம் முன்னேற்றம் அமையாமல் இருப்பதற்குக் காரணம் ஜனங்கள், பிரதிநிதிகள் அதில் இல்லாத காரணத்தால்தான், நியமனம் செய்யப்பட்டவர்கள் அதில் முழு அக்கறை காட்டி வேலை செய்ய வாய்ப்பு இல்லாத காரணத்தால்தான் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொன்று, மேட்டூரை எடுத்துக் கொண்டால் அது சுற்றுலாப் பயணிகள் வருகிற இடமாக இருக்கிறது. மேட்டூர் அணையும், பூங்காவும் இன்னும் சிறப்பான முறையில் ஆக்கப்படுமானால் இன்னும் அதிகமான பயணிகள் வருவதற்கு வழி வகைகள் இருக்கின்றன. மேட்டூருக்கு வருகிற சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கான வசதிகளோ வாய்ப்புகளோ நகர அமைப்பினால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா என்றால் நகர அமைப்பால் ஏற்படுத்தப் படவில்லை. சுற்றுலாப் பயணிகளாக வருபவர்களை வரவேற்று அவர்களுக்கு நல்ல வசதிகளை உண்டாக்கித் தருவது நம்முடைய நகர அமைப்பினுடைய கடமையாகும். அந்தக் கடமையைச் செய்வதற்குள்ள நிலைமை இல்லை. ஆனால் பொருளாதார அமைப்பு இருக்கிறதென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுறேன்.

அடுத்தபடியாக எடுத்துக்கொள்வோமானால் அது பள்ளிக் கல்வியாகும். பள்ளிக் கல்வியை எடுத்துக்கொண்டால் அங்கே பள்ளிகள் பல இருக்கின்றன. ஆனால் தரமான கல்வி இருக்கிறதாவென்றால், அவைகள் சரியாக பார்க்கப்படுகிறதா. நடத்தப்படுகிறதாவென்றால் அதிலே பல்வேறு விதமான புகார்கள் வருகின்றன. இப்படி மற்ற பல அம்சங்களையும் பார்க்க முடியும். ஜனங்கள் அங்கே குடியிருக்கிறார்கள் என்றால் நல்ல காற்று வசதியுடன் குழந்தைகளை வளர்ப்பதற்கான வசதிகளை செய்துதரவேண்டிய, நகர அமைப்பும், நகர சபையும் செய்து தரவேண்டிய பணிகளாகும்.

இப்படி எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறதென்று பார்த்தால் முன்னேற்றம் மிகவும் மோசமாக இருக்கிறது. நகர அமைப்பில் இருக்கிற பஸ் நிற்கிற இடம் ஒழுங்கு படுத்தப்பட்டு நல்ல பஸ் ஸ்டாண்டாக செய்வதற்கான நடவடிக்கைகள் டவுன் ஷிப்பில் இருக்கிறது. ஆனால் செயல்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் படவில்லை. அந்த பஸ் ஸ்டேண்டு பழைய காலம் மாதிரியே இருக்கிறது. இன்னொன்றைப் பார்க்கிறோம். நகரப்பஞ்சாயத்துக்கள் பல நகரசபைகளாக மாற்றப்பட்டிருக்கிறதென்றால் அந்த நகரசபைக்குட்பட்ட அந்தப்பகுதியில் விவசாயம் செய்கிற நிலங்களைப் பல இடங்களில் பார்க்கமுடியும். ஆனால் மேட்டூர் நகர அமைப்பிற்குள்ளாக விவ



சாயம் செய்கிற நிலங்கள் இல்லை. ஆக இப்படி நகரசபையாக ஆவதற்கு எல்லா தகுதிகளும், அம்சங்களும் இருக்கின்றன. இப்படிப்பட்ட அம்சங்கள் இருந்தும் ஏதோ காரணமாக ஏனோ பிடிவாதமாக அது நகர அமைப்புக்கு குழுவாக இருக்கவேண்டுமென்று அரசு கருதுகிறது.

நகரம் வளர்வதற்கு மக்கள் நல்ல முறையில் வாழ்வதற்கு வேண்டிய வசதிகளைத் தடுக்கிறார்கள் என்று பொருளே தவிர வேறு பொருள் இல்லை.

இன்னொரு பக்கம் பார்த்தால் அதனுடைய ஜனத்தொகையில் குறைவு இருக்கிறதாவென்றால் இல்லை. அங்கே கிட்டத்தட்ட 50 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். பஞ்சாயத்து சட்டத்தினுடைய வழி முறையில் பார்க்கிற போது 20 ஆயிரம் பேர்களும் ஒரு லட்சம் ரூபாய் வருமானமும் உள்ள நகரங்களையெல்லாம் நகர சபைகளாக ஆக்கலாம் என்று சட்டத்தில் இருக்கிறது. இதை ஒரு தனி சட்டமாக வைத்துக்கொண்டு 50 ஆயிரம் பேர்களும் 10, 12 லட்ச ரூபாய் வருமானமும் உள்ள ஒரு நகரம் நகர அமைப்பின் கீழ் இருக்க வேண்டும். எந்த காரணத்தைக் கொண்டும் இதை மாற்றக் கூடாது என்று பிடிவாதமாக இருக்கிறார்கள் என்றால் என்ன காரணம் என்று தெனபடவில்லை. இந்த நகரம் முழுவதும் பொதுப் பணித் துறை நிலமாக இருக்கிறது. அணை கட்டுகிற காலத்தில் நஷ்டஈடு அளித்து நிலத்தை வாங்கிய காரணத்தினால் அரசாங்கத்தின் சொத்தாக இருந்தது.

1954-க்குப் பின்னால் மாற்றப்பட்டு அங்கே வாழ்கிற மக்களுக்கு அந்த நிலத்தை வீட்டு மனைகளாக மாற்றுவதற்கான அதிகாரம் அளிக்கப் பட்டு மாற்றப்பட்டிருக்கிறது. பல பேர்கள் மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இரண்டு தடவைகள் அந்த நிலங்களை வீட்டு மனைகளாக மாற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு அதற்கான ஸ்பெஷல் ஆபீசரைப் போட்டிருந்தார்கள். சமீப காலமாக அந்த ஸ்பெஷல் ஆபீசர் இல்லாத காரணத்தினால் அந்த வீட்டு மனைகளை பட்டா செய்கிற காரியம், ரெகுலரைஸ் செய்கிற காரியம் நடைபெறாமல் தேங்கி நிற்கிறது. இதை அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டுவராதும் கூட இதைச் செய்யாமல் இருக்கிறது என்றால் இவைகளுக்கெல்லாம் காரணம் நகர அமைப்பில் மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் நியமன அங்கத்தினர்கள் இருப்பது தான், வேறு காரணம் இல்லை என்பதை சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

இவைகளுக்கெல்லாம் மேலாக அந்த நகரத்தில் இருக்கிற மக்கள் மற்ற நகர சபைகளில் என்ன மாதிரியான அளவிற்கு கல்விக்காக, சுகாதாரத்திற்காக, தொழிலுக்காக, கடை லைசன்ஸுக்காக, மற்ற அம்சங்களுக்காக என்ன முறையில் வரிப்பணங்களைத் தருகிறார்களோ அதற்குக் குறைவாக இந்த நகர அமைப்பு வரிப் பணத்தை வாங்குவதில்லை. மற்ற நகர சபைகளில் வாங்குவதை விட அதிகமாகக் கூட இங்கே வரிப் பணத்தை மக்கள் தருகிறார்கள். மக்கள், இப்படி வரிப் பணத்தைத்

தருகிறவர்கள், தங்களுடைய குறைகளைச் சொல்லி தீர்த்துக் கொள்வதற்கு எந்தப் பிரதிநிதிகளைச் சென்று பார்ப்பது என்று தெரியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள்.

அதோடு மட்டுமல்ல. மக்களிடத்தில் வாங்கப்படுகிற வரிப்பணம் இன்னின்ன முறையில் செலவிடப்படுகிறது என்று மக்களே தெரிந்து கொள்ள வாய்ப்பாக அதை நகர சபையாகச் செய்ய வேண்டிய கடமையும் ஜனநாயகத்தில் இருக்கிறது. அதனால் தான் நாம் ஒவ்வொரு வருஷமும் பட்ஜெட் என்று இந்த சபையில் சமர்ப்பித்து, ஆளும் கட்சி மெஜாரிட்டி கட்சியாக இருந்தாலும், மற்றவர்களுக்கு முன்னால் சமர்ப்பித்து விவாதித்து, நிறைவேற்றி, பின்னால் செலவு செய்யப்படுகிறது. அதைக் கவனிக்க கமிட்டிகளை அமைத்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். எப்படி இது அரசாங்கத்திற்குப் பொருந்திய ஒன்றாக இருக்கிறதோ அப்படி நகர சபைக்கும், பஞ்சாயத்து யூனியனுக்கும் பஞ்சாயத்துக்கும் பொருந்திய ஒன்றே தவிர வேறு மாதிரியாக இதைப் பார்க்கக்கூடாது.

அந்த நகரத்தில் வரிப் பணம் தருகிற, வரி செலுத்துகிற, 50 ஆயிரம் மக்கள் தங்களுடைய வரிப்பணத்தை எந்த முறையில் செலவு செய்கிறார்கள் என்று அறிந்து கொள்வதற்கு, அவர்கள் அனுமதியைப் பெற்று செலவு செய்வதற்கான வாய்ப்பு ஏற்படாமல் நியமனம் செய்யப்பட்டவர்கள் விருப்பத்திற்கு, அந்த அமைப்பினுடைய தலைவராக இருக்கிற ஜில்லா கலெக்டர் விருப்பத்திற்கு செலவு செய்கிற முறையில் அந்த நகர அமைப்பு இருந்து கொண்டிருப்பது இன்றைய நாகரீகக் காலத்திற்கு, ஜனநாயகத்தைப் பற்றி அதிகமாகப் பேசுகிற இந்தக் காலத்திற்குப் பொருந்திய ஒன்று அல்ல என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

உங்களுக்குத் தெரியும், ஜனநாயகம் என்ற பெயரால் இருக்கிற தேர்தல் முறையை மாற்றவேண்டுமென்ற குரல் எழுந்திருக்கிறது. ஜனநாயகம் பறிபோகவில்லை. அதை மாற்றி அமைக்கவேண்டும், அப்படி மாற்றி அமைப்பதற்கான வழிமுறை என்ன என்று மற்றவர்களோடு சேர்ந்து ஆராய்வதற்கு, விவாதிப்பதற்கு தயாராக இருக்கிறேன் என்று இந்த தேசத்தை ஆளுகிற இந்திராகாந்தி அவர்கள் சமீபத்தில் கூறியிருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற தேர்தல் முறையில் தவறு இருக்கிறது, இவைகளை மாற்றி அமைக்க வேண்டுமென்று இதை விட அதிக ஜனநாயகம் வேண்டுமென்று கோருகிற காலக்கட்டத்தில் டவுன் ஷிப் கமிட்டி என்று வைத்துக் கொண்டு, வரி செலுத்துகிறவர்களைப் பற்றி சிந்திக்காமல் ஜனநாயகம் பிரதிநிதிகள் இருந்து செயல் படாமல் நியமனம் பெற்றவர்களே இருக்க வேண்டுமென்ற பிடிவாத குணம் கொண்டிருப்பது நல்லதல்ல, இதை மாற்றியாகவேண்டும்.

அங்கே இருக்கிற அவ்வளவு பேரும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள், அங்கே இருக்கிறவர்கள், கட்சிவித்தியாசம் இல்லாமல், மாற்றுக் கட்சியினர் கூட, அவ்வளவு பேர்களும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதை நாம் பல முறை



முறையிட்டிருக்கிறோம். அந்த நகர அமைப்பில் ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். இன்னும் சில பகுதிகளைச் சேர்த்து நகரசபையாக்க வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, அங்கே இருக்கிற நியமன அங்கத்தினர்கள் கூட அது நகரசபை யாவதுதான் சரி என்று ஒரு மனதாக தீர்மானித்து ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது என்ற நிலைமையையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

ஆகவே, இப்படி எந்த வகையில் பார்த்தாலும் கூட எல்லா வகையிலேயும் அது நகரசபையாவதற்கான தகுதியும், நியாயமும் இருக்கிறது. அதற்கு வருமானம் இருக்கிறது, ஜனத்தொகை இருக்கிறது. ஆகவே சட்டத்தின் படி பார்த்தாலும், நியாயத்தின் படி பார்த்தாலும் சமூக நீதிப்படி பார்த்தாலும் எந்த காரணத்தைக் கொண்டும் இந்த மசோதாவை நீங்கள் எதிர்த்து நிறைவேற்றாமல் தடுத்து விடுவதற்கான நியாயமில்லை என்று கருதுகிறேன். ஆகவே இந்த மசோதாவை நீங்கள் சட்டமாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

<u>திரு. செ. கந்தப்பன் :</u> தலைவரவர்களே, மாண்புமிகு சுரேந்திரன் அவர்கள் பல தடவை இந்த கருத்தை இந்த சட்டமன்றத்தில் வலியுருத்தியிருக்கிறார்கள். இப்படி வலயுறுத்தி, மக்கள் விருப்பத்தை நான் எடுத்துச் சொல்கிறேன். ஆனால் மக்கள் விருப்பத்திற்கு மாறாக இந்த ஆட்சி இதிலே பிடிவாதம் காட்டுகிறது என்ற வண்ணத்தைத் தம் கருத்துக்குத் தரவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக இந்த நகரியங்கள் எப்படி அமைக்கபபட்டன என்ற அடிப்படையை பார்க்க வேண்டும். தமிழகத்தில் 99 நகர சபைகள், இரண்டு மாநகராட்சிகள், ஏறத்தாழ 600க்கு மேற்பட்ட பேரூராட்சிகள், சுமார் 13 ஆயிரத்துக்கு மேற்பட்ட பஞ்சாயத்துகள், இந்த பஞ்சாயத்துக்களை உள்ளடக்கிய 374 ஒன்றியங்கள் இப்படி இவ்வளவு ஜனநாயகம் அமைப்புகள் இயங்குகிறபோது ஒரு 10, 12 மட்டுமே இந்த நகரியம் என்ற அடிப்படையின் கீழே வருகிறது. இவ்வளவு பரந்த அளவிலே ஜனநாயகத்தை ஒத்துக் கொண்டிருக்கிற இந்த அரசு 10 ஊர்களிலே மட்டும் ஜனநாயகத்தை ஒத்துக் கொள்ளாமல் மக்களை கொடுமை படுத்துவதாக கற்பித்துக் கொண்டு, எந்த காரணத்தினால் இவை அமைக்கப்பட்டன என்ற அடிப்படைக்கே செல்லாமல் இது ஏதோ பெரிய ஜனநாயகப் பிரச்சனையாக, மக்கள் கோரிக்கையாக சொல்லி, அரசு இதற்கு இணங்கவில்லை என்பதுப் போல உரு கொடுத்து பேசுவது சரியாகாது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நான் அந்த அடிப்படையிலேதான் பேசும் போது குறிப்பிட்டேன். அவர்கள் அங்கே ஒரு நியமன உறுப்பினராக இருக்கிறார்கள். அதற்கு முன்னால் நான் கூட நாடாளு மன்ற உறுப்பினராக இருந்த போது நியமன உறுப்பினராக நியமிக்கப்பட்டிருக்கிறேன். எனக்கு முன்னாலே

[திரு. செ. கந்தப்பன்] [1975 பிப்ரவரி 28

அவ்வப்போது ஒன்றில் நாடாளுமன்ற உறுப்பினர் அல்லது அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினர் நியமன உறுப்பினராக அந்த நகரியத்தில் இருந்திருக்கிறார்கள். அங்கு தொழிலாளர்கள் நிறைந்திருக்கிற காரணத்தால் தொழிலாளர் பிரதிநிதி ஒருவர் நியமன உறுப்பினராக இருக்கிறார். அதைப் போலவே தொழிற்சாலைகளுடைய மானேஜ்மெண்டார் சார்பில் யாராவது ஒருவர் நியமன உறுப்பினராக இருக்கிறார். அதைப் போலவே மின்சார வாரிய அலுவலர் ஒருவர், பொதுப்பணித்துறை அலுவலர் ஒருவர் நகரிய, நியமன உறுப்பினராக இருக்கிறார். இந்த முறைகளை ஏன் மாற்ற வேண்டுமென்று சுரேந்திரன் அவர்கள் சொல்லுகிறார்கள் என்பதை அவர்களே அறிவார்கள்.

எனக்கு மேட்டூர் நகரியத்தைப்பற்றி நன்றாகத் தெரியும். ஒரு காலத்தில் மேட்டூர் நகரியம் எப்படி இருந்தது, இப்போது என்ன நிலையில் இருக்கிறது; அதற்குக் காரணம் என்ன என்பதையெல்லாம் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். அப்படி இருந்தும் அதை ஏன் ஒரு நகரசபையாக மாற்ற வேண்டுமென்று சொல்லுகிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. இன்றைக்கு மேட்டூர் நகரியம் ஒரு நகரசபைக்கான அந்தஸ்தைப் பெறவில்லை என்று நான் சொல்ல மாட்டேன். நகர சபை ஆவதற்கு எவ்வளவு மக்கள் தொகை இருக்க வேண்டுமோ அது அங்கே இருக்கிறது. எவ்வளவு வருவாய் வரவேண்டுமோ அது வருகிறது. அவை உண்மை. யாரும் மறுக்க முடியாது.

ஆனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மக்கள் பிரதிநிதிகள் சபையால் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய முடியுமா என்பதை அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்த அளவுக்கு அந்தப் பகுதி வளர்ச்சிப் பெற்றிருக்கிறது என்றால் அதற்கு இந்த நகரிய அமைப்புதான் காரணம் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. நான் இப்படி சொல்வதால் மக்கள் பிரதிநிதிகள் பொறுப்பற்றவர்கள் என்றோ அவர்களால் சரியாக நிர்வாகம் நடத்த முடியாது என்றோ சொல்வதாக யாரும் கருத வேண்டாம்.

மக்கள் பிரதிநிதிகள் என்று வருகிற போது காரியங்கள் ஆற்றுவதில் சில நெருக்கடிகள் வரும், சில சங்கடங்கள் வரும், அதனால் வேகமான வளர்ச்சி பாதிக்கப்படும். திட்டமிட்ட வளர்ச்சிக்கு, பொதுமக்கள் பிரதிநிதிகள் காரியங்கள் ஆற்றுகிறபோது மக்களுடைய உணர்ச்சிகளுக்கு, அவர்களுடைய கருத்துகளுக்கு மதிப்பளிக்கவேண்டிவரும். அது வளர்ச்சிக்கு இடையூறாக கூட இருக்கும். மக்கள் பிரதிநிதிகள் சபையாக இருந்திருந்தால் இன்றைக்கு அந்த வட்டாரம் திட்டமிட்ட அளவுக்கு இவ்வளவு பெரிய வளர்ச்சியை அடைந்திருக்காது.

மேட்டூரிலே ஒரு கெமிக்கல் இண்டஸ்டரிஸ் இருக்கிறது. அது மிகச் சிறப்பாக செயல்பட்டு முன்னணியில் இருக்கிறது. பல வேறு தொழிற்சாலைகள் முன்னணியில் இருக்கின்றன. மேட்டூர் நீர்த்



1975 பிப்ரவரி 28] [திரு செ. கந்தப்பன்]

தேக்கத்திலிருந்து நீர் எடுக்க வேண்டியிருக்கிறது. சில நேரங்களில் அந்த நீர்த் தேக்கத்தில் எந்த இடத்திலிருந்து நீர் எடுப்பது என்பதில் சிக்கல் ஏற்படும் என்பதை அனுபவப்பூர்வமாக நான் பார்த்திருக்கிறேன். மக்கள் பிரதிநிதிகளாக இருந்தால் அதையெல்லாம் ஆலோசனை செய்து தான் காரியங்கள் செய்ய முடியும். அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் பல நேரங்களில் அங்கே ஆக்கிரமிப்பு செய்துக் கொண்டு, அந்த இடத்திலிருந்து எழுந்திருக்க முடியாது என்று சொன்னால் கூட மக்கள் பிரதிநிதிகள் என்றால் அதை தடுக்க முடியாது. அதனால் நகரிய வளர்ச்சி பாதிக்கும். ஆகவே தான் மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் நிர்வாக அமைப்பு இருக்கிறது. காரியங்கள் ஆற்றுகிற போது மக்கள் பிரதிநிதிகளுக்கு ஏற்படுகிற சங்கடங்களைத் தவிர்ப்பதற்காகவே, அந்த சிக்கல்களிலிருந்து அவர்கள் விடுபடுவதற்காகவே மக்கள் பிரதிநிதிகள் சபை என்று இல்லாமல் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடிப் பார்வையில் இருக்கிறது. அதனால் வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன. வேலைவாய்ப்புகள் பெருகுகின்றன. நகரியம் மேன்மேலும் வளர்ச்சியடைகிறது. அதற்காகத்தான் இந்த அமைப்பு பயன்படுகிறது.

நான் அந்த வட்டாரத்தைச் சேர்ந்தவன். இப்போது அங்கே இல்லாவிட்டாலும் அங்கிருந்து 7, 8 மைல் தூரத்தில்தான் என்னுடைய பூர்வீகம் இருக்கிறது. என்னுடைய உறவினர்கள் எல்லாம் அங்கே இருக்கிறார்கள். 15 ஆண்டுகளுக்கு முன்னால் அந்த வட்டாரத்தில் சட்டைப் போட்டு வாழக்கூடிய பழக்கம் உள்ளவர்கள் இருக்கிறார்கள் என்றால் அது மேட்டூர் நகரத்தில் மட்டும் தான். குறுகிய காலத்திலேயே ஆயிரக்கணக்கானவர்கள் வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். அங்கே இருக்கிற அமைப்பு இப்படிப்பட்ட ஒரு அமைப்பாக இல்லாமல் இருந்தால் இந்த அளவுக்கு வளர்ச்சி பெற்றிருக்க முடியுமா? எவ்வளவோ சிக்கல்கள், சங்கடங்கள் இருந்திருக்கும்.

இன்றைக்கு ஒரு நகர அமைப்பு இருந்து, ஒரு நகர சபை இருந்து ஆற்ற வேண்டிய பணிகளின் அளவுக்கு ஒரு நகரியம் இருப்பதால் ஆற்ற முடியவில்லை என்று சொன்னார்கள். அதை நான் ஒப்புக் கொள்ள முடியாது. சில குறைகள் இருக்கலாம்; இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால் நகர சபை அமைப்பை விட அங்கிருக்கிற நகரியம் மக்களின் கோரிக்கை அடிப்படையில் தேவையான பணிகளை நல்ல முறையில் நிறைவேற்றி முடித்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. நகர சபையாக இருந்தால் இந்த அளவுக்கு செய்ய முடியாது. நான் வேண்டுமென்றே கூட்டியோ அல்லது குறைத்தோ சொல்லவில்லை. உண்மை நிலையைச் சொல்லுகிறேன்.

மக்கள் பிரதிநிதிகள் இருந்து செய்வதுதான் நல்லது என்ற எண்ணம் இருக்கும். ஆனால் மக்கள் பிரதிநிதிகளை கலந்து கொண்டுதான் அவர்கள் பணியாற்றுகிறார்கள் என்பதை நிச்சயமாக சுரேந்திரன் அவர்கள் மறுக்க மாட்டார்கள். இந்த நகரியம் மேட்டூரில்மட்டுமல்ல;

நிச்சயமாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதிநிதிகள் கொண்ட நிர்வாக அமைப்பைவிட - அதிகாரிகளின் நிர்வாகம் தான் செம்மையாக பணியாற்றும் என்று குறிப்பிட்டிருப்பது மிகப் பெரிய தவறு என்று நான் கருதுகிறேன். இன்றைக்கு சென்னை மாநகராட்சிக்கே ஒரு அதிகாரியைத்தான் போட்டிருக்கிறார்கள். மதுரை மாநகராட்சி கவுன்சிலையும் கலைத்துவிட்டு அங்கும் ஒரு அதிகாரியைத்தான் போட்டிருக்கிறார்கள். இவை எல்லாம் இவர்கள் தேர்தலைச் சந்திக்க அஞ்சுகிறார்கள் என்பதைத்தவிர இவர்களுடைய ஆட்சிதான் செம்மையாக இருக்கும் என்று வாதிடுவதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. பொதுவாக ஒரு பிரச்சினை வருகிறது என்று சொன்னால் அதை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற பிரதிநிதியின் கவனத்திற்குக் கொண்டுவந்து இதை இப்படிச் செய்யுங்கள் என்று சொல்லலாம். இன்றைக்கு சென்னை கார்ப்பரேஷன் ஒரு தனி அதிகாரியின் கீழ் நடைபெறுகிறது. அந்த அதிகாரி நல்ல முறையில் பணியாற்றுகிறாரா இல்லையா என்று நான் சொல்வதற்கு இந்த இடம் பொருத்தம் இல்லை. அது பற்றி நான் சொல்லவில்லை. கடந்த சில நாட்களாக என் வீட்டில் தண்ணீரே வரவில்லை. நான் போன் செய்து அதிகாரிகளுக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். இதுவரை அதுபற்றி கவனிக்கவில்லை. இதே சமயம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு இருக்குமானால் கவுன்சிலரைக் கூப்பிட்டுச் சொல்லியிருப்பேன். என் வீட்டில் தண்ணீர் வரவில்லை என்றால் அடுத்தமுறை உனக்கு ஓட்டுப்போடாது வெளியே அனுப்பி விடுவேன் என்று சொல்வேன்.

<u>மாண்புமிகு திரு. க. அன்பழகன்</u>: அந்த பிரதிநிதியும் கூட கூட அதிகாரியினிடத்தில் சென்று சொல்லித்தான் அந்தக் காரியத்தை நிறைவேற்ற வேண்டியதாக இருக்கும். இன்றைக்கு சென்னை நகரில் குறைந்த தண்ணீர் அளவு விடுகிற நேரத்தில் உடனடியாக இந்தப் பிரச்சினையைக் கவனிப்பது என்பதற்கு வசதியில்லை. இடையிலேயே சிலர் மோட்டார் பம்புகளை வைத்து தண்ணீரை எடுத்து விடுகிறார்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டு, அந்த மோட்டார்கள் அகற்றப்பட்டு அந்த வீடுகளுக்குத் தண்ணீர் சப்ளையும் துண்டிக்கப்பட்டு வருகிறது. எப்படியும் காரியங்களைச் செய்ய வேண்டியவர்கள் அதிகாரிகள்தான்.

<u>திரு. கோவை செழியன்</u>: அமைச்சருடைய வாதப்படி மக்கள் பிரதிநிதியை விட அதிகாரிகள் நிர்வாகமே சிறந்தது. அவர்கள்தான் நல்ல முறையில் பணியாற்றுவார்கள் என்று சொன்னதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த வகையில் தமிழ் நாட்டில் எந்த முனிசிபாலிட்டியும் தேவையில்லை. எந்தப் பஞ்சாயத்தும் தேவையில்லை. அதிகாரிகள் மட்டுமல்லாமல் தயாரித்து கொள்ளையடிக்கிற ஊழல் வராது. பொதுப் பணத்தைக் கொள்ளை அடிக்கிற நிலைமை ஒழியும், என்பது உங்கள் கருத்தென்று சொன்னால் அதைப்பற்றி இங்கே விவாதிப்பதற்கு இடம் இல்லை.


விரிவு படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப்
பேரவை சட்ட முன்வடிவு எண் 57/74)



<u>மாண்புமிகு திரு க. அன்பழகன்</u>: அங்கத்தினர் தன்னை ஒரு கொள்ளைக் கூட்ட உறுப்பினராகக் கருதிக்கொண்டுவிடக்கூடாது. யார் யார் குற்றம் செய்தாலும் அவர்களைத் தனியாகப் பார்க்க வேண்டும். அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுவதையும் கவனிக்க வேண்டும். இன்றைக்கு அமைச்சரோ, நாடாளுமன்ற உறுப்பினரோ, கவுன்சிலரோ தனியாகச் செயல்பட முடியாது. இவர்களும் கூட அதிகாரிகளிடத்தில் சொல்லித்தான் எந்த காரியத்தையும் செய்யச் சொல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. நேரிடையாக அதிகாரிகளிடமே தெரிவித்துக்கொள்ளலாம் என்றுதான் நான் சொன்னேன்.

<u>திரு பெ. சீனிவாசன்</u>: அதிகாரிகளிடம் சொல்லுகிறபோது யார் அவர்களிடம் என்ன சொன்னார். சொன்னது செய்யப்பட்டதா என்பது தெரிய முடியாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் சொல்லுகிறபோது அவர்கள் போய் கவுன்சிலில் அதைச் சொல்லுகிறார்கள். அதற்கு விளம்பரம் கிடைக்கிறது. அதன் காரணமாக அதிகாரிகளுக்கும் அச்சம் இருக்கிறது.

<u>திரு கோவை செழியன்</u>: பொதுவாக தொழில் துறையில், நகர அமைப்புத் துறையில் ஒரு நகரியம் நல்லமுறையில் வளர்ச்சி அடைந்த பிறகும் அந்த நகரியத்தை ஒரு நகராட்சியாக மாற்றக் கூடாது. அது அப்படியே இருக்கவேண்டும் என்பதற்கு சொல்லப்பட்ட வாதம் சரியல்ல. அது தேர்தலைக் கண்டு அஞ்சுவதாகத்தான் ஆகிறது.

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர்</u>: (திரு கு. காமாட்சி): மேட்டூர் நகரியத்தை நகரசபையாக மாற்றலாமா, கூடாதா என்பதுதான் பிரச்சினை. அதைப்பற்றி நீங்கள் சொன்னால் நல்லது.

<u>திரு கோவை செழியன்</u>: மாற்ற வேண்டும் என்று சொல்லிவிட்டு உட்கார்ந்து கொள்ளலாம். மேற்கொண்டு எப்படி பேசுவது? மாண்புமிகு கந்தப்பன் பேசினார்கள், அமைச்சர் பேசினார். அப்போதெல்லாம் தலையிடவில்லை. நான் பேசும் போது சொன்னால்? அவர்கள் என்ன சொன்னார்களோ அதற்குத் தான் நான் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன். புதியதாக எதையும் சொல்லவில்லையே.

ஆகவே என்னுடைய குற்றச்சாட்டெல்லாம் இந்த அரசு தேர்தலைச் சந்திக்கவே பயப்படுகிறது. தேர்தலை நடத்தக் கூடாது என்கிற காரணத்தினால் தான் இந்தத் தீர்மானத்தையே எதிர்க்கிறீர்கள் தவிர வேறு இல்லை. உடனடியாக இந்த நகரியத்தை நகரசபையாக மாற்ற வேண்டும், எல்லா நகரசபைகளுக்கும், மாநகராட்சிக்கும் தேர்தலை வைக்க வேண்டுமென்று வலியுறுத்திச் சொல்லி இந்தத் தீர்மானத்தை முழு மனதாக ஆதரிக்கிறேன்.

திரு. எ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, மாண்புமிகு திரு சுரேந்திரன் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்த மசோதாவை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இந்த மசோதாவை எதிர்க்கின்றேன் என்று மாண்புமிகு கந்தப்பன் அவர்கள் சொன்னதைக் கேட்டபோது உண்மையில் நான் கொஞ்சம் திகைத்துப்போனேன். காரணம் இந்த நிலைமையில் இந்த மசோதாவை அவர் எதிர்ப்பார் என்று நான் நினைக்கவேயில்லை. உள்ளபடியே அதை ஆதரிப்பார்கள், அமைச்சர் அவர்களும் இதனை ஏற்றுக்கொள் வார்கள் என்றே எதிர்ப்பார்த்தேன்.

மேட்டூர் நகரியத்தைக் கலைத்து உடனடியாக அதை நகரசபையாக மாற்றுவதற்கு எல்லா காரணங்களும் இருக்கின்றன. அது நகரியமாக வே தொடர வேண்டும் என்பதற்கு ஒரு காரணமும் கிடையாது. ஆகவே தான் அருமை நண்பர் திரு. கந்தப்பன் அவர்கள் அதை ஆதரிப்பார்கள் என்று எதிர்ப்பார்த்தேன்.

துரதிருஷ்ட வசமாக அதை எதிர்ப்பதாகச் சொன்ன திரு. கந்தப்பன் அவர்கள் அதற்கு காரணமாக அங்கு அணை இருக்கிறது. அங்குள்ள நகரிய அமைப்பு மாறி ஜனநாயக அமைப்பு வந்து விட்டால் மக்கள் பிரதிநிதிகளுக்கு பல்வேறு நிர்பந்தங்கள் ஏற்படும். அதனால் பல இடையூறுகள் ஏற்படும். என்று சொன்னார்கள். அப்படியானால் அணை என்பது மேட்டூரில் மட்டும் இல்லை தமிழகத்தில் பல அணைகள் இருக்கின்றன. அணைகள் இருக்கின்ற இடங்களில் எல்லாம் நகரியங் கள் அமையவில்லை. அணைகள் இருப்பது பாசன திட்டங்களுக்கா என்றால் பாசன திட்டங்களுக்கு ஆதாரமாக நமது மாநிலத்தில் பல குளங்கள், ஏரிகள், போன்றவைகளும் கூட இருக்கின்றன. பாசனக்கால் வாய்கள், ஆதாரங்கள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும், ஜனநாயக அமைப்பில் பாதிக்க நேரிடும் என்றால் இந்த எல்லா இடங்களிலும் கூட நகரியங்களைத்தான் ஏற்படுத்த வேண்டும். குளங்கள் கால்வாய்கள் ஆகியவற்றை ஆக்கிரமித்துக் கொண்டு குடிசைப்போட்டுக் கொண்டிருக்கிற வர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இதற்கெல்லாம் ஜனநாயக, அமைப்பில் நிர்வாகம் அமைவது இடையூறு என்றால் ஊராட்சி மன்றங்களே இருக்க முடியாது. நகராட்சி மன்றங்களே இருப்பது முடியாது, என்கின்ற இந்த ஒரு கொள்கையே இந்த அரசு ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கும்.

It will be a most absurd proposition என்பதாகத்தான் ஆகும் திரு. கந்தப்பன் சொல்வதை ஏற்றுக் கொள்வ தாக இருந்தால், இது எங்கு போய் நிற்கும் என்பதைச் சிந்திக்க வேண்டும். நகரியம் என்று அமைத்த போது அந்த நகரியத்தின் வளர்ச்சிக்கு தேவையான பணம் அந்த நகரத்தில் இருந்தே கிடைப்பது முடியாத காரணத்தினால் அங்கிருந்துவருவது 15 சதவிகிதம் வருமானம் தான், பாக்கி பொதுமக்களுடைய வருமானத்தில் இருந்து அரசு 85 சதவிகிதம் பணத்தை



கொடுத்துக்கொண்டிருக்கிறது என்கிற காரணத்தினால் இப்படிக் கொடுப்பதற்கு வாய்ப்பாக அதனை நகரியமாக அமைத்தார்கள். அந்த காரணம் இப்போது மறைந்து விட்டது. அதனுடைய அமைப்பு அடியோடு மாறிவிட்டது. அங்கிருந்த பூமிகள் எல்லாம் ரெவின்யூ இலாக்காவிற்கு சொந்தமாகி விட்டது. பொதுமக்களுக்குச், சொந்தமாகிவிட்டன. ஏற்கனவே அவை பொதுப்பணித் துறைக்குச் சொந்தமானவை. இப்போது வருவாய்த்துறைக்குச் சொந்தமாகி விட்டன. அங்கே சாலைகள் அமைககப்பட்டு விட்டன, வீடுகள் கட்டப்பட்டு விட்டன. மற்ற நகரியங்களைவிட, தேர்ட் கிரேடு முனிசிபாலிட்டிகளைவிட உயர்வான நிலைக்கு அது வந்தாகிவிட்டது. என் தேர்ட் கிரேட் முனிசிப்பாலிட்டி? செகண்ட் கிரேட் முனிசிப்பாலிட்டியை விட உயர்ந்த நிலைக்கு வசதிப் படைத்தாகிவிட்டது அந்த நகரியம். முனிசிப்பாலிட்டி யமைக்க ஏற்கனவே முனிசிபாலிட்டி சட்டத்திலே மக்கள் தொகையும் வரு வாயும் இரண்டும் கிரைட்டீரியாக வைக்கப்பட்டிருந்தன. இப்போது மக்கள் தொகை கணக்கு எடுக்கப்பட்டுவிட்டது. 3 இலட்சம் ரூபாய் வருவாய் இருந்தால் தேர்ட் கிரேட் முனிசிப்பாலிட்டியாகலாம் என்று வைத்துக் கொள்கிறோம். அதற்குப் பேரூராட்சி மன்றம் தீர்மானம் போட்டால் அரசு ஏற்றுக் கொள்ளலாம் என்றாகிவிட்டது. இப்போது ரூபாய் 10 இலட்சத்துக்கு மேல் வருவாய் வந்தாகி விட்டது. அதனுடைய அமைப்பு முறை மாறி விட்டது.

டவுன் ஷிப்பில் பெரும்பாலான உறுப்பினர்கள், அதிகாரிகள். அந்த டவுன்ஷிப் கமிட்டி தீர்மானம் போட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலை வர்—அரசாங்கப் பிரதிநிதி தலைமைவகிக்க மாண்புமிகு உறுப்பினர் கந்தப்பன் கட்சியைச் சேர்ந்த உறுப்பினரும், அங்கே இருக்கிற தொழில் பிரதிநிதிகளும் சேர்ந்து இந்தத் தீர்மானத்தை போட்டு இருக்கிறார்கள். இந்த வேண்டுகோளை அரசுக்கு விட்டிருக்கிறார்கள். நகரியத்தை கலைத்து நகராட்சி யமைக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அந்தத் தேவைகள் அத்தனையும் நிறைவேறியதற்கு பிறகு என் தாமதிக் வேண்டும் ?

மாண்புமிகு உறுப்பினர் கந்தப்பன் கேட்கிறார். நகரியங்களிலுள்ள மக்களே 1 இலட்சம் தான். $4\frac{1}{3}$ கோடி மக்களுக்கு கொடுத்த பிறகு இதற்கு மட்டும் நாங்கள் என் ஆட்சேபனை செய்ய வேண்டுமென்று கேட்கிறார். அதைத்தான் நானும் கேட்கிறேன். அதற்கு நீங்கள் வலுவான காரணம், சரியான காரணம் சொல்லியாக வேண்டும். மேட்டூருக்கு பக்கத்தில் வாழ்கிற திரு. கந்தப்பன் காரணம் சொல்ல வில்லை. காரணமிருந்தால் சொல்லாமல் எப்படியிருக்க முடியும். 500 பேர் இருந்தால் சிற்றூர் அமைக்க முடியும். 50,000 மக்களிருக்கிற அந்தப் பகுதிக்கு ரூ. 10 இலட்சம் வருவாயும் கிடைக்கிற அந்தப் பகுதிக்கு என் நகராட்சி அந்தஸ்து கொடுக்க கூடாது என்பதற்குக் சரியான, வலுவான, சக்தியுடைய, சாரமுடைய காரணங்கள் என்ன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவார் என்று எதிர்

பார்த்தேன். சொல்லவில்லை. அவர், அதற்கு முழுத் தகுதி படைத்தவர். காரணம் பக்கத்து ஊர்க்காரர். அந்த நகரியத்திலே உறுப்பினராக இருந்தவர். அவராலே சொல்லமுடியவில்லையென்றால், வேறு யாராலே சொல்லமுடியும்.

அமைச்சர் அவர்கள் அதிகாரிகள் சொல்வதைதான் சொல்வார். ஆனால் கந்தப்பன் அவர்கள் ,நாங்கள் ஏதோ முடிவெடுக்கிறோம் என்றால் காரணம் இருக்கும் என்று சொல்லுகிறார். என்ன காரணம்? நகராட்சி மன்றங்களாக இருந்தால் அபிவிருத்தி ஏற்படாதா? ஊராட்சி மன்றங்களிலிருந்தால் அபிவிருத்தி ஏற்படாதா? சிவிக் ரெஸ்பான்சிபிலிட்டீஸ் என்ன என்ன? தண்ணீர் கொடுக்கிறோம். விளக்கு போடுகிறோம், பள்ளிக்கூடம் கட்டுகிறோம் சானிட்டேஷன் பார்த்துக் கொள்கிறோம் சிவிக்பாடீஸ் இந்த நாலு வேலைகளைச் செய்யவேண்டும். அவற்றை ஊராட்சிகள் செய்கின்றன, நகராட்சிகள் செய்கின்றன. பல நகரங்களிலே செய்கின்றன. சென்னை நகரம், காஸ்மாபாலிட்டன் நகரம். பலவேறு கருத்துக்கள் பல் வேறு பிரிவுகள் மோதுகின்ற இடம். பல சாதி மதங்கள் வாழ்கின்ற இடம், பல தொழில்கள் வளர வேண்டிய இடம் அப்படிப்பட்ட இடத்திலே கூட, வளர்ச்சிக்கு இடம் போதாது என்று சொல்லுகின்ற இடத்திலே கூட, தேர்ந்தெடுக்கப்பட்ட கார்ப்பரேஷனைத்தான் வைத்திருக்கிறோம். இங்கே டவுன் ஷிப் அமைப்பை வைத்திருக்கவில்லை. அல்லது நாமினேட்டட் பாடி வைத்திருக்கவில்லை. அப்படியிருக்கும்போது மேட்டூர் டவுன்ஷிப்புக்குச் சொல்கின்ற காரணங்கள் அதைவிட magnified many times. அங்கே எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புக்கள் இருக்கும் போது, மேட்டூரிலேமட்டும் இதை மறுப்பதற்கு நான் எவ்வளவு யோசித்தும் எனக்கு எந்தக் காரணமும் தெரியவில்லை, மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே.

ஆகவே எமோஷனல் சப்ஜெட்டாக நினைத்து, எற்கனவே எதிர்த்து வந்தோம். ஆகவே, இப்போது எதிர்போம் என்று எதிர்க்காதீர்கள். முன்னே எதிர்த்ததற்கு காரணங்கள் இருந்திருக்கலாம்—போதுமான வளர்ச்சி இல்லாமல் இருந்திருக்கலாம். இன்றைய தினம் எதிர்ப்பதற்கு காரணங்கள் ஒன்றும் இல்லை. ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆகவே Government is not satisfied that a situation has come when the Township Committee has to be abolished என்றுமட்டும் மொட்டையாக, பிளண்டாகச் சொல்லாதீர்கள். Government is not satisfied என்ற சொற்றொடருக்குள்ளே பலவற்றையும் அடக்கிவிட முடியும். அங்கே கவர்ன்மென்ட சாடிஸ்.'.பை ஆகவில்லை, அதனாலே மாற்றக்கூடாது என்று அரசாங்கம் கருதுகிறது என்பதற்கு வலுவான காரணங்கள் இருந்தால் சொல்ல வேண்டும். இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இல்லாத நேரத்திலே அந்தக் கோரிக்கையை, நியாயமான கோரிக்கையை இந்தப் பக்கத்திலே இருந்து வருகிற காரணத்தாலே மட்டும் தயவு செய்து எதிர்க்காதிர்கள்.



மாண்புமிகு சுரேந்திரன் கொண்டு வருகிறார் என்ற காரணத்திற்காக மட்டும் எதிர்க்காதீர்கள். நகராட்சி வேண்டுமென்று சுரேந்திரன் மட்டும் கேட்கவில்லை. உங்களுடைய கட்சி உறுப்பினரும் சேர்ந்து, உங்களுடைய எஜெண்ட் —மாவட்ட ஆட்சித் தலைவரும் சேர்ந்து, பொதுப் பணித்துறை அதிகாரிகளும் சேர்ந்து, ரெவின்யூ அதிகாரிகளும் சேர்ந்து இந்தக் கோரிக்கையை எழுப்பியிருக்கிறார்கள். இது இப்பொழுது ஏற்பட்டிருக்கிற புது நிலைமை. ஒருமனதாக தீர்மானம் புதியதாக வந்திருக்கிறது. எல்லோரும் சேர்ந்து எங்களுடைய கட்சிக்காரர்கள், உங்களுடைய அதிகாரிகள் எல்லோரும் சேர்ந்து ஒரு மனதாகக் கொடுத்ததற்குப் பிறகு இந்தக் கோரிக்கையை நீங்கள் தயவு செய்து மறுதளிக்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொண்டு இந்த மசோதாவை நிறைவேற்ற சட்டமன்றத்தில் அந்தப் பக்கம் இருப்போரும் துணைநிற்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய வார்த்தையை முடித்துகொள்கிறேன். வணக்கம்.

திரு. பெ. சீனிவாசன் : திரு. சுரேந்திரன் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை ஆதரித்து சில விஷயங்களை சொல்ல விரும்புகிறேன்.

இந்தத் திர்மானத்தை எதிர்த்துப் பேசிய திரு கந்தப்பன் அவர்களுடைய வாதத்தைத் திரு சுப்பிரமணியம் அவர்களுடைய வாதம் சரியான முறையில் முறியடித்திருக்கிறது என்றுத்தான் நான் கருதுகிறேன். சட்டமன்றத்திற்குப் பழக்கமான வார்த்தையை சொல்லப் போனால், அத்தியாவசியமான நிலைமை ஏதாவது ஏற்பட்டு அப்படி நகரியம் உருவாகியிருக்குமானால், அதுவும் தாற்காலிக ஏற்பாடாக இருக்குமானால், அத்தகைய எண்ணத்தோடு தான் ஆரம்ப காலத்திலே ஏற்பட்டிருக்கக்கூடும். ஆனால் இன்றைக்கு நிலைமைகள் எல்லாம் மாறியதற்குப்பின்னாலே ஆளுங்கட்சியினுடைய சில சௌகரியங்களுக்காக சில பேரை அக்காமடேட் செய்வதற்காக அரசியல் நோயாளிகளை அக்காமடேட் செய்வதற்காக இப்படிப்பட்ட நிலையை இன்றைக்குத் தொடர்ந்து நாம் கடைபிடித்து வருகிறோம்.

திரு. கந்தப்பன், இது திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியிலே உருவானதல்ல, காங்கிரஸ் ஆட்சியிலே கூட உருவானதல்ல, வெள்ளைக்காரன் ஆட்சியிலிருந்து தொடர்ந்து வருகிறது என்று சொன்னார்கள். தொடர்ந்து வந்த பலவற்றைநாம் நீக்கி இருக்கிறோம். துண்டித்து இருக்கிறோம். தேவையில்லை என்று ஒதுக்கியிருக்கிறோம். காங்கிரஸ் ஆட்சியில் என்னென்ன இருந்ததோ அதை அப்படியே நாங்கள் பின்பற்றி வருகிறோம் என்று இன்றைய அரசியல் சூழ்நிலையில் ஒரு சில மாத காலமாகவுள்ள அரசியல் சூழ்நிலையில் சொல்வதில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பெருமைப்படக்கூடும். ஆனால், அவர்கள் கடைப்பிடித்ததை அப்படியே நீங்கள் பின்பற்ற வேண்டுமென்ற எண்ணத்தில் இந்த நாட்டு மக்கள் காங்கிரஸ் கட்சியை அகற்றி, திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியைக் கொண்டுவரவில்லை.

மேட்டூர் நகரியத்தில் ஜனநாயக முறையில் தேர்தலில் நின்று வெற்றி பெற முடியாது என்ற சூழ்நிலையிருக்கிற காரணத்தால தான் அங்கே நியமனம் எந்த அளவுக்கு இருக்கிறது எனபதை திரு. கந்தப்பன் அவர்கள் தயவுசெய்து எண்ணிப்பார்க்கவேண்டும்.

அந்த மாவட்ட கலெக்டர் டவுன்ஷிப் கமிட்டி பிரசிடெண்டாக இருக்கிறார். மூன்றாலே அந்த ஊரிலே வட்டச் செயலாளராக இருந்தவர் வைஸ் பிரசிடெண்ட். அங்கு ஜனநாயக முறைப்படி தேர்தல் நடைபெறுமானால் ஒரு வார்டிலாவது அவர் நின்று ஜெயிப்பாரா என்பது எனக்கிருக்கிற சந்தேகம்.

அப்படிப்பட்ட ஒருவரை அந்த நகரியத்தினுடைய துணைத்தலைவராக நிய மிப்பது உங்களுடைய அதிகாரத்தை உங்களுடைய கட்சியின் சௌகரியத்தை முன்னிட்டு, உங்களுடைய கட்சியிலே சிலரைத் திருப்திப்படுத்த நீங்கள் பயன்படுத்துகிறீர்கள் என்ற குற்றச் சாட்டிலிருந்து நீங்கள் நிச்சயமாகத் தப்பமுடியாது.

இன்னொருவர் ஒரு ஊராட்சி ஒன்றியத் தலைவர், அவர் அந்த மேட்டூர் நகரிய எல்லைக்கு அப்பால் வசிப்பவர். அவரையும் டவுன்ஷிப் மெம்பராகப் போட்டிருக்கிறார்கள். இதைப்போலவே பல்வேறு வகைகளிலேயும் 1971-ஆம் ஆண்டிற்குப் பின்னாலே நகரியங்களில் பல்வேறு இடங்களிலே ஆளுங்கட்சியிலே உள்ளவர்களை, பொது மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்களை, பொது மக்களால் பொது மக்கள் முன்னிலையிலேயே தேர்தலிலே நின்று வெற்றி பெற முடியாதவர்களை அப்படிப்பட்டவர்களை எல்லாம் அங்கங்கே நுழைக் கின்ற முறையிலே காமராசர் பாணியிலே நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கடைப்பிடித்து வருகிறார்கள் என்பதை வருத்தத் துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

உதாராணமாகச் சொல்லவேண்டுமானால் நிலவள வங்கிகள் மற்றைய கூட்டுறவு நிறுவனங்கள் இவைகளிலே எல்லாம் பல்லாண்டு காலமாக பயிற்சிபெற்றவர்கள் சிலர் தவறு செய்தவர்களாக இருந்திருக்கலாம். பல்வேறு நிறுவனங்களில் கெட்டிக்காரர்களாக இருந்தவர்கள், நல்லவர்கள் இருந்தார்கள்—டவுன்ஷிப்பிலேகூட முழுக்க முழுக்க நியமனந்தான்—நியமனத்தின மூலமாக தலைவர்களாக மாவட்ட அளவிலே தலைவர்களாகவும் தொகுதியின் அடிப்படையிலே தலைவர்களாகவும் ஜனநாயகத்தைக் கேலி செய்யக் கூடிய அளவில சில நேரங்களிலே அதைக் கேவலப்படுத்தக்கூடிய முறையிலே அதிகாரத்தின் பெயரால் மக்கள் மெஜாரிட்டியை எதற்காகக் கொடுத்தார்களோ ஒப்படைத்தார்களோ அதை விட்டு விட்டு வேறு வகையிலே அதிகாரத்தை, செல்வாக்கைப் பயன்படுத்தி சட்டசபையின் பெரும்பான்மையைப் பயன்படுத்தி வருகிறார்கள் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த டவுன்ஷிப்பிலே தேர்தல் நடக்குமானால் இந்த அரசாங்கத்திற்கு அங்கே தேர்தல் நடத்துகின்ற தைரியம் இருக்குமானால் ஆளுங்கட்சிக்கு ஒரு இடம் கூட கிடைக்காது. நிச்சயமாக நகரசபைகளுக்கு இனிமேல் இந்த அரசாங்கம் தேர்தல் நடத்தப்போவதில்லை என்று மக்கள் கருது கிறார்கள். நாட்டு மக்கள் இவர்களைச் சந்தேகிக்கிறார்கள். அந்த அளவிலே மக்களைச் சந்திக்க இந்த அரசாங்கத்திற்கு தைரியம் இல்லை. அதனால் தான் மேட்டூர், கொடைக்கானல் போன்ற நகரியங்களை அப்படியே வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதை ஆரம்ப காலத்திலேயே மாற்றியிருக்கவேண்டும். அப்படியில்லா மல் சொந்தக் கட்சியின் விருப்புவெறுப்புக்கேற்ப ஜனநாயகத்தை அழிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு திரு சுரேந்திரன் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மசோதாவை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

<u>திரு. கே. டி. கே. தங்கமணி</u> : சார், இந்த சபைக்கு முன்னால் திரு. சுரேந்திரன் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கின்ற தனியார் மசோதா வை, மேட்டூர் டவுன்ஷிப்பை எடுக்கவேண்டுமென்ற மசோதாவை நான் முழுக்க முழுக்க ஆதரிக்கிறேன்.

குறிப்பாக, எங்கள் கட்சியின் சார்பிலே ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1971-ஆம் வருஷத்திலேயே அன்றைக்கு முதன்முதலாக தனியார் மசோதா என்ற பெயரிலே வந்த மசோதா திரு சுரேந்திரன் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்த மசோதா தான். இத்தகைய மசோதாவை ஆதரித்து அன்றைக்கும் இந்தச் சபையிலே இருக்கக்கூடிய பல உறுப்பினர்களும் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். நானும் அந்தச் சமயத்திலே விரிவாகப் பேசியிருக்கிறேன். இப்போது டவுன்ஷிப் அமைக்கக்கூடிய அந்த அமைப்பு இருக்கிறதே அதிலே சில மாறுதல்கள் ஏற்படக்கூடிய கால கட்டம் வந்துவிட்டது. புதிதாக ஏதாவது டவுன் அமைக்கப்பட்டால் இப்போது அங்கு டவுன்ஷிப் வருகிறது. குற்றாலம் போன்ற இடங்களில் டவுன்ஷிப் இருக்கிறது. அதேமாதிரி இராமேஸ்வரத் திலே டவுன்ஷிப் இருக்கிறது, அங்கே அது இருப்பது அவசியந்தானா என்பதைப் பார்க்கவேண்டும்.

இன்றைக்கு டவுன்ஷிப் எங்கெல்லாம் இருக்கிறதோ அவற்றையெல்லாம் நகராட்சிகளாக மாற்றக்கூடிய ஆலோசனையை அரசாங்கம் செய்தாக வேண்டும். ஏற்கெனவே டவுன்ஷிப் ஆக இருந்தது, அப்படியே தொடர்ந்து இருக்கவேண்டுமென்று சொல்கிற நிலை சரியல்ல.

மேட்டூரைப் பொறுத்தவரையிலே மேட்டூர் டாம் வந்த பிறகு அதை யொட்டி சில பகுதி மக்கள் அங்கே மேலும் குடியேறினார்கள். அன்றைக்கு டவுன்ஷிப் ஏற்பட்ட சரித்திரத்தை நான் இப்போது பார்த்தேன். சென்ற

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 பிப்ரவரி 28

தடவை இது வந்தபோது விரிவாக நான் பேசியிருக்கிறேன். பிரிட்டிஷார் காலத்திலே அது அமைக்கப்பட்டு எந்த எந்த முறையில் இருக்க வேண்டும், யார் யார் நிர்வாகிகள் என்றெல்லாம் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே மேட்டூர் டவுன்ஷிப் என்று சொல்வதற்கு மேட்டூரிலே இருக்கக்கூடிய அணைக்கட்டிலே இருக்கின்றவர்கள் மாத்திரமல்ல, அங்கே பியர்ட்ஸல் தொழிற்சாலை, பஞ்சாலைத் தொழிற்சாலை இருக்கிறது, அலுமினியம் தொழிற்சாலை வந்து இருக்கிறது, அலுமினியம் தொழிற்சாலைக்கு உப தொழிற்சாலைகள் வந்துவிட்டன, அதுமட்டுமல்ல, சுற்றியிருக்கக்கூடிய கிராமங்களும் சேர்ந்திருக்கின்றன.

1971-ஆம் வருஷத்திலேயே அங்கே 40 ஆயிரம் மக்கள் இருந்திருக்கிறார்கள். அவர்கள் இருக்கக்கூடிய பகுதியெல்லாம் ஓரளவிற்கு தொழிலாளர்கள் நிறைந்து இருக்கக்கூடிய பகுதி, வர்த்தகர்கள் நிறைந்திருக்கக்கூடிய பகுதி, விவசாயிகள் நிறைந்திருக்கக்கூடிய பகுதி அந்தப் பகுதி—This is an ideal place for a new type of Corporation or a new **type of Municipality** என்ற கருத்தைத்தான் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது சம்பந்தமாக இரண்டு விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். திரு. பக்தவச்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலே தொழிலாளர்கள் பிரதிநிதிகள் நியமனம் சம்பந்தமாக நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது. அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்கள் சங்கத்திலிருந்து மெஜாரிட்டியாக உள்ளவர்கள் இரண்டு பேர்களை பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கலாம் என்று சொன்னார்கள். அப்போது அவர்கள் கொடுத்த வாக்குறுதி இன்னும் சிறிது காலத்திலே டவுன்ஷிப் கலைக்கப்பட்டு நகராட்சியாக மாற்றப்படும் என்று அரசாங்கத்தின் சார்பிலே வாக்குறுதி கொடுத்தார்கள். அது பக்தவச்சலம் ஆட்சியிலிருந்த காலம்.

1967-ஆம் வருஷத்திலே தமிழ் நாட்டிலே தி.மு.க. ஆட்சி வந்தது. அப்போது டவுன்ஷிப்பை நகரசபையாக ஆக்கவேண்டுமென்று ஒரு தூதுகோஷ்டி அப்போதிருந்த முதலமைச்சரை பார்த்தார்கள். அப்போதிருந்த முதலமைச்சரவர்கள் என்ன சொன்னார்கள் ஆற அமரப் பார்ப்போம், சீக்கிரத்திலேயே நீங்கள் கூறியதை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுப்போம் என்ற முறையிலே சொன்னார்கள்.

நான் சமீபத்திலே பார்த்தேன், சர்க்காருடைய அறிக்கை வந்தது அது காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலே வந்த அறிக்கையா தி.மு.க. ஆட்சி காலத்திலே வந்த அறிக்கையா என்று தெரியவில்லை. அதைப் படிக்கலாம் என்று நினைக்கிறேன்.

**"As soon as may be, after the passing of this Act, the State Government shall, by a notification, abolish the Mettur Township Committee constituted under sub-section (1) of section 2 of the Mettur Township Act, 1940 (Tamil Nadu Act XI of 1940) from such date as may be specified therein.**



1975 பிப்ரவரி 28] [திரு. கே. டி. கே தங்கமணி]

**The notification mentioned in sub-section (1) of this section, shall declare that the Mettur Township Act, 1940 (Tamil Nadu Act XI of 1940) and all notifications, rules, byelaws, regulations, orders, directions and powers issued, etc. etc., shall cease to apply in the area previously comprised in the Mettur Township; Subject to the provisions of Section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920......** அதனுடைய கருத்து என்னவென்றால் இரண்டு அரசுகளுமே வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள் பிடிவாதமாக டவுன்ஷிப், டவுன்ஷிப்தான் என்று சொல்லக்கூடாது.

இப்போது எங்கே போனாலும் குறைந்த அளவிற்காவது ஜனநாயகம் வேண்டுமென்று சொல்லுகிறார்கள். 5 வருடம் அல்லது 3 வருடம் என்று ஒருகாலவரையறை வைத்து தேர்ந்தெடுக்கிறோம். அவர்கள் ஆட்சியிலிருக்கிறார்கள், நிர்வாகத்திலிருக்கிறார்கள் அந்தக்காலத்திற்கு, அந்த முறையிலே பார்த்தால் அங்கே அந்த உரிமை கொடுக்கப்படவில்லையென்பது ஒன்று.

இன்னொன்று, டவுன்ஷிப் நிர்வாகம் சரியாக இல்லை என்று சொல்லுகிறார்கள் என்பது. இராமேஸ்வரம் டவுன்ஷிப் நிர்வாகமும் சரியில்லை என்று உண்ணாவிரதம் இருந்து இருக்கிறார்கள். ஆகவே டவுன்ஷிப்புகளை மாற்றி மேஜர் பஞ்சாயத்துக்கள், நகராட்சிகள் என்று மாற்றுவதில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டும்.

மேட்டூரை ஒரு நகர சபையாக ஆக்க வேண்டுமென்பது ரொம்பப் பொருத்தமானது. எதிர்கட்சிகளுக்கு இத்தகைய மசோதா கொண்டுவருவது ரொம்ப ரொம்ப கஷ்டமான காரியமாகும். அதை நிறைவேற்றவைப்பது அதை விட ரொம்பகஷ்டமான காரியமாகும். நாங்கள் இவ்வளவு சிரமப்பட்டு மசோதாவைக்கொண்டுவருகிறபோது அரசாங்கம் என்ன செய்யலாம் என்று பார்த்துக், நீங்கள் கொண்டுவந்திருக்கிறீர்கள், பரிசீலனை செய்யலாம் என்று சொல்லியிருக்கமுடியும். போனதடவைகூட உள்துறை அமைச்சராக இருந்த திரு. நெடுஞ்செழியன் என்று நினைக்கிறேன்—நீண்ட நேரம் பேசி இதை ஒத்துக்கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டார்கள். இப்போது வந்திருக்கிற அமைச்சர் இதை ஆற அமர யோசித்து மசோதாவின் குறிக்கோள் நன்றாக இருக்கிறது, கொள்கை ரீதியாக ஒத்துக்கொள்கிறோம், அதற்குத் தகுந்தபடி நாங்களே ஒரு மசோதாவைக் கொண்டு வருகிறோம்—ஏனென்றால் நாங்கள் கொடுக்கக் கூடியதில் சில குறைகள் இருக்கலாம், வொர்டிங் குறைகள் இருக்கலாம், வாக்குறுதிகள் இணைப்பதிலே குறைகள் இருக்கலாம்—அந்த முறையிலே தான் பாராளுமன்றத்திலே வந்தது, அந்த முறையிலே நீங்களும் செய்தால் கொண்டு வந்தவருக்கும் பெருமையாக இருக்கும், இந்த அரசுக்கும் பெருமையாக இருக்கும் என்பதைச் சொல்லி இந்த மசோதாவை ஆதரித்து முடித்துக்கொள்கிறேன்.

[நண்பகல் 12.00]

THIRU B. VENKATASAMY : Mr. Chairman, Sir, In support of the motion brought forward by the hon. Member Mr. Surendran I wish to offer a few remarks on behalf of the Swastantra Party.

A resolution has been passed by the Township Committee with the Collector as President on 26th September 1974 and they have unanimously passed a resolution for making it as a Corporation or a Municipality as may be deemed fit. It is the duty of the Government to consider this.

திரு. கோவை செழியன் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். தலைவரவர்களே, இங்கே சட்டமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் சட்ட மன்றத்தின் முன்னால் சட்டக்கல்லூரி மாணவர்கள் ஏதோ போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி) : இது பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை. சட்ட சபை நடவடிக்கை எதையும் பாதிக்காது.

திரு. கோவை செழியன்: அது என்ன விவரம் என்று அமைச்சரவர்கள் கேட்டார்களா? ஏனென்றால் சட்டக் கல்லூரி மாணவர்கள் வந்திருக்கிறார்கள்.

THIRU B. VENKATASAMY : I fully endorse the view that the Mettur Township should be converted into a Municipality where the people's representatives can go and sit and discuss and do the needful in the industrial area to develop that area. I am strongly of the opinion that Mettur Township should be converted into a Municipality. Thank you.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, நான் இந்த மசோதாவில் நடந்த விவாதத்தையெல்லாம் உற்றுக்கவனித்துக் கொண்டு இருந்தேன். என்னுடைய கட்சியின் சார்பாக நானும் ஒருசில கருத்துக்களைச் சுருக்கமாகச் சொல்லி முடிக்கலாம் என்று கருதுகிறேன். நிச்சயமாக இந்த நகரியங்களுக்கெல்லாம் முனிசிபாலிட்டி அந்தஸ்து கொடுக்கப்பட வேண்டுமென்ற கருத்தை யாரும் மறுக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன். ஆளுங்கட்சியிலேயிருந்து அதற்கு விரைவிலே வேண்டிய நடவடிக்கையை மேற்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். ஏனென்றால் ஜனநாயக உணர்வை மதித்து, மேட்டூர் நகரியம் நகராட்சிக்குள்ள எல்லா அந்தஸ்துகளையும், தகுதியையும் பெற்றிருக்கிறது என்பதில், நிச்சயமாக அதை ஏற்றுக்கொள்வதில் எந்தத் தயக்கமும் ஏற்படாது என்றே கருதுகிறேன். இந்தமாதிரியான நகரியங்கள் பல்வேறு இடங்களிலேயும் இருக்கின்றன. நகராட்சியாக வளர்வதற்கு நகரியங்களுக்கு



அதிக வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை நானும் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் நிர்வாக அமைப்பிலே இன்றைக்குள்ள சில சிக்கல்களை அகற்ற வேண்டுமானால் இம்மாதிரி மசோதாவைக் கொண்டு வந்து ஜனநாயக உணர்வுக்குப் பெரும் மதிப்பளித்து உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்வதுதான் சிறப்பான அம்சமாக இருக்கும் என்று வலியுறுத்த விரும்புகிறேன். இந்த மசோதாவிலே கூறிய கருத்துக்களைக் கொள்கை அளவிலே நாங்கள் எல்லோரும் ஒத்துக்கொள்கிறோம், வரவேற்கிறோம் என்று கூறி என்னுடைய வார்த்தைகளை இத்துடன் முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, கனம் உறுப்பினர் திரு. சுரேந்திரன் அவர்கள் கொண்டு வந்துள்ள மேட்டூர் நகரியத்தைப்பற்றிய இந்தத் தீர்மானத்தை எல்லோரும் விளக்கியிருக்கிறார்கள். அவர்களுடைய இந்தத் தீர்மானம் தனிப்பட்ட ஒரு நகரியத்தைப்பற்றிய பிரச்சினையாக இருந்தாலும்கூட, இங்கே பேசிய நம்முடைய உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இதைப் பொதுப் பிரச்சினையாக, கொள்கை ரீதியாகக்கூடப் பேசியிருக்கிறார்கள். ஆகவே, இந்த நகரியத்தைப் பொறுத்தவரையில் இந்தப்பிரச்சினை 1970 ஆம் ஆண்டில் மட்டுமல்ல, திரு. பக்தவத்சலம் அவர்கள் இருந்த காலத்திலிருந்தே இதை மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். நீண்ட நாட்களாக மேட்டூரைப் பற்றிய பிரச்சினை சட்டமன்றத்தில் பேசப்பட்டிருக்கிறது. இருந்தாலும், அதை மாற்ற வேண்டாமென்று நினைத்து, திரு. செழியன் அவர்கள் சொல்வதைப் போலவோ அல்லது திரு. சீனிவாசன் அவர்கள் சொல்வதைப்போலவோ ஏதோ தேர்தலுக்கு பயந்து திரு. பக்தவத்சலம் அவர்கள் செய்திருக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன். 1970-இல் வந்தபொழுது செழியன் அவர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தில்தான் இருந்தார்கள். அப்பொழுதும் இந்த நிலை வந்திருக்காது. எனவே இப்பொழுது மட்டும் அந்த நிலை வருவதற்கில்லை.

பொதுவாகவே ஒவ்வொருவரும் என்ன சிந்தித்துப் பார்த்திருப்பார்கள் என்று தெரிகின்றது என்றால் நகரியம் என்ற நிலையை ஏன் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று பார்த்தால்,

1. தொழிற்சாலைப் பகுதிகள்.
2. சுகாதார வாசஸ்தலங்கள்.
3. உல்லாச பயணத்திற்கேற்ற இடங்கள்.

என்ற இந்த மூன்று இடங்களையும் நகரியமாக அமைக்க வேண்டுமென்ற கொள்கையைப் பின்பற்றி கிட்டத்தட்ட 35, 40 ஆண்டுகாலத்திற்கு முன்பே இந்த ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். அதற்குக் காரணம் அங்கே நிரந்தரமான குடிமக்கள் இருப்பதில்லை. அங்கே வருபவர்கள் சில வேலை நிமித்தத்தின் காரணமாக வருகிறார்கள், வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நிரந்தரமாக மக்கள் இல்லாத அந்த இடங்களிலே தேர்தலை நடத்தமுடியாது என்பதால் இந்த நிலைமையிலே ஆரம்பித்தார்கள் என்று தெரிகிறது.

தொழிற்சாலைப் பகுதியைப் பொறுத்தவரையில், எல்லோருடைய ஒத்துழைப்பும், ஒவ்வொரு இலாக்காவின் ஒத்துழைப்பும், அதற்குத் தேவை என்பதால் மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகவும், மேட்டூர் டிவிஷன் நிர்வாகப் பொறியாளர், மேட்டூர், ஒரு உறுப்பினராகவும், கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை) சேலம் ஒரு உறுப்பினராகவும், சேலம் மாவட்ட சுகாதார அலுவலர் ஒரு உறுப்பினராகவும், உதவி கலெக்டர், மேட்டூர் ஒரு உறுப்பினராகவும், மேட்டூர் மின் அமைப்பு கண்காணிப்பு பொறியாளர், ஒரு உறுப்பினராகவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் நிர்வாகப் பொறியாளர், சேலம், ஒரு உறுப்பினராகவும், உதவி நகரமைப்பு இயக்குனர் சேலம் ஒரு உறுப்பினராகவும், மாவட்ட வேளாண்மை அலுவலர், சேலம் ஒரு உறுப்பினராகவும், ஆக, இவ்வளவு பேர்களையும் உறுப்பினர்களாகப் போட்டு, சட்டமன்ற உறுப்பினரை ஒரு உறுப்பினராகவும், நாடாளுமன்ற உறுப்பினரை ஒரு உறுப்பினராகவும் போடப்பட்டிருக்கிறது. மீதி சர்க்காரால் வெளியேயிருந்து போடப்பட்டிருக்கிறது. ஆகவே, இத்தனை அதிகாரிகளையும் ஒரு நகரியத்திலே ஏன் சேர்த்திருக்கிறார்கள் மேட்டூரைப் பொறுத்தவரை மட்டும் சொல்கிறேன், நகரிய எல்லையில் மேட்டூர் கெமிகல்ஸ் மற்றும் தொழில் கழகம், மேட்டூர் "பியேர்ட்-செல்" கம்பெனி, மைக்கோ பண்ணைத்தொழில்கள், இந்தியன் உலோகத்தொழில் மற்றும் உலோகத்தைப் பிரித்தெடுக்கும் தொழில் கார்ப்பொரேஷன், மேட்டூர் சந்தனமரத் தொழிற்சாலை, துத்தநாகம் பூசிய இரும்புத தகடுகள் தயாரிக்கும் தொழிற்சாலை, மின்வாரியத்தின் தொழிற்கூடம் ஆகிய தொழிற்சாலைகளுக்கும், நகரியத்தின் வடகிழக்கு எல்லையில் சென்னை அலுமினியம் கம்பெனி, இந்திய கெமிகல்ஸ் மற்றும் பிளாஸ்டிக் கம்பெனி, மேட்டூர் செமிகெல்ஸ் தொழிற் கழகத்தின் ஆர். சி. தொழிற்சாலை ஆகிய தொழிற்சாலைகளும் அமைந்திருக்கின்றன. இப்படி அதிகப்படியான அளவிற்கு மற்றப் பெருநகரங்களில் இல்லாத அளவிற்கு அத்தனை தொழிற்சாலைகளும் அங்கே வெகுவேகமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்றால், கலெக்டரின் தலைமையில் மற்ற அதிகாரிகளையும் வைத்துக்கொண்டு இப்படி ஒரு காரியத்தைச் செய்தால் சிறப்பாக அமையும் என்பதால்தான் இப்படிப்பட்ட இடங்களை நகரியமாக ஆக்கியிருக்கிறார்கள். ஒவ்வொரு இலாக்காவிற்கும் சில தபால்கள் போய் அதற்காச சர்டிபிகேட்டுகளை வாங்கி தொழில்நிலையங்களை அமைக்க தாமதம் இல்லாமல் சில காரியங்களை வேகமாக நடத்த வேண்டுமென்ற நிலையில் நகரியத்தை அமைத்திருக்கிறார்களே தவிர வேறு அல்ல, அப்படியென்றால் அந்தக் காலத்திலேயே அமைத்தபொழுது மற்ற நகர் மன்றங்களைப்போல இதையும் அமைத்திருக்கலாம். ஏதோ நாங்கள்தான் அதை நகரியமாக ஆக்கியதைப்போலவும், ஜனநாயகத்தைக் கெடுத்தது போலவும் இங்கே சிலரால் பேசப்படுகிறது. அதை நாங்கள் செய்யவில்லை, முன்பே செய்திருக்கிறார்கள் என்பதை உணர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜனநாயகத்தைப் பற்றியும் பொதுவாகச் சொல்கிறேன். மக்கள் ஆட்சியிலே, மக்களே தேர்ந்தெடுக்கும் நிலை. சற்று முன் பேசிய திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் கூட்டுறவுத் துறை



பூராவுமே கொள்ளைக்காரர்கள் என்பதுபோலப் பேசினார்கள். தனியார் துறையிலே இல்லாமல் கூட்டுறவுத் துறையிலே விட்டால் அவர்களைக் கொள்ளைக்காரர்கள் என்று சொல்கிறார்கள். முன்னே வைத்திருந்த அதே நிர்வாகத்தை—அதிகாரிகளை மட்டும் வைத்து நடத்தவில்லை—மக்களால், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்ற உறுபினர்கள் அங்கே இருக்கிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கே இருக்கிறார். ஆறு தொகுதிகளிலுள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றஉறுப்பினர் இருக்கும்பொழுது எப்படி ஜனநாயகத்திற்கு ஒத்துவராமல் போய்விடும் என்று தெரியவில்லை.

ஆகவே, அந்த நகரியத்தைப் பொறுத்தவரையில் எந்தெந்த நிலைமைகளுக்காக ஆக்கியிருக்கிறார்களோ திரு. சுரேந்திரன் அவர்கள் தான் ஒருவராகவே கூட தன்னுடைய திறமையின் காரணமாக அதைச் செய்யமுடியும். 10, 15, 20 நகர்மன்ற உறுப்பினர்கள் இருந்துதான் செய்யவேண்டுமென்ற நிலை இல்லை. ஏனென்றால் திரு. செழியன் அவர்கள் சொன்னார்கள். கந்தப்பன் அவர்கள் நகர்மன்றத்தின் தலைவரோ அல்லது சாதாரண மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளோ திறமையுடையவர்கள் அல்ல என்ற தோரணையில் பேசவில்லை 1970-ஆம் ஆண்டிலேயேகூட அமைச்சர் பேசியிருக்கிறார். அறவே மாற்ற முடியாது என்று சொல்லவில்லை.

நம்முடைய திரு. தங்கமணி அவர்கள் சொன்னது போல் அந்தக் கொள்கையில் பிடிப்பு இருக்கிறது. அந்தப் பகுதியில் இரும்புத் தொழிற்சாலை வர இருக்கிறது. மற்றத் தொழிற்சாலைகள் வர இருக்கின்றன. இந்த நிலையில் அதற்கான காரியங்களை எல்லாம் செய்துவிட்டு பிறகு நகர மன்றமாக மாற்றுவது நலமாக இருக்கும்.

ஏதோ நாங்கள் பயந்துகொண்டு இருப்பதாக திரு. செழியன் அவர்களும் திரு. சீனிவாசன் அவர்களும் கூறினார்கள். அவர் பயந்தவரா? நாங்கள் பயந்தவர்களா? திண்டுக்கல்லுக்குப் பிறகு தான் அவர்கள் போய்விட்டார்கள். அப்படிப் போனவர்கள் பயந்தவர்களா? இங்கேயே இருப்பவர்கள் பயந்தவர்களா? இங்கே ஏதும் தவறு என்றால் இங்கேயே இருந்து திருத்தச்சொன்னால் சரியாக இருக்கும். நாங்கள் எல்லாம் தைரியமாக ஒரே இயக்கத்தில் இருக்கிறோம்.

திரு. கோவை செழியன்: அங்கேயே இருந்து திருத்தவேண்டுமென்று சொன்னார்கள். அங்கே உட்கார்ந்துகொண்டு திருத்தியதால் தான் என்னை வெளியே அனுப்பிவிட்டார்கள்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:— யார் யாரைத் திருத்துவது என்று நாடு சொல்லும். தங்கமணி போன்றவர்கள் கொஞ்சநாளில் சொல்லுவார்கள். அவர்களுக்குப் பின்னால் இருப்பவர்களைப்பற்றி போகப் போகத் தெரியும். எந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசினாலும் "நீங்கள் பயந்துகொண்டு இருக்கிறீர்கள்" என்று பேசுகிறார்கள். இது தனிப்பட்ட மேட்டூர் நகரியத்தைப் பற்றிய பிரச்சினை. இதிலே திரு. சுரேந்திரன் அவர்கள் சொல்லுகிற கொள்கையிலே எங்களுக்கு மாறுபாடு இல்லை. நாங்கள் ஜனநாயகத்திற்கு விரோதிகள் அல்ல. இதிலே பேசும்போது ஒரு வார்டிலே நின்று ஜெயிக்க முடியாதவர் துணைத் தலைவராக இருக்கிறார் என்றெல்லாம் பேசுவது சரியல்ல. இந்தச் சட்டமன்றத்திலே எல்லோரும் தேர்ந்தெடுக்கப்பட்டுத்தான் பணியாற்றி வருகிறார்கள்.

கொடைக்கானல் 1960-ஆம் ஆண்டு வரை நகரமன்றமாக இருந்தது. அதை மறுபடியும் நகரியமாக மாற்றினார்கள். அப்போது இரண்டு இலட்சம் ரூபாயாக இருந்த வருமானம் தற்போது எட்டு லட்சம் ரூபாய் அளவுக்கு வளர்ந்திருக்கிறது. சுற்றுலாப் பிரச்சினைகளில் அந்த அளவுக்கு வளர்ச்சி பெற்றிருக்கிறது. ஒரு கட்டடம் கட்ட வேண்டுமென்றாலும் முனிசிபாலிடியாக இருந்தால் அந்த விதிமுறைகளுககு உட்பட்டுத்தான் கட்டடம் கட்டமுடியும். ஆகவே, சில தனிப் பிரச்சினைகளை முன்னிட்டு இப்படி ஒரு சில பகுதிகள் நகரியமாக வைக்கப்பட்டிருக்கின்றன.

திரு. பெ. சீனிவாசன்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய மரியாதையையும் அன்பையும் பெற்றவர்கள். நாங்கள் எல்லாம் பயந்து கொண்டு ஓடி விட்டதாகச் சொன்னார்கள். நான் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்-பயப்படுவது என்பது என் பிறவியிலேயே கிடையாது. 1967-ஆம் ஆண்டு, 1971-ஆம் ஆண்டு தேர்தலில் ஜெயித்து வந்திருக்கிறேன். எப்படிப்பட்ட தேர்தலில் ஜெயித்து வந்திருக்கிறேன் என்பது அவர்களுக்கே தெரியும். தேர்தலில் நிற்கப் பயந்துகொண்டு செல்லவில்லை. நான் விலகும்போது அவரே என்னைக் கூப்பிட்டுக் கேட்டார். நான் சொன்னதை எல்லாம் செயல்படுத்த முடியாது என்று அவரே கூறினார். இப்போது அங்கே இருப்பவர்கள் எல்லாம் அஞ்சாநெஞ்சத்தோடு இருக்கிறார்கள் என்பது அர்த்தமல்ல. பலர் தவிர்க்க முடியாத நெருக்கடி காரணமாக அங்கே இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதும் தெரியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: குத்தூசி போட்டு எடுக்கிறார். அவர் என்ன சொன்னார், என்ன பேசினார் என்பது பிரச்சினை அல்ல. அந்தப் பிரச்சினைக்கும் மேட்டூர் நகரியத்திற்கும் சம்பந்தம் இல்லை.



திரு. சி. ஆறுமுகம் : நம்முடைய முன்னாள் துணைச் சபாநாயகர் அவர்கள் ஆளும் கட்சித்தரப்பில் இருப்பவர்கள் நெருக்கடி காரணமாகச் சிக்கிக்கொண்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். நான் உள்ளபடியே வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பக்கத்தில் நெருக்கடி இல்லை. சுயமரியாதைக் கருத்தோடு வந்தவர்கள் சுயமரியாதை இயக்கத்தில் நின்றுகொண்டிருக்கிறோம். நெருக்கடி ஏற்படாது. நெருக்கடி ஏற்பட்டால் பொது வாழ்க்கையில் இருந்து விலகிக்கொள்வோம்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : நம்முடைய சீனிவாசன் அவர்கள் போய்விட்ட காரணத்தால் இங்கே இருப்பவர்களை கேலியாகப் பேசினார்கள். அவர் தோற்றுப்போய்விடுவோமா என்று ஜெயிக்கிற கட்சிக்குப் போகிறேன் என்று போய்விட்டார். வாழ்வாக இருந்தாலும் கேடாக இருந்தாலும் ஒரே ராகமாகப் பாடிக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. பெ. சீனிவாசன் : தேர்தலில் தோற்றுவிடுவோம் என்ற பயத்தில் ஒன்றும் செய்யவில்லை. எந்தத்தொகுதியில் நிற்கவேண்டுமென்று சொல்லுங்கள். யாரை எதிர்க்கவேண்டும் சொல்லுங்கள். பயம் எதுவும் இல்லை. நீங்கள் என்னை அழைத்துப்பேசியபோது நான் சொன்ன அந்தக் காரணங்களுக்குப் பரிகாரம் காண முடியாது என்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : எந்தத் தொகுதி என்று நான் எப்படிச் சொல்வது? நீங்கள் என்ன நினைத்துக்கொண்டு போயிருக்கிறீர்களோ ? எனக்கு என்ன தெரியும். தமிழ்நாட்டில் இவ்வளவு பெரிய ஆள் பிறந்ததாகத் தெரியவில்லை. எந்தத் தொகுதியில் நிற்பது என்று உங்களுடைய தலைவரிடத்தில் கேளுங்கள். என்னை விட்டு விட்டுப் போய்விட்டு "எந்தத் தொகுதியில் நிற்பது ?" என்று என்னைக் கேட்டால் நான் என்ன சொல்லுவது ?

மேட்டூர் நகரியத்தை நகரமன்றமாக மாற்றுவது என்பதைப் பொறுத்தவரை திரு. சுரேந்திரன் அவர்கள் கருத்தைக் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டாலும் இன்னும் சில ஆண்டுகளுக்குச் நான் சொன்ன காரணங்களுக்காக நகரியமாக இருப்பதுதான் நல்லது என்பதால்............

திரு. கே. டி. கே. தங்கமணி : இராமேஸ்வரம் ஏற்கனவே தேர்நதெடுக்கப்பட்ட அமைப்பாக இருந்தது இப்போது டவுன்ஷிப்பாக மாற்றியிருக்கிறார்கள். அதன் காரணமாக உண்ணாவிரதம் எல்லாம் கூட இருந்து கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றிய கருத்தைக் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இப்போது அதைப் பற்றிய விவரங்கள் என்னிடத்தில் இல்லை. ஆகவே இப்போது அதைப் பற்றி ஒன்றும் சொல்ல முடியவில்லை. மேட்டூர் நகரியத்தைப் பொறுத்த வரை நான் இந்த விளக்கங்களை அளித்த நிலையில் அவர்கள் தன்னுடைய கருத்தை மாற்றிக்கொள்வார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆலடி அருணா : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நகராட்சி, நகரியம் இரண்டின் நன்மை தீமைகளைப்பற்றிப் பேசும்போது ஒரு பகுதி நகராட்சியாக இருப்பதற்குப் பதிலாக நகரியமாக இருப்பதால் பல்வேறு வளர்ச்சிக்கு ஆதரவாக இருக்கிறது என்று ஆதாரங்களோடு சொன்னார்கள். அப்படியானால் ஒரு பகுதி நகராட்சியாக இருப்பதைவிட நகரியமாக இருப்பதுதான் நாட்டுக்கு நன்மை தரும் என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, எல்லா நகரங்களுக்கும் எல்லா வசதிகளும் உடனே வந்துவிடாது. திடீரென்று சிலவற்றை நகரியமாக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. 1935-ஆம் ஆண்டு தொழிலாளர்கள் வந்து குடியேறினார்கள், அந்த சந்தர்ப்பத்தில் நகரியக் குழு ஏற்பட்டது என்று சுரேந்திரன் அவர்கள் பேசுகின்றபோது குறிப்பிட்டார்கள். எந்த வசதியும் இல்லாத அந்த நேரத்தில் திடீரென்று ஒரு நகரியம் உருவாக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு அந்த நேரத்தில் சில தனிப் பிரச்சினைகள் இருந்திருக்கலாம். ஆலைகள் அதிகமிருக்கின்ற இடங்களில் சுகாதார வசதிகள், சுற்றுலா நிறுவனங்கள் அமைப்பது போன்றவை எல்லாம் கவனிக்கப்பட வேண்டியவையாக இருக்கிறது. அதற்குத் தான் கூறுகிறேன்........................

திரு. எ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, ஒரு சந்தேகம் தான் இன்னும் விளங்கவில்லை. இப்பொழுது நாற்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. இந்த நாற்பது ஆண்டுகளில் எவ்வளவோ வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இன்னும் இதற்கு மேல வளர்ச்சி ஏற்பட வேண்டுமானால் அது நகராட்சியானால் தான் ஏற்படும். ஆனால் அரசாங்கம் நகராட்சியாக வந்தால் வளர்ச்சி ஏற்படாது, நகரியமாக இருந்தால்தான் ஏற்படுமென்று கருதுகிறதா என்று அறிய விரும்புகிறேன். நான் மேட்டூரை மட்டும் குறிப்பிடவில்லை. எந்த இடமாக இருந்தாலும், தேர்ந்துஎடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக்கொண்ட அமைப்பு இருந்தால் தொழில் வளர்ச்சி இருக்காது, அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர்கள் இருந்தால்தான் வளர்ச்சி ஏற்படும் என்று கருதப்படுகிறதா ? மேட்டூருக்கு மட்டும் தனியாக ஒரு வாதம் சொல்லப்படுவது பொருந்தாது என்று கூறிக்கொள்கிறேன்.



மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, ஜனநாயக அமைப்பு இருக்கின்ற சில இடங்களில் நிர்வாகம் கெட்டுப் போய் அங்கெல்லாம் ஸ்பெஷல் அதிகாரிகள் போடப்பட்டு நிர்வாகம் நடைபெற்று வருகிறது. சில இடங்களில் புதிதாக ஒரு அமைப்பை ஏற்படுத்தவேண்டும் என்ற ஒரு கொள்கையை வகுத்து, அதன் மூலம் அவை செயல்பட்டு வருகின்றன. இதுபோன்று உள்ளவற்றின் நிலைமைகளை ஆராய்ந்து இன்னும் ஒரு சில ஆண்டுகளில் செய்யலாம் என்று கருதிக் கொண்டிருக்கிறோம். எங்களுடைய கொள்கை ஜனநாயகத்திற்கு முரண்பட்டது அல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே, இங்கு என்னுடைய மசோதாவின் மீது ஆதரவு தெரிவித்து பல நல்ல கருத்துக்களைத் தெரிவித்த உறுப்பினர்கள் பலருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இரண்டாவதாக இதை எதிர்த்துப் பேசிய ஆளுங்கட்சியைச் சேர்ந்த மதிப்புமிக்க கந்தப்பன் அவர்கள் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டுச்சொன்னார்கள், அதாவது ஜனநாயகத்தில் எங்களுக்கு விரோதமான கருத்து இல்லை என்று. ஆனால் அங்கே இருக்கின்ற தொழிற்சாலைகள் வளர்வதற்கு, இம்மாதிரியான ஒரு நிலைமை, ஒரு நகரியம் போன்ற அமைப்பு இருப்பது அவசியம் என்ற கருத்து 1971-ம் வருஷமே நான் இந்த மசோதாவைக் கொண்டு வந்தபோதும் அவர்கள் வற்புறுத்திக் கூறினார்கள். இன்றைக்கும் அதையே வற்புறுத்திக்கொண்டிருக்கிறார்கள். எனக்கு ஒரு சந்தேகம் வருகிறது. சென்னை கார்ப்பரேஷன் 1884 ம் ஆண்டு ஆரம்பித்ததாக நான் படித்துப்பார்த்துத் தெரிந்துகொண்டிருக்கிறேன். 1884 ஆம் ஆண்டு இந்த நகரம் எப்படி இருந்தது. அப்பொழுது இங்கிருந்த மக்கள் எப்படி இருந்திருப்பார்கள் என்பதை நாம் ஓரளவுக்கு கற்பனை செய்து பார்க்க முடியும். பிற்பட்ட நிலைமையில்தான் இருந்திருக்க வேண்டும். இதை ஒரு நகரசபை ஆக்கலாம் என்று வெள்ளையர்கள்—ரிப்பன் போன்றவர்கள் கருதி 1884 ஆம் ஆண்டிலேயே அதைச் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். அதற்குப் பின்னால் மீண்டும் 1920-லிலேயே சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதற்குப்பின்னால் 25 வயதிற்கு மேற்பட்டவர்களால் தேர்ந்தெடுக்கப்படலாம். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட ஆட்சிமுறை என்று சட்டம் வந்திருக்கிறது. ஆகவே தொழிற்சாலைகள் வளர்வதற்கு அந்த இடம் நகரியமாகவே இருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. அப்படியானால் கோவையில் தொழிற்சாலைகள் வளர்ந்திருப்பதற்கு நியாயமே இல்லை. மதுரையில் வளர்வதற்கும் நியாயம் இல்லை. இப்படி பல பெரிய நகரங்களில் தொழிற்சாலைகள் எல்லாம் வளர்ந்திருப்பது நகரியம் காரணம் என்று **** உண்மைக்கு மாறாகக் கருதிக் கொண்டிருப்பது சரியல்ல என்று கூறிக்கொள்கிறேன். நான் ஏற்கனவே கூறியது போல் மேட்டூரில் 1936-ல் ஒரு சிறிய கமிட்டியாக அமைந்து 1940-ல் ஒரு நகரியமாகி 1948-ல் திருத்தம் செய்யப்பட்டு இப்படிப்பட்ட ஒரு முறையில் வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[திரு. எம். சுரேந்திரன்] [1975 பிப்ரவரி 28

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

தற்காலிகமாக இருக்கின்றவர்கள் என்ற நிலைமை மாறி நிரந்தரமாக இருக்கின்றவர்கள் என்ற நிலைமையிலும், பற்பல விதமான தொழிற்சாலைகள் அங்கே வளர்ந்திருக்கின்ற நிலைமையிலும், அங்கே இருக்கின்ற வீடுகள் எந்த நிலைமையில் காணப்படுகின்றன என்று பார்த்தால் பழைய நிலையிலேதான், அவற்றில் எந்தவிதமான மாற்றமும் இல்லை. ஏற்கனவே கட்டப்பட்டுள்ள வீடுகள் தான் அம்மாதிரியிருக்கின்றன என்று கூறுவதற்கில்லை. புதியதாக கட்டப்படுபவைகளும் நல்ல முறையில் அமையப் பெறுவதில்லை. சுற்றுலா இடங்களை இம்மாதிரியான மலைப்பகுதிகளில் அமைத்திடல் வேண்டும் என்று நான் சொல்லி வருகிறேன். அதற்கு உதவியாக நகரசபை அமைப்புகள் இருந்தால்தான் சுகாதார வசதிகளைச் செய்துகொடுக்க முடியும் என்பதும் என்னுடைய கருத்து. ஒரு கால கட்டம் வரையில்தான் இயந்திரங்களை வேகமாகப் புகுத்தி, தொழிலை வளர்ச்சி செய்ய விரும்புகின்றார்கள் முதலாளிகள். பிறகு அதற்கு அவர்களே முட்டுக்கட்டையாக இருந்து விடுகிறார்கள். இதேபோல நகர அமைப்புகளும் ஆரம்பத்தில் நகர வளர்ச்சிக்குக் காரணமாக இருந்து, பின்னால் அதுவே நகர வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக மாறிவிடுகிறது. இதைப் புரிந்துகொண்டால் நான் சொல்வதைப் புரிந்துகொள்வது எளிதாக இருக்கும். அதிலே கஷ்டமே இருக்க முடியாது. நகரசபை இருந்தால் தொழிற்சாலைகள் வளராது என்று கற்பனை செய்துகொள்வது சரியல்ல என்று மீண்டும் வற்புறுத்திச் சொல்கிறேன். எந்தத் தொழிற்சாலையாக இருந்தாலும், ஆரம்பிக்கின்றபோது எல்லாவிதமான அதிகாரிகளிடமும் சென்று அவர்களுக்கு ஆக வேண்டிய காரியங்களைச் செய்து கொண்டு தேவைகளை நிறைவேற்றிக்கொள்வார்கள். இந்த நிலையில்தான் பலவிதமான ஊழல்கள் நிகழ்கின்றன. அதனால் அவர்களுக்காக நகரியம் இருக்க வேண்டியதில்லை. ஆங்காங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வேண்டுமென்று கோரப்படுகிறது. ஓட்டு முறை மாற வேண்டும் என்று கேட்பதோடு ரகசிய ஓட்டுமுறைகள் கூட பயனற்றது என்று கூறப்படுகிறது. பலவிடங்களில் பலவிதமான அமைப்பு மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டது. இங்கே இன்னும் சில ஆண்டுகளில் பார்க்கலாம் என்று சொல்கிறார்கள். 1936-ல் உருவாக்கிய மிகப் பழைமையான காலத்துக்கு பொருந்தாத இந்த அமைப்பை மாற்ற நீங்கள் முன்வராதது வேதனை அளிப்பதாக இருக்கிறது. மாற்றம் என்றால் எத்தனை வருஷத்தில் செய்யப்படும் என்று சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உங்களுடைய ஆட்சியில், 1976-க்குள் செய்யப்படும் என்று உறுதி சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக நியமனம் செய்யப்பட்டிருக்கின்றவர்கள், இரண்டு நபர்கள் யார்? அதிலே ஒருவர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் செயலாளராக இருந்தவர். பாலு என்பவர், அவர் இங்கு துணைத்



1975 பிப்ரவரி 28] [திரு. எம். சுரேந்திரன்]

தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இன்னொருவர் காவேரிபுரம் பஞ்சாயத்தின் தலைவர். இவருக்கும் நகரத்துக்கும் என்ன சம்பந்தம்? என்ன காரணம் ? அவர் என்ன காரணத்திற்காக இங்கு உறுப்பினராக இருக்கிறார் என்று எனக்குப் புரியவில்லை. அதேபோல் நகரத்திற்கு அப்பால் இருக்கின்ற ஒரு தொழிற்சாலையினுடைய பிரதிநிதி புருஷோத்தமன். இங்கு உறுப்பினராக இருக்கிறார். இந்த நகரத்தினுடைய நிர்வாகத்திற்கு அவரை நியமித்திருப்பது எப்படி நியாயமானது என்று எனக்குப் புரியவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஒரு கருத்து எடுத்துச் சொல்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இந்தவிதமான நியமனங்கள் ஜனநாயகத்திற்கு எந்த விதத்தில் பொருந்தியது என்பதைச் சொல்ல வேண்டும். அமைச்சர் அவர்கள் சொல்வது சரியான சமாதானமாகாது. கடந்த மசோதாவை நானே வாபஸ் வாங்கிக் கொண்டேன். அன்றையதினம் அமைச்சர் அவர்கள் சொல்லியது ஓரளவுக்கு உறுதியளிப்பதாகத் தெரிந்தது. ஆனால் இன்று மறுபடியும் சமாதானம் சொல்லப்படுகிறது. அந்தக் காரணங்களும் முன்பு சொன்னதை விட பலஹீனமாக இருக்கின்றன.

(பிற்பகல் 12-30)

அன்றைக்கு மாண்புமிகு அமைச்சர் நெடுஞ்செழியன் அவர்கள் காரணங்களைச் சொன்னார்கள். இன்றைக்கு நீங்கள் காரணங்கள் சொல்கிறீர்கள். நான் இந்த மசோதா வருகிறபோது திரு. அன்பில் தர்மலிங்கம்தான் சமாதானம் சொல்வார்கள் என்று நினைத்தேன். ஆனால் இப்போது நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். நீங்கள் சொல்கிற காரணங்கள், எந்த அமைச்சர் சொன்னாலும் உங்களுடைய பக்கத்திற்கு வலுவூட்டுவதற்குப் பதிலாக பலகீனப் படுத்துவதாகத்தான் இருக்கிறது. அந்த நகரத்தை உண்மையிலேயே அழகு படுத்த வேண்டும், முன்னேற்றம் செய்ய வேண்டும் என்று நீங்கள் உணர்வீர்களானால் இந்த மசோதாவை நீங்கள் ஏற்றுக்கொண்டு இதைச் சட்டமாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது அரசியல் கொள்கை, கட்சியின் நலன் அதிகமாகத் தேர்தலைப்பற்றி வலியுறுத்தினார்கள். அவர்களைப்போல் நானும் சவால் விட வேண்டியது இல்லை. மேல் நட்டு, கீழ்நட்டு என்று எல்லாம் பேசினார்கள். அவருக்கு ஜமீன்தார் வந்து பதில் சொல்ல வேண்டுமென்று எதிர்பார்த்தார்கள் என்று நினைக்கிறேன். (குறுக்கீடு) அவர்கள் வந்து சொன்னால்தான் புரியும்போல் இருக்கிறது. மேல் மட்டம் என்று சொன்னார்கள், அது ஆளைப் பொறுத்தா, பணத்தைப் பொறுத்தா, வெறும் எம். எல். ஏ. எம்.எல்.சி. யாக இருந்தால் போதுமா என்று எனக்குப் புரியவில்லை. அவர் எதை நினைத்துச் சொன்னார்கள் என்று தெரியவில்லை. ****சொல்லி காரணங்களைச் சொன்னேன் என்று சொன்னார்கள். நான் *** சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: **என்ற சபதத்தைச் சொல்லக் கூடாது. உண்மைக்கு மாறானது என்று சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அவர் இரண்டு முறை **என்று சொல்லியிருக்கிறார். அதை மாற்ற வேண்டும். (குறுக்கீடு) அதற்காகத்தான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; உறுப்பினர் பெருந் தன்மையாக அந்த வார்த்தையை வாபஸ் வாங்கிக் கொண்டு அங்கே வேறுவார்த்தையைப் போட்டுக்கொள்ளுங்கள்.

திரு. எம். சுரேந்திரன் : நான் ஒப்புக்கொள்கிறேன்.

THIRU K. T. K. THANGAMANI : Sir, after the reply of the Hon. Minister, Mr. Surendran, the mover of the bill has replied. Again the Hon. Minister is making another reply. Has he got the right of reply to reply?

MR. DEPUTY SPEAKER : As per our rules, the Minister can reply as many times as may be necessary.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : நம்முடைய சர்க்காருடைய கொள்கையைப் பொறுத்தவரையில் மேட்டூர் நகரம் இன்னும் முன்னேற வேண்டும். இன்னும் இண்டஸ்டிரீஸ் வரவேண்டும். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் 28 ஆண்டு காலமாக அதை அப்படியே இருக்க அனுமதித்துவிட்டு இப்போது வந்து உங்களோடு சேர்ந்துகொண்டு அதை மாற்றவேண்டுமென்று சொல்கிறார். எதற்காக அந்த அரசு வைத்து இருந்தது என்று சொன்னால் அந்த நகரம் இன்னும் முன்னேற வேண்டும். அந்த எண்ணத்தில்தான் நாங்களும் சொல்கிறோம். மேட்டூர் நகரம் இன்னும் நல்ல முறையில் வளர்ச்சி பெற்று முன்னேற்றம் அடையவேண்டும் என்றுதான் நான் சொல்கிறேன். நாங்கள் தேர்தலில் யார் வெற்றி பெறுவார், யார் சேர்மேனாக வருவார், எப்படி வார்டு பிரிப்பது என்று கணக்குப் போட்டுப் பார்க்கவில்லை என்று சொல்லி நண்பர் சுரேந்திரன் அவர்களுக்கு மீண்டும் சொல்லிக்கொள்கிறேன், நகரியமாக இருந்தால் இன்னும் அது சிறப்பாக பணியாற்றும் என்ற நிலைமையை நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எ. சுப்பிரமணியம் : 25 வயதுவரை கல்யாணத்தைப் பற்றி நினைக்காத நீ இப்போது என் கல்யாணத்தைப் பற்றி நினைக்கிறாய் என்று கேட்பது போல் இருக்கிறது அமைச்சர் பதில்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.



திரு. எம். சுரேந்திரன் : அவர்கள் 28 ஆண்டுகளாக மாற்ற வில்லை, நாங்களும் மாற்றவில்லை என்று சொன்னால், உடன்பாடு ஏதாவது இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். அவர்கள் மாற்ற வில்லை, தவறு செய்தார்கள் என்றால், சரியானது எது என்பதை நீங்கள் செய்யுங்கள். அந்த நகரம் வளர வேண்டுமென்று விருப்பம் இருக்கிற எல்லோரும், கலெக்டர், பி. டபிள்யூ. டி. அதிகாரிகள், எலெக்டிரிசிடி போர்ட் அதிகாரிகள் எல்லோரும் சேர்ந்து ஒருமனதாகத் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அதைப் புறக்கணித்துவிட்டு இன்னும் தொழிற்சாலை வர வேண்டுமென்று சொன்னால் என்ன பொருள் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: உடன்பாடு ஏதாவது வைத்து இருக்கிறீர்களா என்று பேசுகிற பேச்சு அரசியலுக்காக இந்த மன்றத்தில் சொல்லுவது என்றால், யாருக்கு வேண்டுமானாலும், யாரைப்பற்றியும் சொல்லுகிற நிலைமை ஏற்பட்டுவிடும். யாரோடு யார் உறவு வைத்திருக்கிறார்கள் என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும். ஆதலால், ஏதோ புதிய வேகத்தில் புதிய தெம்பில் நீங்கள் ஆளும் கட்சியோடு கலந்து இருக்கிறீர்கள், ரகசிய உறவு வைத்து இருக்கிறீர்கள் என்று சொன்னால், அது மிகமிக உண்மைக்குப் புறம்பானது என்பதை மறுபடியும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பொய் என்று சொல்வது தவறு என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. ஒரு உறுப்பினர் சொல்வது பொய் என்று சொன்னால் அது ஆட்சேபணைக்குரியது. பொய் என்ற வார்த்தையே பயன்படுத்தக் கூடாது என்று இல்லை. ஒரு உறுப்பினர் பேசுவது பொய் என்று இன்னொரு உறுப்பினர் குறிக்கிட்டுச் சொன்னால் அது தவறு.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த மாதிரியான காரியத்தில் முன்பு இருந்த கட்சி தவறு செய்தது. நாங்களும் அதையே செய்து கொண்டு இருப்போம் என்று சொல்வது தவறு. அந்த மேட்டூர் நகரியம் நகராட்சியாக வருவதற்கான எல்லா அந்தஸ்தும் இருக்கிறது என்ற காரணத்தால் இந்த மசோதாவை இன்று வரவேற்றுப் பேசினேன். கடைசியாக உறவு இருக்கிறது என்று திரு. சுரேந்திரன் இப்படி நோக்கம் கற்பிப்பார் என்று சொன்னால் உண்மையிலேயே நான் வருந்துகிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: இப்போது அமைச்சர் அவர்கள் சொன்னதற்காகச் சொன்னேனே தவிர நீங்கள் சொன்னதாகச் சொல்ல வில்லை. அமைச்சரின் கருத்து உங்களுடைய எண்ணத்தைப் பிரதிபலிக்க வில்லை என்று சொல்லி, இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன் [illegible].

...மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நம்முடைய நண்பர் சுரேந்திரன் அவர்கள், உடன்பாடு இருக்கிறதா, உடன்பாட்டுக்கு வருவதற்கு அவர்கள் தவம் கிடக்கிறார்கள் என்று சொன்னார்கள். யார் எங்கே போய் தவம் கிடக்கிறார்கள் என்பது நாட்டுக்குத் தெரியும். நண்பர் சுரேந்திரன் அவர்கள் எத்தனை நாள் சீட் வாங்க தவம் கிடந்தார் என்பதும் நாட்டுக்குத் தெரியும்.

திரு. எம். சுரேந்திரன் : பழையவைகளைக் கிளப்பினால் நன்றாக இருக்காது. இப்போது தவம் கிடப்பது நாம் அல்ல. அவர்கள் உண்டாக்கி வைத்தது நாங்கள் மாற்றவில்லை என்று சொன்னார்கள் அவர்கள் உண்டாக்கி வைத்தது தவறு என்று சொன்னால் அதை மாற்றுங்கள். அதே தவறை நீங்கள் செய்ய வேண்டியதில்லை. ஏதோ நல்ல காரியம் நடக்க வேண்டுமென்பதற்காகச் சொன்னால், அதற்கு உள்நோக்கம் கற்பித்துப் பேசுவது நல்லதல்ல. நீங்கள் கொடுக்கும் சமாதானம் ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல என்று சொல்லி, மசோதாவை வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அவர்கள் செய்தது தவறு என்று நான் சொல்லவில்லை. அவர்கள் எந்தக் காரணத்திற்காக அதை வைத்திருந்தார்களோ அதே காரணத்திற்காகத்தான் நாங்கள் வைத்திருக்கிறோம் என்பதற்காகச் சொன்னேன். வேறு ஒரு காரணமும் இல்லை. உறவு வைத்துக்கொள்ளுவது மாதிரி பேசவில்லை. திரு. சுரேந்திரன் அவர்கள் இப்படிப் பேசி பிரச்னையை திசை திருப்ப வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். யாரோடு யார் சேருகிறோம்—திரு. பொன்னப்ப நாடார் அவர்களோடு சேர்ந்தால் என்ன? தமிழ் நாட்டில் பிறந்தவர், அதிலே என்ன பாவம் இருக்கிறது என்று தெரியவில்லை. யார் யாரோடோ சேர்ந்து இருக்கிறார்கள். அவர்களோடு நாங்கள் சேர்ந்தால் பரவாயில்லை. 1971-ல் எங்களோடு இருந்தவர்கள், 1976-ல் எங்கே இருக்கப் போகிறீர்கள். உங்கள் மீது யார் என்ன செய்ய முடியும்? கொள்கை இந்த நாட்டில் இல்லாமல் போய்விட்டது. யார்யார் எங்கெங்கே இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. உங்கள் மாதிரி கொள்கையை நாங்கள் விடவில்லை. நாங்கள் இருக்கிற இடத்தில் தான் இருக்கிறோம். நாங்கள் யாரையும் தேடிப் போவதில்லை. எங்களைத் தேடி யாராவது வந்தால் பேசுவோம். இல்லையென்றால் எங்கள் பொறுப்புகளை நாங்கள் செய்வோம்.

திரு. எம். சுரேந்திரன் : முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்கு இப்படி பச்சையாக அமைச்சர் கண்டித்து இருக்கக் கூடாது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நான் ஒரு விளக்கம் கூற வேண்டுமென்று நினைக்கிறேன். ஏதோ சீட்டிற்காக எங்கள் கட்சியில் யாரும் தவம் கிடக்கவில்லை என்பதை வலியுறுத்திச் சொல்லுகிறேன். திரு. சுரேந்திரன் அவர்கள் கூறினார்கள், எங்களுடைய அரசியல் எப்படி இருக்கிறது என்பது பொதுமக்களுக்கு நன்றாகத் தெரியும். நாங்கள் எந்தக் கட்சியின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டோமோ அந்தக் கட்சிக்கு



பற்றும் பாசமும் உடையவர்களாக இருக்கிறோம். ஏதோ கட்சி மாற வேண்டும் என்ற எண்ணத்திற்கு அப்படிப் புதிதாக எண்ணங்கள் தோன்றுவதற்குச் சிறிதும் இடம் இல்லை. அப்படி யாராவது மாறினால் நிச்சயமாக நாங்கள் வரவேற்க மாட்டோம். ஒழுங்கு முறையில் நியாயமான முறையில், காந்திய வழியில் எங்களுடைய அரசியல் கட்சியை நடத்தி செல்ல வேண்டுமென்று எங்கள் கட்சித் தலைவர் காமராஜர் சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய சீடர்கள் என்ற முறையில் நீங்கள் பேசுவதை நாங்கள் அனுமதிக்கப் போவது இல்லை என்பதை தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, இன்றைக்கு நிறுவன காங்கிரஸ் தலைவர் எழுந்திருந்து ஏதோ பேசினார். அவர் எப்போதுமே நியாயமாகப் பேசக்கூடியவர். இன்றைக்கு இருக்கிற இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் பார்த்தால் ஒருவருக்கொருவர் குத்தலாக, இல்லாத பிரச்னைகளைக் கிளப்பி விடுவார்களோ என்று பயப்பட வேண்டியிருக்கிறது. அமைச்சரவர்கள் பேசுகிற போது தமிழர்களோடு சேருகிறோம் என்று யாரைப் பார்த்துச் சொல்லுகிறார்கள் என்று தெரியவில்லை. சுரேந்திரன் அவர்களைப் பார்த்துச் சொல்கிறார்கள். நாம் எல்லோரும் இந்தியர்கள் என்ற கருத்து உள்ள நிலையில் பேசாமல் இங்கே இப்படிப் பிரித்து பேசுவதைப் பார்த்தால் உண்மையில் வருத்தமாக இருக்கிறது. அதே மாதிரி திரு பொன்னப்ப நாடார் அவர்கள் நாங்கள் கட்சி மாற மாட்டோம் என்று பேசுகிறார்கள். அமைச்சரவர்கள் அரசியலில் கொள்கை கிடையாது என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, சிண்டிகேட்டிலிருந்து ஜெயிக்கிறது, மாற்றுக் கட்சிக்குப் போவது போல் இல்லையென்று தான் சொன்னேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, இரண்டு பேர்களும் ஒரே கொள்கை அடிப்படையில் சொன்னார்கள். ஆனால், உங்களுக்கு கொள்கை கிடையாது. இங்கே காலையில் இருக்கிற மந்திரி மாலையில் இல்லை. உங்களுக்குள்ளேயே கொள்கை இல்லை. கூட்டுப் பொறுப்பு என்று சொல்லப்படுகிற மந்திரி சபையிலேயே ஒரு அமைச்சர் நான் மாலையில் மந்திரியாக இருப்பேனோ இல்லையோ என்று சொல்கிறார்கள். ஏதோ பெரிய கொள்கையை வைத்துக் கொண்டு இருப்பது போலப் பேசுகிறார்கள். நாங்கள் கட்சி மாறினோம் என்பதை குத்தலாக திரு பொன்னப்ப நாடார் அவர்கள் பேசுகிறார்கள். இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னால், இந்திரா காங்கிரசோடு இணைந்து புதுவையிலும், கோவையிலும் தேர்தலுக்கு நின்றுவிட்டு, காமராஜர் அவர்கள் இந்திரா காந்தி அவர்கள் தான் இந்தியாவின் தலைமைப் பொறுப்பைத் தாங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார் என்று சொல்லிவிட்டு, 3 மாதங்களுக்குள்ளே பல்டி அடித்தவர்கள் மற்றவர்களைக் குத்திக் காட்டிப் பேசுவதா ?

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, யார் பல்டி அடித்தார்கள், யார் கட்டாயமாக கட்சியைக் கலைத்து விட்டு எங்களோடு சேரவேண்டுமென்று தவித்தார்கள் என்று தெரியும். இரகசிய மாக வேறு கட்சிகளோடு உறவாடிக் கொண்டு ஏதோ வேண்டுமென்று எங்கள் தலைவரைக் குறைத்துப் பேசவேண்டுமென்றால் தமிழ் நாட்டு மக்களும் உலகமும் ஏற்றுக் கொள்ளாது என்று தெரியும். அதுவும் குறிப்பாக திருமதி அனந்தநாயகி அவர்களுக்கு ஏன இவ்வளவு ஆத்திரம் பொங்கி எழுந்தது என்று தெரியவில்லை. என்னோடு கட்சியில் துணை தலைவராக இருந்தவர்கள். அவரைக் குறைத்துப் பேச வேண்டுமென்று நான் பேசவில்லை. நான் நிதானம் இழந்து பேசக்கூடியவன் அல்ல. இன்னமும் நிதானம் இழக்க மாட்டேன். பல ஆண்டு காலமாக உறுப்பினராக இருந்து கொண்டிருக்கிறேன். இன்னும் சந்தர்ப்பம் கிடைத்தால் உறுப்பினராக வருவேன். ஆனால் கட்சி மாற மாட்டேன் என்று திட்டவட்டமாக அறிவித்து முடிக்கிறேன்.

திரு. எ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள பேசும்போது நான் இங்கேயேதான் இருப்பேன் என்று சத்தியம் செய்தார் கள். திரு பொன்னப்ப நாடார் அவர்கள் நான் காங்கிரஸ் கட்சியை விட்டு மாற மாட்டேன் என்கிறார்கள். ஆக கட்சி மாற மாட்டோம் என்று யாருக்கு இரண்டு பேர்களும் சபதம் பண்ணுகிறார்கள் என்று தெரியவில்லை. யாருக்கு நம்பிக்கை ஊட்டுவதற்காக அமைச்சர் கட்சி மாறமாட்டேன் என்றும் திரு பொன்னப்ப நாடார் அவர்கள் கட்சி மாறமாட்டேன் என்றும் பேசுகிறார்கள், இவர்கள் பேரில் யாராவது சந்தேகம் கற்பிக்கிறார்களா? அல்லது இவர்களுக்கு தங்களுக்குள்ளேயே சஞ்சலம் வருகிறதாவென்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, சஞ்சலத்திற்கு இடமில்லை. ஆளாகவும மாட்டோம் என்பதை மறு முறையும் வலியுறுத் திக் கூற விரும்புகிறேன். இந்திரா காந்தி அவர்களை அதிகாரத்திற்குக் கொண்டு வந்தது எங்களுடைய தனிப் பெரும் தலைவர் காமராஜர் அவர்கள் என்பதை மறந்துவிட வேண்டாம்.

திரு கோவை செழியன்: தலைவரவர்களே, ஸ்தாபன காங்கிரஸ் தலைவர் திரு பொன்னப்ப நாடார் அவர்கள் சொல்கிற போது என்றைக்கும் கொள்கையை விட மாட்டோம். வேறு கட்சியில் சேர மாட்டோம் என்று சொன்னார்கள், மெத்த மகிழ்ச்சி. பெருந் தலைவர் காமராஜர் அவர்கள் தலைவராக இருக்கிற போது மாணிக்க வேலு நாயகர், ராமசாமி படையாட்சி அவர்களுடைய கட்சிகளோடு ஒன்றாக இணைந்து மந்திரி சபை அமைக்கவில்லையா? முஸ்லீம் "லீக்கோடு தொடர்பு வைத்திருக்கவில்லையா? கேரளாவில் மன்னத் பத்மநாபன் என்பவர் ஜாதிக் கட்சி வைத்திருந்தார். அவரோடு தொடர்பு வைத்திருக்க வில்லையா என்பதை அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



திரு. ஆர். பொன்னப்பநாடார்: தலைவரவர்களே, மன்னத் பத்மநாபனோடு யார் உறவு வைத்திருந்தார்கள் என்பதைப் பற்றி கேரளாவில் இருக்கிற மக்களுக்குத் தெரியும். இப்போது கேரளாவில் இருக்கிற அரசியல் எப்படி இருக்கிறது என்பதை நான் எடுத்துக் கூற வேண்டியதில்லை. காங்கிரஸ் கட்சி, கம்யூனிஸ்டு கட்சி, முஸ்லீம் லீக் கட்சி எல்லாம் ஒன்றாக இணைந்து செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அந்த விவகாரத்தில் இழுக்க வேண்டாம். வேண்டுமென்றே என்னை அந்த விவகாரத்திற்கு இழுப்பது பொருத்தமல்ல.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:— தலைவரவர்களே, இந்த தனி ஆவர்தனம் எப்போது முடியும ?

திரு கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, பொன்னப்ப நாடார் அவர்கள் கம்யூனிஸ்டு கட்சியைப்பற்றி இணைத்துப் பேசு கிறார்கள். அவரிடத்தில் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். கேரளாவில் 1952-ஆம் ஆண்டிற்குப் பிறகு 5 ஆண்டுக் காலம் ஆட்சியில் எந்த மந்திரி சபையும் இருந்தது கிடையாது. இப்போது கம்யூனிஸ்டு கட்சி தலைமையில் ஆளும் காங்கிரசோடு சேர்ந்த கூட்டணி ஆட்சி 5 ஆண்டுக் காலமாக இருக்கிறது. அவர்கள் அறிவார்கள் என்று எண்ணுகிறேன். தங்கள் பேரில் தாக்குதல் வருகிறது என்ற காரணத்திற்காக நீங்கள் ஏன் அவர்களோடு சேர்ந்தீர்கள் என்று இன்னொரு கட்சியை வம்பிற்கு இழுக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு ஆர். பொன்னப்ப நாடார்:— தலைவரவர்களே, நான் கம்யூனிஸ்டு கட்சியை வம்பிற்கு இழுக்கவில்லை.

திரு கே. எ. வஹாப்.: தலைவரவர்களே, கேரளாவில் முஸ்லீம் லீக் புது காங்கிரசோடு சேர்ந்திருக்கிறது. எங்கெங்கே நல்லாட்சி நடைபெறுகிறதோ அங்கே முஸ்லீம் லீக் கூட்டு சேர்ந்திருக்கிறது. கேரளாவில் 5 ஆண்டுக் காலமாக அந்தக் கூட்டாட்சி நிலைத்திருக்கிற தென்றால் முஸ்லீம் லீக் ஒரு முக்கியமான காரணம் என்பதை தெரிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னதிலிருந்து அவர் கட்சி விசுவசம் என்றால் தலைவர் பேரில் விசுவாசமாக இருப்பது என்ற முறையில் எண்ணுகிறார்களே தவிர அந்தக் கட்சியின் கொள்கை திட்டத்தில் விசுவாசமாக இருக்க வேண்டுமென்பது குறைந்திருக்கிறது என்பது போல ஒரு தொனி எழுகிறது. இது சரியானதுதானா என்பதைப் பார்க்க வேண்டும். கட்சியின் திட்டங்களிலே மாற்றம் ஏற்படு கிறது. அதனால் அபிப்பிராய பேதங்கள் வரலாம். அதனால் வேறு இடங்களுக்குப் போகலாம். தலைவர் மேல் உள்ள விசுவாசத்தை கட்சியின் விசுவாசம் என்று கொள்வது பொருத்தம்தானா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, விளக்கம் சொல்ல வேண்டுமானால் நிறைய இருக்கிறது. நண்பர் சுரேந்திரன் அவர்கள் சோஷலிஸ்டு கட்சியில் உறுப்பினராக நீண்ட நெடுங்காலமாக செயலாற்றி னவர்கள் அவருக்கு ஒரு வேளை லட்சியப் பிடிப்பு அதிகமாக இருக்கலாம். நாங்களும் அதே மாதிரி லட்சியத்தின் அடிப்படையில் ஸ்தாபன காங்கிரஸ் என்னென்ன தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறதோ, அந்தத் தீர்மானங்களுக்கேற்ப எங்கள் தலைமை என்ன சொல்கிறதோ அதற்குக் கட்டுப்பட்டு, இணங்கித்தான் செயலாற்றுகிறோமே தவிர சந்தர்ப்ப வாதம் எங்களுக்கு இல்லை. அப்படி இருந்தால் நாங்கள் வேறு இடத்தில் இருந்திருப்போம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, சில இசை நிகழ்ச்சிகளில் பாடகர் ஒரு பாட்டை ஆரம்பித்து முக்கால் பகுதி பாடிய பிறகு நிறுத்தி, தனி ஆவர்தனம் நடைபெறும். மிருதங்கம் கஞ்சிரா, கடம், மோர்சிங் இவைகளைக் கொண்டு ஆவர்தனம் நடைபெறும். கடைசியாக ஆவர்தனம் முடிந்ததும் பாடத்தொடங்கிய பாடகர் சிலவரிகளைச் சொல்லி பாட்டை முடிப்பார். இங்கே, பாடகர் எங்கே வரியை மறந்து விட்டாரோ என்று சந்தேகம். ஆகவே மேட்டூர் நகரிய மசோதாவைப் பற்றி முடிவு அறிவிக்க வேண்டுகிறேன் (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த அவையில் பொய் என்ற வார்த்தை "அன்பார்லிமென்டரி" என்று சபையி னுடைய மரபிற்கு உகந்ததல்ல என்று ஏற்கனவே பல தீர்ப்புகள் மாண்புமிகு திரு கிருஷ்ணராவ் தலைவராக இருந்த நாள் முதல் வரிசையாக இருந்து வருகிறது. ஆகவே "பொய்" என்ற வார்த்தை எங்கேயாவது உபயோகிக்கப் பட்டிருந்தால் அது அவைக் குறிப்பி லிருந்து நீக்கப்படுகிறது.

திரு. ஆர். பொன்னப்பநாடார் : "தலைவரவர்களே, "பொய்" என்று வருகிற அந்த இடங்களில், "உண்மைக்குப் புறம்பாக" என்று போட்டுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அப்படி என்றால், "பொய்மையும் வாய்மையிடத்த . . . ." என்ற குறளை சொல்லலாமா, கூடாதா ? பொய் என்ற வார்த்தையைச் சொல்ல லாம், ஒரு உறுப்பினர் பேசுவது "பொய்" என்று சொல்வது தவறு என்றுதான் இந்த அவையின் மரபாகக் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பொய்ம்மை என்று அந்த வார்த்தைக்கு மரியாதை கொடுக்கப்பட்டு விட்டதால் அதை உபயோகப்படுத்தலாம் என்று கருதுகிறேன்.



திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, இதற்கு முன்னால் இருந்த சபாநாயகர் கொடுத்த ரூலிங்தான் இது. விதி முறை அல்ல. இதை மாற்றலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, சிலர் பேசும்போது, பகுதர்களாக இருப்பவர்கள் வாழ்வு பொய் என்று சொல்வார்கள். அப்படிச் சொல்வதை, பொய் என்ற வார்த்தையை சொல்லக் கூடாது என்று மறுக்க இயலுமா ? காயமே இது பொய்யடா என்று பட்டினத்தார் சொல்லியிருக்கிறார், ஆகவே பொய் என்ற வார்த்தையை சொல்லக் கூடாது என்று சொல்வது சரியாக எனக்குத் தோன்றவில்லை.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, இந்த விஷயத்தில் முதலமைச்சரவர்கள் சொன்னதை நான் முழு மனதோடு ஆதரிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நண்பர் செழியன் அவர்கள் பொய்யையாவது ஆதரித்தார்கள் என்பதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் (சிரிப்பு).

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் பொய் என்பதற்கு விளக்கம் சொல்லி வாதிட்டதை நான் வரவேற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : அனுபவப்பட்ட உறுப் பினர்கள் இவ்வளவு தூரம் ஆலோசனை கூறியதற்குப் பிறகு. தீர்ப்பை மாற்றிக்கொள்ளாவிட்டால் எனக்கு மரியாதை இல்லை எனவே "பொய்" என்ற வார்த்தை உபயோகிக்கப்பட்டால், இடம் பொருள், ஏவல் ஆகியவைகளை அனுசரித்து சட்ட மரபிற்கு உகந்ததா இல்லையா என்பதை பார்த்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

இப்போது, திரு. சுரேந்திரன் மொழிந்த சட்ட முன்வடிவு பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

பேரவையின் முன்னுள்ள கேள்வி : "1974-ஆம் ஆண்டு, மேட்டூர் நகரியம் (ஒழிப்பு நகராட்சியை விரிவுபடுத்துதல்) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 57/74) சட்டமாக ஆக்கப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வி யுற்றது.

(3) அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி.

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர்அவர்களே, சட்ட மன்ற விதி 21 (3)ன்படி இனம் 3-ன் கீழ் உள்ள தனியார் அலுவல்களில் குறிப்பிடப்பட்டிருக்கிற இனம் ஐந்தை இரண்டுக்கு முன்னதாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

4. தனியார் அலுவல்கள்—சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி)

(iii) தமிழ் நாடு, 1975-ம் ஆண்டு சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகள் (வெளியீட்டை பாதுகாத்தல்) சட்ட முன்வடிவு.

THIRU K. T. K. TANGAMANI: Mr. Deputy Speaker, Sir, I move for leave to introduce the Tamil Nadu Legislature Proceedings (Production of Publication) Bill, 1975.

The motion was put and carried and leave was granted.

THIRU K. T. K. TANGAMANI : I introduce the Bill.

MR. DEPUTY SPEAKER : The Bill is introduced.

(iv) தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு உழவர்கள், வேளாண்மைத் தொழிலாளர்கள் கடன்கள், சரிகட்டுதல் சட்டமுன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடி. 59/1974).

THIRU N. K. PALANISAMY : Sir, I move :

"That the Tamil Nadu Agriculturists and Agricultural Labourers Debts adjustment Bill, * 1974 (L.A. Bill No. 59 of 1974) be taken into consideration."

I have given notice of the following amendment also.

"In the enacting formula for the words "Twenty fifth year" substitute the words "Twenty sixth year."

* 8-1-1975 தேதிய சிறப்பு அரசு இதழில் வெளியிடப்பட்டுள்ளது.



THIRU K. T. K. TANGAMANI : After the first reading is over when the clause-by-clause consideration is taken up, the amendmenr may be moved.

MR. DEPUTY SPEAKER: The Bill has already been introduced and the hon. Member is now moving that the Bill be taken into considerationt He has to get it seconded.

THIRU S. ALAGARSAMY : Sir, I second it.

திரு. என். கே. பழனிசாமி : சார், நான் கொடுத்திருக்கிற தீர்மானத்தை எடுத்துக் கொண்டால் அதன் அர்த்தம் தெளிவாகத் தெரிய வரும். ஆகவே கொடுத்திருக்கிறேன். இன்றைய தினம் இந்த மசோதா எவ்வளவு முக்கியமானது என்பதை இந்த நாட்டில் இருக்கக்கூடிய அத்தனை பேரும், விவசாயிகளுக்கு நன்மை பயக்க வேண்டுமென்று சொல்கிற எல்லாக் கட்சியினரும் ஒப்புக்கொள்வார்கள். விஞ்ஞான சோசலிசத்தைப் பற்றி எல்லாம் நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். எந்த அளவுக்கு அதை நடைமுறைப்படுத்தப் போகிறது சர்க்கார் என்பதில் தான் சந்தேகம் இருக்கிறது. சர்க்காருடைய எண்ணத்தை நிறைவேற்றுகிறார்களா என்பது இந்த மசோதாவைப் பொருத்து இருக்கிறது. இதன் நோக்கம் விவசாயிகளுக்கு எந்த அளவுக்குக் கடனை திருப்பிக்கட்ட முடியும் என்ற அடிப்படையை வைத்துத்தான் இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது.

நிலம் இல்லாத விவசாயிகளுக்கு, நிலத்தில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு அதிகமாகப் போனால் வருஷத்தில் 240 நாள்தான் வேலை இருக்கும். பாக்கிநாள் வேலை கிடையாது. ஆகவே அவர்கள் கடன் வாங்கித்தான் சாப்பிட வேண்டும். அதற்கு கந்து வட்டி அதிகமாகக் கொடுக்கவேண்டியிருக்கிறது. அதை அவர்களால் கொடுக்க முடியவில்லை., ஆகவே, முழுக் கடனையும் ரத்து செய்ய வேண்டு மென்பது இந்த மசோதாவின் நோக்கம்.

கடன் வாங்காத காலம் என்று ஒரு காலம் கிடையாது. அந்தக் காலத்திலிருந்தே கடன் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். எல்லாருமே கடன் வாங்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள். ரோமன் எம்பயர் காலத்திலிருநதே இந்தக் கடன் இருந்து கொண்டிருக்கிறது.

நம்முடைய வேதங்களில் 18 பாஷைகளைப்பற்றிச் சொல்லியிருக் கிறார்கள். அதில் "மனுஸ்மிருதி" தான் டாப். விர்தி என்றால் வட்டி, அதிவிர்தி என்றால் அதிக வட்டி என்று அதில் சொல்லியிருக்

கிறது. வட்டி வாங்குவது பாவம் என்று சொல்லியிருக்கிறது. அதிலும் பிராமணர்கள் வாங்கவே கூடாது. ஆனால் இன்றைக்கு அவர்களும் வட்டி வாங்குகிறார்கள். அந்தக் காலத்தில் வட்டி வாங்கினால் அந்தப் பக்கத்தில் இருக்கிற பெண்கள் எல்லாம் கேலி செய்வார்கள். வட்டி வாங்கக் கூடியவனை குசுதா என்று சொல்வார்கள். வட்டி வாங்குகிறவனுடைய மனைவியை "குசுதாயினி" என்று எல்லோரும் கேலி செய்வார்கள்.

இன்னும் சொல்லப் போனால் இந்தக் கடன் வாங்கும் பழக்கம் ஸ்ருதி காலத்தில் கூட இருந்திருக்கிறது. ஷேக்ஸ்பியர் காலத்தில் கூட இருந்திருக்கிறது. Sheep and goats are produced. Is Money? என்று சொல்லியிருக்கிறார். ஆகவே, அவர் காலத்தில் கூட கடன் இருந்திருக்கிறது.

பாரதத்திலும் கடனைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். கிருஷ்ண பரமாத்மா துவாரகையிலிருந்து போகும்போது "வட்டிக்கு வட்டி" வாங்கக்கூடிய கஷ்டத்தில் இருப்பதுபோல அந்த நேரத்தில் இருந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. (மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன் என்பதையும் சேர்த்துக்கொள்ளலாம்) ஆக அந்தக்காலத்திருந்தே கடன் இருந்து வருகிறது. கடன் இருந்து வருகிற காலத்திலிருந்தே விவசாயி கடன் வாங்கிக்கொண்டுதான் இருக்கிறான். கடன் வாங்காமல் யாரும் விவசாயம் செய்ய முடியாது.

இன்னும் நம்முடைய நாட்டுப் பழமொழி கூட இருக்கிறது. "கால் வயிற்றுக்குச் சோறு போதும், கடனே வேண்டாம்" என்று நாம் எல்லோரும் சொல்கிறோம்.

ஆரம்ப காலத்தில் பணம் கிடையாது. எல்லாம் பண்ட மாற்றுமுறைதான். அன்றைக்கு இந்தமாதிரி தொழில் வளர்ச்சி கிடையாது. விவசாயத்திற்கு பூமியும் கிடையாது; நிலத்திற்கு யாரும் உரிமையும் கொண்டாடவில்லை. அதற்குப் பின்னால் விவசாயம் வளர்ந்திருக்கிறது. அந்தக் காலத்தில் தோதர்மால் காலத்தில் விவசாயியை யாரும் பூமியிலிருந்து வெளியேற்றக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அக்பர் காலத்தில் பல மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. விவசாயிகளை பூமியிலிருந்து வெளியேற்றக் கூடாது அவர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்துகொடுக்க வேண்டும் என்ற முறையைக் கொண்டுவந்தார்கள். அப்போது பணம் கிடையாது. தானியத்தில் 113 பகுதியை ரெண்டாகக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அதற்குப் பின்னால் ஔரங்கசீப் வந்தார். அவர் காலத்தில் பாதி ரெண்டாக—வட்டியாகக் கொடுத்தார்கள். அதற்குப்பின்னால் பிளாசி யுத்தம் வந்தது. அதில் ஈஸ்ட் இந்தியா கம்பெனி வந்தது. அவர்கள் வந்த பின்னால் முழுவதையும் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள்.



இப்படியாகப் பல மாறுதல்கள் ஏற்பட்டு, முதன்முதலில் ஒரு வெள்ளைக்காரன் கல்கத்தாவில் கடன், வட்டி என்று பணமாக வாங்கத் தொடங்கினான். அதற்குப் பின்னால் காரன்வாலிஸ் வந்த பின்னால் பெர்மனென்ட் செட்டில்மென்ட் வந்தது. யாதையும் எந்த நேரத்திலும் வெளியேற்றலாம் என்று வந்தது. முன்பு தானியங்களாகக் கொடுக்கப் பட்டது. இப்போது பணமாகக் கொடுக்க வேண்டும் என்ற நிலை வந்தது. அதற்குப் பின்னால் மணிலெண்டிங் பிசினஸ் ஆரம்பமாகியது. குரூரியஸ் மணிலெண்டர்கள் எல்லாம் வந்தார்கள். அந்தக் கொடுமையைத் தாங்க முடியாமல் மக்கள் கிளர்ச்சி செய்யத் தொடங்கினார்கள். பீகாரில் கடுமையான வட்டியை எதிர்த்து 10,000 விவசாயிகள் சேர்ந்து போராட்டம் நடத்தினார்கள். அதற்குப் பிறகு டெக்கான் போராட்டம் வந்தது. அப்புறம் பஞ்சாப் போராட்டம் வந்தது. 1817-லே யாரும் ஒரு பூமியை வாங்கவோ விற்கவோ கூடாது என்று சட்டம் போட்டார்கள். இப்படி பல போராட்டங்கள் வந்த பின்னால் 1848-ல் வென்லாக் மெட்ராஸ் கம்பெனி கமிட்டி போட்டார்கள். ஜான் நெக்கல்சன் தலைமையில் கமிட்டி போடப்பட்டது. அந்த கமிட்டியால் விவசாயிகள் கடன் என்னவென்று பரிசீலனை செய்யப்பட்டது. ஆனால் ரிப்போர்ட் வரவில்லை. அதற்குப் பிறகு "பாங்க் என்குயரி கமிட்டி" போட்டார்கள். அந்த கமிட்டி—வட்டி என்ன, கடன் என்ன என்று இரண்டு சாராரையும் கேட்டு சமரசம் செய்யும் வகையில் ஒரு சமரச போர்டு ஏற்படுத்தப்பட்டது.

(பிற்பகல் 1-00 மணி)

ஆனால் அந்த போர்டை ஏற்படுத்தியவுடன் அங்கிருக்கக்கூடிய லேவாதேவிக்காரர்கள் பூராவும் சர்க்காருக்கு எதிராகக் கிளம்பினார்கள். உடனே அப்போது அதை வாபஸ் வாங்கிக் கொண்டார்கள்.

அப்புறம் 1929–30-ல் பெரிய பஞ்சம். விலைவாசி வீழ்ச்சி. விளைபொருள்களை வாங்குவார் இல்லை. இதன் காரணமாக விவசாயிகளுக்கு கடன் பளு அதிகமாயிற்று. இதன் காரணமாக 1935-இல் சத்யநாதன் என்பவரைக் கொண்டு ஒரு கமிட்டியைப் போட்டார்கள். இவரும் கூட எந்த அளவுக்கு ஸ்லம்ப் இருக்கிறது என்று அறிக்கை தந்தாரே தவிர மொத்தமுள்ள கடன் எவ்வளவு, இந்தக் கடனை என்ன செய்யலாம் என்பது பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

1943-ஆம் ஆண்டில் டி. வி. நாராயணசாமி என்பவரைப் போட்டு இதனைப் பரிசீலிக்கச் சொன்னார்கள். இவர் பூமுழுதும் பரிசீலனை செய்து [illegible] நூறு, எழுநூறு கோடி ரூபாய் கடன் இருக்கும் என்று ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்.

அதுமட்டுமல்ல, இந்தக் கடன் ஹெரிடிடரியாக—பரம்பரையாக வந்ததும் உண்டு. கிணறு வெட்ட கடன் பட்டதும் உண்டு.

[திரு. என். கே. பழனிசாமி] [1975 பிப்ரவரி 28

பொதுவாக ½ எக்கர் சொந்த பூமி உள்ள விவசாயி என்றால் அவன் உலகத்தையே கவனிக்கமாட்டான். நிலத்தை உழுவது, மாட்டை குளிப்பாட்டுவது, மாட்டுக்குத் தண்ணீர் காட்டுவது, என்று உலகத் தொடர்பு அற்று தன் காரியமாகவே இருப்பான். ரொம்ப கன்சர்வேடிவ். அவன் கடன் பட்டிருக்கிறான் என்றால் அதற்குக் காரணம் விவசாயத் தொழில்தான். உற்பத்தி செய்கின்ற பொருளில் அவனுக்குப் பங்கில்லை. உற்பத்தியாவதை லேவாதேவிக் காரர்கள் கொண்டுபோய் விடுகிறார்கள். அவன் சோர்வு அடைகிறான். ஆகையால் உணவு உற்பத்தியில் ஊக்கம் காட்டவில்லை. ஏராளமாக விளைந்தும் அவன் பட்டினியால் சாகிறான். இதை எல்லாம் சுட்டிக்காட்டி 1843-ஆம் வருடம் வெள்ளைக்காரன் காலத்திலேயே ஒரு அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் கிணறு வெட்டுவது சர்க்காரின் பொறுப்பு. யார் நிலம் என்று பார்க்காது—எங்கெங்கு சாகுபடிக்கு நிலம் இருக்கிறதோ அங்கெல்லாம் சர்க்காரே தம் பொறுப்பில் கிணற்றை எடுத்துக் கொடுத்து விவசாயிகளைச் சாகுபடிச் செய்யச் சொல்ல வேண்டும். அந்தக் கடனை விவசாயிகளின் பேரில் சுமத்தக் கூடாது. பாசன வசதியை ஏற்படுத்திக்கொடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பு—அதற்கான செலவை பல ஆண்டுத் தவணைகளில் விவசாயிகளிடம் இருந்து பெற ஏற்பாடு செய்ய வேண்டும் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

இன்று பெருவாரியாக விவசாயிகள் பட்டிருக்கிற கடன் எல்லாம் கிணறு எடுக்க வாங்கியதுதான். கிணறு வெட்ட வாங்குவது வெட்டிய கிணற்றில் தண்ணீர் கிடைக்காது. வெட்டி கட்டக்கூட முடியாது—திண்டாடுவது—இதன் காரணமாகத்தான் அவன் பல தொல்லைகளை அனுபவித்து வருகிறான்.

In the Report of the Economist for enquiring into Rural Indebtedness (1946) by Rao Bahadur Dr. B. V. Narayanaswamy Naidu in Chapter VIII general observations and Recommendations, it is said:

Any attempt at the eradication of this plight of debt, therefore, must not be superficial, concentrating solely on the financial aspect, but broad based and so well devised as to transform every adverse economic condition into a factor of utmost advantage. No half measure can ever wipe out the whole debt, and no more opportune moment can be found than the present because the onset of delayed post-war depression will come sooner or latter and is bound to tender the solution of this problem insuperably difficult. Simultaneously with a comprehensive measure for complete liquidation of debt, agricultural backwardness must be



attacked on all fronts with a view to making agriculture a surplus economy" Indian agriculture is labouring under several difficulties and handicaps without removing which no scheme of debt liquidation will ever be successfull."

இன்னும் 1933-ஆம் வருஷத்தில் ஜீவராஜ்மேத்தா பம்பாயில் பேசக்கூடிய காலத்தில் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற கடனை சர்க்காரே ஏற்றுக்கொண்டு படிப்படியாக இன்ஸ்டால்மெண்டில் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்.

1935-ஆம் வருஷம் நளினி ரஞ்சன் - விவசாயிகளுடைய கடன்களை எல்லாம் சர்க்காரே ஏற்றுக் கொள்ளவேண்டும். கடன் கொடுத்தவர்களுக்கு எல்லாம் சர்க்காரே பாண்டைக் கொடுத்து அந்த பாண்டுக்கு 4 சதவீதம் வட்டி என்று சொல்லி அதை 60 வருஷத் தவணையில் திருப்ப வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இதை எல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால் விவசாயிகளுக்கு கடன் பளு அதிகமாக இருக்கிறது. இதில் அரசாங்கத்திற்கு என்ன பொறுப்பு இருக்கிறது என்பதுதான். இந்தக் குறையைப் போக்க வேண்டுவது சர்க்காரின் முக்கியமான கடமையாகும். சராசரியாக யார்யாரிடம் எந்த அளவுக்கு விவசாயிகள் கடன் பட்டிருக்கிறார்கள் என்பதை ரூரல் சர்வே எடுத்துப் பார்த்தால் சர்க்காரிடம் இருந்து 8 சதவீதம், கூட்டுறவுகளில் இருந்து 3.1 சதவீதம், நிலச் சொந்தக்காரர்களிடம் இருந்து 1.5 சதவீதம், வர்த்தக பாங்குகளில் இருந்து 3.9 சதவீதம் (சொந்தக்காரர்களிடம் இருந்து 1.5 சதவீதம்) லேவாதேவிக்காரர்களிடம் இருந்து 69.7 சதவீதம், வியாபாரிகளிடம் இருந்து 5 சதவீதம் இப்படியாகப்பார்த்தால் பெரும்பாலான கடன் லேவாதேவிக்காரர்களிடம் தான். சர்க்கார் விவசாயிகளுக்குக் கடன் உதவி செய்ய பல ஏற்பாடுகளைச் செய்கிறோம் என்று சொன்னாலும் கூட சர்க்காரும் மற்றவர்களும் மொத்தக் கடனில் 20 சதவீதம் தான் உதவுகிறார்கள். பாக்கியுள்ள 80 சதவீதம் கடனை லேவாதேவிக் காரர்களிடம் இருந்தே தான் விவசாயிகள் பெற வேண்டிய நிலைமை இருக்கிறது. இந்த லேவாதேவிக்காரர்கள் 6 சதவிகிதம், 7 சதவிகிதத்திக்குக் கடன் வாங்கி 200 சதவிகிதம் அளவுக்குக்கூட விவசாயிகளுக்குக் கொடுக்கிறார்கள். அடமானம் எதுவும் கிடையாது. வெறும் கையெழுத்தைப்போட்டுக் கொடுக்க வேண்டியது - கடனைக் கொடுக்காவிட்டால் அது எதையும் அவர்கள் எழுதிக் கொள்ளலாம். பூமியைக் கிரயமாகக்கூட எழுதி வாங்கிக் கொண்டு கொடுக்கிறார்கள். இப்படி பலவிதமான தொல்லைகளுக்கு ஆளாகிற விவசாயிகளுக்கு நாம் நிவாரணம் கொடுக்க வேண்டாமா என்பதுதான் பிரச்சனை.

ரிசர்வ் பேங்க் கோவாபரேடிவ் பாங்குக்கு 4½ சதவிகிதம் வட்டிக்குக் கொடுக்கிறது. அது 6.6 சதவிகிதம் வைத்து கிராம சபைக்குப் போகிறது. அங்கே விவசாயிகளுக்கு 8.60 சதவிகிதத்திற்கு போகிறது,

இப்படி 4½ சதவிகிதம் வட்டி விவசாயிகளுக்குப் போகிற போது 8½ சதவிகிதமாகிறது. ஒரு சமயம் மழை பெய்யவில்லை என்றால் அந்தக் கடனை 12 சதவிகிதம் வட்டியில் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

சிறுசிறு விவசாயிகளுக்கு எல்லாம் உதவி செய்யப் போகிறோம் என்பதற்காக 1971-ல் பெரிய கொள்கையை வகுத்துக் கொண்டு நாஷனலைஸ்டு பாங்க் வித்அவுட் செக்யூரிட்டி கொடுத்துதவும் என்றார்கள் நடைமுறையில் இல்லை. 1973-74-ல் மொத்தம் இரண்டாயிரம் கோடி கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் விவசாயிகளுக்காக 200 கோடி கடன் ஒதுக்கப்பட்டிருக்கிறது. உண்மையில் 40 கோடிதான் விவசாயிகளுக்குப் போயிற்று. அந்த 40 கோடியும் விவசாயிகளுக்கு நேரிடையாகப் போகவில்லை. விவசாயிகள் பெயரால் வசதியுள்ளவர்களுக்குப்போய், அவர்கள் அதனை அதிக வட்டிக்கு விவசாயிகளிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். விவசாயிகள் பெயரால் கொடுக்கப்பட்டுள்ள பிறமி கடன்கள்தான் அதிகம். லேவாதேவிக்காரர்களேதான் அதனையும் குறைந்த வட்டிக்குத்தான் பெற்று, விவசாயிகளுக்கு இன்றைக்கு 200 சதவிகிதம் வட்டிக்குக் கொடுக்கிறார்கள். ஆகவே இன்றைய தினம் நில அடமான பாங்குகள் மூலமாகக் கொடுக்க 30 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள் என்றால் கடன் எவ்வளவு, 30 லட்சம் ரூபாய் எந்த அளவுக்குப் போதும் பாக்கிக்கு அவர்கள் தனிப்பட்ட லேவாதேவிக்காரர்களிடம்தானே போக வேண்டும். சர்க்கார் தரப்பில் கூட்டுறவுச் சங்கங்கள், நில அடமான பாங்க், நாஷனலைஸ்டு பாங்க் ஆகியவற்றின் மூலமாக இன்றைக்கு விவசாயிகளுக்குப் போதுமான கடன் அளிக்க சர்க்கார் முன்வரவில்லை என்பது என் குற்றச்சாட்டு.,கடன் கிடைக்கச் செய்யவேண்டும், விவசாயிகளுக்கு கடன் வராமல் இருக்க பாதுகாப்பு அளிக்க வேண்டும். இரண்டையும் செய்யவில்லை, இன்றைக்கு நாட்டில் குத்தகை முறையும் இருக்கிறது - பெரிய நிலக்காரர்கள் டிராக்டர்கள் வைத்து சாகுபடி செய்கிற முறையும் இருக்கிறது. ஆக விவசாயத்தில் செமிகலோனியம் முறை இருக்கத்தான் செய்கிறது.

இன்றையதினம் என்ன நிலைமை? உற்பத்தி பண்ணக்கூடிய பொருள் பூராவும் இன்டர்நேஷனல் மார்க்கட்டுக்குப் போகிறது. பருத்தியை எடுத்துக் கொண்டாலும்சரி, பாக்கி கடலையை எடுத்துக்கொண்டாலும் சணலை எடுத்துக் கொண்டாலும், உற்பத்தி பண்ணிய உடனே, வீட்டிலே வைத்திருக்க முடியாது. நெல் விளைந்தாலும் பருத்தி விளைந்தாலும், சர்க்கரை உற்பத்தி பண்ணினாலும் கொஞ்சம்தான் வீட்டிலே வைத்துக் கொண்டிருக்கிறோம். பாக்கியை எல்லாம் இண்டர்நேஷனல் மார்க்கெட்டுக்கு எடுத்துக்கொண்டு போகிறோம். இன்றைக்கு ஆயிரம் ரூபாய்க்குச் சர்க்கரையை உற்பத்தி செய்தால் ரூ. 2,500 ரூ. 3,000 க்கு விற்கிறார்கள். மத்திய சர்க்கார் ரூ. 8.000 க்கு மேலே



வெளிநாடுகளுக்கு விற்கிறார்கள். மத்திய சர்க்கார் ரூ. 8.000-க்கு விற்கிற சமயத்திலே விவசாயிகளுக்கு கிடைப்பதோ ரூ. 1,000 தான். ரூ. 1,000 கிடைக்குமென்றால் ரூ. 900 அளவுக்கு பூச்சி மருந்து இவையெல்லாம் அடித்தால் தான் அவனுக்கு இலாபம் வரும். ஆகவே எவ்வளவு செலவு பண்ணியும் விவசாயிக்கு இலாபம் இல்லை. He produces and perishes பருத்தியை எடுத்து கொண்டாலும் விலை இறங்கவில்லை, நெல் விலையை எடுத்துக்கொண்டாலும் இறங்கவில்லை, குவிண்டால் பருத்தி ரூ. 500-க்கு விற்கிறது. மத்திய சர்க்கார் வைத்திருக்கிற அளவு. மத்திய சர்க்காரின் இந்தக் கொள்கையின் காரணமாகத்தான் விலைவாசிகள் இப்படி இருக்கிற நிலையிருக்கிறது. பொதுமக்களுக்கு நியாயமான விலையில் கிடைக்கவில்லை. விவசாயிகளுக்கும் நியாய விலை கிடைக்க வில்லை. இன்றைக்கிருக்கிற விவசாய கொள்கையால் விவசாயிகளுக்குப் பிரயோஜனமில்லை, பொது மக்களுக்கு பிரயயோஜனமில்லை.

246 பார்லிமெண்ட் மெம்பர்கள் கையெழுத்துப்போட்டு கொடுத்திருக்கிறார்கள். உ.பி.லே சர்க்கரை ஆலைகளைசர்க்காரே எடுத்துக் கொண்டது. ஆந்திரப் பிரதேசத்திலே ஏகமனதாகத் தீர்மானம் போடப்பட்டிருக்கிறது சர்க்கரை மில்களை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நம் சர்க்காரும் எடுக்கலாம். என்ன தடை? எடுத்தால் சர்க்காருக்கு இலாபம் கிடைக்கும். ஜனங்களுக்கு இலாபம் கிடைக்கும். இதிலே, ஏதோ சதியிருக்கிறது.அதே மாதிரி டெகஸ்டைல் மில்கள், ஜனங்கள் உபயோகப்படுத்துகிற துணிகள் நியாயமான விலையில் கிடைக்க பெரிய பெரிய டெக்ஸ்டைல் மில்களை சர்க்கார் என் எடுத்துக்கொள்ளகூடாது?,அந்த மில்களுக்கு நிறைய பணம் வருகிறதே. அது சர்க்காருக்கு வராதா? அதே மாதிரி சணல்.

அதுமட்டுமல்ல விவசாயிதான் விற்கும்போதும் பணத்தையிழக்கிறான். அதே மாதிரி உரம், மற்றும் விவசாயிகளுக்கு வேண்டிய பொருள்களின் விலையெல்லாம் ஏற்றம் கண்டிக்கிறது. விவசாயி விற்கும்போதும் குறைந்த விலைக்கு விற்கிறான். வாங்கக்கூடிய பொருள்களையும் அதிக விலைக்கு வாங்குகிறான். கடலைக்கு, பருத்திக்கு, ரெகுலேட் மார்கெட் இருக்கிறது, வாங்குவதில் 10 சதவீதம் கமிஷன் கொடுக்கப்படுகிறது, ஆகவே பருத்தி அதிகவிலைக்கு விற்றாலும் அவர்களுக்கு கவலை கிடையாது. உண்மையான கவலை, சர்க்காருக்கு இருக்குமானால் பருத்தியை நியாய விலைக்கு கொள்முதல் செய்து மற்ற மில்களுக்குக் கொடுக்க முடியும். இப்பொழுது செய்கிறதா? ஆகவே தான் இந்தக் கடன் ஏற்படுகிறது. இன்றைக்கு இந்த மாதிரி சட்டம் வந்தாலும் கூட, தொடர்ந்து இந்த மாதிரி நிலையை மாற்றுமல் இருந்தால் இன்னும் மோசமாகும். ஆகவே, மத்திய அரசும், மாநில அரசும் விவசாயிகளுக்கு தகுந்த கொள்கையை ஏற்படுத்த வேண்டுமென்பதுதான் அவசரமும் அவசியமும் ஆகும்.

அது போக டெட் ரிலீஃப் ஆக்ட் இருக்கிறது. அது போதவில்லை. இந்தச் சபையிலே, 1938-ம் வருஷத்திலே இராசகோபாலாச்சாரியார் இருக்கும்போது கொண்டுவரப்பட்டது. மக்கள் அதை வரவேற்றார்கள். ஒவ்வோர்

ஊரிலிருந்தும் மலேயாவிலிருந்தும் சிங்கப்பூரிலிருந்தும் ஏராளமான பணம் கொண்டுவந்து, வட்டியைக் கொண்டு ஜீவித்திருந்த லேவாதேவிக்காரர்களுக்கு ஆத்திரமாயிருந்தது. ஒரு ஸ்ட்ரோக் ஆஃப் தி பேனிலே, முதலுக்குமேல் 2 பங்கு வட்டி கொடுத்திருந்தால், அந்தக் கடன் அடைந்ததாகும் என்று கொண்டு வரப்பட்டது. அது பெரிய ரிலீஃபாக இருந்தது. பல குடும்பங்கள் காப்பாற்றப்பட்டன.

நாம், 1970-லே ஒரு சட்டம் கொண்டு வந்தோம்., ரூ. 7,000-க்குக் குறைந்த வருமானமுள்ளவர்களுக்காக ஒரு சட்டம் கொண்டு வந்தோம். 1972-லே கடனை குறைப்பதற்காகச் சட்டம் கொண்டு வந்தோம். அதிலே என்ன குறைபாடு என்றால் 1972-க்கு முன்னாலே வாங்கிய கடனுக்கு தான் அந்தச் சட்டம் செல்லும். 1972-க்கு பின்னாலே என்ன நிலைமை? யாரும் கடன் கொடுக்கவில்லை. கோர்ட்டுக்கும் போகவில்லை. இந்தச் சட்டம் போகட்டும் என்று பார்த்தார்கள். ஆகவே இந்த சட்டத்தாலே எந்த விதமான பிரயோஜனமும் இல்லை. ஆகவேதான் நான் இப்போது ஒரு மசோதா கொடுத்திருக்கிறேன். இந்த ஒரு வருஷத்துக்குள்ளே கோர்ட்டிலே விண்ணப்பம் கொடுக்க வேண்டும்.

சர்க்கார் கொடுத்து வைத்திருக்கிற ஃபாரத்திலே கையெழுத்திட்டு, எனக்கு இவ்வளவு கடன் இருக்கிறது, இவ்வளவு முதல் இருக்கிறது என்று கொடுக்க வேண்டும். சட்டப்பிரகாரம் ஏற்கனவே ரூ. 20,000 வரையிலும் அந்தக் கடன் இருக்க கூடியவருக்குத்தான் அது பொருந்தும். ரூ. 20,000-க்கு மேல் கடன் இருக்கக்கூடியவர்களுக்கு இந்தச் சட்டம் செல்லாது. இப்பொழுதிலிருக்கக்கூடிய கடனைப் பாதியாக குறைப்பது. ரூ. 30,000 கடனை வாங்கியிருந்தால் ரூ. 15,000-ஐ தாமாக தள்ளிப் போடுவது. பாக்கியிருக்கக்கூடிய பணத்தை இன்ஸ்டால்மெண்டிலே கொடுக்க வேண்டும். அந்த இன்ஸ்டால்மெண்ட் எப்படி? எவ்வளவு வருமானம் அது? ரூ. 1,000 வருமானம் வருகிறதென்றால் ரூ. 750 கட்டவேண்டும். ரூ. 750-ஆம் எப்படிக் கணக்கு போடுவது என்றால் பையன் படிப்பதற்கு எவ்வளவு செலவு? தன் குடும்பத்திற்கு எவ்வளவு செலவு இதையெல்லாம் கழித்துவிட்டு 3/4 பங்கு கொடுக்க வேண்டும். இன்கம்டாக்ஸ் செலுத்தக்கூடியவர்களுக்கு அல்லது சேல்ஸ் டாக்ஸ் செலுத்தக் கூடியவர்களுக்கு இந்தச் சட்டம் பொருந்தாது.

அதுமட்டுமல்ல, இந்த மசோதாவிலே நியாயமான கடன் எவ்வளவு என்பதற்குத் தனியாக ஒரு போர்ட் வேண்டுமென்றிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் சேர்மேன் அல்லது பஞ்சாயத்து யூனியன் பிரசிடெண்ட் அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் இவர்களையும் கலந்து அக்ரிமெண்ட் செய்த பிறகு அவர்களிடம் விசாரணைக்கு வருகிறோம். கொடுத்த கடனில் இவ்வளவு கொடுத்தேன் இவ்வளவுதான் தரவேண்டுமென்ற டிஸ்பியூட் வந்தால் இந்தக் கமிட்டி விசாரித்து இரண்டு கட்சிகாரர்களையும் விசாரித்து, நியாயமான கடன் எவ்வளவு என்பதை அந்த கோர்ட்டுக்குச் சொல்ல வேண்டும்.





ஒருவன்மேல் பலபேர் கேஸ் போட்டிருக்கலாம் கடனுக்காக. பல கோர்ட்டிலே கேஸ் இருந்தாலும் அந்தக் கடன் கேஸ் பூராவையும், இந்தக் கோர்ட்டுக்கு கொண்டு வந்து, கன்சாலிடேட் பண்ணி விசாரணை செய்யவும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

மசோதாவிலே ரூ. 10,000 என்று கொடுத்திருக்கிறேன். 2 மாடு வாங்கினாலும், 3 மாடு வாங்கினாலும் ரூ. 10,000 ஆகிறது. ஆகவே, அந்த அமெண்டை ரூ. 20,000 திருத்த வேண்டும்.

பல விஷயத்திலே கடன் ஏற்படுகிறது. அதிலே சிங்கிங் வெல்ஸ் புதிதாகக் கிணறு வெட்டுவது, அல்லது அடிவெட்டுக் கிணறு ஆகியவற்றிற்கும் சேர்ந்து வருகிறது. ஆகவே இந்த முறையிலே சர்க்கார் இதிலே புரவிஷன் பண்ண வேண்டும். பிரவேட் மணி லெண்டர்ஸிடம் உள்ள பணம் அன்புராடகடிவ் மணி அவர்கள் சர்க்காருக்கு விற்பனை வரியும் செலுத்துவதில்லை. சர்க்காருக்கும் தெரியும்.

புரோ நோட் பூராவும் ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டும் என்று போட வேண்டும். எப்படி இன்கம் டாக்சுக்கு ரெய்ட் போலீசாரால் செய்யபடுகிறதோ அதைப் போன்று சந்தேகப்பட்டால் இவர்களிடத்திலும் போலீசார் ரெய்ட் பண்ணுவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

அதேமாதிரி சிட் பண்ட்ஸ் நிறைய இருக்கின்றன, சர்க்கார் ஏதோ சட்டம் கொண்டுவரப் போவதாகச் சொன்னார்கள். கிராமங்களிலேகூட அண்டா சீட்டு, பவுன் சீட்டு என்று சொல்லி மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவற்றை ஒழித்துவிட்டு சர்க்காரே நடத்தினால்கூட பரவாயில்லை. அவற்றை ஒழித்தாக வேண்டும்.

கடன் கொடுத்தார்கள் என்றால் ரீபேமெண்ட் 20 இன்ஸ்டால்மெண்ட் என்று போடப்பட்டிருக்கிறது. குழந்தைகளின் படிப்புச் செலவு, குடும்பச் செலவுகள் இவை யெல்லாம் போக மீதம் இருக்கக்கூடிய வருஷ வருமானத்தில் நாலில் மூன்று பங்கு என்பதுதான் அது. லேண்ட் மார்ட்கேஜ் பாங்குகள் கோஆபரேடிவ் பாங்குகள் இவைகள் எல்லாம் கடன்கள் பத்து வருஷத்தவணையில் கொடுத்திருந்தாலும் கூட அதை 20 வருஷம் என்று ஆக்க வேண்டும். இப்போது வறட்சி இருக்கிறது, வறட்சி நிலைமையிலும் பத்து வருஷத் தவணையாக இருந்தாலும் 20 வருஷமாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அவசரச் சட்டத்திலே எல்லோருக்கும் விதிவிலக்குக் கொடுக்க வேண்டும். குத்தகைக்காரர்கள் இருக்கிறார்கள், கோயில் பூமியை குத்தகைக்கு எடுத்து இருக்கும் குத்தகைதாரர்கள் இருக்கிறார்கள், அதிலே ஒரு ஏக்கருக்கு 13 கலம் விளைகிறது, அவர்கள் கிடைப்பதைப் பூராவும் எப்படி கொடுக்க முடியும்? ஆகவே அவர்களுக்கு விதிவிலக்கு கொடுக்க வேண்டும்.

இப்போது சர்க்கார் ஒரு வருஷம் தான் ஒத்திவைத்திருக்கிறது. ஆனால் வருஷா வருஷம் வட்டி கொடுக்க வேண்டும். வட்டி சரியாகக் கொடுக்காவிட்டால் பெனல்டி என்ற முறையில் 30 சதவீதம்

தாவேண்டியிருக்கிறது. இந்த நிலைமையைப் பார்த்தால் அந்தச் சட்டம் கொண்டு வராதிருந்தால் கூட பரவாயில்லை என்று தெரிகிறது. இன்னும் இரண்டு வருஷத்திற்குச் சேர்த்து தள்ளி வைத்திருக்க வேண்டும். இன்றைக்குப் பஞ்சம் வறட்சி வந்திருக்கிறது. இந்த நிலைமையிலே விவசாயிகள் எழுந்து இருந்து 10 வருஷங்கள் ஆகும், ஆகவே மாரட்டோரியத்தை 2,3 ஆண்டுகள் எக்ஸ்டண்ட் பண்ண வேண்டும். சர்க்கார் இதை யெல்லாம் செய்யவேண்டும். நாங்களும் சயின்டிபிக் சோஷலிஸத்தில் நிற்கிறோம். நீங்களும் அதிலே நிற்கிறீர்கள் அதை நடைமுறைப்படுத்தாமல் நீங்கள் போய்விடக் கூடாது. ஆகவே இந்தச் சபையிலே இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, திரு. என். கே. பழனிசாமி அவர்கள் கொண்டு வந்த மசோதாவை ஆதரித்து சில விவரங்களை சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

இன்று விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற மக்கள்—பழமொழி கூடச் சொல்வார்கள் கடனிலே பிறந்து, கடனிலேயே வாழ்ந்து, கடனிலேயே இறந்து அவர்களுடைய குழந்தைகளுக்கும் கடன்களை விட்டுச் செல்லுகிறார்கள் என்று அந்த முறையிலே தொடர்ந்து கடன்களில் அவர்கள் இருந்து வருகிற நிலைமைதான் பார்க்கிறோம். தொடர்ந்து 30, 40 ஆண்டுகளுக்கு முன்னாலேயிருந்து பலவிதமான சட்டங்கள் மத்திய, மாநில சர்க்கார்கள் கொண்டு வந்திருக்கிறது இதற்குப் பின்னாலே 193.-ஆம் ஆண்டிலே ராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே கூட கடன் நிவாரணச் சட்டம் கொண்டுவந்தார்கள். அதனால் ஓரளவு நிவாரணம் கிடைத்தது. இத்தகைய நிவாரணங்கள் அளிக்கப்பட்டும் கூட அதன் பின் சட்டங்கள் கொண்டுவரப்பட்டுங்கூட மக்களுக்கு உண்மையிலேயே, நிவாரணம் அளிக்கக்கூடிய முறையிலே இல்லை. நடவடிக்கைகள் பூராவும் பயனளிக்கவில்லை. பலவிதமான கூட்டுறவுச் சங்கங்கள், வங்கிகள், மூலமாக உள்ள கடன்களை பொறுத்த வரையிலும் கூட இப்படிப்பட்ட ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நாங்கள் எத்தனையோ முறைகள் சொல்லியும்கூட நடவடிக்கைகள் எடுக்கவில்லை.

1937-ஆம் ஆண்டிலே கொண்டு வந்தார்கள் என்றால் அந்த நிலைமை வேறு, இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமை வேறு. 100 ரூபாய் கடன் கொடுத்துவிட்டு 500 ரூபாய்க்கு தஸ்தாவேஜு எழுதி வாங்குகிறார்கள் 1000 ரூபாய்க்கு 2000 ரூபாய்க்கு தஸ்தாவேஜு எழுதி கேட்கிறார்கள் இன்றைக்கு 100க்கு 120 சதவீதம் வட்டி கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது என்பது நம் எல்லோருக்கும் தெளிவாகத் தெரியும். கிராமங்களிலே உள்ள விவசாயிகள் எப்படியாவது கடனை வாங்கித்தான் விவசாயம் செய்யவேண்டியிருக்கிறது. மழை பெய்துவிட்டால் போதும், உரம் வாங்க வேண்டும், விதை வாங்கவேண்டும், எப்படியாவது கடனை வாங்கித்தான் விவசாயம் செய்யவேண்டியிருக்கிறது.



1972-ஆம் ஆண்டிலே கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வந்தார்கள். அப்போதே நாங்கள் சொன்னோம். நாம் வசிப்பது 1937-இல் அல்ல என்று. 1972-இல் சட்டம் கொண்டு வந்தார்கள். சட்டம் கொண்டுவந்தும் கூட கோர்ட்டிலே போட்டால் தஸ்தாவேஜிலே கையெழுத்து போட்டிருக்கிறார்கள். ஆகவே 2 ஆயிரம் ரூபாய் வாங்கவில்லையென்று சொன்னாலும் ரிக்கார்டு 2 ஆயிரம் ரூபாய் என்று இருக்கிறது என்று டிகிரி கொடுத்துவிடுகிறார்கள். ஆகவே 500 ரூபாய் உண்மையிலேயே கடன் வாங்கியிருந்தாலும் 2 ஆயிரம் ரூபாய் அளவிற்குப் போய் அது பிறகு மவுண்ட் செலவு, வக்கீல் பீஸ் எல்லாம் சேர்ந்து மூவாயிரம் ரூபாய்க்குப் போய்விடுகிறது. நாங்களே சில கேஸ்களிலே தீர்த்து வைத்திருக்கிறோம். லேவாதேவிக்காரர்கூட 500 தான் கொடுத்தேன் என்கிறான். கொடுக்கக்கூடிய நேரத்திலே கொடுக்க வேண்டிய நேரத்திலே கொடுக்கவில்லை, சட்டம் பேசுகிறார்கள், 2 வட்டி என்று சொல்லியிருக்கும்போது கோர்ட் ரேட்படி தான் வட்டி கொடுப்பேன் என்று சொல்கிறார்கள், அதனால் கோர்ட்டுச்குப் போய் வாங்கவேண்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்தச் சட்ட மன்றத்திலே திரு. மாதவன் அவர்கள் கொண்டுவரப் போவதாகச் சொன்னார்கள். இதுவரையில் கொண்டுவரவில்லை. கொடுத்தவரும் 500 ரூபாய் கொடுத்ததாகத்தான் சொல்கிறார், வாங்கியவரும் 500 வாங்கியதாகத்தான் சொல்கிறார், கோர்டிலே 1000 ரூபாய் என்று சொல்லி வக்கீல் பீஸ் மவுண்ட் செலவு எல்லாம் சேர்ந்து 1,500 ரூபாய் வரையிலே கொடுக்க வேண்டியிருக்கிறது. இப்படி கொடுக்கல் வாங்கல் பல இடங்களிலே நடைபெறுகிறது. கடன் கொடுத்தவரே கடன் இவ்வளவு கொடுத்தேன் என்பதை நிரூபிக்கும்படி சட்டம் கொண்டுவரவேண்டும். இன்றைக்குள்ள சட்டப்படி வாங்கியவர்தான் நிரூபிக்க வேண்டிய நிலை இருக்கிறது. கொடுத்தவர் நிரூபிக்க வேண்டியதில்லை என்று இருக்கிறது. அதை மாற்றி குறிப்பு பேரேடு இவைகளை வைத்துக்கொண்டு கொடுத்தவர் நிரூபிக்க வேண்டுமென்று சட்டத்தைக் கொண்டுவரவேண்டும். கடன் வாங்கியவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்று சொன்னால் அந்த நிலைமையை ஏற்படுத்த வேண்டும்.

500 ரூபாயைக் கொடுத்துவிட்டு 2,000 ரூபாய்க்கு வசூல் செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. ராஜாஜி அவர்கள் சட்டம் அன்றைக்குக் கொண்டுவந்தார்கள். அதன்படி எங்கள் வட்டாரத்திலே எனக்குக்கூட தெரியும், 10 குடும்பங்கள் மூழ்கிவிட்ட குடும்பங்கள் நிமிர்ந்துவிட்டன, 20 வருஷங்களுக்கு வட்டி செலுத்திக் கொண்டு வந்தாலும் கடன் தீராது என்ற நிலைமை இருந்தபோது வட்டியை வரவு வைத்துக் கொண்டு வந்தாலே போதும். 1,000 ரூபாய் கடன் என்றால் வருஷத்துக்கு 120 ரூபாய் வட்டி செலுத்திக்கொண்டே வந்தாலும்கூட கடன் அப்படியே இருக்கும், வட்டியாகவே செலுத்தியிருந்தால் போதும் என்று சட்டம் கொண்டு வந்தால் கடனை கொடுக்காமல் நிலத்தை யெல்லாம் அவர்கள் மீட்க முடிந்தது.

ஆனால் மாதவன் அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டுவரும்போதே சொன்னோம். கேட்கவில்லை. கடன் கொடுப்பது ஒரு தொகை கையெழுத்து வாங்குவது ஒரு தொகைக்கு, வட்டி சொல்வது ஒன்று ஐந்தரை சதவீதம் ஆனால் எழுதி வாங்குவது 12 சதவிதம். இப்படியெல்லாம் நடக்கிறது, உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டுமானால் தாலுகா போர்டு போன்ற போர்டு அமையுங்கள், அந்த போர்டு மூலமாக கொடுத்தவர் எவ்வளவு கொடுத்தார் என்பதைக் கண்டுபிடிப்பதற்காக அவருடைய கணக்கு, குறிப்பு பேரேடு இவைகளை யெல்லாம் பார்த்து கண்டுபிடிக்க வேண்டும்............

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் அடுத்து வருகின்ற தனியார் அலுவல் நாளில் தொடர்ந்து பேசுவார்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவோடு முடிவுற்று நாளை காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம். பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

## 5. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A Statutory Rules and Orders.*

94. Notification issued in G. O. R. No. 670, commercial Taxes and Religious Endowments, dated the 30th November 1974, in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharges on the film shows conducted by the information and Public Relations Department of the Government of Tamil Nadu for the benefit of children at the Kalaivanar arangam, Madras [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939].

95. Notification issued in G. O. Ms. No. 598, Commercial Taxes and Religious Endowments, dated the 20th November 1974 in regard to amendment to Revenue Depatrment Notification II-I No. 1061, and 1431 of 1965 published at pages 1-6 and 588-593of "part II—Section 1 of the Tamil Nadu Government Gazette, dated 15th March and 31st March 1965 respectively. [Laid on the table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and conversion into Ryotwari Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963].

96. Notification issued in G. O. Ms. No. 451, Co-operation dated, the 8th August 1974, in regard to an amedment to the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act 1961 (Tamil Nadu Act 53 of 1961].



97. Notification issud in G.O. Ms. No. 456, Co-operation, dated the 8th August 1974 in regard to an amedment to the Tamil Nadu Co-operative Societies Rules 1963. [Laid on the Table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961].

98. Notification issued in G. O. Ms. No. 453, Co-operation dated, the 8th August 1974, in regard to an amedment to the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961].

### *B. Reports, Notifications and Other Papers.*

@ 28. The Tamil Nadu Contingency Fund (Amendment) Bill, 1975 (L. A. Bill No. 1 of 1975).

TAMIL NADU
61186

@ Despatched to members on 27th February 1975.

# தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவை

## சனிக்கிழமை, 1975 மார்ச் 1

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

#### பாட நூல்கள் தயாரிப்பு

*121 வினா.—திரு. என். இட்டப்பா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் மூலம் 1974 ஜூலை முடிய கல்லூரிக்கான பாடநூல்கள் எத்தனை வெளி வந்துள்ளன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்; 322 மூல நூல்கள், 26 தமிழாக்க நூல்கள் ஆக மொத்தம் 348 நூல்கள் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

திரு. என். இட்டப்பா : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்தின் மூலம் வெளியிடப்படும் புத்தகங்கள் அரசாங்க அச்சகங்களிலேயே அச்சிடப்படுகின்றனவா? அரசாங்க அச்சகத்தின் மூலமாக மட்டும் இல்லாமல், வேறு அச்சகங்களின் மூலமாகவும் வெளியிடப்படுகின்றனவா? அப்படியானால், வெளி அச்சகங்களில் அச்சிடாமல் அரசாங்க அச்சகங்களிலேயே அச்சிட்டு வழங்க இனிமேலாவது அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இவை அரசு அச்சகத்திலும், வெளி அச்சகங்களிலும் அச்சிடப்படுகின்றன. எல்லாப் புத்தகங்களையும் நாம் அரசு அச்சகத்திலேயே அச்சிடுவதென்பது இயலாது. வெளி அச்சகங்களில் அச்சிடுகின்றபோது அந்தந்த அச்சகங்களின் தன்மைகள், மற்றவைகள், அவர்கள் அச்சிடுவதற்குக் கேட்கின்ற கூலி, இவைகளையெல்லாம் கவனிப்பதற்குக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவினுடைய ஆலோசனையின் பேரில் இவையெல்லாம் நடைபெறுகின்றன. அக்குழுவில் அரசாங்க அச்சகத்தினுடைய இயக்குநர் அவர்கள் முக்கிய உறுப்பினராக இருந்து நமக்கு ஆலோசனை கூறி வருகிறார்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, பாட நூல்களை அச்சிட்டு வெளியிடுவதில் காலதாமதம் ஆவதாகச் சொல்லப்படுகிறதே அது உண்மையா? கால தாமதத்தைத் தவிர்க்க அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இரண்டு மூன்று ஆண்டுக் காலமாக அப்படிப்பட்ட கால தாமதம் ஏற்படுவதில்லை. ஏனென்றால், இப்பொழுது மே திங்களுக்குள்ளேயே, தேவைப்படுகிற நூல்களை அச்சிட்டு மாவட்டங்களுக்கு அனுப்பி வைத்து விடுகிறோம். சென்ற இரண்டு மூன்று ஆண்டுக் காலமாக இத்தகைய குறைபாடு இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சட்டக் கல்லூரிக்கு வேண்டிய புத்தகங்கள் போதுமான அளவுக்கு இருக்கின்றனவா? அப்படியானால், அவை எவை என்று அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஒரு சில நூல்கள் இருக்கின்றன. அவற்றின் விவரக் குறிப்புகள் இல்லை தனிக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கலாம்.

திரு. கு. காமாட்சி: தலைவர் அவர்களே, வெளியிடப்பட்ட பாட நூல் ஒன்றில் மறவர் இனத்தை மிகக் கேவலமாக இழிவுபடுத்தி எழுதி இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது அரசுக்குத் தெரியுமா? அதை நிவர்த்திக்க அரசு ஏதாவது முயற்சி எடுத்துக் கொண்டதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, சங்க இலக்கியங்களிலும் மற்றவைகளிலும் மறவர், மறத்தியர் என்ற சொற்களுக்கு ஏற்றபடி செய்யுட்களெல்லாம் வரும். அந்தச் செய்யுட்களுக்கு உரையாசிரியர் அளித்திருக்கும் பொருளை வைத்துத்தான்—ஐந்தாவதுக்குரிய பாடப்புத்தகத்தில் என்று நினைக்கிறேன்—அதிலே மறவர்-மறத்தியர் என்ற சொற்களுக்கு விளக்கங்கள் இருக்கின்றன. அப்படிப் பட்ட செய்யுட்கள் இருப்பதால் இப்பொழுது குறைப்பட்டுக் கொள்ள வேண்டியதில்லை. நாம் எல்லோருமே ஒரு காலத்தில் உடை அணியாமல் இருந்தோம், காட்டுமிராண்டிகளாக இருந்தோம்—பச்சை மாமிசம் தின்றோம் என்று எழுதப்பட்டிருப்பதற்காக இப்பொழுது கோபித்துக்கொள்ள வேண்டியதில்லை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த பழக்க வழக்கங்களை எழுதும்போது, இப்பொழுதும் அதே சொல் வருகிறது என்பதற்காகச் சினந்து கொள்ள வேண்டியதில்லை. என்றாலும், அப்படிப்பட்ட எண்ணம் வர வேண்டாம் என்பதற்காக மறவர்-மறத்தியர் என்ற சொற்கள் இப்பொழுது நீக்கப்பட்டு 'எயினர்' 'எயிற்றியர்' என்று ஏற்ற சொற்கள் போடப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் திருத்தி அச்சிடப் பட்டு எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது மூன்றாண்டுக் காலமாக அப்படியொன்றும் தாமதமாகவில்லை என்று சொன்னார்கள். பி.யு.சி.-யில்



மூன்று மாதங்கள் கழித்துக்கூட பாட நூல் கிடைக்காமல், அந்த வகுப்பில் பாடம் நடத்த முடியாமல் தடைப்பட்டிருக்கிறது. கோவை போன்ற இடங்களில் உள்ள கல்லூரிகளில் அப்படிப்பட்ட ஒரு நிலைமை காரணமாக மாணவர்கள் சிரமப்பட்டிருக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அமைச்சர் அவர்கள் அதற்கு என்ன பதில் சொல்லுகிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, துவக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றுக்கான பாட நூல்களைப் பற்றி பொதுவாகக் குறிப்பிட்டேன். கல்லூரிகளைப் பொறுத்த வரையில் இருக்கிற நூல்களை நாம் அச்சிட்டு, இன்னும் செல்வாகாமல் கூட இருக்கின்றன. பல்வேறு தலைப்புகளில் 800 சில்லறை புத்தகங்களை இப்பொழுது தமிழில் மொழிபெயர்த்து, தமிழாக்கம் செய்து வைத்திருக்கிறோம். சில குறிப்பிட்ட நூல்கள் மறுபதிப்பு செய்து வெளியிடப்பட்டிருக்கின்றன. ஏதேனும் ஒரிரு நூல்கள் போதாமல் குறைபாடு இருக்கலாம். அப்படி ஏற்பட்டிருந்தாலுங்கூட தேவை என்னும்போது மறுபதிப்பு செய்து உடனே வெளியிடும் ஒரு முறையைத்தான் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் மேற்கொண்டிருக்கிறது.

திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, மாணவர்களுக்குத் தேவையான அயல்நாட்டு ஆங்கில புத்தகங்களையும் இந்த பாட நூல் நிறுவனம் வெளியிடுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அயல்நாட்டு நூல்களையும் மொழிபெயர்த்துத் தமிழாக்கம் செய்யும் வகையிலும் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் முயற்சி மேற்கொண்டு வருகிறது. அப்படித் தமிழாக்கம் செய்யப்பட்ட நூல்கள் பல இருக்கின்றன.

*122 *Q*.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether the publishers of books and magazines and also text book publishers have been affected by the increase in prices of papers; and

(*b*) if so, the steps taken by the Government thereon?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம். நோட்டுப் புத்தகங்களும் பாடப்புத்தகங்களும் வெளியிடுவோர் காகித விலை உயர்வினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(ஆ) மத்திய அரசு கல்வி சம்பந்தமான தேவைகளுக்காக வெள்ளை நிற காகிதத்தை நாங்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் நியாய விலையில் வழங்கிவருகிறது. இக்காகிதத்தை இதற்கென்றே ஏற்படுத்தப்பட்ட மாநிலக்குழு முறையே பகிர்ந்தளிக்கும். இம்மாநிலத்தில் இக்குழு செயல்பட்டுவரும் காகிதத்தை பகிர்ந்தளிக்க ஏற்பாடுகள் செய்துள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, காகிதப்பற்றாக்குறையை ஏற்படுத்தி, அதிகமான விலைக்கு வியாபாரிகள் விற்பது சர்க்காருக்கும் தெரியுமா? அதிக விலைக்கு விற்கப்படுவதைத் தவிர்க்கும் வகையில் சர்க்காரே பாடப் புத்தகங்களை வெளியிடுவதற்கு ஏன் முயற்சி செய்யக்கூடாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, காகித விலைக் கட்டுப்பாடு ஏற்பட்டதன் காரணமாக, பாட நூல்கள் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயன்படக்கூடிய வகையில் புத்தகங்கள் எழுதி வெளியிடுவதற்கு வேண்டிய காகிதத்தை இந்திய அரசிடமிருந்து பெற்றோம். எந்த எந்த வகையில் அந்தக் காகிதத்தை விநியோகிப்பது என்பதற்கு தனிக்குழு—11 பேர் கொண்ட குழு—அமைக்கப்பட்டிருக்கிறது. கல்வித் துறைச் செயலாளர்தான் அதற்குத் தலைவராக இருக்கிறார். மேற்கொண்டு பத்து பேர் குழுவில் இருக்கிறார்கள். தமிழ்ப்பாட நூல் நிறுவனம் வெளியிடும் நூல்களுக்கும், நோட்டுப்புத்தகங்கள் அச்சிடுவதற்கும் தனித் தனியாக காகிதம் ஒதுக்கித் தருகிறார்கள். விலை இவ்வளவுதான் என்றும் நிர்ணயித்திருக்கிறோம். இந்த ஆண்டில்கூட ஆலையிலிருந்து காகிதம் உற்பத்தியாகி வருகிறவரை அவர்கள் குறைந்த விலையில் நோட்டுப்புத்தகங்கள் தயாரித்துத் தரலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நோட்டுப் புத்தகங்கள் குறைவாக இருப்பதனால் அவற்றையும் உருவாக்கித் தாருங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். இப்பொழுது நாம் ஏற்பாடு செய்திருப்பதன் காரணத்தால் ஓரளவு விலை கட்டுப்பாட்டோடு நோட்டுப்புத்தகம் விற்க வேண்டிய நிலைமை இருக்கிறது. தனியாரும் குறிப்பிட்ட விலைக்குத்தான் விற்கவேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறோம். மீறுகிறவர்கள் மீது நடவடிக்கை எடுக்க நமக்கு உரிமை இருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, நமக்குத் தேவையான பாடப் புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள் போன்றவைகளுக்கு வருஷந்தோறும் எவ்வளவு காகிதம் தேவைப்படுகிறது என்று மதிப்பிடப்பட்டிருக்கிறதா? அப்படி மதிப்பிட்டிருக்கிற அளவுக்கு நமக்குக் காகிதம் இங்கேயிருக்கும் காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலையிலிருந்து பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? விலை ஏற்றம் காரணமாக மாணவர்கள் பாதிக்கப்படுவதால், பாடப் புத்தகங்களையும் நோட்டுப்புத்தகங்களையும் குறைந்த விலையில் தர அரசாங்கம் ஏதாவது இதற்கு மானியம் அளிக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கூடுமானவரையில் நாம் வெளியிடுகின்றவைகளில் அதிக லாபம் இல்லாமலும், அதிக நஷ்டம் ஏற்படாமலும் வெளியிடுவதற்கான முயற்சி இருந்து வருகிறது. இது விஷயத்தில் இந்திய அரசோடு ஒப்பந்தம் செய்துகொண்டு நமக்குக் காகிதம் தரவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். முதல் காலாண்டில், அதாவது ஜூலை-செப்டம்பர் 1974-இல் 2,404 டன்களும், இரண்டாவது காலாண்டில், அதாவது அக்டோபர்-டிசம்பர் 1974-இல் 2,574 டன்னும், நாம் கேட்ட அளவுக்கு—மத்திய அரசு இந்த மாநிலத்திற்குத்





தேவையான காகிதம் தந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்திற்கு 1,424 டன்களும், மெட்ராஸ் பேப்பர் அண்டு போர்டு கன்வர்ட்டர்ஸ் அசோசியேஷனுக்கு 580 டன்களும், பப்ளிஷர்ஸ் அஸோஸியேஷன் ஆப் சவுத் இந்தியாவிற்கு 400 டன்களும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆக மொத்தம் 2,404 டன்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அடுத்த தடவை 2,574 டன்கள் வந்திருக்கின்றன. அதில், மெட்ராஸ் பேப்பர் அண்டு போர்டு கன்வர்ட்டர்ஸ் அசோஸியேஷன் ஃபார் மானுபாக்சர் ஆப் எக்ஸர்ஸைஸ் புக்ஸுக்கு 920 டன்களும், பப்ளிஷர்ஸ் அசோஸியேஷன் ஆப் சவுத் இந்தியாவுக்கு 580 டன்களும், தமிழ்நாடு டெக்ஸ்ட் புக் சொஸைட்டிக்கு 700 டன்களும், ரிசர்வ் வைத்துக்கொண்டு, எக்ஸர்ஸைஸ் நோட்டுப் புத்தகங்களாக மாற்றுவதற்காக பல்லார்பூர் மில்லுக்கு 300 டன்களும், அரசுத் தேர்வுக் கமிஷனுக்கும், தொழிற்கல்வி இயக்குநருக்கும் விநியோகிக்கப்படுவதற்கு 74 டன்களும் ஒதுக்கப்பட்டன. 11 பேர்கள் கொண்ட குழு ஆராய்ந்து இந்தப் பங்கீட்டைச் செய்கிறது. இப்பொழுது அதிலே இடர்ப்பாடு எதுவும் இல்லை. கொஞ்சம் அதிகம் தரவேண்டுமென்று மறுபடியும் மத்திய அரசை நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் திடீரென்று காகிதத்தின் விலையை மூன்றுமடங்காக ஏற்றியதால் தான் இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் குறைந்த விலையில் நோட்டு புத்தகங்களை கொடுப்பதாக கூறினார்கள். ஆனால் நாம் ஒதுக்கும் காகிதம் எவ்வளவு நோட்டு புத்தகங்கள் தேவையோ அதில் 30 சதவிகிதம்தான் கிடைக்கிறது. மீதியை வெளி மார்க்கெட்டிலிருந்து தான் வாங்க வேண்டியதாக இருக்கிறது. அதை கட்டுப்படுத்தலாமென்று சொல்கிறார்கள். அதிக விலை கொடுத்து வாங்கி நஷ்டத்திற்கு யாரும் வியாபாரம் செய்யமாட்டார்கள். மேலும் சட்டமன்ற உறுப்பினர்கள் வாங்கி படிக்கிற நாள் இதழ்கள், வார இதழ்கள் ஆகியவைகள் இரண்டு மடங்கு, மூன்று மடங்கு விலை ஏறிவிட்டன. அவைகளை வாங்கி படிக்கக்கூட முடியவில்லை. மாதம் ஒன்றுக்கு அதற்காக சட்டமன்ற உறுப்பினருக்கு 150, 160 ரூபாய் வரையில் ஆகிறது. ஆகவே, இதையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு காகிதத்தின் விலையை கட்டுப்படுத்தி இன்னும் குறைக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை வற்புறுத்துமா? அதேபோல் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நாள் இதழ்கள் வார இதழ்கள் ஆகியவற்றை அரசாங்கம் வாங்கிக்கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்தக் காகித விலையானது இந்தியாவில் மட்டுமல்ல, அகில உலக அரங்கிலேயே பல மடங்கு ஏறி இருக்கிறது. அதையொட்டித்தான் இந்தியாவிலேயும் ஏறி இருக்கிறது. வெளி மார்க்கெட்டிலே வாங்கும்பொழுது அதிக விலைக்கு வாங்குகிறார்கள், அதனால் அதிக விலைக்கு நோட்டு புத்தகங்களைத் தர வேண்டியதாக இருக்கிறது. ஆகவே, மத்திய அரசாங்கத்திடம் கல்வித் துறைக்கு என்று குறிப்பிட்ட கோட்டா ஒதுக்க வேண்டுமென்று குறிப்பிட்டோம். அவர்கள் நம்முடைய தேவை முழுவதையும் தரவில்லை என்றாலும், இரண்டு குவார்ட்டரில் முதலில் 2,404 டன்னும் பிறகு 2,574 டன்னும் வழங்கியிருக்கிறார்கள். மேலும் வழங்க வேண்டுமென்று கூறியிருக்-

கிறோம். விலையை கட்டுப்படுத்துவது என்பது நாம் கொடுக்கும் தாளிலே உருவாக்குபவைகளைத்தான் இன்ன விலைக்கு விற்க வேண்டுமென்று வற்புறுத்த முடியும். ஆனால் அதிக விலைக்கு வாங்கி அந்த நோட்டு புத்தகங்களைத் தயாரித்து அதிக விலைக்கு விற்றால் அதைத் தடுப்பதற்கு இல்லை. கல்வித் துறை சம்பந்தமான நோட்டு புத்தகங்களையும் மற்றவைகளையும் உருவாக்கத்தான் இந்தத் தாள் வாங்கப்படுகிறது. இதை மேலும் அதிகப் படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

சட்ட மன்ற உறுப்பினர்களுக்குக் கொடுப்பது இந்தத் துறையிலே வராது. தனியாகத்தான் இப்பொழுது கொடுத்துக்கொண்டு வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நாள் இதழ்களையும் மற்றவைகளையும் கொடுப்பது என்ற நிலை இல்லை. அவர்கள் எழுத காகிதமும், மற்றவைகளும் தரப் படுகின்றன. அதைத் தாராளமாக வாங்கிக்கொண்டு வருகிறார்கள்.

## மாமல்லபுரத்தில் ஒலி, ஒளிக் காட்சி.

*123—வினா—திரு. கா. வேழவேந்தன்:—

திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாமல்லபுரத்தில் ஒலி, ஒளிக் காட்சி அமைக்கும் திட்டம் கால தாமதம் ஆவதேன்?

(இ) இது எப்போது நிறைவேறும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) and (இ) மாமல்லபுரத்தில் ஒலி, ஒளிக்காட்சி அமைப்பது பற்றிய கருத்து இந்திய அரசின் பரிசீலனையில இருந்தது. அத்திட்டத்தைக் கைவிட்டதாக அண்மையில் இந்திய அரசு அறிவித்துள்ளது. அதற்குப் பதிலாக இந்திய அரசு வண்ணத் திரைப்படம் ஒன்று தயாரிக்க உத்தேசித்துள்ளது. இத் திரைப்படத்தில் பல்லவர்களின் வரலாறு, அவர்களது கலை, கட்டிடக் கலை, ஆகியவைப் பற்றி விளக்கப்படலாம்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, டெல்லியிலே உள்ள செங்கோட்டைச் சுவர்களை வைத்தே அருமையாக ஒலி, ஒளிக்காட்சியில் அமைத்திருந்தார்கள். ஆனால், கல்லெல்லாம் கவி பாடும் சிற்பங்கள் நிறைந்த மாமல்லபுரத்தில் எப்படியும் ஒலி, ஒளிக்காட்சியினை ஏற்படுத்த மத்திய அரசு முனையாவிட்டாலும் மாநில அரசாவது ஒரு திட்டத்தினை உருவாக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மத்திய அரசை நாம் வற்புறுத்தி வருகிறோம். மத்திய அரசும் முதலிலே மதுரையில் மீனாட்சியம்மன் கோயில் மண்டபத்திலே வைக்கலாம் என்று ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆனால் இந்து மகாசபையைச் சேர்ந்த ஒரு சிலர் அதற்கு ஆட்சேபனை தெரிவித்தார்கள் என்ற சாக்கை சொல்லி அதை



மகாபலிபுரத்திற்கு மாற்றுவதாகச் சொன்னார்கள். ஆனால் மதுரையிலே உள்ள மண்டபத்தில் வைப்பதை பொருத்த வரையில் வைக்கலாம், யாரோ ஒரு சிலர் எதிர்ப்பதற்காக மதுரையிலேயிருந்து மாற்ற வேண்டிய அவசியமில்லை. மதுரைக்கு பெருமளவு சுற்றுப்பயணிகள் வருகிறார்கள், அவர்களுக்கு வசதியாக இருக்கும்பொருட்டு இந்த ஒலி, ஒளிக் காட்சியினை அங்கே அமைப்பது பொருத்தமாக இருக்கும் என்று எவ்வளவோ எடுத்துச் தெரிவித்தோம். ஆனால், அவர்கள் மகாபலிபுரத்தில் வைப்பதாகச் சொன்னார்கள். சரி அங்கேயாவது வையுங்கள் என்று சொன்னோம். ஆனால் அதில் பெரும் செலவு ஏற்படும் என்று சொல்லி அதை இப்போழுது கைவிட்டதாக நமக்குத் தெரிவித்திருக்கிறது. மீண்டும் அதை வற்புறுத்தி வருகிறோம். மத்திய அரசாங்கம் இதை எடுத்து நடத்த வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். நாமே அதை எடுப்பது என்றால் அதற்குப் பெரும் செலவு ஏற்படும். நாம் அதைப்பற்றியும் ஆராய்ந்து வருகிறோம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, அண்மையில் மத்திய அமைச்சர் அவர்கள் மாமல்லபுரத்தில் இத் திட்டத்தை அமைப்பதைப்பற்றி தமிழக அரசு தெரிவித்தது, ஆனால் அதைப் பரிசீலிக்கவே இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். எந்தக் கூற்று உண்மை என்று அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியபடி மதுரையில் வேண்டாம், மாமல்லபுரத்தில் வைக்கலாம் என்று குறிப்பிட்டிருந்தார்கள். அதற்கான முயற்சி எடுக்கப் பட்டது. பிறகு அதனால் பெரும் செலவும் மற்றவைகளும் ஏற்படும் என்று அது நிறுத்தப்பட்டு விட்டதாக அண்மையில் மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. ராஜ் பகதூர் அவர்கள் தெரிவித்தார்கள். நிருபர்கள் கேட்டபொழுது நான் அவர்களுடன்தான் இருந்தேன். அதற்கேற்ற சூழ்நிலைகளை உருவாக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் மாமல்லபுரம் அதற்கேற்ற இடம், அதற்கு வரலாற்றுப் பின்னணி இருக்கிறது, அதை வைத்துக்கொண்டு செய்யலாம். இந்தியாவில் நான்கைந்து இடங்களில் அப்படி வைத்திருக்கிறார்கள். அதையொட்டி தென் பகுதியில் மாமல்லபுரத்தில் வைப்பது பொருத்தமுடையதாக இருக்கும் என்று மீண்டும் வற்புறுத்தியிருக்கிறோம். ஆனால் அதற்கான காரண காரிய விளக்கங்களையும், வரலாற்றுப் பின்னணியையும் மறுபடியும் எழுதி அனுப்பும்படியாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்பொழுது இந்தத் திட்டத்தைக் கைவிட்டிருக்கிறார்கள். அதற்குப் பதிலாக வண்ணத் திரைப்படம், "கலர் ஃபிலிம்" ஒன்று தயாரித்து அதைக் காண்பிக்கலாம் என்ற கருத்தை எடுத்திருக்கிறார்கள். அதை எங்கே வேண்டுமானாலும் காண்பிக்கலாம். ஆனால் ஒலி, ஒளிக்காட்சி என்கின்ற அத்தகைய தன்மையில் ஏற்பட வேண்டுமென்றுதான் வற்புறுத்தி வருகிறோம்.

திரு கே. டி. கே. தங்கமணி : சார், இந்தப் பிரச்னை கடந்த மூன்றாண்டுக் காலமாக வெறும் கடிதப் போக்குவரத்திலேயே இருந்துகொண்டு இருக்கிறது. இப்பொழுது டெல்லியைப் பொறுத்தவரையிலே அங்கே செங்கோட்டையிலே இம்மாதிரி வைத்து, அதை எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். மதுரையிலே வைப்பதாக எற்கனவே ஒத்துக்கொண்டபடி,

இப்பொழுது மதுரையில் சேம்பர் ஆஃப் காமர்ஸ் அல்லது மதுரை கார்ப்பரேஷன் மற்றும் வெகுஜன ஸ்தாபனங்கள் அங்கே வைப்பதை ஆதரிக்கிறார்கள். ஆகவே, முதலில் ஒப்புக் கொண்டபடி மதுரையிலே இந்தக் காட்சியைக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த அரசினுடைய எண்ணமும் முதலிலே தீர்மானித்தபடி மதுரையிலே வைக்க வேண்டும் என்பதுதான். அதைத்தான் தொடர்ந்து வற்புறுத்தி வந்தோம். ஆனால் அவர்கள் மதுரையிலே வேண்டாம், மகாபலிபுரத்தில் வைக்காலம் என்று சொன்னார்கள். சரி அங்கேயாவது வையுங்கள் என்று சொன்னோம். அதைத்தான் கைவிட்டு விட்டார்கள். மதுரை அதற்கு ஏற்ற இடம், வரலாற்றுப் பின்னணி கொண்டது, செங்கோட்டையிலே எப்படி அமைத்து இருக்கிறார்களோ அதைப்போல அமைக்கலாம், மீனாட்சியம்மன் ஆலயத்திலுள்ள மண்டபத்திலோ அல்லது திருமலை நாயக்கர் அரண்மனைப் பகுதியிலேயோ வைக்கலாம். எவ்வளவு செலவாகும் என்ற குறிப்புகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஓரளவு வருவாய் வரும் அல்லது செலவுக்கும் வருவாய்க்கும் ஈடுகட்டும் அளவிற்கு இருக்கும் என்று இருந்தாலும்கூட நாமேகூட அதை எடுக்கலாம் என்ற யோசனையும் இருக்கிறது. அதனுடைய செலவுக் குறிப்புகளையெல்லாம் நாம் கேட்டிருக்கிறோம். அதைப்பற்றி விவரம் வந்த பிறகு ஆராயலாம்.

திரு நா. வீராசாமி : தலைவரவர்களே, மகாபலிபுரத்திலே எப்படியும் ஒலி, ஒளிக்காட்சி வந்து விடும் எனத் தமிழகத்து மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில் மத்திய அமைச்சர் ராஜ் பகதூர் அவர்கள் பத்திரிகை நிருபர்களிடத்தில் பேசும்பொழுது மகாபலிபுரத்துக்கு வரலாறு இல்லை, ஆகவே, அங்கே வைப்பதுபற்றி யோசித்துத்தான் சொல்லவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நரசிம்ம வர்மன் அந்தக் காலத்தில் வடநாடு வரையில் படையெடுத்துச் சென்றிருக்கிறான் என்று படித்திருக்கிறோம். அப்படி வடநாட்டுக்குப் படையெடுத்துச் சென்ற காரணத்தினால் அதை மத்திய அமைச்சர் அவர்கள் வரலாறாகக் கருதவில்லையா ? எனவே, நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி அங்கு வரலாறு இருக்கிறது, எனவே மகாபலிபுரத்தில் ஒலி, ஒளிக்காட்சியை அமைக்க வேண்டும் என்று வற்புறுத்துமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மத்திய அமைச்சர் ராஜ் பகதூர் அவர்கள் குறிப்பிட்டபொழுது அதற்கு வரலாறு இருக்கிறது என்பதைக்கூட நான் குறிப்பிட்டேன். ஆகவே, அதைப் பற்றிய குறிப்புகளை எழுதி அனுப்புங்கள், மீண்டும் பரிசீலிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதனைத் தயாரிக்கும்படி சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கென்று ஒரு வரலாறு இருக்கிறது. அந்த வரலாற்றின் அடிப்படையிலே அங்கே அமைக்கலாம். காஷ்மீரில் ஒரு ஒலி, ஒளிக் காட்சியை மொகல் கார்டனில் வைத்திருக்கிறார்கள். அதற்கு இருப்பதைவிட மகாபலிபுரத்திற்கு வரலாறு இருக்கிறது என்று தெளிவாகச் சொல்லலாம். அந்த வரலாற்றுக் குறிப்புகளையும், எந்த வகையிலே வரலாற்றுப் பின்னணியில் அமைக்கலாம் என்பதைப்பற்றியும் ஆராய்ந்து குறிப்புகள் அனுப்பும்படி நாங்கள் கேட்டிருக்கிறோம். அதை விரைவில் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பலாம் என்ற எண்ணமும் நமக்கு இருக்கிறது.



## மருத்துவக் கல்லூரிகளில் பாடமுறைத் தேர்வுகள்

124*வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்து மருத்துவக் கல்லூரிகளில் தற்போது பாட முறைகளில் நடந்துவரும் தேர்வு முறையினை மாற்றியமைத்திட செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தமிழகத்து மருத்துவக் கல்லூரிகளில் பாடமுறைத் தேர்வுகள் பல்கலைக் கழகங்களால் நடத்தப்படுகின்றன. தேர்வு முறையினை மாற்றியமைத்திட செயற்குறிப்பு அரசிடமில்லை.

திரு. என். கிட்டப்பா : தற்போதுள்ள டாக்டர்களைவிட இன்னும் தகுதி வாய்ந்த டாக்டர்கள் தேவைப்படுவதால் தேர்வு முறையை மாற்றியமைக்க இனிமேலாவது ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தற்போதுள்ள டாக்டர்களை விட என்று சொல்லுவது அவரவர்களுக்கு ஏற்பட்டுள்ள அனுபவத்தின் விளைவாக இருக்கும். உண்மையிலேயே தற்போதுள்ள டாக்டர்களில் மிகச் சிறந்த தேர்ச்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். நல்ல முறையில் தேர்ச்சி பெற முடியாத சிலரும் இருக்கிறார்கள். பல்கலைக் கழகத்தின் பாட முறைத் திட்டப்படி செமிஸ்டர் கோர்ஸ் என்ற முறைப்படி அந்தப் பயிற்சி முறைக்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. இதனை 1972-ம் ஆண்டில் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் முதல் இரண்டாண்டு காலத்தில் பயிற்சி பெறும் அளவில் புகுத்தியிருக்கிறார்கள். அந்த செமிஸ்டர் கோர்ஸ் முறைப்படி பயிற்சி பெறும்போது அந்தப் பயிற்சியில் அதிக நாட்டம் ஏற்படவும், பயிற்சிக் காலத்தில் அக்கறையும் ஏற்பட வழி இருக்கும் காரணத்தால் அதன் மூலமாகப் பெறுகிற தகுதி, திறன் சற்று அதிகமாக வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் பாடமுறை பற்றி பல்கலைக் கழகத்தின் அகாடமிக் கவுன்சிலின் மூலம் பரிசீலிக்கப்பட்டிருக்கிறது. அகில இந்திய மருத்துவ ஆலோசனைக் குழு மூலமாகப் பாடத் திட்டங்களில் என்ன மாற்றங்களைச் செய்திட வேண்டுமென்பது பற்றி ஆலோசிக்கப்பட்டிருக்கிறது. அண்மையில் மத்திய அமைச்சரும்கூட மெடிகல் கவுன்சில் மூலமாகப் பாடத் திட்டத்தை மாற்றியமைப்பது குறித்து ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த மாணவர்கள் நாட்டுக்குப் பயன்படும் வகையில், மக்களுக்குத் தேவையான சிகிச்சைகளைச் செய்து தரும் வகையில் எந்த வகையில் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்பது பற்றியும், குறிப்பாக ரூரல் மெடிகல் என்ற அளவில் தேர்ச்சி அளிப்பது பற்றிப் பரிசீலிக்கப்படுகிறது என்று நான் கேள்விப்படுகிறேன்.

## சட்டம் சார்ந்த மருத்துவ இயல் படிப்பு

*125 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) 1973-74-ம் ஆண்டில், சென்னை மருத்துவக் கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவ இயல் படிப்பிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர் கள் எத்தனை பேர் ?

(இ) அதில் தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) சட்டம் சார்ந்த மருத்துவ இயல் M.D. பட்டப்படிப்பு (M.D. Forensic Science) சென்னை மருத்து வக் கல்லூரியில் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

ஆனால் 1973-74-ஆம் ஆண்டில் குற்றவியல் சட்டம் சார்ந்த அறி வியல் தகுதிப் பட்டயப் படிப்பில் (Diploma Course in Criminology and Forensic Science) 20 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

(இ) அதில் ஒருவர் தாழ்த்தப்பட்ட மாணவர்.

திரு. மு. முத்தையா : மருத்துவக் கல்லூரி மாணவர்கள் இறுதி ஆண்டுத் தேர்வில் ஓரிரு பாடங்களில் தவறினால் தவறிய பாடங்களை மட்டும் எழுதுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்களா ? எத்தனை முறை எழுதலாம் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அது வேறு, இந்தக் கேள்வி வேறு. இந்தக் கேள்வி தனியாகப் படிக்கிற ஃபோரன்சிக் ஸயன்ஸ், கிரிமினலஜி பற்றியதாகும். அவர்கள் கேட்பது எம்.பி.பி.எஸ். படிக்கும் போது தேர்வு எழுதுவது பற்றிய கேள்வி. அதுபற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் பதில் சொல்ல முடியும்.

திரு. எஸ். வடிவேல் : தாழ்த்தப்பட்ட மாணவர்களில் எவ்வளவு பேர் மனுச் செய்து கொண்டார்கள் ? மனுச் செய்தவர்களில் எத்தனை பேருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு என்று ஒதுக்குகிற முறை இப்படிப்பட்ட படிப்புகளில் கிடையாது. 75 பேர் விண்ணப்பித்தார்கள். 20 பேருக்கு இடம் கிடைத்திருக்கிறது. 8 பேர் சர்வீசில் உள்ளவர்கள். போலீஸ் இலாகாவில் பணியாற்றுகிறவர்கள். மற்றவர்களில் பொதுவாக 34 பேர் பிற்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் மனுச் செய்தார்கள். 6 பேர் எடுக்கப்பட்டிருக்கிறது. பிற்பட்ட மாணவர் கள் 39 பேர் மனுச் செய்ததில் 5 பேர் எடுக்கப்பட்டிருக்கிறது. தாழ்த்தப் பட்ட மாணவர்கள் 2 பேர் விண்ணப்பம் செய்தார்கள். ஒருவர் எடுக்கப் பட்டிருக்கிறார்.



## இராமநாதபுரத்தில் செவிலியர் பயிற்சிப்பள்ளி

*126 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் செவிலியர் பயிற்சிப்பள்ளி ஒன்று துவங்கப்பட இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. சு. துரைசாமி : இராமநாதபுரத்தில் இல்லாவிட்டாலும் தமிழ் நாட்டில் வேறு எந்தப் பகுதியில் செவிலியர் பயிற்சிப் பள்ளி துவக்க இந்த ஆண்டு நோக்கம் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : செவிலியர் பயிற்சிப் பள்ளி என்றால் நர்ஸஸ் டிரெயினிங் ஸ்கூல் என்று பொருள்படுகிறது. நர்ஸஸ் ட்ரெயினிங் என்பது மருத்துவக் கல்லூரியோடு இணைந்த ஒன்றாகும். ஒருவேளை துணைச் செவிலியர் பயிற்சி அளிப்பது பற்றியது என்றால் நான்கு இடத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வேலூர், சேலம், திண்டுக்கல், திருச்சி ஆகிய நான்கு இடங்களில் பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி : இராமநாதபுரத்தில் இருக்கும் தலைமை மருத்துவ மனையில் ஏ.என்.எம்.ஓ. பயிற்சி துவங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இராமநாதபுரம், கடலூர், நாகப்பட்டினம், நாகர்கோயில் ஆகிய இடங்களில் துணைச் செவிலியர் பயிற்சிப் பள்ளி தொடங்க திட்டம் இருந்தது. இராமநாதபுரத்தில் இருக் கும் மருத்துவ அலுவலர்களும் அப்படி ஒன்றைத் துவக்க வேண்டு மென்று கூறினார்கள். நர்சுகளுக்காக ஆலோசனை வழங்கும் குழு ஒன்று இருக்கிறது. அந்தக் குழு இதை மறுத்து விட்டது. இப்போதே பயிற்சி பெற்றவர்கள் எல்லோருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கவில்லை. ஆகவே, மேலும் பயிற்சி அளிக்கத் தேவையில்லை என்று தெரிவித்திருக்கிறது. இப்போது மேலும் அந்த முயற்சி தொடரப்பட்டிருக்கிறது.

## *Clinical check up for Cervical cancer*

* 127 *Q*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) Whether it is a fact that the Government propose to launch a Programme of mass screening for cervical cancer in Madras ; and

(*b*) if so, the details thereon ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) கேள்வி எழவில்லை.

திரு. என். கே. பழனிசாமி : குறைந்த பட்சம் எல்லா மாவட்ட ஆஸ்பத்திரிகளிலும், கோவை போன்ற நகரங்களில் இருக்கும் ஆஸ்பத்திரிகளிலும் "கோபால்ட்தெரபி" வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அரசாங்க நிதி நிலை வசதியைப் பொறுத்தும் வெளிநாட்டு செலாவணி கிடைப்பதைப் பொறுத்தும் சில சிறந்த கருவிகளை வாங்க மத்திய அரசிடத்தில் விண்ணப்பித்து வாங்க முயற்சி செய்யப்படுகிறது. அதிலே, "கோபால்ட்தெராபி" பம்பாயில் கிடைக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அதுபற்றி நிபுணர்களிடையே கருத்து மாறுபாடு இருக்கிறது. மருத்துவக் கல்லூரியோடு இணைந்த மருத்துவ மனைகளில்தான் இதை ஏற்படுத்த முடியும். இதைப் பயன்படுத்த அதிக தேர்ச்சி பெற்றவர்கள் தேவை. எளிதாக பயன்படுத்த முடியாது. தவறாகப் பயன்படுத்தினால் அதனால் தீமை அதிகமாக ஏற்பட்டுவிடும். இதிலே தகுந்த தேர்ச்சி பெறுவதற்காக காஞ்சிபுரத்திலுள்ள அறிஞர் அண்ணா மருத்துவ மனையில் இளைஞர்களுக்குப் பயிற்சி தர உலக சுகாதார நிறுவனம் முன் வந்திருக்கிறது. இப்படிப் பயிற்சி பெற்றவர்கள் வந்து, பொருளாதார நிலைமையும் பெருகிவருமானால் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்தலாம்.

கொள்ளிடம்—அணைக்கரை சாலை

*128 வினா—திரு. டி. வி. சம்பத் : மாண்புமிகு பொதுபணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொள்ளிடம் முதல் அணைக்கரை வரை கப்பிச்சாலை போடும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. வி. சம்பத் : கொள்ளிடத்திலிருந்து அணைக்கரை வரை சீர்காழி, ஆடுதுறை, மாயவரம் ஆகியவற்றை இணைக்கும் சாலைகளில் நூற்றுக்கணக்கான கிராமங்கள் இருக்கின்றன. அந்த கப்பிச் சாலைகளை தார் சாலைகளாகப் போட்டுத் தர தமிழக அரசு முன்வருமா ?



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தார் சாலையாகப் போடுவது நெடுஞ்சாலைத்துறை செய்ய வேண்டும். பொதுப்பணித்துறையில் அப்படி அந்த சாலைகள் தார் சாலைகளாக போடப்படுவதற்கு முக்கியமான ஒன்று தான் என்றாலும் நிதி அதற்கு இடையூறாக இருக்கிறது.

திரு.என். இட்டப்பா : கொள்ளிடம் முதல் அணைக்கரை வரை கப்பிச்சாலையாக அமைக்க வேண்டி பல ஆண்டுகாலமாக கோரிக்கை இருக்கிறது. பொதுவாக அந்தப் பகுதி மக்கள் மிகவும் சங்கடப்படுகிறார்கள். திரு. சம்பத் அவர்கள் சொன்னது போல ஆடுதுறை, மாயூரம், சீர்காழி ஆகிய மூன்று பகுதிகளில் இருக்கும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அந்தச் சாலையை தார் சாலையாக ஆக்குவதன் மூலம் பலன் பெறுவார்கள். அதற்கு எஸ்டிமேட் எல்லாம் கூட முன்பு தயாரிக்கப்பட்டிருக்கிறது. பொதுப் பணித் துறையோடு நெடுஞ்சாலைத் துறையும் இணைந்ததுதான். ஆகவே, இனிமேலாவது அதைச் செய்து கொடுக்க அரசு முன்வருமா.

(முற்பகல் 9-30).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இந்தக் கிராமப்புறச் சாலைகள் பராமரிப்பு உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் இருக்கின்றது. ஆகவே, இந்தக் கேள்வியை அந்த அமைச்சருக்குப் போட்டால் பதில் கிடைக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, காவிரி, மண்ணி ஆறு போன்ற நதிகளின் கரை ஓரங்களில் ஏராளமான நஞ்சை, புஞ்சை நிலங்கள் இருக்கின்றன. இப்பொழுது விவசாயத்திற்கு நம்முடைய அரசு முதலிடம் கொடுத்து வருகின்றது. ஆகவே, விவசாயத்திற்குத் தேவையான உரங்களை எடுத்துச் செல்வதற்கும், வேளாண்மைக்குத் தேவைப் படும் காரியங்களை நல்ல முறையில் செய்துகொள்ளவும் உதவும் வகையில், இந்தக் காவிரி, மண்ணி ஆறு போன்ற சாலை ஓரங்களை ஒட்டிய சாலைகளையும், கொள்ளிடக்கரை சாலையை சீர் செய்வது போன்று சீர் செய்து கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அதற்குச் சொன்ன பதில் இதற்கும் பொருந்தும்.

திரு. நா. காசிராமன் : தலைவரவர்களே, 1961-ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒருபெரு வெள்ளத்தின்போது, இந்த ஆற்று ஓரங்களில் சரியான சாலை வசதிகள் இல்லாத காரணத்தினால், மோட்டார் வாகனங்கள், இதர வண்டிகள் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டு, பல கஷ்டங்கள் ஏற்பட்டது என்பது நம்முடைய அனுபவம். பல இடங்களுக்கு அதிகாரிகள் கூட சென்றுபார்க்க முடியவில்லை. இப்பொழுது வறட்சி நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மீண்டும் வெள்ளம் வராது என்று சொல்வதற்கில்லை. ஆகையினால் இந்தச் சாலைகளைப் போட்டு நல்ல முறையில் பராமரித்து வைத்தால பொதுமக்களுக்குப் பயன்படுவதோடு வெள்ளக் காலங்களில் நல்லமுறையில், துரிதமாக நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொண்டு, அதைச் செய்வதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, சாலைகளின் முக்கியத்துவத்தைக் குறைத்து நான் கூறவில்லை. கிராமப்புறச் சாலைகள் மொத்தமும் உள்ளாட்சித் துறையால் பராமரிக்கப்பட்டு வருவதால், அந்தத் துறை அமைச்சருக்குக் கேள்வியைப் போட்டால் பதில் கிடைக்கும் என்று மீண்டும் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, இந்தத் தமிழகத்தில் இருக்கின்ற கால்வாய்கள், ஆறுகள் இவைகளின் கரை ஓரங்கள் இப்பொழுது பெரும்பாலும் பயன்படாமல் இருந்து வருகின்றன. அவற்றைச் சரி செய்து சாலைகளை அமைத்துப் பராமரித்தால், அதன் மூலம் விவசாயத்திற்கு நல்ல பலன் கிடைக்கும் என்பதில் தான் இந்தக் கேள்விகள் கேட்கப்படுகின்றன. இது குறித்து அரசாங்கம் மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, கிராமப்புறச் சாலைகளைப் பற்றி நான் பதில் சொல்வதற்கில்லை. உள்ளாட்சித்துறை அமைச்சர்தான் சொல்ல வேண்டும். அவற்றை நெடுஞ்சாலைத் துறை எடுத்துக் கொள்கின்ற பிரச்சினை எழவில்லை என்று தெரிவித்துகொள்கிறேன்.

*Mamuttukadai—Palayakadai road.*

*129 Q—THIRU DFNNIS Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is a proposal to repair the Mamuttukadai-Palayakadai road in Nattalam village, Kanyakumari district ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பாதை நல்ல நிலையில் உள்ளதால் தற்போது தேவை இல்லை.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, இது ஒரு பஸ் போக்குவரத்து உள்ள சாலை. இந்தச் சாலை மிகவும் மோசமாக இருக்கின்ற காரணத்தினால், இப்பொழுது பஸ் போக்குவரத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகையினால் "பிளாக் டார் டாப்" போட்டால் பஸ் போக்குவரத்து துவங்கி நல்ல முறையில் நடக்க வசதியாக இருக்கும். அதைச் செய்வதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, என்னிடம் இருக்கின்ற குறிப்பின்படி, அந்தச் சாலை நல்ல முறையில் இருப்பதாகத்தான் தெரிகிறது. உறுப்பினர் அவர்கள் கூறியிருப்பது போன்று பழுதடைந்திருந்தால், அரசாங்கம் பரிசீலனை செய்யுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.



*Trading in foodgrains.*

*130 Q—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state :

(a) Whether this Government have received any communication from the Centre during 1974 regarding taking over the food trade in the State ; and

(b) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(ஆ) இவ் வினா எழவில்லை.

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, சென்ற முறை, இந்தச் சட்டசபையில் மத்திய சர்க்காருக்குக் கடிதம் எழுதியிருக்கிறோம், பதில் கிடைக்கவில்லை என்று சொல்லப்பட்டது. இப்பொழுதும் அதே பதில் தரப்பட்டு இருக்கிறது. டெல்டா பிரதேசங்களைப் பொறுத்த வரையில் கூட்டுறவுகள் மூலமாகக் கொள்முதல் செய்தாலும், தனியார்கள் மூலமாகக் கொள்முதல் செய்தாலும், சர்க்காரே நேரடியாகச் செய்தாலும் சரி, செக் போஸ்ட் போன்ற இவைகள் அனைத்தையும் எடுத்துக் கொண்டாலும் சரி, சட்டத்துக்குத்தான் பயன் படுவதாக இருக்கின்றனவே தவிர நல்ல முறையில் பயனளிப்பதாக இல்லை. ஆகவே, சர்க்கார் கொள்கையை மாற்றி, இன்னும் நல்ல முறையில் தானியத்தை சேகரம் செய்ய வழி செய்து, ஒரு பஃப்பர் ஸ்டாக் வைக்கும் முறையில் எல்லாவிடங்களிலும் நல்ல முறையில் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்து, வேலைத் திட்டங்கள் வகுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, உணவுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது, இது பற்றிப் பேசிக் கொள்ளலாமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆலடி அருணா: தலைவரவர்களே, உணவு தானிய மொத்த வியாபாரத்தை அரசே ஏற்று நடத்த வேண்டுமென்பதுதான் திராவிட முன்னேற்றக் கழக அரசின் கொள்கை. எனவே இந்த அரசாங்கம் தன்னுடைய கொள்கையை நிறைவேற்றுவதில், அதாவது மொத்த வியாபாரத்தை ஏற்று நடத்துவதில், ஏன் தயக்கம் காட்ட வேண்டும்? இது வரையில் ஏற்று நடத்தாதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, ஏற்கனவே இதைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் விளக்கி இருக்கிறார்கள். கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டாலும், அகில இந்திய ரீதியில் நிறைவேற்றும்போது ஏற்படுகின்ற சில சிக்கல்களைப் பற்றி ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டுமென்று ஏற்கனவே தெரிவித்திருக்கிறேன்.

[1975 மார்ச் 1

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, மொத்த வியாபாரத்தை அரசாங்கம் எடுத்து நடத்தாததன் காரணமாகத்தான், கொள்முதலை அரசாங்கம் நேரிடையாகச் செய்யாமல் தனியாரிடம் ஒப்படைத்ததன் காரணமாகத்தான், இப்பொழுது படி அரிசி ரூபாய் 8, ரூபாய் 10 என்ற அளவுக்கு ஏறியிருக்கிறது. இதைச் செய்வதற்கு ஏன் அரசு தயங்குகிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, ஏற்கனவே பதில் சொல்லியிருக்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : தலைவரவர்களே அரசாங்கம் நிர்ணயம் செய்திருக்கும், உபரி நெல்லுக்கான விலை போதுமானதாக இல்லாத காரணத்தினால், விவசாயிகள் தங்களிடமிருக்கிற நெல்லைக் கொடுப்பதற்குத் தாமதம் காட்டுகிறார்கள். ஆகையினால் மார்க்கெட் விலையை விசாரித்துக் கொஞ்சம் அதிகப்படுத்திக் கொடுத்தால், நல்ல முறையில் கொள்முதல் செய்து அரசாங்கக் கிடங்கில் சேமிப்பு வைத்துக் கொள்ள முடியும். இதை அரசு பரிசீலிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, நெல் விலை உயர்த்தப்படுமேயானால் அரிசி விலையும் உயரும். ஆகவே இந்த விஷயத்தில் ஜாக்கிரதையாகத்தான் அணுக வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண் 131.

திரு.எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, இப்பொழுது மிகவும் முக்கியமான பிரச்சினை உணவுப் பிரச்சினை. இதில் கேள்விகள் கேட்க அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மத்திய அரசிடமிருந்து தகவல் வந்துள்ளதா என்பது கேள்வி. அதற்குப் பதில் சொல்லப்பட்டது. மேலும் சில கேள்விகள் கேட்டபோது, உணவுத் துறை மானியத்தின் மீதான விவாதத்தின்போது பேசிக்கொள்ளலாம் என்று உணவு அமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார். ஒரு கேள்வி இரண்டு மூன்று உபகேள்விகள் கேட்கப்பட்டு பதில் சொன்ன பிறகு, ஒவ்வொரு உறுப்பினரும் அதையே கேட்டுக்கொண்டிருக்கக்கூடாது.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, சர்க்கார் சரியான முறையில் செயல்படுகிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டிய பொறுப்பு எதிர் கட்சிகளுக்கு இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் ஏற்கனவே போதுமான பதில் சொல்லிவிட்டார்.



1975 மார்ச் 1]

திரு. ஆலடி அருணா : அப்படியானால் எந்தக் கேள்விக்குமே பதில் சொல்லத் தேவையில்லை என்றுதான் தெரிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த ஒரு கேள்விமேல் எழுப்பப்பட்ட பல கேள்விகளுக்குப் பதில் சொல்லியாகிவிட்டது. உணவுத் துறை மானியத்தின் மீதான விவாதத்தின்போது பேசிக்கொள்ளலாமென்று அமைச்சர் அவர்களும் கூறியிருக்கிறார்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, இது ஒரு முக்கியமான பிரச்சினையாக இருப்பதால்தான் வற்புறுத்திக் கேட்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உணவு தானிய மொத்த வியாபாரத்தை அரசாங்கமே எடுத்து நடத்துவது குறித்து மத்திய அரசிடமிருந்து தகவல் வந்துள்ளதா என்பதுதான் கேள்வி. அதைப் பற்றிக் கேள்விகள் கேட்கலாமே தவிர கொள்முதல் விலை நிர்ணயம் செய்வது போன்ற கேள்விகள் சம்பந்தப்பட்ட மானிய விவாதத்தின்போது வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லப்படுகிறது.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்று கூறப்பட்டது. இந்த உணவுப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டு பலவிதமான மசோதாக்கள், சட்டங்கள் அவ்வப்போது நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. இந்த நேரத்தில் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டிருக்கின்ற இந்த அரசு இந்த நெருக்கடி நேரத்தில் அதைச் செய்வதற்கு ஏன் தயக்கம் காட்ட வேண்டும் என்பதுதான் பிரச்சினை. பொருளாதாரம் காரணமா, வேறு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறோம்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, அகில இந்திய ரீதியில் உணவு தானிய மொத்த வியாபாரத்தை எடுத்துக் கொள்வது பற்றி பல்வேறான கட்டங்களில் மாநில முதலமைச்சர்கள் எல்லோரும் கலந்து கொண்டு பேசியிருக்கிறார்கள். இப்பொழுது பாராளுமன்றத்தில் கூட மத்திய அரசின் சார்பில் பேசப்பட்டிருக்கிறது. அங்கும் பலவிதமான கருத்துக்கள் தரப்பட்டிருக்கின்றன. கோதுமையினுடைய மொத்த வியாபாரத்தை எடுத்தோம் என்று சொல்லிவிட்டு, பின்னர் கைவிட்ட கதை எல்லோருக்கும் தெரியும். நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் உணவு தானிய மொத்த வியாபாரத்தை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதைக் கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டாலும் நடைமுறையில் சாதிப்பதில் அகில இந்திய ரீதியில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன என்பதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே தெரிவித்திருக்கிறார்கள். இந்த ஆண்டு மிக அதிகமாகப் பற்றாக்குறை ஏற்பட்ட காரணத்தினால், அதிக உற்பத்தி உள்ள பகுதிகளிலாவது கொள்முதல் அதிகம் செய்ய வேண்டுமென்று முடிவு எடுத்திருக்கிறோம். இது நல்ல முடிவு. இதைத் தொடர்ந்து பல நல்ல முடிவுகள் எடுக்கப்படும். இதில் கொள்கை அளவில் கருத்து வேறுபாடு இல்லை. நடைமுறையில் சிக்கல் இருக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும்.

THIRU B. VENKATASWAMY : Sir, even the Centre have dropped the wholesale trade in foodgrains because they are not in a position to do the wholesale foodgrains trade. So, may I know from the Government whether the wholesale foodgrains trade will be left out to private dealers, so that people will get very good grains in time.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, இது சுதந்திரா கட்சியின் கொள்கை என்று எனக்குத் தெரியும்.

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, இன்றைய தினம் நெல் கொள்முதலுக்காக அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள ஏஜெண்டுகள் கொடுக்கின்ற விலை விகிதத்திற்கும் வெளி மார்க்கெட் விலை விகிதத்திற்கும் வித்தியாசம் ரொம்ப இருக்கிறது. ஒரே விலை விவசாயிகளுக்குக் கிடைக்க வழி செய்தால், விவசாயிகளுக்கும் நன்மையாக இருக்கும். பொது மக்களுக்கும் ஓரளவுக்கு நன்மை பயக்கும் என்பதை அரசு ஆராய்ந்து அந்த முறையில் செய்வதற்கு முன்வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி எப்படிப் பொருந்தும் ? மத்திய சர்க்காரிடமிருந்து பதில் வந்துள்ளதா என்ற கேள்வியை ஒட்டி இந்தக் கேள்வி எப்படி வரும் ? கேள்விக்குமேல் கேள்வி போட்டுக்கொண்டிருக்க வேண்டும் என்பது இல்லையே.

THIRU K. T. K. TANGAMANI : Arising out of the answer we can also put such supplementaries ; of course not for every question.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பின்னால் ஆன்சர் சொல்வதை நிறுத்தி விடுகிறேன், மூலக் கேள்வியை ஒட்டியில்லை என்று. மூலக் கேள்வியை ஒட்டியில்லாத துணைக் கேள்விகளுக்கு பதில் அளிக்காமல் இருக்கச் சொல்லிவிடுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : அந்தமாதிரி நேரடியாக மூலக் கேள்விக்குத்தான் அமைச்சர்கள் பதில் சொல்கிறார்கள். ஆனால் சப்ளிமெண்டரிக்குப் பதில் சொல்கிற நேரத்தில் அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்வதற்காக சில விஷயங்களையும் எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த மாதிரியே கேட்டுக் கொண்டு இருந்தால் அது எங்கே போய் நிற்கும் என்று பாருங்கள்.

* 131 Q—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state :

(a) Whether this Government have received any communication from the Centre during 1974 for the invocation of the provisions of MISA and DIR to bring out hoarded food grains with big farmers ; and

(b) if so, the detalis of the same?





மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) and (இ) 1973 ஆம் ஆண்டு, மத்திய அரசிடமிருந்து கடிதம் வந்தது. அக் கடிதத்தில் மத்திய அரசு, பல வகையான பிரச்னைகள் பற்றி மாநில அரசின் கவனத்தை ஈர்த்து, உணவுப் பிரச்னையைச் சமாளிப்பது பற்றியும், பதுக்கல்காரர்கள் மீது உள்நாட்டு பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுப்பது பற்றியும் குறிப்பிட்டிருந்தார்கள்.

திரு. என். கே. பழனிசாமி : சார், அவர்கள் குறிப்பிட்டு இருக்கும் அறிக்கையில் என்னென்ன விளக்கம் இருக்கிறது? சர்க்கார் அதுமாதிரி, அவர்கள் கேட்டுக் கொண்ட மாதிரி எத்தனைபேர் மேல் நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விளக்கம் சொல்வது என்று ஆரம்பித்தால் பெரிய விளக்கமாகப் போய்விடும். அவர்கள் பொதுவாக சில விஷயங்கள் குறித்து எழுதி அனுப்பியிருக்கிறார்கள். அதன் மீது அரசாங்கம் விரிவான நடவடிக்கை எடுத்து இருக்கிறது. நாம் "மிசா" சட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் கடத்தல்காரர்களைப் பிடித்து இருக்கிறோம். அவை பத்திரிகைகளிலும் வந்து இருக்கின்றன. 1973-ல் 123 பேர்கள் மீதும், 1974 ஜூலை திங்கள் வரையில் 162 பேர்கள் மீதும் நடவடிக்கை எடுத்து இருக்கிறோம்.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, என்னுடைய கேள்வி, கொள்முதல் கொடுக்காமல் இருப்பவர்கள் எத்தனைப் பேர் மீது நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள்? இதுவரையில் கைது செய்யப்பட்டவர்கள் பூராவும் கடத்தல் பேர்வழிகள். அரசுக்குக் கொள்முதல் கொடுக்காமல் இருப்பவர்கள் இதுவரையில் கைது செய்யப்பட வில்லை. ஏற்கனவே சில்லம்பட்டியில் ஒருவர் 30 ஸ்டான்டர்ட் ஏக்கர் வைத்திருந்தவர் ஒன்றும் கொள்முதலுக்குக் கொடுக்கவில்லை என்று சொல்லி கைது செய்யப்பட்டார். அவர் மீது மேலும் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று தெரியவில்லை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நான் ஏற்கனவே சொன்னது, "மிசா" சட்டத்தின் மூலம் கைது செய்யப்பட்டவர்கள், அதைத்தான் மத்திய சர்க்கார் குறிப்பிட்டு இருக்கிறது. கொள்முதல் கொடுக்காமல் இருப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்ட விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: இம்மாதிரி "மிசா", டி. ஐ. ஆர். சட்டத்தின் மூலம் பதுக்கல்காரர்களைப் பிடிக்கலாம் என்று மத்திய அரசாங்கம் சொல்லியிருக்கிறது. கடந்த 6 மாத காலமாக வறட்சி ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில் இப்படிக் கடத்தல் செய்பவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது? விவரம் தந்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏற்கனவே சொன்னேன், 1974-ஜூலை வரையில் 162 பேர்—பலவிதமான குற்றங்கள் செய்தவர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

THIRU K. T. K. TANGAMANI: I have listened to the answer of the Hon. Minister. His reply was only to the action taken till July. I want to know the action taken after July till today.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் ஏற்கனவே சொன்னேன், ஒவ்வொரு மாதமும் யார் யார் கைது செய்யப்படுகிறார்கள் என்ற விவரம் பத்திரிகைகளில் வருகிறது. என்னிடம் இருக்கிற விவரம் 74-ஜூலை வரை இருக்கிறது. அதற்குப் பின்னால் இல்லை. அதற்குப் பின்னால் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்பது உண்மை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, உணவு கிடைப்பது சிரமமாக உள்ள இந்த நேரத்தில் பதுக்கி வைத்திருப்பவர்கள் மீது இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முயற்சி எடுத்து இருந்தும், இதுவரை கைது செய்யப்பட்டவர்கள் பல சான்றுகளைச் சொல்லி தப்பித்துக் கொள்கிறார்கள். அதற்குச் சட்டத்தில் இடம் இருக்கிறது. ஆகவே, பதுக்கியவர்கள் மீது பகிரங்க நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பதுக்கல் செய்பவர்களை அதற்கான விதிமுறைகளின் படி. கைது செய்து நடவடிக்கை எடுக்கிறோம் சிறைசாலையில் அடைக்கிறோம். சில இடங்களில் திட்டமிட்டு செய்பவர்கள் அந்தக் குற்றத்திற்குத் தண்டனை அனுபவிக்காமல் தப்பித்துக் கொள்கிறார்கள். என்ற காரணத்தால் தான் தடுப்புகாவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுகிறார்கள்.

திரு. ஆலடி அருணா : "மிசா", டி.ஐ.ஆர். சட்டத்தின் மீது பதுக்கல் செய்தவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட தானியங்கள் எவ்வளவு மதிப்பு என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா? கடந்த முறை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் 2 கோடிக்கு மேல் பறிமுதல் செய்யப்பட்டு இருப்பதாகச் சொன்னார்களே, அது குறித்து அமைச்சர் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. என். கே. பழனிசாமி : "மிசா" சட்டத்தைப் பயன்படுத்தி கொள்முதல் கொடுக்காத எத்தனை பேர்கள் மேல் அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கொள்முதல் கொடுக்காமல் இருப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, சில பேர் மீது வழக்குகூட போடப்பட்டு இருக்கிறது.



## காகித உற்பத்தி ஆலைகள்.

* 132 வினா : திரு. தோப்பூர் திருவேங்கடம் : மாண்புமிகு தொழில்-மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) தமிழ்நாட்டில் தற்சமயம் எத்தனை காகிதத் தொழிற்சாலைகள் உள்ளன?

(இ) அதற்குத் தேவையான கச்சாப் பொருள்கள் தமிழ் நாட்டில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :

(அ) மூன்று.

(இ) ஆம்.

* 133 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு தொழில்-மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அம்பாசமுத்திரம் தாலுக்கா மேல அம்பாசமுத்திரத்தில் நிறுவியுள்ள பாபநாசம் பேப்பர் மில்லில் வருடம் ஒன்றுக்கு எவ்வளவு உற்பத்தி செய்யப்படுகிறது ?

(இ) அதன் மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) திருவாளர்கள் பாபநாசம் பேப்பர் மில்ஸ் லிமிடெட், சென்னை, தங்கள் பேப்பர் ஆலையில் இன்னும் உற்பத்தியைத் தொடங்கவில்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

* 134 *Q*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state :

(*a*) Whether there is any proposal to set up a paper industry in the Nilgiris ; and

(*b*) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) and (இ): நீலகிரியில் ஒரு காகித தொழிற்சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஒரு ஆய்வு நடத்தப்படுகிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, புகலூரில் உள்ள கரும்பு ஆலையிலிருந்து கிடைக்கும் பகாசைக் கொண்டு சின்ன தாராபுரம் என்ற இடத்தில் ஒரு காகிதத் தொழிற்சாலை ஆரம்பிப்பதாக

திட்டம் இருந்ததே அது அரசின் செயற்குறிப்பில் இருக்கிறதா? இல்லையென்றால் அந்தத் தொழிற்சாலை எப்போது துவங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றி பரிசீலிக்கப்பட்டு, எக்ஸ்பார்ட் கமிட்டி கொடுத்த ரிப்போர்ட் பேரில் அது லாபகரமாக நடப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்று தெரிவித்ததால், அது ஒத்திவைக்கப்பட்டு இருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : எத்தகைய முறையில் இந்தக் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட இருக்கிறது ? ஏற்சனவே சர்க்கார் அங்கே இருந்து பல மூங்கில் மரத்தை வெட்டிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் மறுபடியும் அந்த இடத்தில் மரம் நடுவது இல்லை. ஆகவே, அங்கேயுள்ள மரம் பூராவையும் பேப்பர் பாக்டரிக்கு எடுத்துப்போவதால், அந்தமாதிரி நிலைமையைத் தவிர்க்க, இப்படி காகிதப் பாக்டரிகளுக்கு மரம் எடுபவர்களிடமிருந்து 5 சதவிகிதம், 10 சதவிகிதம் என்று செஸ் போட்டு, அந்தக் கட்டணத்தைக் கொண்டு, மரங்களை வைப்பதற்கு உரிய முறையை சர்க்கார் ஏற்று அந்த முறையில் செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினரின் கேள்வி பொதுவாக இருக்கிறது, குறிப்பாகக் கேட்டால் என்றால் பதில் சொல்ல முடியும்.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : வடாற்காடு மாவட்டத்தில் காகிதத் தொழிற்சாலை துவங்க ஏதேனும் செயற்குறிப்பு உண்டா ? அங்கே மூங்கில், சர்க்கரையிலிருந்து கிடைக்கும் "பகாஸ்" நிறைய கிடைக்கிறது. அதை வைத்துக்கொண்டு வடாற்காடு மாவட்டத்தில் காகிதத் தொழிற்சாலை துவங்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வடாற்காடு மாவட்டத்தில் காகிதத் தொழிற்சாலை துவங்குவதற்கான செயற்குறிப்பு இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, நீலகிரியில் ஒரு காகித ஆலை துவங்கப்போவதாகக் கூறியிருக்கிறார்கள். அதை தனியாப் துறையில் துவங்கப் போகிறார்களா அல்லது பொதுத் துறையில் துவங்கர் போகிறார்களா என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கூட்டுத் துறையில் ஆரம்பிப்பதற்கான செயற்குறிப்பு இருக்கிறது. ஜாயிண்ட் செக்டாரில் துவங்க ஆலோசனையில் இருக்கிறது.



திரு. கு. அ. பொம்மன் : தலைவரவர்களே, அந்தக் காகித ஆலையை கூடலூரில் அமைப்பதற்கு முன்பு முடிவு செய்து இருந்தார்கள். இதை இப்போது வேறு இடத்திற்கு மாற்றுவதற்குகான முயற்சிகள் நடப்பதாகக் கேள்விப்படுகிறேன். கனம் அமைச்சரவர்கள் அது எங்கே துவங்கப்படும் என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் ஜெமீன் நிலங்கள் 60,000 ஏக்கர் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். அந்த நிலத்தில் காகிதத் தொழிற்சாலை போடலாம் என்று இருக்கிறோம். அந்தத் தொழிற்சாலை முழுக்க முழுக்க பொதுத்துறையில் இருக்கும். ஏற்கனவே மாண்புமிகு திரு. சாதிக் பாட்சா அவர்கள் சொன்ன விடையை திருத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : இம்மாதிரி காகித ஆலைகள் ஆரம்பிப்பதற்கு மூலப்பொருள்கள் மிகவும் தேவை. வடாற்காடு மாவட்டத்தில் இருக்கிற ஜவ்வாது மலையிலிருந்து–80 மைல் பரப்பளவில் இருக்கிறது –மூங்கில் நிறைய கிடைக்கும். அங்கே மூன்று சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. அங்கேயிருந்து நிறைய பகாஸ் கிடைக்கும். ஆகவே, இவ்வளவு மூலப் பொருள்கள் வடாற்காடு மாவட்டத்தில் கிடைப்பதால், அங்கே தொழிற்சாலை துவங்க இப்போது செயற்குறிப்பு இல்லாவிட்டாலும், அங்கே ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தற்போது இல்லை என்றுதான் சொன்னேன்.

திரு. நா. காசிராமன் : காகிதத் தொழிற்சாலை துவங்குவது பற்றிச் சொன்னார்கள். இம்மாதிரி காகித ஆலை தொடங்குவதற்கு மூலப்பொருளாக கால்நடைகளுக்குத் தேவைப்படும் வைக்கோலையும் உபயோகிக்கிறார்கள். இப்போது வறட்சி நிலைமை இருக்கிறது. இந்த நேரத்தில் கால்நடைகளுக்குப் பயன் படும் வைக்கோலை காகிதம் செய்ய பயன்படுத்திக் கொண்டால் கால் நடைகள் பாதிக்கப்படும். ஆகவே, வைக்கோலை காகிதம் தயாரிக்க உபயோகிக்காமல் இருக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அப்படி வைக்கோல் உபயோகிப்பதாகத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்தும் மனதில் வைத்துக் கொள்ளப்படும்.

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, காகிதத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்குப் போதுமான ரா மெடீரியல்ஸ் இருக்கிறதா ? ஏற்கெனவே தனிப்பட்டாருடைய காகிதத் தொழிற்சாலைக்காக ஏராளமான மரங்கள் வெட்டப்பட்டு, வேறு மரங்கள் வைக்கப்படாத காரணத்தினால் ரா மெடீரியல்ஸ் இல்லாமல் இருக்கிறது. இதைப் போக்கக் கூடிய முறையில் அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, இதைப் பற்றி வன இலாகா நண்பர்களோடு விவாதித்து, புதிதாக 60 ஆயிரம் ஏக்கர் காடுகளைப் பெறுகிற வாய்ப்பு இருக்கிற காரணத்தினால் அந்த 60 ஆயிரம் ஏக்கர் பகுதிகளில் காடுகளை வளர்த்து அரசுத் துறையில் ஒரு தொழிற்சாலையை அமைக்கலாமா என்ற யோசனை உள்ளது. காகிதத் தொழிற்சாலைக்குத் தேவையான அளவிற்கு மூங்கில் உற்பத்தி இங்கே இல்லை என்ற வாதம் வைக்கப் படுகிறது. இதுபற்றி விரிவாக ஆலோசிக்கப்பட வேண்டும்.

*State Committee of Revenue Officials Association.*

* 135 *Q*—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Revenue be pleased to state:

(*a*) Whether the State Committee of the Tamil Nadu Revenue Officials Association met at Madurai on 10th August 1974 and 11th August 1974;

(*b*) if so, whether a copy of the deliberations of the meeting has been communicated to the Government?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) கூட்ட நடவடிக்கைகளின் படி ஒன்றும் அரசுக்கு அனுப்பப்பட வில்லை.

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, இதிலே முக்கிய மாக ரெவின்யூ இலாகாவில் இருக்கக்கூடிய சிப்பந்திகள் அவர்களுடைய ப்ரமோஷன், இன்னும் சம்பள உயர்வு போன்றவைகள் கூட, கிராம அதிகாரிகளுடைய பாதி நேர வேலையை முழு நேர வேலையாகச் செய்ய வேண்டுமென்ற முக்கியமான கோரிக்கை அரசின் கவனத்திற்கு வந்ததா? அந்தக் கோரிக்கை மீது அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறது என்றும் அதன் விவரம் என்னவென்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, கிராம உத்தியோகஸ்தர்களைப்பற்றித் தீர்மானம் இல்லை. அவர்கள் நிறைவேற்றிய தீர்மானங்கள் தட்டச்சர்கள் இள நிலை உதவியாளர் களாக நியமிக்கப்படும் போது அவர்களுடைய மொத்த பணிக் காலம் தட்டச்சராக அவர்கள் பணிபுரியத் தொடங்கிய நாளிலிருந்து கணக்கிடப்பட வேண்டும்; பதவிகளுக்கென வரையறுக்கப்பட்டுள்ள தேர்வில் ஒருவர் தேறியவுடன் காலி இடங்கள் உள்ளது குறித்து மதிப்பிடாமலேயே அவரது பெயர், உதவியாளர்கள்/துணைத் தாசில் தார்கள்/தாசில்தார்கள் குறித்த அந்த ஆண்டு பட்டியலில் சேர்க்கப் படவேண்டும்; துணைத் தாசில்தார்களின் சம்பள விகிதத்தை கூட்டுறவு துணைப்பதிவாளரின் சம்பள விகிதத்திற்கு சரிசமமாய் இருக்கும் விதத்தில் திருத்தி அமைத்தல், இந்த வேண்டுகோள்கள்



ஏற்கெனவே பரிசீலனை செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட கோப்பு வருவாய்த் துறை அமைச்சருக்கு, முதலமைச்சருக்கு சுற்றோட்ட முறையில் அனுப்பப்பட்டது. அக் கோப்பு 3–10–1974-ல் வருவாய்த்துறை அமைச் சரால் முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சேலத்தில் புறம்போக்கு நிலங்கள் ஒப்படை.

*136 வினா திரு. கி. செயராமன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சேலம் நகரம், கிச்சிபாளையம், பச்சப்பட்டி பகுதியில் உள்ள தாழ்த்தப்பட்டவர்களிடமிருந்து தாங்கள் குடியிருக்கும் புறம்போக்கு நிலத்தை "பட்டா" செய்யக் கோரி 1972–73, 1973–74 ஆண்டுகளில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசுக்கும் விண்ணப்பங்கள் வந் துள்ளதா?

(இ) அவற்றின் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) சேலம் நகரப் பகுதியான கிச்சிபாளையத்திலுள்ள அரசு நிலம் சர்வே நெ. 21/1, 2/2, வார்டு ஜே, பிரிவு 18, "குளம் புறம்போக்கு" என வருவாய்த்துறைக் கணக்குகளில் காணப்படுகிறது. அத்தகைய நிலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட ஏதுவாகவுள்ளதாலும், குளம் புறம்போக்கிலுள்ள ஆக்கிரமிப்புகள் ஆட்சேபணைக்குரியவைகளாக இருப்பதாலும், தங்களுடைய பெயரில் ஒப்படை செய்யக் கோரி அந் நிலத்தில் குடிசை கட்டி ஆக்கிரமிப்புகள் செய்துள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் வருவாய்த்துறை அதிகாரிகளிடம் கொடுத்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

சேலம் நகரப் பகுதியான பச்சப்பட்டியில் நகர் சர்வே நெ. 30-வார்டு எண், பிரிவு எண். 6-லும், நகர் சர்வே எண். 103-வார்டு எண், பிரிவு 4-லும் குடிசை கட்டி ஆக்கிரமிப்புச் செய்துள்ள தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் தங்கள் பெயருக்கு அந் நிலத்தை ஒப்படை செய்யக் கோரி கொடுத்துள்ள விண்ணப்பங்கள் சேலம் மாவட்ட ஆட்சியா பரிசிலனையிலுள்ளது.

கோவை மாவட்டத்திலுள்ள கால்நடை கிளை நிலையங்கள்.

*137 வினா.—திரு. நா. பழனிசாமி: மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) கோவை மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள கிளைக் கால்நடை இனவிருத்தி நிலையங்கள் (Sub-Centres) எத்தனை?

(இ) அவைகள் எல்லாம் எப்போது மீண்டும் செயல்படும்?

(உ) எதற்காக அவை மூடப்பட்டன?

[1975 மார்ச் 1

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அ, இ and உ: தலைவரவர்களே, புனரமைப்புத் திட்டத்தின் காரணமாக 21 இடங்களில் மூடப்பட்டன. இப்போது மீண்டும் எவைகளைத் திறக்கலாம் என்பது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, இந்த மூடப்பட்ட இடங்களில் இருக்கிற கிராம மக்கள் கால் நடை இன விருத்திக்கு சிரமப்படுகிறார்கள். மூடப்பட்ட இடங்களில் திறந்தால் கிராம மக்களுக்குப் பயன் படும். இதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, 21 இடங்களில் மூடப்பட்டாலும் புதிதாக 30 இடங்களில் திறக்கப்பட்டிருக்கின்றன. மூடப்பட்ட இடங்களில் இவைகள் ஏற்கெனவே வாடகைக் கட்டிடங்களில் செயல்பட்டு வந்தன. மேலும் இவைகள் 2 மைல்களுக்கு 3 மைல்களுக்கு இடையில் முறையில்லாத ஒரு நிலையில் இருந்தன. இவைகளை சீரமைப்பு செய்து ஒவ்வொன்றும் 5 மைல், 6 மைல் அளவிலே இருக்க வேண்டுமென்று ஜில்லா அளவிலே அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் எங்கள் பகுதியில் 5 இடங்களில் முன்பு இருந்தன. இப்போது 3 இடங்களை மூடிவிட்டு 2 இடங்களில்தான் இருக்கின்றன. இப்படி மூடின இடங்களை அரசு திறப்பதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, மூடின இடங்கள் 21 என்றால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இடங்கள் 30 ஆகும். இப்படி மூடின இடங்களில் அத்தியாவசியத் தேவை இருக்குமானால் அவைகளை ஏற்றுக்கொள்ளலாம்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, இப்படி மூடப்பட்ட இடங்கள் வாடகைக் கட்டிடங்கள் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். என்னுடைய தொகுதியிலே உள்ள அரசூர் கிராமத்தில் அரசால் கட்டப்பட்ட கட்டிடத்தில் செயல்பட்டு வந்தது மூடப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் திறந்து புதுப்பித்து, அந்தப் பகுதி வட்டாரத்தில் விவசாயிகள் பயனடைய அரசு ஆவன செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, புனரமைப்பு என்ற அடிப்படையில் யூனிபாரமாக இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் ஒவ்வொன்றும் 5 மைல் 6 மைல் அளவிலே இருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இது செய்யப்பட்டது. கோவை மாவட்டத்தில் 2 மைல்களுக்கு ஒன்று என்று சில இடங்களிலும், 10 மைல்களுக்கு இந்த நிலையங்கள் இல்லாமலும்



1975 மார்ச் 1]

இருந்த நிலை இருந்தது. இதை சீரமைப்பு செய்து இல்லாத இடங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மேலும் தேவைப்படுமானால் இந்த 21 இடங்களில் பார்த்து ஏற்றுக்கொள்ளலாம்.

திரு. ப. [illegible] : தலைவரவர்களே, 5 மைல்களுக்கு அப்பால் இருக்கிற இடத்திலும் சொந்தக் கட்டிடம் இருக்கிற இடத்தில் கிளை நிலையங்கள் மூடப்பட்டிருக்கின்றன. இவைகளைப் பரிசீலித்து அந்த இடங்களில் திறந்து ஆட்களை நியமிக்க அரசு முன் வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, புதிதாக ஏற்படுத்துவதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, என்னுடைய தொகுதி காங்கேயம் தொகுதியாகும். அது கால்நடைக்குப் பெயர்போன இடமாகும். அங்கே இந்த சப் சென்டர்களையெல்லாம் மூடி விட்டார்கள். அந்த இடங்களில் [illegible] சாமான்கள், [illegible]கார்டுகளையெல்லாம் கறையான் அரித்துக்கொண்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல் அங்கே இருக்கிற விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். 10,12 மைல் அவர்கள் போகவேண்டியிருப்பதால் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, ஏற்கெனவே இருந்த இடங்களில் மறுபடி திறக்க அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, 10 மைல் 15 மைல் போக வேண்டுமென்று சொல்வது உண்மையான கூற்று அல்ல. தமிழ் நாட்டில் அதிகமான கால்நடை மருத்துவ மனைகள் கோவை மாவட்டத்தில்தான் இருக்கின்றன. மூடப்பட்ட இடங்களில், அத்தியாவசியமான இடங்களில் வேண்டுமென்றால் திறக்கலாம். 5 மைல் அளவில் புனரமைப்புத் திட்டப்படி ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. 21 இடங்களில் மூடப்பட்டாலும் மூடப்பட்ட இடம் அத்தியாவசியமான இடம் என்று அரசின் கவனத்திற்கு வருமானால் ஏற்றுக் கொள்ளலாம்.

திருமதி. த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இந்தக் கிளை நிலையங்களை எல்லாம் எந்தக் காரணங்களைக் கொண்டு மூடுகிறார்கள்!? ஏதாவது கமிட்டி போட்டு, அது வேண்டாமென்று சொல்லி, இவைகளை மூடினார்களா? அல்லது இலாகாவினுடைய விருப்பப்படி மூடுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, நீண்ட நாட்களாக ஒரு முறையற்ற நிலையில் செயல்பட்டு வந்தது. சில இடங்களில் இரண்டு மைல்களுக்கு இடையில் இருந்தன. சில இடங்களில் 25 மைல்களுக்கு இடையில் இல்லாமல் இருக்கிற நிலை இருந்தது. இதை சீரமைப்பு செய்யவேண்டுமென்று ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட தூரத்தில் இருக்கவேண்டுமென்று இப்படி புதிதாக அமைக்கப்பட்டிருக்கின்றன. எல்லா மாவட்டங்களிலும் மூடி விட்ட

தாகப் பொருள் இல்லை. கோவை மாவட்டத்தில் மூடப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களில் மூடப்பட்டதாகத் தகவல் இல்லை. கோவை மாவட்டத்தில் திறக்கப்படவேண்டிய நிலைகள் இருக்குமானால் கவனிக்கலாம்.

*Animal Husbandry Centre, Kuzhithurai.*

* 138 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state whether Holstein Freisien bulls and pure Jersey bulls have been supplied to the Kuzhithurai Animal Husbandry Centre ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : குழித்துறையிலுள்ள கேந்திர கிராம நிலையம் இணைந்த மருத்துவ மனையில், ஒரு ஹால்ஸ் டீன் ப்ரேஷயன் காளையும், இரு ஜெர்ஸி கலப்பின காளைகளும் உள்ளன.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, அங்கு தேவைக்கு ஏற்ப இந்த இனக் காளைகள் இல்லாமல் இருக்கின்றன. சில மாதங்களாக நல்ல இனக் காளைகள் இல்லாமல் இருந்ததன் காரணமாக பார்டர் ஏரியாவிலிருந்து கேரள மாநிலத்திலுள்ள நிலையங்களுக்கு கால்நடை வளர்ப்பவர்கள் போக வேண்டி இருந்தது. அந்தக் குறையை நீக்க தீவிர நடவடிக்கை எடுத்து இந்த இனங்களில் அதிக இனக் காளைகளை வழங்க அரசு முன் வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, அந்த மருத்துவ மனையில் 1969-ம் ஆண்டும், 1—4—1972-ந் தேதியிலும் காளைகள் அளிக்கப்பட்டுள்ளன. மீண்டும் காளைகள் தேவைப் படுமானால் பரிசிலனை செய்து பார்க்கலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இது தாலுகா தலைநகரத்தில் இருக்கிறது. குறிப்பாக அந்தப் பகுதியில் மற்ற இடங்களில் இந்த மாதிரியான அமைப்புகள் இல்லாத காரணத்தினால் இந்த ப்ரேஷயன் வெரைட்டியைக் கொடுத்து மற்ற இடங்களில் விஸ்தரிப்பதற்கு அரசு ஆவன செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, தேவைகளுக்கு ஏற்ப காளைகளை இப்போது கொடுக்க முடியவில்லை. புதிய காளைகளைப் பெற முடியவில்லை என்பதுதான் காரணம். வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய அனுமதிக்காக மத்திய சர்க்காரோடு தொடர்பு கொள்ளப்பட்டிருக்கிறது. அப்படி வருமானால் கொடுக்க முடியும்.



*Taxis in Madras City.*

* 139 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Transport be pleased to state :—

(*a*) whether it is a fact that passengers at railway stations in Madras City find it difficult to get taxis during peak hours ; and

(*b*) if so, the steps taken by the Government to ease the position?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) and (இ) : போக்குவரத்து நெரிசல் நேரங்களில் வாடகை மோட்டார் வண்டிகள் கிடைப்பதில் இடர்ப்பாடுகள் சில உள்ளன. இந் நிலைமையைச் சீர் செய்வதற்குக் காவல் துறையினரால் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(முற்பகல் 10-00)

திரு. என். கே. பழனிசாமி : சார், சென்ட்ரல் ஸ்டேஷன், எக்மோர் ஸ்டேஷன்களில் போலீசார் இருக்கிறார்கள். டாக்சிகாரர்கள் பயணிகளிடம் அதிகப்படியாக வாடகை வாங்கினாலும் போலீசார் ஒன்றும் செய்வதில்லை. ஆகையால் நிர்ணயித்த வாடகைக்குமேல் வாங்கக்கூடாது ; வாங்கினால் உடனடியாக போலீசார் நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே அத்தகைய நிலை உருவாகும்போது பயணிகள் புகார் கொடுத்தால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால் எனக்குக் கிடைத்திருக்கிற தகவல்படி போலீசார் இப்போது சரியாகச் செயல்படுவதால் கடந்த சில மாதங்களாக இத்தகைய புகார் எதுவும் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், இதற்கு முன்னால் சென்ட்ரல், எக்மோர் ரயில்வே ஸ்டேஷன்களில் வருகின்ற பயணிகளை கியூ நிறுத்தி வைத்து, ஒழுங்காக ஏற்றி அனுப்பினார்கள். இப்போது கொஞ்ச நாட்களாக அப்படி செய்யவில்லை. எந்த பயணியும் ஒரு சிறு பெட்டி கூட இல்லாமல் வரமாட்டார்கள். ஒரு சின்னப் பெட்டி கையில் இருந்தாலும் ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் கூடுதலாக வாடகை கேட்கிறார்கள். அப்படி வாங்காமல், முன்னைப் போலவே கியூ நிறுத்தி பயணிகளை ஏற்றிச் செல்ல சம்பந்தப்பட்ட இலாகா மூலமாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, வாடகை வண்டிகள் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டு, வருகின்ற பயணிகள் ஏறிச் செல்ல இப்போது காவல் துறை நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. ஆகையால் உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற கருத்து சரியானது அல்ல.

[1975 மார்ச் 1

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, நாங்கள் சென்ட்ரல் ஸ்டேஷனில் இறங்கி பெட்டியுடன் வரும்போது டாக்சிகாரர்கள் வாருங்கள் என்று அழைத்துச் செல்கிறார்கள். காரிலே ஏறியவுடன் எம்.எல்.ஏ. ஆஸ்டல் என்று சொன்னவுடன் வர மறுக்கிறார்கள். அடையாறு, தேனாம்பேட்டை போன்ற நீண்ட தூரம் என்றால் தான் வருகிறார்கள். அதனால் எங்களுக்கு மிகவும் கஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, இந்த மாதிரியான சங்கடங்கள் இல்லாமல் எந்த இடத்திற்கு வேண்டுமானாலும் போக நடவடிக்கை எடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு புகாரை சொல்லியிருக்கிறார்கள். இது பற்றி ரயில்வே போலீஸ் நடவடிக்கை எடுக்க வேண்டியிருப்பதால் இத் தகவல் அவர்களுக்கு நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படும்.

THIRU B. VENKATASWAMY : In the State Express Bus Stand there is no queue for taxis or any policeman posted. when you go and get down from the Express Bus Stand ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ரயில்வே ஸ்டேஷன் டாக்சியைப் பற்றி கேட்பதாக இருந்தால் கேளுங்கள். ரயில்வே ஸ்டேஷனிலிருந்து நீங்கள் பஸ் ஸ்டான்ட்டுக்கு வந்துவிட்டீர்கள். டாக்சி என்று சொன்னவுடன் பஸ் ஸ்டான்ட் டாக்சியைப் பற்றி கேட்க வேண்டுமென்றல்ல.

THIRU B. VENKATASWAMY : I am asking only regarding tazis

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி ரெயில்வே ஸ்டேஷன் டாக்ஸியைப் பற்றியது. நீங்கள் கேட்பது பஸ் ஸ்டான்ட் டாக்சியைப் பற்றியது. மூலக் கேள்விக்கு நீங்கள் கேட்பது சம்பந்தப்படாதது. அதனால் நீங்கள் உட்காருங்கள்.

DR. H. V. HANDE : In view of the difficult position of the passengers with regard to getting taxis from the railway stations, may I know from the Government whether it is possible to have small mini-buses for transport of passengers from Central and Egmore Railway Stations. I understand that there was a proposal like that with the Government earlier. May I know from the Government whether they will conside seriously this position and give us some indication as to the steps that they are going to take on this subject ?



1975 மார்ச் 1]

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, there has been such instances of complaints as far as the air port is concerned once. The Pallavan Transport Corporation was asked to run some comfortable buses between the Air Port and important places in the City. The same suggestion is now commended to the Pallavan Transport Corporation, so that important places in the City can be connected to the Railway heads by providing all the facilities in the buses to carry luggage, etc.

THIRU M. A. LATHEEF : There seems to be no correlation between the incoming and outgoing passengers from the Railway Stations in the Madras City and the number of taxis that are available. In order to mitigate these difficulties, will the Government come forward to have more auto-rickshaws, instead of having these difficulties experienced time and again ?

THE HON. THIRU S. RAMACHANDRAN : The correlation has to be effected by the Railway Police which is there. But the difficulty is, we cannot make more taxis and auto-rickshaws available because the space in the platform is limited.

திரு. ஆலடி அருணா : தலைவரவர்களே, பிரயாணிகளுக்கும் டாக்சிகாரர்களுக்கும் வருகின்ற தொல்லைகள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு முறையில் இருக்கிறது. சென்னை, கல்கத்தா, பம்பாய் நகரங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, டில்லியில் இருக்கிற டாக்சிகாரர்கள் நேர்மையாகவும் நாணயமாகவும் நடந்து கொள்கிறார்கள் அங்குள்ளவர்களைப்போல. ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கள்வி ரெயில்வே ஸ்டேஷன் டாக்சிகளைப் பற்றியது. நீங்கள் கேட்பதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை ; உட்காருங்கள்.

திரு. நா. காசிராமன் : தலைவரவர்களே, டாக்சிக்கு வருகின்ற பிரயாணிகள், அதிகப்படியாகக் கட்டணம் கேட்டால், புகார் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். சென்னைக்கு வருகின்ற பயணிகளுக்கு அநேகமாக தங்களுடைய வேலைகளை முடித்துக் கொள்வதற்கே நேரம் போதாமல் இருக்கும்போது புகார் செய்வதற்கு எங்கே நேரம் இருக்கப் போகிறது ? இந்தக் கஷ்டத்தை நானே அனுபவித்திருக்கிறேன். ஆகவே, புகார் செய்ய வேண்டுமென்று காத்திராமல், இந்தக் கஷ்டத்தைப் போக்க தகுந்த முறையில் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

[1975 மார்ச் 1

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் கருத்தில் யாருக்கும் வேறுபாடு கிடையாது. ஆனால் வருகின்றவர்கள் புகார்கூட எழுதிக் கொடுக்க மாட்டேன் என்றால் நடவடிக்கை எடுப்பதற்கு ஆதாரம் இல்லாமல் போய்விடுகிறது. இருந்தாலும் இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு ரயில்வே போலீஸ், ரயில்வே ப்ரொட்டக்ஷன் ஃபோர்ஸ், டிரான்ஸ் போர்ட் டிப்பார்ட்மெண்ட்—இந்த மூன்று துறையினரும் சேர்ந்த ஒரு குழு அமைக்கும் யோசனை அரசின் பரிசீலனையில் உள்ளது.

கோவை நகரில் ஆட்டோ ரிக்ஷாக்கள்.

*140 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவை நகரில், ஆட்டோ ரிக்ஷாக்கள் ஓட்டுவதற்கான உரிமங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: கோவை நகரில் ஆட்டோ ரிக்ஷா உரிமங்களின் எண்ணிக்கைக்கு உச்சவரம்பு நிர்ணயிக்கப்படவில்லை. உரிமங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, கோவை நகரில் பொதுமக்களுக்கு ஆட்டோ–ரிக்ஷா தேவை அதிகமாக இருக்கிறது. ஆனால் ஒரு வருடத்திற்கு முன்பு. கூட்டுறவுச் சங்கங்கள் ஆட்டோ–ரிக்ஷாக்கள் கேட்கும்போது, அது கூடாது என்று தடுக்கின்ற ஏற்பாடு நடைபெற்றது. தடுக்கின்ற நிலைமை இல்லாமல் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். அதோடு பொதுமக்களுக்குப் பயன்படுகின்ற முறையில் ஆட்டோ–ரிக்ஷாக்களில் மீட்டர்கள் போடுகிறார்கள். ஆனால் மீட்டர் பழுதுபட்டுவிட்டது. என்று சொல்லி பொதுமக்களிடத்தில் 2 ரூபாய் 3 ரூபாய் என்று பேசி அதற்குப் பின்னால்தான் ஓட்டுகிறார்கள். ஆகையால் மீட்டர் பழுதுபட்டிருந்தால் அவர்களுடைய லைசென்ஸை சஸ்பெண்ட் செய்து வைக்கும் நிலைமை ஏற்பட்டால்தான் ஒழுங்காக மீட்டரை வைத்துக் கொள்வார்கள். அதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமா ?



1975 மார்ச் 1]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மீட்டர்களை, ஒழுங்காக வைத்துக் கொள்ள வேண்டியது அவர்களுடைய கடமை. இல்லை என்றால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. கோ. இளங்கோவன்: தலைவரவர்களே ஆட்டோ–ரிக்ஷாக்களில் இப்போது இரண்டு பேர்களை மட்டும் ஏற்றிச் செல்கிறார்கள் ; இனி மேல் 3 பேர்களை ஏற்றிச் செல்ல நடவடிக்கை எடுக்க உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: உத்தேசம் இல்லை.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, டாக்சிகள், ஆட்டோ–ரிக்ஷாக்களில் கட்டணம் அதிகப்படுத்துவதற்கு காரணம் பெட்ரோல் விலை ஏறியிருப்பதுதான். அதனால் மக்களுக்கும் கஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, கல்கத்தாவில், லண்டனில் இருப்பதைப்போல நல்ல குதிரை வண்டிகள் ஓட்டுவதற்கு அனுமதி கொடுத்தால் சீப்பாக இருக்கும். அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அவரவர் சொந்தத்தில் வைத்துக் கொள்ளலாம்.

திரு. கே. என். குமாரசாமி: பெட்ரோல் விலை ஏறிவிட்டதால் எங்களுக்கு வாடகை கட்டுப்படி ஆகவில்லை என்று ஆட்டோ–ரிக்ஷாகாரர்கள் தகராறு செய்கிறார்கள். அதனால் இப்போது 2 பேரை ஏற்றிச் செல்வதற்குப் பதிலாக 3 பேரை ஏற்றிச் சென்றால் சரிகட்டிக் கொள்ளுவார்கள். தகராறு இருக்காது. அதை அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பெட்ரோல் விலை ஏறிவிட்டதால் அந்த அளவுக்குக் கட்டணத்தையும் உயர்த்தியிருக்கிறார்கள். ஆகையால் பெட்ரோல் விலை காரணமாக 3 பேரை ஏற்றிச் செல்ல அனுமதிக்கும் திட்டம் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே. கோவை நகரில் இப்போதும் ஆட்டோ–ரிக்ஷாக்களுக்கு லைசென்ஸ் கொடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். ஆனால் நாகர்கோவிலில் ஒரு லைசென்ஸ்கூடக் கொடுக்கப்படவில்லை. அதற்கு என்ன காரணம் ? இனிமேல் அங்கும் ஆட்டோ–ரிக்ஷாக்களுக்கு லைசென்ஸ் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தனிப்பட்ட காரணம் எதுவும் அதற்கு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விபரம் அறிந்து தெரிவிக்க முடியும்.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, ஆட்டோரிக்ஷாக்-காரர்கள் தகராறு செய்தால் குறைந்தபட்சம் அவர்களுடைய லைசென்ஸை 3 மாதம் சஸ்பென்ட் செய்ய வேண்டும் ; அல்லது டிரைவர் களுடைய லைசென்ஸை 3 மாதம் சஸ்பென்ட் செய்ய வேண்டும். அப்படி செய்தால்தான் அவர்களுடைய தகராறுகளை நீக்கமுடியும். அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த யோசனை கருத்தில் கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி *இடப்பட்டிருந் தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்),

## 2. நடைமுறைக் கேள்வி

வரவு செலவுத் திட்டம் சம்பந்தமான புத்தகங்களை உறுப்பினர்கள் அறைகளில் கொடுக்காமல் அவையில் கொடுத்தது குறித்து.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : சார் ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே இதுவரை பட்ஜெட் சம்பந்தப்பட்ட புத்தகங்கள் அனைத் தையும் உறுப்பினர்களுடைய அறைக்கே கொண்டுபோய் கொடுப்பது வழக்க மாக இருந்தது. ஆனால் இந்த ஆண்டு இவ்வளவு பெரிய புத்தகங்களை எல்லாம் இங்கேயே கொடுத்தால் இவற்றை நாங்கள் எப்படி எடுத்துச் செல்வது? நடைமுறையை இந்த ஆண்டு மாற்றுவதற்கு என்ன காரணம்!

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1962-இல் இருந்து நானும் இங்கே உறுப்பினராக இருந்து வந்திருக்கிறேன். இங்கே கொடுப்பதை தூக்கிக் கொண்டுதான் போயிருக்கிறேன். இதில் ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. நீங்கள் இவற்றை எல்லாம் இங்கேயே விட்டுவிட்டுப் போங்கள். அதை நான் தங்களுடைய அறைக்கு அனுப்பி வைக்கச் சொல்கிறேன்.



## 3. 1975–76ஆம் ஆண்டுக்கான திட்டம்—அளித்தல்

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1975–76ஆம் ஆண்டுக்கான நிதி நிலை மதிப்பீடு களையும், 1974–75ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு களையும் இம் மன்றத்தின் முன் ஒப்புதலுக்காக வைக்கின்றேன்.

2. கட்டுக்கடங்காத நிலையில் விலைவாசி ஏறிக் கொண்டு போவதும், அதனை எட்டிப்பிடிக்க முடியாத அளவுக்கு வாங்கும் சக்தி இருப்பதுமான ஏற்றத்தாழ் வான பொருளாதார நிலைக்குத் தீர்வு காண முடியாமல், இந்திய நாடு குழம்பிக்கொண்டிருக்கும் சூழ்நிலையில் வெளியிடப்படும் நமது மாநிலத்து நிதிநிலை அறிக்கை யில், அந்த வேதனையின் நிழல் விழுவதைத் தவிர்க்க முடியாது என்பதை மன்றத்து மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவீர்கள்.

3. உலகெங்கும் விலைவாசி உயர்வு கடுமையாக இருந்த போதிலும், ஏழ்மைமிக்க இந்திய நாட்டுக்கு அதனைச் சமாளிக்கும் சக்தி இன்னும் முழுமையாக ஏற்படவில்லை. நிலையற்ற தன்மையில் பணத்தின் மதிப்பு ஊசலாடும் போது, வருமானத்தின் உண்மை மதிப்பு ஒளியிழந்து விடுகிறது. முதலீடுகளுக்கும் சேமிப்புகளுக்கும் அதே கதி தான். களையப்பட வேண்டுமென்று கருதுகிற சமுதாய ஏற்றத்தாழ்வுகள், சற்றும் அசைந்து கொடுக்கா மல் நிற்பதற்கும் இந்தப் பொருளாதாரச் சிக்கல் தான் காரணமாகிறது. விலை ஏறுகிறது. ஊதியங்கள் உயர்த் தப்படுகின்றன. விண்ணில் ஏறிப்பறக்கும் காற்றாடிபோல் ஏறுகிற விலைவாசிக்கு, உயர்த்தப்படுகிற ஊதியங்கள், மேலும் உயரப்பறப்பதற்கு உதவுகிற நூல்கயிறாக அமைகின்றது. ஊதிய உயர்வுக் கோரிக்கை வைப்ப தற்கு வாய்ப்பற்ற பல கோடி மக்கள் இந்திய நாட்டில் இருக்கிறார்கள். காரணம்—அவர்களுக்கு எந்த ஊதிய மும் இல்லை ! ஊதியம் இருந்தால் தானே உயர்த்த

174-289-ஆம் பக்கங்களில் வரவு செலவு திட்ட உரையின் இணைப்பு களும், வரவு செலவுத் திட்ட உரை இணைப்புகள் ஆகியவற்றின் ஆங்கில மொழியெர்ப்பும் அச்சிடப்பட்டுள்ளன.

[1975 மார்ச் 1

வேண்டுமென்ற குரலே எழப் போகிறது? அவர்களுக்கும் சேர்த்துத்தான்—சரியாகச் சொல்வதானால், அவர்களை முக்கியமாக வைத்துத்தான், நமது பொருளாதாரப் புரட்சியையே உருவாக்க வேண்டும்.

4. அறிஞர் அண்ணா அவர்கள் இந்த அவையில் பன்முறை எடுத்துக் காட்டியது போல, விலைவாசியைக் கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரங்கள் அனைத்தும் மத்திய அரசிடம் குவிந்திருக்க, விலை உயர்வுகளின் காரணமாக எழும் குமுறல்களுக்குப் பொறுப்பேற்க வேண்டிய நிலை, பெரும்பாலும் மாநில அரசுகளுக்கே ஏற்பட்டுவிடுகிறது. ஓரிரு திங்களுக்கு முன்பு ரிசர்வ் வங்கியே வெளியிட்டுள்ள தனது ''நாணய-நிதி அறிக்கை'' எனும் நூலில், ''தொடர்ந்து இருந்து வருகிற விலையேற்றத்தை, நிர்வாகக் காரணங்களினாலோ அரசியல் காரணங்களினாலோ, அரசு, சரிவர சமாளிக்க முடியவில்லையோ என்ற அச்சம் உருவாகியுள்ளது'' எனக் குறிப்பிட்டிருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

5. இந்த ஆண்டு நமது மாநிலத்தில் ஏற்பட்டுள்ள வறட்சிக் கொடுமை, விலைவாசி உயர்வுக்கு மேலும் ஒரு காரணமாக அமைந்துள்ள போதிலும், இந்த உயர்வுக்கு அடித்தளமாக, சில ஆண்டுகளாக மத்திய அரசு கடைப்பிடித்து வரும் நிதி நிர்வாகக் கொள்கை அமைந்துள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. விறுவிறுப்புடன் அணுகி, விரைவாக எடுக்க வேண்டிய பொருளாதாரக் கொள்கை முடிவுகள் பல இருப்பினும், இப்போது குறிப்பாக,

—திட்ட முதலீடுகளது தன்மை பற்றியும், அளவு பற்றியும் தீர்வு காண்பது ;

—உணவுப் பெருக்கத்திற்கும், தொழில் பெருக்கத்திற்கும் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வது;

—பொதுத் துறை, தனியார் துறை என எல்லாத் துறைகளுக்கும் பொருந்துவதாக, தேசிய அளவில், ஊதியங்கள், வருமானங்கள், ஆதாயங்கள் பற்றிய கொள்கைகளை வகுத்துச் செயல்படுத்துவது,

ஆகிய இவற்றிலாவது உடனடி அக்கறை காட்டட



1975 மார்ச் 1]

வேண்டும். விலைவாசியேற்றத்தால் ஏற்படும் வேதனை விளைவுகளைத் தவிர்ப்பதாகச் சொல்லி, மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகள் பொது மக்களுக்கு உகந்ததாக அமையவில்லை. எனவே, அத்தகைய நடவடிக்கைகளை எடுக்குமுன்னர், மக்களோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்ட மாநில அரசுகளுடன் கலந்து விவாதித்துச் செயல் படுவதே நலம் பயக்கும். மத்திய அரசு, முதல் அமைச்சர்கள் மாநாடு ஒன்றைக் கூட்டி, நாட்டின் பொருளாதார நிலையையும், அதன் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளையும் பற்றி மனங்கலந்து பேசவேண்டும் என்ற கருத்தை பலமுறை நான் வற்புறுத்தியுள்ளேன். இதனை மத்திய அரசு இதுகாறும் ஏற்க முன்வரவில்லை என்பதும் வழக்கமாகக் கூட்டப்பட வேண்டிய தேசிய வளர்ச்சிக் குழுவுங்கூட கடந்த 15 மாதங்களாகக் கூட்டப்படவில்லை என்பதும் வருந்தத்தக்கனவாகும்.

6. மத்திய அரசு தனது வரவு-செலவுத் திட்டங்களில், பெருத்த துண்டு விழுவதைத் தவிர்க்க முடியாமல் இருக்கும்போது, மாநில அரசுகள் தத்தம் வரவு செலவுகளைச் சரிக்கட்ட வேண்டும் என்றும், பற்றாக்குறை ஏதும் ஏற்பட விடலாகாது என்றும், அறிவுறுத்துவதும், அச்சுறுத்துவதும் முரண்பாடானதாகும். இதனால் மாநில அரசுகள் பற்றாக்குறையைச் சரிக்கட்டாமல் விட்டுவிட வேண்டும் என்று நான் கூறுவதாகக் கருதிவிடக் கூடாது. நான் வேண்டுவதெல்லாம், மத்திய அரசானாலும், எந்த மாநில அரசானாலும், நிதி நியாயம் ஒன்றாக இருக்க வேண்டுமென்பதே. மாநிலங்களது வளர்ச்சிப் பணிகள், துயர் தணிப்புப் பணிகள், இவற்றுக்குத் தேவையான உதவிகளைக் குறைத்தோ, அல்லது பொதுக் கடன்களில் மாநிலங்களின் உரிய பங்கை மறுத்தோ, மத்திய அரசு தனது பற்றாக்குறையை ஈடு செய்ய முயற்சி செய்வது சரியல்ல.

7. மத்திய-மாநில அரசுகளுக்கிடையிலான நிதி உறவுகள் இவ்வாறு உறுதியாக அமையாத நிலையில், ஒரு புறம் வளர்ச்சித் தேவைகளையும், மறுபுறம் சீரான நிதி நிர்வாகத்தையும் கருத்தில் கொண்டு, சூழ்நிலைக்கேற்ப வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டி

யிருக்கிறது. நமது மாநிலத்தைப் பொறுத்தவரை, பின்வரும் முக்கிய குறிக்கோள்களுடன் வரும் ஆண்டின் வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது :—

திட்டப்பணிகள் ;

திட்டத்திற்கு அப்பாற்பட்ட வளர்ச்சிப் பணிகள் ;

வறட்சி நிவாரணப் பணிகள் ;

சமூக நல சிறப்புப் பணிகள் ;

சமதர்ம சமுதாய அமைப்புப் பணிகள் ;

இவை அந்தக் குறிக்கோள்கள் ஆகும்.

## ஐந்தாண்டுத் திட்டம்.

8. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையான 25,000 கோடி ரூபாயை விட, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு இரு மடங்குக்கு மேலாக, அதாவது 53,400 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்ற மத்திய அரசின் அறிவிப்பு, நமக்கெல்லாம் பூரிப்பை வழங்கியதோடு, இந்திய நாட்டுப் பொருளாதார வளர்ச்சிக்கும், வேலை வாய்ப்புக்கும், வறுமையை வெளியேற்றும் கொள்கைக்கும் உறுதுணையாக அமையும் என்று எதிர்பார்த்தோம். ஆனால், நிலைமை அதற்கு மாறாக அமைந்து விட்டது. திட்டங்களுக்கு விடுமுறை அளிக்கப்பட வேண்டும் என்கின்ற ஒரு சாராரின் வாதம் பிற்போக்கு வாதம் என்று சொல்லப்பட்ட போதிலும், மத்திய அரசு, செயல் அளவில், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு விடுமுறை அளித்து, அந்தச் சாராரோடு தன்னை இணைத்துக் கொண்டிருக்கிறது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான வரைவுக் குறிப்புகள் எல்லா மாநில முதலமைச்சர்களுக்கும் அனுப்பப்பட்டு, அது பற்றிய ஆய்வுக்கூட்டம் டெல்லியிலே நடைபெற்று, அதன்பிறகு மாநிலங்களுக்கான திட்டங்களைப் பற்றி மாநில அரசுகளோடு தனித்தனியாக மத்தியத் திட்டக் குழு கலந்து பேசி, அதனைத் தொடர்ந்து திட்டத்திற்கான முழு வடிவு காணப்படும் என்பதற்குத் தேசிய வளர்ச்சிக் குழு கூட்டம் கடந்த ஆண்டே நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு, இப்போது ஆண்டுத் திட்டங்களே நிறைவேறினால் போதும் என்கிற அளவிற்கு ஐந்தாண்டுத் திட்டம் குறுகிப் போய் இருக்கிறது.



## 1975—76ஆம் ஆண்டுத் திட்டம்

9. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் நடைமுறைக்கு வரும் என்பது பற்றிய நம்பிக்கையை இழந்துவிட்ட நமது மாநிலம், 1975—76க்கான ஆண்டுத்திட்டத்திற்கு 163 கோடி ரூபாய் ஒதுக்கப்பட வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டது. 1973—74இல் நமது மாநிலத் திட்டத்தின் அளவு 129 கோடி ரூபாய். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டாக இருக்க வேண்டிய இந்த நடப்பாண்டில், மத்திய அரசு ஒப்புதல் அளித்த திட்டத்தின் அளவு 112 கோடி ரூபாய். இருப்பினும், நாம் அந்தத் திட்டத்தின் அளவை 142 கோடி ரூபாயாக உயர்த்திக்கொண்டோம். வரும் ஆண்டு, நாம் கேட்ட 163 கோடி ரூபாய்த் திட்டத்திற்கு மாறாக, 143 கோடி ரூபாய் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதில் மத்திய அரசின் உதவியாக இதுவரையில் உறுதி அளிக்கப்பட்டிருப்பது 41.15 கோடி ரூபாய். இந்த உதவியை மேலும் உயர்த்த வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்தி வருகிறோம். இந்த 143 கோடி ரூபாய்த் திட்ட அளவில், வாரியங்கள், அரசுத் துறை நிறுவனங்கள் பலவற்றின் சொந்த நிதி வசதிகள், அவை பெற்றுள்ள கடன்கள் ஆகியவை அடங்கா. மாநில வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் வராமல், ஏனைய வருவாய்கள் மூலமாக, இந்த நிறுவனங்கள் வளர்ச்சிப் பணிகளுக்குச் செலவிடும் தொகைகளையும் திட்டச் செலவின் பகுதியாகக் கணக்கில் எடுத்துக் கொண்டால், திட்டத்தின் அளவு, இவ்வகையில் மேலும் 27 கோடி ரூபாய் உயர்ந்து, மொத்தம் 170 கோடி ரூபாயாக இருக்கும்.

## வறட்சித் துயர் தணிப்பு

10. நமது மாநிலம், என்றுமே கண்டிராத வகையில், கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதன் காரணமாக, திட்ட வளர்ச்சியின் வேகம் குன்றிவிடக் கூடாது என்பதில் நாம் கவனமாக இருக்கிறோம்.

கிராமப் பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டங்களுக்கும், கணிசமான வேலை வாய்ப்பு அளிக்கக் கூடிய பல்வேறு திட்டங்களுக்கும் இயல்பாகச் செய்துள்ள நிதி ஒதுக்கீடு களிலிருந்து, அடுத்த ஏழு திங்கள்களில் வறட்சிப் பகுதி களில் செலவிட இயன்ற அளவுக்கு வகை செய்யப்படும். இந்த வகையில், திட்டப் பணிகளுக்காகச் செய்யப் பட்டுள்ள நிதி ஒதுக்கங்களிலிருந்து, வறட்சியால் பாதிக் கப்பட்ட பகுதிகளில் நடப்பாண்டில் 7 கோடி ரூபாயும், 1975—76 இல் 18 கோடி ரூபாயும் செலவிடப்படுமென்று நாம் மதிப்பிட்டுள்ளோம். இத்துடன் நடப்பாண்டில் வறட்சித் துயர் தணிப்புப் பணிகளுக்காக, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வாயிலாக 10 கோடி ரூபாயும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு 2 கோடி ரூபாயும் நாம் வழங்கியுள்ளோம். வறட்சித் துயர் தணிப்புப் பணிகளுக்காகத் திட்டத்திற்கு அப்பால், மேலும் 20 கோடி ரூபாய், 1975—76 வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டிலும், வரும் நிதி ஆண்டிலும் திட்டத்தின் பகுதியாகவும், திட்டத்திற்கு அப்பாற்பட்டதாகவும் மொத்தம் 57 கோடி ரூபாய் வறட்சிப் பணிகளுக்காகச் செலவிடப்படும். இதற்கென நாம் மத்திய அரசிடம் கேட்டுள்ள நிதி உதவி 30 கோடி ரூபாயில், நடப்பு நிதி ஆண்டுக்கு 7.5 கோடி ரூபாய் அளிக்குமென்று உறுதி கூறப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையும் கிடைக்குமென்று நம்புகிறோம்.

11. 1969-ல் ஏற்பட்ட வறட்சியை ஒட்டி நாம் 18·64 கோடி ரூபாய் செலவில் துயர் தணிப்புப் பணிகளை மேற்கொண்டோம். அவை கிராமக் குடிநீர் வழங்கு திட்டங்கள், சிறிய பாசனத் திட்டங்கள், சாலை அமைப்புத் திட்டங்கள் போன்ற நிலையான பணிகளுக்குச் செலவிடப் பட்டு, மாநிலத்தில் பரவலாகப் பயன் தந்துவருகின்றன. அவ்வாறே, 1972இல் ஏற்பட்ட வெள்ளத்தின் பிறகும், நாம் 13·61 கோடி ரூபாய்ச் செலவில் துயர்தணிப்புப் பணிகளை மேற்கொண்டு, அதன்கீழ், மண்மேடிட்ட நிலங்களைச் சீர் செய்தல், சாலைகளை மேம்படுத்தல், பாசன ஆதாரங்களைப் புதுப்பித்தல் போன்ற வேலைகளைச் செய்து முடித்து, நிரந்தரப் பலன்கள் மக்களுக்குக் கிட்டுமாறு செய்தோம். அதே அடிப்படையில், இப் போது மேற்கொள்ளப்பட்டுள்ள வறட்சித் துயர் தணிப்புப் பணிகளும் கிராமப் பகுதிகளுக்கு நிலையான பயன் தரும் வேலைத் திட்டங்களாகவே வடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, துயர் தணிப்புப் பணிகளுக்காக மத்திய அரசிடம் நாம் கோரும் உதவி, கூடுதல் நிதி வசதியாகவே அமைய வேண்டும். மத்திய அரசிடம் நாம் கேட்கும் தொகை, வரும் ஆண்டுகளில் மத்திய அரசு தரும் இயல்பான திட்ட நிதி உதவியை முன்னதாகவே தருவது என்று அமைந்து, அடுத்த ஆண்டுத் திட்டத்தில் குறைக்கப்பட்டு விட்டால், நமக்குப் பயன் ஏதும் இராது. வெறும் கணக்கு வழக்காக ஏட்டளவில் இல்லாமல், உண்மை யான நிதி உதவி, மத்திய அரசிடமிருந்து நமக்குக் கிட்ட வேண்டுமென்பதே நமது கருத்து.





12. இயற்கையின் புறக்கணிப்பால் ஏற்பட்டுள்ள இப்படிப்பட்ட நெருக்கடியான நிலையிலும், நமது வளர்ச்சிப் பணிகளுக்கு குந்தகம் விளையாத அளவிற்கு நமது திட்டப்பணிகளும், திட்டத்திற்கு அப்பாற்பட்ட ஏனைய வளர்ச்சிப் பணிகளும், செம்மையாக நடைபெற இந்த நிதிநிலை மதிப்பீட்டில் வழிவகைகள் செய்யப்பட் டுள்ளன.

## வேளாண்மையும் அதனுடன் இணைந்த துறைகளும்.

13. வேளாண்மையே தமிழகப் பொருளாதாரத் தின் உயிர் நாடியாக விளங்குகிறது. வேளாண்மை வளர்ச்சிக்குத் தலையாய முன்னுரிமை அளிப்பது நமது கொள்கையாகும். கடந்த ஆண்டுகளில் புதி தாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நெற்பயிர்களைப் போலவே, நடப்பாண்டில் ஆடுதுறை 31 (ADT 31), பூசா 33 (PUSA 33) என்ற இரு புதிய நெல்வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 90 நாட்களுக்குள் பலனளிக்கும் குறுகிய கால நெற்பயிரான 6543 என்ற புதிய நெல்வகை வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. சோள மணி, தீவனத் தட்டை ஆகிய இரண்டும் பெருமளவில் அளிக்கின்ற கோவில்பட்டி நெட்டை எனப்படும் புதிய கலப்பின

சோள வகை ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. CBS 156 என்ற புதிய பருத்தி வகை ஒன்றையும் நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம். இவ்வகைப்பருத்தியைக் கொண்டு 120ஆம் எண் நூல் வரை நூற்க முடியும்; ஏக்கர் ஒன்றுக்கு 15 முதல் 20 குவிண்டால் வரை பருத்தி கிடைக்கும்.

14. தமிழகத்தில் தற்போது 11 இலட்சம் ஏக்கர் பரப்பிற்கு விளை நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. இவற்றைப் படிப்படியான விளைநிலங்களாக மாற்ற வேண்டி, அரசுப் பண்ணை நிறுவனம் ஒன்றை இந்த ஆண்டில் அமைத்துள்ளோம். விதை உற்பத்தியைப் பெருக்க, அரசு விதைப் பண்ணைகளில் பல்வேறு வசதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஒரு இலட்சம் ஏக்கர் பரப்பில், மரவள்ளிக் கிழங்கு பயிரிடும் பொருட்டு கடற்கரையோர மாவட்டங்களில், 1975–76இல் மூன்று விதைப் பண்ணைகள் ஏற்படுத்தப்படும். ஒவ்வொரு பண்ணையும் 100 ஏக்கர் பரப்பைக் கொண்டதாக இருக்கும். நாம் மேற்கொண்டிருக்கும் முக்கியமான பணிகளில் ஒன்று, வேளாண்மை முனைப்புத் திட்டமாகும் (I.A.A.P.). இது, சேலம், தருமபுரி, முகவை, குமரி மாவட்டங்களில் இதுவரை செயல்படுத்தப்படவில்லை. வரும் ஆண்டு, இந்தத் திட்டத்தை மேற்கூறிய நான்கு மாவட்டங்களிலும் விரிவுபடுத்துவதன் வாயிலாக, 1975–76ஆம் ஆண்டு இறுதிக்குள் தமிழ் மாநிலம் முழுவதும் இது நடைமுறைக்கு வரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

15. வறட்சி நிலவும் தற்போதைய நிலையில், 5 இலட்சம் ஏக்கரில் நெல்லும், 6 இலட்சம் ஏக்கரில் சிறு தானியமும், 6 இலட்சம் ஏக்கரில் பயறு வகைகளும் விளைவிக்க கோடைக்கால பயிரிடும் பெருந்திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. கோடைப் பயிர் விளைவிக்க உழவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் பல வசதிகளும் சலுகைகளும் அளிக்கப்பட்டு வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்கெனவே அறிவர். வேளாண்மைத் துறை நிர்வகித்து வரும் மண்வளப் பாதுகாப்புத் திட்டங்களும், சிறுபாசனத் திட்டங்களும், வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு பயனளிக்கும்





வகையில் விரிவுபடுத்தப்படும். 1975–76ஆம் ஆண்டில், வேளாண்மைத்துறை 2,500 குழாய்க் கிணறுகளையும், 2,000 வடிமுனைக் கிணறுகளையும், 800 துணைக் கிணறுகளையும் அமைப்பதோடு, 1,800 கிணறுகளை ஆழப்படுத்தவும் செய்யும். இதற்காகத் துளையிடு கருவிகள், பாறையைத் தகர்க்கும் சாதனங்கள் ஆகியவற்றை வாங்கப் போதிய அளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

16. மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் தொடங்கப்பட்டுள்ள கால்நடை வளர்ப்பு முனைப்புத் திட்டம், வரும் நிதி ஆண்டில், தஞ்சை மாவட்டத்திலும் செயல்படுத்தப்படும். வரும் ஆண்டில், நமது மாநிலத்தில் 8 புதிய மையக் கிராம வட்டாரங்களும், 25 கூடுதல் கால்நடை மருந்தகங்களும் திறக்கப்படும். அதிகப் பால் தருகின்ற 240 உயர் இனப் பசுக்களையும், 10 பொலி காளைகளையும், டென்மார்க்கிலிருந்து தருவித்து வளர்க்கும் திட்டம், தஞ்சாவூர் மாவட்டத்தில் ஈச்சன்கோட்டைப் பண்ணையில் வரும் ஆண்டில் செயல்படுத்தப்படும். கடந்த ஆண்டு தொடங்கப்பெற்று, தனது பணிகளை விரிவாக்கி வருகின்ற கோழி வளர்ப்புக் கழகத்திற்கு 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

17. சென்ற ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட மீனவளர்ச்சி நிறுவனம் செவ்விய வகையில் செயல்பட்டு வருகிறது. 1975–76 ஆம் ஆண்டில் வேளாண்மை மறுநிதி உதவி நிறுவனத்திடமிருந்தும், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்தும் நிதி உதவி பெற்று, 250 மீன்பிடி விசைப் படகுகள் தயாரித்து வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக, 70 இலட்சம் ரூபாய் அரசின் நிதி அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது. ஆழ்கடல் மீன்பிடி திட்டத்திற்காக நான்கு இழுபடகுகள் உள்நாட்டிலிருந்தும், இரண்டு இழுபடகுகள் வெளி நாடுகளிலிருந்தும் வாங்குவதற்கு இந்த நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது. தமிழ்நாடு வனத் தோட்ட நிறுவனம், வனத்துறை பொறுப்பிலிருந்து சுமார் 1·87 இலட்சம் ஏக்கர் காட்டு நிலங்களை மேற்கொண்டு, புதிய காடுகளை உருவாக்கி வருகிறது. இந்த நிறுவனத்திற்கு நிதி வழங்க வரவு-செலவுத் திட்டத்தில் 12 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

### பாசனம்

18. நமது அரசு ஒவ்வொரு ஆண்டும், பெரிய, நடுத்தர, சிறிய பாசனப் பணிகளுக்குத் தக்க முன்னுரிமை கொடுத்து வருகின்றது. மொத்தம் 112·5 கோடி ரூபாய் செலவில் 5.5 இலட்சம் ஏக்கர் நிலங்கள் பயன் பெறும் வகையில் 23 பெரிய, நடுத்தர பாசனத் திட்டங்களை கடந்த எட்டு ஆண்டுகளில் மேற்கொண்டுள்ளோம். அதே நேரத்தில் சிறப்புச் சிறு பாசனத் திட்டத்தின் கீழும் தூரெடுத்துச் சீரமைக்கும் திட்டத்தின் கீழுமாக மொத்தம் 30 கோடி ரூபாய் செலவில், 6,600 பணிகளைச் செய்து முடித்து, 10 இலட்சம் ஏக்கர் நிலங்களுக்குப் பலன் தந்திருக்கிறோம்; பொருளாதார அடிப்படையில் கட்டுபடியாகக் கூடிய பாசனத் திட்டங்கள், நமது மாநிலத்தில் நிறைவேற்றப்பட்டு விட்டதால், வழக்கமாகக் கணக்கிடும் செலவு—பயன் வீதங்களை மட்டும் கொள்ளாமல், குறிப்பாக, பிற்பட்ட பகுதிகளைப் பொறுத்தவரை உணவு உற்பத்தியையும், மக்களுக்குப் புதிதாகப் பாசன வசதியினால் ஏற்படும் நன்மைகளையும் கருத்தில் கொண்டு, புதிய பாசனத் திட்டங்களை மேற்கொண்டு வருகிறோம்.

19. பாசன வசதிகளை மேம்படுத்துவதற்காகவும், தற்போதுள்ள பாசன வாயில்களை நல்ல முறையில் பராமரித்து வருவதற்காகவும் வரவு-செலவுத் திட்டத்தில் 31·51 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 1975–76-ல் மொத்தம் 20·2 கோடி ரூபாய் மதிப்பீட்டில், பின்வரும் எட்டு புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்படும். இவற்றால் 33,000 ஏக்கர் நிலம் புதிதாகப் பாசன வசதி பெறுவதோடு, 18,000 ஏக்கர் பரப்பில் பாசனம் உறுதிபெறும். இத்திட்டங்கள் :—

1. வீராணம் ஏரியையும் வடவாறு கால்வாயையும் சீரமைத்தல் (தென் ஆர்க்காடுமாவட்டம்);

2. செண்பகத் தோப்பு நீர்த்தேக்கம் (வட ஆர்க்காடு மாவட்டம்);

3. தொட்டஹள்ளா நீர்த்தேக்கம் (தருமபுரி மாவட்டம்)

4. சித்தமல்லி நீர்த்தேக்கம் (திருச்சி மாவட்டம்)





5. உப்பாறு நீர்த்தேக்கம் (திருச்சி மாவட்டம்);

6. சிறுமலையாறு நீர்த்தேக்கம் (மதுரை மாவட்டம்);

7. பொய்கை அணைக்கட்டு (கன்னியாகுமரி மாவட்டம்);

8. கௌண்டியா நதி நீர்த்தேக்கம் (வட ஆர்க்காடு மாவட்டம்).

20. மேலும், நொய்யல் நீர்த்தேக்கம் (கோவை மாவட்டம்), ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கம் (வட ஆர்க்காடு மாவட்டம்), பாலாறு நீர்த்தேக்கம் (திருச்சி மாவட்டம்), கிருதமால் ஆற்றுக்கு நீர் வழங்கு கால்வாய் அமைக்கும் திட்டம் ஆகிய நான்கின் பரிசீலனையும் விரைவில் முடிந்துவிடும்.

21. நீராறு வாயிலாகக் கிடைக்கும் தண்ணீரைப் பயன்படுத்தி, பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட ஆயக்கட்டுப் பகுதி மேலும் 89,000 ஏக்கர் அளவுக்கு விரிவாக்கப்படும். தற்போது ஆயக்கட்டாக உள்ள பகுதிகளுக்குத் தரப்படுவது போல், புதிய பகுதிகளிலும் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை தண்ணீர் மாற்றி வழங்கப்படும். புதிய ஆயக்கட்டுப் பகுதிகள், பொள்ளாச்சி வட்டத்தில் 24,000 ஏக்கர், உடுமலைப்பேட்டை வட்டத்தில் 25,000 ஏக்கர், பல்லடம் வட்டத்தில் 15,800 ஏக்கர், தாராபுரம் வட்டத்தில் 24,000 ஏக்கர் என்ற அளவில் அமையும். இதற்கான கால்வாய்களை வெட்டும் வேலைகள், வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேலையளிப்பதற்காகவும், அடுத்த பருவத்தில் தண்ணீர் விடுவதற்கு வசதியாகவும் உடனடியாகத் தொடங்கப்படும்.

22. சிறுபாசன சிறப்புத் திட்டத்திற்கு 1975–76 ஆம் ஆண்டில் 3·5 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம். இத்துடன், விரைவுபடுத்தப்பட்ட சிறு பாசனத் திட்டம், தூரெடுத்து சீரமைக்கும் திட்டம் இவற்றுக்காக மொத்தம் 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் முதன் முறையாக எடுத்துக்கொள்ளப்பட்ட "பழைய ஜமீன் ஏரிகளைச் சீரமைக்கும் திட்டம் 25 இலட்ச ரூபாய்ச் செலவில் அடுத்த ஆண்டும்

தொடர்ந்து நடத்தப்படும். வறட்சியால் பாதிக்கப் பட்டுள்ள பகுதிகளில் பாசனத் திட்டங்கள் பல எடுத்துக்கொள்ளப்படும். அடுத்த 6 முதல் 7 மாதங்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் வகையில் அவை விரைவு படுத்தப்படும். பாசனத்திற்காகச் செய்யப்பட்டுள்ள ஒதுக்கீடுகளிலிருந்து 1974–75 ஆம் ஆண்டில் சுமார் 5·5 கோடி ரூபாயும், 1975–76 ஆம் ஆண்டில் 12 கோடி ரூபாயும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில், செலவிடப்படும் என்றும் எதிர்பார்க்கிறேம்.

## மின்சக்தி

**23.** நமது மாநிலத்தின் மின்சக்தி உற்பத்தித் திறனை 2,254 மெகாவாட், இந்தியாவின் வேறு எந்த மாநிலத்தைக் காட்டிலும் அதிகமானது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். 1975–76 ஆம் ஆண்டில், 110 மெகாவாட் திறன் கொண்ட மற்ருெரு பிரிவு எண்ணூர் அனல் மின் நிலையத்தில் அமைக்கப்படும். நீலகிரி மாவட்டத்தில் உள்ள நடுவட்டம் நீரைத் திருப்பிவிடும் திட்டமும், வரும் ஆண்டில் முடிக்கப்பட்டு விடும். இந்தத் திட்டத்தினுல் ஆண்டு ஒன்றுக்குக் கூடுதலாக 6·9 கோடி யூனிட் மின்சாரம் கிடைக்கும். குந்தா நான்காம் நிலை (110 மெகாவாட்), சுருளியாறு (35 மெகாவாட்), தூத்துக்குடி அனல் மின் நிலையம் (400 மெகாவாட்) இவற்றுக்கான பணிகள் நடந்தேறி வருகின்றன. குந்தா நான்காம் நிலைத் திட்டம் 1976-77ஆம் ஆண்டிலும், சுருளியாறுத்திட்டம், தூத்துக்குடி மின்நிலைய முதல் இயந்திரம், இவை இரண்டும் 1978–79ஆம் ஆண்டிலும் செயல்படத் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பாரத் கனரக மின்சார நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் எண்ணூர் அனல் மின் நிலையத்தின் திறனளவைப் பயன்படுத்துவதை (Capacity Utilisation) அதிகப்படுத்துவதற்கான திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது, எண்ணூரிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் அளவை இரட்டிப்பாக்க, அடுத்த சில மாதங்களில் நாம் மேற்கொள்ளும் பெரு முயற்சியாக இருக்கும்.



## தொழில்கள்

**24.** சமதர்ம சமுதாயம் அமைக்கும் முயற்சிகளுக்கு, பொதுத் துறையின் வளர்ச்சியே உறுதுணையாக விளங்கும் என்பது நமது கொள்கையாகும். தனியார் துறை முயற்சிகள் தக்க கட்டுப்பாட்டில் இருக்கும் வகையில் கூட்டுத் துறையில் பல புதிய தொழில் முயற்சிகளையும் நாம் தொடங்கியுள்ளோம். பொருளாதாரச் சக்தி குவிந்துவிடாமல், பரவலாகும் வண்ணம், கூட்டுறவுத் துறையும், சிறு தொழில்களும் நன்கு வளர்வது அவசியம் என்பதும் நமது கருத்தாகும்.

**25.** நமது மாநிலத்தில், பெரிய, நடுத்தரத் தொழில்களின் மேம்பாட்டுக்குத் தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO) முதன்மையான நிறுவனமாக இலங்குகிறது. இந்த நிறுவனம், கடந்த நான்கு ஆண்டுகளில் 37 திட்டங்களைத் தொடங்க முயற்சி எடுத்துள்ளது. இவை, பெட்ரோலிய இரசாயனம், மருந்தாக்கவியல், இரசாயனம், பொறியியல் மற்றும் பிற தொழில்களில் நமது தொழிலமைப்பில் இருக்கின்ற குறைவுகளை நிறைவு செய்வதற்காகத் தீட்டப்பட்டவை. இந்தத் திட்டங்களுக்கான மொத்த மூலதனச் செலவு 340 கோடி ரூபாயாகும். மொத்தம் 17,000 பேர்களுக்கு, இவற்ருல் நேரடியாக வேலை வாய்ப்பு ஏற்படும். இத்துடன் பல்லாயிரக்கணக்கானேர் மறைமுகமாகப் பயனடைவர். இவற்றுள், உரம், இரசாயனப் பொருட்கள், உப்பு, தொலைக்காட்சி (Television), சிகரெட்டு, நிக்கல்-காட்மியம் மின்கலங்கள் (Nickel Cadmium Cells), கனமான வார்ப்படங்கள் ஆகிய இவற்றை உற்பத்தி செய்யும் ஒன்பது கூட்டுத் துறைத் திட்டங்கள் 1975–76இல் செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவற்றில் எல்லாம் முக்கியமானது, மாநில அரசின் கூட்டுத் துறையில் 90 கோடி ரூபாய் முதலீடு செய்து தூத்துக்குடியில் மேற்கொள்ளப்பட்டு வரும், இந்தியாவிலேயே பெரிய உரத் தொழிற்சாலைத் திட்டமாகும். இந்தத் தொழிற்சாலை விரைவில் உற்பத்தியைத் தொடங்கிவிடும். மத்திய அரசின் ஒதுக்கீட்டு முறைப்படி, தூத்துக்குடி உரத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் உரத்தில் 60 சத வீதம் தமிழ்நாட்டில் பங்கீடு செய்யப்படும்.

தொடர்ந்து நடத்தப்படும். வறட்சியால் பாதிக்கப் பட்டுள்ள பகுதிகளில் பாசனத் திட்டங்கள் பல எடுத்துக்கொள்ளப்படும். அடுத்த 6 முதல் 7 மாதங்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் வகையில் அவை விரைவு படுத்தப்படும். பாசனத்திற்காகச் செய்யப்பட்டுள்ள ஒதுக்கீடுகளிலிருந்து 1974–75 ஆம் ஆண்டில் சுமார் 5·5 கோடி ரூபாயும், 1975–76 ஆம் ஆண்டில் 12 கோடி ரூபாயும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில், செலவிடப்படும் என்றும் எதிர்பார்க்கிறோம்.

## மின்சக்தி

**23.** நமது மாநிலத்தின் மின்சக்தி உற்பத்தித் திறனை 2,254 மெகாவாட், இந்தியாவின் வேறு எந்த மாநிலத்தைக் காட்டிலும் அதிகமானது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். 1975–76 ஆம் ஆண்டில், 110 மெகாவாட் திறன் கொண்ட மற்றொரு பிரிவு எண்ணூர் அனல் மின் நிலையத்தில் அமைக்கப்படும். நீலகிரி மாவட்டத்தில் உள்ள நடுவட்டம் நீரைத் திருப்பிவிடும் திட்டமும், வரும் ஆண்டில் முடிக்கப்பட்டு விடும். இந்தத் திட்டத்தினால் ஆண்டு ஒன்றுக்குக் கூடுதலாக 6·9 கோடி யூனிட் மின்சாரம் கிடைக்கும். குந்தா நான்காம் நிலை (110 மெகாவாட்), சுருளியாறு (35 மெகாவாட்), தூத்துக்குடி அனல் மின் நிலையம் (400 மெகாவாட்) இவற்றுக்கான பணிகள் நடந்தேறி வருகின்றன. குந்தா நான்காம் நிலைத் திட்டம் 1976-77ஆம் ஆண்டிலும், சுருளியாறுத்திட்டம், தூத்துக்குடி மின்நிலைய முதல் இயந்திரம், இவை இரண்டும் 1978–79ஆம் ஆண்டிலும் செயல்படத் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பாரத் கனரக மின்சார நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் எண்ணூர் அனல் மின் நிலையத்தின் திறனளவைப் பயன்படுத்துவதை (Capacity Utilisation) அதிகப்படுத்துவதற்கான திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது, எண்ணூரிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் அளவை இரட்டிப்பாக்க, அடுத்த சில மாதங்களில் நாம் மேற்கொள்ளும் பெரு முயற்சியாக இருக்கும்.



## தொழில்கள்

**24.** சமதர்ம சமுதாயம் அமைக்கும் முயற்சிகளுக்கு, பொதுத் துறையின் வளர்ச்சியே உறுதுணையாக விளங்கும் என்பது நமது கொள்கையாகும். தனியார் துறை முயற்சிகள் தக்க கட்டுப்பாட்டில் இருக்கும் வகையில் கூட்டுத் துறையில் பல புதிய தொழில் முயற்சிகளையும் நாம் தொடங்கியுள்ளோம். பொருளாதாரச் சக்தி குவிந்துவிடாமல், பரவலாகும் வண்ணம், கூட்டுறவுத் துறையும், சிறு தொழில்களும் நன்கு வளர்வது அவசியம் என்பதும் நமது கருத்தாகும்.

**25.** நமது மாநிலத்தில், பெரிய, நடுத்தரத் தொழில்களின் மேம்பாட்டுக்குத் தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO) முதன்மையான நிறுவனமாக இலங்குகிறது. இந்த நிறுவனம், கடந்த நான்கு ஆண்டுகளில் 37 திட்டங்களைத் தொடங்க முயற்சி எடுத்துள்ளது. இவை, பெட்ரோலிய இரசாயனம், மருந்தாக்கவியல், இரசாயனம், பொறியியல் மற்றும் பிற தொழில்களில் நமது தொழிலமைப்பில் இருக்கின்ற குறைவுகளை நிறைவு செய்வதற்காகத் தீட்டப்பட்டவை. இந்தத் திட்டங்களுக்கான மொத்த மூலதனச் செலவு 340 கோடி ரூபாயாகும். மொத்தம் 17,000 பேர்களுக்கு, இவற்றால் நேரடியாக வேலை வாய்ப்பு ஏற்படும். இத்துடன் பல்லாயிரக்கணக்கானோர் மறைமுகமாகப் பயனடைவர். இவற்றுள், உரம், இரசாயனப் பொருட்கள், உப்பு, தொலைக்காட்சி (Television), சிகரெட்டு, நிக்கல்-காட்மியம் மின்கலங்கள் (Nickel Cadmium Cells), கனமான வார்ப்படங்கள் ஆ[illegible] உற்பத்தி செய்யும் ஒன்பது கூட்டுத் து[illegible] கூடிய [illegible]ளுமதுள் 1975–76இல் செயல்படத் தொடங்கு[illegible] மம்பாட்[illegible]ர்க்கப்படுகிறது. இவற்றில் எல்லாம் முக்கிய[illegible]து, மாநில அரசின் கூட்டுத் துறையில் 90 கோடி ரூபாய் முதலீடு செய்து தூத்துக்குடியில் மேற்கொள்ளப்பட்டு வரும், இந்தியாவிலேயே பெரிய உரத் தொழிற்சாலைத் திட்டமாகும். இந்தத் தொழிற்சாலை விரைவில் உற்பத்தியைத் தொடங்கிவிடும். மத்திய அரசின் ஒதுக்கீட்டு முறைப்படி, தூத்துக்குடி உரத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் உரத்தில் 60 சதவீதம் தமிழ்நாட்டில் பங்கீடு செய்யப்படும்.

26. நொடித்த நிலையில் இருந்து அரசால் ஏற்று நடத்தப்பட்டுவரும் சக்தி பைப்ஸ் (Sakthi Pipes), லாஸ்கோ ஸ்டீல்ஸ் (Lasco Alloy Steels), டெக்ஸ்டூல்ஸ் (Textools), ஸதர்ன் ஸ்ட்ரக்சரல்ஸ் (Southern Structurals) ஆகிய நான்கு நிறுவனங்களை அரசுடைமை ஆக்கும் நோக்கத்தை சென்ற நிதிநிலை அறிக்கையின்போது வெளியிட்டேன். இதற்கான சட்ட வரைவுகள் மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு விட்டன. மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்தவுடன், இந்த நான்கு நிறுவனங்களும், அவையின் ஒப்புதல் பெற்று நாட்டுடைமையாக்கப்படும்.

27. தமிழ் நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் (SIDCO) ஒரு கோடி ரூபாய் மொத்தச் செலவில், 100 தொழிற்கூடங்கள் அமைப்பதற்கான திட்டத்தை 1975–76 ஆம் ஆண்டில் மேற்கொள்ளும். இதற்காக, வரவு-செலவுத் திட்டத்தில், அரசின் பங்காக, 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ் நாடு சிறு தொழில் கழகம் (TANSI), இந்துஸ்தான் இயந்திரக் கருவிகள் நிறுவனத்தின் உடனுழைப்புடன், இயந்திரக் கருவிகள் தயாரிப்புத் திட்டத்தையும் மோபெட் (Mopeds) உற்பத்தித் திட்டத்தையும் வரும் ஆண்டில் மேற்கொள்ளும். தமிழ் நாடு தொழில் ஊக்கக் கழகம் (SIPCOT) பல்வேறு திட்டங்களின்கீழ் 9·8 கோடி ரூபாய் வரையில் தொழில்களுக்கு உதவி அளித்துள்ளதன் மூலம், 12,800 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பு ஏற்படுத்தியதுடன் மொத்தம் 73 கோடி ரூபாய் முதலீட்டிற்கும் வழி செய்துள்ளது. இக்கழகம் இராணிப் பேட்டை தொழில் தொகுதியின் மேம்பாட்டுப் பணியை முடித்து வருகிறது. மேலும் ஓசூரிலும் ம[illegible]ரை யிலும் உள்ள தொழில் தொகுதிகளின் [illegible]ரம், [illegible]டுப் பணியை இக்கழகம் மேற்கொண்டுள்ளது. செ பா

28. தமிழ்நாட்டில் சர்க்கரைத் தொழில் மேம்பாட்டில் நாம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளோம். நடப்பாண்டில், வேலூர், திருப்பத்தூர், கோவை ஆகிய இடங்களில் புதிதாக அமைக்கப்பட இருக்கின்ற மூன்று சர்க்கரை ஆலைகளுக்காக, மொத்தம் 11 கோடி ரூபாய் செலவில் தளவாடங்கள், இயந்திரங்கள் தருவிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.





இத்துடன், 14 கோடி ரூபாய் செலவில் விரிவாக்கத் திட்டங்களையும் நமது கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மேற்கொண்டுள்ளன. நமது மாநிலத்தில் இனி அமைய இருக்கும் சர்க்கரை ஆலைகள், பொதுத் துறையில் கரும்பு உற்பத்தியாளர்களைப் பங்குதாரர்களாகச் சேர்த்துக் கொண்டு தொடங்கப்படும் என்ற அரசின் கொள்கை முடிவினைச் சென்ற ஆண்டு அறிவித்திருந்தேன். இதற்கேற்ப, ஐந்து புதிய சர்க்கரை ஆலைகளை நிறுவுவதற்கு விரைவிலேயே மத்திய அரசின் அனுமதி கிடைக்கும் என நாம் நம்புகிறோம். 1973–74 ஆம் சர்க்கரை ஆண்டில் (1973 அக்டோபர் முதல் 1974 செப்டம்பர் முடிய) தமிழ்நாட்டில் சர்க்கரை உற்பத்தி 4·43 இலட்சம் டன் என்னும் உயர்ந்த அளவை எய்தியுள்ளது மனநிறைவு அளிக்கக்கூடிய ஒன்றாகும். இது, கடந்த ஆண்டைவிட 34 சதவீதம் அதிகமாகும். கரும்பு உற்பத்தி செய்யும் உழவர்களுக்கு ஊக்கமளிப்பதற்காக மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலைகளுக்குக் கூடுதலாக நமது மாநிலத்தில் சர்க்கரை ஆலைகள் கரும்புக்கு விலை தரவும் வழி வகுத்துள்ளோம்.

29. பொதுவாகப் பஞ்சாலைத் தொழிலில் நிலவும் மந்தப் போக்கும், பரவலான விலையேற்றமும் சேர்ந்ததால் கைத்தறித் துணி விற்பனை குறைந்து, தேக்கநிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையைத் தவிர்க்க, அரசு, தமிழ் நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி மூலமாகக் கைத்தறித் துறைக்கு மூன்று கோடி ரூபாய் வழிவகை முன்பணம் வழங்க ஏற்பாடு செய்துள்ளது. மேலும் மூன்று கோடி ரூபாய் நிதி உதவியளிக்குமாறு மத்திய அரசையும் கேட்டுள்ளோம்; மத்திய அரசின் இசைவு கூடிய விரைவில் கிடைக்குமென்று நம்புகிறேன்.

## கல்வி

30. வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கங்களில் கல்வித் துறை தொடர்ந்து தலையாய இடத்தை வகித்து வருகிறது. கடந்த எட்டு ஆண்டுகளில் கல்விப் பணிகளுக்கான செலவு 44 கோடி ரூபாயிலிருந்து 118 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. இத்துடன், பள்ளிக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக பல்வேறு முயற்சிகளையும்

[1975 மார்ச் 1

நாம் தொடர்ந்து மேற்கொண்டு வந்துள்ளோம். நிதி வசதிக் குறைவாக உள்ள நகராட்சிகள் நடத்தி வரும் 19 உயர்நிலைப் பள்ளிகள் அரசால் எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன. 1975–76 இல் மேலும் ஐந்து உயர்நிலைப் பள்ளிகள் எடுத்துக்கொள்ளப்படும். உயர்நிலைப் பள்ளிகளைப் பொதுக் கல்வியுடன் தொழிற்கல்வி, வணிக கல்வி என பல்வகைப் பயிற்சி உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றும் திட்டம் மேலும் விரிவுபடுத்தப்படும். இதற்காக, வரவு-செலவுத் திட்டத்தில் 14 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய 2,000 ஆசிரியர்கள் வரும் ஆண்டில் பள்ளிகளில் கூடுதலாக நியமிக்கப் படுவர். நடப்பாண்டில் மதிய உணவுத் திட்டத்திற்கு அரசு அளிக்கும் உதவித் தொகை, ஒரு மாணவருக்கு நாள் ஒன்றுக்கு ஆறு காசு என்பதிலிருந்து பத்து காசாக உயர்த்தப்பட்டுள்ளதை உறுப்பினர்கள் அறிவார்கள். இதற்காக வரவு-செலவுத் திட்டத்தில், மொத்தம் 4·5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

31. கடந்த எட்டு ஆண்டுகளில், கலைக் கல்லூரிகளின் எண்ணிக்கை 105-லிருந்து 183 ஆக உயர்ந்துள்ளது; கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் எண்ணிக்கையும் 94,000-த்திலிருந்து இரண்டு இலட்சம் அளவுக்கு உயர்ந்துள்ளது. கிண்டியிலுள்ள பொறியியல் கல்லூரியைத் தரமுயர்த்தி, சென்னையில் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஒன்றை அமைத்து, ஏனைய சில தொழில் நுட்பக் கல்வி நிலையங்களை இப் பல்கலைக் கழகத்தின் ஆளுகைக்குக் கொண்டுவரும் திட்டத்தை, அண்மையில் பல்கலைக் கழக மானியக் குழு, கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ளதை இந்த அவையினருக்குப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## மொழி வளர்ச்சியும் வரலாற்றுப் பாதுகாப்பும்

32. தமிழ் இலக்கியம், வரலாறு, கலை, பண்பாடு அனைத்தையும் மங்காது மறையாது காப்பாற்றித் தமிழ் மரபின் கீர்த்தியைத் தரணி முழுவதும் பரப்பிடுகின்ற பெரும் பணியினையும் இந்த அரசு மேற்கொண்டிருப்பதற்கு எடுத்துக்காட்டாகத்தான், எழில் மிகுந்த பூம்புகார்க் கலைக்கூடமும், ஏற்றமிகு பாஞ்சாலங்குறிச்சிக் கட்டபொம்மன் கோட்டையும் விளங்குகின்றன. வள்ளுவர் கோட்டம் சென்னைத் திருநகரில் வளரத் தொடங்கியுள்ளது.



1975 மார்ச் 1]

33. அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், 'அகரமுதலி' தயாரிக்கும் அரும்பெரும் முயற்சி, இவை போன்ற தமிழ்ப் பணிகளுக்காக நிதி ஒதுக்கீடு 76·82 இலட்ச ரூபாய் செய்யப்பட்டுள்ளது. சிற்பக் கலையை வளர்க்கவும், நூற்றுக்கணக்கான சிற்பவேலைத் தொழிலாளர்களைப் பாதுகாக்கவும் திட்டங்கள் வகுக்கப்படுவதோடு, மாமல்லபுரத்தில் உள்ள பயிற்சி நிலையத்தில் வரும் ஆண்டில் கூடுதலாகப் புதிய பாட முறைகள் கொண்டுவரப்படும்.

34. மதுரை திருமலை நாயக்கர் மகால், வரும் ஆண்டில் ஓர் அரும்பொருட்காட்சிக் கூடமாக மாற்றப்படும். காரைக்குடியில் தமிழ்த்தாய்க் கோயில் ஒன்று எழுப்பும் முயற்சிக்கு அரசு, நிதி உதவி செய்யவும் முடிவெடுத்துள்ளது.

## மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள்

35. கடந்த எட்டாண்டுகளில் 18 மருத்துவ மனைகளையும் 22 மருந்தகங்களையும், 194 தொடக்க சுகாதார நிலையங்களையும் புதிதாகத் துவங்கியுள்ளோம். 2,185 கூடுதல் படுக்கை வசதிகளை உருவாக்கியதுடன், 2,396 மருத்துவர்களையும் 1,912 செவிலியர்களையும் கூடுதலாக அரசு மருத்துவ நிலையங்களில் இதே எட்டு ஆண்டுக் காலத்தில் நியமித்துள்ளோம். மாவட்ட, வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் படுக்கைகளின் எண்ணிக்கையைத் தொடர்ந்து அதிகரிப்பதும், அத்துடன் அந்த மருத்துவ மனைகளில் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சையின் தரத்தை மேம்படுத்துவதும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் முக்கிய நோக்கங்களாக இருக்கும். இதற்கேற்ப, 1975–76இல் மேலும் 123 மருத்துவர்களையும், 155 செவிலியர்களையும் பல்வேறு மருத்துவ மனைகளில் நியமிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

36. 1972 ஜூன் திங்களில் தொடங்கப்பட்ட கண்ணொளி வழங்கும் திட்டம் முழு வெற்றியடைந்துள்ளது. மொத்தம் 6·36 இலட்சம் பேர்கள் பயன்

[1975 மார்ச் 1

பெற்றுள்ள இத்திட்டத்தின் கீழ், இந்நாள் வரை 89,500 பேருக்கு இலவச அறுவை சிகிச்சைகள் 219 முகாம்களில் நடத்தப்பட்டு மூக்குக் கண்ணாடிகளும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இதற்கான சிறப்பு நிதிக்கு வந்த 55 இலட்சம் ரூபாய் நடப்பு ஆண்டில் முற்றிலும் செலவாகிவிடும். வரவு-செலவுத் திட்டத்தில் 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்வதன் மூலம், இத்திட்டம் 1975–76ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நிறைவேற்றப்படும்.

37. கிராம மக்களின் மருத்துவத் தேவையை மனதிற் கொண்டு, 100 தொடக்க சுகாதார நிலையங்களில், ஒவ்வொன்றிலும், மூன்றாவது மருத்துவ அதிகாரி பதவி ஒன்று கூடுதலாக ஏற்படுத்தப்படும். இருபது தொடக்க சுகாதார நிலையங்களில், சிறு குழந்தைகளுக்கு முத்தடுப்பு ஊசி போடுவது செயற்படுத்தப்படும். வட்ட மருத்துவ மனைகள் பதினாறில் முன்னாள் படை வீரர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் 12 படுக்கை வசதிகள் கொண்ட வார்டுகள் கட்டப்படும். வட்ட மருத்துவ மனைகளில் நான்கில் பல் சிகிச்சைப் பிரிவுகள் நிறுவப்படும்; 15 இடங்களில் சித்த மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்படும். உணவு கலப்படங்களைக் கண்டு பிடிக்க உதவும் ஆய்வுக் கூடங்கள் பாளையங்கோட்டை, சேலம் ஆகிய இடங்களில் நிறுவப்படும்.

38. நடப்பாண்டில் 1974 டிசம்பர் வரையில், 1,11,000 பேருக்கு குடும்ப நல அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டன. குடும்ப நலத்திட்டம் தொடங்கப் பட்டது முதல் மொத்தம் 18 இலட்சம் பேருக்கு குடும்ப நல அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டன. ஒவ்வொரு குடும்ப நல அறுவை சிகிச்சைக்காகவும் மத்திய அரசு, ஊக்கத் தொகையாக சராசரியில் நமக்கு 60 ரூபாய் மட்டும் அளிக்கும்போது, நாம் 100 ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கி வருகிறோம். நமது திட்டங்களின் முழுப் பயனை எய்துவதற்கு அடிப்படையாக அமைவது, குடும்பநலத் திட்டம் தான் என்பதை உணர்ந்துள்ள மத்திய அரசு, மாநில அரசுக்கு ஊக்கமளிக்கும் வகையில், நாம் இந்தத் திட்டத்திற்காக அதிகமாகச் செலவழிக்கும் தொகையையும் ஈடுகட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.



1975 மார்ச் 1]

## தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் நலன்

39. தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் முன்னேற்றத்திற்கு பாடுபடுவதைத் தன் தலையாய கடமையாகக் கொண்டுள்ள இந்த அரசு, 1975–76 ஆம் ஆண்டு, 16·69 கோடி ரூபாய் இதற்கென ஒதுக்கியுள்ளது. அதன் விவரம் வருமாறு :—

| | திட்டச் செலவில் சேராத மாநில அரசின் நிதி ஒதுக்கம். | திட்டச் செலவில் மாநில அரசின் நிதி ஒதுக்கம். | மத்திய அரசு பொறுப் பேற்கும் செலவு. | மொத்தம். |
|---|---|---|---|---|
| | (கோடி ரூபாய்களில்.) | | | |
| தாழ்த்தப்பட்டோர் நலன். | 6·41 | 3·97 | 0·50 | 10·88 |
| பிற்படுத்தப் பட்டோர் நலன். | 5·17 | 0·64 | .. | 5·81 |
| மொத்தம் | 11·58 | 4·61 | 0·50 | 16·69 |

40. தற்போது, நமது மாநிலத்தில் 555 தாழ்த்தப்பட்டோர் மாணவரில்லங்களும், 231 பிற்படுத்தப்பட்டோர் மாணவரில்லங்களும் செயல்பட்டு வருகின்றன. 1975–76ஆம் ஆண்டில் தாழ்த்தப்பட்டவர்களுக்காக 20 புதிய மாணவர் இல்லங்களையும், பிற்படுத்தப்பட்டவர்களுக்காக 20 புதிய மாணவர் இல்லங்களையும் தொடங்குவதற்கான 8·54 இலட்சம் ரூபாய் மேற்குறிப்பிட்ட நிதி ஒதுக்கங்களில் அடங்குகிறது. தாழ்த்தப்பட்டோர் மேம்பாடு-வீட்டு வசதி நிறுவனம், தாழ்த்தப்பட்டோருக்காகக் கிராமப் பகுதிகளில் ஒரு இலட்சம் வீடுகளைக் கட்டி முடிக்கும் பெரும்பணியில் ஈடுபட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நடப்பாண்டின் இறுதிக்குள் 51,000 வீடுகள் கட்டி முடிக்கப்படும். இதற்காக நாம்

[1975 மார்ச் 1

ஏற்கெனவே 3·5 கோடி ரூபாய்க்கு மேலாகச் செலவிட்டுள்ளோம். வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் நேரடியாக நிதி ஒதுக்கியும், நிதி நிறுவனங்களிடமிருந்து உதவி பெற்றும், இத்திட்டம் வரும் ஆண்டிலும் முனைப்பாக நிறைவேற்றப்படும். இந்த நிறுவனம் அரிசனக் குடியிருப்புகளில், 50 குழந்தைகள் காப்பகக் கட்டிடங்களை நடப்பாண்டில் கட்டி முடிக்கும். மேலும் இந்த நிறுவனம், வரும் ஆண்டில் 100 தாழ்த்தப்பட்ட மாணவர் இல்லங்களையும் 50 பிற்படுத்தப்பட்ட மாணவர் இல்லங்களையும் கட்டும் திட்டத்தைச் செயல்படுத்தும். தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் ஆகியோரது படிப்புதவிச் சம்பளங்களுக்காகவும் உணவுச் செலவு மானியங்களுக்காகவும் 1975–76இல் மொத்தம் 6·56 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

41. தாழ்த்தப்பட்டோருக்கு நடப்பாண்டில் வீட்டு மனைகளைக் கையகப்படுத்தி ஒப்படை செய்வதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்க, இதற்கென 48·5 இலட்சம் ரூபாய் திருத்த நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 1975–76 இல் முதல் கட்டமாக இதற்கான நிதி ஒதுக்கம் 25 இலட்சம் ரூபாயாகும். தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளில் மின்வசதி செய்து கொடுப்பதற்காக 1975–76இல் நாம் 82 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளோம். மொத்தம் சுமார் 25,000 குடியிருப்புகளில் 24,000 குடியிருப்புகளுக்கு 1974 டிசம்பர் இறுதிக்குள் மின்வசதி வழங்கப்பட்டுள்ளது. நமது கிராமப்பகுதிகளில் உள்ள தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளிலிருந்து இடுகாடுகளுக்குச் செல்வதற்கு சரியான பாதைகள் இல்லை என்பது நீண்ட காலமாக உணரப்பட்டு வரும் அவசியத் தேவையாகும். சமூக நிலையில் காணப்படுகிற இந்த குறைபாட்டை நீக்குவதற்காக நடைமுறையில் உள்ள திட்டங்களின் கீழ் இதற்கென எடுக்கப்படும் நடவடிக்கைகளுடன், 1975–76இல் 30 இலட்சம் ரூபாய் செலவில் அத்தகைய பாதைகளைப் போடுவதற்கான சிறப்புத் திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளோம். முதல் நிலையில், நிலம் உடனடியாகக் கிடைக்கும் 6,800 கிராமங்களில் ப்பணி மேற்கொள்ளப்படும்.



1975 மார்ச் 1]

### குடிசைப் பகுதிகளை மாற்றுதல்

42. 1970ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழ் நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், இதுவரையில் 15,102 குடியிருப்புகளைக் கட்டியுள்ளது. இந்த வாரியம் 1975–76ஆம் ஆண்டில், வரவு-செலவுத் திட்டத்திலிருந்தும், வீட்டுவசதி-நகர்ப்பகுதி மேம்பாட்டுக் கழகத்திடமிருந்தும் நிதி உதவி பெற்று மொத்தம் 3·5 கோடி ரூபாய் செலவிடும். இத்துடன், சென்னை மாநகரில் உள்ள குடிசைப்பகுதிகளின் சுற்றுப்புற மேம்பாட்டுக்கான பல்வேறு திட்டங்கள் குறித்து 45 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். மற்ற நகரங்களில் உள்ள குடிசைப் பகுதிகளில், வீட்டு வசதி வாரியம், வரும் ஆண்டில் மேலும் 40 இலட்சம் ரூபாய் செலவிடும். குடிசைப் பகுதிகளை மாற்றி அவற்றை மேம்படுத்துவதற்காக இந்திய அரசிடமிருந்து நிதி உதவி கிடைக்காத நிலையில், நமது நிதிப் பற்றாக்குறைக்கிடையே, இத்திட்டத்தைக் குன்றா ஊக்கத்துடன் நாம் தொடர்ந்து செயற்படுத்தி வருகிறோம்.

### சாலைகள்

43. 1975–76ஆம் ஆண்டில், சாலைகள் அமைக்கவும் அவற்றைப் பராமரிக்கவும் நாம் மொத்தம் 28·74 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம். ஆயிரத்து ஐநூறுக்கு குறையாத மக்கள் தொகை கொண்ட கிராமங்களை அடுத்துள்ள பெரிய சாலைகளுடன் இணைக்க, தார் போடப்பட்ட சாலைகள் அமைக்கும் திட்டமும், ஆயிரத்து ஐநூறுக்கு குறைந்த மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்கும் திட்டமும், நாம் மேற்கொண்டுள்ள இரு பெரும் திட்டங்களாகும். இவற்றுக்கென நடப்பாண்டிலும், வரும் ஆண்டிலுமாக மொத்தம் 7·5 கோடி ரூபாய் செலவிடப்படும். சாலைப் பணிகளுக்கான நிதி ஒதுக்கீட்டில், உள்ளூர் சாலைகளின் மேம்பாடு, பராமரிப்புக்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்படும் 2·19 கோடி ரூபாய் மானியமும் அடங்கும். இத்துடன், இணைப்புச் சாலைகள் திட்டத்தின்கீழ் நாம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு 75 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளோம்.

சர்க்கரை ஆலைகளைச் சுற்றிலும் கரும்பு பயிரிடப் படுகின்ற பகுதிகளில் சாலைகள் அமைப்பதற்காக 60 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதில், சாலைத் திட்டங்களும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும்.

44. திருச்சியிலும், பவானியிலும் காவிரி மீது கட்டப்பட்டு வரும் பாலங்கள், வேலூரில் கட்டப்பட்டு வரும் பாலாற்றுப் பாலம், புதிதாக அமைக்கப்பட்டு வரும் பழனி-கோடைக்கானல் சாலை ஆகியவை 1975–76இல் முடிவு பெற இருக்கும் முக்கியமான பணிகளாகும்.

45. மாநிலம் முழுவதிலும் நடைபெறும் பயணிகள் போக்குவரத்தை நாட்டுடைமை ஆக்குவது என்ற நமது கொள்கை முடிவினையொட்டி, மொத்தமுள்ள 9,938 பேருந்துகளில், 4,804 பேருந்துகளை நாட்டுடைமையாக்கியுள்ளோம். மாநில அரசு உச்ச நீதி மன்றத்தில் செய்துள்ள மேல் முறையீட்டின் மீது முடிவு தெரிவிக்கப்பட்ட பிறகே, நாட்டுடைமையாக்கும் பணியை விரைவு படுத்த இயலும். நன்முறையில், சிக்கனமாக இயங்கும் சாலைப் போக்குவரத்து வசதிகளை உருவாக்குவதற்காக, ஆம்னிபஸ் என்று அழைக்கப்படும் ஒப்பந்தப் பேருந்துகள் (Contract Carriages) அனைத்தையும் நாட்டுடைமையாக்குவது என்ற முடிவினை அரசு எடுத்துள்ளது. இதற்கான திட்டமும் வெளியிடப் பட்டுள்ளது.

## குடிநீர் வசதி

46. மாநிலம் முழுவதிலும் குடிநீர் வழங்கு திட்டம், கழிவு நீர் அகற்று திட்டம் ஆகியவற்றை ஆய்வு செய்து அவற்றை நிறைவேற்றுவதற்காக 1970ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு குடிநீர், வடிகால் வாரியத்திற்குக் கடன்கள், மானியங்கள் கொடுப்பதற்காக 1975–76 வரவு-செலவுத் திட்டத்தில் 10·32 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துடன், இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் ஐந்து கோடி





ரூபாய் கடனுதவி அளிக்கும். தூத்துக்குடியிலுள்ள தொழில் அமைப்புகளுக்கு 4·7 கோடி ரூபாய் செலவில், நாளொன்றுக்கு இரண்டு கோடி காலன் நீர் வழங்கும் திட்டத்தை இவ்வாரியம் கூடிய விரைவில் நிறைவேற்றி முடித்துவிடும். சிறுவாணியிலிருந்து கோவை நகருக்கு நீர் வழங்கும் திட்டப்பணி தொடங்கப்பட்டுள்ளது. 1·71 கோடி ரூபாய் செலவில் கோவை நகருக்கு நாள் ஒன்றுக்கு மேலும் 30 இலட்சம் காலன் நீர் வழங்கும் உடனடித் திட்டத்திற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் முதற்கட்டம் நிறைவேற்றப்பட்டு பயன் தந்துள்ளது. இத் திட்டம் 1975இல் நிறைவேற்றி முடிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. வீராணம் திட்டத்திற்காக 1974ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் முடிய 14·85 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. நடப்பாண்டில் இத் திட்டத்திற்காக 7·7 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் வீராணம் திட்டத்திற்காகப் போடப்பட்டுள்ள குழாய்களைப் பயன்படுத்தி, பாலாற்றுப் படுகையிலிருந்து சென்னை மாநகருக்கு நீர் கொண்டு வரும் திட்டம் ஒன்றுக்கும் அனுமதி வழங்கியுள்ளோம். இத்திட்டத்திற்கு மொத்தம் 1·12 கோடி ரூபாய் செலவாகும். இத்திட்டத்தினால் சென்னை மாநகருக்கு நாள் ஒன்றுக்கு 30 இலட்சம் காலன் நீர் கூடுதலாகக் கிடைக்கும்.

47. மேலும் இந்த வாரியம் நடப்பு நிதி ஆண்டில் குடிநீர் பற்றுக்குறையாகவுள்ள 646 கிராமங்களுக்கும், நரம்புச் சிலந்தி முதலான நோய்கள் பரவியுள்ள 1,041 கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யும். வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் வழங்கும் பணிகளை நடப்பாண்டில் மேற்கொள்வதற்காக வாரியத்திற்கு 2 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. கிராமப் பகுதிகளில் குடிநீர் வழங்குவதற்காக வரும் ஆண்டில் 3·25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துடன், 'யூனிசெஃப்' நிறுவனத்தின் உதவியோடு 1,500 துளைக் கிணறுகள் தோண்டப்படும். 1975–76 இல் கிராமங்களுக்குக் குடிநீர் வழங்குவதற்காக ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் செலவிடப்படும் 1·9 கோடி ரூபாய்க்குக் கூடுதலாக

இந்த நிதி ஒதுக்கங்கள் செய்யப்பட்டுள்ளன. கிராமங்களுக்குக் குடிநீர் வழங்குவதற்குச் செய்யப்பட்டுள்ள பல்வேறு நிதி ஒதுக்கங்களிலிருந்து, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நடப்பாண்டிலும், வரும் ஆண்டிலும் மொத்தமாக 6·25 கோடி ரூபாய் செலவிடப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

## சமூக நலன்

48. சமுதாயத்தின் அடித்தளத்து மக்களுக்கான பல்வேறு சமூக நல நடவடிக்கைகளை நமது அரசு அனைவரும் பாராட்டத்தக்க வகையில் நிறைவேற்றி வருகிறது. தொழுநோய் பிச்சைக்காரர்களுக்குப் புது வாழ்வு அளிப்பது, கண்ணொளி வழங்கும் முகாம்களைப் பரவலாக அமைப்பது, கை ரிக்ஷாக்களை நீக்கிவிட்டு சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்குவது, உடல் ஊனமுற்றோர்க்கு நல்வாழ்வு தருவது, ஆகிய அரிய திட்டங்களின் வாயிலாக நமது அரசு இந்தியாவிலேயே சமூகப் பணியில் முன்னணியில் நிற்கிறது. இந்த நல்ல நோக்கத்திற்கும், செம்மையான செயல் முறைக்கும், பொது மக்களின் முழு ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைத்துள்ளன. இத் திட்டங்களுக்காக பொதுமக்கள், மொத்தம் 3·13 கோடி ரூபாயளவுக்கு நன்கொடைகள் வழங்கியுள்ளனர். இந்த நன்கொடைகள் நிதித் துறையின் பொறுப்பில் நிர்வகிக்கப்பட்டு, செலவுகள் அரசின் மற்றச் செலவுகளையொப்பவே கணக்கு வைக்கப்பட்டு வருகின்றன. திக்கற்ற இளம் சிறுர்களுக்கும் ஆதரவற்ற விதவைகளுக்குமாக புதிய திட்டம் ஒன்றை 1975ஆம் ஆண்டில் மேற்கொள்ளவிருக்கிறோம். இத்திட்டம் குறித்த விவரங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. வரவு-செலவுத் திட்டத்தில் கண்டுள்ள முக்கியமானதொரு புதிய திட்டம், தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் ஆதாயமுள்ள வகையில் வேலைக்கமர்த்தப்படுவதற்காக அவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள இல்லங்களில் நிலம் பண்படுத்தல், பாசனக் கிணறுகள் அமைத்தல் போன்ற பல்வேறு வசதி வாய்ப்புகளை ஏற்படுத்துவதாகும்.



49. சமுதாயத்தில் மிக வறிய நிலையில் உள்ளவர்களின் பிரச்சினைகளை பொதுமக்களின் நாட்டத்திற்குக் கொண்டுவந்து, அவர்களுக்கு நல்வாழ்வு அளிக்க வழி செய்வதே இத்திட்டங்களின் நோக்கமாகும். மக்களின் ஆதரவோடு, ஒவ்வோர் ஆண்டும் தொடங்கப்படும் திட்டங்களுக்குத் தேவைப்படும் தொடர் செலவை ஏற்றுக்கொண்டு, இந்தச் சமூகப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான வசதிகளை விரிவுபடுத்துவதை, அரசு தன் பொறுப்பாக மேற்கொண்டுள்ளது.

## புதுத் திட்டங்கள்

50. 1970 ஆம் ஆண்டில் பல நகரங்களில் குடிசைகளை மாற்றி நல்ல வீடுகள் கட்டித் தரும் திட்டத்தையும், சென்ற ஆண்டு அரிசன வீட்டு வசதி மேம்பாட்டு வாரியத்தின் வாயிலாக கிராமங்களில் அரிசனங்களுக்கு இலவச வீடுகள் கட்டித் தரும் திட்டத்தையும் தொடங்கி, அடித்தளத்து மக்களின் வீட்டுத் தேவையை தொடர்ந்து நிறைவு செய்து வரும் இந்த அரசு, இந்த நிதி நிலை அறிக்கையில் மற்றுமொரு சமதர்மத் திட்டத்தை அறிவிப்பதில் பெருமை கொள்கிறது. கடலை நம்பி வாழ்ந்து கடுங் காற்றுக்கும் கடல் கொந்தளிப்புக்குமிடையே குடிசைகளில் பாதுகாப்பின்றி வாடும் மீனவப் பெருங்குடி மக்களுக்கான வீடுகள் கட்டித் தரும் திட்டத்தை அரிசன வீட்டு வசதித் திட்டத்தைப் போலவே தொடங்க இருக்கிறோம் என்பதையும், முதல் கட்டமாக இரண்டு கோடி ரூபாய் செலவில் 5,000 வீடுகள் கட்டும் திட்டம் 1975–76இல் மேற்கொள்ளப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

51. சமூக மேம்பாடு, சமூக நலன், ஆகியவற்றில் மெத்த ஆர்வம் காட்டிச் செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிற நமது அரசு, சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் எவ்வளவு தேவையானவை என்பதையும் உணர்ந்து அதற்கான சாதனைகளைப் புரிந்து வருகிறது. அரசு அலுவலாளர் குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தை நாம் 1974ஆம் ஆண்டில் தொடங்கியது முதல், இதுவரை ஏறத்தாழ ஆயிரம் குடும்பங்கள், ஒவ்வொன்றும் பத்தாயிரம் ரூபாய் பாதுகாப்பு நிதியாகப்பெற்று, ஓரளவு ஆறுதலை அடைந்துள்ளன.

அதேபோல், அரசு அலுவல்களில் இல்லாத பொதுமக்களும் கூட சேர்ந்து பயன் பெறத்தக்க வகையில் சமூகப் பாதுகாப்புத் திட்டம் என்ற ஒரு பரவலான திட்டத்தையும் அறிமுகப்படுத்தி, நடைமுறைப் படுத்தியுள்ளோம்.

52. இதன் தொடர்பாக, கைத்தறி நெசவாளர்களுக்கு '' கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் சேமிப்புப் பாதுகாப்புத் திட்டம் '' ஒன்றைத் துவக்குகிறோம் என்பதைப் பெரு மகிழ்வுடன் அறிவிக்க விரும்புகிறேன். இந்தத் திட்டம், ஆயுள் ஈட்டுறுதிக் கழக ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின்படி, கூட்டுறவுச் சங்க நெசவாளர் ஒவ்வொருவரும் தன் ஊதியத்தில் ரூபாய்க்கு ஆறு காசு என்ற வீதத்தில் பங்குத் தொகை வழங்குவார். அவர் செலுத்தும் தொகையை ஒட்டி, அரசு, அவர் ஊதியத்தில் ரூபாய்க்கு மூன்று காசு என்ற வீதத்தில் உதவித் தொகை அளிக்கும் ; கூட்டுறவுச் சங்கம் இதற்கென தன் பங்குத் தொகையாக ஏதும் தரவேண்டியதில்லை. நெசவாளி ஒருவர் 55 வயது நிறைவெய்துவதற்கு முன் மரணமடைய நேரிட்டால், அவரது குடும்பத்துக்கு, அவர் செலுத்திய தொகையும், அரசு செலுத்திய உதவித் தொகையுமாக சேமிப்புப் பாதுகாப்பு நிதியில் அவர் கணக்கிலுள்ள தொகையுடன் அதற்குச் சமமான இன்னொரு மடங்குத் தொகையும் சேர்த்துத் தரப்படும். இஃதன்னியில், நிதியில் நெசவாளர் செலுத்திய பங்குத் தொகைக்கு வட்டியும் கொடுக்கப்படும். எடுத்துக்காட்டாக, 100 ரூபாய் மாத ஊதியம் பெறும் நெசவாளர் மாதாமாதம் தன் பங்காக ஆறு ரூபாய் செலுத்துவார் : அரசு மூன்று ரூபாய் கொடுக்கும். அவர் 20 ஆண்டிற்குப் பின் இறந்துவிட நேரிட்டால், அவர் செலுத்திய தொகைக்கு வட்டி கிடைப்பது அன்னியில், அவரது குடும்பத்துக்கு அவரும் அரசும் கட்டியுள்ள தொகையான 2,160 ரூபாயுடன், மேலும் 2,160 ரூபாய் சேர்த்து, 4,320 ரூபாயாக வழங்கப்படும். இது போன்ற சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை இந்தியாவிலேயே முதன் முதலாக நாம் தான் தொடங்கியிருக்கிறோம். நமது நன் முயற்சிக்கு ஆயுள் ஈட்டுறுதிக் கழகமும் தனது ஒத்துழைப்பை நல்குவதற்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.



## அரசு அலுவலர் நலன்

53. அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், உள்ளாட்சி நிறுவன அலுவலர்கள் நலனில் நமது அரசு என்றுமே நாட்டம் செலுத்தி வந்துள்ளது. அவ்வப்போது பல்வேறு சலுகைகளை அவர்களுக்கு அரசு அளித்து வந்துள்ளதை உறுப்பினர்கள் நன்கு அறிவர்.

54. 1975 பிப்ரவரித் திங்கள் முதல் நாளுக்கு முன்பு கொடுக்கப்பட்ட அகவிலைப் படியை, ஓய்வு ஊதியத்தை கணக்கிடும்போது ஊதியத்துடன் சேர்த்துக் கணக்கிட வேண்டும் என்று நாம் அண்மையில் எடுதத முடிவின் பயனாக, ஓய்வு பெறும் அலுவலர்களுக்குக் கூடுதலாகப் பலன் கிட்டியுள்ளது. அரசு ஓய்வூதியம் பெறுபவர்கள் அனைவருக்கும் 1975 பிப்ரவரி முதல், கூடுதலாக ஐந்து ரூபாய் அகவிலைப்படி அளித்திருக்கிறோம். முன்னூறு ரூபாய்வரை ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஏழு மாவட்டங்களில் அரசின் செலவிலேயே தற்போது ஓய்வூதியம் பண அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டு வருகிறது. இந்த முறை, மாநிலம் முழுவதிலும், வரும் ஆண்டில் 6 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவில் செயல்படுத்தப்படும்.

55. 1974–75 வரவு-செலவுத் திட்டத்தில் அரசு அலுவலர்கள் வீடு கட்டும் கடன்களுக்காக ரூ 75 இலட்சம் மட்டும் ஒதுக்கப்பட்டிருந்தது ; அதை வரும் ஆண்டில் இரட்டிப்பாக்கி 150 இலட்ச ரூபாயாக உயர்த்தி இருக்கிறோம்.

56. சென்னை, மதுரை, கோவை ஆகிய பெரிய நகரங்களில் தற்போது உள்ள நகர ஈட்டுப்படி, 1975 ஏப்ரல் மாதம் முதல் திருச்சி, சேலம் நகரப் பகுதிகளுக்கும் 35 இலட்சம் ரூபாய்ச் செலவில் விரிவுபடுத்தப்படும். இதனால் இந்தத் திட்டம் தமிழ்நாட்டின் பெரிய நகரங்கள் அனைத்திலும் செயல்படுத்தப்படும்.

57. கிராம அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் சிறப்பு ஊதியத்தை பிப்ரவரி மாதம் முதல் ஏழு ரூபாய் உயர்த்தியிருக்கிறோம். 1975 ஏப்ரல் மாதத்திலிருந்து குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தை 55 வயதுக்கு உட்பட்ட கிராம அலுவலர்களுக்குப் பொருந்தும் வகையில்

[1975 மார்ச் 1

விரிவுபடுத்த முடிவு செய்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது கிராம அலுவலர் பல்லாயிரக்கணக்கானவர்களுக்குப் பலனளிக்கும்.

58. வளர்ச்சிப் பணிகளுக்கு அவசியமாகத் தேவைப்படுகின்ற நிதி வசதிகளும், வறட்சித் துயர் தணிப்புப் பணிகளுக்கான தேவைகளும், மதுவிலக்குக் கொள்கையைச் செயல்படுத்துவதன் விளைவுகளுமாகச் சேர்ந்து நடப்பு ஆண்டிலும், வரும் ஆண்டிலும் குறிப்பிடத்தக்க அளவு வருவாய்க் கணக்கில் துண்டு விழச் செய்கின்றன. நாம் கூடுதல் நிதி வசதிகளைத் திரட்ட முயற்சிகள் பல மேற்கொண்டுள்ளோம் என்ற போதிலும், அவ்வாறு கூடுதலாக நிதி திரட்டும் முயற்சி மேற்கொள்வதற்கான சாத்தியக் கூறுகள் அதிகமில்லை; மேலும் அம் முயற்சிகளை தொடர்ந்து எடுத்துக் கொண்டேயிருப்பதும் எளிதல்ல. மத்திய அரசு அலுவலர்களது அளவுக்கு தாங்களும், ஊதியங்களும் அகவிலைப் படிகளும் பெற வேண்டும் என மாநில அரசு அலுவலர் கோரிவருவதன் நியாயத்தையும் அவசியத்தையும் நாம் நன்கு உணர்ந்திருக்கிறோம். எனினும், மத்திய அரசு தனது அலுவலர்களது ஊதிய விதங்களை மாநில அரசுகள் அளிப்பதற்கு ஒப்ப அமைப்பதில்லை, அல்லது, உள்ள வேறுபாடுகளைக் களைவதற்கு மாநில அரசுகளுக்கு நிதி உதவி அளிப்பதுமில்லை. இவ்வாறு பல்லாண்டுகளாக இருந்து வந்த இந்தப் பிரச்சினை, கூடுதல் அகவிலைப் படி, கூடுதல் ஊதிய முடக்கச் சட்டத்தினால் மேலும் சிக்கலாகியுள்ளது. இச் சட்டத்தைக் கைவிட வேண்டுமென்றும், அது இயலாவிட்டால் 500 ரூபாய்வரை ஊதியம் பெறுபவர்களுக்கேனும் இச் சட்டத்திலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்றும் மத்திய அரசை நாம் வேண்டினோம். இதைக் கூட ஏற்க இயலாது என்று மத்திய அரசு நமக்கு தெரிவித்து விட்டது.

59. அகவிலைப்படி குழுவின் பரிந்துரைகளையொட்டி ஆறு அகவிலைப்படி தவணைகளை அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், உள்ளாட்சி நிறுவன அலுவலர்களது அகவிலைப்படியாக ஜனவரித் திங்களில் அரசு அறிவித்தது. அதன் பின்னர் மத்திய அரசு மூன்று தவணை அகவிலைப்படியினை அதன் அலுவலர்களுக்கு அளித்



1975 மார்ச் 1]

துள்ளதையும், நமது அரசு அலுவலர் சங்கங்களின் பிரதிநிதிகள் அண்மையில் அறிவிக்கப்பட்ட மாநில அரசின் அகவிலைப்படி உயர்வு போதுமானதாக இல்லை என என்னிடம் முறையிட்டதையும் கருத்தில் கொண்டு, ஜனவரியில் அறிவிக்கப்பட்ட அகவிலைப்படி வீதங்களை பின்வருமாறு மாற்றியமைக்க முடிவு செய்துள்ளோம்.

60. முந்நூறு ரூபாய் வரை அடிப்படைச் சம்பளம் பெறுபவர்களது அகவிலைப்படி ஒன்பது தவணைகளுக்கேற்ப; 36 சத விதமாகவும், முந்நூறு ரூபாய்க்கு மேல் சம்பளம் பெறுபவர்களது அகவிலைப்படி 27 சத விதமாகவும் உயர்த்தப்படும். மத்திய அரசின் சம்பள ஆணைக் குழு சிபாரிசுகள் செயல்படத் தொடங்கிய 1973 ஜனவரித் திங்கள் 1-ஆம் நாளன்று, நமது அலுவலர்கள் அகவிலைப்படியாக பெற்றுவந்த தொகையை அடிப்படைச் சம்பளத்துடன் புதிய அகவிலைப்படியைக் கணக்கிடும் பொருட்டு சேர்த்துக் கொள்ளப்படும். இவ்வாறு கணக்கிட்டு வரும் தொகை, 1974 அக்டோபருக்கு முன்பு பெற்ற அகவிலைப்படியான 55 ரூபாய் அல்லது 70 ரூபாயைவிட, 20 ரூபாய்க்கு குறையாமலும், 30 ரூபாய்க்கு மேற்படாமலும், உயர்வு உள்ள வகையில் கணக்கிடப்பட்டு முடிவு செய்யப்படும். இது அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், உள்ளாட்சி நிறுவன ஊழியர்கள் ஆக, சுமார் ஏழு லட்சம் பேருக்குப் பொருந்தும். இந்த ஆண்டு பொங்கல் நாளின்போது அறிவிக்கப்பட்ட முடிவுகளுக்குப் பதிலாக அறிவிக்கப்படும் இந்த முடிவு, பிப்ரவரித் திங்கள் முதல் நாளிலிருந்து செயல்படுத்தப்படும்.

61. ஜனவரித் திங்களில் அலுவலர்களுக்கான அகவிலைப்படி மற்றும் சலுகைகளை அறிவித்தபோது 12 கோடி ரூபாயாக அமையும் என்று கணக்கிடப்பட்ட கூடுதல் செலவுக்குப் பதிலாக, இப்போது நாம் எடுத்துள்ள இந்த முடிவின் விளைவாக, நமக்குக் கூடுதல் செலவு 24·5 கோடி ரூபாயாக அமையும். குறைந்த அளவு உயர்வு 20 ரூபாய் என நாம் செய்துள்ள புதிய முடிவின் விளைவாக கடைநிலை ஊழியர் போன்ற குறைந்த ஊதியம் பெறும் அலுவலர்கள் சிறப்பாகப் பயனடைவார்கள் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

## 1974–75 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகள்.

62. 1974 மார்ச் மாதத்தில் செய்யப்பட்ட கூடுதல் வரி விதிப்பு முறைகள் உட்பட, இந்த ஆண்டு வருவாய்க் கணக்கின் கீழ், 480·69 கோடி ரூபாய் வரவு இருக்குமென்றும், 483·25 கோடி ரூபாய் செலவு இருக்குமென்றும், இவற்றின் விளைவாக 2·56 கோடி ரூபாய் துண்டு விழும் என்றும் வரவு செலவுத் திட்டத்தின் போது கணக்கிடப்பட்டது. இப்போதுள்ள கணக்கீட்டின்படி நடப்பு ஆண்டில் 11.83 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கில் துண்டு விழும் என்று தெரிகிறது. மத்திய அரசு, திட்டப் பணிகளுக்காக நமக்கு தரும் உதவி எதிர்பார்த்ததை விடக் குறைந்ததன் காரணமாகவும், வறட்சிப் பகுதிகளில் வரி விலக்கு தந்ததாலும் வரவுகள் குறைந்தன; அதே நேரத்தில் நடப்பாண்டில் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக 12 கோடி ரூபாய் செலவிட வகை செய்துள்ளோம். அரசு ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணம் தந்து, அதன் பின் கூடுதல் அகவிலைப்படி தந்துள்ளோம். மேலும் சிறு பாசனத் திட்டங்களை விரைவுபடுத்தியும், கிராமச் சாலைத் திட்டத்தினை மேலும் விரிவு படுத்தியும் கூடுதலாக பணிகளை மேற்கொண்டுள்ளோம். இவற்றின் காரணமாக செலவினங்களில் உயர்வுகள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறு செலவின உயர்வுகளும், எதிர்பார்த்த சில இனங்களில் வரவு குறைந்ததும் நடப்பு ஆண்டில் பற்றுக்குறை 11·83 கோடி ரூபாயாக உயர்வதற்குக் காரணங்களாகும்.

## 1975–76ஆம் ஆண்டின் வரவு-செலவு மதிப்பீடுகள்.

63. 1975–76ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டம் வருவாய்க் கணக்கில் வரவினங்கள் 501·4 கோடி ரூபாயாகவும், செலவினங்கள் 537·5 கோடி ரூபாயாகவும், இதன் விளைவாக 36·1 கோடி ரூபாய் பற்றுக்குறை உள்ளதாகவும் அமையும். விற்பனை வரியின் கீழ் 26·4 கோடி ரூபாய் கூடுதல் வரவு இருக்கும் என எதிர்பார்க்கிறோம். அதே நேரத்தில், மதுவிலக்குக் கொள்கையின் விளைவாக, நடப்பாண்டு திருத்த மதிப்பீட்டிற்கும், வரும் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டிற்கும் இடையே 22·1 கோடி ரூபாய் வரவு குறைந்து விடும். குதிரைப் பந்தய ஒழிப்பு, நில வரி வசூல் வஜா, மின்சார உபயோகத்தின் மீதான வரியை



மின் கட்டணங்களுடன் சேர்த்தது—இவற்றின் விளைவாக வருவாய் குறைந்துள்ளது. செலவினங்களில் வறட்சித் துயர் தணிப்புப் பணிகளுக்காக 20 கோடி ரூபாய் சிறப்பாக ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு இந்தப் பணிகளுக்காக சிறப்பு உதவி முழுமையாகத் தருவார்களேயானால், வருவாய்க் கணக்கில் உள்ள துண்டு கணிசமான அளவுக்குக் குறையும். முதலீட்டுச் செலவுகளுக்காக 41·70 கோடி ரூபாயும், கடன்கள், முன் பணங்கள் தருவதற்காக 42·13 கோடி ரூபாயும் மத்திய அரசுக்கு கடன் தவணைகளைத் திரும்பிச் செலுத்துவதற்காக 42·35 கோடி ரூபாயும் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளன. வருவாய்க் கணக்கில் 36·1 கோடி ரூபாய் துண்டு விழுவதையும் உள்ளடக்கி, வருவாய்க் கணக்கு, கடன் மூலதனக் கணக்கு, மற்ற இனங்கள், இவை அனைத்துமாக 26·6 கோடி ரூபாய் துண்டு விழும்.

64. முன்னரே குறிப்பிட்டுள்ளதைப் போல், வறட்சித் துயர் தணிப்புப் பணிகளுக்கு தக்க நிதி ஒதுக்கீடு செய்து, அரசு அலுவலர்களுக்கு கூடுதல் அகவிலைப்படி அளித்து, மதுவிலக்குக் கொள்கையைக் கடைப்பிடித்து, அதே நேரத்தில் வளர்ச்சிப் பணிகளை விரைவு குன்றாது செயல்படுத்த திட்டமிட்டுள்ளதன் விளைவாக ஏற்பட்டுள்ள பற்றுக்குறையை ஓரளவு ஈடு செய்ய நாம் கூடுதல் வரி விதிப்பு நடவடிக்கைகள் சிலவற்றை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. சாமானிய மக்களைப் பாதிக்காத வண்ணம் வரி விதிப்பு முறைகள் இருக்க வேண்டும் என்ற நமது கொள்கைக்கிணங்க, இப்போதும் வரி விதிப்பு முறைகளை அமைக்க முயற்சித்துள்ளோம்.

65. காபி, ஃபிரெஞ்சு காபி, சிக்கரி, தேயிலை இவற்றின் மீதான ஒரு முனை விற்பனை வரி $5\frac{1}{2}$ சத வீதத்திலிருந்து அண்டை மாநிலங்கள் பலவற்றில் இருப்பதற்கொப்ப 6 சத வீதமாக மாற்றியமைக்கப்படும். 59 பொருட்கள் மீது விதிக்கப்பட்டு வந்த பல முனை விற்பனை வரியை ஒரு முனை விற்பனை வரியாக சென்ற ஆண்டு மாற்றியமைத்தோம். தற்போது பல முனை வரி வீதம் ஒவ்வொரு முனையிலும் 4 சத வீதமாக இருந்து வருகிறது. எனவே, எண்ணெய் வகைகள், பிண்ணாக்கு, இயந்திரத்தால் தயாரிக்கப்படும்

தீக்குச்சிகள், பருப்பு வகைகள் இவற்றின் மீதான ஒரு முனை வரி வீதத்தையும் அதற்கேற்ப மாற்றும் வகையில் $3\frac{1}{2}$ சத வீதத்திலிருந்து 4 சத வீதமாக அமைக்க முடிவு செய்துள்ளோம். எனினும், விவசாயிகளுக்குத் தேவைப்படும் உர வகைகள், பூச்சி கொல்லி மருந்துகள் இவற்றின் மீது தற்போதுள்ள $3\frac{1}{2}$ சத வீத ஒரு முனை விற்பனை வரியில் மாற்றம் ஏதும் செய்யவில்லை என்பதையும் அறிவிக்க விரும்புகிறேன். மின்சாரப் பொருட்கள், இயந்திரப் பொருட்கள், கருவிகள் போன்றவற்றின் மீது 9சத வீத ஒரு முனை விற்பனை வரி தற்போது விதிக்கப்பட்டு வருகின்றது. இவற்றுள், வசதி மிக்கவர்களால் பயன்படுத்தப்படும் மின் அரவைக் கருவி, மின் துணி துவைக்கும் கருவி போன்றவற்றின் மீதான விற்பனை வரி 12 சத வீதமாக உயர்த்தப்படும். மின் விளக்குகள், மின் விசிறி போன்ற மற்றவற்றின் மீதான விற்பனை வரி தற்போதுள்ள 9 சத வீத அளவிலேயே தொடர்ந்து இருந்து வரும். வாசனைத் திரவங்கள் மீதான ஒரு முனை வரி 9 சதவீதத்திலிருந்து 12 சத வீதமாக உயர்த்தப்படும். பருத்தி, பருத்தி நூல் மீது தற்போதுள்ள 2 சத வீத ஒரு முனை வரி, அண்மை மாநிலங்கள் பலவற்றில் இருப்பதற்கொப்ப 3 சத வீதமாக மாற்றியமைக்கப்படும். இறால், நண்டு, தவளைக் கால்கள் போன்றவை பெரும்பாலும் பதப்படுத்தப்பட்டு, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. இவை மீது நமது அண்டை மாநிலமான கேரளத்தில் 5 சத வீத ஒரு முனை வரி விதிக்கப்பட்டு வருகின்றது. இதனையொட்டி, கடைசியாக வாங்கப்படும் கட்டத்தில், இவற்றின் மீது 5 சத வீத ஒரு முனை வரி விதிக்கப்படும். எனினும், சிறிய வர்த்தகர்களுக்குச் சலுகை தரும் நோக்கத்தில், 5,000 ரூபாய்க்குக் குறைவாக வியாபாரம் உள்ளவர்களுக்கு, பதிவு செய்துகொள்வதிலிருந்தும், விற்பனை வரியிலிருந்தும் விலக்களிக்கப்படும்.

66. முத்திரைத் தாள் வரி மீது இப்போது கூடுதல் மேல் வரி விதிக்கப்பட்டு வருகின்றது. இந்தக் கூடுதல் மேல் வரியை முத்திரைத் தாள் வரியுடன் இணைத்து, அவ்வாறு வரும் தொகையை முழு ரூபாய்களாக மாற்றியமைக்கவும், முடிவு செய்யப்பட்டுள்ளது. இது கணக்கிடுவதற்கு எளிதாக அமையும். பத்திரங்கள் சிலவற்றின் மீதான முத்திரை வரியும் ஓரளவுக்கு உயர்த்தப்படும்.





67. மேற்கூறிய வரி விதிப்பு முறைகளின் பலனாக, ஆண்டு ஒன்றுக்கு 6 கோடி ரூபாய் கூடுதலாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் வருவாய்க் கணக்கில் உள்ள துண்டு, 30·1 கோடி ரூபாயாகவும், எல்லாக் கணக்குகளையும் மொத்தமாகப் பார்க்கும்போது ஏற்படும் துண்டு 20·6 கோடி ரூபாயாகவும் குறையும். 1975—76இல் ஏற்பட்டுள்ள பற்றுக்குறையைச் சரிக்கட்ட ஆண்டுத் திட்டத்திற்கான மத்திய உதவியை அதிகப்படுத்தியும், வறட்சிப் பணிகளை நிறைவேற்ற சிறப்பு நிதி உதவி அளித்தும் உதவ வேண்டும் என்று சில நாட்களுக்கு முன்பு டெல்லியில் நான் நடத்திய பேச்சு வார்த்தைகளின்போது மத்திய அரசை வேண்டிக் கேட்டுள்ளேன். இதனை மத்திய அரசு ஏற்று, நமக்கு உதவி தர விரைவில் முன் வரும் என்றும் நம்புகிறேன்.

### மத்திய மாநில உறவு

68. மத்திய, மாநில அரசுகளுக்கிடையிலான நிதி உறவுகள் உறுதியாக அமையாத நிலையில், ஒருபுறம் வளர்ச்சித் தேவைகளையும், மறுபுறம் சீரான நிதி நிர்வாகத்தையும் கருத்தில் கொண்டு, சூழ்நிலைக்கேற்ப நமது வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டியிருக்கிறது என்பதை நான் உரையின் தொடக்கத்திலேயே குறிப்பிட்டுள்ளேன். வருவாய்க் கணக்கிலும், எல்லாக் கணக்குகளின் தொகுப்பிலும் பற்றுக்குறை இருக்கிறது. எனினும் திட்டப் பணிகளுக்காகவும், வறட்சித் தணிப்புப் பணிகளுக்காகவும், மத்திய அரசிடமிருந்து நாம் எதிர்பார்க்கும் உதவி வரும்போது, இந்தப் பற்றுக்குறை நிறைவு செய்யப்பட்டு விடும். சிக்கன நடவடிக்கைகளை நாம் தொடர்ந்து எடுத்து வருகின்றோம். வளர்ச்சிப் பணிகளுக்கென நிதி வசதிகளைப் பேணித் திரட்டுவதில், நாம் மற்றெந்த மாநிலத்திற்கும் பின் நின்றதில்லை. நாம் கவனிக்க வேண்டியது, ஒரு குறிப்பிட்ட ஆண்டில் நிதிநிலை பற்றுக்குறையாக அமைந்துள்ளதா, அல்லது உபரியாக அமைந்துள்ளதா என்பதல்ல. மாநில மக்களின் தேவைகளுக்கேற்ப வளர்ச்சித் திட்டங்களை வகுக்க மத்திய, மாநில அரசுகளுக்கிடையில் நிதி உறவு நியாயமான முறையில் அமைந்துள்ளதா என்பதையே நாம் ஆராய வேண்டும். சென்ற ஆண்டு முதல் செயலுக்கு வந்துள்ள ஆறுவது நிதி ஆணைக் குழுவின் பரிந்துரைகள் நமக்கு ஏமாற்றத்

(உ) தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர்கள் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) 6,002.

(இ) 600.

(உ) 21.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, கழிந்த தேர்வில் 'டிப்ரெஸ்டு க்ளாஸஸ்'-ஐச் சேர்ந்தவர்கள் 21 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக முதலமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள். அதே மாதிரி 'பாக்வர்டு க்ளாஸஸ்'-ஐச் சேர்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்து மாவட்ட வாரியான 'ப்ரேக்-அப்' விவரம் முதல் அமைச்சர் அவர்கள் கைவசம் இருந்தால் அதைக் கூறுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதில் பிற்பட்ட வகுப்பினர் 133 பேர்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, உதவி ஆய்வாளர்களைத் தேர்ந்தெடுக்கும் நேரத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு உரிய சதவீத இடங்கள் கொடுக்கப்படுவதில்லை என்ற குறை பொதுவாக இருந்து வருகிறது. இந்த ஆண்டு மொத்தம் எத்தனை இடங்களுக்குத் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசியம் இருந்தது? அதிலே தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கிடைத்த சதவீதம் எவ்வளவு? இதிலுள்ள குறைபாடுகளை இனிமேலாவது போக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அவர்களுக்கென்று அறிவிக்கப்பட்டுள்ள 18 சத வீதம் நிறைவு செய்யப்பட வேண்டும் என்றுதான் விரும்புகிறோம். ஆனால், ஆங்காங்கு மண்டலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறவர்கள் 'பிசிகல் டெஸ்ட்'டில் வெற்றி பெற்றாலும், பிறகு 'ரிட்டன் டெஸ்ட்'டுக்கு அனுமதிக்கப்பட்டு, மாநிலத் தேர்வுக் குழுவினுடைய நேர் பார்வைக்கு வருகிறார்கள். அங்கே அவர்களுக்கென்று எண்கள் குறைக்கப்பட்டு, அந்த எண்கள் எடுத்தால் போதும் என்ற அளவுக்கு சலுகை அளிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, 160 எண்ணுக்கு 90 எண் வாங்கினால் போதும் என்ற அளவுக்கு சலுகை தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்டோர் அல்லாதவர்களுக்கு 160 எண்ணுக்கு 106 எண் வாங்கினால் போதும் என்று இருக்கிறது. இப்படி 16 மதிப்பெண்கள் குறைத்து சலுகை தந்திருந்துங்கூட, தகுதி பெற்றவர்கள் இல்லாத காரணத்தால் 18 சதவீதம் என்பது நிறைவு செய்யப்பட முடியாமலிருக்கிறது. இவைகளுக்கெல்லாம் ஒட்டுமொத்தமாக ஒரு நல்ல தீர்வு காண்பதற்காகத்தான் வருகிற ஆண்டிலிருந்து உதவி ஆய்வாளர் பதவிக்கு நேரடித் தேர்வு நடத்தும் பணியினை தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனிடம் ஒப்புவிப்பதென்று 15-11-1974-இல் அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்தத் தகுதிச் சான்றை பிற்பட்ட மாணவர்களுக்கு இன்னும் குறைக்க அரசாங்கம் ஏதாவது வழிவகை செய்யுமா? அவர்கள் இன்னும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற நிலைமையில் அவர்களுடைய தகுதிச் சான்றை புனரமைப்பு செய்வது சிறாக இருக்கும் என்ற கருத்தைச் சொல்கிறார்கள். ஆகவே, அதைப்பற்றி அரசு ஆலோசிக்குமா?



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, உடல் கூறு டெஸ்டில் அவர்கள் வெற்றி பெற்றுவிடுகிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட காவல் துறைப் பணிக்கு இன்னும் கொஞ்சம் இந்த எண்களைக் குறைக்கலாமா என்பதைப்பற்றி இனி இந்தத் தேர்வு நடத்தவிருக்கும் சர்வீஸ் கமிஷன் முடிவுகளை எடுக்கும்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, இந்த உதவி ஆய்வாளர் பதவிக்கு ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் வந்திருப்பதாக முதல் அமைச்சரவர்கள் சொன்னார்கள். அவற்றில் பெண்கள் எத்தனை பேர் விண்ணப்பம் செய்திருக்கிறார்கள்? எத்தனை பெண் உதவி ஆய்வாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்? அவர்கள் இப்பொழுது எந்தப் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பெண்களுக்கு என்று தனி காவல் துறைப் படையொன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் சார்பாக விண்ணப்பங்கள் கோரினால் அதற்கு விண்ணப்பங்கள் வரும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, சர்வீஸ் கமிஷன் தேர்வு செய்யும்போது உடல்கூறு தேர்வும் அவர்களுக்கு அங்கே நடத்தப்படுமா? அந்தந்த மாவட்டத்திலேயே உதவி ஆய்வாளர்கள் தேர்வு நடைபெறுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, 15-11-1974-இல் தான் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. எந்த அலுவலை எந்த மாவட்டத்தில் செய்யலாம், சர்வீஸ் கமிஷனை வைத்துக்கொள்ளலாமா என்பதைப்பற்றி இனி மேல்தான் பரிசீலனை செய்யவேண்டும்.

* 142 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973-74-ம் ஆண்டில் போலீஸ் கான்ஸ்டேபிள்கள் எத்தனை பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்?

(இ) இவர்களில் எத்தனை பேர் பட்டதாரிகள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) 2,549 பேர்.

(இ) 70 பேர்.

திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, போலீஸ் கான்ஸ்டபிள்களுக்கான குறைந்தபட்ச தகுதியை உயர்த்துகிற எண்ணம் ஏதாவது அரசுக்கு இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்போதே சில தகுதிகளில் மாற்றம் செய்யப்பட்டுதான் காவலர் கிரேடு-1, காவலர் கிரேடு-2 என்று மாற்றியமைக்கப் பட்டிருக்கிறது. வேறு தகுதிகள் எதையும் மாற்றுவதாக உத்தேசம் இல்லை.

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவர் அவர்களே, கான்ஸ்டபிள்களைத் தேர்ந் தெடுக்கும்போதே சரியான உயரம் இல்லை என்று சிலர் புறக்கணிக்கப்படு கிறார்கள். ஆனால், சிறந்த விளையாட்டு வீரர்களாக இருந்தால் அவர்களுக்கு இதில் விதி விலக்கு அளிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, உயரம் 168 சென்டிமீட்டர் இருக்கவேண்டும். என்று இப்பொழுது நிர்ணயிக்கப்பட்டி ருக்கிறது. விளையாட்டு வீரர்களாக இருந்தால் உயரம் குறைவானவர்களை எடுத்துக்கொள்ளலாம் என்று உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். ஆனால், இப்படிப்பட்ட மிகுந்த பொறுப்பு வாய்ந்த காவலர் துறைக்கான பதவிகளில் குறைந்த உயரமுள்ளவர்களை நியமிப்பது என்றால், பிறகு அதே உயரமே மாமூலாகிவிடும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, அண்மையிலே போலீஸ் ரெக்ரூட்மெண்ட் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததே, அதை இப்போது துவங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா ? அது விரைவிலே துவங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தேவைக்கேற்ப பரிசீலித்து கவனிக்கப்படும்.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், போலீஸ் கான்ஸ்டபிள் தேர்விலே அவர் களுடைய கல்வி எந்த அளவிலே இருக்கவேண்டுமென்று ஆணையிடப் பட்டிருக்கிறதோ அந்த அளவிலே உள்ளவர்கள்தான் எடுத்துக்கொள்ளப் படுகிறார்களா ? அல்லது அதற்கு மேல் தகுதியுள்ளவர்களும் எடுத்துக் கொள்ளப்படுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** குறிப்பிட்ட கல்வித் தரத்திற்கு மேலே படித்தவர்களும் எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள் என்பதற்கு எடுத்துக் காட்டாகத்தான் என்னுடைய பதிலில் பட்டதாரிகள் 70 பேர்கள் இந்தத் துறையிலே சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பதாகும். கிரேட்-1 பதவிகளுக்கு தகுதி எஸ்.எஸ்.எல்.சி. வரையிலே படித்திருக்கவேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது.



**திரு. இ. பொன்னுமலை :** இராணுவத்திலிருந்து வந்தவர்களுக்கு இதிலே முதலிடம் அளிக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இராணுவத்திலிருந்து வந்தவர்கள் எக்ஸ்-சர்வீஸ் மென் ஆகத்தான் இருப்பார்கள். அவர்களுக்கு எப்படி இடம் அளிப்பது என்பதுபற்றி பரிசீலிக்கப்படும்.

## புதை பொருள்கள் வைத்திருப்போர்கள்.

* 143 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஐம்பொன் சிலைகளையும், புதைபொருள்களையும் வைத்திருக்கும் தனியார்கள் தங்களிடம் உள்ள பொருள் பற்றிய விவரங்களை பதிவு செய்து கொள்ள வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, தமிழகத்திலே பலர் இதுபோன்ற ஐம்பொன் சிலைகளையும் பொருட்களையும் மறைத்து வைத்து இருக்கிறார்கள். அந்தக் கணக்கை எடுத்து யார் யாரிடம் என்ன என்ன பொருட்கள் இருக்கின்றன என்று எடுக்கப்பட்டிருக்கிறதா ? இனிமேலாவது இதுபோன்ற உத்திரவைப் போட்டு அதைப் பரிசீலிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பழம்பொருட்கள், சிலைகள், காசுகள் முதலியன தனியார்களிடம் இருந்தால் அவற்றை அவர்கள் பதிவு செய்து கொள்ளவேண்டுமென்றும் அந்த முறையிலே அவற்றைப் பாதுகாப்பது அவசியம் என்றும் மத்திய அரசு சட்டமியற்றியுள்ளது. ஆனால் அந்தச் சட்டத்தை எப்படி நிறைவேற்றுவது என்பதைப்பற்றி பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது. அந்தப் பரிசீலனை முடிந்தால்தான் ஆணைகளை வெளியிட முடியும். ஒவ்வொருவரும் தங்களிடம் உள்ள பொருட்களைப் பற்றி பதிவு செய்தார்களா அப்படிப் பதிவு செய்யாவிட்டால் அவர்களை என்ன செய்வது தண்டிப்பதா அல்லது ஒவ்வொரு வீடாகச் சென்று சோதனை போட முடியுமா என்பதைப்பற்றியெல்லாம் ஆராயவேண்டியிருக்கிறது. மத்திய அரசு ஒரு

சட்டத்தை போட்டிருக்கிறார்கள். எப்படி அதை நடைமுறைப்படுத்துவது என்பதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். பரிசீலனை முடிந்ததற்குப் பிறகு அதற்கான ஆணை பிறப்பிக்கப்படலாம்.

*Archaeological excavations in Karur.*

* 144 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state the progress made so far by the State Department of Archaeology in its work of excavations in Karur in Tiruchirappalli district?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** கரூரில் அகழ்வாய்ந்து தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் சில பொருட்களும் கட்டிடப் பகுதியும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடப் பகுதியையும், பொருட்களையும் சரித்திர சின்னங்களாகப் பாதுகாக்க அரசு எண்ணி தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி:** சார், கரூரிலே நடத்திய ஆராய்ச்சியின் பயனாக கண்டுபிடிக்கப்பட்ட முக்கியமான அரசியல் விளக்கங்கள், என்ன என்ன பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டது? அவையெல்லாம் எந்தக் காலத்திய சரித்திரம். அதனுடைய சரித்திரத்தையெல்லாம் எடுத்து வைத்திருக்கிறார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, கரூர் நகரத்திலே ஜெயப்பிரகாஷ் நடுநிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் ஒரு மேல்நிலை நீர்த் தொட்டி கட்டுவதற்காக குழி தோண்டப்பட்டது. 3 மீட்டர் ஆழம் தோண்டியதற்குப் பிறகு கீழே சில கட்டடங்கள் உள்ள பகுதியும் கருப்பு சிகப்பு மண் நிறைந்த தன்மைகள், பழம் ஓடுகள் ஆகியவை கிடைத்தன. அதற்குப் பிறகு தொல் பொருள் ஆராய்ச்சித் துறையினர் அதை ஆராய்ந்தார்கள். ஆராய்ந்து பார்த்ததில் அதற்குக் கீழே 3 மீட்டர் 35 சென்டி மீட்டருக்குக் கீழே கட்டடப் பகுதிகள், அதிலே ஒரு அடித்தளம், அதற்கு மேலே ஒரு தளம், அதற்கு மேலே ஒரு கட்டடமும் அமைந்திருக்கிறது. அந்தக் கட்டடப் பகுதிகள் மட்டுமல்லாமல் சிகப்பு, கருப்பு மண் நிறைந்த தன்மைகளும் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானைகளும் ஓடுகளும் சுடுமண் மணி களும், கருப்பு சிகப்பு தன்மைகளும் பழைய ஓடுகளும் ரோமானிய எழுத்துக்கள் உள்ள ஓடுகளும் கண்டுபிடிக்கப்பட்டன. ரோமானிய செப்புக் காசுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அந்தக் காசுகளின் ஒரு பக்கத்தில் யானை பொறிக்கப்பட்டிருக்கிறது, இன்னொரு பக்கத்தில் ரோமானிய எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. அதனுடைய காலம் 1700 ஆண்டு



காலத்திற்கு முன்னதாக இருக்கவேண்டுமென்று வல்லுநர்கள் அறிவிக்கிறார்கள். அந்த இடத்தை மேலும் தொல்பொருள் ஆராய்ச்சித்துறையினர் ஆராய்ந்து வருகிறார்கள். அந்த இடம் மிகச் சிறப்பு மிக்க இடமாகக் கருதப்படுகிறது. மழை காலம் முடிந்ததற்குப் பிறகு அந்த இடங்களை மேலும் பாதுகாப்பதற்காக முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த இடத்திலே அந்த நீர்நிலைத் தொட்டியை கட்டவேண்டாமென்றும் அதைக் கட்டுவதற்கு வேறு இடம் பார்க்கவேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த பொருட்களையெல்லாம் துறையினர் சேகரித்து வைத்திருக்கிறார்கள்.

**திரு. கோ. இளங்கோவன்:** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அந்த இடம் பாதுகாக்கப்பட்டு வருகிறது என்று சொன்னார்கள். அதிலே மேற்கொண்டு பணி தொடர இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அந்த இடத்தினுடைய பகுதிகளை எல்லாம் அந்த தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் அகழ்ந்து வேறு ஏதாவது கிடைக்குமா என்று ஆராய இருக்கிறார்கள். அந்த ஆராய்ச்சியின் மூலமாக மேலும் பல பொருட்கள் கிடைக்கக்கூடும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

**திரு. என். கே. பழனிசாமி:** ரோமானியத்திற்கும் நம் நாட்டிற்கும் சரித்திரப் பூர்வமான தொடர்பு எதுவும் இல்லை. அப்படியிருக்கும்போது இது கண்டுபிடிக்கப்பட்டிருப்பதன் மூலமாக ஆராய்ச்சித் துறையினர் என்ன கருதுகிறார்கள்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பண்டைக் காலத்திலே, இரண்டாயிரம் ஆண்டுக் காலத்திற்கு முன்னதாக யவன நாட்டிற்கும் ரோமானிய நாட்டிற்கும் கிரேக்கத்திற்கும் வாணிபத் தொடர்பு இருந்தது. அந்த நாட்டினுடைய பொருட்கள், காசுகள் இங்கே வந்ததாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். தமிழகத்திலே காவிரிப்பூம்பட்டினத்துக் கடற்கரையோரமும், பாலாற்றுக் கரையோரமும் மதுரையில் வைகைக் கரையோரமும் இப்படிப்பட்ட செப்புக் காசுகளும் ரோமானியக் காசுகளும் கிடைக்கின்றன. இது வரையிலே கிடைத்திருக்கின்ற ரோமானிய காசுகளில் கிட்டத்தட்ட 500 காசுகள் வரை கரூர் வட்டாரத்திலிருந்தும் அதனுடைய சுற்றுச் சூழலிலிருந்தும் கிடைத்திருக்கின்றன. ரோமானிய நாட்டிற்கும் நம் நாட்டிற்கும் வாணிபத் தொடர்பு இருந்ததாக வரலாறு இருக்கிறது. அரசியல் தொடர்பு அல்லது படையெடுப்பு முதலியவைகள் மூலம் தொடர்பு இருந்ததாக இல்லை. வாணிபத் தொடர்பு இரண்டு நாடுகளுக்கும் இடையே இருந்திருக்கிறது என்பது தெரிய வருகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, கரூரிலே இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள பொருட்கள் மூலமாக அது சோழர்களின் காலத்தைச் சேர்ந்தது என்று சொல்லப்படுகிறது. அதற்கு ஏதாவது சான்றுகளை ஆராய்ச்சியாளர்கள் கூறியிருக்கிறார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: கரூர் சோழ அரசர்களுடைய தலைநகரமாக விளங்கியதாக ஒரு கருத்து இருக்கிறது. சேர நாட்டினுடைய துணை தலைமை இடமாகவும் இருந்ததாகக் கருதப்படுகிறது. வஞ்சி மாநகரமும், கரூரும் சேர நாட்டினுடைய தலைநகரங்களாக இருந்திருக்கின்றன என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டிருக்கிறார்கள். சோழர்களின் தலைநகரமாக இருந்தது என்ற குறிப்புகளும் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். ஆகவே அது ஒரு அரசனுடைய இருப்பிடமாகவும் சேர அரசர்களின் வசம் சில காலம் இருந்ததாகவும் சில காலம் சோழ அரசர்கள் வசம் இருந்ததாகவும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

### சுற்றுலா வளர்ச்சிக்கு மத்திய உதவி.

* 145. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1972-73-ம் ஆண்டில் தமிழக சுற்றுலா வளர்ச்சிக்கு மத்திய அரசு ஒதுக்கிய நிதி எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1972-73 ஆம் ஆண்டில் இந்திய அரசு, தமிழ்நாட்டின் சுற்றுலாத் திட்டங்களுக்காக ரூ. 18.25 லட்சமும், சென்னையில் 'அடையாறு கேட் ஹோட்டல்' கட்டுவதற்கும் கடனாக ரூ. 30 லட்சமும் ஒதுக்கியுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறைமூலமாக பெரும்பாலும் அன்னியச் செலாவணி கிடைப்பதாக குறிப்பிடப்படுகிறது. எனவே அன்னியச் செலாவணியை அதிகமாகப் பெற்றிடக் கூடிய முறையிலே தமிழகத்திலே சுற்றுலாத் துறையை விரிவுபடுத்த வேண்டும் என்று நம்முடைய அரசு மத்திய அரசுக்கு இத்துறைக்கு அதிகமாகக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எடுத்திருக்கிற நடவடிக்கைகளை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறையில் அதிகமான வாய்ப்புகள் வசதிகள் செய்துதரப்படவேண்டுமென்று தமிழகத்தின் சார்பாக மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அந்த





முறையிலே தான் மகாபலிபுரத்தின் சுற்றுச் சூழல்களை மேம்படுத்துவதற்கான திட்டங்களை தீட்டவேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக்கொண்டு இருக்கிறோம். அந்த வகையிலேதான் அங்கே ஒளி-ஒலி காட்சியை அமைத்துத் தரவேண்டுமென்று வற்புறுத்துகிறோம். தமிழகத்திலே வெளிநாட்டுப் பயணிகள் வந்து தங்குவதற்கு வசதிகளையும் வாய்ப்புக்களையும் கொண்ட சிறந்த தங்கும்—உணவு விடுதிகளைக் கட்டுவதற்கு அதிகமாகக் கடன்கள் தந்திடவேண்டுமென்று மத்திய அரசை நாம் வற்புறுத்தி வருகிறோம்.

### செயற்கை உறுப்புகள் தயாரிப்பு

* 146. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உடல் ஊனமுற்றோருக்குத் தேவைப்படும் செயற்கை உறுப்புகள் நமது மாநிலத்தில் எங்கெங்கு தயாரிக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

1. அரசினர் பொது மருத்துவமனை, சென்னை.
2. அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை.
3. கோயம்புத்தூர் தலைமை மருத்துவமனை, கோயம்புத்தூர்.
4. ராசா மிராசுதார் மருத்துவமனை, தஞ்சாவூர்.

### Anti-malarial works

* 147 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether it is a fact that the Health Ministry of the Government of India has written to the State Government recently in regard to toning up the anti-malarial work in the State; and

(b) if so, the steps taken by the Government in this regard in response to the letter?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) : பேரவை முன் விவர அறிக்கையொன்று@ வைக்கப்பட்டுள்ளது.

---

@ 114-116-ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1975 மார்ச் 3

திரு. என். கே. பழனிசாமி: சார், சமீப காலத்தில் மலேரியா தடுப்பு நடவடிக்கைகள் மிகவும் குறைந்திருப்பதற்கான காரணங்கள் என்ன? சர்க்கார் மத்திய அரசாங்கத்தை இந்த வண்டிகளை மாற்றியமைத்துக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருப்பது எந்த அளவிற்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இந்த மலேரியா ஒழிப்புப் பணி செம்மையாக நிறைவேற 1959-ஆம் ஆண்டில் அதற்கான வண்டி வாகனங்களைப் பெறுவதற்கு அப்பொழுது மத்திய அரசு முன் வந்து உதவி செய்தது. அப்பொழுது வாங்கப்பட்ட அந்த வண்டி வாகனங்களில் பல இப்பொழுது பழுதாகியிருக்கிறது. அப்படிப் பழுதான வண்டிகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மறுபடியும் புதிய வண்டி வாகனங்களைத் தர வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டதற்கு, அவற்றை மாநில அரசே அவர்கள் செலவில் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். மாநில அரசு அவை அனைத்தையும் வாங்குவதற்கான வகை இல்லாத நிலையில் எந்த அளவிற்கு நாமாக வண்டிகளை நம்முடைய செலவில் வாங்கிக்கொள்ளலாம் என்று ஆலோசிக்கப்பட வேண்டியதாக இருக்கிறது என்று இயக்குநரால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ரா. காசிராமன்: தலைவரவர்களே, மலேரியா போன்ற நோய்கள் கொசுக்கள் அதிகமாக உற்பத்தியாவதன் காரணமாகத்தான் பரவுகின்றன. இந்தக் கொசுக்களின் உற்பத்தியைத் தடுப்பதற்காக நகரங்களிலும், பஞ்சாயத்துக்களிலேயும், பல ஊர்களிலேயும் இருக்கின்ற நீர்த்தேக்கங்களைக் குறைப்பதுதான் சரியான முறையாக இருக்கும். சென்னை நகரத்தில் அம்மாதிரியான நீர்த்தேக்கங்களில், கொஞ்சம் கொஞ்சமாக நீர் தேங்கியிருக்கும் நீர்த்தேக்கங்களைக் குறைக்க லாரிகள், சக்ஷன் பம்பு ஆகியவற்றைப் பயன்படுத்திச் செய்கிறார்கள். ஆனால் அநேகமாக எல்லா முனிசிபாலிட்டிகளிலேயும் அம்மாதிரியான வசதி இல்லை. அந்த வசதியை அவற்றிற்கும் விஸ்தரித்துக் கொடுத்தால் சிறு சிறு சாக்கடைகளாகத் தேங்கியிருக்கும் நீர்த்தேக்கங்களில் உண்டாகும் கொசு உற்பத்தியை ஒழித்து நல்ல பலன் ஏற்படும். இதைச் செய்ய முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, பெரிய நகரங்களில் கிடைக்கின்ற அவ்வளவு வசதிகள் சிறிய நகரங்களிலேயும் கிடைக்கும் அளவிற்கு பொருளாதார நிலை இடம் தராது. ஆனால் சிறிய நகரங்களில் அந்த நகரசபைகள் வண்டிகளை வைத்து தேங்கியிருக்கும் சாக்கடை நீரை அகற்றி சாக்கடைத் தண்ணீர் தேங்காமல் செய்ய முயற்சிக்கிறார்கள். ஆனால் இந்த மலேரியா ஒழிப்புப் பணியானது கொசு ஒழிப்புப் பணியையும் அடிப்படையாக



1975 மார்ச் 3]

கொண்டதுதான். அந்த வகையில் நீர் நிலைகள் இருந்தால் அவைகளில் மருந்து தெளிப்பதன் மூலம் கொசு உற்பத்தியாகும் வேகத்தைக் கட்டுப்படுத்துவது, முட்டைகளை அழிப்பது போன்றவற்றை அவ்வப்போது செய்கிறார்கள். இதைத் திறமையாகவும், ஆர்வமாகவும் செய்வதற்கு அவ்வப்பொழுது அறிவுறுத்தப்படுகிறது.

திரு. எம். தேவராசன்: தலைவரவர்களே, முன்பு ஒருமுறை மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த மாதிரியான கேள்வி ஒன்றுக்குப் பதில் கூறும்பொழுது கொசுக்களிலே பெண் கொசுக்களை மலடுகளாக ஆக்கும் திட்டம் இருப்பதாகக் கூறினார்கள். அந்தத் திட்டம் இப்பொழுது எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அது ஆராய்ச்சி அளவிலே இருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM: Is the National Malaria Scheme still working in the City of Madras? If so, what is the grant that is being paid by Central Government for this purpose?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, தனியாக ஒரு கேள்வி அதற்கென்று போடப்பட்டால்தான் அதற்குரிய தொகை பற்றி அறிந்து சொல்ல முடியும்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, இந்தக் கொசுக்கள் 100 மைல் 200 மைல்களுக்கு அப்பாலிருந்து வருவதாகச் சொல்லப்படுகிறதே, அப்படி வருவது உண்மையா? அப்படியிருந்தால் அந்தந்த ஊர்களிலேயே அந்தக் கொசுக்களைத் தடைப்படுத்துவது நல்லது அல்லவா? அத்தகைய முயற்சியில் அரசு ஈடுபடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, கொசுக்களுக்கு அவ்வளவு கஷ்டமில்லை. ஆங்காங்கேயும் மக்கள் தொகை அதிகமாக இருப்பதால் கொசுக்கள் உற்பத்தியாகும் இடங்களிலேயிருந்து நீண்ட தூரம் போக வேண்டிய அவசியம் கொசுக்களுக்கு இல்லை. ஆனால் கொசுக்களைப் பொறுத்த வரையில் ஒரு வட்டாரத்திலிருந்து இன்னொரு வட்டாரத்திற்கு பரவிக்கொண்டு போகும் தன்மையுடையவை. மலேரியாக் கொசுக்கள் ஒரு மாவட்டத்திலே ஏராளமாக இருந்தால் அதிலிருந்து பரவிக்கொண்டு வரும் வாய்ப்பு ஏற்படும். அதுதானே தவிர 100, 200 மைல்களுக்கு அப்பால் இருந்து தனியாகக்

கொசுக்கள் பறந்து வரவேண்டுமென்ற அவசியம் இல்லாத அளவிற்கு அங்கங்கேயே அவ்வளவு மக்கள் இருக்கிறார்கள். மக்கள் தொகை குறைந்தால்தான் கொசுக்கள் ஆளைத் தேடிக்கொண்டு போக வேண்டியிருக்கும்.

## *Seminar on Environmental Pollution*

* 148 Q.—Thiru N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether any representative of the Government of Tamil Nadu attended the three-day All India Seminar on Environmental Pollution, which concluded at Tiruvandrum on 14th October 1974; and

(*b*) if so, the decisions taken at the Seminar?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) பேரவை முன் விவர அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: Prevention of Water Pollution Act என்ற சட்டத்தை ஒவ்வொரு மாநிலத்திலேயும் இயற்ற வேண்டுமென்று மென்று சொல்லியிருக்கிறார்களே, அப்படியானால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? குறிப்பாக, இந்த சிமெண்ட் தொழிற்சாலைகள் இருக்கும் பகுதிகளில் வசிக்கும் மக்கள் பூராவும் பாதிக்கப்படுகிறார்கள். அதைத் தடை செய்ய அம்மாதிரியோ அல்லது வேறு ஏதாவது முறையிலேயோ ஏற்பாடு செய்து அதை மாற்றியமைக்கும் முறையிலே செய்து மக்கள் பாதிக்காத அளவிற்கு நடவடிக்கை எடுக்க சர்க்கார் திட்டமிட்டு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, தமிழக அரசு கொள்கை அளவிலே சுற்றுப் புற சுகாதாரப் பாதுகாப்பு என்ற முறையில் சாக்கடை நீரைத் தூய்மைப்படுத்த ஏற்கனவே ஒரு குழுவை அமைத்து அந்த உயர் மட்டக் குழுவின் ஆலோசனைகளைப் பெற்றுத்தான் பலயிடங்களில் அதற்கான பணி நடக்கிறது. அண்மையிலே காற்றுத் தூய்மை கெடுதல் தடுப்புக் குழு ஒன்றை தமிழக அரசு அமைத்திருக்கிறது. அந்த காற்றுத் தூய்மைக் கெடுதலைத் தடுக்க இந்தக் குழு சொல்லும் ஆலோசனைகள் பல்வேறு இலாக்காக்களின் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த இலாக்காக்

@ 407-409 பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.



களிலே அதைப் பின்பற்றி எந்த அளவிற்கு காற்றின் தூய்மை கெடாத முறையில் போக்குவரத்து சாதனங்களாக இருந்தாலும், தொழிற்சாலைகளாக இருந்தாலும், இரயில் நிலையங்களிலே வந்து சேரும் எஞ்சின்களில் புகையானாலும் அதைக் கட்டுப்படுத்த எந்தெந்த வகைகளிலே நடவடிக்கை எடுக்க முடியுமோ அவற்றை எடுக்க ஆலோசனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, பல லாரிகள், பஸ்கள் போன்றவைகளில் சிமெண்ணெயைக் கலந்து ஓட்டுவதாலும் அல்லது எந்திரக் கோளாறுகளினாலும் அவைகள் ஓடும்பொழுது புகையடித்துப் போகிறது. இந்தப் புகை சுற்றுச் சுகாதாரத்தைக் கெடுக்கிறது. இதனைத் தடுக்க 'டெட்டரண்ட் பனிஷ்மெண்ட்' முறையில் அரசு நடவடிக்கை எடுக்குமா அல்லது வேறு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, காற்றுத் தூய்மைக் கெடுதலைத் தடுக்க ஆலோசனைகள் வழங்குவதற்காக அமைக்கப்பட்ட குழுவில் போலிஸ் இலாக்காவைச் சேர்ந்த ஒரு உயர் மட்ட அதிகாரியும் இடம் பெற்றிருக்கிறார். தேவையிருந்தால் சென்னை மாநகரம் போன்ற பெரிய நகரங்களுக்கு வரும் வண்டிகளிலிருந்து பாவும் புகையின் அளவைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற முறையில், குறிப்பிட்ட நேரங்களில் நடவடிக்கை எடுக்கிறார்கள், அந்த நடவடிக்கையைத் தொடர்ந்து எடுக்க வேண்டுமென்று அரசு ஆலோசனை சொல்லும்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, புகையின் அளவைக் குறைப்பதன் மூலம் மட்டும் தூய்மை ஏற்படுத்திவிட முடியாது. ஏதாவது ஆராய்ச்சியின் மூலம் காற்றில் கலந்து வரும் தூய்மையைக் கெடுக்கும் நிலையைக் கண்டுபிடித்து, தனியாகக் கருவிகளை வைத்து காற்றைச் சுத்தப்படுத்தும் வாய்ப்புகளை அரசு கண்டுபிடிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, சந்திர மண்டலத்திற்குப் போய்விட்டு வந்து அதற்குப் பின் ஆராய வேண்டிய ஒன்று இது. ஏனென்றால் கடல் தண்ணீரைத் தூய குடிநீராக ஆக்கும் செலவையே இந்தியா போன்ற நாடுகளில் இருக்கும் பொருளாதார நிலையில் எண்ணிக்கூடப் பார்க்க முடியாது. காற்று மண்டலம் முழுவதையும் தூய்மைப்படுத்துவது என்பது ஆகிற காரியம் அல்ல. அதற்குப் பதிலாக தூய்மையைக் கெடுக்கிற அளவிற்கு வெளிப்படுகின்ற தீய காற்றைத் தடுக்க புகை, கேஸ் இவைகளிலே எந்த அளவிற்கு கடுமையாகச் செய்ய முடியுமோ அந்த அளவிற்கு ஒவ்வொரு துறையிலேயும் செய்யலாம்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவரவர்களே, காற்றைச் சுத்தமாக ஆக்குவதற்குப் பல ஆராய்ச்சிகள் பொதுவாகவே நடந்தாலும் அமெரிக்கா போன்ற நாடுகளிலே கூட அதனால் ஏற்படும் கெடுதல்களைத் தடுக்க முடியவில்லை என்று தான் தெரிகிறது. அதற்கு இருக்கின்ற ஒரேயொரு மாற்று வழி என்னவென்றால், காலையிலே 'பிராணாயாமம்' செய்யும் பழக்கத்தை ஏற்படுத்துவது தான். எல்லோரும் காலை 5 மணி முதல் 6 மணி வரையில் ஒரு 15 நிமிஷங்கள் பிராணாயாமம் செய்ய வேண்டுமென்று அரசு முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அவர்கள் தெரிவித்த அந்த மூச்சுப் பயிற்சி உடல் நலத்திற்கு அடிப்படைத் தேவையான பயிற்சி என்பதை நான் மனதார ஒப்புக்கொள்கிறேன். அந்த மூச்சுப் பயிற்சியானது அவரவர்களின் கொள்கையைப் பொறுத்து, ஆர்வத்தைப் பொறுத்து அவரவர்கள் நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய ஒன்றாகும். அல்லது ஓய்வு உள்ளவர்கள் கடல் காற்றில் இருக்கின்ற 'ஓஸோன்' என்ற காற்றை அதிகமாக நுகர்வதன் மூலமாக உடல் நலம் பெறலாம். ஆனால் அந்தக் கடற்காற்று ஆஸ்துமா உள்ளவர்களுக்கு ஒத்துக்கொள்ளாது. ஆனால் இவைகளெல்லாம் தனிப்பட்ட முறையில் மனிதர்கள் செய்து கொள்ள வேண்டியவையாகும். ஆனால் பொதுவாக விஷவாயுக்கள் காற்றில் கலப்பதால் கடுமையான பாதகம் ஏற்படுகிறது என்பது ஏதோ ஒரு பத்திரிகையில் வந்த செய்தி. 'லெட் ஆக்ஸைடு' என்று எஞ்சின்கள் முதலியவைகளிலிருந்து 'லெட்' சம்பந்தமான ஒருவிதமான தூள் மனிதனின் மூச்சிலே கலந்தால் குழந்தைகள் போன்றவர்களுக்கு அறிவு வளர்ச்சி கெட்டுப் போகிறது என்று கருத்து இருக்கிறது. 'மெண்டல் ரிடார்டேஷன்' ஏற்படும் அளவிற்கு, தெளிவு குறைகிற அளவிற்கு நிலைமைகள் உண்டாகின்றன. ஆகவே, 'ஏர் பொல்யூஷனைத்' தடுக்க எந்த அளவிற்கு முயற்சி எடுக்க வேண்டுமோ அதை நாம் எடுக்கத்தான் வேண்டும்.

## *Exporters of Handloom Goods*

* 149 Q.—THIRU N. K. PALANISWAMY :
THIRU V. BALASUNDARAM : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to formulate a scheme of awards for the best handloom cloth exporters; and

(b) if so, the details thereof?





**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) கைத்தறி சரக்குகளை பெருமளவில் ஏற்றுமதி செய்வோருக்கு 1975, 1976, 1977-ம் ஆண்டுகளில் பரிசுகள் வழங்கும் திட்டமொன்றுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

(ஆ) பருத்தி கைத்தறித்துணிகள், பருத்தி கைத்தறி ஆடைகள், பட்டுத் துணிகள் ஆகியவற்றில் ஒவ்வொரு வகையிலும் மிகவும் உயர்ந்த அளவு ஏற்றுமதி செய்யும் 3 நபர்களுக்கு ரூபாய் 1,000, ரூபாய் 500, ரூபாய் 200 மதிப்புள்ள முதல், இரண்டாவது, மூன்றாவது பரிசுகள் முறையே வழங்கப்படும். இந்த மாநிலத்திலுள்ள ஏதாவது ஒரு துறைமுகத்திலிருந்து அல்லது ஆகாய மார்க்கத்தில் பார்சல் மூலம் செய்யும் ஏற்றுமதிகளுக்கு இத்திட்டம் பொருந்தும்.

(முற்பகல் 9-30)

**திரு. என். கே. பழனிசாமி :** சார், இந்த கைத்தறி துணி ஏற்றுமதி செய்வதை தனிப்பட்டவர்களுக்கு கொடுப்பதன் காரணமாக, வெளிநாட்டிற்கு அனுப்பப்படும் துணியின் தரம் குறைகிறது. அதன் காரணமாக வியாபாரம் குறைகிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, சர்க்கார் இதற்காக தனியாக ஒரு எக்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் ஆரம்பித்து, அதன் மூலம் கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்யும் முறையைப் பின்பற்றுமா ? இதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவரவர்களே, இப்படி ஏற்றுமதி செய்யும் தனியார்களுக்கு அரசு ஏதேனும் முன்பணம் தந்து உதவி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போதே ஏற்றுமதி செய்பவர்களுக்கு என்ன உதவித் தொகை கொடுக்கலாம் என்ற திட்டத்தை மத்திய அரசு ஏற்பாடு செய்து இருக்கிறது. ஏற்றுமதி செய்பவர்களுக்கு ஊக்கம் தருகிற கொள்கையை நாம் மத்திய அரசிடம் வற்புறுத்தி வருகிறோம்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவரவர்களே, கடந்த ஆண்டு கைத்தறித் துணிகள் நம் மாநிலத்திலிருந்து எவ்வளவு தொகைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது ? இனிமேல் எவ்வளவு ஏற்றுமதி செய்ய முயற்சி எடுக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

## கூட்டுறவு விற்பனைச்சங்கம், வேலூர்

* 150 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலூர் கூட்டுறவு மார்க்கெட்டிங் சங்கத்தில் 1973-74-ஆம் ஆண்டின் லாபம் எவ்வளவு?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 1973-74 ஆம் ஆண்டுக்காக தற்போது கிடைத்துள்ள புள்ளிவிவரப்படி ஆதாயம் ரூபாய் 7,475. தணிக்கை முடிந்ததும் முடிவான புள்ளி விவரம் தெரிய வரும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, இந்த மார்க்கெட்டிங் சொசைட்டியின் மூலதனம் எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சுமார் ரூபாய் 58,000.

## *Industrial Licensing powers*

* 151 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. Minister for Industries and Electricity be pleased to state :

(a) whether this Government have proposed to address the Centre on the delegation of industrial licensing powers to the State Governments; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) தொழில் உரிமம் வழங்கும் அதிகாரம் மாநில அரசுக்கு பிரித்துக் கொடுக்கப்படலாமென இந்த அரசு இந்திய அரசுக்குக் கருத்து தெரிவித்துள்ளது.

(ஆ) அதன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

(1) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அல்லது அனைத்திந்தியப் பாங்குள்ள தொழிற்சாலைகளை மட்டுமே மத்திய அரசு கட்டுப்படுத்துவதற்கு வகை செய்யும் வகையில் 1951-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் (வளர்ச்சி முறைப்படுத்துதல்) சட்டம் ரத்து செய்யப்பட்டு அதற்குப் பதிலாக சட்டம் ஒன்று இயற்றப்படவேண்டும்.

(2) உரிமங்களை வழங்குவது குறித்த விதித்துறைகள் அறவே நீக்கப்பட வேண்டும்.

(3) மாநிலத்திற்குள் புதிய தொழிற்சாலை நிறுவனங்களைத் தொடங்குவதற்கான உரிமங்களை வழங்கும் அதிகாரம் மாநில அரசுக்கு இருக்க வேண்டும்.



(4) (மத்திய அரசிற்கென ஒதுக்கப்பட்ட துறைகள் நீங்கலாக) பொதுத் துறையில் வெளிநாட்டு உடனுழைப்புடன் அல்லது வெளிநாட்டு உடனுழைப் பின்றி தொழில்களைத் தொடங்கி நடத்துவதற்கான அதிகாரத்தையும் மாநில அரசுகள் பெற்றிருக்க வேண்டும்.

(5) மாநில அரசு உரிமம் வழங்கியுள்ள அல்லது மாநில அரசு தொடங்கிய தொழில் நிறுவனம் ஒன்றிற்கு அந்நியச் செலாவணி தேவைப்பட்டால், நிதி ஆணைக்குழு திட்ட ஆணைக்குழுவைக் கலந்தாலோசித்து செய்யும் பரிந்துரையின் பேரில் ஒவ்வொரு மாநில அரசுக்கும் ஒதுக்கப்பட வேண்டிய மொத்த மானிய வகையில் தேவைப்படும் அந்நியச் செலாவணி ஒதுக்கப்பட வேண்டும்.

**திரு. என். கே. பழனிசாமி :** தலைவரவர்களே, இது ராஜமன்னார் குழுவின் முக்கிய சிபாரிசு. இந்த மாநிலத்தில் இருக்கும் அரசுக்கு லைசென்ஸ் வழங்கும் அதிகாரம் கொடுத்தால் யாருக்கு லைசென்சு கொடுப்பார்கள்? தனிப்பட்டவர்களுக்கு லைசென்சு கொடுத்தால் சர்க்காருக்கு என்ன லாபம்? இங்கேயிருக்கும் முக்கிய தொழிற்சாலைகளை,—தனியாருக்குச் சொந்தமானவைகள், மத்திய அரசுக்குச் சொந்தமானவைகள்,—மாநில சர்க்காரே எடுத்து நடத்துவது என்று சொன்னால், இங்கே ஒரு தனிப்பட்ட சர்க்கார் துறையில் தனியாக முதலாளித்துவம் வளர்ப்பதற்கு, மொனுபலியை வளர்ப்பதற்கு வழியேற்படாதா, இதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நம்முடைய சர்க்காரில் முதலிடம், பொதுத் துறைக்கும் இரண்டாவது இடம் கூட்டுறவுத் துறைக்கும், மூன்றாவது இடம் கூட்டுத் துறைக்கும், நான்காவது இடம் தனியார் துறைக்கும் என்ற முறையே வாய்ப்பளிக்கப்படும்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, இந்த உரிமம் வழங்குவதை மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்திற்கு கொடுத்தால் பொருளாதாரத் துறையிற் சரிவருமா? அதே நேரத்தில் நம்முடைய தமிழ் நாட்டில் லைசென்சு பெறும் முறையில் சில கஷ்டங்கள் இருக்கின்றன—உதாரணமாக பில்டிங், மின்சாரம், இது போன்ற சிக்கல்கள் இருக்கின்றன. இது சம்பந்தமாக அரசாங்கம் ஏதாவது தெளிவாக கொள்கை அறிவித்து இருக்கிறதா? பஞ்சாப் போன்ற மற்ற மாநிலங்களில் சுலபமாக லைசென்சு பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது. அதே முறையை நம் மாநிலத்தில் கொண்டுவர தயக்கம் காட்டுகிற காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதற்கு ஏற்படுகிற சில கஷ்டங்களைப் பற்றி ஆராய்ந்து, அவற்றைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாவட்ட அளவில் அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தக் கஷ்டங்களை நிவர்த்திப்பதற்கு அரசாங்க சார்பில் எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, இப்போது இருக்கும் முறைப்படி மாநில சர்க்காருக்கு எந்த அளவுக்கு லைசென்சு வழங்க உரிமை இருக்கிறது? மேலும் இதுவரையிலும் லைசென்ஸ் வழங்க மத்திய அரசுக்கு சிபார்சு செய்து, அது ஏதேனும் மறுக்கப்பட்டு இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஒரு கோடி ரூபாய் வரையில் இன்வெஸ்ட்மென்ட் உள்ள—அதற்குக் குறைவாக உள்ள திட்டங்களுக்கு மாநில அரசு அனுமதி வழங்கலாம் என்று இருக்கிறது. மற்ற விவரங்கள் என்னிடத்தில் இல்லை.

## தொழிற்கேந்திரங்கள்

* 152 வினா திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட இருக்கும் "தொழில் கேந்திரங்கள்" நமது மாநிலத்தில் எங்கெங்கு அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நமது மாநிலத்தில் திருப்பூர், மாதூர், பொன்னமராவதி, அறந்தாங்கி, திருவாரூர், தூவக்குடி, நாமக்கல், மதுரை, ஓசூர், அரியலூர், கரூர், ஈரோடு ஆகிய இடங்களில் தொழிற்கேந்திரங்களை சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் அமைக்கவுள்ளது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் பெரும்பாலும் உள்ளவர்கள் விவசாயத்தை நம்பி வாழ்க்கை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். அந்தப் பகுதியில் தொழில் வளர்ச்சி அதிகம் தேவை என்று அங்கேயுள்ள பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்கள். ஏற்கெனவே திருவாரூர் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் இருந்து பிரிந்த அறந்தாங்கிக்குப் பதிலாக மாயூரத்தில் அது போன்ற ஒரு நிலையத்தை உருவாக்கித் தர அரசு முன் வருமா?



**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இப்போது தஞ்சை மாவட்டத்தில் திருவாரூர் போன்ற பகுதியில் ஆரம்பிக்கத் திட்டம் இருக்கிறது. மாயூரத்தில் தேவைப்படுகிறது என்று கருதப்படுமானால் அங்கே நடவடிக்கை எடுக்கலாம். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இது போன்ற கருத்துக்களை தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், இந்தத் தொழில் கேந்திரங்களை அமைப்பதற்கு பல இடங்கள் தேர்ந்தெடுத்து இருப்பதாக அமைச்சர் கூறினார்கள். இப்போது அனுமதிக்கப்பட்ட சிறு தொழில்கள் ஆங்காங்கு சரியாக நடப்பதற்கு சில கஷ்டங்கள் இருக்கின்றன. அரசாங்கம் அவர்களுக்குச் செய்யும் உதவி போதவில்லை. காலதாமதம் ஆகிறது. மின்சாரம் கிடைக்கவில்லை. மூலப்பொருள்கள் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். இவைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் ஆழ்ந்து நடவடிக்கை எடுக்க முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மூலக்கேள்விக்குத் தொடர்பு இல்லாவிட்டாலும், இதுபோன்ற பிரச்னைகளில் அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. அ. பொம்மன் :** தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் தொழில் கேந்திரம் ஒன்று அமைக்க உதகை தாலுக்காவில் கேடி என்ற இடத்தை ஆராய்ந்து வந்தார்கள். அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அந்த விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவரவர்களே, திருப்பூரில் தொழில் கேந்திரம் அமைக்க இடம் கையகப்படுத்தப்பட்டு விட்டது. தண்ணீர் இருக்கிறதா என்பதையும் ஆராய்ந்து 75 அடி ஆழத்தில் 25 அடி தண்ணீர் இருக்கிறது என்றும் அறியப்பட்டு, 100 பனியன் பாக்டரி ஆரம்பிக்க அங்கேயுள்ளவர்கள் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, அந்தத் திட்டத்தை விரைவில் தொடங்கி, 100 பாக்டரி கட்ட அரசாங்கம் முன் வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நாற்பத்தி நான்கு லட்ச ரூபாய் செலவில் இந்தத் திட்டம் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. மற்ற வேலைகளும் துரிதமாக நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண். 153, மாண்புமிகு சமூக நல அமைச்சர் அவர்கள்.

(மாண்புமிகு சமூக நல அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் பேசிக்கொண்டிருந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண். 153......

### தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகம்

*** 153 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு சமூகநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மீன்பிடித்துறைமுகத் திட்டப்பணி தற்போது எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை :** தற்போது கட்டி முடிக்கப்படும் தறுவாயில் தூத்துக்குடி துறைமுகத்தின் நிலை இருக்கிறது என்று கூறிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பெரிய விடையாக இருக்கிறது. அதைப்படித்து விடுகிறேன்—

(1) தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகம் முதலில் 13 அடி மிதவை ஆழமுள்ள படகுகள் தங்குவதற்காக, 15 அடி ஆழமுள்ள துறைமுகமாக உத்தேசிக்கப்பட்டது.

(2) தற்போது 10 அடி ஆழமுள்ள துறைமுகமாக இது அமைக்கப்பட்டு 8 அடி மிதவை ஆழமுள்ள படகுகள் தங்குவதற்கு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

(3) இத்துறைமுகத்தில் சுமார் 400 விசைப்படகுகள் தங்க வசதியுள்ளது.

(4) தற்போது தினமும் சுமார் 150 விசைப்படகுகள் இத்துறைமுகத்தில் தங்குகின்றன.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** இந்தத் திட்டத்தை நிறைவேற்ற மொத்தம் எவ்வளவு ரூபாய் செலவாகியிருக்கிறது? இனி மேலும் எவ்வளவு ரூபாய் செலவழிக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது?





**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை :** இத்திட்டத்தை நிறைவேற்ற 2,10,00,000 ரூபாய் முதலில் மதிப்பிடப்பட்டு தற்போது 1,95,00,000 ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஐந்து லட்சம் ரூபாய்க்குள்ளாக வேலை முற்றுப் பெறும் தன்மையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி நேரம் முடிகிற வரை அமைச்சர்கள், உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளாமல் இருப்பது நல்லது.

**திரு. அ. ஆறுமுகம் :** மூலக் கேள்விக்கும் நான் கேட்பதற்கும் தொடர்பு இல்லையென்றாலும்—வறட்சியின் காரணமாக ஏரிகள் குளங்கள் வற்றியிருக்கின்றன. மேட்டூரில் கூட கடந்த பல ஆண்டுகளாக இல்லாத அளவுக்குத் தண்ணீர் வற்றி விட்டது. ஆகவே, அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற மீனவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கடனாகவோ, மானியமாகவோ அரசு உதவி செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை :** தற்போதுள்ள நிலைமையை உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள். பொதுவாகவே பாதிக்கப்பட்ட மக்கள் பகுதி எதுவாக இருந்தாலும் இந்த அரசு கருணையோடு கவனித்து அதற்கு ஆவன செய்து வருகிறது. உறுப்பினர் அவர்கள் யோசனை பற்றி ஆய்வு செய்து முடிவு செய்யப்படும்.

### ஆழ்கடல் மீன் பிடிப்பு

*** 154 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :**
**திரு. என். கே. பழனிசாமி :** மாண்புமிகு சமூக நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆழ்கடலில் மீன்பிடித் தொழிலுக்கென கப்பல்கள் வாங்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை :** (அ) ஆம்.

(இ) ஆழ்கடல் மீன்பிடித் தொழிலுக்கென, இத்தாலியிலிருந்து இரண்டு கப்பல்களும், மெக்சிகோவிலிருந்து (Mexico) இரண்டு கப்பல்களும் தமிழ்நாடு மீன் வள வளர்ச்சிக் கழகம் வாங்க உத்தேசித்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. இதைத் தவிர, மண்டபத்திலுள்ள தி கிரேட்

சீ டிராலர் பில்டிங் யார்ட் (The great sea trawler building yard) என்னும் உள்நாட்டு ஆழ்கடல் மீன் பிடிக்கும் கப்பல் கட்டும் நிறுவனத்திடமிருந்து 4 ஆழ்கடல் மீன்பிடிக்கும் கப்பல்கள் வாங்க உத்தேசித்து அதற்கான மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** ஆழ்கடலில் சென்று மீன் பிடிக்கும் கப்பல் வாங்கும் திட்டம் நீண்டகாலமாக இருந்து வருகிறது. இதைத் துரிதப்படுத்தி விரைவில் வாங்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? எப்போது வெளிநாடு சென்று வாங்க உத்தேசித்திருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை :** வெளிநாடு சென்றுதான் வாங்க வேண்டுமென்ற அவசியம் இருக்குமென்று நான் கருதவில்லை. செல்லாமலே வாங்கலாம். செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் உண்மையாகவே உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற கருத்திற்கேற்ப செய்யப்படும். பொதுவாகவே, மீன்பிடி துறைமுகம் சரியான முறையில் தமிழ்நாட்டில் இல்லாத காரணத்தால்தான் அதற்கான நீளமும் வசதியும் தரும் மீன்பிடிக் கப்பலை இதுவரை வாங்கவில்லை. இப்போது ஐந்து மீன்பிடி துறைமுகங்களை உருவாக்குவதற்கான சாத்தியக் கூறுகள் ஏற்பட்டு வருவதால் அடுத்து வர இருக்கும் பத்து திங்களுக்குள்ளாக பெரிய இரண்டு மீன்பிடி கப்பல்களை இத்தாலி நாட்டிலிருந்து வாங்கவும், அதைப் போலவே நம்முடைய நாட்டிலேயே 'தி கிரேட் சீ டிராலர் பில்டிங் யார்ட்' என்னும் நிறுவனத்திடமிருந்து 4 கப்பல்களை வாங்க உத்தேசித்து அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

**திரு. என். கே. பழனிசாமி :** ஐந்தாறு இடங்களில் டீப் சீ பிஷிங் ஹார்பர் ஏற்படுத்தலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிலே அடையாறும் சேர்க்கப்பட்டிருக்கிறதா? இந்த ஐந்தாறு இடங்களில் ஏற்படுத்த எவ்வளவு பணம் செலவாகும்? அதைப் படிப்படியாகச் செய்ய சர்க்காரிடம் திட்டம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை :** தமிழ்நாட்டில் மீன்பிடி துறைமுகம் சென்னை, கடலூர், மண்டபம், தூத்துக்குடி, நாகப்பட்டினம் போன்ற இடங்களில் அமைக்கப்பட இருக்கிறது. அதற்கேற்ற முறையில் மீன்பிடி படகுகளை வாங்க ஏற்பாடுகள் முறையாகச் செய்யப்பட்டு வருகிறது. மேற்கொண்டும் இத்தகைய துறைமுகங்கள் கட்டப்பட வேண்டுமென்று மூன்று இடங்களை மாநில அரசு மத்திய அரசுக்குச் சிபாரிசு செய்திருக்கிறது. அவை (1) மல்லிப்பட்டினம், (2) குளச்சல், (3) சின்னமுட்டம் பகுதி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து கேள்வி எண் 155 . . .



**திரு. எம். சுரேந்திரன் :** 154-வது கேள்வி முக்கியமானது. ஏராளமான உதவிகள் செய்யப்படுகிறது. விவரங்கள் கோரிப் பெற துணைக் கேள்விகளுக்கு அனுமதிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லாம் முக்கியமான கேள்விதான்.

**திரு. ஞ. சுப்பிரமணியம் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது மசூலிப்பட்டினத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க மத்திய அரசுக்கு அனுமதி கோரி எழுதப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். அந்த இடம் ஆந்திராவில் அல்லவா இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. அமைச்சர் சொன்ன விடையில் பொருத்தம் இல்லை, தவறு இருக்கிறது என்று சொன்னால் அது எப்படி பாயின்ட் ஆப் ஆர்டரில் வரும்?

### யானைப்பாகர்களுக்கு ஓய்வூதியம்

*155 வினா—திரு. கு. அ. பொம்மன் : மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வன இலாகாவில் பணிபுரியும் யானைப்பாகர்களுக்கு ஓய்வு பெற்ற பின்பு ஓய்வூதியம் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** ஆம். யானைப்பாகர்கள் எனப்படும் மாவுத்தர்கள், காவடிகள் என்னும் பணியாளர்களை முறையான அரசு பணியாளர்க்கு பொருந்தக்கூடிய சலுகைகளை பெறுவதற்கு இயலும் வகையில் அவர்களை தமிழ் நாடு வனத்துறைச் சார்நிலைப் பணியாளர் அமைப்பில் பகுதி பெற்ற பணிவகைகளின்கீழ் கொண்டு வர அரசு 20—6—1974-ல் அரசு ஆணை எண் 484-ல் ஆணை பிறப்பித்துள்ளது. இதனால் அவர்களுக்கு ஓய்வூதியம், பணிக்கொடை மற்றும் பிற நன்மைகளும் முறையான அரசுப் பணியாளர்க்கு பொருந்தக் கூடிய சலுகைகளும் கிடைக்கும்.

### *Elephants in Denkanikotta forests*

*156 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state the number of elephants living in the forests of Denkanikotta in Denkanikotta taluk of Dharmapuri district?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** ஏறக்குறைய இருநூறு யானைகள்.

திரு. கே. என். குமாரசாமி: அமைச்சர் அவர்கள் சுமார் 200 யானைகள் என்று சொன்னார்கள். நம்முடைய காட்டிலிருந்து யானைகள் தண்ணீர் இல்லாமல் மைசூர் காடுகளுக்குப் போய்விடுகின்றன என்று சொல்கிறார்கள். எப்படி அதைக் கணக்கிடுகிறார்கள்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: விடை சொல்லுகிறபோதே 'சுமார்' என்றுதான் சொன்னேன். வழித் தடங்களின் அளவைக் கணக்கில் எடுத்து இதைச் சொல்லுகிறார்கள். இவை ஒரே இடத்தில் நிலைத்திருப்பதில்லை. சில சமயங்களில் இடம் மாறுவதும் உண்டு.

திரு. ஜே. ஜேம்ஸ்: இப்போது மனிதர்களுக்கு ஏற்பட்டிருக்கும் தண்ணீர்ப் பஞ்சம் யானைகளுக்கும் ஏற்பட்டிருக்கிறது. அவற்றுக்குத் தண்ணீர் வசதி செய்து தர என்ன வழிவகைகளைச் செய்திருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அவர்களுக்கு வந்த புகார் அரசாங்கத்திற்கு வரவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: There are large number of elephants in Denganikottah and Dharmapuri forests. For want of water they even enter villages and spoil the crops and other things and kill many people also. May I know from the Hon. Minister for Commercial Taxes whether digging of some artificial tanks or ponds, etc., at some places in forests will be considered immediately on a war footing, so that the elephants may drink that water and may not come to villages and destroy crops?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இது போன்ற வன விலங்குகள் வாழ்கிற பகுதிகளில் தண்ணீர் இருக்கும் பள்ளத்தாக்குகளில் பெரிய கற்களை வைத்துக் கட்டியிருக்கிறார்கள். வனவிலங்கு சரணாலயங்களில் அவ்வாறு செய்யப்படுகிறது. அப்படி குறிப்பிட்ட பகுதிகளில் மேலும் செய்ய வேண்டி இருந்தால் செய்யலாம்.

திரு. கோவை செழியன்: யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன். தமிழ்நாட்டில் தண்ணீர் இல்லாத காரணத்தால் அவை அண்டை மாநிலங்களான கேரளத்திற்கும் கர்நாடகத்திற்கும் சென்று விடுகின்றன. 200 யானைகள் போய்விட்டதாகச் சொல்லுகிறார்கள். அவற்றை இங்கே அட்ராக்ட் செய்யும் வகையில் தண்ணீர், மற்ற வசதிகளைச் செய்ய அரசு முன்வருமா?





மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: யானைகள் இருக்கும் பகுதிகளில் உள்ள ஓடைகளில் யானை குடிக்கும் அளவுக்கு நீர் இருப்பதாகத் தகவல் இருக்கிறது. இதற்காகத்தான் வளைந்து வருகிற ஓடைகளை மறித்து கல் குண்டுகளைப் போட்டு கட்டி தண்ணீர் அதிக அளவு கிடைகக சில பகுதிகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இங்கே தண்ணீர் இல்லாததால் கேரளத்திற்கு யானை போய்விடுகிறது என்று குறிப்பிட்டார்கள். பொதுவாக தஞ்சை மாவட்டத்தில் மாடுகளை அடையாளம் தெரிந்துகொள்வதற்காக சூடு போடும் முறை இருந்துகொண்டிருக்கிறது. அதைப்போல யானைகளுக்கும் சூடுபோட்டு எத்தனை யானைகள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவை என்று கணக்கு எடுக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இயற்கையாகவே காட்டில் இருக்கிற யானைகளுக்கு சூடு போட முடியாது.

திருச்சிராப்பள்ளி பாற்பண்ணைத் திட்டம்

*157 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி நகரத்தில் அரசு பாற்பண்ணை துவக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, மாவட்டந்தோறும் இதுபோன்ற பால் பண்ணைகளை ஏற்படுத்தினால் அங்கிருக்கிற மக்களுக்கு பயனளிப்பதாக இருக்கும். ஆகவே, இனிமேலாவது ஒவ்வொரு மாவட்டத்திலும் பாற்பண்ணை தொடங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, திருச்சி மாவட்டத்திலே ஏற்கெனவே 1939-ம் ஆண்டில் 16 000 லிட்டர் தினசரி பால் கிடைக்கக் கூடிய அளவுக்கு ஒரு நிறுவனத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதைப்போல கோவை, திருநெல்வேலி, மதுரை மாவட்டங்களிலும் ஏற்கெனவே இருக்கின்ற நிறுவனங்கள் பணியாற்றிக்கொண்டிருக்கின்றன.

திருச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இடையிலே நிர்வாகக் குழு சரியில்லாததால் அந்தக் குழு கலைக்கப்பட்டுவிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டு, இப்போது சீரடைந்து வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், மாவட்டந்தோறும் ஏதோ நிறுவனங்கள் ஆங்காங்கே செயல்பட்டு வருவதாகச் சொன்னார்கள். அது கூட்டுறவு நிறுவனங்களா அல்லது தனியார் நிறுவனங்களா? அதோடு எல்லா மாவட்டங்களிலும் இத்தகைய திட்டம் இல்லை என்றாலும்—இப்போது மதுரை, சென்னையில் இருக்கிறது—தஞ்சை, திருச்சி இப்படி இரண்டு, இரண்டு மாவட்டங்களுக்கு ஒரு பால் பண்ணை என்ற அளவுக்காவது உடனடியாக 'டயரி டெவலெப்மென்ட் கார்ப்பரேஷன்' மூலமாக தொடங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாகத்தான் செய்கிறோம். மாவட்ட அளவில் மட்டுமல்ல; கிராமம் கிராமமாக கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்த வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் கொள்கையாகும். அந்த அடிப்படையில்தான் தற்போது 2,500-க்கு மேற்பட்ட கூட்டுறவு பால்பண்ணை சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. தற்போது குஜராத் மாநிலத்தில் இருப்பதைப்போன்ற—அமுல் பால்பண்ணை மாதிரி நம்முடைய தமிழ்நாட்டில் அமைக்க வேண்டுமென்று புதிதாக இரண்டு யூனியன்களில் அமைக்க முடிவுசெய்துள்ளோம். அதைப் போல தொடர்ந்து அவைகளை அமைக்க செயற்குறிப்பு இருக்கிறது.

### கன்னியாகுமரி மாவட்டத்தில் பாற்பண்ணைத் திட்டம்

* 158 வினா—திரு. என். டென்னிஸ்: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில், மும்முரா பாற்பண்ணைத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அத்தகைய திட்டம் எதுவுமில்லை.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பசு மாடுகள் அதிகமாக இருக்கின்றன. அங்கே இருப்பவர்கள் எல்லாம் சிறு விவசாயிகள்; அவர்களுக்கு ஓரளவுதான் வேலை இருக்கிறது. ஆகையால் 'இன்டென்சிவ் டயரி டெவலப்மென்ட் ஸ்கீமை' கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?



மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பெயரிலே அங்கே இல்லை என்றாலும் ஏற்கெனவே கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு பால் வழங்கு கூட்டுறவு யூனியன் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அந்த யூனியன் மூலம் மேலும் கால்நடை அபிவிருத்தி செய்யவும், பால் பெருக்குத் திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்தவும், செயற்கை கருத்தரிப்பு நிலையம் ஏற்படுத்தவும், அதைப்போல கால்நடை தீவன நிலையம் ஏற்படுத்தவும் ஆன ஒரு திட்டம் தற்போது அரசாங்கத்தில் இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, நமது மாநிலத்திலுள்ள பால் நமது மாநிலத்திற்கே போதாமல் இருக்கும்போது இங்கிருந்து கேரளா போன்ற மாநிலங்களுக்குச் செல்கிறது. அதைத் தடுத்து நிறுத்தி நமது மாநிலத்திலேயே விநியோகம் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்திலிருந்து கேரளா மாநிலத்திற்கும், மற்றும் பக்கத்தில் இருக்கிற அண்டை மாநிலங்களுக்கும் பால் கொண்டு செல்லப்படுகிறது என்பது உண்மைதான். பால் உற்பத்தியாளர்களுக்கு சரியான விலை இங்கே கிடைக்கவில்லை என்று பக்கத்து மாநிலங்களுக்கு ஓரளவு கொண்டு செல்கிறார்கள். அங்கே கொஞ்சம் கூடுதல் விலை கிடைக்கிறது. அதை சட்டத்தின் மூலம் தடுத்து நிறுத்துவது சற்று கஷ்டமான காரியம். ஆனால், இன்னும் அதிக விலை கொடுக்கும் வகையில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை, குழந்தை உணவு தயாரிக்கும் தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டால் வெளி மாநிலங்களுக்குச் செல்வது நின்றுவிடும். அந்த அடிப்படையில் மதுரை தெற்கு மாவட்டத்தில் உற்பத்தியாகும் பாலைக் கொண்டு பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை, ஈரோட்டில் குழந்தைகள் உணவு தயாரிக்கும் தொழிற்சாலை ஆகியவைகளை டயரி டெவலெப்மென்ட் கார்ப்பரேஷன் மூலம் ஏற்படுத்தக் கருதியுள்ளோம். அவைகள் நிறுவப்படும்போது நிச்சயமாக பாலுக்கு அதிக விலை கிடைக்கும்; வெளியே போவதை தடுத்து நிறுத்த முடியும்.

### தஞ்சை மாவட்டத்தில் அரிசனங்களுக்கு வீடுகள்

* 159 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரிசன நல வீட்டுவசதி வளர்ச்சிக்கழகம் தஞ்சை மாவட்டத்தில் ஆதி திராவிட மக்களுக்கு வீடுகள் கட்டத் திட்டமிட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், எங்கெங்கு கட்டப்பட இருக்கிறது?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: (அ) ஆம்.

[1975 மார்ச் 8

(இ) கீழ்க்கண்ட கிராமங்களில் அவ்வீடுகள் கட்டப்படுகின்றன :—

மனல்கோரை

தென்னமநாடு

சித்தமல்லி (வடக்கு)

அதிராம்பட்டினம்

இடையூர்

மேலவிதையல்

திருக்குவளை

திருவலஞ்சுளி

பொறையார்

காத்திருப்பு

கோயில் திருமலம்

சித்தமல்லி (தெற்கு)

திருவலபுதூர்

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தும் அடிப்படையில் இன்னும் சில இடங்களைப் பரிசீலனை செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் வீடுகள் கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ? இப்போது பல இடங்களில் கட்டப்பட்டு வருவதாகச் சொன்னார்கள். அதில் மாயூரம் தொகுதியில் அதிகமாக இல்லை என்று கருதுகிறேன். அந்தக் குறையைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :** தலைவரவர்களே, இந்த வீடுகள் கட்டித் தருவதற்கான இடங்களை தேர்ந்தெடுக்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சி தலைவர் கையில் இருக்கிறது. அவர்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதை உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்தாக வேண்டுமென்று கருதுகிறேன். ஒவ்வொரு வீட்டுக்கும் 3 சென்ட் நிலம் இருக்க வேண்டும் ; வீதி போடுவதற்கு 16 அடி அகலம் இருக்க வேண்டும். அரசாங்கம் கொடுக்கும் நிலமாக இருந்தால் இந்த அடிப்படையில் வீடுகளைக் கட்டித்தருவது மிகச் சுலபம். இருக்கிற வீடுகளைப் பிரித்துவிட்டு கட்ட வேண்டுமென்றால் 3 சென்ட் நிலம், வீதிக்கு 16 அடி அகலம் என்ற முறையில் கட்டுவதற்கு நாம் பெறுகிற இடம் இருப்பதில்லை. ஆகவே, முதல் கட்டமாக இந்த வசதிகள் உள்ள இடங்களில் வீடுகளைக் கட்டிவிட்டு, அடுத்த கட்டமாக மற்ற இடங்களில் கட்டலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. எல்லோருக்கும் வீடு கட்டித்தர வேண்டுமென்ற திட்டம் இருக்கிறது.



1075 மார்ச் 8]

**திரு. க. உரோ. எட்மண்ட் :** தலைவரவர்களே, பட்டுக்கோட்டை ஒன்றியத்தில் முதல்சேரி கிராமத்தில் அரிசனங்களுக்கு வீடு கட்ட இடம் பார்க்கப்பட்டு, சகல நடவடிக்கைகளும் மேற்கொண்ட பின்னால் இப்போது அந்தத் திட்டம் கைவிடப்பட்டதாக எனக்கு தகவல் வந்திருக்கிறது. அது உண்மையா ? உண்மை என்றால் அதற்கான காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :** தலைவரவர்களே, எத்தனை ஊர்களில் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன என்பது கேள்வி. எந்த ஊர் விடப்பட்டிருக்கிறது என்றால் அதற்கு தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

**திரு. ந. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, இந்த அரிசன வீட்டுவசதி கழகத்தின் சார்பில் வீடுகள் கட்டப்படுவதற்கான ஊர்களை தேர்ந்தெடுப்பது யாருடைய பொறுப்பு ? இந்தக் கழகத்தின் பணி என்ன ?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :** தலைவரவர்களே, வீடுகளைக் கட்டிக் கொடுப்பது வீட்டுவசதிக் கழகத்தின் வேலை. வீடுகள் கட்டப்படுவதற்கான இடங்களைத் தேர்ந்தெடுப்பது அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் பொறுப்பும், அவருக்கு கீழே இருக்கிற ரெவின்யூ அதிகாரிகளின் பொறுப்பும் ஆகும்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** தலைவரவர்களே, இந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கட்டப்படுகிற வீடுகள் மாவட்ட ரீதியில் ஒதுக்கப்படுகிறதா அல்லது தொகுதி அடிப்படையில் ஒதுக்கப்படுகிறதா ? இதற்கு எந்த அடிப்படையில் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :** தலைவரவர்களே, நான் ஏற்கெனவே இதுபற்றி விளக்கமாகச் சொன்னேன். முதற்கட்டமாக 10,000 வீடுகளை கட்ட வேண்டுமென்று அரசு முடிவு செய்திருக்கிறது. அதை, ஜனத்தொகையின் அடிப்படையில் மாவட்டத்திற்கு இத்தனை வீடுகள் என்று பிரித்து, எல்லா மாவட்டங்களிலும் வீடுகள் கட்டப்பட வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. வீடுகள் கட்டப்படுகின்ற இடங்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு, அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர், அவருக்குக் கீழுள்ள ரெவின்யூ அதிகாரிகள் ஆகியோருடையது. அவர்கள் தேர்ந்தெடுக்கின்ற இடங்களில் அரிசன வீட்டுவசதிக் கழகத்தின் மூலம் வீடுகள் கட்டப்படும்.

குறிப்பாக, ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு கிராமம் இந்தப் பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும். அதில் தவறியிருந்தால் அதற்கு காரணம் என்னவாக இருக்கும் என்பதைச் சொல்கிறேன். நான் ஏற்கெனவே

சொன்னதைப்போல வீடு கட்ட 3 சென்ட் நிலம், வீதி அமைக்க 16 அடி அகல இடைவெளி இருக்க வேண்டும். இப்படி இல்லாமல் இருந்தால் விடப் பட்டிருக்கலாம். வசதியான வீட்டு மனைகள் கிடைக்கின்ற இடங்களில் முன்னுரிமை கொடுத்து வீடுகள் கட்டப்படுகின்றன.

(முற்பகல் 10-00)

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவரவர்களே, இந்த வீடுகள் கட்டுவதற்கு எவ்வளவு செலவழிக்கப்படுகிறது? அந்தத் தொகை அவர்களுக்குக் கடனாக கொடுக்கப்பட்டிருக்கிறதா? அல்லது இனாமாகக் கொடுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** தலைவரவர்களே, இந்த வீடுகள் தஞ்சை மாவட்டத்திலும், பிற மாவட்டங்களிலும் 3,600, 700, 400 என்ற அடிப்படையில் கட்டப்பட்டு வருகின்றன. ஏன் இவ்வாறு இந்த வேறுபாடு இருக்கிறது என்று கேட்டால் கீழே அடிக்கல் நாட்டுகிறபோது அதாவது அஸ்திவாரம் போடுகிறபோது கீழேயுள்ள நிலங்களைப் பொறுத்து அந்த வீட்டின் கிரயங்கள் மாறுபடுகின்றன. ஆக, அவ்வளவும் இனாமாகத் தரப்படுகிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, சில இடங்களில் அரிஜன சகோதரர்களாகவே முன்வந்து 500 ரூபாய் என்று தருகிறார்கள். முன் பணமாக 500 ரூபாய் தருகிறோம். மீதமுள்ள பணத்தை நீங்களே கொடுங்கள் என்று சொல்லி சில பகுதிகளில் முன்னுரிமை தரப்படுகிறது. வீடுகள் இலவசமாக தரப்படுகின்றன. அவர்களிடம் பணம் திருப்பி வாங்குவதில்லை.

**திரு. க. மு. இராசகோபால்:** தலைவரவர்களே, உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் இருக்கிற ஊராட்சி ஒன்றியங்களிலேயே பெரிய ஒன்றியமாகும். அங்கே ஒரு வீடு கூட கட்டப்படவில்லை. இதற்கான காரணத்தை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** தலைவரவர்களே, நான் இதைப்பற்றி முன்பே விளக்கினேன். எந்த ஒரு தொகுதியைப் பொறுத்தவரையிலும் ஆங்காங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் தாங்களாகவே முன்வந்து இந்த ஊர் சட்ட திட்டங்களுக்குப் பொருத்தமாக இருக்கிறது, எடுத்துக் கொள்ளுங்கள் என்று உறுப்பினர்களும் தெரிவித்துக்கொள்ள வேண்டும். இல்லையென்றாலும் எந்தத் தொகுதியையும் விட்டுவிட முடியாது. அந்தத் தொகுதிகளுக்கு இரண்டாவது கட்டத்தில் அவர்கள் பார்த்துக் கொண்டு அங்கே நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், அப்போது தெரிவித்தால் அதற்கான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.



**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, அரிஜனங்களுக்கு ஒரு லட்சம் வீடு என்று விளம்பரங்கள் செய்யப்பட்டது. அந்த விளம்பரங்களைப் பார்க்கும் போது பல லட்சம் வீடுகள் கட்டித் தரப்படும் என்ற கருத்து ஏற்படுகிறது. ஆகவே, இந்தத் திட்டத்தின் கீழ் எத்தனை வீடுகள் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் அறிவித்தபடி ஒரு லட்சம் வீடுகள் கட்டிக் கொடுத்து விடவேண்டுமென்றும், மொத்தமுள்ள 10 லட்சம் குடும்பங்களில் கணக்கெடுத்து 6 லட்சம் குடும்பங் களுக்கு ஒரு லட்சம் வீடுகள் அளிக்கவேண்டுமென்று முடிவெடுத்து அதில் முதல் கட்டமாக 10,000 வீடுகள் கட்டி, இரண்டாவது கட்டமாக 60,000 வீடுகள் கட்டி, மூன்றாவது கட்டமாக ஒரு லட்சம் வீடுகளையும் கட்டி முடிக்க வேண்டுமென்ற திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது.

**திரு. கோவை செழியன்:** பேரவைத் தலைவரவர்களே, ஆயக்கட்டுப் பகுதிகளில் வசிக்கிற மக்களின் குடிசைகளில் தண்ணீர் உாமெடுத்து அங்கே அவர்கள் உட்கார்ந்துகொள்வதற்குக்கூட வசதி இல்லாமல் இருக்கிறது. என்னுடைய பகுதியிலிருந்து வருஷாவருஷம் இது பற்றி விண்ணப்பங்கள் அனுப்பிக் கொண்டிருக்கிறேன். எதிர்க்கட்சி உறுப்பினர் என்ற காரணத்தால் அதில் நடவடிக்கை எடுக்கப்படவில்லையா அல்லது அதில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** தலைவரவர்களே, மொத்தத்தில் எத்தனை காலனிகள் இருக்கின்றன, அந்தக் காலனிகளுள் இருக்கிற சட்டதிட்டங்களுக்குட்பட்டு எத்தனை இடங்களில் கட்டித் தரலாம் என்பது பற்றி முடிவெடுத்து அந்த முடிவிற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். வடிவேல்:** தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களும், ஒதுக்கப்பட்ட மக்களும், ஒதுக்கப்பட்ட இடங்களில் இருக்கிறார்கள். இதனால் தாழ்த்தப்பட்ட மக்கள் இன்னும் தாழ்த்தப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு வீடு கட்டுகிறபோது மற்றவர்களுடன் சேர்த்து வீடு கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமோ என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இந்த வீடுகள் ஏற்கனவே அரிசன மக்களுக்காக வாங்கித் தரப்பட்ட இடங்களில்தான் கட்டித் தரப்படுகின்றன. அவர்கள் வசதிகள் இல்லாமல் கஷ்டப்பட்டார்கள். அவர்களுக்கு [illegible] இடங்களில் இந்த வீடுகள் கட்டப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் வடிவேல் அவர்கள் சொன்னதைப் போல் இதை

யெல்லாம் ஊர் நடுவே கட்டினால் அங்கே இடம் பற்றாக்குறை ஏற்படும். ஆகவே, அரிசனங்களுக்கு இலவசமாக வழங்குவதற்கு தனித் திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

*Supply of rice to Hostels of Harijan and Backward Classes students.*

* 160 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether it is a fact that rice allotment to meet the requirements of the hostels for Harijan and Backward Classes students in the State, has been made by the Government during this year; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: (அ) ஆம்.

(இ) அரிசி விலையின் உயர்வைக் கருத்திற்கொண்டு அரிசன நலத் துறையும் பின்தங்கியோர் நலத்துறையும் நடத்தி வரும் மாணவர் விடுதிகள் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றிற்குத் தேவையான அரிசியைத் தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு துறை வழங்கவேண்டுமென அரசாணை (நிலை) எண் 779 சமூக நலத்துறை நாள் 14—10—1974-ன் வழி அரசு உத்தரவிட்டுள்ளது.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஹாஸ்டல்களுக்கெல்லாம் அறுவடை காலத்தில் அவர்களுக்கு 6 மாதத்திற்கோ, ஒரு வருடத்திற்கோ தேவையான அரிசியை அவர்கள் வாங்கி வைத்துக்கொள்ள லைசென்ஸ் வழங்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: தலைவரவர்களே, நாங்கள் எல்லாம் வெள்ளைக்காரர்கள் காலத்திலிருந்து பார்த்திருக்கிறோம், அதில் இன்றைய நடைமுறைதான் சரியானது. அங்கத்தினரவர்கள் சொல்கிற யோசனை சரி. ஆனால் அது நடைமுறைக்கு ஒத்துவராது.

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: தலைவரவர்களே, நான் மல்லிப்பட்டினத்தில் துறைமுகம் கட்டுவதற்கு மத்திய அரசிற்கு தரப்படும் என்று சொன்னேன். ஆனால் மருலிப்பட்டணம் என்று நான் கூறியதாகச் சொன்னார்கள். நான் மருலிப்பட்டணம் என்று கூறவில்லை. மல்லிப்பட்டணம் என்றுதான் கூறினேன் என்பதை வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



(2) 1975-76 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்.

DR. H. V. HANDE: Mr. Speaker, Sir, I am grateful to you for having given me an opportunity to initiate the budget discussion on behalf of Anna D.M.K. party.

It is indeed a tragedy that the Hon Mr. Karunanidhi our Chief Minister has lost his final and last chance of presenting a sensible budget for this State. This budget does not give hope or help to the millions of have-nots in our State nor does it exhibit any awareness of the serious financial crisis through which our country or State is passing. In addition the budget is anti-productive and highly inflationary. It does not devise ways and means of solving the very serious problem, viz., unemployment problem, facing this State. It has not faced once again this most vexatious problem. The fifty and odd page speech of the Hon. Chief Minister does not seem to be concerned at all about this problem of unemployment.

The serious power crisis bringing industries to a grinding halt, acute water scarcity threatening the very lives of the poor people don't seem to have caught the eye of the Chief Minister. Labourers, teachers, N.G.Os., pensioners and all other fixed income group persons are left in total wilderness. That is the exact situation as for as this budget is concerned. Now, Sir, I was particularly amazed at the Chief Minister's handling of the problem of planning, so far as this State was concerned. I would like to point that the Chief Minister explained to this House previously that he was going to set up a State Planning Commission, so that planning could be done on proper lines. Of course, a State Planning Commission was set up subsequently but my point is that it has not done anything worthwhile so far. Nothing successful has been done.

If only we look into the plan performance of the State (pages 16 and 17 of the annual plan) you will find that the progress has been far from satisfactory. Out of a Rs. 151 crore target for 1974-75 only 142 crores has been executed. Last year the Chief Minister mentioned before this House that the Plan would be Rs. 151 crores. But what happened actually? Let us see the revised estimates. Instead of executing an annual plan of Rs. 151

[Dr. H. V. Hande] 

crores as promised only a plan of Rs. 142 crores has been executed. We must also see another thing here. The Chief Minister assured the House previously of a plan of Rs. 151 crores with a loan amount target of Rs. 22 crores. But actually the loan secured was Rs. 31 crores. With that increased loan also, the original amount of Rs. 151 crores was not reached but only Rs. 142 crores has been spent.

Now, he has stated here and has again tried to mislead. We will call the bluff by pricking the bubble. He has said in this House in his speech that the Government was going to mobilise Rs. 170 crores for 1975–76. This total is devoid of basis, irrelevant to the facts available. He has said that the Government was going to mobilise 170 crores of rupees, 30 crores more than for 1974–75. That again is a myth and far from the truth, because the ensuing year's targetted amount of Rs. 170 crores consists of nearly 52 crores of loan amount. Actually mobilisation-wise, the 1974–75 plan amount is Rs. 110 crores and the 1975–76 plan amount is only Rs. 119 crores. This is all the amount. Thus, it will be seen that the Tamil Nadu Government's plan performance in spite of arming itself with a State Planning Commission is much poorer, below standard than what it trumpets.

In fact, there are three ways of receiving help from the Centre. They have not explored these fields. The first is devolution of funds through the Finance Commission. This is one way. As we have seen, the sum of Rs. 130 crores out of Rs. 500 crores are collected this way, that is, by devolution of funds, by pressurising and explaining before the planning comm[ission]. The other method is to get money for central projects in State. The third method is what he has been calling paltry sum and that is Rs. 41.15 crores. All these three methods have not been properly explored. He has not briefed and convinced the Planning Commission and at the Chief Minister's Conference; he has not persuaded the Central Government to increase the quota.

Therefore my charge is that the Government has bungled in all these ways. I say he has lost the opportunity of convincing the Centre. Actually, the Centre has allotted more funds this year and the plan fund is much more. For 1975–76, the plan fund is 5,960 crores—it is an increase of 1,116 crores. Last year



 [Dr. H. V. Hande]

it was Rs. 4,844 crores. They have improved on it. Mr. Subramaniam's budget shows an increase of Rs. 1,116 crores more than last year. Out of this, Rs. 3,154 crores is central outlay and Rs. 2,806 crores is for State and Union territories. That means Rs. 700 or Rs. 800 crores more are given for the States.

What is our position? Our Chief Minister has made no mention about the fact why a greater slice with his planning commission, has not been got for us. He is the Finance Minister and the Chief Minister. They have been unaware of the most serious implications of the budget. When the budget provision is increased one should have been smart to collect more. They have given a hint that there is much more for agriculture, power and fertilisers. We should have wangled much more provided we had made a scientific and pragmatic approach.

Therefore, the most important and crucial charge that I am levelling against this Government is that they have not thrown the spanner into devlopmental activities. I had said about this in my budget reaction the day before yesterday.

While the revenue expenditure has been mounting, the capital expenditure has been slashed completely. It is the capital expenditure that is the most important as far as the State is concerned. Therefore I say that the budget bristles with a dangerous trend of systematic erosion into capital expenditure that might ultimately ruin the development of our State. The only method by which the Chief Minister has covered his omissions and commission, his incapacity to mobilise and distribute is by transferring a sizeable and huge chunk from capital expenditure to revenue expenditure.

The capital expenditure outside the revenue account is estimated at Rs. 41.76 crores for the coming year, whereas it was Rs. 56.36 crores last year. Last year also they had thoroughly bungled. In 1974–75, it was only Rs. 32.64 crores according to the revised estimates against the budget estimates of Rs. 56.86 crores making a reduction of Rs. 24 crores.

In other words there is thorough confusion and thorough incapacity in all the departments concerned that are guiding the Chief Minister.

[Dr. H. V. Hande] [1975 மார்ச் 3

Out of the 83 Heads, most Heads have given capital expenditure in a hazardous way about which I would request all members to be very very watchful and vigilant.

Then I come to a very serious charge. I charge the State Government that their budgetary dealings are a hotbed of serious financial irregularities, defalcations of huge chunks of money, infructuous spending of taxes collected. We find huge amounts being wasted, unaccounted and irregularly spent. It is something scandalous and no State Government would be spending money in this most irresponsible manner. It is only our Chief Minister according to me who is responsible for the present financial condition of the State.

I hold no brief for the omissions and commissions of the Centre in this regard but it is my duty to say that a major share of today's mess goes to our Chief Minister and his cabinet. He is responsible for this total, massive, detailed bungling. Have they been able to spend the money they have collected properly for one year? The total irregular financial dealings per year on an average is 42,416 cases involving a sum of over Rs. 25 crores. I shall give the exact sum and it is Rs. 25,02,73,000 for one year. What a fantastic record our wonderful Chief Minister has for himself?

The next thing is about food policy. The Hon. Minister Mr. Madhavan who is placed in charge of this portfolio is supposed to be the brain of the cabinet. He has taken over the portfolio. Whether any one can undo the mischief that has already been done is a question we do not know. Ministers come and Ministers go and one Minister is removed before the problem is solved. There is no food policy at all for this Government. The day to day ideas of a few I.A.S. officers and the brainwave of the Minister of the day—the momentary brainwave of the temporary Minister—it is this combination, jumbling and composites that go to make what is called the food policy. There is no food policy at all. I am afraid that is the position.

If it can be called a policy at all, the food policy of the Government during the last couple of years has been the slipshod spineless policy never tailored to the availability of food or needs of the people, either the consumers or the actual producers Therefore, I say there has been bungling and there is no food policy for this Government. There has been one systematic policy.



1975 மார்ச் 3] [Dr. H. V. Hande]

The Cabinet has been regularly responsible, systematically and scientifically responsible to push the stocks available in our State to the neighbouring States of Karnataka and Kerala. And, that is a very serious charge I am levelling against this Cabinet right from 1972 onwards. The Government are systematically responsible for sending large scale stocks to these two States. It is this charge that was levelled by no less a person than the General Secretary of the Anna D.M.K. Thiru M. G. Ramachandran and the General Secretary of the C.P.I. Thiru Kalyanasundaram. Even these two persons who have levelled charges against this Government are saying that large scale food stocks is being sent away and the Ministers and the Cabinet are abettors in this gruesome crime. I can mention a number of points in this regard. That is why my submission is, if there is one single agency that is responsible for the present famine and spiralling of price of rice, it is the Cabinet that is sitting in front of me. It is this large scale smuggling, Sir, that has actually put our State into a very, very serious condition and jeopardised our entire position.

I shall with the permission of the Chair refer to the rejoinder and replies placed on the table of the House here. In this particular paragraph in this particular book it has been clearly stated at page 154 that A.N. Associated Traders—this was submitted to the Governor and the Prime Minister in 1972—A.N. Associated Traders, Madras-1 with 19 partners is the controlling organisational body for the operation of the fraud and the brain behind being a Minister and Sri Rajamanickam of Thiruvannamalai.

My information is, that there has been a lot of rigging in this case. This is the charge levelled here and they have given some answers. It will be surprising to note that not a single charge has been properly explained or countered or rebutted. They simply say "there is no basis for this, there is no meaning for this, this is a silly charge". But have they proved? No. But what actually happened? The later-on events—the Estimates Committee gave a report and later on reports are pouring into the Press. They all clearly prove that whatever misgivings that were raised by these two persons in 1972 were not ill-founded, but were founded, on good and proper basis. I will only point out that there was a case pending aaginst Mr. Rajamanickam when this particular

book was printed and when these charges were levelled. There was a case against Mr. Rajamanickam. I shall quote the number of the case—Crime No. 1022/72 of the Central Railway Police Station. But later on that case was dropped. Why was that case dropped? Who is trying to sheild whom? That was a very, very serious matter? What happened to this case? No action has been taken so far.

Then there was also a lawyer's notice from one Mr. Gopala Iyer of Coimbatore in Mr. Thandavarayan's case. With regard to Rajamanickam's case and after that Gopala Iyer's lawyer notice the whole thing will come to light. This particular crime number case was withdrawn. My charge is that this case. that was originally filed against Rajamanickam has been withdrawn. On this particular occasion he has not been charge-sheetsd. He has been let off. We do not know why.

Then I also try to bring to the attention of the House that there is a police report about a couple of years ago by Mr. Vaikunt, I.P.S.—a detailed 24 pages report. In that report all the things that are connected with this Rajamanickam and the North Arcot situation have been mentioned. All these things are available in that report. I would like to know why these things were withdrawn. That is a very, very serious matter that I would like to bring to the attention of the Hon. Minister.

Therefore, my submission is this. A couple of years ago they said 'what are these charges?' – They said that these charges by Mr. M. G. Ramachandran and Mr. Kalyanasundaram were frivolous and meaningless. To-day my submission is, I am trying to prove beyond any doubt that these charges were well-founded, they were not ill-founded, and they had basis, as I have proved. Further events will also prove that almost everything that they mentioned is there.

Then again my submission is, how can we get justice if there is large scale disappearance of files. The files disappear and they are reconstructed. Then we do not know what happens to the files. We do not know whether the files are original or whether they are duplicate. That is why we have said that unless this Government step down, truth will not come out. This is a very, very valid and important plea that I am making here. Until and unless this



Government step down, truth will not come out and I say that immediately this Government step down the truth will and shall come out. There is no doubt about it and we will see to it that truth will come out.

I have already mentioned the Crime number of the case against Mr. Rajamanickam Mudaliar. Then again with regard to Arakandanallur rice scandal. a case has been registered. Sheik Rowther, Abdul Salam, Kamurdeen and Sherfudeen are respondents.........

*மாண்புமிகு திரு. செ. மாதவன்:* என்ன வழக்கு? எங்கே பதிவு செய்யப் பட்டது? யாரால் வாபஸ் பெறப்பட்டது என்று சொல்கிறார்கள்.

DR. H. V. HANDE: If the Hon. Minister brings the entire file, further truth will come out. I have given him the number of the case. What is the difficulty?

*மாண்புமிகு திரு. செ. மாதவன்:* அந்த வழக்கு எது சம்பந்தப்பட்டது? நாம் இங்கு பேசுவது உணவுக் கொள்கையைப் பற்றியது. ஒரு நபர் மீது போடப்பட்ட வழக்கு என்கிறபோது அது எதற்காகப் போடப்பட்டது? அது விவரங்களைக் கொடுத்தால் பதில் சொல்ல முடியும்.

*(திரு. ஆலடி அருணா எழுந்தார்)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* ஆலடி அருணா—நீங்கள் உட்காருங்கள். அதற்கு திரு. ஹாண்டே பதில் சொல்வார். நீங்கள் பதில் சொல்லக் கூடாது.

DR. H. V. HANDE: I have mentioned with regard to food exporting. I have clearly stated that the Central Railway Police Station filed the case.........

*(திரு. ஆலடி அருணா பேசிக்கொண்டிருந்த திரு. ஹாண்டேயின் இடத்திற்கு வந்து அவரிடம் ஏதோ சொன்னார்.)*

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* திரு. ஆலடி அருணா தம் இடத்தை விட்டு எழுந்திருந்து வந்து, இதுபோன்று பேசிக்கொண்டிருக்கிற ஓர் உறுப்பினரிடம் ஒன்றைச் சொல்வது சரியானது அல்ல.

*திரு. ஆலடி அருணா:* இதில் என்ன தவறு இருக்கிறது? அமைச்சருக்கு அதிகாரிகளும், மற்ற உறுப்பினர்களும் தகவல்கள் சொல்கிறது இல்லையா? என்னுடைய கட்சி உறுப்பினரிடம் வந்து நான் ஒன்று சொல்கிறேன். அந்த குறிப்பிட்ட தகவலைக் கொடுப்பதில் என்ன தவறு இருக்கிறது?

[1975 மார்ச் 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிகாரிகள் அமைச்சருக்குத் தகவல் கொடுப்பது என்பது வேறு. அவர்கள் சட்டமன்றத்திற்குள் வந்து சொல்வதில்லை. திரு. ஹாண்டே நீங்கள் பேசுங்கள்.

DR. H. V. HANDE: Now I come to another point. I have given the names of the respondents – Sheik Rowther, Abdul Salam, Kamurdeen and Sherfudeen. The respondents have caused loss to the Government to the tune of Rs. 7, 25, 939.73. The value of the properties that are believed to be procured by means of the offence is Rs. 3,22,000. They say 'property will be attached, we are taking appropriate steps'. What is the value? It is not even one-fourth of the value of the amount involved. This is the position. The most curious thing is – I would like every one to enlighten me – Abdul Salam has been made a contractor for Thirukoyilur Union Bus Stand, Thiruvannamalai Arts College Hostel, Chengam Agriculture Farm, Thirukoyilur Dam, Muhayur Hospital, etc., etc.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** முன்பே டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசினார்கள். நான் கேட்கின்ற விளக்கம்—திரு. அப்துல் சலாமுக்கு வெள்ளம் அடித்துக்கொண்டு போனதாக சொன்ன பிறகு காண்டிராக்ட் கொடுக்கப் பட்டதா? அவர் காண்டிராக்டராக எப்போது ஆக்கப்பட்டார்கள்? இந்த விளக்கத்தைக் கொடுத்தால் என்றால் பதில் சொல்ல முடியும்.

DR. H. V. HANDE: If I am forced to say, I will say more things.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தயவுசெய்து எதையும் மறைக்காமல் சொல்லலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE: We have got particulars, proofs to show – in fact Mr. Chezhiyan wanted me to show it. We have got proofs to show that meetings were arranged between Hon. P. U. Shanmugam and Hon. Sadiq Pasha and these persons against whom charge sheets were filed and meetings had taken place in Thirukoilur.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, அவர் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக செயலாளர் என்பதை திரு. ஹாண்டே மறுக்கவில்லை. மாவட்டக் கழகச் செயலாளர் கூட்டத்தை ஏற்படுத்தலாம். அமைச்சரையும் அழைத்திருக்கலாம். நான் போகவில்லை என்பதையும் அவர் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். நான் கேட்ட கேள்வி எல்லாம் வெள்ளம்



1975 மார்ச் 3] [திரு. ப. உ. சண்முகம்]

அடித்துக்கொண்டு போய்விட்டது என்று சொன்னதற்குப் பிறகு அவர் காண்டிராக்டராக ஆக்கப்பட்டிருக்கிறாரா என்பதுதான். அதைச் சொன்னால் எனக்கு பதில் சொல்ல வாய்ப்பாக இருக்கும்.

(முற்பகல் 10-30)

DR. H. V. HANDE: After the whole thing came in the paper, after it came in 'Makkal Kural', after that you have sent a telegram. Till then did he not know? The very fact that the Hon. Minister, Thiru P. U. Shanmugam has come forward to give a reply clearly shows that he is connected with the whole problem. I am very grateful to him as he has now come out of the shell. But my submission is that I am making two charges. One is that Hon. Minister sent a telegram after this news came in 'Makkal Kural' in headlines.........

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நான் கூட்டத்திற்கே வரவில்லை. (குறுக்கீடு) நான் கூட்டத்திற்கே வரவில்லை.

DR. H. V. HANDE: Besides these contracts given to him, even now underhand dealings are going on. I can bring all the persons connected with it and produce them before the Hon. Minister. Even now some contract arrangements are going on. One of the reasons for referring it in my speech is to prevent further contracts. So, the point is that negotiations for contract are going on.........

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர்களே, நான் மறுபடியும் தங்கள் மூலம் டாக்டர் ஹாண்டே இடத்தில் விளக்கமாகக் கேட்டுக் கொள்ள விரும்புவது அப்துல் சலாம் என்பவருக்கு வெள்ளத்தால் அடித்துக்கொண்டு போகப்பட்டது என்று தெரிவித்த பிறகு காண்ட்ராக்ட் கொடுத்ததாகச் சொல்கிறார் (குறுக்கீடு) தான் சொன்னதுதான் உண்மை என்று சொல்கிறார். அதாவது, அப்துல் சலாம். வெள்ளம் வந்தபொழுது மூட்டை எல்லாம் அடித்துக் கொண்டு போகப்பட்டது என்று கூறினார். அதற்குப் பிறகு, அவருக்குக் காண்ட்ராக்ட் கொடுத்து, அதை அவர் எடுத்ததாகச் சொல்கிறார். அதை நிரூபிப்பதற்கு அவர் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று விரும்புகிறேன். இரண்டு விஷயங்களை அவைக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (குறுக்கீடு) நான் பதில் சொன்னதாலே வெளியே வந்து விட்டார் ப.உ.ச. என்று . . . (குறுக்கீடு) 10-வது பாராம் உரை இலாகா என்னிடத்திலிருந்து மாண்புமிகு மன்னை அவர்களுக்கு மாற்றப்பட்டது.

12-வது மாதம் வெள்ளம் வந்தது. அப்துல் சலாம், வெள்ளத்தில் மூட்டை அடித்துக்கொண்டு போகப்பட்டது என்று சொன்னார். (குறுக்கீடு). கெஸட் நோட்டிபிகேஷன் எல்லாம் வந்ததுதான். நான் சொல்வதிலே தவறு இருக்குமானால் உரிமைப் பிரச்னை கொண்டு வரலாம். 10-வது மாதத்திலே உணவு இலாகா மாற்றப்பட்டது. 12-வது மாதத்திலே (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொல்லி முடிக்கட்டும் . . .

**திரு. முனு ஆதி:** சாந்தமாகப் பேசுங்களேன். நுரைத்துக்கொண்டு பேசுவது என்றால் . . . ஆதி உட்கார் என்று . . ,

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நண்பர் ஆதிக்குச் சொல்லிக் கொள்வேன்—நான் இவ்வளவுக்குப் பிறகும் ரொம்பவும் பொறுமையோடு பதில் சொல்லிக் கொண்டிருக்கிறேன். 10-வது மாதம் உணவு இலாகா மாற்றப் பட்டது. 12-வது மாதம் வெள்ளம் அடித்துப் போனதாகச் சொல்லப்பட்டது. அதற்காக என்னைக் குற்றவாளி என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். அது வேறு விஷயம். அரசியலுக்காக பேசப்படுவது அது. அதில் நான் தலையிடு வதாகவும் இல்லை. ஆனால், ஹாண்டே அவர்கள் திருவண்ணாமலை கலைஞர் கருணாநிதி ஆர்ட்ஸ் காலேஜ் ஆஸ்டலுக்கு அவர் கான்ட்ராக்டராக இருந்தார், வேறு சிலவற்றிற்கு அவர் கான்ட்ராக்டராக இருந்தார், இந்த கான்ட்ராக்ட் வெள்ளம் அடித்துப் போனதாகச் சொல்லி, இந்தக் குற்றமெல்லாம் செய்த பிறகு அவருக்குக் கொடுக்கப்பட்டது என்று சொல்கிறார். அதை நிரூபிக்கிற பொறுப்பை டாக்டர் ஹாண்டே அவர்கள் ஏற்றுக்கொள்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. ஆலடி அருணா:** ஆன் எ பாய்ண்ட் ஆப ஆர்டர், சார். அமைச்சர் ஏற்கெனவே அதைப்பற்றி முன்னால் ஒரு முறை பேசியிருக்கிறார். இப்பவும் ஒரு கருத்தைச் சொல்கிறார் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள பாய்ண்ட் ஆப ஆர்டரைச் சொல்லுங்கள் . . .

**திரு. ஆலடி அருணா:** பாய்ண்ட் ஆப் ஆர்டரை முதலிலே சொல்வேனா? முதலிலே விவரத்தைச் சொல்கிறேன், பிறகு பாய்ண்ட் ஆப் ஆர்டரைச்





சொல்கிறேன். மதிப்பீட்டுக் குழு, தனது அறிக்கையில்

'The Committee does not understand how Thiru Abdul Salam was entrusted with a Government contract involving several lakhs of rupees later. . . . '

என்று மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. இந்தக் குற்றச்சாட்டைச் சொல்லித்தான் 'லேட்டர்' என்று சொல்லியிருக்கிறது. எனவே அமைச்சர் அவர்கள் தவறான தகவலைத் தருகிறார் என்று உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அருணா அவர்கள், கோபப்பட்டு, ஆத்திரப்பட்டு, பேசவேண்டாம், சாதாரணமாகவே பேசலாம். அருணா ரொம்ப வேண்டிய நண்பர். மதிப்பீட்டுக் குழுவிலே சொல்லப்பட்டிருக்கிறதென்றார். நான் இந்த ரிப்போர்ட்டைப்பற்றி எந்தவிதக் கருத்தும் தெரிவிக்க விரும்பவில்லை. நான் தெரிவிக்க விரும்புவது, இப்பொழுது டாக்டர் ஹாண்டே செப்டம்பர் மாதம் (குறுக்கீடு) அந்த ஆதாரத்தை வைத்துக் கொண்டு சொல்வதைவிட (குறுக்கீடு) ரெகார்ட்டு இருக்கிறது. இப்பொழுது கூட அப்துல் சலாம் கான்ட்ராக்ட் போடக் கூடாது என்று ஒரு தடவைகூட விவாதிக்கவில்லை. அவர் லோயஸ்ட் டெண்டர் போட்டால் மறுப்போம் என்று நான் சொல்லவில்லை. அதுவல்ல பிரச்னை. நான் தெரிந்துகொள்ள விரும்புவது அப்துல் சலாம் என்பவருக்குத் திருவண்ணாமலை கலைக் கல்லூரி ஹாஸ்டல் கட்டுவதற்கு, வெள்ளம் அடித்த பிறகு கொடுத்த கான்ட்ராக்ட் என்று—பாக்கிக்கெல்லாம் கூட கான்ட்ராக்ட் கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள்—அவைகளையெல்லாம் எடுத்துக் கொண்டாலும் சரி, இந்த ஒன்றையாவது அவர் நிரூபித்தால் ரொம்ப வசதியாக இருக்கும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** நான் நிரூபிக்கிறேன. அதற்கு ஆதாரம், எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்.

I am grateful to the hon. Member for having brought it to my attention. I am giving only details which are not in the Report of the Committee on Estimates.

அந்த எஸ்டிமேட்ஸ் கமிட்டி அறிக்கையிலே பொதுவாக போடப்பட்டிருக்கிறது. நான் மற்ற விவரங்களைக் கொடுக்கிறேன். அதிலே, மினிஸ்டர், திருவண்ணாமலை ஆர்ட்ஸ் காலேஜ் ஒன்றை மட்டும் காட்டி தப்பித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறார். இங்கே 5 ஐடம்ஸ் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஐந்து ஐடம்ஸ் கொடுத்திருக்கிறீர்கள், சரிதான். (குறுக்கீடு) மன்னித்துக் கொள்ளுங்கள், ஒரு வினாடி. நீங்கள்

வரக் கூடாது. எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டுக்குப் பதில் சொல்ல அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிறது. அது மீண்டும் எஸ்டிமேட்ஸ் கமிட்டிக்குப் போகும். அதை மீண்டும் எஸ்டிமேட்ஸ் கமிட்டி பரிசீலித்து இந்த அவைக்கு வைக்கும். அதுதான் முறை. எஸ்டிமேட்ஸ் கமிட்டிக்கு என்ன பதில் வரும் என்பதை இலாகாவினர் தயாரித்து கொடுப்பார்கள். நீங்கள் . . .

**திரு. பெ. சீனிவாசன் :** எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டைப் பற்றி சொல்ல விரும்பவில்லையென்று . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள், தானாகவே பேசினால் எப்படி.

**திரு. பெ. சீனிவாசன் :** ஆன் எ பாய்ன்ட் ஆப் ஆர்டர், சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படி சொல்லிவிட்டுப் பேசுங்கள்.

**திரு. பெ. சீனிவாசன் :** ஆன் எ பாய்ன்ட் ஆப் ஆர்டர், சார். எஸ்டிமேட்ஸ் கமிட்டி பற்றி, முன்பொருமுறை, மாண்புமிகு அமைச்சரவர்கள் அதைப்பற்றி கவலையில்லையென்று குறிப்பிட்டிருக்கிறார். இப்பொழுது அதைப்பற்றி கருத்து தெரிவிக்க விரும்பவில்லையென்று சொல்வது—இம்மாதிரி இருந்தால் அந்த எஸ்டிமேட்ஸ் கமிட்டி அறிக்கையைப் பற்றி இப்பொழுது எப்படி விவாதிக்க முடியும்? எஸ்டிமேட்ஸ் கமிட்டி அறிக்கை அரசைக் கட்டுப்படுத்துமா என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** என் நண்பர் சீனிவாசனுக்கு இவ்வளவு கோபம் வருகிறது என்று தெரியவில்லை. அவர் பொறுமையாகவே கேட்கலாம், கோபப்பட வேண்டியதில்லை. நான் ஏற்கனவே தெளிவாகச் சொன்னேன், அந்த ரிப்போர்ட்டின் பேரில் அரசு பதில் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. அந்த பதில் மீண்டும் எஸ்டிமேட்ஸ் கமிட்டிக்குப் போகும். அந்த ரிப்ளையை வைத்துக்கொண்டு எஸ்டிமேட்ஸ் கமிட்டி பரிசீலிக்கும். பரிசீலித்த பிறகு, தன்னுடைய அறிக்கையை இந்த அவைக்கு வைக்கும் என்றுதான் நான் சொன்னேன்.

DR. H. V. HANDE : Sir, the Hon. Minister has had his say. Now I should be allowed to continue my speech. . . . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அதை நிரூபிக்கிற பொறுப்பை டாக்டர் ஹாண்டே அவர்கள் ஏற்றுக்கொள்கிறாரா என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு உண்டான எல்லா ரெக்கார்டுகளையும் வேண்டுமென்றால் தங்கள் முன்னாலே வைக்கின்றேன், ஆனால் நிரூபிக்கின்ற பொறுப்பை டாக்டர் ஹாண்டே ஏற்றுக் கொள்ளவேண்டும்.



நான் மறுபடியும் விளக்கமாகச் சொல்கிறேன், அவர் சொல்கிற டெண்டர் எல்லாம் அன்றைக்கு வெள்ளம் அடித்துக்கொண்டு போனபோது அமைச்சராக இருந்தது யார்? அதற்காக, அப்பொழுது அமைச்சராக இருந்த மன்னைதான் பொறுப்பு என்று சொல்லவில்லை. நான் வெளிப்படையாகவே கேட்கிறேன், வெள்ளம் அடித்தபிறகு, நான் பொதுப்பணித் துறை அமைச்சரானபிறகு, கொடுக்கப்பட்ட கான்ட்ராக்ட் என்று சொல்கிறாரா? நான் வெளிப்படையாக கேட்கிறேன்—அதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன்.

DR. H. V. HANDE : That itself is mentioned in the Report of the Estimates Committee.
எஸ்டிமேட்ஸ் கமிட்டியே ஆதாரவாக ரிப்போர்ட் கொடுத்திருக்கிறது. அதை ஆதாரமாக வைத்துக்கொண்டு, அதல்லாமல் மற்ற ஆதாரங்களையும் வைத்துக் கொண்டு நான் நிரூபிக்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. அப்துல் சலாம்—உடன் எத்தனை பினாமிகள் என்று . . . (குறுக்கீடு) மினிஸ்டர் என்றால் எவ்வளவு வேண்டுமானாலும் பேசலாம் என்றால் . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நிரூபிக்கின்ற பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். அப்துல் சலாமுக்கு கான்ட்ராக்ட் கொடுத்தது நான் தான் என்று சொன்னதை நிரூபிக்கின்ற பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக் கிறீர்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** எனக்குக் கிடைத்திருக்கிற முதல் ஆதாரத்தைக் கொடுத்து விடுகிறேன், எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டைக் கொடுத்து விடுகிறேன். அதைக் கொடுத்தாலே, 50 சதவிகிதம் ஆதாரம் . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அதை வைத்துக்கொண்டு தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைக்கக் கூடாது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அப்படியானால் எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டை நீங்கள் நம்பவில்லையென்று அர்த்தம் . . .

The Hon. Minister is insulting the Estimates Committee and the House.

**மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் :** நான் இன்சல்ட் செய்யவில்லை. எஸ்டிமேட்ஸ் கமிட்டியை இன்சல்ட் செய்து விட்டேன் என்ற தவறான வாதத்தை வைத்துக்கொண்டு பேசுகிறார். ஒரு கான்ட்ராக்ட் கொடுப்ப தென்றால், டெண்டர் கேட்கப்பட வேண்டும். டெண்டருக்குக் கடைசி தேதி வைக்க வேண்டும். பிறகு, வந்த டெண்டர்களை அரசு பரிசீலனை செய்ய வேண்டும். அரசாங்கம் பரிசீலனை செய்து ஏற்றுக்கொள்ளவேண்டும். இவ்வளவு

ரெக்கார்டுகளையும் மாற்ற முடியும் என்று நினைக்கிறீர்களா? (குறுக்கீடு) நான் ரெக்கார்டுகளைச் சொல்கிறேன். எஸ்டிமேட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டை நான் அவமதிக்கிறேன் என்று சொல்லக் கூடாது. சொல்லாத ஒன்றை நான் சொன்னதாகச் சொல்லக் கூடாது. நான் ரெக்கார்டுகளை வைத்துக் கொண்டு சொல்கிறேன். அதை நான் தங்களுக்குக் கொடுக்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், அமைச்சர் அவர்கள் சொன்னதெல்லாம் சட்டப்பூர்வமான காரியங்களைப்பற்றி. ஆனால் சட்டப் பூர்வமாக இல்லாத காரியங்கள்தான் இங்கே குற்றச்சாட்டுகளாக வருகின்றன. டெண்டர் கேட்கப்பட்டிருக்கிறது, கடைசி தேதி இந்தத் தேதி என்று சொல்வது எல்லாம் சட்டப் பூர்வமான காரியங்கள். ஆனால் இங்கே குற்றச்சாட்டுக்களாக வருவது சட்டப் பூர்வமாகச் செய்யப்படாத காரியங்கள் தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே: திரு. ப. உ. சண்முகம் அவர்கள் தான் தப்பித்துக்கொண்டு கேபினட்டை காலைவாரிவிடவேண்டிய தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: காலை வாரிவிடுவது என்று எல்லாம் வேண்டாம்.

DR. H. V. HANDE : I wanted to drive it home. I will change it. He is trying to salvage himself. That is not possible. He is letting down the entire Cabinet.

We have got the report of the Estimates Committee plus other benami things. It is the joint responsibility of the Cabinet. All things will be exposed.

THE HON THIRU P. U. SHANMUGAM : You have categorically stated that after the incident, Abdul Salam was entrusted with the contract. That has to be established.

DR. H. V. HANDE : Yes. I would like to mention another point also. I was the first person to point out this, to mention about this, even before the Estimates Committee was seized of the matter. If you take my speech over the Governor's Address last year, you will find that it was I who raised this matter first in the House last year. Afterwards the Estimates Committee took it up. That is the link. It was I who raised the issue first here in this House.





Another thing. The Hon. Chief Minister has got a very peculiar habit of just getting up and saying something important, giving some important news. He announced one day in the House that from the next day rice would be sold at such and such a price only. But nothing happened afterwards. We can take that as a matter of privilege. He announced on 18th December 1974 in the Assembly that coarse grain shall be sold at Rs. 1.92 per kg. that medium variety would be sold at Rs. 2.00 per kg., that super fine variety would be sold at Rs. 2.10 per kg. All this, he announced. But the very next day of announcement he told in the Legislative Council that an officer was being sent by plane to Delhi for getting Delhi's concurrence, without delay. But what happened afterwards? After the Hon. Chief Minister's speech, the price of rice has skyrocketed. It was in the month of December 1974 he made the speech in the Assembly. But the price of rice today is Rs. 7 to Rs. 8 per measure in Madras, whereas in neighbouring States it is being sold at Rs. 4.80 and Rs. 4.20 per measure and that too in States, which are proverbially having shortage in rice. Like that I can go on citing examples. That shows that the Chief Minister goes on giving assurances in this House without bothering to verify himself with facts and figures and without any basis with facts, and those assurances are never implemented. In spite of the facts being contrary, the Chief Minister makes some announcements which are never kept up.

I now come to another thing. I come to ration shops. Does not this Government have half a dozen officials to regulate the issue of cards in the ration shops? Does it speak well of this Government? If you go to Harrington Road, what a mess and sight it is! Government do not bother themselves with the replies given by the people in the shop and they do not bother to find out what is wrong there. If you go to the ration shop, you will find a large number of people standing in queue cursing the Government, cursing the persons concerned. It is something horrible to see thousands of persons standing. At times insolent answers are given for their queries.

The Hon. Minister was saying, this.

"நாங்கள் மூடி மறைக்க முடியுமா, முழுமையாக மூடி மறைக்க முடியுமா"

I have said that 18 files had been destroyed and reconstruction was taking place. Whenever the Government is in a tight corner, they never show the file outside. I have mentioned about sugar scandal. They have not shown the file at all. My charge is that whenever this Government is asked to show a file, they refuse to show it. If there is a skeleton in the cupboard, they refuse to show the file. For example in the sugar scandal, the Government had lost about Rs. 3/4 crores, i.e., Rs. 75 lakhs. Papers and records relating to purchase and sale of sugar in the open market by Government were called for by the audit department in October 1969. But the same fate, that took the Estimates Committee, happened here also. The records were not given.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:* பாதிப்பாதியாகச் சொல்லக்கூடிய நிலைமை இருக்கக்கூடாது. முழுமையாகச் சொல்லிவிட்டால் பத்திரிகைகளிலும் முழுமையாக வரும். 1969-ல் ரெக்கார்ட் கேட்டதாகச் சொன்னார்கள். எந்த விஷயமாக என்ன ரிக்கார்ட் யார் யாரிடம் என்றெல்லாம் விவரமாகச் சொன்னால் எனக்கும் வசதியாக இருக்கும், பத்திரிகைகளுக்கும் வசதியாக இருக்கும். உலகத்திற்கும் உண்மை புரியும். ஒரே இடத்திலே குறித்து அவர்கள் பேசிக்கொண்டு இருப்பதைப் போல் பேசுவது சரியல்ல. 1969-ல் ரிக்கார்ட் கேட்டார்கள் என்றால் கேட்டதற்குக் கொடுக்கப்படவில்லையென்றால் அதைப் பற்றிய விவரங்களைச் சொன்னால் விளக்கமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*டாக்டர் எச். வி. ஹாண்டே:* அவர்கள் பைலைக் கேட்டார்களே, காட்டினார்களா? ஒருவருக்கே குறிவைக்கவில்லை நான். நான் எங்கே குறி வைத்தாலும் அது தனக்குத்தான் வைப்பதுமாதிரி அவர்கள் நினைக்கிறார்கள்.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:* 1969-இல் ரிக்கார்ட் எஸ்டிமேட் கமிட்டிக்கு . . .

*டாக்டர் எச். வி. ஹாண்டே:* 1969-ல் எஸ்டிமேட் கமிட்டிக்கு அல்ல. எஸ்டிமேட் கமிட்டி ரிக்கார்டுகள் கேட்டதாகச் சொல்லவில்லை. ஆடிட் ரிப்போர்டிலே என்ன போடப்பட்டிருக்கிறது என்றால் . . .

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:* டாக்டர் ஹாண்டே அவர்களிடத்திலே விளக்கம் இருந்தால் தரலாம் இல்லாவிட்டால் பரவாயில்லை.

*டாக்டர் எச். வி. ஹாண்டே:* விளக்கம் வைத்துக்கொண்டுதான் பேசுகிறேன்.





The Audit Department wrote a letter in October 1969. No files were shown. Repeated letters were sent till July 1974. I have got proof. They have written reminders from time to time. " Draft paragraphs in the case were sent to Government finally in May, 1974 and the reply is still awited "—This is what is said in the report of the Comptroller and Auditor-General of India for the accounts of the year 1972–73. (Page 84). That is the position. When they are in trouble, no files are shown. Otherwise they have a peculiar habit of reconstructing files. Eighteen files were destroyed. But they have reconstructed. What else they will not do? That is why our leader Thiru M. G. Ramachandran is saying that so long as this Government is there, no true records will come out. That is one thing.

With regard to drought relief work, lot of irregularities are going on. What has the Prime Minister said ? Has she not the CBI and other agencies to supply her information? Will she make that statement without responsibility ? My submission is that in the matter of drought relief, irregularities are going on. When such is the case, how can there be proper administration? I shall cite an instance. In Tiruchirappalli district, there is Andimadam Panchayat Union. There, there is one relief work for Rs. 1 1/2 lakhs. There was one tender notice No. Na. Ka. A. 2—1076/74, dated 7th January 1975. The last date was 17th January 1975. The time was extended. There was another notice No. Na. Ka. A. No. 1076/74, dated 16th January 1975. The last date was extended to 21st February 1975. The tender was given on 20th January 1975. Our charge is, there is corruption and the Chairman and Commissioner are in league.

Foisting of false cases on opposition party members and unleashing a reign of terror on the opposition parties with the help of police has become a regular practice of the ruling party. This is something which this Government should put an end to. The Hon. Deputy Leader of the Opposition told how the place of Mr. K. A. Krishnaswami, M. P. was searched. There is police repression on ADMK workers in Kanivur, Madathukulam in Coimbatore. The Hon. Mr. Sadiq Pasha is not here. He knows about it. I do not want to go into the reasons since it would affect the interests of the Cabinet. What they wanted to do was

only to show black-flags to the Hon. Chief Minister on 29th January 1975. But do you know what the Sub-Inspector Murugaiyan did ?

That is the ruthless way in which he has bet all the ladies. If there is Anna Padam or ADMK Flag, he said it was Anna DMK and bet all the people there. A number of ladies were abused. We have sent a complaint to the Inspector-General of Police about the ruthless way in which they were beating. I do not know what action has been taken by the Inspector-General of Police.

The Blind school has been closed. They have closed this blind school. What a tragedy! I have written to two Ministers —I do not know whose portfolio it is. A number of articles have appeared in weeklies. It is an absurd thing to close an institution, an old institution with which so many senior members will be upset.

Then the Tamil medium students are not getting their stipends. The other day also, the Law College students came here and expressed their grievances.

There is the Kalaignar Karunanidhi College and the Distinguished Navalar is holding the Education portfolio in his hands. In this college at Namakkal a sum of Rs. 8.38 lakhs had been drawn from Treasury and defalcated. A large sum has been defalcated. I have got further proof here.

Then there is the Pachaiappa's College. The Lecturers are not paid their salary monthly. I am surprised how calmly and coolly the budget is presented. In the history of Pachaiappa's College, this has not taken place. Why? Because all the trustees are packed with DMK men. The Board is punched and packed with DMK men and the result is, while it was running Rs. 8 lakhs plus before, now it is 7 lakhs minus.

There is talk of free education. It is a myth and an eye-wash. Hundreds of rupees are openly collected in every college. A particular student came to me weeping. I should not be mentioning about this. But I say this to show that I know about it. The pupils have to collect and pay. Then why do you say it is free education. It is cheating the people. Persons guilty of cheating deserve to be jailed. I say on the floor of the House with all the emphasis at my command that there is no free education. The cost of education has gone up.



Then there is mid-day meal. It is full of bungling and defrauding. The supply is of substandard food. Six hundred and thirty seven bags of Bulgur wheat was spoiled. The Public Analyst certified on 28-3-74 that they were unfit for human consumption. His letter was submitted to Educational Officer, Ref. No. E.D.C. No. A4/6049/74, dated 1-12-74. Five hundred and thirty two boxes of milk powder were stored as spoilt. 645 lbs. of milk powder were destroyed in C.R. on 5-9-73 and 100 lbs. in S.R. on 22-3-74. This is only an iceberg—only a small quantum of the fantastic defalcation.

Then there are the Municipalities. The Minister in charge of Municipalities come and go. We do not know who is the Minister in charge at a particular given time. Every three months somebody is put in charge. There is absolute confusion. There is no fiscal control over their expenditure. Out of Rs. 2 crores Rs. 1.5 crores remains unutilised on an average every year. There is no Government control at all.

Then there is the Co-operation Department. Our great distinguished friend, my old colleague in the Legislative Council, Mr. Adityan was in charge. In this depatment, there are 433 cases involving a sum of Rs. 7,21,89,000 for want of detailed contingent bills, vouchers, payees receipts and other documents. This is due to packing the co-operative field with your henchmen and party bosses—Kutti Devathaigal. The Chief Minister referred to them in Coimbatore. Under Mr. Adityan's supervision and supremacy, this department was packed with your own Kutti Devathaigal.

Then if they do not like a particular administration, they supersede as they have done in the case of TUCS.

The total irregularities in Public Works Department alone comes to 9,234 cases involving a sum of Rs. 7,60,73,000.

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1975 மார்ச் 3

Then there is the Housing Department. The Housing Board affairs are in a total mess. There is no accounting and no internal audit; no one knows what is happening in the department. In this portfolio, Ministers change and the I.A.S. officers in charge of the department change every six months. They have to be with one foot in the Secretariat and another foot in the Housing Board. The loss itself to the Housing Board in one particular year is one crore of rupees. Nobody can beat this record. The whole thing is in a mess. I have facts and figures here.

I do not think further proof to bring home the utter incompetence and failure of the Government is needed. It is in this context that the Budget is calmly and cooly presented here by our distinguished Chief Minister. (At this stage the electric lights went out) (Interruption) I do not know whether it is a bad omen or tragedy. The switching off of the lights is a tragedy. With what complacency the Budget has been presented? I therefore commended to this Home that this Budget be refused. that it be rejected summarily and totally lock, stock and barrel. Thank you, Sir.

**திரு. வை. பாலசுந்தரம்:** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த அறிக்கையை மனமுவந்து வரவேற்று என்னுடைய உரையை நான் துவக்குகின்றேன். நம்முடைய முதல்வரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த நிதி நிலை அறிக்கையை நான் படித்துப் படித்துப் பார்த்தபொழுது ஒரு பொருளாதார தத்துவத்தின் பெட்டகமாக விளங்கக்கூடிய ஒரு நிதி நிலை அறிக்கையை நம்முடைய முதல்வரவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்பொழுது ஒரு திறமை மிக்க முதல்வரால் பெருமை மிக்க நிதி நிலை அறிக்கையாக இன்றையதினம் இங்கே பிரதிபலித்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் தங்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஹாண்டே அவர்கள் நம்முடைய முதலமைச்சரவர்களைக் கொண்டு இந்த மாமன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற கடைசியான அறிக்கை இதுதான் என்று உறுதியான குரலிலே குறிப்பிட்டுச் சொன்னார்கள். முதல்வரவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற கடைசி அறிக்கை என்று அவர்கள் சொல்லும் போது அதை எவ்வளவு மகிழ்ச்சியோடு உச்சரித்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்பொழுது,



1975 மார்ச் 3] [திரு. வை. பாலசுந்தரம்]

மரியாதைக்குரிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் இதையேதான் கடந்த இரண்டரை மூன்று ஆண்டுகளாகச் சொல்லி வருகிறார்கள் என்பதைத் தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வர நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இவைகளெல்லாம் பழையவை தான் என்பதை இந்த மாமன்றம் அறியும் என்பதையும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் இந்த மாமன்றத்திலே நம்முடைய மரியாதைக்குரிய முதல்வரவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கின்றார்கள். ஆனால் இந்த நிதி நிலை அறிக்கையைப்பற்றி மக்கள் வெளியிலே வரவேற்றுப் பேசுகின்ற அதே நேரத்தில் கற்றறிந்தவர்கள் இந்த அறிக்கையை வரவேற்றுப் பேசுகிறார்கள். அதே நேரத்தில் ஏதுமறியாத பாமர மக்கள் இந்தச் சர்க்கார் வரி போட்டு விட்டது, வரி போட்டு விட்டது, தாங்க முடியவில்லை என்று பேசிக் கொள்கிறார்கள்.

(முற்பகல் 11-00)

எந்த வரியைப் பற்றிச் சொல்லுகிறீர்கள் என்று நான் சிலரைக் கேட்டேன். மண்ணெண்ணெய்க்கு வரி போட்டு விட்டார்கள். சோப்புக்கு வரி போட்டு விட்டார்கள். சீப்புக்கு வரி போட்டு விட்டார்கள். பெட்ரோலுக்கு வரி போட்டு விட்டார்கள், டயருக்கு வரி போட்டு விட்டார்கள் என்று சொல்லிக் கொண்டிருந்த பாமர மக்களைப் பார்த்துக் கேட்ட நேரத்தில் 'இது எல்லாம் தமிழக அரசு போட்ட வரிகளா?' என்று கேட்டேன். 'ஆமாம், ஆமாம், தமிழக அரசு போட்ட வரிகள் தான்' என்று ஏதும் அறியாத அப்பாவி மக்கள் சொல்லுவதைக் கேட்ட நேரத்தில் அவர்களுக்கு என்ன விளக்கத்தைச் சொல்லுவது என்று தெரியாமல் திண்டாடிப் போனேன்.

இன்றையதினம் மத்திய சர்க்கார் மாநில சர்க்காரை எப்படி எல்லாம் ஆட்டிப் படைக்கிறது என்பதைக் கற்றறிந்தவர்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். மத்திய சர்க்காராக இருக்கக்கூடிய அந்தச் சர்க்கார் ஏறத்தாழ 283 கோடி ரூபாய்க்கு வரி போட்டு மக்களுடைய ரத்தத்தை உறிஞ்சுகின்ற அட்டையாக இன்றைக்கு மத்திய அரசு உட்கார்ந்து கொண்டிருக்கிறது. அவர்கள் செய்கிற காரியத்தால் மாநில அரசு எப்படியெல்லாம் பாதிக்கப் படுகிறது என்பதைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

மத்திய சர்க்கார் போடுகிற வரியைத் தாங்க முடியாமல் அடித்தளத்திலிருக்கும் மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் தத்தளிக்கிற நேரத்தில் அரசாங்கத்தைப் பார்த்துத் தூற்றுகிறார்கள். எந்த அரசாங்கத்தைப்

[திரு. வை. பாலசுந்தரம்] [1975 மார்ச் 3

பார்த்துத் தூற்றுகிறார்கள்? தமிழக அரசைப் பார்த்துத் தூற்றுகிறார்கள். இதைத் தெரிந்தவர்களும் தெரியாதவர்களுக்கு விளங்க வைக்கிறார்களா, புரிய வைக்கிறார்களா என்று பார்த்தால் இல்லை. அவ்வாறு தெரிந்தவர்களும் அரசியல் லாபத்திற்காக, அரசியல் ஆதாயத்திற்காக, அதைத் தெரியாத அப்பாவி மக்களோடு சேர்ந்து கொண்டு இந்தக் கழக அரசு தான் போட்டது, போட்டது என்று வெளியிலே பிரச்சாரம் செய்கிற பிரகிருதிகளாக இருந்து கொண்டிருக்கிறார்கள்.

இன்றையதினம் மக்கள் வரியால் அவதிப்படுகிறார்கள். ஆண்டு தோறும் மத்திய சர்க்கார் எதில் தவறினாலும் மக்கள் மீது வரி போடுவதில் தவறுவதில்லை. இன்றையதினம் மத்திய சர்க்கார் போடுகிற வரிகள் எல்லாம் அடித்தள மக்களைப் பாதிக்கிற கொடுமையான அம்சமாக இருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாக மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இப்படி மத்திய சர்க்கார் வரி போட்டு தொல்லை தருகிற நேரத்தில் தமிழ்நாட்டு மக்களின் வேதனையைத் தன்னால் இயன்ற அளவு தணிப்பதற்கு, தமிழ்நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்கு தமிழக அரசு முன்வந்திருக்கிறது என்பதை நினைவுபடுத்திப் பார்க்க வேண்டியது அவசியமாகும். தமிழக அரசு வரியையும் அதிக அளவு போடாமல், போட வேண்டிய பொருள் மீது வரி போட்டு தன்னுடைய திறமை மிக்க, தெளிவான கருத்தை, கொள்கையைத் தெரிவித்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் நாட்டிலே பேசப்படுகிற எல்லாப் பேச்சுக்களும், நாட்டில் இருக்கும் அரசியல் வாதிகள் அத்தனை பேராலும் பேசப்படுகிற பேச்சுகளும் வறட்சியைப் பற்றியதாக இருக்கிறது. அது இன்றைக்கு நம்மை உலுக்கிக் கொண்டிருக்கும் கோரப் பிரச்சினையாக இருக்கிறது. இந்த நிலைமையைச் சமாளிக்க என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தெளிவான முடிவு செய்து நம்முடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. நல்ல காரியங்களை ஆற்றி வருகிறது. நல்லவர்கள் வரவேற்கிறார்கள், உணர்ந்து பார்க்கிறார்கள்.

தமிழகத்திற்கு இந்த வறட்சி ஒரு சவாலை விட்டுக் கொண்டிருக்கிறது என்று தான் சொல்ல வேண்டும். தமிழகத்தின் மீது இயற்கைக்கு என்ன விரோதமோ தெரியவில்லை. இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை அது தமிழகத்தைக் கொடுமை செய்து கொண்டிருக்கிறது. 1969-ல் ஒரு வறட்சி ஏற்பட்டது. அந்த வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலைமையில் நம்முடைய அரசு 18.64 கோடி ரூபாய் செலவழித்து நல்ல நிவாரணப் பணிகளைச் செய்து கொடுத்து, மக்களிடத்தில் நல்ல பெயரை எடுத்தது. இயற்கை சீறுகிற அதே



1975 மார்ச் 3] [திரு. வை. பாலசுந்தரம்]

நேரத்தில் மக்களுக்குச் செய்ய வேண்டிய பணிகளைக் கழகம் செய்தது, கழக ஆட்சி செய்தது. அதற்குப் பின்னால் வெள்ளம் வந்து தமிழகத்தைக் கொடுமைப்படுத்திய நேரத்தில் தமிழக அரசு உடனடியாக நிவாரணப் பணிகளை 14 கோடி ரூபாய் செலவழித்து நல்ல காரியமாற்றியது.

கடைசியாக, இன்று கடந்த நூறாண்டுக் காலத்தில் இல்லாத கொடுமையாக இன்றைக்கு வறட்சி ஏற்பட்டு அது தமிழ்நாட்டு வாயிலோடு நிற்காமல் தமிழ் நாட்டுக்குள்ளேயே புகுந்து விளையாடிக் கொண்டிருக்கிறது. இயற்கையின் கொடுமை என்பதை எண்ணிப் பார்க்கும் நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் தன்னந்தனியாக நின்று இதற்குப் பரிகாரம் காணமுடியுமா என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

[திரு. துரை முருகன் தலைமை]

திராவிட முன்னேற்றக் கழகம் எடுக்கின்ற எல்லாச் செயல்களையும் இன்றைக்குச் சிலர் அரசியல் ஆதாயத்திற்காக, காழ்ப்புணர்ச்சியோடு குறை கூறுவதையே தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களைப் பார்த்துக் கேட்டுக் கொள்கிறேன். இப்போது நமக்கு நாட்டின் எதிர்காலம் முக்கியம், எதிர்கால மக்களுடைய வளர்ச்சி முக்கியம், எதிர்கால மக்களைப் பாதுகாக்க வேண்டிய ஒரு தலையாய கடமையில் நாம் இருக்கிறோம். ஆகவே, இந்த வறட்சியைச் சமாளிக்கும் நடவடிக்கையில் இருந்து நாம் விலகுவோமானால் உண்மையிலேயே எதிர் காலத்தில் ஒரு கொடுமையை அனுபவிப்பதற்கான சூழ்நிலைக்குத்தான் தமிழகம் தன்னை ஆட்படுத்திக் கொண்டதாகும். ஆகவே, மனமாச்சரியம், கட்சி மாச்சரியம், காழ்ப்புணர்ச்சி ஆகியவற்றை விட்டு திராவிட முன்னேற்றக் கழக அரசோடு, ஆளும் கட்சியை எதிர்க் கட்சி என்று எதிர்க்கட்சிகள் கருதாமல் ஒத்தாசை செய்து வறட்சியைப் போக்க வழிவகை செய்ய வேண்டுமென்று தங்கள் மூலமாக எதிர் கட்சிகளைக் கேட்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் தமிழகத்திலே ஏரிகள் எல்லாம் வறண்டு கிடக்கின்றன; குளங்கள் எல்லாம் காய்ந்து கிடக்கின்றன; வயல்கள் எல்லாம் தீய்ந்து போய்க் கிடக்கின்றன. இப்படிப்பட்ட கொடுமையிலிருந்து மாற்றம் காண நம்முடைய சர்க்கார் எப்படிப்பட்ட தீவிரப் பணியில் ஈடுபட்டிருக்கிறது என்பதைக் காணும்போது நாம் அதற்கு உடனிருந்து ஒத்தாசை செய்ய வேண்டும்.

இப்படிப்பட்ட நேரத்தில் மனந்திறந்து நம்முடைய மரியாதைக்குரிய தலைவர் காமராஜர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் தமிழக அரசு எடுக்கிற எல்லாப் பணிகளுக்கும், வறட்சி

நிவாரணப் பணிகளுக்கும் ஒத்துழைப்புக் கொடுங்கள் என்று நல்ல அறிவிப்பை அவர்களுடைய கட்சிக்காரர்களுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். இது அரசியல் நாகரிகத்திற்கேற்ற நடவடிக்கை என்று எண்ணிப் பார்க்கிற நேரத்தில் தங்கள் மூலமாக மதிப்பிற்குரிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்—இந்த வறட்சியான நேரத்தில கூட புரட்சி வெடிக்கும் என்று பேசிக் கொண்டிருப்பது அரசியல் லாபத்திற்குப் பயன்படலாமே தவிர, நாட்டு மக்களுடைய நல் வாழ்வுக்கு வழிகோலுவதாக அமையாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் இன்றைக்கு அரசு எடுக்கும் எல்லா நடவடிக்கைகளையும் புறம் கூறுவதையே தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு அவர்கள் பல காரியங்களைத் தனிப்பட்டுச் செய்யலாம். கூடாது என்று சொல்லவில்லை. கஞ்சித் தொட்டிகள் திறக்கிறேன் என்று சொல்லி அது தமிழ் நாடு பூராவும் எதிரொலித்து, இன்றைக்குக் கைவிடப் பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நல்ல காரியத்தை ஆற்றுகிறபோது குறுகிய எண்ணத்தோடு, குறுகிய மனப்பான்மையோடு செயலாற்றுவதில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டாம் என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்தாகும்.

இந்த வறட்சியான காலத்தில்கூட தமிழக அரசு பல திட்டங்களைச் செய்ய வேண்டிய நல்ல பணியிலிருந்து வழுவியதா, விலகியதா என்று எண்ணிப் பார்க்கும்போது வறட்சிப் பணியில் தீவிரம் காட்டுகிற அளவுக்கு, வறட்சிப் பணிக்காக மக்களுக்கு நல்லது செய்கிற அதே நேரத்தில், பல நல்ல திட்டங்களையும் கைவிடாத அளவுக்கு இன்றையதினம் கல்விக்காக 118 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறது.

இந்த 8 ஆண்டு கால வளர்ச்சியைப் பார்க்கிற போது, 1967 இலே 44 கோடி ரூபாயாக இருந்த கல்விப் பணி இன்றைக்கு 118 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்திருக்கிறது. எந்தெந்த வகையிலே சிறப்பாக பயன்படுத்தப்பட வேண்டுமோ அந்தந்த வகையில் கல்விப் பணிகள் நடந்து வருகின்றன என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். அதே போலத் தான் சிறந்த பணிகளாக இருக்கின்றவைகளை, அவை எந்த திட்டங்களாக இருந்தாலும், அவை இணைப்புச் சாலைகளாக இருந்தாலும், கண் சிகிச்சை முகாம்களாக இருந்தாலும், மருத்துவ மனை அமைக்கின்ற வேலையாக இருந்தாலும், குடிசை மாற்று வாரியப் பணியாக இருந்தாலும், அரிஜன மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் செய்கின்ற செயல்களானாலும், எந்த நல்ல காரியம் ஆனாலும் கை விடாத அளவிற்கு கணிசமான அளவிற்கு நிதி ஒதுக்கி அந்த நல்ல பணி





களிலே நாட்டம் செலுத்தி தமிழ் நாட்டு மக்களைப் பாதுகாத்து வருகிறது தமிழக அரசு என்பதை தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் இப்படிப்பட்ட நல்ல பணிகளை ஆற்றி வருகிற நம்முடைய கழக அரசு நிதிப் பற்றுக் குறையால் கவலைப்படுகிறது. இந்த அரசை நிதிப் பற்றுக்குறை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது, என்பதை எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில் இந்த நிதிப் பற்றுக் குறைக்கு கை கொடுத்து உதவ வேண்டிய கர்த்தாவாக மத்திய அரசு இருக்கிறது. ஆனால், மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மை கொண்டிருக்கிறது. மாநில சர்க்கார் பல சங்கடங்களுக்கு இடையில் இன்றையதினம் பொறுப்பேற்று எந்த நல்ல பணிகளை ஆற்றுவதாக இருந்தாலும் மத்திய சர்க்காரின் உதவி தேவைப் படுகிற நேரத்தில், மத்திய சர்க்காரைக் கேட்கின்ற நேரத்தில் ஓரளவிற்காவது மத்திய சர்க்கார் உதவி செய்து கொண்டிருக்கிறதா என்பதை எண்ணிப் பார்க்கிற போது அது மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்கிறது. மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையை விட்டு விட்டு, தமிழக சர்க்கார் செய்கிற நல்ல காரியங்களுக்கு உதவ வழி வகை செய்ய வேண்டுமென்று தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக மத்திய அரசைக் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றுள்ள வறட்சி நிலையில், வறட்சி நிவாரணப் பணிகளுக்கு மத்திய சர்க்கார் கணிசமான நிதியை தந்துதவ வேண்டிய தாய் ஸ்தானத்தில் இருக்கிறது என்பதை மத்திய சர்க்காருக்கு வேண்டுகோளாக தங்கள் மூலமாக விடுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு இந்த மாநில சர்க்கார் எந்த திட்டங்களில் ஈடுபட்டாலும், அவைகளை நிறைவேற்றுவதற்கு நிதி வசதி சங்கடப்படுத்தக் கூடிய சூழ்நிலைகள் இருந்தாலும், மாநில சர்க்கார் ஆற்றுகின்ற எல்லாப் பணிகளுமே சிறப்பான பணிகளாக இருக்கின்றன. 1967 இலிருந்து இன்றைய நாள்வரை இந்த 8 ஆண்டு காலத்தில் ஏறக் குறைய 5 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பயனடைகிற சூழ்நிலையை உருவாக்கி இருக்கிறது நம்முடைய இந்த அரசு. இதற்காக 112 கோடி ரூபாயை ஒதுக்கி நல்ல பணியினை ஆற்றி வருகிறது என்பதை நாடு அறியும். அதே போலத் தான் சிறு பாசன திட்டத்தின் கீழ், தூர் எடுக்கும் சீரமைப்பு திட்டத்தின் கீழ் 6,600 பணிகள் செய்து முடிக்கப்பட்டவைகளாக இருந்து ஏறத்தாழ 10 லட்சம் ஏக்கர் நிலங்களுக்குப் பயன் அளிக்கக் கூடியதாக இருக்கிறது. இப்படிப்பட்ட பணிகளை ஆற்றுகின்ற நேரத்தில் இதிலே தான் மத்திய சர்க்காரின் கவனங்கள் திரும்ப வேண்டியவைகளாக இருக்கின்றன.

[திரு. வை. பாலசுந்தரம்] [1975 மார்ச் 3

தமிழகத்தை பசுமைப் புரட்சி மூலம் பசுமையாக மாற்றுவதற்கான சூழ்நிலையை உருவாக்க, புரட்சி மூலம் மேலும் நல்ல வளத்தை இந்த மாநிலம் காண வேண்டுமென்று சொல்கிற நோக்கில், இப்படிப்பட்ட நல்ல திட்டங்களைப் பார்க்கின்ற நேரத்தில், இப்படிப்பட்ட பாசன திட்டங்களுக்கு மத்திய சர்க்கார் கணிசமான அளவு நிதி உதவி செய்ய வேண்டுமென்பதை மத்திய அரசின் கவனத்திற்கு, தங்கள் மூலமாக, தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏறத்தாழ 11 லட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் பயிரிடாத நிலையில் பாழடைந்து கிடக்கிறது என்ற விவரத்தை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்த 11 லட்சம் ஏக்கர் தரிசு நிலத்தைப் பயிரிட்டால் பல லட்சக்கணக்கான மக்கள் பயனடைவார்கள் என்ற உண்மையை உணர்கிறோம். இந்த 11 லட்சம் ஏக்கர் நிலங்களைப் பாசன வசதி ஏற்படுத்தி பயிரிடுவதற்கு மத்திய சர்க்கார் இதற்காக ஒரு கணிசமான குறிப்பிட்ட ஒரு தொகையை உதவுவதற்கு முன் வருவார்களானால் இந்த 11 லட்சம் ஏக்கர் நிலங்களை பக்குவப்படுத்தி, பசுமை பொங்குகின்ற அளவிற்கு தமிழ் நாட்டை உருவாக்க முடியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட பணிகளைச் செய்கின்ற நேரத்தில் மத்திய சர்க்கார் நமக்கு உதவுமானால் அதற்கு என்றென்றைக்கும் நேசக்கரம் நீட்டுபவர்களாக நாம் இருப்போம் என்பதில் எந்தவித சந்தேகமும் கிடையாது.

நம் தமிழகத்தை பல சோதனைக் கட்டங்கள் எதிர் நோக்கியுள்ள இந்த நேரத்தில் பல பிரச்சனைகள் நம்மைக் குடைந்து கொண்டிருக்கின்றன. தமிழகத்திற்கு வாழ்வா, சாவா என்ற நிலையில் காவிரிப் பிரச்சினை இருக்கிறது. இந்த காவிரிப் பிரச்சினையில் தீர்வு காணப்படவில்லையென்றால், நாம் வெற்றி காணவில்லையென்றால் எதிர்காலத் தமிழகம் இருளில் மூழ்கிப் போய்விடும், இருண்டு போய் விடும், தமிழ் நாடு தேய்ந்து போய் விடும் என்று சொல்கிற அளவிற்கு காவிரிப் பிரச்சினை ஒரு ஜீவாதாரமான பிரச்சினையாக, ஜீவ நாடிப் பிரச்சினையாக இருக்கிறது என்பதை தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்தப் பிரச்சினைக்கு முடிவு காண்பதற்கு இன்றையதினம் மத்திய சர்க்கார் தான் பொறுப்பேற்க வேண்டும். எந்தக் காரணமோ, தெரியவில்லை, இந்த காவிரி நீர்ப் பிரச்சினையை மத்திய சர்க்கார் தட்டிக் கழித்துக் கொண்டு வருகிறது.

நான் முதலில் குறிப்பிட்டபடி, ஒரு கண்ணில் சுண்ணாம்பும், ஒரு கண்ணில் வெண்ணெயும் என்று சொல்கிற நிலையில் மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையில் நடந்து கொள்கிற காரணத்தினால் தான் இந்த காவிரி நீர்ப்



1975 மார்ச் 3] [திரு. வை. பாலசுந்தரம்]

பிரச்சினையில், என்ன காரணமோ தெரியவில்லை, கர்நாடகத்திற்குச் சலுகை காட்டுகிற அளவிற்கு மத்திய சர்க்கார் இருந்து கொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிற நேரத்தில் ஒரு வேளை அரசியல் காரணமாக இருக்கலாமோ என்று தோன்றுகிறது. தமிழகத்தை ஆண்டு கொண்டிருப்பது திராவிட முன்னேற்றக் கழகம் என்ற காரணமாக இருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது. தலைவரவர்களே, தங்கள் மூலமாக மத்திய சர்க்காருக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசே, இப்படிப்பட்ட பாகுபாட்டை உருவாக்கிக் கொண்டு செல்வீர்களானால், வளர்த்துக் கொண்டு செல்வீர்களானால் நீங்கள் கருதுகின்ற ஒருமைப்பாட்டை குழி தோண்டி புதைப்பதற்கான நிலைமைகள் ஏற்பட்டு விடும் என்ற அச்சத்தை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவரவர்களே, காவிரிப் பிரச்சினையில் மத்திய அரசு ஒத்தாசையாக இல்லை என்று மறைமுகமாக கனம் முதலமைச்சரவர்கள் பேசிய பின்னால், நம்முடைய பிரதமர் அவர்கள் பாராளு மன்றத்தில் நேரடியாகச் சொல்லியிருக்கிறார்கள், இப்படிப்பட்ட அனுவசியமான சந்தேகங்கள் கிளப்புவது நியாயமில்லை என்று மறுத்திருக்கிறார்கள். அப்படி பிரதமர் அவர்கள் மறுத்த பின்னாலும் கூட, அதே பாட்டை பாடிக் கொண்டிருப்பது நியாயம் தானா என்று உறுப்பினர் அவர்களை, தங்கள் மூலமாக, கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவரவர்களே, நான் எந்த பாட்டையும் பாடவில்லை. தமிழகத்தில் இருக்கிற குறைகளைத் தான் சொன்னேன். இந்தப் பிரச்சினையில் அந்த அம்மையாருக்கு பங்கிருக்கிறது. அதேபோல இங்கே இந்தச் சபையில் இருக்கிற மரியாதைக்குரிய அம்மையார் அவர்களுக்கும் நிச்சயமாக இந்தப் பிரச்சினையில் பங்கிருக்கிறது. இந்தப் பிரச்சினை எத்தனை ஆண்டு காலத்திற்கு தீர்க்கப்படாமல் காலம் கடத்தப்பட்டு வருகிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

அம்மையார் அவர்கள் நளினமாக எடுத்துச் சொல்லி, எப்படியாவது தமிழகத்திற்குச் சாதகமாகச் செய்தால் அவர்கள் இருக்கிற திக்கை நோக்கித் தண்டனிடத் தயாராக இருக்கிறோம். சீக்கிரமாகப் பரிகாரம் காண வேண்டுமென்பது தான் என்னுடைய வேண்டுகோளே தவிர எந்தக் காழ்ப்புணர்ச்சியும் இந்தப் பிரச்சினையில் கிடையாது வேறு மாறுபட்ட கருத்தும் கிடையாது என்பதை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. வை. பாலசுந்தரம்] [1975 மார்ச் 3

நம்முடைய அரசு எப்படிப்பட்ட சங்கடங்கள் ஏற்பட்டாலும் அவைகளைச் சமாளிக்கக் கூடிய வகையில் இருக்கிறது. இந்த நேரத்தில் இந்த காவிரி நீர்ப் பிரச்சினையில் நிதானமாக ஒரு நல்ல முடிவைக் காண முயலுகிறது. மதிப்பிற்குரிய இந்திரா காந்தி அவர்கள் நல்ல ஜனநாயக எண்ணம் கொண்டிருக்கிறவர்கள் என்று நாம் மனப்பூர்வமாக உணர்கிற காரணத்தினால் உடனடியாக நிதி வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட சங்கடங்களுக்கிடையில் தான் இந்த அரசு நடைபெறுகிறது, நாட்டிற்கு வேண்டிய எல்லா நன்மைகளையும் செய்கிறது என்பதைப் பார்க்கிற போது இதிலே கூட மத்திய சர்க்காரை இழுக்கவேண்டிய நிலையில் இருக்கிறேன். மத்திய சர்க்காரில் பணி புரிகிறவர்களுக்கு ஒரு சம்பளம் மாநிலத்தில் வேலை பார்க்கிறவர்களுக்கு ஒரு சம்பளம் என்று இதிலே கூட வித்தியாசங்கள் இருக்கின்றன. வேலை செய்கிற பொறுப்பில் மாற்றங்கள் இருக்கின்றன, இவைகளை எண்ணிப் பார்க்கின்ற போது இவைகளை மாற்றி அமைக்க வேண்டிய கட்டத்தில் நாம் இருக்கிறோம் என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன். 1967-க்கு முன்பாக, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்பாக அரசு அலுவலாளர்கள், என்.ஜி.ஓ. வினர் பெற்று வந்த சம்பளத்தையும் இன்று பெற்று வரும் சம்பளத்தையும் கணக்கிட்டுப் பார்க்கிறபோது, ஏறத்தாழ மத்திய சர்க்கார் ஊழியர்கள் வாங்கும் சம்பள விகிதத்தையே இவர்களும் வாங்குகிறார்கள் என்பது தெரியும். அந்த அளவுக்குத் தமிழக அரசு இன்றையதினம் நல்ல காரியங்களைச் செய்து, அவர்கள் கேட்கிற நேரத்தில் அள்ளி அள்ளித் தருகிற அளவுக்கு, அவர்கள் கேட்கிற நேரத்தில் வாரி வழங்குகிற அளவுக்குப் பாரிக்குச் சமமாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருக்கிறார்கள். என்.ஜி.ஓ.வினர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அடிக்கடி சந்தித்து மாலை மரியாதை செய்கிறார்கள். நல்வாழ்த்துக் கூறுகிறார்கள். இதைப் பார்க்கிறபோது, எங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. இன்னும் பணம் இருந்தால் இன்னும் அதிகமாகத் தரலாமே, முடியவில்லையே என்று நாம் எண்ணுகிற நேரத்தில் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிலைமைகளை நாம் உணர்ந்து பார்க்கிறபோது, நாட்டிலே இருக்கிற எல்லா பிரச்சினைகளையும் சந்தித்துப் பார்த்த பிறகு ஒரு மையமான கட்டத்தில் நாம் வந்து நிற்க வேண்டியிருக்கிறது. பல்வேறு பிரச்சினைகளிலும் அந்த நிலைமை தான் ஏற்படுகிறது. ‘மாநில சுயாட்சி’ கருத்து தான் நம் மனத்தில் மையமாக இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாநில சுயாட்சி கிடைத்தால் தமிழ் நாட்டின் வாட்டம் போகும், வறுமை தடுக்கப்படும், தமிழ் நாட்டு மக்களுக்கு வளமான வாழ்க்கை



1975 மார்ச் 3] [திரு. வை. பாலசுந்தரம்]

கிடைக்கும் என்ற தூய்மையான எண்ணத்தின் அடிப்படையில் தான், மாநில சுயாட்சிக் கொள்கையை உருவாக்கி, நல்ல நேச உணர்வோடு, மத்திய சர்க்காரை பகைத்துக் கொள்ளாத அளவுக்கு, இன்றையதினம் முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு நாணயமாக, எத்தகைய அன்போடு, நேசக்கரம் நீட்டி அந்தக் கொள்கையை அறிவித்து இருக்கிறார்கள். இந்தியத் துணைக் கண்டத்தில் பல்வேறு மொழி பேசுபவர்கள் இருந்தாலும், பல்வேறு பகுதியினர் வாழும் பகுதியாக இருந்தாலும், ஒருமைப்பாட்டின் அடிப்படையில், ஏக இந்தியா என்ற அடிப்படையில், நம் தமிழ்நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு தேவை என்று பேசி வருகிறோம். ஒரு காலத்திலே தமிழ்நாடு சாம்ராஜ்யங்களின் சன்னிதானம் என்று சொல்லும் வண்ணம் எப்படி எல்லாம் ஆண்டது என்று சொல்கிற நேரத்தில், எப்படியெல்லாம் கொடி கட்டி ஆட்சியை செலுத்தியது என்று சொல்கிற நேரத்தில், இன்றையதினம் உள்ள ஏழை இந்தியாவில் ஒட்டிக் கொண்டிருக்கிறோம், ஒட்டிக் கொண்டு வாழ்கிறோம், ஒருமைப்பாடு என்ற ஒட்டல் மூலமாக—இன்றையதினம் ஏக இந்தியா என்ற நம்பிக்கை மூலமாக, ஏழை இந்தியாவைப் பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். இந்த ஒருமைப்பாடு பாதுகாக்கப்பட வேண்டுமானால், அது எப்படி இருக்க வேண்டும்?

இன்றையதினம் உள்ள இந்தியா ஷாஜஹான் கட்டிய மாளிகை அல்ல. இன்று இருக்கும் இந்தியா ஒரு கண்ணாடி மாளிகை என்பதை மதிப்பிற்குரியவர்கள் உணர்ந்து இருக்க வேண்டும் என்பதை தலைவரவர்களே, உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியா என்னும் கண்ணாடி மாளிகை மீது கல்லெறிய நாங்கள் விரும்பவில்லை; எங்களுடைய கட்சி கல்லெறிய விரும்பவில்லை. எங்களுடைய கட்சித் தலைவர் கல்லெறிய விரும்பவில்லை; அப்படிப்பட்ட கீழான நோக்கம், கீழான எண்ணம் எங்களுக்குக் கிடையாது. கல்லெறிய சூழ்நிலையை நீங்களே உருவாக்கிக் கொண்டு போகிறீர்கள் என்ற அச்சம் எங்களுக்கு எழுகிறது. கல்லெறியத் தக்க அளவுக்கு உங்களை நீங்களே தயாரித்துக் கொண்டு இருக்கிறீர்கள் என்று எங்களுக்குத் தோன்றுகிறது. ஆகவேதான் இதைவிட்டு விலகிப் போகத்தான், அதிலிருந்து விலகிக் கொள்ளத்தான் ‘மாநில சுயாட்சி’ திராவிட முன்னேற்றக் கழகம் கேட்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி வரைக்கும் பரந்து விரிந்து இருக்கும் இந்திய உபகண்டம் ஒரே நாடு என்பதை ஒப்புக் கொள்கிறேன், ஏற்றுக் கொள்கிறேன். ஒருமைப்பாடு கொண்ட மக்கள் அமைப்பு என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி வரையில் உள்ள மக்களிடையே இருக்கும் ஏற்றத் தாழ்வு, மேடு பள்ளங்கள், வசதிகள், பாகுபாடு

அற்ற முறையில் பிரிக்கப்பட்டு இருக்கிறதா என்றால் இல்லை. காஷ்மீரத்திற்கு ஒரு சட்டம் என்றால் தமிழ்நாட்டிற்கு ஒரு சட்டம். கன்னியாகுமரி எல்லையில் ஒரு நீதி என்றால், காஷ்மீரத்து எல்லையில் ஒரு நீதி. இதில்தான் ஒருமைப் பாட்டின் தத்துவம் அடங்கியிருக்கிறதா என்று கேட்கிறேன். பாரத மாதா, இந்தியத் தாய், என்று சொல்வதற்கு எங்கே விளக்கம் தரப்பட்டு இருக்கிறது, சட்ட விற்பன்னர்கள் இதை இந்தியா என்ற அமைப்பிற்குள் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்களே தவிர இந்தியா என்று எங்கே சொல்கிறார்கள் என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மக்களும் நல்ல வகையில் தமிழ்நாட்டில் வாழ இன்றையதினம் மாநில சுயாட்சி தேவைப்படுகிறது. இந்த மாநில சுயாட்சி கிடைத்தால்தான், தமிழ்நாட்டில் வளம் பொங்கும், தமிழ்நாட்டில் வாழ்வு சிறக்கும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் எடுத்துச் சொல்லி, எல்லாம் நிறைந்த ஒரு பொருளாதாரத் தத்துவத்தை பெட்டகமாகக் கொண்டு நல்ல கருத்துக்களைத் தெளிவாகச் சொல்லி, தமிழ்நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழ, வளம் பல ஈட்டித் தர அளிக்கப்பட்டுள்ள இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்று நான் அமைகிறேன், வணக்கம்.

* **திருமதி ஜோதி வெங்கடாசலம்** : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கை மீது என்னுடைய கட்சியின் சார்பாக சில கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

மத்திய அரசு விதித்து இருக்கும் வரிகளையும், மாநில அரசு விதித்து இருக்கும் வரிகளையும் பார்க்கிறபோது, ஏதோ மத்திய அரசும், மாநில அரசும் போட்டி போட்டுக்கொண்டு மக்களை ஒரு கஷ்ட நிலைக்கு உட்படுத்துகிறதா என்று எனக்கு பீதி ஏற்படுகிறது. ஏதோ ¼ சதவிகிதம், ½ சதவிகிதம் என்று பட்ஜெட்டில் விற்பனை வரி போடப்பட்டு இருந்தாலும், அந்த வரிகள் மக்களை எந்த அளவுக்கு பாதிக்கும் என்பதை அரசு உணர வேண்டும்.

1974-ம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில் ரூ. 2.56 கோடி பற்றாக்குறை இருந்தது. ஆனால் இன்றைக்கு நம்முடைய பற்றாக்குறை ரூ. 11.83 கோடி அளவுக்கு உயர்ந்து இருக்கிறது. இந்த நிலையில் இப்போது தாக்கல் செய்யப்பட்டிருக்கும் நிதிநிலை அறிக்கையில் 36.1 கோடி ரூபாய் பற்றாக்குறை காட்டப்பட்டு இருக்கிறது. இப்போது விதித்து இருக்கும் வரியின் காரணமாக வரக் கூடிய வருமானம் ரூ. 6 கோடி என்று எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும், ரூ. 30 கோடி பற்றாக்குறை ஏற்படுகிறது. இப்படி ஏற்படுகிறபோது, ஒரு வேளை—வெள்ளம் வந்த பிறகு, சாண்





போனால் என்ன முழம் போனால் என்ன என்ற கதைபோல் அரசு நினைக்கின்றதாக இருக்குமோ என நான் நினைக்கிறேன். கடந்த ஆண்டுக்கு முந்தின ஆண்டு கொஞ்சம் உபரி பட்ஜெட் காட்டப்பட்ட போது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பெருமையோடும், பூரிப்போடும் கூறினார்கள். எல்லா மாநிலங்களையும் விட தமிழ்நாட்டில் உபரி பட்ஜெட் காட்டப்பட்டிருக்கிறது என்று எடுத்துக் கூறி, தமிழக அரசின் பொருளாதார ஆரோக்கியத்தை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் இப்போது 86 கோடி ரூபாய் பற்றாக்குறை பட்ஜெட் போடப்பட்டிருக்கிறது. மதிப்பீடு இந்த ஆண்டில் இந்த அளவிலே இப்படி இருந்தாலும், இன்னும் வருகின்ற ஆண்டுகளில் எந்த அளவுக்குப் பற்றாக்குறை ஏற்படுமோ என்பதில் சந்தேகமும், இப்படி பற்றாக்குறை ஏற்பட்டால் தானாகவே விலைவாசிகள் உயர்ந்து கொண்டே போகும் என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டியிருக்கிறது.

இந்த பட்ஜெட் உரையை நாம் வாசித்துப் பார்க்கிற நேரத்தில், பாதிக்கு மேல் மத்திய அரசு தமிழ்நாட்டிற்குக் கொடுக்க வேண்டிய பங்கைப் பற்றியும், செய்ய வேண்டிய காரியங்களைப் பற்றியும், செய்யாமல் இருக்கிற காரியங்களையும் பற்றியும் குறிப்பிட்டு விட்டு, மற்றொரு பாதியில் தமிழ்நாட்டு அரசின் சாதனைகளைப் பற்றியெல்லாம் சொல்லி, பிறகு மக்களுக்கு இனி செய்ய இருக்கிற காரியங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அடுத்ததாக, கல்வியைப் பொறுத்தவரையில் இலவசக் கல்வி பற்றியும், பள்ளிகளை, கல்லூரிகளை அதிகப் படுத்துவது பற்றியும் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. பள்ளிகளை அதிகப் படுத்துவதனாலோ, அல்லது இலவசக் கல்வியை கல்லூரிவரை கொடுப்பதாலோ மாத்திரம் நாம் கல்வி கற்கும் மாணவ, மாணவிகளுக்கு செய்ய வேண்டிய கடமையைச் செய்து விட்டதாக அரசாங்கம் இருந்து விடக்கூடாது. கல்வியின் தரம் உயர்ந்து இருக்கிறதா என்றும் பார்க்க வேண்டும். இவற்றைப் பற்றியெல்லாம் கல்வி மானியம் வருகிறபோது சொல்ல ஆசைப்படுகிறேன், கல்வியின் தரத்தை உயர்த்தாமல், பள்ளிகளுக்குச் செல்லும் பிள்ளைகளின் முன்னேற்றத்திற்கு வாய்ப்பு அளிக்காமல் இருப்பதால், அவர்கள் பிற்போக்கான நிலையில் போய் கொண்டு இருப்பதைப் பார்க்கிறோம்.

[முற்பகல் 11-30]

சட்டக் கல்லூரி மாணவர்கள்கூட, அன்றைக்கு இங்கே வந்து கூறிய போது குறிப்பிட்டதைப் போல் கல்வியின் தரம் குறைந்திருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, வறட்சி நிவாரணம். இந்த வறட்சி மழை இல்லாத காரணத்தினால் என்பதை நாம் அறிகின்றோம். முன்பெல்லாம் தமிழ்நாட்டிலே சில இடங்களில் வறட்சி ஏற்பட்டது. ஆனால் இன்றைக்கு நிலைமை எப்படி இருக்கிற

தென்றால் தமிழ்நாடு முழுவதும் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. இப்படி வறட்சி ஏற்பட்டதன் காரணமாக அரசு ரெவின்யூ போர்டு மெம்பர்களை நியமித்து வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களை ஆராய்ந்து வருவதற்கு அனுப்பி இருக்கிறார்கள். அந்த ரெவின்யூ போர்டு மெம்பர்கள் கொடுக்கும் ரிப்போர்ட்டை இந்த அவையிலே வைத்தால் நலமாக இருக்கும். காரணம் உள்ளபடியே வறட்சி நிவாரணம் பெறுகிற இடங்கள் எங்கெங்கே இருக்கிறது என்பது நமக்கும் புரியும். கொடுக்கப்படுகிற பணம் மத்திய அரசு கொடுக்கிற பணமாக இருந்தாலும், நாம் செலவிடுகிற பணமாக இருந்தாலும் அது சரியாக செலவழிக்கப்படுகிறதா என்று அறிந்துகொள்ள, சந்தேகமின்றி தெரிந்து கொள்ள வாய்ப்பு இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கெனவே இந்த உணவுப் பிரச்னை கலெக்டர்களுடைய கான்பரன்ஸ்—டிசம்பர் 5-ந் தேதி என்று நான் நினைக்கிறேன்—அந்த கான்பரன்சிலே கலெக்டர்கள் வரப்போகின்ற வறட்சி நிலையை எடுத்துக் கூறி — due to natural calamaties என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி கூறி இருக்கிறார்கள். கூறி இப்போதே நாம் ரேஷனைக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்வோமானால் பிறகு இந்த உணவுப் பிரச்னை பற்றாக் குறை நிலையை ஓரளவு சமாளிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்று அவர்கள் கூறினார்கள். ஆனால் அப்போது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் அதை அப்ரோபிரியேட் சமயம் வரும்போது பார்த்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். அதன் பிறகு மறு தினம் இன்னொன்றைப் பத்திரிகையில் பார்த்தோம். இப்போது அதற்கு சமயமில்லை என்று கூறிவிட்டு ரேஷனைக் கொண்டு வந்தார்கள்.

இந்த ரேஷன் கார்டைப்பற்றியெல்லாம் மதிப்பிற்குரிய அங்கத்தினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். நிறைய குறைகள் அதிலே இருக்கின்றன. அதை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். இதை இங்கே பேசுவதால் மட்டும் இந்தப் பிரச்சினை தீர்ந்துவிடப் போவதில்லை. ரேஷன் ஆபீசுகளுக்குச் சென்று அந்தக் கார்டுகளுக்காக மக்கள் அக்டோபர் மாதத்திலிருந்து நடந்து கொண்டிருக்கிறார்கள். ஜனவரியில் கொடுப்பதாகச் சொல்லி இன்னும் கொடுக்காமல் இருக்கிறார்கள். நடுத்தர மக்கள் எப்படி கறுப்பு மார்க்கெட்டிலும், கள்ள மார்க்கெட்டிலும் அரிசி வாங்கிச் சாப்பிட முடியும்? ஏற்கனவே நடுத்தர மக்கள் ஒரு வேளைதான் சாப்பிடுகிறார்கள் என்ற உண்மையை ஒத்துக்கொண்டுதான் ஆகவேண்டும்.





அப்படி கார்டு கொடுத்தவர்கள் ரேஷன் கடைக்கு செல்லும்போது என்ன நிலைமை? அரிசி இருந்தால் கோதுமையில்லை, கோதுமையிருந்தால் சர்க்கரையில்லை, சர்க்கரையிருந்தால் எண்ணெயில்லை. இப்படி ஒரு பற்றாக்குறை. இதற்கு நான் ஒரு யோசனை கூற விரும்புகிறேன். அப்படி ரேஷன் கடையிலே Civil Supply Corporation கடைகளில் எதெல்லாம் இல்லையோ அதை அந்த வெளியே ஒரு போர்டிலே டிஸ்ப்ளே செய்யட்டும். கியூவிலே காலையிலிருந்து மாலை வரையிலும் காத்துக்கொண்டிருக்கிற மக்கள் இல்லை என்று தெரிந்தால் அவர்கள் திரும்பிவிடுவார்கள். அரிசியோ, கோதுமையோ, சர்க்கரையோ கொடுப்பார்கள் கொடுப்பார்கள் என்று காலையிலிருந்து மாலை வரையிலும் காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அதிலே அர்த்தமில்லை. அதிகாரிகள் என்ன செய்கிறார்கள்? இதற்கெல்லாம் ஒரு பரிகாரம் காண வேண்டாமா? பிறகு நாம் மக்களிடத்திலே ஓட்டு கேட்கிறோம். மக்களுக்காக ஆட்சி என்று சொல்கிறோம். இப்படி அரசும், அரசாங்க ஊழியர்களும் மக்களை படாதபாடு படுத்துவார்களேயானால் இது எங்கு போய் முடியும் என்பது அரசுக்குப் புரியவேண்டும்.

மற்றொன்று தண்ணீர்ப் பஞ்சம். உடுப்பதற்கு உடை வேண்டும். இருப்பதற்கு இடம் வேண்டும். இந்த நிதிநிலை அறிக்கையிலே வீட்டு வசதிகள் செய்து கொடுப்போம் என்று அழகாக இருக்கிறது. இப்போது குடிப்பதற்கு தண்ணீருக்கே பெரிய பிரச்னை ஏற்பட்டு விட்டது. தண்ணீர்ப் பிரச்சினையை சமாளிக்கா விட்டால் வரப்போகிற—இப்போதே ஆரம்பித்து விட்டது நம்முடைய வெய்யில் காலம்—இந்த வெய்யில் காலத்திலே தண்ணீர் எவ்வளவு அவசியம். இப்போதே ஒவ்வொரு வீட்டிலும் இரண்டு, மூன்று தினங்களுக்கொரு முறைதான் குளிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். தற்போது நிலைமை. குடிக்க தண்ணீர் கிடைத்தால் போதும் என்று ஆகிவிட்டது. இதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த டிட்கோ நிறுவனம் கடந்த நான்கு ஆண்டுகளில் 30 திட்டங்களைக் கொண்டுவந்து அதனால் ஏறத்தாழ 17,000 மக்கள் நேரடியாக வேலை வாய்ப்பு கிடைப்பதாகவும், அதற்கு ஏற்கனவே 340 கோடி ரூபாய் செலவாகும் என்றும் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இது எந்த ஆண்டில் வரும், எப்போது அவர்கள் வேலை பெறப் போகிறார்கள் என்பது தெரிய வேண்டும். ஆகையால் வெறும் காகிதத்தில் இருந்தால் மட்டும் போதாது. 17,000 பேருக்கு வேலை கிடைக்கிறது என்றால் அதை நாங்கள் வரவேற்கிறோம்.

எப்போது கொடுக்கப் போகிறார்கள், எப்போது இந்த ஸ்கீம் வரப்போகிறது என்பதைப்பற்றி விரிவாக எதிர்க்கட்சி மெம்பர்களுக்குக் கூறவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 250 மின்விசைப் படகுகள் தயாரித்து வழங்கும் திட்டம். இந்த மின்விசைப் படகு வழங்குகிற திட்டத்திலே பல கோளாறுகள் இருக்கிறது. கட்சிக்கோ அல்லது விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்ட ஒன்றாக இந்த விசைப்படகுகள் தரப்படவேண்டும். அதை ஒரு லாட்டரி திட்டமாக வைத்திருந்தார்கள். இப்போதும் அப்படித்தான் இருக்கிறது என்று நினைக்கிறேன். ஆனால் அதை விடுத்து யார் டிசர்வ் இட் என்பதை ஆராய்ந்து அதிகாரிகள் விருப்பு வெறுப்பிற்கோ அல்லது அரசாங்க விருப்பு வெறுப்பிற்கோ ஏற்ப கொடுப்பார்களேயானால் அது மக்களுக்குப் பயன்படும் மரபாகாது என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஒழுங்கான முறையில் கொடுக்க வேண்டும்.

மொழி வளர்ச்சியும் வரலாற்றுப் பாதுகாப்பும் என்ற தலைமையில் இங்கு இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எழில்மிகு பூம்புகார் கலைக்கூடம், ஏற்றமிகு பாஞ்சாலக்குறிச்சி கட்டபொம்மன் கோட்டை. மகிழ்ச்சி. இதில் ஒன்று எனக்குப் புரியவில்லை. இந்த கட்டபொம்மன் கோட்டையை நாம் வரவேற்கிறோம். ஆனால் ஈஸ்ட் இந்தியக் கம்பெனி காலத்தில் கட்டபொம்மன் வரலாற்றை எழுதி வைத்திருந்த ரிக்கார்டுகள் ஏறத்தாழ 86,000 ஏடுகள் அவசியமற்றது என்று அரசு கருதி கொளுத்தப்பட வேண்டுமென்று—கொளுத்தப்பட்டதாக தகவல்—கொளுத்தப்பட்டது என்று நான் அறிகிறேன்—அப்படியானால் அவைகளை ஏன் எரிக்க வேண்டும்? அவைகளை அந்த ஹிஸ்டரி இருக்கக் கூடாதா? அதை எரிக்க வேண்டிய அவசியம் என்னவென்பதற்கு கனம் முதலமைச்சர் அவர்கள் விடையளிக்கிற போது விளக்கம் தருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு ஒன்றை கவனப்படுத்த விரும்புகிறேன். சென்ற டிசம்பர் சட்டமன்ற தொடர் கூட்டத்தில் திரு. இராசாங்கம் அவர்கள் சினிமாத் துறையை தேசிய மயமாக்கப் போவதாக அறிவித்தார்கள். அதை திராவிட முன்னேற்றக் கழகம் 1967-ம் ஆண்டு எலெக்ஷன் மானிபெஸ்டோவில் குறிப்பிட்டிருந்தது என்று நான் அறிகிறேன். அதை இப்போது கைவிட்டுவிட்டார்களா அல்லது அது அரசின் கருத்தில் இருக்கிறதா அல்லது 'அண்டர் தி கன்சிடரேஷன் ஆப்





கவர்ன்மென்ட்' என்ற நிலையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன் (குறுக்கீடு) கண்டிப்பாக தேசியமயமாக்க வேண்டுமென்பது என்னுடைய சொந்த கருத்து.

அடுத்தபடியாக, அனாதை இளம் சிறார்களுக்கும் விதவைகளுக்கும் பாதுகாப்பளிக்கும் திட்டம் இருப்பதாக இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன்.

மற்றொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு இருக்கிற ஆளும் காங்கிரஸ் கட்சியினரும், அதனுடைய தோழமைக் கட்சியினரும் இந்த வறட்சி நிவாரணத்திற்கு வேண்டிய உதவிகளை செய்ய வேண்டுமென்று பிரதமர் இந்திரா காந்தி அவர்களிடம் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டின் நிலைமைகளை எடுத்துக் கூறியதற்காக பாராட்ட வேண்டியதுதான். ஆனால் எடுத்துக்கூறி என்ன கேட்டிருக்கிறார்கள். 5 கோடி ரூபாய்க்கு சிபாரிசு செய்திருக்கிறார்கள். அதைக்கொண்டு எந்த அளவுக்கு வறட்சி நிவாரணம் செய்ய முடியும்? முதலமைச்சர் 50 கோடி தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் பத்தில் ஒரு பங்கு—5 கோடிக்கு சிபாரிசு செய்திருக்கிறார்கள். கேட்டதைத் தான் கொஞ்சம் தாராளமாகக் கேட்கக்கூடாதா?

'நாஷனல் டெவலப்மென்ட் கவுன்சில்' கூட்டம் கடந்த 15 மாதங்களாகக் கூட்டப்படவில்லை என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதன் காரணம் என்ன? பலமுறை சொல்லப்பட்டும் கூட்டப்படவில்லை என்று முதலமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்தக் கூட்டம் கூட்டப்படாமல் இருக்கின்ற காரணத்தால் நாஷனல் டெவலப்மென்ட் ஒரு பக்கம் இருக்க, நம்முடைய தமிழ்நாட்டின் டெவலப்மென்ட் பாதிக்கப்பட்டிருக்கிறது. இது 'அவலை நினைத்து உரலை இடிக்கிறது' என்று சொல்வார்களே அதைப்போல இருக்கிறது என்றுதான் நான் கருதுகிறேன்.

மத்திய அரசுக்கு அதிக அதிகாரம் இருப்பதால் மாநில அரசுக்கு எதையும் செய்ய இயலவில்லை என்று நம்முடைய முதலமைச்சரவர்கள் சொல்கிறார்கள். இப்படி இவர்கள் அவர்களைச் சுட்டிக்காட்ட, அவர்கள் இவர்களுக்கு கொடுக்க வேண்டியதை கொடுக்க முடியாது என்று சொல்ல, இவர்களுக்கு இடையே மக்கள் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். இவைகளுக்கு எல்லாம் யார் பொறுப்பு? பொதுமக்கள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் 76-லே எல்லோரும் போகவேண்டியிருக்கிறது. அதை

யாரும் மறந்துவிட வேண்டாம். திரும்பத் திரும்ப அவர்களிடம் போகும் போது அவர்கள் நமக்கு நல்ல தீர்ப்பு வழங்குவார்கள். அதை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அவர்களுக்கு செய்ய வேண்டிய மினிமம் நெசஸிட்டீஸ் கூட செய்து கொடுக்க முடியாமல் மத்திய அரசிடம் அதிகாரம் இருக்கிறது என்று சொல்லும்போது மத்திய அரசிடம் இருக்கும் அதிகாரத்தை பொறுத்தவரை எனக்கு ஒன்று ஞாபகம் வருகிறது
' Power corrupts and absolute Power corrupts absolutely '
மத்திய அரசு தமிழ்நாட்டின் மக்கள் கஷ்டங்களை அறிந்து உதவி புரிய வேண்டும். அதிகாரத்தை வைத்து மக்களை நசுக்க வேண்டாம்.

" வரம் கொடுக்கும் தெய்வமாக மத்திய அரசும்,
தவம் கிடக்கும் பக்தர்களாக மாநில அரசுகளும் "

இருக்கின்றன என்று முதலமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் தெய்வம்; அவர்களிடத்தில் இவர்கள் தவம் கிடக்கிறார்கள். இவர்களுக்கு இடையில் இருக்கிற பொதுமக்கள், அவர்களை படைத்த தெய்வத்தைத்தான் நம்பி வாழவேண்டும்.

எனக்கு ஞாபகம் வருகிறது. எங்கள் ஆட்சி இருந்தபோது எங்களுடைய முதலமைச்சராக இருந்த மதிப்பிற்குரிய திரு. பக்தவத்சலம் அவர்கள் கூறினார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வரும்போது " விஷ கிருமிகள் பரவுகின்றன, மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" என்று சொன்னார்கள். இப்போது எல்லா இடங்களிலும் மத்திய அரசாங்க கிருமிகளும் எல்லாக் கிருமிகளும் பரவியிருக்கின்றன என்று நான் நினைக்கிறேன். இப்போது விஷக் கிருமிகள் மட்டுமல்லாமல் தண்ணீர் கிடைக்காததால் பல வியாதிகள் வரப்போகின்றன. அதற்கு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தான் பதில் சொல்ல வேண்டும். மெடிக்கல் டிமாண்ட் வரும்போது அதைப் பற்றிப் பேசிக்கொள்ளலாம். இப்படி மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து மக்களை கஷ்டத்திற்கு உள்ளாக்கிக் கொண்டிருந்தால் மக்களை படைத்த தெய்வம்தான் அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று சொல்லி அமர்கிறேன்.

**திரு. கு. திருப்பதி:** தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 1975-76 ஆம் ஆண்டிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்பதிலே நான் உண்மையிலேயே பெருமைப்படுகிறேன்.

இந்த ஆண்டு நமக்காக கொடுத்திருக்கிற நிதிநிலை அறிக்கையை முதலமைச்சரவர்கள் படிக்கும்போது நாமெல்லாம் கேட்டோம். நமக்கெல்லாம் ஏதோ 'நாலடி'யைப் படிப்பது போலவும், 'திருக்குறளைப்





படிப்பது போலவும் இருந்ததே தவிர வரியைப்பற்றிச் சொல்கிற ஒரு அறிக்கையாக இல்லை என்பதை அறிந்து நான் பெருமைப்படுகிறேன். வைதிகர்கள் கூட நினைத்திருப்பார்கள். பெரியபுராணம், திருப்பாவை, திருவருட்பா, திருவாசகம் போன்று இருந்ததே தவிர, வரியைப்பற்றிச் சொல்லி அவர்களுடைய மனதை புண்படுத்துகிற அறிக்கையாக இது இல்லை என்று நினைக்கும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பெரிதும் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக இந்த நிதிநிலை அறிக்கை ஏதோ ஒரு திட்ட அறிக்கையாக இருந்ததே தவிர, இன்னின்ன பொருட்கள் மீது வரி விதிக்கிறோம் என்று சொல்கிற ஒரு வார்த்தை கூடக் காணப்படவில்லை. ஆகையால்தான் ஜோதி வெங்கடாசலம் அம்மையார் அவர்களும், அனந்தநாயகி அம்மையார் அவர்களும் கூட ஆதரித்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். அந்த நியாயமான உணர்வுகளுக்காக அவர்களுக்கு நன்றி சொல்லக்கடமைப்பட்டிருக்கிறேன்.

ஜோதி வெங்கடாசலம் அம்மையார் அவர்கள் பேசும்போது மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் மாற்றி மாற்றி வரி போட்டிருக்கிறார்கள் என்று சொல்லி,—குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பவர்கள் என்று நான் சொல்லத் தயாராக இல்லை—இரண்டு சர்க்காரும் சேர்ந்து வரி போடுகிறார்கள் என்று சொல்வதன் மூலம் அவர்கள் வருகின்ற தேர்தலுக்கு ஆதரவு தேடலாம் என்று பார்த்தால், அதை அரசியலுக்காக எடுத்துக்கொண்டால் அதில் எனக்கு ஆட்சேபம் இல்லை.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** குட்டை குழம்பி இருக்கிறது என்பதை அவர்கள் ஒப்புக்கொள்கிறார்களா ?

**திரு. கு. திருப்பதி:** குட்டையை நீங்கள் குழப்பினீர்கள் என்று நான் சொல்லவில்லை. குழம்பிய குட்டையில் லாபம் பெறலாம் என்று, 76 தேர்தலுக்காகச் சொன்னால் ஆட்சேபனை இல்லை என்று சொன்னேன் டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போதும் அந்த முறையிலேதான் சொன்னார்கள். இதுதான் கடைசியாகத் தாக்கல் செய்யப்படுகிற நிதிநிலை அறிக்கை என்று சொன்னார்கள்.

திரு. பாலசுந்தரம் அவர்கள் பதில் சொல்லும்போது இது புதிதான வாசகம் அல்ல; பல ஆண்டு காலமாக அவர்கள் சொல்லும் பழைய வாசகம் தான் என்று சொன்னார்கள், நான் டாக்டர் ஹாண்டே அவர்களுக்குச்

சொல்லிக்கொள்ள விரும்புவது, 76-ல் மட்டுமல்ல, இருக்கின்ற நிலைமைகளைப் பார்த்தால் 78, 79 வரவு-செலவுத் திட்டத்தைக் கூட நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் சமர்ப்பிப்பார்கள் என்று மிக உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைச் சொல்வதற்குக் காரணம் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் டாக்டர் ஹண்டே அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்திருக்கிறார்களோ அந்தக் கட்சி, யாருடைய வீட்டு கதவு பக்கத்திலே தவம் கிடைக்கிறதோ அந்த வீட்டுக்குச் சொந்தக்காரரான இந்திராகாந்தி அவர்கள் அண்மையில் தேர்தலை நடத்துவதாக இல்லை. கொஞ்ச நாளைக்கு முன்னால் திடீர் தேர்தல் வரப்போகிறது என்று சொல்லிவந்து, பல மாநிலங்களில் இடைத்தேர்தல்களில் அடிபட்ட காரணத்தால் அடுத்த ஆண்டு வரக் கூடிய தேர்தலைக் கூட நடத்தப்போவதில்லை என்று நினைக்கும்போது நிச்சயமாக நம்முடைய முதலமைச்சர் அடுத்த ஆண்டு மட்டுமல்ல இரண்டு ஆண்டுக்குப் பிறகு கூட நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிப்பார்கள் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வருகிற 76ம் ஆண்டில் நாங்கள்தான் இருக்கப் போகிறோம் டாக்டர் ஹண்டே அவர்கள் மாண்புமிகு உறுப்பினராக இருந்து அதைப் பார்க்கத்தான் போகிறார்கள் என்பதை குறிப்பேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆலடி அருணா:** மதிப்பிற்குரிய திருப்பதி அவர்கள் 76-ல் தேர்தல் நடக்காது. ஆகவே தேர்தல் நடக்காத காரணத்தினால் டாக்டர் கலைஞர் தான் தொடர்ந்து பட்ஜெட்டை சமர்ப்பிப்பார்கள் என்கிறார். தேர்தல் நடந்தால் வரமாட்டார் என்பதையாவது மறைமுகமாக ஒப்புக்கொண்டதற்கு நன்றி.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தேர்தல் நடந்தாலும் அவரேதான் வந்து வாசிப்பார்.

**திரு. கு. திருப்பதி:** மதிப்பிற்குரிய அமைச்சர் சொன்னதைப்போல தேர்தல் நடந்தாலும் திராவிட முன்னேற்றக் கழகந்தான் வரும் என்பதில் சந்தேகம் இல்லை. நாட்டின் நிலைமையை திரு. ஹண்டே தெரிந்து கொள்ள வேண்டும். அவர் உறவு வைத்துக்கொண்டிருக்கிற கட்சி அதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகச் சொன்னேன்.

முதலமைச்சர் அவர்கள் தம் நிதிநிலை அறிக்கையில் பல சலுகைகளை அளித்திருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்கள் சேமிப்பு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கைத்தறி நெசவாளர்களுக்குப் பாதுகாப்புத் தந்திருக்கிறார்கள். மீனவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தை அளித்திருக்கிறார்கள். ஐந்தாயிரம் ரூபாய் வரை வியாபாரம் செய்கிற சிறு வியாபாரிகள்



பதிவு செய்வதிலும், விற்பனை வரியில் இருந்தும் விலக்கு அளித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட பல நன்மைகளைச் செய்திருக்கிற காரணத்தால் தமிழ்நாட்டில் உள்ள ஏழை மக்கள் அத்தனைபேரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்திருக்கும் இந்த நேரத்தில் நாட்டில் வறட்சி தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கிறது என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். பஞ்ச நிலைமை இந்த நாட்டில் இருக்கிறது என்பதை நான் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இந்திய நாடு முழுவதிலுமா பஞ்ச நிலைமை இருக்கிறது? உலகம் முழுவதிலுமா பஞ்ச நிலைமை இருக்கிறது?

மேதகு ஆளுநர் அறிக்கையைப் பார்க்கும்போது—தமிழ்நாட்டைப் பொறுத்து உணவு தானியப் பற்றுக்குறை 20 லட்சம் டன்தான் என்று அவர்களே சொல்லியிருக்கிறார்கள். அரிசி மட்டும் கூட இல்லை. தானிய வகைகள், பருப்பு வகைகள் எல்லாவற்றையும் மொத்தமாகச் சேர்த்துப் பார்த்தால் கூட தமிழகத்தின் பற்றுக்குறை 20 லட்சம் டன்தான் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள மக்கள் உணவுப் பொருள் கிடைக்காது திண்டாடக்கூடாது என்கிற பரிவு உணர்வோடு மத்திய சர்க்கார் நினைத்துப்பார்த்தால் இந்த 20 லட்சம் டன் உணவு தானியத்தை இந்த நேரத்தில் நமக்குக் கொடுத்துதவ என்ன சங்கடம் இருக்கப்போகிறது? ஒரு உத்தரவு போட எத்தனை நாளாகும்? அந்தக் காலத்து பழைய ராஜா முறையா? உத்தரவை ஒரு ஆள் மூலம் அனுப்பவேண்டும்—அவர் அங்கிருந்து குதிரையில்இங்கு வந்து சேர்வதற்கே 2 மாதங்கள் ஆகும் என்கிற நிலையா? மாண்புமிகு பிரதமர் அவர்கள் இங்கே வந்தார்கள். வரும்போதே விமானத்தில் அந்த உத்தரவைக்கொண்டு வந்திருக்கலாம். அதை தூக்கி வருவதற்கு சிரமமாக இருக்கும் என்றாலும் திரு. சுப்பிரமணியம் அவர்களிடமாவது கொடுத்தனுப்பியிருக்கக்கூடாதா? இதைச் செய்யவில்லை என்கிறபோது தான் மத்திய அரசு இந்த அரிசிப் பிரச்சினையை அரசியல் பிரச்சினையாக ஆக்குகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆனால் இந்த நேரத்தில் ஒன்றை நினைவுறுத்த விரும்புகிறேன். பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் "அரிசிப் பிரச்சினையை அரசியல் பிரச்சினையாக ஆக்காதீர்கள்" என்று சொல்லியிருக்கிறார். அவரை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் உண்மையில் பாராட்டுகிறேன். அரசியல்வாதி அரசியல்வாதிதான்—அரிதாரம் அரிதாரம் தான். இதைமட்டும் இந்த நேரத்தில் மாண்புமிகு அங்கத்தினருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆனால் மற்றொன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்கு என்ன செய்ய வேண்டும்? எந்த மாநிலத்தில் பற்றுக் குறை அதிகமாக இருக்கிறதோ அங்கே அவர்களுக்குத் தேவைப்படும் உணவு தானியத்தை அனுப்பி வைக்க வேண்டும். அரிசி சாப்பிடுகிற நாம் அரிசியைக் கேட்டால் கோதுமையைத் தருகிறேன், பிற தானியங்களைத் தருகிறேன் என்கிறார்கள். நான் இவற்றை வேண்டாம் என்று சொல்லவில்லை. அரிசி கிடைக்கவில்லை என்றால் வேறு தானியங்கள் அனுப்புவதற்கு ஆட்சேபனை இல்லை. மற்ற மாநிலங்களில் நிறைய இருக்கிறபோது; ஆந்திரம் நமக்கு அரிசி கொடுத்துதவ தயாராய் இருக்கிறபோது இவர்கள் இடைஞ்சலாக இருக்கிறார்கள். தமிழகத்தை மட்டும் ஏன் இப்படி நடத்துகிறார்கள் என்பதை அங்கத்தினர்கள் கவனிக்கவேண்டும்.

பொதுவாக அரசாங்கம் என்பது வரியை வசூலிப்பது. அதற்குச் செலவு சொல்வது என்பதல்ல. அரசாங்கம் என்பது நாட்டு மக்களுடைய இன்றைய தேவைகள்—எதிர்காலத்தேவைகள் அனைத்தையும் கணக்கில்கொண்டு அதற்கான திட்டங்களை வகுத்து செயல்படுத்துகின்ற மன்றமாகும். அந்த முறையில் கடந்த 25 ஆண்டுகளாக தமிழகத்திற்கு நியாயமாகச் செய்திருக்கவேண்டிய எந்த எந்தத் திட்டங்களை நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள்?

நமக்கு 3½ லட்சம் டன் நைட்ரஜன் தேவை என்றால் 2½ லட்சம் டன் தான் ஒதுக்குவோம் என்கிறார்கள். இதில் கூட இதுவரை நமக்கு ஒன்னே முக்கால் லட்சம் டன்தான் வந்திருக்கிறது. இதை மேதகு ஆளுநரே சொல்லியிருக்கிறார். மின்சாரத்தைப் பொறுத்தவரையில் கல்பாக்கம் திட்டத்தை விரிவாக்கி, விரைவாக்க வேண்டும் என்றோம். செய்யவில்லை. நெய்வேலியில் 2 வது சுரங்கத்தை வெட்டவேண்டும் என்று சொன்னோம். தூத்துக்குடி அனல் மின்சாரத்தைத் திட்டத்தை ஆயிரம் மெக்காவாட் உடையதாகச் செய்யவேண்டும் என்றோம். இப்படி விவசாயத்திற்கு, தொழில் துறைக்குத் தேவையானதைச் சொல்கிறபோது மத்திய சர்க்கார் ஏன் இதில் காலதாமதம் காட்டுகிறதோ—எனக்குப் புரியவில்லை. மத்திய சர்க்கார் தமிழகத்திற்கு செய்ய வேண்டிய காரியங்கள் எதையும் செய்யவில்லை. ஆகவேதான் திராவிட முன்னேற்றக் கழகம் மாநில சுயாட்சி கேட்கிறது. ஏதோ மாநில சுயாட்சி என்றால் பிரிவினை வேண்டும் என்பதற்காகக் கேட்கவில்லை.

இப்போதே தமிழ்நாட்டைத் திராவிட முன்னேற்றக் கழகம் தான் ஆண்டு கொண்டிருக்கிறது. பிரிவினை வந்த பிறகு ஆளவேண்டுமென்ற அவசியம் இல்லை. இதைப் பலபேர் குழப்பிக்கொண்டிருக்கிறார்கள். திராவிட





முன்னேற்றக் கழகம் கேட்கிற மாநில சுயாட்சி என்பது பிரிவினைக் கோரிக்கை அல்ல என்பதை நான் இந்த நேரத்தில் அறுதியிட்டுச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டைத் தனியே பிரித்துக்கொடுத்தாலும் வேண்டாம்—வேண்டாம்—எங்களுக்கு வேண்டியதில்லை. மாநிலங்களுக்கு இன்னும் அதிக அதிகாரங்கள் வேண்டுமென்றுதான் நாங்கள் கோருகிறோம்.

உதாரணமாக ஒரு கம்பெனியில் மானேஜிங் டைரக்டர் என்று ஒருவர் இருப்பார். ஆனால் சேல்ஸ் மானேஜர், வொர்க்ஸ் மானேஜர் என்று பலர்—அதிகாரத்தைப் பரவலாகக் கொண்டிருப்பார்கள். வேலை செய்வதற்கு இந்த முறைதான் சௌகரியமாக இருக்கும். இந்த முறையில்தான் மாநில சுயாட்சி கேட்கிறோம். எல்லா அதிகாரங்களும் இன்றையதினம் மத்திய சர்க்காரிடத்திலேயே குவிந்திருக்கின்றன. இதைத்தான் அண்ணா அவர்கள் சொன்னார்கள். "எல்லா அதிகாரங்களும் அங்கே குவிந்து, வேலை அதிகமாக இருக்கிற காரணத்தினால் பாதுகாப்பு போன்ற பெரிய காரியங்களில் கோட்டை விட்டுவிடுவீர்களோ என்று பயமாக இருக்கிறது. இருக்கிற அதிகாரங்களை பரவலாக மாநிலங்களுக்குப் பிரித்துக்கொடுத்துவிட்டால் நீங்கள் முக்கியமாகக் கவனம் செலுத்த வேண்டிய பிரச்சினையில் அதிகக் கவனம் செலுத்தலாம்" என்றார்கள். ஆகவேதான் நாங்கள் கேட்கிற மாநில சுயாட்சி என்பது உண்மையில் அதிக அதிகாரங்கள் மாநிலங்களுக்குத் தரப்படவேண்டும் என்பதே தவிர பிரிவினை அல்ல—இதைத் தயவுசெய்து எதிர்க்கட்சிக்காரர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

ஒன்றே ஒன்றைமட்டும் சொல்ல விரும்புகிறேன். ஆலடி அருணா, காளிமுத்து, ஹாண்டே போன்றவர்கள் கேள்வி நேரம் முடியவேண்டியதுதான். உடனே தாண்டவராயன், தாண்டவராயன் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சொல்வதில் ஆட்சேபனை இல்லை. தாண்டவராயன் பிரச்சினைக்கு தயவு செய்து ஒரு முடிவு கட்டுங்கள். ஒரு கதை. . .

**திரு. எம். சுரேந்திரன்:** முடிவை அந்தப் பக்கத்தில் இருக்கிறவர்கள் கட்ட வேண்டுமா, இந்தப் பக்கத்தில் இருக்கிறவர்கள் கட்ட வேண்டுமா?

**திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு திருப்பதி அவர்கள் தாண்டவராயன் பிரச்சினையை நினைவும் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். எங்களுக்கு அதை மீண்டும் மீண்டும் சொல்ல வேண்டுமென்று இல்லை. தாண்டவராயன் பிரச்சினை மீது சர்க்கார் நடவடிக்கை எடுக்க முன்வந்தால் நாங்கள் திரும்பச் சொல்லவில்லை.

திரு. கு. திருப்பதி: பைலைப் பார்த்து தேவையான நடவடிக்கை எடுக்கிறோம் என்றுதான் சொல்லியிருக்கிறார்களே, உண்மையில் தாண்டவராயன் பிரச்சினையில். . .

(நண்பகல் 12-00)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்) : இது காலையிலே பேசப்பட்டு, அமைச்சரால் பதில் அளிக்கப்பட்டது. நீங்கள், காலையிலே பேசப்பட்டது என்று சொல்லி, இப்பொழுது ஏன் கிளப்புகிறீர்கள்? நீங்களே சொல்லிவிட்டு, நீங்களே திரும்பவும் கிளப்பாதீர்கள். ஆகவே, நீங்கள் வேறு பிரச்னை பற்றி பேசுங்கள்.

திரு. கு. திருப்பதி: தலைவரவர்களே, எனக்கு ரொம்பவும் வருத்தமாக இருக்கிறது. அன்றாடம், புதுப் புதுப் பிரச்னையைக் கிளப்பியிருப்பார்களானால் பரவாயில்லை. தினமும் காலையில். டாக்டர் ஹாண்டே அவர்களும், அருணா அவர்களும், மற்றவர்களும் தாண்டவராயன், தாண்டவராயன் என்று சொல்கிறார்கள்.

திரு. ஆலடி அருணா: இன்று காலையில் பேசியது, அப்துல் சலாம் பிரச்னை. தாண்டவராயன் பிரச்னையல்ல. . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்) : நீங்கள் பேசுவதற்கு ஒரு வழியிருக்கிறது. திருப்பதி அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது, நீங்கள் பேச வேண்டுமென்றால், எழுந்து நில்லுங்கள். அவர் விழைந்தால், நீங்கள் எழுந்து பேசுங்கள். அவர் யீல்டாகி நீங்கள் பேசினால் எனக்கு ஆட்சேபனையில்லை. அவர் ஒரு பக்கம் பேசிக்கொண்டிருந்துவிட்டு, நீங்கள் ஒரு பக்கம் பேசிக் கொண்டிருந்தால், அது முறையல்ல.

திரு. கு. திருப்பதி: அந்தப் பிரச்னைக்கு நான் போகத் தயாராக இல்லை.

பொதுவாக, பாங்குகள் தேசியமயமாக்கப்பட்டன என்று சொல்கிறோம். மற்ற ஊர்களிலே எப்படி இருக்கிறதோ தெரியாது, மதுரையிலே இருக்கிற எந்த பாங்கிலும் நாங்கள் சொன்னால், ரூ. 500 கூடக் கடன் கொடுக்க அவர்கள் தயாராக இல்லை. அவர்களுக்கு வேண்டியவர்களுக்கு ரூ. 1,000, ரூ. 2,000 ரூ. 10,000 என்று கொடுக்கிறார்களே தவிர, எங்களைப் போன்றவர்கள் சிபாரிசிலே ரூ. 500 கூடக் கிடைக்கவில்லை. ஆகவே, பாங்குகள் தேசியமாக்கப்பட்டது என்று சொல்வது அர்த்தமில்லாமல் போகிறது.



மின்சார இணைப்பு என்று சொன்னால், அங்கேயிருக்கிற அதிகாரிகள் 10 பம்ப் செட் கொண்டு வந்தால், இணைப்பு தருகிறோம் என்று சொல்கிறார்கள். 10 பம்ப் செட்டுக்கு எங்கே போவது? கேட்டால் வருமானமில்லையென்று சொல்கிறார்கள். ஒரு செட்டுக்கு இணைப்புகொடுத்தால், உணவுப் பொருள் வரும். அதன் மூலம் வருமானம் வரும். அதை வைத்துக் கொண்டு மேலும் 4, 5 பம்ப் செட்டுகளைப் போடலாம். ஆகவே, இணைப்பு என்றவுடன் 10 பம்ப் செட் என்று சொல்வதை விட்டுவிட்டு, ஒரு செட்டுக்கு இணைப்புகேட்டாலும் கொடுக்க வேண்டும்.

மதுரையிலே, எங்களுக்கிருக்கிற பெரிய தொழிற்சாலையே மைஸ் மில்தான். நாங்கள் திருமலை நாயக்கர் மகாலையும், மீனாட்சி மில்லையும் பெரிய தொழிற்சாலைகள் என்று சொன்னால் மக்கள் நம்பத் தயாராக இல்லை. ஆகவே, உடனடியாக பெரிய தொழிற்சாலையை மத்திய அரசு ஆரம்பிக்க மாநில அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மெட்ராசுக்கு அடுத்த பெரிய கார்ப்பரேஷனாக மதுரையிருக்கிறது. ஆனால், திருச்சியிலே—கோயம்பத்தூரிலே கூட வானொலி நிலையமிருக்கிறது. நானும், மதுரையில் வானொலி நிலையம் கேட்டு, சோர்ந்து போய்ப் பார்த்து விட்டேன். அங்கே வானொலி நிலையம் அமைக்கப்படவில்லை. அங்கே வானொலி நிலையம் இல்லையென்பது எங்களுக்கு மட்டும் அசிங்கமில்லை, சர்க்காருக்கே அசிங்கமாக இருக்கிறது.

ஒலி-ஒளி காட்சி மதுரையிலே மீனாட்சி கோவிலில் வரவிருக்கிறது என்று சொன்னார்கள். பிறகு, அங்கே முடியவில்லையென்று சொன்னால், மகாலில் வரும் என்றார்கள். பிறகு மகாபலிபுரம் என்று சொன்னார்கள். இப்படி கொஞ்சம், கொஞ்சமாக வடக்குக்கு வந்துவிட்டது. நான் கேட்பது தயவு செய்து, மதுரையில் ஒலி-ஒளி காட்சியை வைக்க ஏற்பாடு செய்யுங்கள். மத்திய சர்க்கார் பணம் கொடுக்கவில்லையென்றால் மாநில அரசாவது ஒலி-ஒளி காட்சியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று காச நோய். நான் தினம், 100 கடிதம் கொடுத்துக் கொண்டிருக்கிறேன், காச நோய் ஆஸ்பத்திரிகளுக்கு. இதனால், காச நோய் எவ்வளவு இருக்கிறது நாட்டில் என்று பாருங்கள். ஆகவே, காச நோய் அளவு அதிகமாக இருக்கிற மாவட்டத்திலே நிறைய ஆஸ்பத்திரிகளைத் திறந்து காச நோயாளிகளுக்கு நன்மை செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கு. திருப்பதி] [1975 மார்ச் 3

அடுத்து, முதியோர் பென்ஷன். முதியோர் பென்ஷனுக்காக, தாசில்தாரிடம் போனால் அவர், சார், இந்த வருஷம் 100 பேருக்குத்தான். நீங்கள் இப்பொழுது கொடுக்கிறீர்கள். கொஞ்சம் பொறுங்கள், யாராவது ஒரு ஆள் சாகட்டும், உங்கள் ஆளுக்குத் தருகிறேன் என்று சொல்கிறார். அந்த வயதை, 55, 60, 70 என்று ஆக்கிவிட்டால் கூடப் பரவாயில்லை. எல்லோருக்கும் என்று கொண்டு வாருங்கள். நாங்கள் யாராவது வாழட்டும் என்று போனால், கஞ்சி இல்லாமலிருக்கிறார், அவர் வாழட்டும் என்று போனால், யாராவது சாகட்டும் என்று சொல்கிறார். ஆகவே, வயதை 60, 70 என்று நிர்ணயித்து எல்லோருக்கும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொழு நோய் பிச்சைக்காரர்களின் இல்லங்களை நாம் திறந்திருக்கிறோம். இந்தியாவே பாராட்டுகிறது. பொதுவாக, பிச்சைக்காரன் இருப்பது நமக்குத்தான் அவமானம். தமிழ்நாட்டிலே இருப்பது, தமிழ்நாட்டுக்கு அவமானம், இந்தியாவுக்கே அவமானம். நம் நாட்டிலே பிறந்துவிட்டான். நாம், எப்படியோ, சட்டமன்ற உறுப்பினர்களாக வந்துவிட்டோம். ஆனால், பிச்சைக்காரர்கள்? ஆகவே, தயவுசெய்து பிச்சைக்காரர்களை இந்த நாட்டில் இல்லாமல் ஒழிப்பதற்கு தீவிரமான திட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, காளிமுத்து அவர்கள் ரொம்ப வருத்தப்படக் கூடாது. தி.மு.க. உறுப்பினர்கள் இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்ல திட்டங்களைத் தீட்டுகிறார்கள். ஏழை மக்களுக்குச் செய்யவேண்டுமென்று நினைக்கிறோம். இதைச் செய்தால், தி.மு.க. காரர்களுக்கு, ஆளுங்கட்சிக் காரர்களுக்கு என்று சொல்வதால், கட்சிக்காரர்களை விட்டுவிடுகிறார் மாண்புமிகு முதலமைச்சர். அதனால் என்ன ஆகிறது? எங்கள் ஆள் தோரணம் கட்டுகிறார். அதனால் அவருக்குக் கிடைக்காமல் போய்விடுகிறது. இப்பொழுது 11 இலட்சம் ஏக்கர் நிலம் தரிசாக இருக்கிறது. காளிமுத்து, ஹாண்டே ஆகியோர் கொஞ்சம் பொறுத்துக்கொள்ள வேண்டும். 4, 5 இலட்சம் ஏக்கர் நிலங்களைத் தி.மு.க. காரர்களுக்கென்று ஒதுக்கவேண்டும். ஒரு இலட்சம், 2 இலட்சம் ஏக்கர் என்றாலும், தி.மு.க. காரர்களுக்குப் பட்டா போட்டுக்கொடுக்க அவர்கள் அனுமதி கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான், அதிக நேரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் அளித்திருக்கிற அறிக்கை, உண்மையிலே இந்த ஆண்டு மன நிறைவு தருகிறது என்று மற்றவர்கள் எல்லாம் சொல்கிற காரணத்தாலே, அவர்களுடைய மகிழ்ச்சியோடு நானும் சேர்ந்து, முதலமைச்சருடைய அறிக்கையை, நானும் வரவேற்று, இந்த அளவோடு முடித்துக்கொள்கிறேன்.



1975 மார்ச் 3]

* **திரு. வா. மை. அப்துல் ஜப்பார்** : மாண்புமிகு மரியாதைக்குரிய மாற்றுத் தலைவரவர்களே,

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்)** : உங்களுக்கு 5 நிமிடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்குள் முடித்துக்கொள்ளுங்கள்.

* **திரு. வா. மை. அப்துல் ஜாப்பர்** : மாண்புமிகு மரியாதைக்குரிய மாற்று தலைவரவர்களே, இந்த வரவு செலவு நிதி அறிக்கையின்மீது என்னுடைய கட்சியின் சார்பாகவும் என் சார்பாகவும் ஒருசில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். மத்திய அரசினுடைய நிதிநிலை அறிக்கை வெளியானதும் அதிலே ரூபாய் 288 கோடிக்கு அதிகமாக புதிய வரிகள் மக்களை வாட்டியுள்ள நிலையிலும் ரூபாய் 250 கோடிக்கு துண்டு விழச் செய்து, மறைமுகமாக மக்கள் மீது வரிச் சுமையை சுமத்தின நேரத்திலே எதிர்க் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் எல்லாம் இம்மாதிரியான ஒரு இக்கட்டான சூழ்நிலையிலே நம்முடைய முதல்வர் கூட இந்த மாநிலத்திலே மாபெரும் வரிச் சுமையை மக்கள்மீது திணிப்பார்கள் அதன் மூலம் இவ்வரசின் மீது குறை காணலாம் என்று மகிழ்ச்சியோடு எதிர் பார்த்துக்கொண்டிருக்கிற நேரத்திலே அவர்கள் எல்லாம் ஏமாற்றம் அடையக்கூடிய அளவிலே. நாங்களெல்லாம் மகிழ்ச்சி அடையக்கூடிய முறையிலே நம்முடைய மரியாதைக்குரிய முதல்வர் அவர்கள் மிகக் குறைந்த ரூபாய் 6 கோடிக்கு மட்டுமே, அதாவது 501 கோடி அளவுள்ள நிதிநிலை அறிக்கையிலே ரூ. 6 கோடிக்கு மட்டுமே புதிய வரியாகக் காண்பித்து, இந்த நிதிநிலை அறிக்கையை வெற்றிகரமாகக் கொண்டுவந்துள்ளார்கள்.

அதிலே பல பாராட்டுக்குரிய அம்சங்கள் இருந்த போதிலும்கூட, ஒருசில அம்சங்கள் குறித்து நான் மாறுபட்டுச் சொல்கிறேன். இந்த வறட்சி நிலைமையைப்பற்றி, இந்த வறட்சியைச் சமாளிப்பதற்காக அவர்கள் எடுத்துள்ள நடவடிக்கை இந்த ஆண்டிலும் சரி, வரக்கூடிய ஆண்டிலே எடுக்கப்படவிருக்கிற நடவடிக்கையும் சரி சரியான முறையிலே எடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், சட்டமன்றத்திலே ஒவ்வொரு ஆண்டும் நாங்கள் எடுத்துச் சொல்லி வருவதைப் போல், ஆண்டாண்டு காலமாக வறட்சியே கதி என்றிருக்கக்கூடிய பகுதிகளுக்கு நல்ல பல திட்டங்களை இதிலே நான் காணவில்லை.

உதாரணமாக, பரம்பிக்குளம் ஆழியாறு திட்டப் பகுதியில் 89,000 ஏக்கர் புதிய பகுதி—விஸ்தரிப்புக்கு—சாகுபடிக்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. நீராறு நதியிலிருந்து கிடைக்கக்கூடிய தண்ணீரைப் பயன்படுத்தி மேற்கொண்டு, 89,000 ஏக்கர் நிலப்பரப்பு பாசன வசதி செய்யப்படுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஆனால், நீண்ட நெடுங்காலமாக, அதாவது ஏறக்குறைய—நம்முடைய நண்பர்கள் சொல்வதுபோல்—கல் தோன்றிய, மண் தோன்றிய காலம் முதற்கொண்டு, வறட்சியே கதி என்று இருக்கக்கூடிய எங்களுடைய அரவக்குறிச்சி போன்ற பகுதிகள், 89,000 எக்கர் விஸ்தரிப்பிலே, 1 ஏக்கர் அளவுக்காவது பயன் பெறுமா என்றால், இல்லை.

தஞ்சாவூருக்கு அடுத்தபடியாக சலுகை பெற்றிருக்கிற மாவட்டம் ஒன்று இருக்கிறது என்று சொன்னால் அது கோவை மாவட்டமாகத்தானிருக்கும். அமைச்சரவையில், கோவை மாவட்ட அமைச்சர்கள் எண்ணிக்கையிலும் அதிகம், சலுகையிலும் அதிகம். ஏன் இப்படிப்பட்ட ஒரு தலைபட்சமாக நிலையென்று தெரியவில்லை. முழுமையாக, பல்லடம், தாராபுரம், உடுமலைப்பேட்டை, பொள்ளாட்சி இப்படிப்பட்ட கோவை மாவட்ட பகுதிகளுக்குத்தான் கொடுக்கப்படுகிறதே தவிர, வேறு எந்த மாவட்டத்திற்காவது அல்லது பக்கத்து மாவட்டமாக உள்ள திருச்சி மாவட்டமாக உள்ள எங்கள் பகுதியில், உண்மையிலே பரம்பரை தரித்திர நாராயணர்களாக உள்ள மக்கள் பலன் பெற்றிருக்கிறார்களா என்றால் இல்லை. இப்படி ஒரு மாபெரும் குறையை உண்மையிலேயே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திருத்தாமல் போனால் அவர்கள் ஒரு தலைப்பட்சமாக நடந்துகொள்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் இந்தச் சபையிலே வருத்தத்துடன் தெரிவித்தாகவேண்டும்.

இந்த ஆண்டிலே புதிதாக 23 புதிய திட்டங்கள் 112½ கோடி ரூபாய் செலவிலே நிறைவேற்றப்பட இருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தப் புதிய திட்டங்களில்கூட என்னுடைய தொகுதி சம்பந்தமாக எந்தத் திட்டமும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. என்ன காரணம் என்று தெரியவில்லை. ஆனால் ஒன்றே ஒன்று, இருண்ட வானத்திலே மின்னல் ஒளி காட்டுவதுபோல் நொய்யல் ஆற்றுத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்ற ஒரு வாசகம் மட்டுமே இதிலே காணப்படுகிறது. (குறுக்கீடு.) நம்முடைய நண்பர் திரு. சௌந்திரபாண்டியன் அவர்கள் அதுவும் கோவை மாவட்டந்தான் என்று சொல்கிறார்கள், கோவை மாவட்டத்திலே கட்டப்பட்டாலும்கூட திருச்சி மாவட்டத்திற்குக் கொண்டு வருவார்கள் என்று நம்புகிறேன். ஆனால் அந்தத் திட்டம் கூட ஆய்வில் தான் இருக்கிறது என்று தான் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே சபாநாயகர் அவர்களே, தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்):** இதற்கு முன்னாலே பேச்சைத் துவங்குகிறபோது மாற்றுத் தலைவர், மாற்றுத் தலைவர் என்றீர்கள். இப்போது சபாநாயகர் என்கிறீர்களே, உங்களுடைய பேச்சை முடித்துக் கொள்ளுங்கள், நேரமாகிவிட்டது.



**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** நீங்கள் எப்படிச் சொல்லச் சொல்கிறீர்களோ அப்படிச் சொல்கிறேன், தயவுசெய்து நேரத்தை மட்டும் குறைத்துவிடாதீர்கள். இந்தப் புதிய திட்டங்களிலே கிட்டதட்ட ஐந்தரை லட்சம் எக்கர் வரையில் பாசனவசதி பெறுகின்ற இந்தத் திட்டத்திலேகூட என்னுடைய தொகுதி சேர்க்கப்படவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

லெவி சிஸ்டத்தைப்பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்லித்தான் ஆகவேண்டும். தஞ்சை மாவட்டத்திலே ஒரு ஏக்கரும் அதற்குக் குறைந்த நிலப் பரப்பும் வைத்துள்ளவர்கள்—விதவைகளாக இருக்கிறவர்கள், அலுவலர்களாக இருந்தவர்கள், ஓய்வுபெற்றிருக்கிறவர்கள், முழுமையாக அதை நம்பியே வாழ்கிறவர்கள் இப்படிப்பட்டவர்கள்தான் குறைந்த நிலத்தை வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கும் குத்தகையின் மூலம் கிடைப்பதே ஏழு அல்லது எட்டு மூட்டைதான். அவர்கள் 8 மூட்டை லெவிக்குக் கொடுக்கவேண்டுமென்று சொன்னால் அவர்கள் விளைந்ததை எல்லாம் லெவிக்கு போட்டுவிட்டு வெளியே ஒரு மூட்டை இரண்டு மூட்டை என்று அதிக விலைக்கு வாங்கி, அரசாங்கம் போட்டிருக்கிற குறைந்த விலைக்கு லெவிக்கு கொடுத்துவிட்டு, 130 ரூபாய்க்கு அரிசியை வெளியே வாங்கிச் சாப்பிடக்கூடிய முறை இருக்கிறதே இது மிக அநியாயமானது, அநீதியானது, நியாயத்திற்குப் புறம்பானது. ஆகவே, இந்த லெவியிலிருந்து 1, 2 ஏக்கர் வைத்திருக்கக்கூடிய சிறிய நிலச் சுவான்தார்களுக்கு விதிவிலக்குக் கொடுக்க வேண்டும், அல்லது அவர்களுக்குப் பாதகமற்ற முறையிலே இதை மாற்றியமைக்க வேண்டும். லெவியே வேண்டாமென்று நான் சொல்லவில்லை. அரசாங்கம் அதிலே கண்டிப்பாக இருக்க வேண்டியதுதான், ஒத்துக்கொள்கிறேன். ஆனால், அதே சமயத்தில் ஒரு ஏக்கர் நிலம் வைத்துள்ளவர்களிடமும் லெவியை வாங்கி அவர்களை நிர்க்கதியிலே நிற்க வைப்பது சரியல்ல, அதை மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில்களைத் தேசியமயமாக்கவேண்டுமென்ற கொள்கை இந்தச் சபையிலே ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று. உதாரணமாக, நண்பர் திரு. சுரேந்திரன் அவர்கள் தொகுதியிலே இருக்கின்ற மேட்டூர் அலுமினியத் தொழிற்சாலை தேசியமாகிவிட்டது என்று அறிவிப்புச் செய்தோம். மத்திய அரசு அதை ஒப்புக்கொள்ளவில்லை. அதற்காக நாம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை இதுவரையில் என்ன? ஏன் மத்திய அரசு அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. தனி நபர் இதன் மூலமாகக் கோடிக் கணக்கான ரூபாய்களைச் சம்பா

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1975 மார்ச் 3

இக்கிறதோ, அப்படியானால் தனிப்பட்டவர் கோடிக்கணக்கான ரூபாய் கொள்ளையடிக்கக்கூடியதை மத்திய அரசு ஆதரிக்கிறதா என்று அறியவேண்டும். மத்திய அரசு நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருப்பதாகத் தெரிகிறது.

சேலம் உருக்காலைக்கு 3 கோடி ரூபாய் ஒதுக்கப்படவேண்டும், தென்னிந்தியாவிலே உள்ள 3 உருக்காலைத் திட்டங்கள் தாமதப்படுத்தப்படவேண்டும் அல்லது கைவிடப்பட வேண்டுமென்ற முறையிலே வாசகம் அங்கே காணப்படுகிறது. அது உண்மையாக இருந்தால் அது மிகவும் பரிதாபத்திற்குரிய நிலை. நம் மாநில மக்கள் கொதித்து எழுந்து கட்சி வேறுபாடின்றி அனைவரும் ஒத்துழைத்து சேலம் உருக்காலையைத் துவங்கச் செய்ய அதிகமாக நிதி ஒதுக்க வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தி.மு.க. தமிழ்நாட்டு மக்களின் பெருமையை, பண்பாட்டை உணர்த்தக்கூடிய முறையிலே பூம்புகார், கட்டபொம்மன் கோட்டை, திருவள்ளுவருக்கு ஆலயம், தமிழ்த்தாய்க்கு ஆலயம் என்று தமிழ்ப் பண்பாட்டை உணர்த்தக்கூடிய முறையிலே நல்ல நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறது. ஆனால், முஸ்லிம் சமுதாயத்தினைச் சேர்ந்தவர்களுக்கு ஒன்றும் செய்யப்படவில்லை. உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றபோது முஸ்லிம் கவிஞருக்கு கடற்கரையிலே—எங்கள் மதக் கொள்கைப்படி சிலை வைக்க முடியாது. ஆகவே, அதற்குப் பதிலாக—நினைவுச் சின்னம் அமைக்க வேண்டுமென்று கேட்டோம். இதுவரையிலே அமைக்கப்படவில்லை. உமறுப்புலவர் மாபெரும் காவியமாகிய சீறாப்புராணத்தைப் படைத்தவர். தமிழகத்திற்கே பெருமை தேடித் தந்த அவர் எட்டயபுரத்தைச் சேர்ந்த கவிஞர். அவருக்கு நினைவுச் சின்னம் அமைக்கவேண்டுமென்று—இந்த நேரத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே இல்லை, இருந்தால் சாதகமான பதிலை எதிர்பார்த்திருக்க முடியும்—தமிழ்ப் பெருமக்களுக்காக சிறந்ததொரு காவியத்தைச் செய்து தந்த அவருக்கு, உமறுப்புலவருக்கு எட்டயபுரத்தில் நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளப்பட்டியிலே நாங்கள் எங்கள் சொந்த முயற்சியிலே ஒரு மருத்துவமனை கட்டினோம். அதற்குப் பிறகு நாங்களே பணம் தந்து அங்கே ஒரு எக்ஸ்ரே யூனிட் ஆரம்பிக்கவேண்டுமென்று சொன்னோம். அதை விரைவிலே அமைத்துத்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு அங்கே 13, 14 படுக்கைகள் இன்னும் அதிகப் படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1975 மார்ச் 3] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

நொய்யல் ஆற்றின் குறுக்கிலே—தொப்பம்பட்டி என்ற ஊரின் அருகே—ஒரு சிறிய பாலம், பெரிய பாலமல்ல. அதற்குக் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவாகாது, சில லட்ச ரூபாய்கள்தான் செலவாகும். அதைக் கட்டிக் கொடுத்தால் நேரடியாக எங்கள் தொகுதியிலிருந்து ஈரோடு, கொடுமுடி போன்ற இடங்களுக்கு மக்கள் செல்ல வசதியாக இருக்கும். ஆகவே, அதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்னாலே பேசிய உறுப்பினர் திரு. திருப்பதி அவர்கள் மதுரையிலே ஒரு வானொலி நிலையம் அமைக்கவேண்டுமென்று சொன்னார்கள். நான் திருச்சி மாவட்டத்தின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். திருச்சி மாநகரிலே டெலிவிஷன் ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் அண்மையிலே ஒரு கால் அட்டென்ஷன் மோஷன் கொடுத்திருந்தேன். அது இதுவரையிலே ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அநேகமாக நிதிநிலை அறிக்கை விவாதத்திலே பேசிக்கொள்ளலாம் என்று நினைத்து ஸ்பீக்கர் அவர்கள் விட்டுவிட்டார்கள் என்று நினைக்கிறேன். சேலத்திலே 30 ஆயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் கேரளத்திலிருந்து தென்னை நார் தருவித்து கயிறு செய்து பிழைத்து வருகிறார்கள். ஆனால், கேரள மாநிலம் தன்னுடைய மாநிலத்திலிருந்து நார் வெளி மாநிலங்களுக்குச் செல்லக்கூடாது என்று உத்திரவு போட்டிருக்கிறது. நம்முடைய அரசு, நம்முடைய மாநிலத்திலிருந்து வெல்லம் போன்றவை வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்படக்கூடாது என்று உத்திரவு போட்டால் மத்திய அரசு ஏற்றுக்கொள்வதில்லை, அப்படி உத்திரவு போட்டது தவறு என்று சொல்லி அதை உடைத்தெறிகிறது. ஆனால், கேரள மாநிலம் எந்த ஆதாரத்தின் மீது, எந்த இந்திய ஒருமைப்பாட்டின்கீழ் தன்னுடைய மாநிலத்திலிருந்து கச்சாப் பொருட்கள் வெளி மாநிலங்களுக்குப் போகக்கூடாது என்று உத்திரவு போட்டிருக்கிறது? நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கேரள மாநிலம் போட்டிருக்கிற அந்தச் சட்டம் இல்லீகல், பொருத்தமற்றது, அதை மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும். அப்படிச் செய்து உடனடியாக சேலத்திலே கயிறு செய்து வாழ்கின்ற முப்பதாயிரத்திற்கும் மேற்பட்ட அந்தத் தொழிலாளர்களுக்கு வாழ்வதற்கு வழிவகை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நான் என்ன பார்க்கிறேன் என்றால், ஊராட்சி மன்றங்கள் முதலியவைகளுக்கு முந்தைய ஆண்டின் நிதிநிலை அறிக்கைகளில் அவர்கள் பகுதிகளிலேயுள்ள சாலைகளை விஸ்தரிப்பதற்காகவும், அகலப்படுத்துவதற்

களாகவும், தார் போடுவதற்காகவும் மானியங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. ஆனால், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அது வெகுவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது அல்லது இல்லாமல் ஆக்கப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே ஒவ்வொரு கிராமமும் வளர்ச்சி பெற வேண்டும், பேரூராட்சி மன்றங்கள் வளர்ச்சி பெற வேண்டுமென்று ஆசைப்படும் நேரத்தில், ஏற்கனவே அதிகமாகச் சுமைகள் சுமத்தப்பட்டிருக்கின்றன, அலுவலாளர்களின் சம்பளத்தை உயர்த்துவதால், அவர்களால் புதிய வரிகளையும் விதிக்க முடியாது. மத்திய அரசும், மாநில அரசுகளும் எப்படி வரிகளை அதிகமாக்கி செலவுகளைச் சரிக்கட்டுகின்றனவோ அதைப்போல ஊராட்சி மன்றங்களும், நகராட்சி மன்றங்களும் அதிகமான வரிகளை விதிக்க முடியாது. அவர்களுக்கு இப்படிப்பட்ட மானியங்களை நிறுத்துவதால், விஸ்தரிப்புக்கும், சுகாதாரத்திற்கும், மற்றும் மக்கள் நலன்களை உண்டாக்கும் திட்டங்களுக்கும் குந்தகம் ஏற்படும் என்பதால் பேரூராட்சி மன்றங்களுக்கும் நிதிநிலையை அதிகமாக ஒதுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த வில்லேஜ் ஆபீசர்களைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். கர்ணம், மணியம் இதுபோன்ற 'கேட்டகிரிகள்' இல்லாமற் போனால் லஞ்சம் ஒழிந்து போகும். லஞ்சத்தின் பிறப்பிடம் அதுதான். அ, ஆ ஆரம்பிக்கின்ற இடமே அதுதான். இந்து நண்பர்கள் சொல்வதைப்போல 'அரி ஓம்' என்று லஞ்சம் ஆரம்பிக்கின்ற இடமே கர்ணம், மணியம் ஆகியவர்களிடமிருந்துதான். இந்த உத்தியோகங்கள் ஒழிக்கப்பட்டால், அல்லது இவைகளில் மாறுதல் ஏற்பட்டால் இந்த லஞ்ச ஊழல் ஒழியும். அதற்கு என்ன வழி என்றால் இவர்களை பர்மனென்ட் ஆபீசர்களாகச் செய்துவிடுவதுதான். இவர்களை ஏதோ கௌரவ அதிகாரிகளாக நியமித்து 50 ரூபாய், 100 ரூபாய் என்று சம்பளம் கொடுத்து தினம் 100 ரூபாய் லஞ்சம் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்வது மாதிரி இருக்கிறது. இதை மாற்றிவிட்டு நிரந்தர அதிகாரிகளாக, எப்படி ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்களோ அதைப்போல இந்த மணியக்காரர்களையும், கர்ணங்களையும் அரசாங்க சம்பளச் சிப்பந்திகளாக நியமிப்பதன் மூலமாக அவர்கள் ஏதேனும் தவறுகள் இழைத்தால் ஒரு இடத்தை விட்டு மற்றொரு இடத்திற்கோ, ஒரு கிராமத்தை விட்டு மற்றொரு கிராமத்திற்கோ, ஒரு மாவட்டத்தை விட்டு மற்றொரு மாவட்டத்திற்கோ மாற்றுவதன் மூலம் பரம்பரையாக நடக்கும் இந்த ஊழல் போக்கை மாற்ற முடியும். இதன் காரணமாக சமுதாய மக்களுக்கு மாபெரும் நன்மைகளைத் தர முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



அடுத்து, மாநில சுயாட்சி பற்றி மட்டும் ஒருசில கருத்துக்களை கூறி என்னுடைய பேச்சை முடிவிற்குக் கொண்டு வருகிறேன். மாற்றுத் தலைவரவர்களே . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்):** இன்னும் ஒரு நிமிஷம்தான்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அடிக்கடி நம்முடைய அங்கத்தினர் அவர்கள் சொல்லும்பொழுது மாற்றுத் தலைவரவர்களே, மாற்றுத் தலைவரவர்களே என்று சொல்வது எங்கள் காதில் மாட்டுத் தலைவரவர்களே, மாட்டுத் தலைவரவர்களே என்று விழுகிறது. மாற்றுத் தலைவர் என்று சொல்லலாமா, ஏனென்றால் யார் தலைமை வகித்தாலும் அவர்களைத் தலைவர் என்றுதான் சொல்கிறோம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. துரை முருகன்):** யார் மாற்றுத் தலைவராக இருந்தாலும் அங்கத்தினர்கள் பேசும்பொழுது, 'தலைவரவர்களே' என்றுதான் விளிக்க வேண்டும். ஆனால் திரு. ஜப்பார் அவர்கள் ஏதோ சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொன்னார்களே தவிர, வேறு கெட்ட எண்ணத்தில் சொல்லவில்லை, ஆகையால் நானும் அதை விட்டுவிட்டேன்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** தலைவரவர்களும் என்னுடைய நோக்கத்தைப் புரிந்து கொண்டதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்மொழியிலே 'மாற்று' என்பது 'தற்காலிகம்' என்ற பொருள்படும். அம்மையார் அவர்களும் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள்தானே, ஆகையால் இந்தச் சிறிய தமிழ் வார்த்தையை அவர்கள் புரிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

**திரு. ஆலடி அருணா:** அம்மையார் அவர்களுக்கு 'மாற்றுத் தலைவர்' என்றால் புரியும், ஆனால் 'மாட்டுத் தலைவர்' என்பதுதான் அவர்களுக்குப் புரியவில்லை.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** எண்ணூர் அனல் மின் நிலையத்தை எடுத்துக்கொண்டால் அதனுடைய உற்பத்தி 35 சதவிகிதம்தான் இருப்பதாகத் தெரிகிறது. அது உண்மையாக இருந்தால் மிகவும் வருந்தத் தக்கதாகும். அங்கே 35 சத விகிதம் மட்டுமே உற்பத்தியாகும் அளவில் என்ன கோளாறு இருக்கிறது? அதைக் கண்டுபிடித்து நிவர்த்திக்க வேண்டும். 'பாரத் எலக்ட்ரிக்கல்ஸ்' வசம் கொடுக்கப்பட்டு. அவர்கள் முன்பே தவறான இயந்திரத்தைக்

கொடுத்திருப்பதால்தான் இப்படிப்பட்ட குறைபாடு ஏற்பட்டிருப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது. எனவே அவைகளைச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மாநில சுயாட்சி பற்றி என்னுடைய கருத்தாகவும், என்னுடைய கட்சியின் கருத்தாகவும் சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொரு மாநிலமும் சுயமாக நல்லமுறையில் வளர்ச்சியடைய வேண்டுமென்பதை மத்திய அரசேகூட ஒப்புக்கொண்டிருக்கிறது. நீங்கள் ஒருவேளை இதை ஆச்சரியத்தோடு கேட்கலாம், எப்படி மத்திய அரசு ஒப்புக்கொண்டது என்று. காஷ்மீர் மாநிலத்தைப் பொறுத்தவரையில் 370-வது ஷரத்தை ஒப்புக் கொண்டு அதை நிலைநிறுத்தியதன் மூலம், மேலும் அந்த மாநிலத்தில் முதல்வருக்கு 'வசிர்-இ-ஆஸம்' என்று பிரதம அமைச்சர், அல்லது முக்கிய அமைச்சர் அல்லது முதலமைச்சர் என்று சொல்லும் முறையில் விளக்கம் சொல்ல முடியும்—சொல்லியதன் மூலமும் அறியலாம். அதோடுகூட அந்த மாநிலத்திற்கு ஏற்படுத்தியுள்ள சட்டங்களை அந்தச் சட்டமன்றமே ஆலோசித்து, விரும்பத் தகாதவைகளை ஜனாதிபதிக்கு சிபார்சு செய்து மாற்றுவதற்கு வழிவகைகள் செய்யப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட மாநில சுயாட்சியை ஒரு பகுதிக்கு மட்டும் தந்து மற்றப் பகுதிகளுக்குத் தராததன் காரணம் என்ன? அங்கே போராடுவதற்கு ஷேக் அப்துல்லா இருப்பதாலும், சிறைக்கூடத்திற்குச் செல்வதற்கு ஷேக் அப்துல்லாவும் தொண்டர்களும் அந்த மாநிலத்தில் இருப்பதாலும், அவர்களைச் சிறைக் கூடங்களுக்கு அனுப்பியும், சைன்யங்களின் மூலமும் அடக்க முடியாது என்பதாலும் அந்தக் கோரிக்கை ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தால் அது தமிழ்நாட்டு மக்களுக்கு விடுக்கும் ஒரு சவாலாகத்தான் இருக்கிறது. இதைப் பற்றித் தமிழ்ச் சமுதாயத்தின் தலைவர்கள் சிந்திக்க வேண்டுமென்ற வேண்டுகோளை விடுக்கிறேன்.

மிகச் சிறுசிறு விஷயங்கள். மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலையை தேசிய மயமாக்க வேண்டுமென்று நாம் தீர்மானம் நிறைவேற்றினோம், இந்தச் சட்டமன்றத்திலேயே நிறைவேற்றினோம். இதைப்போன்ற பல தீர்மானங்களைச் சட்டமன்றத்தில் நிறைவேற்றினோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கள்ளச் சந்தையில் ஏராளமாகப் பணம் குவிந்து இருப்பதால் அவர்களைக் கைது செய்வதற்கும் அல்லது பரிசீலனை செய்வதற்கும் அதிகாரத்தை இந்த அரசு பெற வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றினோம். ஆனால் இவைகளெல்லாம் செல்லாக் காசுகளாக ஆக்கப்பட்டுவிட்டன. காரணம் நம்மிடத்தில் போதுமான அதிகாரங்கள் இல்லாததுதான்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எவ்வளவு நேரமாக நீங்கள் பேசுகிறீர்கள்? கிட்டத்தட்ட 20 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் 5 நிமிடங்களில் முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** உதாரணமாக நம்முடைய மாநிலத்திலுள்ள மக்கள் அரிசி உணவைச் சாப்பிட்டுப் பழக்கப்பட்டவர்கள். திடீ ரென்று அவர்கள் கோதுமை சாப்பிட வேண்டுமென்று சொன்னால், அதில் அவர்கள் பழக்கம் இல்லாதவர்கள். முன்பொருமுறை அரிசிப் பற்றாக்குறை ஏற்பட்ட நேரத்தில் கோதுமையை நாம் கட்டாயமாகக் கொடுத்து உண்பதற்குப் பழகட்டும் என்பதற்காக மானியமும் கொடுத்து 'சப்சிடி' விலையில் தந்தார்கள். ஆனால் இன்றைக்கு அப்படி இல்லை. இன்றைக்கு 60,000 டன் நமக்குத் தரப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் குறிப்பாகத் தமிழகத்திலுள்ள கிராம மக்கள் அரிசியைத்தான் உண்டு பழக்கம் உடையவர்கள். அவர்களுக்குத் திடீரென்று கோதுமையைத் தருவது அவர்களின் உடல் நலத்திற்குக் கேடு விளைவிப்பதாகும். ஆகவே, அரிசி வேண்டுமென்றால் இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் விளைச்சல் இல்லை, அதேநேரத்தில் பர்மா, தாய்லாந்து போன்ற நாடுகள் நம்முடைய தேவைக்காக அரிசியைத் தந்து உதவ காத்திருக்கின்றன. நாம் அவர்களிடத்திலே வாங்கிக் கொள்ளலாம் என்றால் அதற்கு அதிகாரம் இல்லை. நாம் மத்திய அரசைத்தான் அதற்காக வற்புறுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். நீங்கள் வெளிநாடுகளிலிருந்து அரிசியைப் பெற்றுத் தாருங்கள் என்றால் அதற்கு மத்திய அரசு கையை விரிக்கிறது. இது தமிழ்நாட்டின் பிரச்சினை என்பதால், தமிழ்நாட்டின்மீது எப்பொழுதுமே மாறுபட்ட கருத்து கொண்டிருக்கும் மத்திய அரசு இந்த மக்களின் நியாயமான கோரிக்கையை ஒப்புக்கொள்ள மறுக்கிறது.

நம்முடைய திட்டங்கள் பலவற்றிற்கு உதாரணமாகச் சொல்ல வேண்டுமென்றால், முன்பு தொழில் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு மாதவன் அவர்கள் சொன்னார்கள், மதுரையிலே 4 கோடி ரூபாய் செலவிலே நைலான் தொழிற்சாலை துவங்குவதற்கு மத்திய அரசிடம் அனுமதி கேட்டுள்ளோம் என்று. அப்படிக் கேட்டு இரண்டாண்டுகள் ஆகின்றன. அப்படி இரண்டாண்டுக் காலமாகியும்கூட நியாயமான இந்தத் தொழிலை ஆரம்பிக்க மத்திய அரசிடமிருந்து இன்னும் உரிமம் வந்து சேரவில்லை. ஆனால் அதேநேரத்தில் பம்பாய், சூரத் போன்ற இடங்களில் பல கோடிக் கணக்கான ரூபாய் செலவில், இந்திய நாட்டின் முழுப் பொருளாதாரமும் அங்கே அடங்கிக்கிடக்கிறது என்று சொல்லத்தக்க விதத்தில் குஜராத் மாநிலத்திலும், பம்பாய் மாநிலத்திலும் தொழில் வளம் பெருகியிருக்கிறது. பாலிஸ்டர் தொழிற்சாலை போன்ற தொழிற்சாலைகள் அங்கே வளர்ச்சி பெற்றிருக்கின்றன. ஆனால் நாம் இங்கே

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1975 மார்ச் 5

4 கோடி ரூபாய் செலவில் மதுரையிலே நைலான் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டு ஆண்டுகள் இரண்டாகியும்கூட அதற்கான உரிமம் இன்றுவரை தரப்பட வில்லையென்றால் நாம் அனுபவித்து வரும் ஆட்சியின் தன்மையை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உணர்ந்து, உண்மையிலேயே இந்த மாநிலத்தின் வளர்ச்சியிலே அக்கறை இருந்தால், இந்த மாநிலம் வளர்வதால் நாமும் சீரும் சிறப்புமாக இருப்போம், நம்முடைய சந்ததிகளும் சீரும் சிறப்புமாக இருக்க முடியும் என்ற நம்பிக்கை இருந்தால், இதிலே திராவிட முன்னேற்றக் கழகம் என்றோ, ஏனைய கட்சிகள் என்றோ பாராது, எல்லோரும் ஒருமுகமாக நின்று நம்முடைய மாநிலத்திற்கு மட்டுமல்ல. இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள அனைத்து மாநிலங்களுக்கும் அதிக அதிகாரங்கள் கிடைக்கச் செய்ய வேண்டும். நம்முடைய மாநிலம் மட்டுமல்ல, அனைத்திந்தியாவிலேயும் உள்ள மாநிலங்களும் வளர்ச்சியுற்று ஆக்கம் பெற உதவ வேண்டுமென்று கூறி, இந்த அளவிற்குப் பேச வாய்ப்புத் தந்த தலைவரவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

[பிற்பகல் 12-30]

* THIRU K. M. SUBRAMANIAM : Mr. Deputy Speaker, I thought we were going to discuss the State Budget here. But I find that we are discussing instead Rajamannar Report or perhaps only indulging in accusation against the Centre. We find that every member opposite to us goes on accusing the Central Government for the mismanagement of the Tamil Nadu. I do not know how they can do that. Anyhow, I will stop with this. I am not going to repeat that.

Mr. Balasundaram has raised so many points that affects the reputation of an All-India Party and I have no other go except to answer him. The first and foremost is the accusation he has made. Unfortunately there is a drought in Tamil Nadu and it occurs once in three years or four years according to him. I have gone through the slums in the City of Madras and everywhere ladies say

'இங்கு எப்படி ஐயா தண்ணீர் கிடைக்கும்? இராமரை எரித்த இடமாயிற்றே! என்று அவர்கள் சொல்லுகிறார்கள், நானாகச் சொல்லவில்லை.

That is the way in which our religion, our faith, and our trust in God have been destroyed.



1975 மார்ச் 5]

Now, coming to the other points, out of Rs. 500 crores revenue of the State the Centre has given a block grant and a grant-in-laid of about Rs. 76 crores, apart from loans; we must thank the Centre.

Another thing, my hon. friend, Mr. Balasundaram said was that the Central Government was going on taxing while this State Government was not doing so. I say, this Government need not tax, for, they can appeal to the Central Government for funds. If the Centre does not tax, how can they meet the demands of the States? (Interruption) I would not have raised this had it not been for the fact that Mr. Balasundaram himself raised it......

MR. DEPUTY SPEAKER: Are you discussing the Central Budget or the State Budget now?

THIRU K. M. SUBRAMANIAM : I would not have referred to it if Mr. Balasundaram had not raised this point.

THIRU V. BALASUNDARAM : Point of order, Sir.

தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டுச் சொன்னது—மத்திய சர்க்கார் போட்டிருக்கும் வரியை நம்முடைய மாநிலத்திலே வாழ்கின்ற மக்கள் தெரியாமல், புரியாமல் 'இது மாநில சர்க்கார் போட்ட வரி' என்று கருதிக்கொண்டு, இந்த மாநில சர்க்காரைத் தவறாகத் திட்டிக் கொண்டிருக்கிறார்களே—என்றுதான் குறிப்பிட்டேன். அதைச் சரியாகப் புரிந்து கொள்ளாத காரணத்தாலோ என்னவோ திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் அதை மாற்றிக் கூறுகிறார்கள்.

THIRU K. M. SUBRAMANIAM: I am only trying to clarify the statement he has made. People may be misled. That is why I am clarifying. I am not saying what he has said was wrong but I am only saying—it is my duty to say so—through you, Mr. Deputy Speaker, to the general public, that whatever Mr. Balasundaram says he has heard from the public is absolutely wrong; because, unless the Centre imposes taxes, the Centre cannot give subsidies to the States; this sum of Rs. 76 crores cannot be just printed and issued to the State.

[Thiru K. M. Subramaniam] [1975 மார்ச் 3

Leaving that alone, we have got a beautiful speech by the Hon. Chief Minister. I have no quarrel about it ; the speech is an excellent one as many Budget speeches have been in the past. But, what is there? Is there implementation? If it is not implemented and administered properly, there is no use of the budget speech

So far as the State is concerned, issue of ration cards is in a mess. People who had applied in last February have not yet got their cards in February 1975 even. They have to go to the Ration Office many times. Inspectors say 'we will come and check'. But nobody comes and there is a big queue even today and if you go to the Jemmi building you can see the big crowd there. The applications were made some 6 or 9 months back. Even if one gets the ration card after much difficulty, the shops are refusing to issue rations. May I submit that if you will excuse me, there are employees in the Government Ration Shops who are today worth some lakhs. How? You can examine. What I say is absolutely correct. There is mal-administration and mismanagement. When you go and ask, they say there is no stock. Supposing you ask for a soap; it is not there. But if a merchant comes and asks, he is given 50 soaps. This is how administration goes on.

What is the use of a budget speech, if things are not properly administered? That is my question. Similarly, the shop-keepers and the hotel-keepers are buying large quantities. But there are some good persons also. But some of them produce a number of ration cards and get rice and sell in black market. There is nobody to check this. How many pawn brokers in Burkit Road possess large number of ration cards? You can go and check and they have hundreds of ration cards and they get rice on them. This is the way administration is carried on. I do not accuse the Ministry here. But the administration does not function properly. The rules are there wonderful and correct, but not implemented.

So far as the City is concerned, I have to congratulate the Special Officer of the Corporation. He has been trying to get water for the City from various sources. His first arrangement



1975 மார்ச் 3]

was to give water to the slums. Otherwise, there would have been epidemics. If the slums had not been supplied water, by this time, there would have been epidemics......

மாண்புமிகு திரு. என். ராஜாங்கம்: தலைவர் அவர்களே, ஏழை மக்களுக்காக அரசாங்கம் எல்லோருக்கும் கார்டுகள் வழங்கி அதிலே தானியங்கள் மட்டுமல்லாமல் சர்க்கரை முதலிய முக்கியமான பொருள்களையும் வழங்கி வருகிறது. என்னுடைய அனுபவம், நாங்கள் கண்ட அனுபவம் ஏழை மக்கள் 5, 20 பேர் சேர்ந்து, ஏன் 100 பேர் கூட ஒரு வட்டத்தில் ஒன்ருகச் சேர்ந்து கார்டுகளை முதலாளிகளிடத்திலோ, மற்றவர்களிடத்திலோ விற்று விடுகிருர்கள். அரசாங்கம் ஏழைகளுக்கு அரிசி கொடுக்கவேண்டுமென்று சிரமப்பட்டு கார்டுகள் கொடுத்தும் அவர்கள் இப்படிச் செய்து விடுவதை அதிகாரிகள் கண்டுபிடித்து நடவடிக்கை எடுப்பதிலே ரொம்ப சிரமப்படுகிருர்கள். பல இடங்களில் மேலும் கார்டுகள் வழங்க வேண்டுமென்று கேட்கிருர்கள். புகார்கள் வந்த இடங்களுக்கு நானே சென்று—எனக்கு அந்த அதிகாரம் இல்லையென்ருலும் விசாரணை செய்தேன். இந்த நாட்டின் நன்மைக்காக நானும் அந்த வேலையைச் செய்து கொண்டிருக்கிறேன். மக்கள் எல்லாம் திருந்தி மனமாற்றம் பெற்று ஒத்துழைத்தால்தான் முடியும், அரசாங்கம் மட்டும் இந்தக் காரியங்களை எல்லாம் செய்து விட முடியும் என்று எதிர்பார்க்க முடிமுடியாது அரசாங்கத்தோடு மக்களும் ஒத்துழைக்க வேண்டும்.

THIRU K. M. SUBRAMANIAM : Very, very glad. If all the people are good, there need not be administration at all.

திரு. ஏ. சுப்பிரமணியம்: பட்ஜெட்டின் மேல் விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. பட்ஜெட்டை வழங்கிய முதலமைச்சரைக் காணும். பல்வேறு துறைகளைப் பற்றிய விமர்சனங்கள் இங்கே சொல்லப்படும். அந்தந் துறை சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் யாரையும் இங்கே காணும். ஒரே ஒரு அமைச்சர் மட்டும் இன்று 'லோன் சென்டினல்' ஆக உட்கார்ந்து கொண்டிருக்கிருர்கள். இது சரியா? முதலமைச்சர் இல்லை, முக்கியமான துறைகளின் அமைச்சர்கள் யாரும் இல்லை. ஒரே ஒரு அமைச்சர் மட்டும் டிரஷரி பெஞ்சில் உட்கார வைத்துவிட்டுப் போய்விட்டது இந்த அவைக்குரிய மரியாதையாக இல்லை. இதைப்பற்றித் தலைவர் அவர்களுடைய தீர்ப்பை அறிய விரும்புகிறேன்.

MR. DEPUTY SPEAKER : The Cabinet has got collective responsibility. The Hon. Minister Thiru Rajangam is now present in the House.

[1975 மார்ச் 8

DR. H. V. HANDE : Under these circumstances, whenever such unfortunate situation arose in the Lok Sabha, the practice of the Presiding Officer had been to pull up the Cabinet and give a hint as innocuously as possible to see that more members of the Cabinet were present in the House. At least in the first day of the discussion of the Budget an impression must be created here and outside that the Cabinet is taking its own Budget seriously. This is only a suggestion to the Hon. Deputy Speaker. Ultimately the Deputy Speaker has his own choice. I would suggest that the Deputy Speaker gives a sort of indication that more members of the Cabinet should be present and occupy the seats here and take the members more seriously.

MR. DEPUTY SPEAKER : I think the Hon. Chief Minister and other Ministers are engaged in the Business Advisory Committee meeting. (DR. H. V. HANDE : It is over) I don't think so. However, it is desirable that the other Ministers who have no other work attend the Assembly.

DR. H. V. HANDE : The Business Advisory Committee meeting was over. All of them have already come out. In spite of so much discussion taking place in this House, not a single Minister has rushed in. If such a discussion takes place in the Lok Sabha, in one minute the Ministers will rush in there. The Ministers have got mikes in their rooms. In spite of the fact that they are able to listen to the discussion that is taking place, not a single Minister has come.

MR. DEPUTY SPEAKER : It is desirable for the Hon. Ministers to be present in the House when the Budget is discussed, provided they have no other work. Hon. Minister Mr. Rajangam is looking after the interest of the whole Cabinet here.

THIRU A. SUBRAMANIAM : I am not going to question your ruling. But you have put a proviso. You said that it would be advisable that all the Ministers were present here, provided they had no other work. To-day every Minister will have to work all the 24 hours. But that is not the criterion......



1975 மார்ச் 8]

MR. DEPUTY SPEAKER : We are unable to insist upon all the Hon. Members to be present here because they absent themselves on some excuse or other. The Hon. Ministers are also members here. They have so many items of work to do and they keep somebody to represent them here. The Hon. Minister Mr. Rajangam is here to look after the interests of the Cabinet (Hon. Thiru Mannai Narayanaswamy was just entering the Chamber). Now the Hon. Minister Mr. Mannai Narayanaswamy has come and I think the Hon. Ministers will be coming one by one and they will respect the sentiments expressed by the Hon. Members here. Let the hon. Memeber Thiru K. M Subramaniam proceed with his speech.

**மாண்புமிகு திரு. என். ராஜாங்கம் :** தலைவரவர்களே, நான் உறுப்பினர்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நேற்று என்னுடன் 5 அமைச்சர்கள் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வந்தார்கள். இரவு 12 மணிக்கு மேல் கஷ்டப்பட்டு எந்தெந்த வகையிலேயோ இங்கே திரும்பி வந்து சேர்ந்தோம். அந்த முறையில் அவர்களுக்கு வேறு வேலை இருக்கலாம். இங்கு இருக்கக் கூடாது என்பதல்ல. பொறுப்புள்ள அமைச்சர்கள் அப்படி இருக்க மாட்டார்கள். உறுப்பினர்கள் கேட்டது சரி. நாளையிலிருந்து அமைச்சர்கள் வருவார்கள். அமைச்சர்கள் இங்கே இருந்தால் உறுப்பினர்கள் அடங்கிப் பேசுவார்கள். இப்போது அமைச்சர்கள் பல பேர்கள் இல்லாத நிலையில் உறுப்பினர்கள் தாராளமாகப் பேசலாம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவரவர்களே, சட்டசபை நடக்கும் போது 5 அமைச்சர்கள் இராமநாதபுரத்திற்கு மொத்தமாகப் போகலாமா, இங்கே ஏதோ நடந்தது என்றால் என்னவது ?

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** நேற்று ஞாயிற்றுக்கிழமை, விடுமுறை நாள். வறட்சிப் பகுதிகளைப் பார்க்கத்தானே சென்றார்கள். அம்மையார் அவர்கள் வறட்சிப் பகுதிகளைப் பார்க்கச் செல்லக் கூடாது என்று சொல்கிறார்களா ?

**திருமதி. த. ந. அனந்தநாயகி :** தலைவரவர்களே, 5 பேர்கள் மொத்தமாகச் செல்வது அனாவசியச் செலவு என்று நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, 5 அமைச்சர்கள் போனார்கள் என்றால் வறட்சிப் பகுதிகளைப் பார்க்கப் போனார்கள் என்று இல்லை. நான் வேறு வேலையாகப் போயிருந்தேன். மருதா நதி, கொடகனாறு

[திரு. ப. உ. சண்முகம்] [1975 மார்ச் 8

திட்டங்கள் எப்படி நடக்கின்றன என்பதைப் பார்க்கப் போயிருந்தேன். உணவு அமைச்சரவர்கள் வறட்சிப் பகுதிகளைப் பார்க்கச் சென்றார்கள். ஒவ்வொரு அமைச்சரும் ஒவ்வொரு வேலையாகப் போயிருந்தோம். எல்லோரும் மதுரைக்கு ஆகாய விமானம் மூலமாகப் போனோம். அவ்வளவு தான்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, அரிஜனநல அமைச்சரவர்கள் சிரமப்பட்டுப் போய் வந்து சேர்ந்தோம் என்று சொன்னார்கள். வறட்சிப் பகுதிகளுக்குப் போய் பார்த்து விட்டு சென்னை வந்த பிறகு சட்ட மன்றத்திற்கு வரவில்லையென்றால் அது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, போன அமைச்சர்கள் எல்லோரும் வந்து சேர்ந்திருக்கிறோம். நானும் சென்றேன். உணவு அமைச்சரவர்கள் போனார்கள். எல்லோரும் திரும்ப வந்து விட்டார்கள்.

THIRU K. M. SUBRAMANIAM : I entirely endorse Hon. Mr. Rajangam's view on the matter of issue of ration cards. There are more than 2 lakhs ghost ration cards in the City, I am told. It may be more or it may be less. I am not an expert in possession of facts and figures. But I know one thing and that is, more than one lakh of people have not got ration cards. Because of the issue of these ghost ration cards, you cannot starve people. More than a lakh of people are not getting rice to-day. That is why I say that in spite of the earnest attempts of the Hon. Ministers unfortunately to-day the rice position in Madras is that more than a lakh of people have not got ration cards.

Secondly, during the last session we were told or it was announced in the floor of the House that there are ceiling prices for various kinds of rice. Up to now these ceiling prices have not come into effect. Nobody is selling at these ceiling prices. We are buying rice at Rs. 7.20 per measure, Nellore rice. Today this is the way things are going on. The enforcement is absolutely bad. Why talk about rice? We have got many examples. Take for example cement. Permits are issued to certain firms. I can give the names of those firms in this Assembly. For the last six months, there is no issue of cement by such firms against permits issued. Whenever the person who has got the permit goes there, he is told 'no stock'. What is this? Is there not Government looking after these things?



[Thiru K. M. Subramaniam]

Here Mr. Balasundaram, with great glory said that the Central Government is responsible for prices. The Central Government has got its own fiscal policy and its own economic policies. I do not deny that. But unfortunately when the prices were high in other States the prices were low in Tamil Nadu. Today when the prices have gone down in other States, the prices in Tamil Nadu have gone up. What is the reason? It is not shortage alone. You can say that there is rice shortage. You cannot say that there is shortage of soaps. The price of every commodity has gone up. Why, because enforcement is very bad. Administration is corrupt. Unfortunately I have to make these remarks. I think certainly the Government which is interested in toning up the administration will definitely go into my charges and see that proper justice is done.

Coming again to the water-supply about which I was talking, there has been very good work done in the City of Madras. I thank the Government for that. But mainly slums have been benefited. It is a good thing. If it had not been done for slums, there would have been epidemics. There would have been cholera in Madras. Perhaps, then the Assembly would not have sat here. But what is happening to the middle classes? The middle classes are finding it difficult. I only request the Government to see that something is done to the middle classes. Of course, I understand the difficulties of the Special Officer.

Coming to the other problems of the City, there is the question of malaria. There is National Anti-Malaria Department. Government of India has given Rs. 7.25 lakhs for anti-malaria business. They have given Rs. 0.85 lakh for urban anti-malaria projects. What has been done to eradicate malaria. Mosquitoes are increasing. With the water problem, we are foregeting all the other problems in the City.

All the interior roads are in a very bad condition, Mr. Deputy Speaker, Sir. Mr. Mannai Narayanaswamy knows about the condition of the interior roads. Nobody can drive a car in those roads, why take a car, people cannot walk. It is ages since they have been repaired. You are asking the Central Government for block grants. Can you not give Rs. 5 crores of block

grant to the City of Madras to repair the interior roads? Of course, you have got beautiful main roads like Mount Road, Poonamallee High Road, Nellore Road. All the Ministers know that interior roads are very bad. They belong to the common man and I know they know what is being done.

But what is being done and there is no provision for that in this Budget and the Hon. Thiru Narayanaswamy knows it. I request the Hon. Chief Minister to allot 5 crores of rupees for their improvement.

***மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:*** தலைவரவர்களே, அதற்காக கிராண்ட் வாங்கவில்லை என்று சொன்னாலும், அந்த சின்ன ரோடுகள், இன்னமும் உள்புறமாக உள்ள ரோடுகளை எல்லாம் கார்ப்பரேஷன் தனியாகச் செய்துகொண்டு இருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM : I thank the Hon. Thiru Nartyanasmay. I know every year a sum of 70 lakhs of rupees is spent on road repairs. With Rs. 70 lakhs the Government cannot repair even two or three miles of road......

MR. DEPUTY SPEAKER : The hon. Member has already taken 20 minutes......

THIRU K. M. SUBRAMANIAM : Every Member is allowed 20 minutes but there is a lot of interruption in the course of my speech. I may be allowed another ten minutes.

MR. DEPUTY SPEAKER : No. The hon. Member can take five more minutes to finish his speech.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, we are discussing the speech and in that speech the Central Government has been accused as if they have done something wrong and as if no assistance or help is given by them. We are now asking for drought relief from them. Last time we got money from them. We used to do drought relief work through contracts and what a waste was it! Suppose the Central Government give Rs. 55 crores and you pump it into the drought-affected areas. With shortage of food this extra money would only push up the prices. This is elementary economics. This is not major economics. There



is an alternative and that is, you give work to the people and give 50 per cent of the wages in the form of rice and the balance in cash. Then only the relief will reach the people affected by drought. They cannot eat your note or cash. They want food. So, you should ask the Central Government with vehemence that they should give food to the people who are starving to-day.

Now, take the Electricity Board and it has failed miserably. People say that it is bad management but I say that it is not bad administration. There is the possibility of its improvement. You have asked the Board to charge only two paise per unit for the Aluminium Company. Now the Central Government have imposed an excise duty of Rs. 2,000 per tonne but the selling price is Rs. 5,000 per tonne. To-day's international price is Rs. 15,000 per tonne. The State Government should ask the Centre to pass on the amount collected by way of this excise duty to the Electricity Board.

Now so far as the City Corporation is concerned, apart from roads, in many places constructions are taking place without sanction of plans and the Special Officer is not able to look into them. There are also obstructions in the streets. Unless election is held to the Madras Corporation and people's representatives are sent there, these things cannot be set right. If the elections to the Madras Corporation are delayed, an impression may be created that it would be better to abolish the Assembly, the Lok Sabha, etc. and the administration can be run by a single individual. That impression should not be created.

There was a proposal mooted in 1953 for the construction of an I.D. Hospital in South Madras. I do not know what has happened to it. Suppose somebody in Guindy is attacked by cholera and if he has to be taken to Tondiarpet it is possible that he may die on the way. So it is necessary that the Government should start a new I.D. Hospital in South Madras.

Now that the Hon. Minister for Industries is here I want to refer to the joint sector. There is a proposal to have cigarette factory in the joint sector. Why should there be such a factory when there are not sufficient cycles, fans, bulbs and other essential articles in the country. Should priority be given to this factory?

Also, hereafter the State Government which claims to be a socialistic Government should nationalise such industries or start joint undertakings to be run by both the Central and State Governments. That would be very good.

I have to thank the Central Government for increasing the excise duty on fine yarn. . . .

MR. DEPUTY SPEAKER : Why should we thank the Central Government for raising the tax and that is not our province.

THIRU K. M. SUBRAMANIAM : By increasing the price of fine yarn to power-looms and Mills our handloom saree manu- have been benefited. Are we not to thank the Central Government for this? We have to thank them for their many taxation proposals. We must also express our thanks to the Central Government for their grant-in-aid of about Rs. 77 crores and loan in spite of their financial difficulties.

இனிமேலாவது இராமர் படத்தை எரிக்காமல் இருந்தால் மழை வரும் என்று மக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லி, என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

### 3. அமைச்சரின் விளக்க உரை.

### டாக்டர் எச். வி. ஹாண்டே குறிப்பிட்ட ஒரு வழக்கு பற்றி மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சரின் விளக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விதி 82-ன் கீழ் மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைத் தருவார்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த மன்றத்தில் டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது ஒரு வழக்கு எண்ணைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். 1022/72-ம் எண்ணில் ஒரு வழக்கு ராஜமாணிக்கம் என்பவர் மீது போடப்பட்டதாகவும், அது திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகவும் சொன்னார்கள். அதற்கு மேல் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். அதில் அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்களைச் சம்பந்தப்படுத்திப் பேசினார்கள். அந்த வழக்கு அரிசி-நெல் கடத்தல் சம்பந்தமானது என்றும், அதையொட்டி ராஜமாணிக்கம்



என்பவர் மீது வழக்கு போடப்பட்டதாகவும், அதைத் திரும்ப அரசாங்கம் பெற்றுக்கொண்டதாகவும் ஒரு நோக்கத்தோடு அவர்கள் கருத்துச் சொன்னார்கள். சென்டிரல் ரயில்வே போலீஸ் கேஸ் போட்டது என்றும் சொன்னார்கள். அது பற்றி விளக்கம் சொல்லவில்லை. அது பற்றி விசாரிக்கப்பட்டதில், சென்டிரல் ரயில்வே போலீஸ் ஸ்டேஷனில் 1022/72 என்ற வழக்கு போடப்பட்டு இருக்கிறது. அந்தக் குற்றவாளியின் பெயர் ஜார்ஜ் (அலியாஸ்) ராஜன். குற்றம், திருட்டுக் குற்றம். தெப்ட் ஆப் சூட்கேஸ் என்று வழக்கு போடப்பட்டு, இறுதியில் நீதி மன்றத்தில் 6 மாதம் தண்டனை கொடுக்கப்பட்டு இருக்கிறது. இது தான் உண்மை. உண்மைக்கு மாறாக அவர்கள் இங்கே சொன்னது ரொம்பவும் வருத்தக்கூடிய செய்தியாகும்.

DR. H. V. HANDE : There is the report also by Mr. Vaikunt. It is a 24 page report.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : The House should not be given wrong information.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நான் என்ன சொன்னேன் என்றால் சிப் பிரசிடென்சி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் தொடரப்பட்டிருக்கிற கேஸ் என்று சொன்னேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எதை வேண்டுமானாலும் சொல்லுங்கள். 1022/72 என்று ரொம்பத் திட்டவட்டமாகக் குறிப்பிட்டீர்கள். தவறாகக் குறிப்பிட்டு நாட்டைக் குழப்பக்கூடாது.

**திரு. ஆலடி அருணா :** பாயிண்ட் ஆப் ஆர்டர். எங்கள் கட்சியைச் சார்ந்த ஒரு உறுப்பினர் ஒன்றைச் சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள். பத்திரிகையில் சிப் பிரசிடென்சி மாஜிஸ்ட்ரேட் கோர்ட் வழக்கு என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதைத் தான் இங்கே சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் :** அங்கத்தினர் சொன்னதற்கு அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள். நாளைக்கு வேண்டுமானால் பார்த்து நீங்கள் பதில் சொல்லுங்கள்.

**திரு. ஆலடி அருணா :** அதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் :** நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ஆலடி அருணா :** It is rightly partial.

MR. DEPUTY SPEAKER : No. There is no point of order The hon. Member Thiru Aladi Aruna may resume his seat.

*திரு. ஆலடி அருணா: சார். . .*

MR. DEPUTY SPEAKER : Mr. Aladi Aruna is not giving a statement as spokesman of the party because there is a leader and deputy leader for that party here. A member of his party has given some facts. That has been refuted by the Hon. Minister. Therefore it is upto the hon. Member to collect some more information and give it sepearately. So, Mr. Aladi Aruna has nothing to do with this matter. He can resume his seat and Mr. Duraisami can continue his speech.

DR. H. V. HANDE : May I submit one thing, Sir. Let us not be passionate and emotional about the whole thing.

MR. DEPUTY SPEAKER : We are not passionate at all.

DR. H. V. HANDE : I am trying to say something to help the Chair. A member comes up with a point of order under our rules. The Hon. Minister **has given his version.** My point is that another member if he has information, can give those additional points. He may be given an opportunity to do so. While I was speaking, by raising a point of order on the Hon. Minister's reply, the hon. Member Aladi Aruna gave some new information. Similarly this time also what he wanted was to seek a clarification from the Chair. He may be allowed a minute so that he could place additional facts before the House,

**திரு. ஆலடி அருணா:** *பத்திரிகையில் வழக்கு செய்தி வந்தது. அதைத் தான் இங்கே சொன்னார்களே தவிர நாங்கள் ஏதோ தவறாகச் சொல்வதாகக் கூறக்கூடாது.*

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** *நீங்கள் எவ்வளவு அவகாசம் வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள். ஆனால் தவறான கருத்தை இங்கே சொல்லக்கூடாது.*

**திரு. ஆலடி அருணா:** *அமைச்சரவர்கள் தவறான கருத்து என்று சொன்னார்கள். அதனால்தான் பாயிண்ட் ஆப் ஆர்டர்.*



**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்:** *உறுப்பினர் கொடுத்தது ஒரு தகவல். அது சரியான தகவல் இல்லை என்பதை அமைச்சர் விளக்கி விட்டார். நீங்கள் சரியான தகவலை இங்கே கொடுங்கள் என்பதைச் சொல்லியாகிவிட்டது. இதை மீறி ஏன் அவையின் நேரத்தை வீணாக்குகிறீர்கள்.*

**திரு. செ. கந்தப்பன்:** *பாயிண்ட் ஆப் ஆர்டர். தலைவரவர்களே, ஒரு பத்திரிகையில் வந்த செய்தியை உறுப்பினர் சட்டமன்றமாக இருந்தாலும், நாடாளுமன்றமாக இருந்தாலும் தானும் சரியா என்று தெரிந்துகொண்டு அதன்பிறகு தான் இங்கே பேசவேண்டுமென்று ஒரு விதி இருப்பதாக நான் கருதுகிறேன். அது தான் ஆரோக்கியமான முறையுங்கூட. அப்படி இருக்கும்போது பத்திரிகையில் வருவதை அப்படியே இங்கே சொல்வதை நீங்கள் அனுமதிக்கப் போகிறீர்களா அல்லது "வெரிபை" செய்ததற்குப் பின்னால்தான் சொல்லவேண்டும் என்பதை அனுமதிக்கப் போகிறீர்களா என்று அறிய விரும்புகிறேன்.*

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** *என்னைப் பொறுத்தவரையிலும் பத்திரிகையில் வந்திருக்கிறது என்று நான் சொல்லவில்லை. எனக்குக் கிடைத்த தகவல்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.*

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்:** *ஆலடி அருணாவைப் பற்றித்தான் அவர் சொன்னார்.*

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, in all these things we must get clear answer from the Hon. Minister. When the hon. Member Dr. Hande spoke I heard him speaking 1022/72 on the file of the Chief Presidency Magistrate, whereas the Hon. Law Minister is giving information about railway police case.

MR. DEPUTY SPEAKER : I have heard him properly. The hon. Member Dr. Hande referred to crime in Central railway police station and not the one before the Chief Presidency Magistrate.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** *அம்மையார் சரியாகக் கவனிக்கவில்லை போலிருக்கிறது. இது கோர்ட்டிலே கன்விக்ஷன் ஆகி இருக்கிறது. இந்தக் கோர்ட்டிலே 6 மாதம் கன்விக்ஷன் ஆகி இருக்கிறது என்று சொன்னார்கள். அதை மாண்புமிகு உறுப்பினர் ஆலடி அருணாவும் கவனிக்கவில்லை போலிருக்கிறது.*

**திருமதி த. ந. அனந்தநாயகி:** மாமியார் சொல்லும்போது, என்னுடைய மகள் இந்த வெள்ளிக்கிழமை குளித்தால் அதோடு அடுத்த வெள்ளிக்கிழமை தான் குளிப்பாள்; ஆனால் என்னுடைய மருமகள் தீபாவளிக்குத் தீபாவளி தவறாமல் குளிப்பாள் என்று சொல்வாள், என்பதுதான் சரியான பழமொழி. கனம் அங்கத்தினர் பழமொழி சொல்லும்போது சரியாகத் தெரிந்து சொன்னால் நல்லது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரியான கதையைச் சொன்னதற்காக அம்மையார் அவர்களுக்கு நன்றி.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** மாண்புமிகு உறுப்பினர் 'மாமியார் உடைத்தால் மண் குடம், மருமகள் உடைத்தால் பொன் குடம்' என்ற அர்த்தத்தில் சொல்லியிருப்பார் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அவருக்கு கதை சரியாகத் தெரியாது; இப்போதுதான் கலியாணம் செய்திருக்கிறார் (சிரிப்பு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தலைத் தீபாவளிக்கு போய் வந்திருப்பார் என்று நினைக்கிறேன் (சிரிப்பு).

**திரு. சு. துரைசாமி:** மாநில அரசு 6 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருப்பது பற்றிக் குறை சொல்லிவிட்டு, மத்திய அரசு 250 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருப்பது பற்றிப் பாராட்டுத் தெரிவிப்பது எவ்வளவு முற்போக்கான கருத்து என்பதை இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய அரசைப் பொறுத்த வரையில் செய்திருக்கிற முற்போக்கான காரியங்களைப்பற்றி நாம் நன்றாக அறிவோம். இந்த நிதி நிலை அறிக்கையில் முதலமைச்சரவர்கள் கோவை மாவட்டத்திற்கு உடனடியாகச் செய்யக்கூடிய வேலையாக பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தில் 89,000 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி செய்ய முயற்சி செய்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, 89,000 ஏக்கர் பாசன வசதித் திட்டத்தை வறட்சி நிவாரணப் பணியாக உடனடியாக வேலை தொடங்கக்கூடிய முறையில் மிகப் பயனுள்ள திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்த 89,000 ஏக்கர் என்பதில் இன்னும் 20, 25 ஆயிரம் ஏக்கர் கூடுதலாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



கோவை மாவட்டத்தில் மிக வறண்ட பகுதி பல்லடம் பகுதியாகும். அந்த பல்லடம் பகுதியில் 16,000 ஏக்கர் பாசன வசதி பெறுவதை 24, 25 ஆயிரம் ஏக்கர் என்ற அளவுக்கு உயர்த்த வேண்டுகிறேன். பல்லடம் வட்டத்தில் மேலும் 10, 12 ஆயிரம் ஏக்கர் நிலத்தைப் பாசன வசதியின் கீழ் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் 5 நிமிடங்களில் முடித்துவிடுங்கள்.

**திரு. சு. துரைசாமி:** நான் 1.05-க்கு பேசத் தொடங்கினேன். இடையிலே என்னென்ன நடந்தது என்பது தங்களுக்குத் தெரியும். ஆகவே, இன்னும் 15 நிமிடங்கள் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தைப்போலவே ஆனைமலையாறு திட்டம் இருக்கிறது. அதை பக்கத்திலிருக்கிற அண்டை மாநிலத்தோடு பேசி, ஆனைமலையாறு தண்ணீரையும் பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்துடன் சேர்த்துக் கொடுத்தால் மேற்கொண்டும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கோவை மாவட்டத்திற்குப் பயன்படும் திட்டமாக பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் இருக்கிறது. இத்திட்டத்தினால் கோவை மாவட்டத்தில் பல்லடம், அவிநாசி வட்டங்களிலுள்ள மக்கள் பெரிதும் பயனடைவார்கள். அதையும் கேரள அரசோடு பேசி, பாண்டியாறு-புன்னம்புழாத் திட்டம் தமிழ்நாட்டுக்குப் பயன் அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதனால் கோவை மாவட்டத்தில் வறண்ட பகுதிகளான பல்லடம், அவிநாசி வட்டங்கள் பெரிதும் பயன்படும். அதற்கான நடவடிக்கைகளை விரைவில் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு திருப்பூர் நகருக்கு மேட்டுப்பாளையத்திலிருந்து குடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அந்த நகர மக்கள் தொகைக்கு அது போதாது. ஆகவே, இரண்டாவது ஒரு குழாய் அமைத்து அதிகப்படியான தண்ணீரைக் கொண்டுவந்தால் அங்குள்ள மக்களின் குடிதண்ணீர் கஷ்டத்தைப் போக்க முடியும். அதற்கு குடிநீர்-வடிகால் வாரியம் சிறப்பான முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே திருப்பூர் நகரில் பாதாள சாக்கடைத் திட்டம் செயற்படுத்தப்பட்டு, அதன் பயனை அங்குள்ள மக்கள் அனுபவிக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில் இன்று காலையில் கூட அமைச்சரவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது கூறினார்கள் திருப்பூர் நகரில் ஒரு தொழிற்பேட்டை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். அதைப் பாராட்டுகிறேன். அங்கு அமைய இருக்கின்ற தொழிற்பேட்டையினால் அங்குள்ள மக்களுக்கு விரைவில் வேலைவாய்ப்பு அளிக்க துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு அகில இந்தியாவிலேயே நம்முடைய தமிழ்நாட்டில்தான் அதிகமான அளவுக்கு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது; 2,254 மெகாவாட் உற்பத்தி செய்கிறோம். என்றாலும் தமிழ்நாட்டின் தேவை அதிகமாக இருப்பதால் அது போதவில்லை. அதனால் மேற்கொண்டு மின்சாரத்தை எந்த அளவுக்குப் பெருக்க முடியும் என்பது பற்றித் திட்டமிட வேண்டும். அனல் மின்சார உற்பத்தியும், அணு மின்சார உற்பத்தியும் பெருகக்கூடிய முறையில் மேற்கொண்டு பல திட்டங்களை நிறை வேற்ற அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

சாலைகளைப் பொறுத்த வரையில், நம்முடைய அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு சாலைகள் போடும் நீளம் மைல் கணக்கில் பெருகினாலும் சாலைகளைச் சீரான முறையில் தார் போட்டு, செப்பனிட்டு பராமரிக்கும் பணிக்குப் போதுமான நிதி வசதி செய்யவில்லை. 500 மைல் தூரம் இருந்த போது பராமரிப்புக்கு ஒதுக்கிய அளவே இப்போதும் ஒதுக்கினால் பாதைகளைச் சரியான முறையில் செப்பனிட முடியாது; ஆகவே, அதிகமான நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்தவரையில், இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொள்வதற்கு முன்னால் 44 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்க, இன்றைக்கு 118 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது, பெருமைப்படக்கூடிய ஒன்று. இந்த அளவுக்கு அதிகமான தொகை ஒதுக்கப்படுவதின் காரணமாக தமிழ் நாட்டு மக்கள் நல்லமுறையில் கல்வி வசதி பெற்றிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் கூட ஆண்கள் கலைக்கல்லூரி ஒன்று, பெண்கள் கலைக்கல்லூரி ஒன்று என்று இரண்டு கலைக்கல்லூரிகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதனால் கிராமப்புற மக்கள் கூட கல்லூரியில் படிக்கும் வசதியும் வாய்ப்பும் ஏற்பட்டிருக்கிறது.





இன்னொரு கருத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய முதலமைச்சரவர்கள் அடிக்கடி குறிப்பிட்டிருக்கிறார்கள்; இந்த மன்றத் திலேயும் குறிப்பிட்டிருக்கிறார்கள்; வெளியிலேயும் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் சாதாரண மக்களுக்குப் பாடுபடுவதற்காக பந்தயக் குதிரையைப்போல் வேகமாக ஓடுகிறேன். என்னோடு பணியாற்றும் அரசாங்க அதிகாரிகள் அந்த அளவுக்குப் பணியாற்ற வேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள்.

ஆனால், நிதி இலாகாவில் இருக்கிற ஒரு சிலர் அப்படி இல்லை என்று குறிப் பிட விரும்புகிறேன். திருப்பூர் நகரில் இருக்கிற பெண்கள் கலைக்கல்லூரிக்கு ஒரு விடுதி கட்ட வேண்டுமென்று கோரிக்கை வந்தது. கோவை மாவட்டத் திலேயே பெண்களுக்கு என்று இருக்கிற ஒரே ஒரு அரசாங்கக் கல்லூரி திருப்பூர் நகரில் இருப்பதுதான்; வேறு எங்கும் கிடையாது. அந்தக் கல்லூரிக்கு மாணவியர் விடுதி கட்டவேண்டுமென்று கோரிக்கை வந்தபோது, தமிழ்நாடு முழுவதும் எந்தெந்த இடங்களில் எல்லாம் கட்டவேண்டுமென்று நிதித் துறையிலிருந்து கேட்கப்பட்டு, கடந்த 6, 7 மாதங்களாக ஃபைல் அரசாங்கத்திற்கு வருவதும், கல்வி இலாகாவுக்குப் போவதுமாக இருக்கிறது. கோவை மாவட்டத்திலேயே வேறு பல கல்லூரிகள் இருந்தாலும் அவை யெல்லாம் தனியார் கல்லூரிகள். தனியார் கல்லூரிகளுக்கு விடுதி வேண்டு மென்றால் அவர்களே கட்டிக் கொள்வார்கள். குறிப்பிட்ட இந்த ஒரே ஒரு கல்லூரிக்குத்தான் விடுதி கட்ட வேண்டுமென்று தெரிந்தும் நிதித் துறையி பவர்கள் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்காமல் எல்லாக் கல்லூரி விபரங்களையும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக அங்கே மாணவியர் விடுதி கட்ட உத்தரவிட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப் பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல பாடுபடுகின்ற உழவர் பெருமக்களுக்கு அவர்கள் விளைவிக்கின்ற விவசாயப் பொருள்களுக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை. அவர்கள் பருத்தி விளைவிக்கின்ற நேரத்தில் பருத்திக்கு நியாயவிலை கிடைப்பதில்லை. அதேபோல சோளம் பயிரிடுகின்ற நேரத்தில் சோளத்திற்கு நியாயவிலை கிடைப்பதில்லை. இப்படியின்றி விவசாயப் பெருமக்கள் பயிரிடுகின்ற விவ சாயப் பொருள்கள் அனைத்திற்கும் நியாயமான விலை கிடைப்பதற்கு வழி செய்தால்தான் அவர்கள் உற்சாகத்தோடு பணியாற்ற வாய்ப்பு ஏற்படும். அதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவோடு தெரி வித்துக்கொள்கிறேன். இன்று கோவை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் எம்.சி.யு. 5 என்கிற பருத்தி ரகத்தைப் பயிரிடுகிறார்கள். அது நல்ல

ரகம்தான். ஆனால், அதற்குப் போட்டாக வேண்டிய உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள் எந்தச் சந்தர்ப்பத்திலும் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வழியைச் செய்தாக வேண்டும்.

கால்நடை வளர்ச்சியைப் பொறுத்த வரையில் தஞ்சை மாவட்டத்தில் டென்மார்க் பால் இனப் பசுக்களை விருத்தி செய்வதாகச் சொன்னார்கள். அதைப்போல கோவை மாவட்டத்திலும் பால் இனப் பசுக்களைப் பெருக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, கோவை மாவட்டம், பல்லடம் வட்டம் இன்றைக்கு பட்டுப் புழு வளர்ப்பில் முன்னணியில் இருக்கிறது. அது ஒரு வறண்ட பகுதி. அங்கே பட்டுப்புழு வளர்ப்புக்கு ஒரு சிறப்புத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் சர்க்கரை ஆலை வருவதாக அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கொடுமுடி, ஈரோடு வட்டம், பவானி பகுதியில் மேலும் ஒரு சர்க்கரை ஆலையை அமைக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவை நகரிலிலேயே நெரிசல் மிகுந்த பகுதி வடகோயம்பத்தூர். அங்கேயுள்ள ரெயில்வே கேட்டை அடிக்கடி மூடுவதும், திறப்பதுமாக இருப்பதனால் போக்குவரத்து மிகவும் தடைபடுகிறது. ஆகவே, அங்கே ஒரு மேம்பாலம் கட்டித்தர வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

கோவை மாநகரின் மத்தியில் சென்டிரல் ஜெயில் இருக்கிறது. அந்தச் சிறைசாலையை வேறு இடத்திற்கு மாற்றினால் அங்கே ஒரு பெரிய மார்க்கெட்டையே ஏற்படுத்த முடியும். மக்களுக்கும் மிகவும் உதவியாக இருக்கும். அந்த சென்டிரல் ஜெயிலை வேறு இடத்திற்கு மாற்ற தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

கோவை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகிற மக்காச்சோளத்தை சத்துணவாகத் தயாரிப்பதற்கு அங்கே ஒரு தொழிற்சாலையை உருவாக்கும் திட்டம் இருப்பதாக கடந்த ஆண்டு சொன்னார்கள். ஆனால் அதற்கான முயற்சி குறைந்திருப்பதாக உணர்கிறேன். அதை வேகமாக—உடனடியாக ஏற்படுத்தித் தர நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தாழ்மை கேட்டுக்கொள்கிறேன்.



கடைசியாக, பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் வாயிலாக ஒரு கருத்தைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பெரும்பான்மையாக இருக்கக்கூடிய மக்கள் கொங்கு வேளாளர் சமூகத்தைச் சார்ந்தவர்கள். இவர்கள் அங்கே விவசாயத் தொழிலில் ஈடுபட்டு மிகப் பின்தங்கிய நிலையில் இருந்து வருகிறார்கள். ஆலைகளில் கீழ்நிலைத் தொழிலாளர்களாக அதிகம் இருக்கிறார்கள். ஆனால் கல்லூரிப் படிப்பு என்று வந்தாலும், அரசாங்க உத்தியோகம் என்று வந்தாலும் இவர்களை முற்போக்குச் சமுதாயம் என்று கருதி அதற்கான சந்தர்ப்பங்கள் எல்லாம் மறுக்கப்படுகிறது.

மில்லுக்குச் சொந்தக்காரர்—கோடிக்கணக்கில் சொத்தைச் சேர்த்து வைத்திருப்பவர்—பின்தங்கிய சமூகம் என்பதாக தம் பிள்ளைகளுக்குக் கல்லூரிகளில் இடம் பெற முடிகிறது. அரசாங்கப் பணிகளில் இடம் பெற முடிகிறது. ஆனால் கவுண்டர்களின் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு அந்தச் சலுகைகள் மறுக்கப்படுகின்றன. இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரவேண்டும் என்று கோவை நகர மாணவர்கள் கூடித் தீர்மானங்கள் போட்டிருக்கிறார்கள். இந்த மன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கம் அந்தத் தீர்மானங்களைப் பரிசீலனை செய்து கொங்குவேளாளர் சமூகத்தையும் பிற்பட்ட வகுப்பில் சேர்த்துக்கொள்ள ஆவன செய்ய வேண்டும் . . . .

### (4) மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் திருத்த அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் ஆகிவிட்டது. அடுத்ததாக பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் விதி 82-இன் கீழ் இந்த அவைக்கு ஓர் அறிவிக்கை கொடுப்பார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள் இங்கே இருப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். இல்லை. இருந்தாலும் இந்த அவைக்கு நான் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். காலையில் இங்கே ஒரு விவாதம் நடைபெற்றபோது திருக்கோவிலூரைச் சேர்ந்த திரு. அப்துல்சலாம் அவர்களுக்கு—நெல்லை வெள்ளம் அடித்துக் கொண்டுபோய்விட்டது என்று அவரே சொன்ன பிறகு காண்டிராக்ட் கொடுக்கப்பட்டதா? அதற்கு முன்பு கொடுக்கப்பட்டதா என்று கேட்டதற்கு முன்பும் கொடுக்கப்பட்டிருக்கிறது. பின்பும் கொடுக்கப்பட்டிருக்கிறது, எஸ்டி

[திரு. கு. ஆ. பொம்மன்] [1975 மார்ச் 3

அந்த நிலத்தை சாகுபடிக்குக் கொண்டுவர—கூட்டுறவு முறையில் ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லி—கூட்டுறவுத் துறையில் அந்த நிலத்தை ஒப்படைக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு விண்ணப்பம் செய்திருந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மேலும் உங்களுக்கு எத்தனை நிமிடங்கள் உரையை முடித்துக்கொள்ள ஆகும்?

**திரு. கு. ஆ. பொம்மன்:** 15 நிமிடங்களாவது ஆகும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்போது நீங்கள் தொடர்ந்து நாளைக்குப் பேசுங்கள் இன்று இத்துடன் பேரவை நிகழ்ச்சிகள் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

## (5) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. *Statutory Rules and Orders*

104. Notification issued in G.O. Ms. No. 266, Co-operation, dated the 19th June 1974 in regard to an amendment to the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the table of the House under section 119(4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

105. Notification issued in G.O. Ms. No. 2162, Rural Development and Local Administration, dated the 5th October 1974 in regard to declaration of the areas forming the Kancheepuram local planning area. [Laid on the table of the House under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

106. Notification issued in G.O. Ms. No. 2163, Rural Development and Local Administration, dated the 5th October 1974 in regard to declaration of the areas forming the Yercaud local



planning area. [Laid on the table of the house under section 123(2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

107. Notification issued in G.O. Ms. No. 319, Co-operation, dated the 20th July 1974 in regard to an amendment to the Tamil Nadu Co-operative Land Development Bank (Miscellaneous Provisions) Rules, 1970. [Laid on the table of the House under section 38-A of the Tamil Nadu Co-operative Land Development Bank Act, 1934 (Tamil Nadu Act X of 1934).]

108. The Annual Report of the Tamil Nadu Public Service Commission 1972-73, issued with G.O. Ms. No. 3279, Public (Services), dated the 9th October, 1974. [Laid on the table of the house under Article 323(2) of the Constitution of India.]
of India .]

### B. *Reports, Notifications and Other Papers*

@ 29. An Introduction to the Budget for the year 1975-76 (English and Tamil).

@ 30. Statement of Posts and Scales of Pay for the year 1975-76.

@ 31. Annual Plan for the year 1975-76 — Budget Plan link (English and Tamil).

@ 32. New Schemes 1975-76 (Tamil).

@ 33. Demands for Grants and Detailed Budget Estimates for the year 1975-76 (Volumes I, II and III).

@ 34. Annual Financial Statement (Budget) of the Government of Tamil Nadu 1975-76 (English and Tamil).

@ 35. Detailed Budget Estimates of Revenue for the year 1975-76.

@ 36. Budget Memorandum 1975-76 (English and Tamil).

@ 37. Appendices to the Budget Memorandum 1975-76 (English and Tamil).

@ 38. Notice of Demands for Grants during the year 1975-76 (English and Tamil).

@ 39. Speech of Hon. Dr. M. Karunanidhi, Chief Minister of Tamil Nadu presenting the Budget for the year 1975-76 (English and Tamil).

@ 40. Appendices to the Budget Speech, for the year 1975-76 (English and Tamil).

---

@ Laid on the table of the house on 1st March 1975.



## இணைப்பு

[301-ம் பக்கத்தில் 147 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

(அ) ஆம்.

(இ) கீழ்க்காணும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன :—

(1) இயல்பான முறையில் ஏற்படும் காலியிடங்களை நிரப்புவதற்குட்பட்டு, மாநில, மண்டல அளவில் தொழில்நுட்பப் பணியாளர் இயல்பாகவே தொடர்ந்து வைத்து வரப்படுகின்றனர்.

(2) மலேரியா ஒழிப்புப் பணிகளைச் செயற்படுத்தும் பகுதிகளில், நிர்வாக, வேலை முறைத் தேவைகள் ஆகியவற்றை நிறைவு செய்யப் போதுமான நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

(3) மலேரியா ஒழிப்புப் பணிகளைச் செயற்படுத்தும் பகுதிகளில் செவ்வனே மேற்பார்வையிடுவதற்கு அதிகாரிகளை அனுப்பி வைப்பது அவசியமானது என்றும் முக்கியமானது என்றும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. மலேரியா ஒழிப்புப் பகுதிகளில் தற்போது பயன்படுத்தப்படும் பெரும்பாலான வண்டிகள் அனைத்தும், 1959 ஆம் ஆண்டில் மலேரியா ஒழிப்புத் தேசியத் திட்டம் தொடங்கப்பட்டபோது வழங்கப்பட்டவையாகும். அவை யாவும் தற்போது மிகவும் பழையனவாய் உள்ளதால், சாலையில் ஓட்டுவதற்கு அவற்றைப் பொருத்தமானவையாகச் செய்வதற்கு அதிகச் செலவு ஆகக்கூடும். பழுதடைந்த வண்டிகள் அனைத்தையும் பயனற்றவை என்று தள்ளிவிடுவதற்குச் சுகாதாரப் பணிகள்-குடும்பநலத் துறை இயக்குநர் நடவடிக்கை எடுத்து வருகின்றார். எனினும், பழைய வண்டிகளுக்குப் பதிலாக புதிய வண்டிகளை அரசுச் செலவில் வாங்குவது என்றால், மாநில அரசுக்கு அதிகமான நிதிச் சுமையை ஏற்படுத்தும். மலேரியா ஒழிப்புத் தேசியத் திட்டத்தின் கீழ் மலேரியா ஒழிப்புப் பணி மேற்கொள்ளப்படும் பகுதியில் பழைய வண்டிகளுக்குப் பதிலாகப் புதிய வண்டிகளை வாங்கும் பொறுப்பு மாநிலங்களைச் சாரும் என்று இந்திய அரசு தெரிவித்துள்ளது. இந்திய அரசு எடுத்துள்ள முடிவையொட்டி, பழைய வண்டிகளை மாற்றிவிட்டுப் படிப்படியாகப் புதிய வண்டிகளை வாங்குவது குறித்து அரசு கருதிப் பார்க்க வேண்டியுள்ளது.

(4) திட்டப்பணிகள் நடைபெற்று வருகிற பகுதிகளிலும், நோய் முனைப்பாக இருந்து திட்டப் பணி முடிக்கப்பட்ட பகுதிகளிலும் மலேரியா ஒழிப்புப் பணிகளை இம் மாநிலம் தற்போது மேற்கொண்டு வருகிறது.

*(5) இந்திய அரசு குறிப்பிட்டுள்ள பணிகளை அடிப்படைச் சுகாதாரப் பணியாளர்கள் புரிந்து வருகின்றனர். இந்திய அரசு வரையறுத்துள்ள பணிகளைத் தவிர, ஏனைய பணிகளைச் செய்யுமாறு அவர்கள் பணிக்கப்படவில்லை.*

(*a*) Yes

(*b*) The following steps have been taken :—

(1) Subject to filling up of vacancies arsing in normal course, continuity of technical personnel at State and Zonal level is normally ensured.

(2) Adequate financial provision is made to meet the administrative and operational requirements in the maintenance areas.

(3) It is recognised that mobility of officers is important and essential for efficient supervision in the maintenance areas. Almost all the vehicles now used in the maintenance areas were supplied at the inception of the National Malaria Eradication Programme in 1959. As they have now become very old, their road-worthiness could be maintained only at a very high cost. Action is being taken by the Director of Health Services and Family Planning to condemn all unservicable vehicles. However, their replacement by new vehicles at State cost will impose heavy financial burden on the State Government. The Government of India have informed that the responsibility for the replacement of the vehicles in the maintenance phase areas under the National Malaria Eradication Programme is that of the States. In view of the stand taken by the Government of India, the Government has to consider the replacement of vehicles in a phased manner.

(4) Anti Malaria operation in all on going projects and in such completed projects where active malaria fascii existed are at present being carried out by this State.

(5) The Basic Health Workers are performing the duties as prescribed by the Government of India and they have not been diverted for performing duties other than those defined by the Government of India.





## இணைப்பு

*[12-ம் பக்கத்தில் 148 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]*

*14-10-1974 ஆம் நாளன்று திருவனந்தபுரத்தில் முடிவுற்ற சுற்றுப்புறத் தூய்மை கெடுவது பற்றிய அனைத்திந்தியக் கருத்தரங்கில், சுற்றுப்புறச் சுகாதாரத்துறை உதவிப் பொறியாளரான திரு. என். பஷீர் அகமத் கலந்து கொண்டார். நீரின் தூய்மை கெடுதல், காற்றின் தூய்மை கெடுதல், கெட்டியாகவுள்ள கழிவுப் பொருட்களை அகற்றுதல், நீரைத் தூய்மைப்படுத்துதல் சாக்கடை நீரைத் தூய்மைப்படுத்தி பிற காரியங்களுக்காகப் பயன்படுத்துதல் ஆகியவை குறித்த சுமார் 40 ஆராய்ச்சிக் கட்டுரைகள் இக்கருத்தரங்கில் படிக்கப்பட்டன. இக்கருத்தரங்கில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் விவாதிக்கப்பட்டன :—*

*(1) தொழிற்சாலைப் பகுதிகளில் சுற்றுப்புறத் தூய்மைக் கேடு நாளுக்கு நாள் பெரும் பிரச்சினையாகி வருகிறது என்று இக் கருத்தரங்கின் விவாதங்கள் சுட்டிக் காட்டுகின்றன.*

*(2) நீர், காற்று, மண் ஆகியவற்றின் தூய்மை கெடுவதே முக்கியமானதும் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டியதுமான பிரச்சினைகளாக உள்ளன. நகர்ப் பகுதிகள் பலவற்றில் ஒலியால் அமைதி கெடுவதும் ஒரு தொல்லையாகி வருகிறது.*

*(3) நீர்த் தூய்மைக் கேடு தடுப்புச் சட்ட வரைவை மத்திய அரசு இயற்றியது குறித்து இக் கருத்தரங்கு தனது மனநிறைவைத் தெரிவித்தது.*

*(4) நீர்த் தூய்மைக் கேடு தடுப்புச் சட்டம் குறித்து எல்லா மாநிலங்களும் தங்களது சம்மதத்தைத் தெரிவிக்கவில்லை என்பதை இக்கருத்தரங்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொண்டது. இச்சட்டத்தை மேற்கொள்ளாத மாநிலங்கள் இதனை மிக விரைவாக மேற்கொள்ள வேண்டும் என்பதோடு, நாட்டின் நீர் வளத்தைப் பாதுகாக்க இச் சட்டம் குறித்துத் தங்களது சம்மதத்தை மிக விரைவில் தெரிவிக்க வேண்டும்.*

*(5) இச் சட்டம் பின்பற்றப்படும் மாநிலங்களிலும் மத்தியிலும் தகுந்த நிர்வாகப் பணியாளர் அமைப்புடன் கூடிய வாரியத்தை விரைவாக அமைக்க வேண்டும்.*

(6) நீர்த் தூய்மைக் கேடு கட்டுப்பாடு நடவடிக்கைகள் சம்பந்தமான பணிகளைச் செயல்படுத்துவது பொதுச் சுகாதாரப் பொறியாளர்கள் மூலமாகத் தான் நடைபெற வேண்டும். ஏனெனில், தனிச் சிறப்பு வாய்ந்த பயிற்சி, திறமை, அனுபவம் ஆகியவை இதன் வடிவமைப்பு கட்டுமானப் பணிக்குத் தேவைப்படுகிறது.

(7) மத்தியிலும், மாநிலங்களிலும் உள்ள இந்த வாரியங்களுக்கான முக்கிய நிர்வாகப் பணியாளர்கள் பொதுச் சுகாதாரப் பொறியாளர்களாகவே இருக்க வேண்டும் என்று ஆணித்தரமாக இக் கருத்தரங்கு பரிவுரை செய்கிறது.

(8) மத்திய அரசில், ஏற்கெனவே ஆலோசனையில் இருந்து வருகிற "காற்றுத் தூய்மைக் கேடு கட்டுப்பாட்டுச் சட்ட வரைவு" அபாயகரமான சுகாதாரக் கெடுதல்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு மிகவும் இன்றியமையாததாகும்.

(9) "தூய்மைக் கேடு சட்ட வரைவில்" கூறப்பட்டுள்ளதைப்போல் தொழிற்சாலைகளினால் தூய்மை கெடுவதன் அபாயம் குறித்து உணரப் பட்டுள்ளதால், வருங்காலத்தில் தொழிற்சாலைகளுக்கான உரிமம் வழங்குதல், தொழிற்சாலைகளை அமைப்பதற்கான இடங்களைத் தேர்ந்தெடுத்தல் ஆகியவை தூய்மைக் கேடு தடுப்பு வாரியம் அமைக்கப்படும் வரை, பொதுச் சுகாதாரப் பொறியியல் துறையின் ஏற்பளிப்போடு செய்யப்பட வேண்டும் என்று இக் கருத்தரங்கு பரிவுரை செய்கிறது.

(10) சுற்றுப்புறத் தூய்மை கெடுதல் கட்டுப்பாடு குறித்து கணிசமான அளவிற்கு ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன என்று இக் கருத்தரங்கு தெரிவித்ததோடு, இவற்றைத் தீவிரப் படுத்த வேண்டும் என்றும் பரிவுரை செய்கிறது.

Thiru N. Basheer Ahamed, Assistant Engineer of the Department of Environmental Hygiene, attended the All India Seminar on Environmental Pollution, 1974 which concluded at Trivandrum on 14th October 1974. About 40 papers dealing with water pollution, air pollution, solid waste disposal, water treatment and sewage treatment were presented in the Seminar. The various resolutions passed in the Seminar were as follows :—

" (i) The deliberations of the Seminar indicate the Environmental Pollution in industrial areas is becoming everyday more and more a pressing problem.





(ii) The major and immediate problems are the pollution of water, air and soil. In many urban areas noise pollution is also becoming a nuisance.

(iii) Seminar noted with satisfaction that the Prevention of Water Pollution Bill has been enacted by the Centre.

(iv) The Seminar however noted with concern that not all the States have consented for the Prevention of Water Pollution Act. Those States which have not yet adopted the Act should do this with utmost expediency and give their consent to the Act at a very early date to preserve the water resources of the country.

(v) Constitution of the Board with suitable functional set up as per the Act should be expedited both in the Centre and the States where it has been adopted.

(vi) The execution of works connected with water Pollution Control measures should be carried out only through Public Health Engineers, since the design and construction requires specified training, skill and experience.

(vii) The Seminar recommends strongly that the key administrative personnel for these Boards both at Centre and States should be Public Health Engineers.

(viii) The early enactment of the " Air Pollution Control Bill " already under consideration at the centre is imperative to avoid creation of serious health hazards.

(ix) Since the dangers of pollution due to industries has been recognised as evidenced by the enactment of the Pollution Bill, the Seminar recommends that licencing and siting of industries in future be done with the approval of the Public Health Engineering Department, until such time the Board is formed.

(x) The Seminar noted that considerable studies are being conducted in the field of environmental pollution control and recommends that these be intensified ".

# தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1975 மார்ச் 4.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

### காவல் நிலையங்கள்

*161 வினா—**திரு. கே. எ. வகாப்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை போலீஸ் நிலையங்களுக்கு கம்பியில்லா தந்தி (wireless) வசதி செய்யப்பட்டிருக்கிறது?

(இ) இன்னும் எத்தனைக்குத் திட்டம் உள்ளது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) தமிழகத்தில் 8–2–1975 வரை 586 காவல் நிலையங்களுக்குக் கம்பியில்லாத் தந்தி வசதி செய்யப்பட்டுள்ளது.

(இ) 1975-76 ஆம் ஆண்டுக்குள் மீதியுள்ள 255 காவல் நிலையங்களுக்குக் கம்பியில்லாத் தந்தி வசதி செய்வதற்குத் திட்டம் உள்ளது.

**திரு. கே. எ. வகாப்:** தலைவர் அவர்களே, இது மிகவும் சிறப்பான திட்டம். இதனால் போலீஸ் நிலையம் நல்ல முறையில் செயல்படுவதற்கு ஏதுவாக இருக்கிறது. இருந்தாலுங்கூட, இரகசியச் செய்திகள் அனுப்ப வேண்டுமானால் இதிலே முடிவதில்லை. காரணம், சப்தம் போட்டுத்தான் பேச வேண்டியிருக்கிறது வெளியிலே இருக்கிறவர்களுக்குக்கூட கேட்கக்கூடிய அளவில் நாஞரக்கா சென்டரில் அமைப்பு இருக்கிறது. அதனுடைய

சக்தியை இன்னும் அதிகப்படுத்துவதற்கும், மற்றும். இந்தக் குறையை விரைவாகப் போக்குவதற்கும் அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்த முறை பொதுவாகத் தகவலை உடனுக்குடன் அனுப்புவதற்காகத்தான் கையாளப்படுகிறது. இதிலே மேலும் சக்தியை அதிகப்படுத்துவதற்கும், இன்னும் இது இரகசியமான முறையில் நடைபெறுவதற்கும் தேவைப்படுமானால் இதுபற்றி அதிகாரிகளோடு கலந்து ஆவன செய்ய அரசு முயற்சிக்கும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, இது போலீசாருடைய கேஸ் சம்பந்தமாக மட்டுமல்லாமல், வறட்சி நிவாரணம் போன்ற, மக்களுக்கு உதவியாக இருக்கக்கூடிய விஷயங்களில் தகவல்களை உடனடியாக அனுப்புவதற்கும் பயன்படுத்திக் கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அதற்கும் பயன்படுத்துவதற்கு இயலுமா என்பதை ஆராயலாம். இது நல்ல யோசனை.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவர் அவர்களே, சாலைகள் இல்லாமல் காட்டுப் பகுதிகளில் இருக்கின்ற போலீஸ் நிலையங்களுக்கு முன்னுரிமை கொடுத்து இம்மாதிரி வசதியை அங்கு ஏற்படுத்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்தத் திட்டமே 1972-ஆம் ஆண்டில்தான் நாம் தொடங்கினோம். தொடங்கியதிலிருந்து 586 இடங்களுக்கு இந்தத் திட்டத்தை நாம் விரிவுபடுத்தியிருக்கிறோம். 255 இடங்கள்தான் மீதம் இருக்கின்றன. இந்த ஆண்டில் எல்லா இடங்களுமே நிறைவு செய்யப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கிறோம்.

**திரு. கு. காமாட்சி:** தலைவர் அவர்களே, இந்த முறை 1972-க்குப் பிறகுதான் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது என்று முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். அதற்கு முன்பாக மாவட்ட அளவிலாவது இருந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** 1972-ஆம் ஆண்டுக்கு முன்பு மாவட்ட அளவில் இந்த கம்பியில்லாத் தந்தி வசதி



இருந்தது. பிறகுதான் எல்லா போலீஸ் ஸ்டேஷன் அளவிலும் இது விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன்:** தலைவர் அவர்களே, போலீஸ் ஸ்டேஷனிலே அமைக்கப்பட்டிருக்கும் கம்பியில்லாத் தந்தி அமைப்புகள் அந்தந்த ஸ்டேஷனுக்குத் தேவையான செய்திகளை மட்டுமல்லாமல், எல்லாச் செய்திகளையும் அங்கே ஒலி பரப்பிக் கொண்டிருக்கின்றன. அம்மாதிரி முறை இருப்பது நல்லதா ? தேவையில்லாத சப்தத்தை உண்டாக்கிக் கொண்டே இருக்கிறது. அதை மாற்றியமைக்க ஏற்பாடு உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, 'எல்லாச் செய்திகளையுமே அதன் மூலமாகப் பரப்புவது நல்லதல்லவா ? யோசிக்கக் கூடாதா' என்றுதான் திரு. கே. டி. கே. அவர்கள் இப்பொழுது ஒரு வினா எழுப்பினார்கள். ஆகவே, தேவைப்படுகிற எல்லாச் செய்திகளையும் அதன் மூலமாகப் பரப்ப வசதி இருக்குமானால் அது நல்லதுதான்; அதுபற்றி அரசு ஆலோசிக்கும் என்று நான் அந்தக் கேள்விக்குப் பதில் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தந்த ஸ்டேஷனுக்குரிய செய்தி மட்டுமல்லாமல் மற்ற ஸ்டேஷன்களுக்குப் போகவேண்டிய செய்திகளும் வந்துகொண்டே இருக்கின்றனவே.

**திரு. எம். சுரேந்திரன்:** ஒரு ஸ்டேஷனுக்குரிய ஒயர்லஸ் அமைப்பில் அந்த ஸ்டேஷனுக்குத் தேவையான செய்திகளல்லாமல் வேறு ஸ்டேஷன்களுக்குப் போகும் செய்திகளும் அங்கே வருகின்றன. அமைப்பில் இரைச்சல் இருந்துகொண்டே இருக்கிறது, வேறு செய்திகள் வந்துகொண்டே இருக்கின்றன. அவர்களுக்குத் தேவை இல்லாத பல செய்திகள் வருவதைத் தவிர்த்து அந்த ஸ்டேஷனுக்குத் தேவையான செய்திகள் மட்டும் வருவதாக இருந்தால் நல்லதாக இருக்கும் அல்லவா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அது போதுமானது என்று உறுப்பினர் அவர்கள் சொல்கிறார். என்றாலும், சில நேரங்களில் மற்ற ஸ்டேஷன்களுக்குச் செல்லும் செய்திகளையும் இன்னொரு ஸ்டேஷனிலே இருப்பவர்களும் அறிந்துகொள்வதுகூட நல்லதாக இருக்கலாம்.

[1975 மார்ச் 4

*162 வினா—திரு. ந. முத்துவேல்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானூர் தொகுதியில் உள்ள உப்பு வேலூர் கிராமத்தில் 'அவுட் போஸ்ட்' போலீஸ் ஸ்டேஷன் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) இல்லை.

(இ) இந்த வினா எழவில்லை.

**திரு. ந. முத்துவேல்:** தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் அடிக்கடி கொலைக் குற்றங்கள் நடைபெறுகின்றன. அதே நேரத்தில் நெல் கடத்தலும் அந்த வழியில் நடைபெறுகின்றன. அருகிலுள்ள காடுகளில் மதுபானங்கள் காய்ச்சுவது பற்றியும் அடிக்கடி போலீசுக்குத் தகவல் வந்துகொண்டிருக்கிறது. அதனால் உப்பு வேலூர் கிராமத்தில் அவுட் போஸ்ட் போலீஸ் ஸ்டேஷன் அமைப்பது நன்றாக இருக்கும் என்றுதான் இந்த வினாவை எழுப்பினேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய விளக்கத்திற்கு நன்றி. ஆனால், குற்றங்களினுடைய எண்ணிக்கைப் பெருக்கத்தின் அடிப்படையிலும், மக்கட்தொகைப் பெருக்கத்தின் அடிப்படையிலும் அருகாமையில் இருக்கும் காவல் நிலையத்தின் தொலைவு எவ்வளவு என்பதையும் கணக்கெடுத்து அந்த அடிப்படையில்தான் இது போன்ற புறக் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. உறுப்பினர் குறிப்பிடுகிற உப்பு வேலூர் கிராமத்தைப் பொறுத்த வரையில், மக்கட்தொகை 2,400 பேர் அளவில் அமைந்திருக்கிறது. குற்றங்களைப் பொறுத்த வரையில், 1971-ஆம் ஆண்டில் அடிதடி வழக்குகள் 2; 1973-ஆம் ஆண்டில் 4 வழக்குகள். மதுவிலக்கு வழக்கு 1971 ஆம் ஆண்டில் 1; 1972-ஆம் ஆண்டில் 6; 1973-ஆம் ஆண்டில் 3, என்ற அளவில்தான் இருந்திருக்கின்றன. பக்கத்திலேயே போலீஸ் ஸ்டேஷன் இருக்கின்ற காரணத்தால் அதற்கும் இந்தக் கிராமத்திற்கும் தொலைவு அதிகம் இல்லை என்ற அந்த அடிப்படையில் இப்பொழுது புறக் காவல் நிலையம் தேவை இல்லை என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.



1975 மார்ச் 4]

## தமிழ் ஆராய்ச்சிப் படிப்பு.

*163 வினா—திரு. ஜி. ராமசாமி: மாண்புமிகு கல்வி சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் உயர் ஆராய்ச்சிப் படிப்பிற்கு மாநில கல்லூரிக்கு வருடத்திற்கு 5 மாணவர்களுக்கு அரசு பணம் ஒதுக்கியிருந்தும் பல்கலைக்கழகம் அனுமதி வழங்கவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) கல்லூரிக் கல்வி இயக்குநர் பல்கலைக்கழகத்துடன் இது பற்றித் தொடர்பு கொண்டுள்ளார்.

**திரு. ஜி. ராமசாமி:** தலைவர் அவர்களே, மாநிலக் கல்லூரி மிகவும் சிறப்பான கல்லூரி; அதிலுள்ள பேராசிரியர்களும் மிகவும் சிறப்பானவர்கள். அப்படியிருக்க, அரசாங்கம் மானியம் அளித்தாலும், அங்கே பி.எச்.டி. போன்ற பட்டம் பெறுவதற்குரிய ஆராய்ச்சி செய்வதற்குண்டான வாய்ப்புகளை அங்கே ஏன் ஏற்படுத்தவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ் உயர் ஆராய்ச்சிப் படிப்புக்காக ஐந்து மாணவர்களுக்கு நாம் உதவித் தொகை தரலாம் என்ற அளவுக்கு முடிவு செய்து, ஐந்து மாணவர்களை எடுத்துக் கொள்ளலாம் என்று கூறியிருக்கிறோம். ஆனால் அங்கேயிருக்கின்ற தமிழ்ப் பேராசிரியர்களின்கீழ் ஆறு பேர்தான் பி.எச்.டி. பட்டம் பெறுவதற்குப் பதிவு செய்துகொண்டு பணியாற்றி வருகிறார்கள். அவர்களில் பேராசிரியர்கள் இரண்டு பேர்; துணைப் பேராசிரியர்கள் இரண்டு பேர். பல்கலைக்கழக மானியக் குழு அனுப்பிய ஆராய்ச்சியாளர் ஒருவர். அவர்கள் அங்கே இப்பொழுது ஆராய்ச்சி நடத்திக்கொண்டு வருகிறார்கள். ஒரு பேராசிரியரின்கீழ் நான்கைந்து பேர்கள்தான் பி.எச்.டி. ஆராய்ச்சி செய்யலாம் என்றும், மேற்கொண்டு ஐந்து பேர்களை எடுத்துக் கொள்வதென்றால் பத்து பேர்களாகிவிடும் என்றும், இவர்களுடைய நிலைமை முடிந்த பிறகுதான் ஆராய வேண்டும்

[1975 மார்ச் 4

என்றும் பல்கலைக்கழகம் கூறுகிறது. ஆகவேதான், கல்லூரிக் கல்வி இயக்குநர் பல்கலைக்கழகத்தோடு கடிதப் போக்குவரத்து வைத்துக் கொண்டிருக்கிறார்.

*Government School, Puliyoorsalai*

*164 Q.—THIRU R. PONNAPPA NADAR: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether there is any proposal to construct the Government High School buildings at Puliyoorsalai in Vilavancode taluk, Kuzhithurai Educational District, which was destroyed by fire; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ): புலியூர்சாலை அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு ஓட்டுக் கட்டடம் tiled roof புதுப்பித்தலுக்காக அரசாணை நிலை எண். 589/கல்வி, நாள் 17—4—1974-இல் ரூ. 10,000 மானியமாக வழங்கப் பட்டுள்ளது.

**திரு. என். டென்னிஸ்:** தலைவர் அவர்களே, இந்தக் கட்டட வேலை எப்பொழுது ஆரம்பிக்கப்படும்? பல காலமாக இந்தக் கட்டடம் வேலை தொடங்காத காரணத்தால் வகுப்புகள் ஒழுங்காக நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. இயற்கையின் சீற்றத்தால் பள்ளிக்கூடக் கட்டடம் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதை உடனே நிவர்த்தி செய்வதற்கு அரசு என்ன தீவிர நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, கட்டடம் கட்டுவதற்கு ரூ. 10,000 ஒதுக்கீடு செய்யப் பட்டிருக்கிறது. பொதுப் பணித் துறைத் தலைமைப் பொறி யாளரிடமிருந்து அந்தக் கட்டடத்திற்கான வரைபடம் எதிர் பார்க்கப்படுகிறது. விரைவில் அது வந்து கட்டட வேலை துவங்கப் படும் என்று குறிப்பு தரப்பட்டிருக்கிறது.

**மைய சமையற் கூடங்கள்**

*165 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—



1975 மார்ச் 4]

(அ) கும்முடிப்பூண்டி, ஊராட்சி ஒன்றியம், எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு மத்திய சமையற்கூடம் மூலம் வழங்கப்படும் பகல் உணவு சரிவரப் போய்ச் சேருவதில்லை என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், இந்நிலையைப் போக்க மேற்கொள்ளப் பட்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) பொது வாக கும்மிடிப்பூண்டி எல்லாபுரம் ஒன்றியங்களிலுள்ள பள்ளிகளில் மதிய உணவு நன்கு வழங்கப்படுகிறது. கும்முடிப்பூண்டி மைய சமையற் கூடத்துக்கு கேர் நிறுவனம் இலவசமாக அளித்துள்ள டெம்போ வான்கள் மூன்றும் 1974 அக்டோபர் மூன்றும் நாள் முதல் பதினைந்காம் நாள் வரை பழுதுபட்டு, சரிபார்க்க அனுப்பப் பட்டு விட்டதால் கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு அந்த நாட்களில் உணவு அளிக்க இயலவில்லை. எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள தொடக்கப் பள்ளிகளுக்கு ஊத்துக்கோட்டையிலுள்ள மைய சமையற்கூடம் உணவளித்து வருகிறது. அங்கு இத்தகைய நிலை எதுவும் ஏற்படவில்லை.

(இ) செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங் களில் செயல்படும் 96 மைய சமையற் கூடங்களிலும் உள்ள சுமார் 224 டெம்போ வான்களும் அடிக்கடி பழுதாகி விடுகின்றன. ஆகையால் அவற்றை உடனுக்குடன் காலதாமதமின்றிப் பழுது பார்த்து அனுப்ப விக்கிரவாண்டியில் ஒரு பணிக்களரி தொடங்கப் பட்டுள்ளது. அப்பணிக்களரி முழு அளவில் செயல்படத் தொடங்கியதும் இத்தகைய நிலைமைகள் தவிர்க்கப்படும்.

**திரு. கா. வேழவேந்தன்:** தலைவர் அவர்களே, இதுமாதிரி மைய சமையற்கூடத்திலிருந்து எல்லாப் பள்ளிகளுக்கும் உணவைக் கொண்டுபோகும்போது, மாதத்தில் பல நாட்கள் உணவு போய்ச்சேர முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. காரணம், 'வான்கள்' அடிக்கடி பழுதாகிவிடுகின்றன. அத்தகைய வான்களை மாற்றி புதிய வான்கள் வழங்க வேண்டும். மேலும், கிராமச் சாலைகள் மோசமாக இருப்பதால், பழைய வான்களால் போக முடிவதில்லை. ஆகவே, அவற்றை உடனடியாக மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். தயவு செய்து, பழைய வான்களை மாற்றி,

புதிய வான்கள் விட்டு மதிய உணவு சீராக எல்லாப் பள்ளிகளுக்கும் போய்ச் சேரத் தக்க முயற்சியை அரசு மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, வான்களை எல்லாம் 'கேர்' நிறுவனம் நமக்கு இலவசமாக அளித்து வருகிறது. அவைகளைப் பழுது பார்ப்பதற்கு, அவர்களே ரூ. 10 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் ஒரு பணிக்களரியை விக்கிரவாண்டியில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அங்கு மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த வான்களைப் பழுது பார்க்கின்ற வசதிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. உணவு வழங்குவதில் காலதாமதமோ அல்லது இடையூறோ ஏற்படாமல் இருப்பதற்குத்தான் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. மேற்கொண்டு புதிய புதிய வான்கள் வருகின்றபொழுது, எவை எவை இனிமேல் பயன்படுத்த முடியாது என்ற நிலைமை ஏற்படுகிறதோ, அந்த வான்களை எடுத்துவிடுகின்ற சூழ்நிலை ஏற்படும். அதுவரையில் இருக்கிற வான்களைத் தான் பழுதுபார்த்துப் பயன்படுத்த வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம்.

*திருமதி ஜோதி வெங்கடாசலம்:* தலைவரவர்களே, மதிய உணவு வான்கள் பழுதடைந்துவிடுகின்ற காரணத்தால், பழுது பார்ப்பது இயலாத நிலைமையில், மதிய உணவு பிள்ளைகளுக்கு செல்வதற்கில்லாமலிருக்கிறது. முக்கியமாகப் பிள்ளைகளுக்குக் கொடுக்கக் கூடிய உணவு மதிய உணவு. அப்படி பிள்ளைகளுக்கு உணவு கொண்டு செல்கிற இந்த வான்கள் கெட்டுப் போய்விட்டால், அதற்கு மாற்று வழி செய்ய, உணவு பிள்ளைகளுக்குப் போய்ச் சேர அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அதுபற்றிய குறிப்பு இல்லை. ஆனால், மதிய உணவு எல்லாப் பிள்ளைகளுக்கும் சென்று சேர்வதற்கென, இப்படிப் பழுது ஏற்படுகின்ற நேரத்தில், மாற்று ஏற்பாடு செய்யவேண்டும். அது எந்தவகையிலே செய்யப்படுகிறது என்பதைப்பற்றித் தனிக் கேள்விபோட்டால் விவரம் தரலாம். ஆனால், அதற்கான முயற்சியை அரசு எடுக்கும்.

*புலவர் சி. பழனிச்சாமி:* தலைவரவர்களே, வேறு மாவட்டங்களின் பல பகுதிகளிலும் ஏற்படுத்தத் திட்டம் உள்ளதா?





குறிப்பாகப் பழனி பகுதியில் அந்த மதிய உணவுத் திட்டத்தை அமல் நடத்தும் எண்ணம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, செங்கல்பட்டு மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம், தென்னாற்காடு மாவட்டம் ஆகிய 3 மாவட்டங்களிலும் முழுவதுமாக ஊராட்சி ஒன்றியங்களிலே 96 மைய சமையற்கூடங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கேர் நிறுவனத்தினர் ஒவ்வொரு மாவட்டமாக எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அடுத்து, தஞ்சை, திருச்சிதான் வரும். மதுரை மாவட்டத்தை எடுத்துக் கொள்ளும் போதுதான் பழனி பகுதி சேரும். ஆண்டுக்காண்டு 30 அல்லது 40 பள்ளிக் கூடங்களை எடுத்துக்கொள்கின்ற முயற்சியினைத்தான் கேர் நிறுவனத்தினர் எடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

*திரு. கே. டி. கே. தங்கமணி:* சார், வட ஆற்காடு மாவட்டத்திலே சரியாக நடைபெறாமல் மாணவர்களுக்கு மத்தியானம் 4 மணிக்குத்தான் சாப்பாடு போடுகிறார்கள் என்று சமீபத்தில் கடலூரில் நடந்த ஆசிரியர்கள் மகாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்களே, அதுபற்றி அரசு என்ன சொல்கிறது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இது பொதுப்படையான குற்றச்சாட்டு. வான் பழுதுபட்டதால், இரண்டு மூன்று நாட்கள் உணவு போகாமல் கூட இருந்திருக்கக் கூடும். ஆனால், ஓரிரு இடங்களில் அப்படி இருந்திருக்கக் கூடுமே தவிர, வட ஆற்காடு மாவட்டம் முழுவதும் அப்படிப்பட்ட சூழ்நிலை இருந்திருக்காது. பழுது ஏற்பட்டவுடன் உடனுக்குடன், பணிக்களரிகள் ஏற்படுத்தப்பட்டு, விரைவாக இந்த வான்கள் சரி செய்யப்பட வேண்டுமென்றும், வான்கள் இல்லாத நேரத்தில் மாற்றுத் திட்டம் இருக்கவேண்டுமென்றும் நாம் கூறியிருக்கிறோம்.

### கருவல் வாடிபுதூரில் ஆரம்பச் சுகாதார நிலையம்

*166 வினா—*திரு. ஈ. எம். நடராசன்:* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், அந்தியூர் ஒன்றியத்தில் கருவல்வாடிப் புதூரில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** ஆம்.

### Drug Testing Laboratory at Madras

* 167 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Health with reference to Question No. 746, answered on 4th April 1974, be pleased to state the progress made so far in the establishment of a Drug Testing Laboratory in Madras City?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** மருந்துப் பொருள் சோதனை ஆய்வுக்கூடம் கிண்டியில் உள்ள கிங் நிறுவனத்தில் 1948-ம் ஆண்டிலிருந்து இயங்கி வருகிறது. மருந்துப்பொருள் ஆய்விற்குத் தேவையான வசதிகளைப் பெருக்கும் வண்ணம் ஆய்வுக் கூடத்திற்குப் புதிய கட்டடம் (காங்கிரீட் கம்பங்களை இறக்கி கடைகால் போடுவதுடன் கீழ்த்தளம் அமைத்தல்) கட்டுவதற்கு மொத்தம் ஐந்து லட்சம் ரூபாய் செலவிட அரசு அனுமதி வழங்கியுள்ளது. கட்டடத்திற்கான விரிவான வரைபடங்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன. குறைவான ஒப்பந்தப்புள்ளியை அரசு தற்போது ஏற்றுக் கொண்டுள்ளது. பணியைத் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. என். கே. பழனிசாமி:** சார், நம் மாநிலத்திலே இந்த மாதிரிப் பரிசோதனை செய்வதற்காக ஒரே ஒரு இன்ஸ்டிட்யூட்தான் இருக்கிறது. இன்னும் ஒரு இன்ஸ்டிட்யூட்டை எங்காவது ஏற்படுத்துமா? ஏனென்றால், இன்றைக்கு வரக்கூடிய மருந்து களும் அதிகம். அந்த மருந்துகளிலும் அடல்ரேஷன், மோசமான மருந்துகள் இருக்கின்றன. அதுவும் யாராவது மருந்து மோசம் என்று கொடுத்தால்தான் பரிசோதனை செய்கிறார்கள். சுவோ மோட்டோவாக மருந்துகளைப் பரிசோதனை செய்ய கிங் இன்ஸ்டிட் யூட்டிலே ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, பெரும் பாலும் சோதனை செய்வதே சுவோ மோட்டாவாகத்தான். தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி, கடைகளிலோ, அல்லது மருந்து உற்பத்தி செய்யும் நிலையங்களிலோ எடுத்து பரிசோதனை செய்கிறார்கள். மருந்து உற்பத்தி செய்கிறவர்கள் ஒவ்வொரு பாச் மருந்தையும் அவர்களே பரிசோதனை செய்யவேண்டுமென்ற முறையிருக்கிறது. தவறு கண்டு பிடிக்கப்படுமானால் விரிவான சோதனைக்கு என்னென்ன நடவடிக்கை உண்டோ அதனை எடுக்கிறார்கள். தற்பொழுது தமிழகத்தில் மருந்து பரிசோதனை,



முறையாக கிங் நிறுவனத்தில் ஒரு பகுதியில் நடைபெறுகிறது. அது போதிய இடத்தில் விரிவாக இல்லை. இன்னும் விரிவாகக் கட்டடம் அமைக்க வேண்டுமென்று கடந்த ஆண்டு, தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டு, டி.எச்.எஸ். அலுவலகம் உள் வளைவுக்குள் இந்தக் கட்டடம் கட்ட கவர்னர் அவர்களாலே கால்கோள் நடைபெற்றிருக்கிறது. இந்தக் கட்டடம் கட்டுவதற் கிடையிலே உரிய நடவடிக்கைகள் என்ன மேற்கொள்ளப்பட வேண்டுமோ அவை செய்யப்படும்.

### சுகாதாரம், குடும்பக்கட்டுப்பாடு மத்தியக் குழுக் கூட்டம்

* 168 வினா—**திரு. எம். சுரேந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) டெல்லியில் சுகாதாரம், குடும்பக் கட்டுப்பாடு ஆகிய கவுன்சில்களின் கூட்டுக்கூட்டம் ஒன்று ஏப்ரல் மாதத்தில் நடந்ததா?

(இ) இந்தக் கூட்டத்திற்கு நமது மாநிலத்திலிருந்து யார் யார் சென்றிருந்தார்கள்?

(உ) உணவுக் கலப்படத்தைத் தடுக்கவேண்டி தீவிர நடவடிக்கைகள் குறித்து மேற்படி கூட்டத்தில் முடிவுகள் எடுக்கப்பட்டதா?

(எ) அதன் விவரங்கள் என்ன?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ), (இ), (உ) & (எ) விவர அறிக்கை @ ஒன்று சட்டமன்றப் பேரவை முன் வைக்கப் பட்டு இருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், இந்த விவர அறிக்கையிலே இந்த உணவுப்பொருள் கலப்படத் தடுப்புகளை வலுப்படுத்துவதற்குத் தேவையான அளவு இன்னும் பணியாளர்களைச் சேர்க்கவேண்டு மென்ற ஒரு ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது. அந்த ஆலோசனை நிறைவேற்றப்படுகிறதா? இன்றைன்று, இதற்கு மக்களின் அபிப்பிராயங்களை உருவாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறதே அதற்காக

@ 545-547-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1975 மார்ச் 4

எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? அங்கங்கு நகரசபை இருக்கிற இடங்களிலே இதுபோன்ற தடுப்பு நடவடிக்கைகளை, அரசாங்கம் அங்கீகரித்த கழகங்களையமைத்து, மேற்கொள்ள முன்வருமா? மூன்றாவதாக . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேள்வியை அடுக்கிக் கொண்டே போனால் அவ்வளவு கேள்விகளுக்கும் அவர் பதில் சொல்லவேண்டுமல்லவா?

**திரு. எம். சுரேந்திரன்:** நகரசபையிருக்கிற இடங்களிலேதான் இந்தக் கலப்படம் அதிகமாக இருக்கிறது. இம்மாதிரி இடங்களிலே அதைத் தடுப்பதற்கான சிப்பந்திகளும் முறையாக நடந்துகொள்வதில்லை. மிக மோசமான முறையிலே நடந்து கொள்கிறார்கள். இந்தக் காரணத்தால்தான் அதிகமாகக் கலப்படமிருக்கிறது என்ற ஒரு கருத்து இருக்கிறது. அந்தக் கருத்தைப்பற்றி ஆராய்வதற்கென இருக்கிற ஆராய்ச்சிக்கூடத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இந்த அறிக்கையைப் பற்றிக் கருத்து என்ன என்று கேட்டாலே போதும். இந்த அறிக்கை மாநில அரசுகளுடைய அளவிலே, அவைகளால் செய்யப்பட்ட நடவடிக்கைகள என்ன என்பது பற்றி, அனைவரும் சேர்ந்து பேசினார்கள். ஏற்கனவே, மத்திய அரசு இப்படிப்பட்ட கலப்படத்தைத் தடுப்பதற்கான பல்வேறு ஆராய்ச்சி நிலையங்களை, பரிசோதனை நிலையங்களை ஏற்படுத்து வதற்கு, பெரிய அளவில் நிதி வழங்குவதற்காக ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது. அதறகுப் பிறகு நிதி கிடைக்கவில்லை—விதியில்லை.

அதற்குப் பிறகு, மாநிலங்களிலே அதிகப் பரிசோதனைக் கூடங்களை ஏற்படுத்த வேண்டுமென்றும் தஞ்சாவூரிலும், மதுரையிலும் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. தற்பொழுது சென்னையிலும் கோவையிலும் இருக்கின்றன. சென்னையிலே அரசாங்கச் சார்பிலேயிருக்கிறது, மாவட்டத்திலிருந்து அனுப்பப் படுகிற பண்டங்களைப் பரிசோதிக்க, மாநகராட்சி மன்றமும் ஒரு சோதனைக்கூடத்தை நடத்துகிறது. தஞ்சாவூரிலும் மதுரையிலும் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.



1975 மார்ச் 4]

அதற்கடுத்து, நெல்லை மாவட்டத்திலே பாளையங்கோட்டையிலும், சேலத்திலும் அந்தப் பரிசோதனைக் கூடங்களை ஏற்படுத்த வேண்டுமென்று அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அவற்றிற்குக் கட்டடங்கள் கட்ட இனிதான் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கிடையிலே சுகாதார அலுவலாளர்கள் (சானிட்டரி இன்ஸ்பெக்டர்கள்) தான் இந்தக் கலப்பட பண்டங்களைக் கண்டு பிடிப்பார்கள். ஆனால், பொதுமக்கள் தாங்கள் வாங்குகிற பண்டத்தைப்பற்றி, அளவு குறைவாக இருக்கிறது என்று எண்ணினாலும், தரம் கெட்டிருக்கிறது என்று கருதினாலும், இன்னும் சொல்லப்போனால் கலப்படம் என்று அவர்கள் நிச்சயமாகச் சந்தேகிக்க இடம் இருக்குமானால் அவர்கள் அந்த ரசீதை வாங்கிக்கொண்டு கலப்பட பரிசோதனைக்கு அனுப்பலாம். அப்படி அனுப்புவார்களானால் உடனடியாகப் பரிசோதிக்க முடியும்.

ஆனால், சிறு வியாபாரிகளாக உள்ளவர்கள் தாங்களே, பெரிய முதலாளிகளிடமிருந்து வாங்கும்போது, கலப்படப் பொருள்களை வாங்காமல் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம். அவர்கள் வாங்கி அளிப்பதால், பொது மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, சிறு வியாபாரிகள், கலப்படம் செய்வதாகக் கருதுகிற முதலாளிகளிடத்திலேயே பண்டங்களை வாங்குவதில்லையென்று முடிவு எடுக்கவேண்டும். அவர்களிடம் இவர்கள் வாங்குவதால், சிறு வியாபாரிகளுக்குப் பல்வேறு தொல்லைகள் ஏற்படுகின்றன. சிறு வியாபாரிகள், பொருள்களை வாங்கிவிட்டு, அதனாலே தண்டனைக்குக் கூட ஆளாகியிருக்கிறார்கள். அவர்கள் தங்களையும் பாதுகாத்துக்கொண்டு சமூகத்தையும் பாதுகாக்க முடியும் என்ற ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கு எல்லாம் பொது மக்கள் படிப்படியாகச் சொல்கிற பிரச்சனைகளைக் குறித்து ஆராய்ந்துதான் நடவடிக்கை எடுக்கவேண்டும். பத்திரிகைகளிலே வருகிற செய்திகளின் மூலம் மக்கள் இந்த விஷயத்திலே அதிகக் கண்காணிப்போடு இருப்பார்கள் என்று நம்புகிறோம்.

**திரு. எஸ். முருகையன்:** உணவுக் கலப்படச் சட்டத்தின் கீழே ஒவ்வொரு சானிடரி இன்ஸ்பெக்டரும் குறைந்தபட்சம் மாதத்திலே 5 கேஸ்கள்தான் பிடிக்க வேண்டுமென்ற முறை இருக்கிறது. அந்த 5 கேஸ்களிலும் ஒன்றிரண்டு பேர்கள்தான் குற்றத்திற்குள்ளாகிறார்கள். ஆகவே கலப்படம் செய்கிறவர்களை அதிகமான அளவில் பிடிக்கக்கூடிய முறையிலே அந்த கேஸ்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு உத்திரவிடுமா?

[1975 மார்ச் 4

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அப்படிப்பட்ட ஒரு முறை அரசாங்கத்திலே இருக்காது. எந்த சானிடரி இன்ஸ்பெக்டரோ எம். எல். ஏ. யை ஏமாற்ற அப்படிச் சொல்லியிருப்பார். 5 கேஸ்களாவது பிடிக்கவேண்டுமென்று இருக்கும். அப்படி ஒரு முறை இருக்குமானால் வேண்டியவர்களை விட்டுவிட்டு வேண்டாதவர்களைப் பிடிக்கக்கூடிய தவறுகள் நடக்கக்கூடும். அப்படி ஏதாவது தவறுகள் நடந்தால் ஹெல்த் ஆபீஸர் அந்த சானிடேரி இன்ஸ்பெக்டர் மேல் குற்றச்சாட்டு அனுப்ப வேண்டும். இதிலே வேடிக்கை ஒன்று இருக்கிறது. எந்த சானிடேரி இன்ஸ்பெக்டர் அதிகமாகத் தவறுகள் செய்கிறாரோ அவர்தான் செல்வாக்கு உள்ளவராக இருக்கிறார். அது சமுதாயத்திலே இருக்கக்கூடிய ஒரு பெரிய குறை. தவறு செய்கிற அலுவலர்களுக்கு நண்பர்கள் அதிகமானவர்கள் இருக்கிறார்கள், நேர்மையான அலுவலர்களுக்கு அப்படிப்பட்ட நிலை இல்லை. ஆகவே சமுதாயத்தைத் திருத்தவேண்டிய மிகப் பெரிய பொறுப்பு நமக்கு இருக்கிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** கலப்படம் செய்வது கடுமையான குற்றமாகும். ஆகவே முதல் தடவை குற்றம் செய்வதற்கும் இரண்டாவது தடவை குற்றம் செய்வதற்கும் வேறுபாடு இல்லாமல் முதல் தடவை குற்றம் செய்தால் என்ன தண்டனையோ அதையே மீண்டும் கொடுத்து சிறை தண்டனையும் பைனும் போடுவதற்கு ஏற்ற முறையிலே அரசு சட்டத்தைத் திருத்த ஏற்பாடுகளைச் செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. 'இவ்வகையில் செய்யப்படும் முதற் குற்றத்திற்கு 6 திங்கள் கால அளவிற்குக் கட்டாயச் சிறைத் தண்டனையும், இரண்டாவது குற்றத்திற்கு 6 ஆண்டுகால அளவிற்குக் கட்டாயச் சிறைத் தண்டனையும் கொடுக்க வகை செய்ய 1954 ஆம் ஆண்டுச் சட்டத்தின் 16, 17 வது பிரிவுகளைத் திருத்துவதற்குச் சுகாதாரத் துறையின் 95803/பி. 2./73-2 ஆம் எண் அரசுக் கடிதத்தின் மூலம் இந்திய அரசுக்கு எழுதிக் கேட்கப்பட்டுள்ளது." ஆகவே மத்திய அரசு அந்தச் சட்டத்தைத் திருத்தியாக வேண்டும். உண்மையான குறை என்னவென்றால் குற்றம் என்று தெரிந்தும் அறிந்தே திட்டமிட்டுச் செய்கிறார்களே அவர்கள் சிக்கிக்கொள்வதில்லை, அறியாமல் செய்கிறவர்கள்தான் அதிகமாகச் சிக்கிக்கொள்கிறார்கள். இந்தத் தண்டனைகளைக் கொடுப்பதாலே அவர்களுக்கு ஏமாறாமல் இருக்கின்ற உணர்வாவது இருக்குமென்று எதிர்பார்க்கலாம்.



1975 மார்ச் 4]

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** இந்த அறிக்கையிலே சமூகக் கேட்டுக்கு எதிராகப் பொதுமக்களின் கருத்தை உருவாக்க வேண்டியதன் தேவை குறித்தும், இதையே நோக்கமாகக் கொண்டு பெருமளவில் பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெறவேண்டிய தன் தேவை குறித்தும் குழு சிறப்பாக வலியுறுத்துகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுமக்கள் கருத்தை உருவாக்குவதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன? திரைப்படத் துறை, விளம்பரத் துறை இவையெல்லாம் நம்முடைய அரசாங்கத்தில் இருக்கிறது. திரைப்படங்களிலே வெறும் விழாக்களைப்பற்றித் திரைப்படங்கள் எடுத்துக் காட்டுவதற்குப் பதிலாக இந்தச் சமூகக் கேடு குறித்து நல்ல முறையிலே திரைப்படத் துறை, விளம்பரத் துறை இவைகளைப் பயன்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அந்தப் படங்களைப் பயன்படுத்துவதுபற்றி அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும். மத்திய அரசும் இப்படிப்பட்டவை குறித்து திரைப்படங்களாக எடுக்கிறார்கள். அவர்கள் அவற்றை இங்கே அனுப்பி வைத்தால் நாம் பயன்படுத்தலாம். பொதுமக்களிடம் அப்படிப்பட்ட கருத்தை அந்தந்தத் துறையின் மூலமாக வெளியிடச் செய்தாலும் பொதுமக்களுக்கு அவை போய்ச் சேருவதில்லை. நம்முடைய மாநிலத்திலே பல்வேறு கன்ஸ்யூமர் கவுன்சில் வைத்திருக்கிறார்கள். All-India Consumers' Council என்று வைத்திருக்கிறார்கள். அதிலே நல்ல இளைஞர்கள் ஆர்வத்தோடு இருந்து பணியாற்றுகிறார்கள். அவர்கள் கண்டு பிடித்ததுபற்றி பத்திரிகைகளிலே செய்தி வந்தால் கலப்படம்தானா என்று பரிசோதனை செய்வதற்கு அனுப்பப்படுகிறது. ஆகவே இப்படிப்பட்டவை மூலமாக நல்ல பலனை எதிர்பார்க்கலாம்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** கலப்படம் என்பது பெரும்பாலும் மொத்த வியாபாரிகள், வசதி படைத்த பெரிய வியாபாரிகள் அளவிலே தொழிற் சாலைகள் அளவிலே செய்யப்படுகின்றன. அதை ஏமாந்து வாங்குகிற சிறிய வியாபாரிகள்தான் சோதனைக்குட்பட்டு ஆளாக்கப்படுகிறார்கள், சோதனை செய்யப்படும்போது மிக மிகச் சிறிய வியாபாரிகள்தான் கடைக்

காரர்கள்தான் அகப்பட்டுக்கொள்கிறார்கள், அவர்கள் 1000 ரூபாய் அபராதமும் 6 மாதம் சிறைத்தண்டனையும் பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. துப்புரவு ஆய்வாளர்கள் இதையெல்லாம் கண்டு பிடிக்கும்போது கலப்படத்திற்கு மூலம் யார், யார் இதைச் செய்கிறார்கள், காவல் துறை மூலமாக இப்படிச் செய்கிறவர்கள் யார் யார் என்று கண்டுபிடித்து அதற்குப் பிறகு அதிலே சம்பந்தப்பட்டவர்கள் அனைவர்மீதும் வழக்குப் போட்டு அவர் களைத் தண்டிப்பதுதானே நியாயமாக இருக்கும், சிறிய வியாபாரி களை மட்டும் தண்டிப்பது நியாயமாகுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** திருடுவது மாத்திரம் குற்ற மல்ல, திருட்டுப் பொருட்களை வாங்குவதும் குற்றம்தான். கலப் படம் செய்கிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் குற்றவாளி கள்தான். அவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்பதில் அரசாங் கத்திற்கு உறுதியான கொள்கை உண்டு. கலப்படம் என்று தெரிந்தோ தெரியாமலோ வாங்குகிறவர்கள் இருக்கிறார்கள், ஆனால் கலப்படம் என்று தெரிந்தும் வாங்குகிறவர்களும் உண்டு. நான்கணாவுக்கு வாங்கினால் 2 அணா லாபம் வருமே என்ற முறையிலே கலப்படம் என்று தெரிந்தும் வாங்குகிறவர்கள் இருக்கிறார்கள்.

சிறிய வியாபாரிகள் தங்களுக்குச் சங்கம் அமைத்துக்கொண்டு கலப்படம் செய்கிறவர்களிடம் வாங்கக் கூடாது என்று கட்டுப் பாடு செய்துகொள்வார்களானால் அவர்களிடம் அந்தக் குறை ஏற்படாது. நாள்பட நாள்பட பொருட்கள் கெட்டுவிடுகிற நிலைமையும் உண்டு.

சிறிய வியாபாரிகள் நல்லெண்ணெயை வாங்கி வைத்து வாங்கி வைத்து மீதப்பட்டு மறிப்பிட்டு நாளாக நாளாக அது சேர்ந்து கெட்டுவிடுகிற நிலைமையும் ஏற்படலாம், அதன்மூலமாக அதிலே கொழுப்பு நிறைந்துவிடுகிறது, கெட்டு விடுகிறது. அப்படிப்பட்ட நிலைமையும் ஏற்படாமல் அவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மூல வியாபாரிகளைக் கண்டுபிடிப்பதிலே சிரமம் இருக்கிறது, காரணம் சோதனையிடுபவர்கள் போய்ப் பார்க்கிறபோது அவர்கள் எதிரே நல்ல பண்டங்கள்தான் இருக்கும். ஆகவே, அவர்களைக் கண்டுபிடிக்க முடியாத அளவுக்குச் செய்வதற்கு அவர்களுக்கு நிறைய வாய்ப்பு இருக்கிறது.



**திரு. கோவை செழியன்:** முக்கியமான கேள்வி, கையைத் தூக்கி கையெல்லாம் வலிக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணைக் கேள்விகள் எத்தனை அனுமதிக்க வேண்டுமோ அதற்கு மேலேயே கொடுத்தாகிவிட்டது.

**திரு. எம். சுரேந்திரன்:** இது முக்கியமான கேள்வியாக இருப்பதாலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு இதுவரையில் 4 கேள்விகள் வரையில் அனுமதித்தாகி விட்டது.

**திரு. எம். சுரேந்திரன்:** விளக்கம் சரியாக இல்லை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லா விளக்கத்தையும் நாம் இங்கேயே எதிர்பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

### *Chief Ministers' Conference*

*169 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether a conference of Chief Ministers was held at New Delhi during September 1974;

(*b*) whether the rabi and kharif crops and their procurement prices were discussed; and

(*c*) if so, the details of the same?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:**

(அ) & (இ) ஆம்.

(உ) புதுடில்லியில் 14—9—1974 ஆம் நாளன்று நடைபெற்ற முதலமைச்சர்கள் கூட்டத்தில் நெல், சிறு தானியங்களின் கொள் முதல் விலைகள்பற்றி விவாதிக்கப்பட்டது. பொதுவாகக் கீழ்க் காணும் முடிவுகள் விவாதிக்கப்பட்டன:—

(1) மோட்டா ரக நெல்லின் கொள்முதல் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 74 என வரையறுக்கப்பட வேண்டும்.

(2) தற்போதுள்ள நெல்/அரிசி மண்டலங்கள் நீடிக்கப்பட வேண்டும்.

(3) தற்போது செயலில் உள்ள கொள்முதல் ஏற்பாடு வலுப்படுத்தப்பட்டு, அது அதிக அளவு நெல்கொள்முதல் செய்வ

தற்காக இன்னும் திறமையாகச் செயல்படுமாறு செய்யப்பட வேண்டும்.

(4) சிறு தானியங்களான சோளம், மக்காச்சோளம், கம்பு, கேழ்வரகு விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 74 என வரையறுக்கப் பட வேண்டும்.

(5) சிறு தானியங்களின் போக்குவரத்தின் மீது கட்டுப் பாடு விதிக்காமல் தடையின்றி அனுமதிப்பது என்ற தற்போதைய கொள்கை தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும். அரசுப்பங்கீட்டு முறை மூலம் பொதுமக்களுக்குச் சிறு தானியங்களை வழங்குவதற் காக அவை அங்காடிகளில் இயன்ற அளவிற்குத் தட்டாமற் கிடைக்கச் செய்யும்பொருட்டு, வேளாண்விளைபொருள் உற்பத்தி யாளர்கள் மீது விதிமுறைக் கொள்முதல் செயலில் இருக்கும்.

**திரு. என். கே. பழனிசாமி :** சார், இந்த கோதுமை விலையை நிர்ணயம் செய்யும்போது மத்திய அமைச்சர் எந்த அடிப்படை யிலேயும் அல்ல விவசாயிகளுடைய தேவையை அனுசரித்து கோதுமைக்கு குவிண்டால் 105 என்று நிர்ணயித்து இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நெல் விலையைப் பொறுத்தவரையில் 74 ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறார்களா அது சரிதானா? அல்லது இங்கிருந்து சென்று கலந்து கொண்ட அமைச்சர் அங்கே உதாரணத்தை எடுத்துக் காட்டி வற்புறுத்தவில்லையா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கோதுமைக்கு அதிக விலையை நிர்ணயித்த மத்திய அரசு நெல் உற்பத்திச் செலவைக் கணக்கிட்டு அதிக விலை நிர்ணயிக்க வேண்டும் என்று மத்திய அரசிடம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். நம்முடைய மாநில அரசாங்கத்தின் சார்பிலே நெல் விலையை உயர்த்தவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். கனம் உறுப்பினர் அவர்கள் அரிசி விலை உயராது என்று சொன்னால் ஒருவேளை மத்திய அரசு அதை ஒத்துக்கொள்ளும்.

(முற்பகல் 9-30)

**திரு. ஆலடி அருணா :** தலைவரவர்களே, அந்த முதலமைச் சர்கள் மாநாட்டில் தமிழ்நாட்டின் சார்பில் நெல் விலையை எவ்வளவு என்று நிர்ணயிக்க வேண்டும், எவ்வளவு நிர்ணயித்தால் விவசாயிகளுக்குக் கட்டுபடியாகும் என்று இந்த அரசாங்கம் கூறியது என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?



**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, பொது வாக சென்ற குறுவையின்போது 90 ரூபாய் வைக்க வேண்டு மென்று நாம் வற்புறுத்தினோம்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** தலைவரவர்களே, நான் ஏற்கனவே கேட்டேன், இன்றைய தினமும் நம்முடைய அமைச்சரவர்கள் நெல்லின் விலையை உயர்த்தினால் அரிசி விலையும் உயரும் என்று சொல்கிறார்கள். நெல் இருந்தால்தான் அரிசி கிடைக்கும். நெல் இல்லை என்றால் அரிசியே கிடைக்காது. ஆகவே, கிடைக்கின்ற நெல்லை, உபரி நெல்லுக்கு அரசாங்கம் நிர்ணயித்திருக்கும் விலைக்கு விவசாயிகள் கொடுக்க முன் வராததால் அதிகமான விலையைக் கொடுத்தாகிலும் நெல்லை வாங்கி அரசாங்கச் சேமிப்புக் கிடங்குகளில் வைக்கலாம் என்பதை அரசாங்கம் பரிசீலிக்குமா? ஏனென்றால் நெல் இல்லாமல் போனால் பிறகு என்ன விலை கொடுத்தாலும் அரிசி கிடைக்காது. ஆகவே இதைப் பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, நெல் விலையை அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்பதில் இந்த அரசுக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. ஏற்கனவே இங்கே சொல்லியிருக்கிறேன். ஆனால் மாண்புமிகு திரு. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் மட்டும் அல்ல, நாட்டிலே உள்ள பலரும் நெல் விலையை உயர்த்த வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் அரிசி விலை குறைய வேண்டுமென்று சொல்கிறார்கள். இந்த இக்கட்டான நிலைதான் அரசாங்கத்திற்குச் சங்கடத்தைத் தருகிறது.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, ஏதோ இரண்டு நகரங்களிலே உள்ள மக்களுக்கு அரிசி விலையைக் குறைத்துக் கொடுக்க வேண்டுமென்பதற்காக ஏறக்குறைய 4½ கோடி மக்களைப் பாதிக்கும் அளவில் ஒரு மூட்டை அரிசி 350 ரூபாய் வரையில் விற்கிறது சமீபத்திலே. எனவே, நியாயமான விலையைத் நிர்மானித்து விலையைக் கட்டுப்படுத்த ஏதாவது வழி செய்ய நமக்கிருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்த இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, அவர்கள் என்ன கருத்தைச் சொல்கிறார்கள் என்று புரியவில்லை. பொதுவாக நெல்லின் விலையை அதிகப்படுத்தினோம் என்றால் பொதுமக்கள்

பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொல்வதாகத்தான் நான் புரிந்துகொண்டேன். இதுதான் மத்திய அரசாங்கத்தின் வாதம். ஆனால் அதே சமயத்தில் உற்பத்திச் செலவையும் பார்க்க வேண்டும். விவசாயத்திற்குத் தேவையான எல்லாப் பொருட்களின் விலையும் ஏறி இருக்கிறது. உற்பத்திச் செலவு அதிகமாகியிருக்கிறது, எனவே அதிக விலை தர வேண்டுமென்று விவசாயிகள் கேட்பது நியாயம்தான்.

**திரு. க. சோணையா:** தலைவரவர்களே, நம் நாட்டில் உணவுப் பற்றாக்குறையாக இருப்பதால் வெளிநாடுகளிலிருந்து விலைக்கோ அல்லது இனாமாகவோ உணவுப் பொருட்கள் இந்த நாட்டிற்கு வருவதற்கு ஏதாவது செய்திகள் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, ஏற்கனவே இந்த மன்றத்திலே விளக்கப்பட்டிருக்கிறது. பிரதம அமைச்சர் அவர்கள் இதை அன்போடு பரிசீலனை செய்து அரிசி வாங்கித் தருகின்ற வாய்ப்பு இருப்பதாகத்தான் தெரிகிறது.

**திரு. எஸ். வடிவேல்:** பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்திலே இப்பொழுது 54 ரூபாய்க்குள்ளாக அரசாங்க விலைக்கு நேரடி ஏஜண்டுகள் நெல் பிடிக்கிறார்கள். ஆனால் [illegible]கெட்டாக 60 ரூபாய்வரை போகிறது. இந்த விலையைக் கட்டுப்படுத்தி ஒரே சீரான விலையைக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? சித்திரை மாதம் 120 ரூபாய் மூட்டைக்கு வந்துவிடும். கொள்முதல் விலையை நிர்ணயித்த இதே விலைக்குத்தான் விற்க வேண்டும், இதற்குமேல் விற்றால் தண்டனைக்குள்ளாவார்கள் என்று அரசாங்கம் அறிவிக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, சீரான விலை எது என்பதுதான் பிரச்னை. தஞ்சை மாவட்டத்திலேயாவது 6 ரூபாய்தான் வித்தியாசம் இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் தமிழ்நாட்டில் மற்ற மாவட்டங்களில் பெருமளவில் விலை வித்தியாசம் இருப்பதால்தான் இந்தத் தொல்லைகள் ஏற்பட்டிருக்கின்றன.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, கொள்முதல் விலைக்கும், விநியோகிக்கின்ற விலைக்கும் அதிக வித்தியாசம் இருப்பதற்குக் காரணம், இடையிலே நிர்வாகச் செலவு அதிகப்படுவதுதான் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, கொள்முதல் விலையையும்



கூட்டி, விநியோகிக்கின்ற விலையையும் நியாயமாகக் கொடுக்க நிர்வாகச் செலவைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, இதுபற்றி திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் எழுப்பியதற்கு அப்பொழுதே பதில் சொல்லியிருக்கிறோம். உண்மைக்குப் புறம்பான தகவல் என்பதை விளக்கி இருக்கிறோம். நாம் வாங்கும் இடத்திலிருந்து பல்வேறு இடங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டும். அதற்கான பெரும் ஏற்பாட்டைப் போட வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கொண்டு செல்லும் போக்குவரத்துச் செலவும் இருக்கிறது. அங்கேயுள்ள கடைகளுக்கு மார்ஜின் கொடுத்து விநியோகம் செய்ய வேண்டும்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவரவர்களே, இந்தக் கொள்முதல் விலையை மத்திய அரசாங்கம் நிர்ணயிக்கும்பொழுது முதலமைச்சர்கள் மாநாட்டில் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளும் அடிப்படையில் செய்யப்படுகிறதா? அல்லது வெவ்வேறு மாநிலங்களிலேயும் வெவ்வேறு நிலைமைகள் இருக்கின்றன, ஆகவே, அங்கே தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் அவர்கள் இங்கே இருக்கும் அதிகாரிகளிடமும், அமைச்சர்களிடமும் தனியான விவாதத்தை வைத்து இந்தக் கொள்முதல் விலையை நிர்ணயிக்கிறார்களா? தேசிய அடிப்படையில் ஒட்டுமொத்தமாக நிர்ணயம் செய்யாமல் தனித்தனியாக மாநிலங்களின் நிலைமைகளை ஆராய்ந்து நிர்ணயம் செய்ய வேண்டுமென்று இந்த அரசு வற்புறுத்துகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, பொதுவாக இதுபோன்ற மாநாடுகளில் பல்வேறு கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. ஆனால் முடிவை அவர்கள்தான் எடுக்கிறார்கள். அதுதான் நமக்கிருக்கின்ற தொல்லை. ஒவ்வொரு மாநிலத்திற்கும் இந்தப் பொறுப்பை ஒப்படைத்தால் மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொல்வதைப்போல் இப்படிப்பட்ட சங்கடங்கள் ஏற்படாது. நம்முடைய மாநிலம் தொடர்ந்து 90 ரூபாய் என்று வற்புறுத்தி, சில மாதங்கள் நாமே கொடுத்தோம். அவர்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அவர்களுக்கு எதிராகக் கொடுத்தோம். ஆனால் மறுபடியும் அவர்கள் வலியுறுத்தி

[1975 மார்ச் 4

அப்படிக் கொடுக்கக்கூடாது என்று சொன்னதால் நாமும் குறைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

**திரு. கு. காமாட்சி:** தலைவரவர்களே, இந்த விநியோக விலையைப்பற்றி நம்முடைய முதல்வரவர்கள் இந்த மன்றத்திலே சொல்லி அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். அதுகுறித்து மத்திய அரசாங்கத்திடமிருந்து ஏதாவது தகவல் வந்திருக்கிறதா? அதற்கு அனுமதியளித்திருக்கிறதா? அனுமதியளிக்கவில்லை என்றால் அப்படி அளிக்காததற்கான காரணம் என்ன என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, இது போன்ற விலை நிர்ணயிக்கும் அதிகாரம் டெல்லிக்கு உண்டா அல்லது மாநிலத்திற்கு உண்டா என்று தமிழ்நாட்டில் சர்ச்சையாக இருக்கிறது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், இந்தத் துறையைச் சார்ந்த மத்திய அரசாங்கத்தின் அமைச்சர் சென்னைக்கு வந்தபொழுது, பகிரங்கமாகவே பத்திரிகை நிருபர்களிடத்தில், இந்த அதிகாரம் எங்களுக்குத்தான் உண்டு, தமிழக அரசு விலையை நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறது, அதை நாங்கள் பரிசீலிக்கிறோம், ஆனால் மத்திய அரசாங்கத்தின் கொள்கை, இப்படி விலை நிர்ணயிப்பது கூடாது என்பதுதான் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் மத்திய அரசாங்கத்தின் முடிவு தெரிவிக்கப்படவில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, கிராமப் பகுதிகளில் கம்பு, சோளம் போன்ற சிறு தானியங்கள் தற்பொழுது நிர்ணயிக்கப்பட்டுள்ள விலைக்கும், இரண்டு மடங்கு கூடுதலாக கிராமப் பகுதிகளில் விற்கப்படுகிறது. இந்த விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தி நிர்ணயிக்க இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, விலையேற்றம் உண்டு என்பதும் உண்மை. அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதும் உண்மை. இதை எப்படித் தீர்க்க முடியும் என்றால் அதற்கு ஒரேயொரு வழிதான் உண்டு. பற்றாக்குறை இருக்கின்ற ஒரே காரணத்தினால்தான் இப்படி ஏற்படுகிறது. ஆகவே, ஏராளமான உணவு தானியங்கள் வெளியிலிருந்து நமக்கு வந்தாலொழிய விலையை எந்த அளவிற்குக் குறைக்க விரும்புகிறோமோ அந்த அளவிற்குக் குறைக்க முடியாது.



1975 மார்ச் 4]

**திரு. ந. சோமசுந்தரம்:** தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் லெவி நெல்லுக்கு மூட்டைக்கு 54 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால் உபரி நெல்லுக்கும் அதற்குமேல் விலை தருவதற்கு அரசாங்கம் அனுமதி தரவில்லை. மற்ற மாவட்டங்களில் உபரி நெல்லுக்கு 100 ரூபாய், 150 ரூபாய் என்று மூட்டை ஒன்றுக்கு கிடைப்பதால் இதர மாவட்டத்தினர் அதிக லாபம் அடைகிறார்கள். ஆகவே, இந்த நிலையை அனுசரித்து தஞ்சை மாவட்டத்தில் உபரி நெல்லுக்கு கூடுதலாக விலை கிடைக்க அரசாங்கம் வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, இப்பொழுதே உபரி நெல்லுக்கு 100 ரூபாய் கூட்டுறவுத் துறையின் மூலம் கொடுக்கப்படுகிறது. எங்கேயாவது அப்படிக் கொடுக்காமல் இருந்தால் அவர்கள் எனக்குத் தகவல் வந்தால் அதுபற்றிக் கவனிக்கப்படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** சார், மொத்த விலை சம்பந்தமாக மத்திய அரசாங்கம் விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்றுதான் நான் புரிந்து கொள்கிறேன். சில்லறைக்கும் அது பொருந்துமா? நம்முடைய சர்க்காரைப் பொறுத்தவரையில் ஜனவரி 6-ஆம் தேதிக்குப் பிறகு லெவி நெல்லுக்கு 15 ரூபாய் போனஸ் கொடுப்பது என்று முடிவு செய்து கொடுக்கப்படுகிறது. அந்த போனஸ் தொகையை அதிகப்படுத்தி, அதிகமாகத் தொகையைக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, மொத்த விலை, சில்லறை விலை இரண்டையுமே மத்திய அரசாங்கத்தின் அனுமதியில்லாமல் நிர்ணயிக்க முடியாது. போனஸாக அவர்கள் கூறியதையும் மீறி அதிகமாகக் கொடுக்கிறோம். அதை இன்னும் அதிகமாக்கினால் நிச்சயம் அவர்கள் அதை ஆட்சேபிப்பார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து வினா எண் 170.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், இது ரொம்பவும் முக்கியமான கேள்வி. ஆகவே, துணைக் கேள்வி கேட்க அனுமதிக்க வேண்டும்.

**திரு. கோவை செழியன்:** இது முக்கியமான கேள்வி. துணை கேள்வி கேட்க அனுமதிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதுவரையில் 12 துணைக் கேள்விகளுக்கு அனுமதி கொடுத்திருக்கிறேன். ஏ.டி.எம்.கே. சார்பில் திரு. ஆலடி அருணா அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

**திரு. கோவை செழியன் :** இது மிகவும் முக்கியமான கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏதாவது ஒரு முறையைச் சொல்லுங்கள். கேள்வி நேரம் ஒரு மணி நேரம் என்று இல்லாமல் எவ்வளவு நேரமானாலும் கேள்விகளைக் கேளுங்கள், அம்மாதிரி வைக்கலாம் என்று முடிவெடுங்கள். இல்லையென்றால், ஒரு மணி நேரம் வரைக்கும் எத்தனை கேள்விகள் வருகின்றனவோ அதற்கு இடம் கொடுத்து விட்டு, ஒரு மணி நேரம் ஆனவுடனே மற்றக் கேள்விகளுக்கான பதில்களை நம்முடைய நிகழ்ச்சிக் குறிப்பிலே அச்சிட்டுக் கொடுக்கப்படும் என்ற முறையை எடுங்கள். எனவே, இப்படியும் சண்டை போடுகிறீர்கள், பிறகு பேசுவதற்கும் நேரமில்லை என்றும் சொல்கிறீர்கள். இருப்பதை 1 மணி நேரத்திற்குள்ளாக முடிக்க வேண்டும். 12 துணைக் கேள்விகள் அனுமதித்திருக்கிறேன்.

*Marketing Federation, Coimbatore*

* 170 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state whether there is sufficient storage accommodation for manure in the Marketing Federation, Coimbatore?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தமிழ்நாடு கூட்டுறவு விற்பனைக் கூட்டமைப்பு இரசாயன உரங்களை இருப்பு வைத்திருக்கப் போதுமான கிடங்குகளை வாடகைக்கு எடுத்துள்ளது.

(திரு. எம். சுரேந்திரன் எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒரு முறையை வகுத்துக் கொடுங்கள். ஒரு கட்சியில் உள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் எல்லாக் கேள்விகளிலும் சந்தர்ப்பம் கொடுக்க முடியுமா ?

**திரு. எம். சுரேந்திரன் :** இதிலே கட்சி என்ற பிரச்சினை எழவில்லை. துணைக் கேள்விகளுக்குச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமென்றுதான் கேட்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லாக் கட்சிகளின் குரலும் எழுப்பப்பட வேண்டும். எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுக்கப்பட வேண்டும். காங்கிரஸ் கட்சியில் வழக்கமாகப் பார்க்கிறேன் திரு. சுப்பிரமணியம் கை தூக்குவார், திரு. குமாரசாமி கை தூக்குவார், திரு. சுரேந்திரன் கை தூக்குவார் ஒரே நேரத்தில் இந்த மூன்று பேர்களுக்கும் துணைக் கேள்விகளுக்கு இடம் கொடுக்க முடியுமா ?



**திரு. எம். சுரேந்திரன் :** எல்லாவற்றுக்கும் கை தூக்குவது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து கேள்வி எண் 171.

*Production of Ball Bearings*

* 171. Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(a) whether a Ball Bearings project is to be set up in Tamil Nadu under the Joint Sector; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) & (இ): ஆம். ஆசியன் பேரிங்குகள் லிமிடெட் என்ற கூட்டுத்துறை நிறுவனம் ஜப்பானிய தொழில் நுட்ப உதவியுடன் ஹோசூரில் ஆண்டு ஒன்றுக்கு 5 மில்லியன் உருளை பேரிங்குகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று நிறுவ உத்தேசித்துள்ளது. இது 1976 ஆம் ஆண்டு இறுதிக்குள் உற்பத்தியைத் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. செ. அரங்கநாயகம் :** கூட்டுத் துறையில் இதனை உற்பத்தி செய்வதற்கு யார் யார் விண்ணப்பம் செய்து கொண்டார்கள்? அதிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவதற்கு எந்த அடிப்படையைப் பயன் படுத்தினார்கள்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கூட்டுத் துறையில் இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. திரு. பழனியப்ப செட்டியார் மானேஜிங் டைரக்டர். ஜப்பான் நிறுவனத்தோடு கொலாபரேஷன் செய்ய முடிவு செய்யப் செய்யப்பட்டிருக்கிறது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** கூட்டுத் துறையில் ஆரம்பிக் கூடிய இந்த பிராஜக்ட் எங்கு ஆரம்பிக்கப்பட இருக்கிறது ?

[1975 மார்ச் 4

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஹோசூரில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. இதுவரை காபிடல் அவுட்லே 10 கோடி ரூபாய்.

**திரு. நா. காசிராமன்:** இந்த பால் பேரிங் தொழிற்சாலையை ஆரம்பிக்க கூட்டுத் துறையில் பழனியப்ப செட்டியார் என்பவர் சேர்ந்திருப்பதாகச் சொன்னார்கள். அவர் இதற்கு முன்பாக இந்தத் தொழிலில் அனுபவம் உள்ளவரா? இதற்கு முன்பு அவர் செய்து வந்த தொழில் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அந்த விவரங்கள் இப்போது என்னிடத்தில் இல்லை.

## ஸ்டார்ச் தொழிற்சாலை

*172 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு தொழில்-மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், கூடலூரில் ஒரு "ஸ்டார்ச்" தொழிற் சாலை ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இல்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** நீலகிரி மாவட்டத்தில் ஸ்டார்ச்சு தொழிற்சாலை துவங்க முன்பு இருந்த திட்டம் கைவிடப்பட்டதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அப்படி ஒரு திட்டம் இல்லை என்றுதான் விவரங்கள் இருக்கின்றன. கூடலூரில் ஆரம்பிப்பது பற்றிக் குறிப்பு எதுவும் இல்லை.

**திரு. கு. அ. பொம்மன்:** கூடலூர் தாலுகாவில் மரவள்ளிக் கிழங்கு அதிகமாகப் பயிரிடப்பட்டு அண்டை மாநிலமான கேரளாவுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இப்போது மேலும் 20,000 ஏக்கரில் மரவள்ளிக் கிழங்கு அந்த இடத்தில் பயிரிட வேண்டுமென்று விவசாய அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்த இடத்தில் ஸ்டார்ச் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்க அரசு முன்வருமா?



1975 மார்ச் 4]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** ஏற்கனவே ஸ்டார்ச் தொழிற்சாலை ஆரம்பிக்க சிலபேர் அனுமதி பெற்றிருக்கிறார்கள். அந்த வேலைகளே இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. இப்போது அதுபற்றிய குறிப்பு இல்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** ஏற்கனவே, சேலத்தில் இருந்த ஸ்டார்ச் தொழிற்சாலையை மூடிவிட்டதாகச் செய்தி வந்திருக்கிறது. 20,000 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து வந்த அந்தத் தொழிற்சாலையை மீண்டும் திறக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மூலக் கேள்வி நீலகிரி மாவட்டம் கூடலூரில் ஸ்டார்ச் தொழிற்சாலை ஆரம்பிப்பது பற்றியது. சேலத்திலுள்ள நிலைமை பற்றிப் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அரசாங்கத்திற்கு இன்னும் குறிப்பு எதுவும் வரவில்லை.

## *Market Committees*

*173. *Q.*—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether Market Committees for groundnut have been formed in all the districts in the State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** வேர்க்கடலைக்கென்று மார்க்கெட் கமிட்டி எதுவும் தனியாக அமைக்கப்படவில்லை. மாவட்டங்களில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் மூலம் விற்பனை நடைபெறுகிறது.

**திரு. தி. பொன்னுமலை:** வேர்க்கடலை தென்னாற்காடு, சேலம் மாவட்டங்களில் அதிகமாக உற்பத்தியாகிறது. பருவ காலத்தில் மூட்டை ஒன்றுக்கு 50 ரூபாய்தான் கிடைக்கிறது. இப்போது 150 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. நிரந்தரமாக விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க மார்க்கெட்டை ஏற்படுத்த முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** வினா மார்க்கெட் கமிட்டியைப் பற்றியது. தென்னாற்காடு மாவட்டத்தில் மார்க்கெட் கமிட்டி, ரெகுலேடெட் மார்க்கெட் இருக்கிறது. வேர்க்கடலையின் விலைவாசி ஏற்றம், இறக்கம் மார்க்கெட் நிலவரத்தைப் பொறுத்தது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் வேர்க்கடலை வெளிமாநிலங்களுக்கு ஏற்றிச் செல்லப்படுவதால் விலையேற்றம் இருக்கிறது என்று கூறுகிறார்கள். அதைத் தடுக்க முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தற்போது எந்த விதமான தடையும் இல்லை.

*174 வினா—திரு. ஈ. எம். நடராசன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், பவானி வட்டம், அந்தியூரில் மார்க்கெட் கமிட்டி அலுவலகக் கட்டடம் கட்டப்படுவது குறித்து என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அந்தியூர் விற்பனைக் கூடத்திற்கு நிலம் வாங்குவது பற்றிக் கோவை மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஈ. எம். நடராசன் : அந்தியூர் விவசாயக் கிடங்கை அமைக்க மார்க்கெட் கமிட்டியின் தலைவரும் மற்ற உறுப்பினர்களும் அந்தியூரில் இடத்தைப் பார்த்து இரண்டாண்டுகளுக்கு மேலாகிறது. அதை விரைவில் அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்த நிலம் தேவை என்று விளம்பரப்படுத்தப்பட்டது. அதிலே கருப்பாயி அம்மாள், சொரணம் அம்மாள் ஆகியோர் நிலம் 5 ஏக்கர் 8 சென்ட் நிலத்திற்கு 1,75,000 ரூபாய் கொடுக்கலாம் என்று மார்க்கெட் கமிட்டி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்திற்கு 144-வது விதியின்படி மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசீலனையும் ஒப்புதலும் தேவை. அதற்காக அனுப்பப்பட்டிருக்கிறது.

### *Pest Surveillance Programme*

*175 *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Agricultural University at Coimbatore to organise pest surveillance and control programmes; and

(*b*) if so, the details thereof?



மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பூச்சிகளும், நோயும் பயிர்களைத் தாக்குவது பற்றி முன்கூட்டியே அறிவிப்பதற்கும், விவரங்களைச் சேகரிப்பதற்கும் இந்தத் திட்டத்தில் இடம் இருக்கிறது.

### தோவாளை வட்டத்திலுள்ள பள்ளி வகை நிலங்கள்

*176 வினா—திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை தாலுகா, தோவாளை-செண்பகராமன்புதூர் கிராமங்களிலுள்ள "பள்ளி வகை நிலங்கள்" நில உச்சவரம்பு சட்டத்திற்குட்பட்டனவா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : குமரி மாவட்டத்திலுள்ள செண்பகராமன்புதூர், தோவாளை, நாகர்கோவில் ஆகிய கிராமங்களில் உள்ள "கோட்டார் தைக்காப் பள்ளி வகை" நிலங்கள் மட்டும் நில உச்சவரம்பு சட்டத்திற்கு உட்பட்டனவாகும்.

திரு. கே. எ. வகாப் : இது தைக்கப்பள்ளிக்குச் சொந்தமானது என்று சொன்னால் அந்த நிலங்களுக்கு உச்சவரம்புச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : சட்டத்திலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தைக்கப்பள்ளி நிலங்கள் ஒரு குடும்பப் பொறுப்பு சொத்து என்று இருக்கிறது. இது பொது டிரஸ்ட் அல்ல. குடும்பச் சொத்தாக இருக்கும் காரணத்தால் விதிவிலக்கு அளிக்க முடியாது.

திரு. எம். ஏ. லத்தீப் : இந்தத் தைக்காப்பள்ளிச் சொத்து குடும்பச் சொத்து என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் பள்ளியைப் பராமரிப்பதற்காகத்தான் அந்தக் குடும்பத்திற்கே அந்த நிலத்தைச் சாகுபடி செய்து அனுபவிக்கும் உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தச் சொத்து பள்ளிச் சொத்தாகிறது. அந்த அடிப்படையில் இதற்கும் விதிவிலக்கு அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இது இறும்தார் குடும்பச் சொத்து என்று அதிகாரபூர்வமான ரெக்கார்டுகள் இருக்கின்றன. அதிலே அவர்களுக்கென்று 15 ஏக்கர் ஒதுக்கிவிட்டு

[1975 மார்ச் 4

83.21 ஸ்டாண்டர்டு ஏக்கரை சட்டத்தின்கீழ் எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே பள்ளிக்காக குறிப்பிட்ட தொகை செலவு செய்தது போக மீதியைத் தனியார் அனுபவித்துக் கொள்ளலாம் என்ற வகையில் சொத்தாகக் கருதப்பட்டு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

## கும்முடிப்பூண்டித் துணை வட்டம்

*177 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டித் துணை வட்டத்தினை வட்டமாக மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு காலதாமதம் ஆவதேன்?

(இ) இது எப்போது நிறைவேறும்?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ) & (இ) கும்மிடிப் பூண்டி துணை வட்டத்தினை நடப்பு நிதியாண்டில் வட்டமாக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. பாராளுமன்றம் மற்றும் சட்டமன்றம் ஆகியவற்றிற்கான தொகுதி வரையறுக்கும் செயற் குறிப்புகள் இறுதியாக்கப்பட வேண்டியிருந்ததால் வட்டங்கள், பிர்க்காக்கள் ஆகியவற்றில் மாற்றங்கள் செய்வதை 31—12—1974 வரை நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் இப் பொருள் குறித்து மீண்டும் பரிசிலனை செய்யப்பட்டு 20—3—1975 முதல் இத்துணை வட்டத்தை வட்டமாக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான ஆணை விரைவில் வெளியிடப்படும்.

**திரு. கா. வேழவேந்தன்:** தலைவர் அவர்களே, அரசாங்கம் கும்மிடிப்பூண்டி துணை வட்டத்தை வட்டமாக மாற்றி துவக்க விழா நடைபெற்று விட்டது. தாசில்தார், உரிய அதிகாரிகள், ஆகியோரை நியமித்து வட்ட அலுவலர்கள் இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** கும்மிடிப்பூண்டியோடு மாத்திரமல்லாமல் ராஜபாளையம், திருவொற்றூர் போன்ற நாலைந்து துணை வட்டங்களை வட்டங்களாக உயர்த்துவது பற்றி அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. கும்மிடிப்பூண்டி வட்டத்தில் அதிகாரிகளைப் போடுவதற்கான உத்தரவுகள் எல்லாம் விரைவில் பிறப்பிக்கப்படும்.



1975 மார்ச் 4]

**திரு. சி. ஆறுமுகம்:** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கும்மிடிபூண்டியை வட்டமாக பிரித்திருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். செங்கற்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகம் வட்டம் பெரிய வட்டமாகும். ரெவின்யூ கணக்குப்படி அதை இரண்டாகப் பிரிப்பது நன்மை என்றும் சொல்லப்படுகிறது. அப்படி அந்த வட்டத்தை இரண்டாகப் பிரிக்க அரசுக்கு உத்தேசம் உண்டாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, தமிழ் நாட்டில் மதுராந்தகம் மட்டுமல்ல, ஆவடையார் கோயில் போன்று பல்வேறு வட்டங்கள் இருக்கின்றன. அவைகளைப் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறோம். அரசுக்கு அவைகளை தற்போது பிரிக்கிற உத்தேசமில்லை.

**திரு. எம். சுரேந்திரன்:** தலைவரவர்களே, உறுப்பினர் திரு. வேழவேந்தன் குறிப்பிடுகிற இந்த கும்மிடிப்பூண்டி வட்டமாக சட்டபூர்வமாக அறிவிக்கப்படாத நிலையிலும் அதனுடைய துவக்க விழா நடந்தது என்று கூறினார்கள். இப்படி அரசாங்கத்தினுடைய காரியங்களில் கூட சட்ட பூர்வமாக அறிவிக்கப்படுவதற்கு முன்னாலே துவக்க விழா நடத்துகிற அமைச்சர் யார் என்று அறியலாமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, அமைச்சர்கள் யாரும் அப்படி நடத்துவது கிடையாது. அந்தப் பகுதி சட்டப் பேரவை உறுப்பினர்களோ மற்றவர்களோ தங்கள் துணைவட்டத்தை வட்டமாக ஆக்கிவிட்டோம் என்று முன் கூட்டியே விழா நடத்திக் கொள்ளலாமே தவிர அரசாங்கம் அதிகாரபூர்வ ஆணை பிறப்பிக்காத வரை அது அவர்களுடைய சொந்த இஷ்டமாகத் தான் இருக்கும்.

**திரு. கா. வேழவேந்தன்:** தலைவரவர்களே, நடந்தது இதுதான். பழைய வருவாய்த்துறை அமைச்சரவர்கள் 1—1—1975 முதல் அது வட்டமாக மாற்றப்படுகிறது என்று அறிவித்த பின்னால் எங்கள் மாவட்ட அமைச்சரவர்கள் மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை அவர்களும் ஆட்சித் தலைவரவர்களும் கலந்து கொண்டார்கள். டி-லிமிடேஷன் ரிப்போர்ட் வரவேண்டியிருக்கிற காரணத்தினால் காலதாமதம் ஏற்பட்டது. இறுதி ஆணை டி-லிமிடேஷன் கமிஷன் ரிப்போர்ட் வந்த பிறகு வரலாம். 1—1—1975-ல் அரசாங்கம் எடுத்திருக்கிற முடிவுப்படி துவக்க

விழா ஃபார்மலாக நடத்தப்பட்டிருக்கிறது. அந்த வட்டத்திற்கு வட்டாட்சித் தலைவரவர்களை உடனே நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, வட்டங்கள் மாத்திரமல்ல, அதைப்போலவே ஊராட்சி ஒன்றியங்கள், வார்டுகளைக் கூட பிரிக்கக் கூடாது என்று மத்திய அரசு 31—12—1974 வரை தடை விதித்த காரணத்தினால் அதற்குப் பிறகு கவனிக்கப்படலாம் என்று விழா நடத்தப்பட்டிருக்கலாம். 31—12—1974 முடிந்தவுடனே தடை நீக்கப்பட்டு 1—1—1975-லே ஆரம்பித்து விடலாம் என்ற அடிப்படையில் நடத்தப்பட்டிருக்கலாம். ஆனால் ஆணை அதிகாரபூர்வமாக வழங்கப்படவில்லை. பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். விரைவிலே அறிவிக்கப்படும். பிறகு அதிகாரிகளை நியமிப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நகராட்சிகளை மாநகராட்சிகளாக்கல்

*178 வினா—திருமதி த. ந. அனந்தநாயகி: மாண்புமிகு திரு. என். கிட்டப்பா:
உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர், திருச்சி, சேலம் நகராட்சிகளை மாநகராட்சியாக்கும் கருத்துரு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** கோயம்புத்தூர், திருச்சி நகராட்சிகளை மாநகராட்சியாக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. சேலம் பற்றி அரசு பரிசீலனையில் இல்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, கோவையை மாநகராட்சி ஆக்குவது பரிசீலனையில் இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதன் விவரத்தை அறியலாமா? எந்த எந்தப் பகுதிகள் மாநகராட்சிப் பகுதியில் சேர்க்க உத்தேசிக்கப்படுகிறது என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, கோவையைப் பொறுத்த வரையில் அங்கே மக்கள் தொகை 1971-ல் எடுத்த கணக்குப்படி 3.5 லட்சம், ஒரு நகரத்தை



மாநகராட்சி ஆக்குவதற்கு 5 லட்சம் மக்கள் தொகை தேவை. அங்கே பக்கத்தில் இருக்கிற சிங்காநல்லூர் ஊராட்சியைச் சேர்த்தால் 4.7 லட்சம் மக்கள் தொகை ஆகும், என்ற ஒரு கணக்கு வந்திருக்கிறது. சிங்காநல்லூர் ரொம்பவும் பின் தங்கிய பகுதியாக இருக்கின்ற காரணத்தினால் அதையும் சேர்த்து மாநகராட்சியாக ஆக்கினால் சிங்காநல்லூருக்கு அதிகமாகப் பணம் செலவாகி விடும் என்ற ஒரு யோசனையும் இருக்கிறது. இது பரிசீலனையில் இருக்கிற காரணத்தினால் பக்கத்தில் இருக்கிற மற்ற ஊராட்சிகளை சேர்க்கலாமாவென்ற யோசனையை வைக்கிறார்கள்.

**திரு. கே. ரங்கநாதன்:** தலைவரவர்களே, திருச்சி, கோவை ஆகிய இரண்டு நகரங்களும் மாநகராட்சிகளாக ஆக்கும் கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். முதலில் மாநகராட்சியாவது கோவையா அல்லது திருச்சியா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, இரண்டும் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. கு. காமாட்சி:** தலைவரவர்களே. திருச்சியை மாநகராட்சி ஆக்கும்போது அதிலே வரவிருக்கிற ஸ்ரீரங்கம் நகரசபை மாநகராட்சியிலே சேர இயலாது என்று தீர்மானம் போட்டது அரசுக்குத் தெரியுமா, அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறதென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, ஸ்ரீரங்கம் நகரசபை தீர்மானம் போட்டிருக்கிறது என்பது தெரியும். அதற்காக அதை மீண்டும் சேர்ப்பதா, அல்லது வேறு பகுதிகளைச் சேர்ப்பதா என்று பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

திருச்செந்தூரை நகராட்சியாக்கல்

*179 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூரை நகராட்சி மன்றமாக்கக் கோரி திருச்செந்தூர் பேரூராட்சி மன்றம் அண்மையில் அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளதா?

[1975 மார்ச் 4

(இ) ஆமெனில், அதன்மீது அரசு எடுத்துள்ள முடிவு யாது?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** (அ) இல்லை.

(இ) எழவில்லை.

### சங்ககிரி நகரப் பஞ்சாயத்து

*180 வினா—**திரு. வ. முத்து:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்ககிரி அருகிலுள்ள சங்கர் சிமெண்ட் தொழிற்சாலைப் பகுதியை சங்ககிரி நகரப் பஞ்சாயத்துடன் இணைப்பதற்கான நகர பஞ்சாயத்தின் பரிந்துரை ஊராக வளர்ச்சி இயக்குநருக்கு வந்துள்ளதா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** இல்லை.

**திரு. வ. முத்து:** தலைவரவர்களே, சங்ககிரி அருகிலுள்ள சங்கர் சிமெண்ட் தொழிற்சாலைப் பகுதியை சங்ககிரி பஞ்சாயத்துடன் இணைப்பதற்கான பரிந்துரை பரிசீலனைக்கு வந்தால் அரசு ஆவன செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, இது சம்பந்தமாக எந்த பரிந்துரையும் சர்க்காருக்கு வரவில்லை.

**திரு. கே. எ. வகாப்:** தலைவரவர்களே, பொதுவாகவே இப்படி பெரிய தொழிற்சாலை உள்ள பகுதிகளை அருகிலே உள்ள முனிசிபாலிடிகளோடு சேர்த்தால் முனிசிபாலிடிகளுக்கு வசதியாக இருக்கும். வாணியம்பாடிக்கு அருகில் பெரிய தொழிற்பேட்டை இருக்கிறது. அந்த நகரசபைக்கு வருமானம் குறைந்து கொண்டு இருக்கிறது. இப்படி பொதுவாக அந்த தொழிற் பகுதிகள் முனிசிபாலிடியோடு சேரவேண்டுமென்று ஆணை இட்டால் நகரசபைக்கு நன்மையாக இருக்குமே. அப்படி அரசு செய்ய முன் வருமாவென்று அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையிலும் இது நகரசபை இல்லை. இந்த சிமெண்ட் தொழிற்சாலை பேரூராட்சிக்குப்



1975 மார்ச் 4]

பக்கத்தில் இருக்கிறது. இதற்கு பொதுவாக கொள்கை வகுக்க முடியாது. எங்கெங்கு எந்தெந்த சூழ்நிலை இருக்கிறதோ, தூரம் எவ்வளவு இருக்கிறதோ, அவைகளுக்குத் தகுந்தாற்போல அமைத்துக் கொள்ள முடியும்.

### ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து பெறப்பட்ட கடன்கள்

*55 வினா—**திரு. கே. எ. வகாப்:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வீட்டு அடமான கடன் சங்கம் எல்.ஐ.சி.யிடமிருந்து கடன் பெற்றுள்ளதா?

(இ) ஆம் எனில், எவ்வளவு தொகை?

(உ) வட்டி விகிதம் என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(இ) இதுவரை கடன்கள் ரூ. 15.92 கோடி பெற்றுள்ளது.

(உ) மேற்படி தொகைக்கு வட்டி விகிதம் 6¼ சதவிகிதம் முதல் 8 சதவிகிதம் வரை உள்ளது.

**திரு. கே. எ. வகாப்:** தலைவரவர்களே, இவர்கள் பெறுகிற வட்டி விகிதம் குறைவாக இருந்தாலும் வீடு கட்டுகிறவர்களுக்கு கொடுக்கப்படுகிற பணத்திற்கு வட்டி விகிதம் அதிகமாக இருப்பதை உத்தேசித்து குறைவான வட்டி விகிதத்தை நிர்ணயிக்க அரசுக்கு யோசனை உண்டாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, எல்.ஐ.சி. இடமிருந்து 8 சதவித வட்டிக்கு வாங்குகிற தமிழ்நாடு வீட்டு கடன் கொடுக்கும் வங்கி ½ சதவிகிதம் செலவுகளுக்குப் பெறுகிறது. மார்ஜினல் இன்டரஸ்ட் கிரெடிட் இன்சூரன்ஸ் ஸ்கீம் என்று 1 சதவிகிதம் வசூலிக்கப்படுகிறது. அதைப்போலவே வீடு கட்டுகிற சங்கங்கள் 1¼ சதவிகிதம் வசூலிக்கின்றன. ஆக இப்படி 10¾ சதவிகிதம் வசூலிக்கப்படுகிறதே தவிர, எந்த வகையிலும் நியாயமற்ற வட்டி விகிதம் வசூலிக்கப்படவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[1975 மார்ச் 4

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, இந்த கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களால் 13½ சதவீத வட்டி வசூலிக்கப்படுகிறதே, அமைச்சரவர்கள் 10¾ சதவீதம் என்று சொல்கிறார்கள், எது சரி என்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களுக்கு 10¾ சதவீத அளவிற்கு பணம் போய்ச் சேருகிறது. அவர்கள் தங்கள் செலவுகளுக்காக அதிகம் வைத்து அப்படி வசூலிக்கிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, இதற்கு முன்னால் கூட்டுறவு சொசைட்டி மூலம் வாங்கக்கூடிய கடன்களுக்கு உச்ச வரம்பு வைத்திருந்தார்கள். எல்லா பொருள்களின் விலைகளும் ஏறிவிட்ட இந்த நிலையில் அந்த உச்ச வரம்பு நிலையில் கால்வாசிப் பொருள்களைத் தான் வாங்க முடியும். ஆகவே அந்த உச்ச வரம்பை அதிகரிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா, அப்படியென்றால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, ஏற்கெனவே இதற்கான மனுக்கள் வந்து 25 ஆயிரம் ரூபாய் வரையில் கடன் உயர்த்தப்பட்டது. பிறகு 30 ஆயிரம் வரையில் உயர்த்தப்பட்டிருக்கிறது.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, குடிசையில் இருக்கிறவர்களுக்கு அரசாங்கம் மாடி வீடு கட்டிக் கொடுத்து விடுகிறது. மிடில் கிளாஸ் ஹவுசிங்குக்கு ஏராளமாக கடன் கொடுத்து என்கரேஜ் செய்தால் மிடில் கிளாசை சேடிஸ்பை செய்ய முடியும். அமைச்சரவர்கள் எல். ஐ. சி மூலமாக அதிகப்பணம் வாங்கி தாராளமாக இந்த மிடில் கிளாஸ் மக்களுக்கு கொடுக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, இந்த வீடு கட்டுகிற சங்கமே நடுத்தர மக்களுக்குத்தான் பயன்பட்டுக் கொண்டு வருகிறது. இன்னும் சொல்லப்போனால் ஏராளமான கடன் வழங்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 1950-லிருந்து 1967-ஆம் ஆண்டு வரையில் இந்த சங்கம் 4,26,074 ரூபாயை எல்.ஐ.சி.யில் கடனாக பெற்றது.



1975 மார்ச் 4]

ஆனால் 1967-லிருந்து 24—2—1975 அன்று வரையில் 29,99,58,000 ரூபாய் பெறப்பட்டு தரப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவரவர்களே, எல். ஐ. சி. தங்கள் கொள்கை பற்றிச் சொல்கிற போது நாங்கள் எந்த அளவிற்கும் கடன் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று சொல்கிறார்களே, அப்படியானால் கடன் பெறுவதை அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா? இப்படிப்பட்ட கடன்களுக்கு வட்டி விகிதத்தை குறைக்கவேண்டுமென்று அரசு சொல்லி அதே வட்டி விகிதத்தை கடன் கொடுக்கிற மற்றவர்களிடத்திலே வசூலிக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10.00)

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, நாங்களே கடன் வாங்கித்தான் கடன் தந்து கொண்டு இருக்கிறோம். அதற்கு 8 சதவிகிதம் வட்டி தரவேண்டியிருக்கிறது. இப்போது பல சங்கங்களில் அவர்கள் பொறுப்பை ஏற்றுக்கொண்டு கடன் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதோடு, மற்ற, மற்ற காரியங்களும் நடைபெற வேண்டியிருக்கிறது. இதைவிட குறைந்த வட்டி விகிதத்திற்கு நாட்டிலே—தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே கூட பணம் கிடைப்பது இல்லை. மாண்புமிகு திரு. தங்கமணி அவர்கள் அதிகமாகப் பணம் ஏன் வாங்கக்கூடாது என்று கேட்டார்கள். உங்களுக்குச் சொல்லவேண்டுமானால் 70-ம் ஆண்டிலிருந்து அதிகமாகப் பணம் வாங்கி, இந்த ஆண்டு 15 கோடி ரூபாய்க்கு மனுக்களை வாங்கி எல். ஐ. சி.க்கு அனுப்பியிருக்கிறோம். பணம் வரவை பட்டுவாடா செய்து கொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, எல்.ஐ.சி.-யிலிருந்து கல்கத்தா, பம்பாய் போன்ற நகரங்களுக்கு அதிகமாகப் பணம் ஒதுக்குவதாகவும், தமிழ் நாட்டிற்குக் குறைந்த அளவுக்கு பணம் ஒதுக்குவதாகவும், அதனால்தான் கிராமச் சங்கங்களுக்கு நிதி ஒதுக்குவதில் காலதாமதம் ஆவதாகவும் சொல்லப்படுகிறது. ஆகவே, நமது அரசாங்கம் சம்பந்தப்பட்ட நிர்வாகத்தை அணுகி தமிழ்நாட்டிற்கு அதிகமாக நிதி ஒதுக்கித் தருவதற்கு வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, மற்ற மாநிலங்களுக்கு எவ்வளவு கொடுக்கிறார்கள் என்ற புள்ளிவிவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. தற்போது எல். ஐ. சி.யை நாம் அணுகிக் கேட்ட நேரத்தில் எல்லாம் அவர்கள் கடன் உதவி தந்துகொண்டு வருகிறார்கள். கிராம வீட்டு வசதி சங்கங்களுக்குக் கடன் கொடுப்பதில் சிறிது தாமதம் ஏற்படுவதற்குக் காரணம், பம்பாயிலிருந்து பணம் வருவதற்கு காலதாமதம் ஆவதே தவிர வேறு அல்ல.

*56 வினா—**திரு. கே. எ. வகாப்:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வீட்டு அடமான கடன் சங்கத்தால் வடார்க்காடு மாவட்டம், வந்தவாசி கிளைக்கு அளிக்கப்பட்டுள்ள கடன் தொகை எவ்வளவு?

(இ) கட்டப்பட்ட வீடுகள் எத்தனை?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) தமிழ்நாடு வீட்டு வசதி சங்கத்தால் வந்தவாசி கூட்டுறவு வீடு அடமான சங்கத்திற்கு ரூ. 8,12,000 கடனாக கொடுக்கப்பட்டுள்ளது.

(இ) 6 வீடுகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளன. 27 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

**திரு. கே. எ. வகாப்:** தலைவரவர்களே, இப்படி அளிக்கப்படும் அங்கே கோரிக்கை நிறைய வந்த இருக்கின்றன. ஆனால் பணத்தைப் பெறுவதில் நீண்ட காலதாமதம் ஆகிறது. இதைத் தவிர்க்க எல். ஐ. சி. கடன் கொடுப்பதைப் பயன்படுத்தி, அதை விரைவாக பட்டுவாடா செய்யவும்—வட்டி விகிதம் உண்மையில் 11 சதவிகிதம் இல்லை, 13 சதவிகிதத்துக்கும் அதிகமாக இருக்கிறது, இதைக் குறைக்கவேண்டும்; நடைமுறையில் 8 சத விகிதம் என்று இருந்தாலும் 5 சத விகிதம் கூடுதலாகத் அதைத் தருகிறார்கள்—இதைக் குறைக்கவும் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, இந்த வட்டிக்கே பணம் நாட்டிலே கிடைப்பது இல்லை என்பது உறுப்பினர் வகாப் அவர்களுக்கே தெரியும். ஆகவே, வட்டி விகிதத்





தைக் குறைப்பது என்பது இயலாத காரியம். கடன்தொகையை வேகமாகவும், விரைவாகவும் தருவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** வடார்க்காடு மாவட்டம் வந்தவாசியில் கட்டிக் கொடுப்பதுபோல், அந்த மாவட்டத்தில் எந்தெந்த நகரங்களில் இப்படிப்பட்ட வீடு கட்டும் திட்டம் நடைமுறையில் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, ஏராளமான நகரங்களில் இப்படிப்பட்ட வீடு கட்டும் சங்கங்கள் இருக்கின்றன. எந்தெந்த நகரங்கள் என்பதற்கு தனிக் கேள்வி போட்டால் நான் பதில் அளிக்க முடியும். மாவட்டத் தலைநகரம் பூராவிலும் இந்தச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. அதேபோல் கிராம வீட்டு வசதி சங்கங்களும், கிராம வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களும் இயங்கி வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, **கனம்** அமைச்சர் அவர்கள் 30,000 ரூபாய் கொடுப்பதாகச் சொன்னார்கள். சாதாரணமாக வீடு கட்டுவதற்கு ஒரு சதுர அடிக்கு இப்போது ரூ. 65.70 ஆகிறது. இந்த ரூ. 30,000 கொடுத்தால் வீடு கட்டுவது பாதியில் நின்று விடுகிறது. ஆகவே, அதை தயவுசெய்து ரூ. 50,000 என்று உயர்த்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** எவ்வளவு பணம் வந்தாலும், எவ்வளவு பெரிய வீடுவேண்டுமானாலும் கட்டலாம். வீட்டு வசதி வாரியத்தில் ரூ. 30,000-ல் வீடு கட்டியிருக்கிறோம். அந்த அளவுக்குக் கூட வீடு இல்லாதவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தச் சங்கம் தற்போது உதவி செய்துகொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். எ. லத்தீப்:** இந்தத் திட்டத்தை ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலிருந்து கடன் பெற்று நிறைவேற்றி வருவதாகச் சொன்னார்கள். ஆயுள் காப்பீட்டுக் கழகம் இந்தச் சங்கத்திற்கு எந்த சதவிகிதத்தில் வட்டிக்குப் பணம் கொடுக்கிறது? அந்தச் சங்கம் வீடுகட்டுகிறவர்களுக்கு எந்த சதவிகிதத்தின் அடிப்படையில் பணம் கொடுக்கிறது? இரண்டிற்கும் உள்ள வித்தி

யாசம் என்ன? இதில் எந்த அளவுக்கு நிர்வாகச் செலவிற்காக அந்தச் சொசைடிகள் பயன்படுத்திக்கொள்கின்றன? இது ஒரு சமூக நலப் பணி என்பதால், நிர்வாகச் செலவிற்காக அரசு தனி மானியம் ஒதுக்கி, இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றித்தர முன்வருவார்களா? வட்டி விகிதத்தை அதன் மூலம் குறைக்க வழிவகை காணப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, நான் ஏற்கனவே இந்தக் கேள்விக்கு பதில் அளிக்கிற நேரத்தில் சொன்னேன். எல்.ஐ.சி. நிறுவனம் நமக்கு 8 சதவிகிதம் வட்டிக்கு பணம் தருகிறது. மாநில சங்கங்கள் அதன்மேல் ½ சதவிகிதம் வட்டி வைத்துத் தருகிறார்கள். அவர்களிடமிருந்து பெறுகிறபோது 'மார்ஜினல் இன்டரஸ்ட் குரூப் ஆப் இன்சூரன்ஸ் ஸ்கீம்' என்ற அடிப்படையில் எல்.ஐ.சி.க்கு 1 சதவிகிதம் கட்ட வேண்டும். ஆகவே, 9½ சதவிகிதம் வருகிறது. (குறுக்கிடு) மானியம் வேறு. இது கட்டிடம், சொத்து; சொந்த சொத்து. ஆகவே, பிரைமரி ஹவுசிங் சொசைடி 1¼ சதவிகிதம் பெறுகிறார்கள். கடைசியாக இருக்கும் கூட்டுறவுச் சங்கம் 10¾ சதவிகிதத்தில் கடன் பெறுகிறார்கள். அவர்கள் அதற்குமேல் வட்டி விகிதம் வைத்துத் தருகிறார்கள். இந்த அளவுக்குக் குறைந்த வட்டிக்கு நாட்டிலே பணம் கிடையாது. அது என்னைவிட உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

**திரு. ஏ. எம். இராஜா:** தலைவரவர்களே, இந்தக் கடன் வசதி பெரும்பாலும் நடுத்தர வகுப்பினருக்கு வழங்கப்படுவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். நடுத்தர வகுப்பினருக்குத் தமிழ்நாடு ஹவுசிங் போர்டில் எம்.ஐ.ஜி. ஸ்கீமில் 800 சதுர அடி அளவில் வீடு கட்டித் தருகிறார்கள். அது போன்ற வீடு கட்டுவதற்கு சதுர அடிக்கு ரூ. 50-க்கும் அதிகமாக செலவாகிறது. ஹவுசிங் போர்டிலே கூட ரூ. 50 ஒரு சதுர அடிக்கு என்று வைத்து இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே, அந்தத் தொகை ரூ. 30,000 என்று இருப்பதை ரூ. 40,000 என்று உயர்த்த அரசாங்கம் முன் வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, நடுத்தரக் குடும்பத்திற்கு 800 சதுர அடியில் வீடு இருந்தால் போதும். இரண்டு படுக்கை அறை, 1 வரவேற்பறை, ஒரு சமையல் அறை, ஒரு கழிவு அறை இருந்தால் போதும். 410 சதுர அடியில்



ரூ. 10,500 செலவில், 12,500 செலவில் இப்போது ஹவுசிங் போர்டில் வீடு கட்டுகிறோம். உறுப்பினருக்கும் அது நன்றாகத் தெரியும். அப்படிப்பட்ட வீடுகள் தாலுக்கா நகரங்களில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டப்படுகிறது. அதைப் போன்ற வீடுகள் நடுத்தரக் குடும்பத்தினருக்கு, குடும்பக் கட்டுப்பாடு செய்துகொண்டுள்ள குடும்பத்திற்குப் போதும். அது மாதிரி வீடு கட்ட அந்தத் தொகை போதும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இராம அரங்கண்ணல்:** தலைவரவர்களே, குடிசை மாற்று வாரியம் குடிசையில் வாழும் மக்களுக்கு வீடு கட்டிக்கொடுத்துக் கொண்டிருக்கிறது. வீட்டு வசதி வாரியம், அடமான சங்கங்கள், மத்தியத் தர மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்துக்கொண்டிருக்கின்றன. குடிசை வாழ் மக்களுக்கும் மத்தியத் தர மக்களுக்கும் இடையே நாட்டில் 'இகனாமிகலி வீக்கர் செக்ஷன்' என்று ஒன்று இருக்கிறது. அவர்களுக்கு இந்த எல்.ஐ.சி. மூலமாகக் கிடைக்கும் பண உதவியைக்கொண்டு வீடு கட்டித்தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, இப்போது கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக தமிழ்நாட்டில் உள்ள 'எகனாமிகலி வீக்கர்' செக்ஷனில் உள்ள மக்களுக்கும் வீடு கட்டித்தரப் படுகிறது. உதாரணமாக, சென்னை நகரத்தில் கலைஞர் கருணாநிதி நகர், அறிஞர் அண்ணா நகர் போன்ற இடங்களில் இந்த வீக்கர் செக்ஷனலில் உள்ள மக்களுக்காக 600 வீடுகள் — பிரிபேப்ரிகேடட்' ஹவுசஸ் என்ற முறையில் கட்டப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

## 2. அறிவிப்பு

### ஆளுநர் அவர்களிடமிருந்து வந்துள்ள செய்தி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து 3—3—1975-ம் நாளிட்ட கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றது என்பதை அறிவிக்கிறேன்:—

"நான் சட்டமன்றக் கூட்டத்தைத் துவக்கிவைத்து நிகழ்த்திய உரைக்கென சட்டப்பேரவை நிறைவேற்றியுள்ள நன்றியறிவிப்புத் தீர்மானத்தைப் பெற்றுக்கொண்டதில் மகிழ்ச்சி அடைகிறேன்."

### 3. நடைமுறைக் கேள்விகள்.

### (அ) மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அளித்த திருத்த அறிக்கை குறித்து.

DR. H. V. HANDE: Sir, I wish to raise a very valid point of order for which I request you to give me at least two or three minutes' time. Yesterday under rule 82 the Hon. Minister Shanmugam made a statement here. Rule 82 clearly states that a statement may be made by a Minister on a matter of public importance with the consent of the Hon. Speaker. But that particular statement that he made was not of public importance, but was only a reply or a correction to his earlier assertion. The Hon. Speaker himself was here. Yesterday while I was speaking, the point was raised by the Hon. Minister Shanmugam saying that Mr. Salam was not given contracts by the Government.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 82, விதி 82-ஏ என்று இருக்கிறது. இரண்டும் இருக்கிறது.

DR. H. V. HANDE: Yesterday it was made under Rule 82. Therefore yesterday what actually happened was this. I was saying in this House, I was making a charge that Abdul Salam was given contracts by the Government after he was blacklisted. That was my charge. I never mentioned the Hon. Minister Shanmugam. But at that time instead of the Hon. Chief Minister refulting my statement on behalf of the Cabinet, Mr. Shanmugam got up and said that he did not give the contracts. Again and again I maintained that the Government gave the contracts and that I would also prove, If you will kindly examine my speech—I will also prove that either Mr. Salam or his benamis were give the contracts. The Hon. Speaker was a witness. Then the House agreed that I have to prove it.

Coming to the point; there are two things. One is, misuse or wrong use of rule 82. The other is the onus that was cast on me, the responsibility cast on me to prove this. My submission is that after I have clearly stated in this House that this is the position, the Hon. Minister Shanmugam refuted the same.



I would like to know whether the following things are in order. I would like to know from you whether it was in order for Mr. Shanmugam to get up and refute me when I accused the Government in general.

Secondly, was it in order on the part of Mr. Shanmugam to mislead the House and deliberately make an incorrect statement with an attempt to confuse me while I was talking and then side-track my argument?

Thirdly was it in order for the Hon. Minister to say he was not aware of the truth when the whole thing is being raked up in this House again and again since three months?

தாண்டவராயன் சமாசாரம் பற்றி பேசிக்கொண்டு வருகிறோம்.

The whole thing has come out in the Report of the Estimates Committee.

Fourthly, was it in order for the Hon. Thiru Shanmugam to come up with a reply under Rule 82 of the Assembly Rules at 1-10 p.m.? He could have come with the statement earlier. Was it done with the deliberate intention of shutting out the publication of the information relating to his open confession in the evening press.

Sir, the Hon. Thiru Shanmugam has been regularly defending the blacklisted contractor. The Hon. Chief Minister has been keeping quiet.

Finally was it in order for him to dissociate himself with the collective responsibility. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயிண்ட் ஆப் ஆர்டரை மாத்திரம் சொல்லுங்கள்.

DR. H. V. HANDE: He has stated that the crime was committed not by him but by somebody else. I therefore make a request to the Hon. Speaker to inform the House whether the Hon. Minister can make a statement under rule 82 . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 82 இல்லை, 82-ஏ.

டாக்டர் எச். வி. ஹாண்டே: 82-லே தான் பேசினார்கள். நாங்கள் இங்கே அண்டர் ரூல் 82 என்றுதான் பேசினார்கள்.

(Dr. H. V. HONDE) [1975 மார்ச் 4

பேசிக் கொண்டேயிருக்கிறபோது அமைச்சர்கள் குறுக்கிடுகிருர்கள். அப்படியில்லை என்று மறுக்கிருர்கள். அவர்களுக்கு ஆதாரம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயிண்ட் ஆப் ஆர்டரில் வருவதைத்தான் சொல்ல வேண்டும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** மறுக்கவில்லை என்று சொன்னுல் நாங்கள் புள்ளி விவரங்களோடு சொல்கிருேம். இது தொடர்ந்து நடக்கிறது. இதை ஒரு கருவியாகப் பயன்படுத்திக்கொண்டு தான் பேரவை நடக்கிறது. இப்படிச் செய்தால் 82-ம் விதியின் கீழ் நாங்கள் விவாதிக்க முடியாது. அவர்கள் முதலிலேயே ஒத்துக் கொண்டால் இன்னும் சில கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருப்போம். அப்படி கருத்துக்களெல்லாம் மறுக்கப்பட்டு 82-ம் விதி துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது. ஆகவே, இது முடிவு செய்யப்பட வேண்டிய ஒன்று.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** டாக்டர் ஹாண்டே சொல்வதிலே ஒரே ஒரு பாயிண்டை நான் மறுக்கிறேன். காண்ட்ராக்டர் பெயர் பிளாக் லிஸ்ட் செய்யப்பட்டதாகச் சொல்கிருர். காண்ட்ராக்டர் பெயர் பிளாக் லிஸ்ட் செய்யப்படவில்லை. பிளாக் லிஸ்ட் செய்யப்பட்டு பிறகு அவருக்குக் காண்ட்ராக்ட் கொடுக்கப்படவில்லை. விதிகளின்படி காண்ட்ராக்ட் கொடுக்கப்பட்டது. ஆகவே பிளாக் லிஸ்ட் செய்யப்படவில்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அமைச்சரவர்கள் ஒத்துக்கொண்டார்கள். சவாலை ஏற்றுக்கொள்கிறீர்களா என்று கேட்டார்கள். ஒத்துக்கொள்கிறேன் என்று சொன்னேன். பி.டபிள்யூ.டி. மினிஸ்டர் இருந்த நேரத்தில் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நேற்று சொல்லும்போது பிளாக் லிஸ்டட் என்று நீங்கள் சொல்லவில்லை. பத்திரிகையில் நீங்கள் சொன்னதாகப் போடப்பட்டிருக்கிறது. அப்படி பிளாக் லிஸ்ட் செய்யப்படவில்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நீங்கள் நிரூபிக்க முடியுமா என்று சொன்ன பிறகு அப்போதே சொல்லியிருக்கலாம் அல்லவா? குற்றச்சாட்டை மறுத்து இப்போது சொல்லவில்லை என்று சொன்னுல் இது என்ன நியாயம்?



1975 மார்ச் 4]

Thiru K. T. K. TANGAMANI: Sir, Rule 82-A has been specially introduced to give opportunities for the Ministers to correct themselves. Not only yesterday but also on another occasion a similar question has arisen. On the previous occasion, the Hon. Minister for Industries had stated that a particular factory in the Nilgiris was going to be in the joint sector. Immediately the former Minister for Industries got up and stated that it was going to be in the public sector. To this day, it has not been corrected. So when statements are made to correct the previous statement, it should be made as soon as possible......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயிண்ட் ஆப் ஆர்டரிலே தான் 82-படி மினிஸ்டர் ஸ்டேட்மெண்ட் பண்ணக்கூடாது என்று சொல்கிறீர்களா?

Thiru K. T. K. THANGAMANI : I am not saying that here. The hon. Member, Dr. Hande, says that one statement was made by a Minister and a little later he made a contradictory statement. In other words, be corrects himself. On a previous occasion, two statements were made by two Ministers. One Minister said that the factory would be in the joint sector and another Minister said that it would be in the public sector. So, we are in the dark to know which is the correct thing and it is our duty to bring it to your notice......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த நேரத்தில் தங்கமணி நீங்கள் இந்த அவையில் தானே இருந்தீர்கள் அப்போதே சொல்லியிருக்கலாமே.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விடையைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்று அப்போதே சொல்லப்பட்டிருக்கிறது. திருத்திக் கொள்ள வேண்டுமென்று சொல்லவில்லை என்று சொல்வது தவறு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போதிருக்கிற அமைச்சர் ஒன்றைச் சொன்னுர். முன்பிருந்த அமைச்சர் அதைத் திருத்திச் சொன்னுர் என்று இப்போது சொல்கிறீர்கள். நீங்கள் அப்போது இந்த அவையிலே இருந்து இருக்கிறீர்கள். அப்போதே இதைக் கேட்டிருக்கலாம். பாயிண்ட் ஆப் ஆர்டர் தென் அண்டு தேர் கொண்டுவர வேண்டும். இப்போது இவ்வளவு நாள் கழித்தா சொல்வது?

Thiru K. T. K. THANGAMANI : **Ruling is necessary.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்போதே நீங்கள் கொண்டு வந்திருக்க வேண்டும்.

THIRU K. T. K. TANGAMANI : Clarification is necessary. Whether the statement made by the Minister holding that portfolio was the correct one or the statement made by another Minister was the correct one. Actually we have to go by the statement of the concerned Minister . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் கேட்கிறது என்ன வென்றால் இரண்டு ஸ்டேட்மெண்ட் கொடுக்கிறபோது தங்கமணி இந்த அறையிலே தான் இருந்தார் . எது உண்மை என்று அப்போதே கேட்டிருக்க வேண்டும். இத்தனை நாள் கழித்தா பேசுவது?

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, நேற்றைய தினம் மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒரு திருத்தத்தைச் சொன்னார்கள். 82-ஏ விதிப்படி அப்படி ஒரு திருத்தத்தைக் கொடுக்கலாம். நான் அதற்குள் போகவில்லை. 82-ஏ என்ன சொல்கிறது என்று சொன்னால்

' There shall be no discussion on such a statement '

ஒரு அமைச்சர் ஒரு ஸ்டேட்மெண்ட் வைத்தால் அதற்குப் பிறகு அதைப் பற்றி விவாதிக்கக் கூடாது என்று இருக்கிறபோது இங்கே திரு. ஹாண்டே அவர்கள் விவாதிக்கலாமா ?

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவருடைய பாயிண்ட் ஆப் ஆர்டர் முடிந்தவுடன் பேசுங்கள். கொஞ்சம் பொறுமையாக இருங்கள்.

**திரு. நா. வீராசாமி :** நான் யாரையும் குறை சொல்லவில்லை. நம்முடைய விதிமுறையில் என்ன இருக்கிறது என்று சொன்னால் அந்த விதியிலே 82-ஏ 2-வது பாரகிராபில் அமைச்சர் விளக்கம் கொடுத்த பிறகு அதன் மீது விவாதிக்கக் கூடாது என்று சொல்லியிருக்கும்போது மறுபடியும் திரு. ஹாண்டே அவர்கள் விவாதிப்பது முறைதானா ? அதைச் சட்டமன்ற குறிப்பேடுகளில் அனுமதிக்கப் போகிறீர்களா ?



**டாக்டர் எச். வி. ஹாண்டே :** விதிமுறையெல்லாம் நான் சொல்லவில்லை. இந்த அவை கட்டளையிட்டது. இதை நிரூபிக்க முடியுமா என்று சவால் கொடுத்தார்கள். நான் ஏற்றுக்கொண்டேன். பிறகு நான் ஏற்றுக்கொண்ட கருத்தைத்தான் சொல்கிறீர்கள். சவால் விட்ட காரணத்தினாலே எனக்குக் கடமையிருக்கிறது. நான் பொறுப்பற்ற முறையில் சொன்னதாக நீங்கள் குற்றம் சாட்ட முடியும். அந்தக் கருத்தை அவர்கள் ஒத்துக் கொள்கிறார்கள். ஆகவே, அதை நான் மீண்டும் நிரூபிக்க வேண்டுமா ? மறுபடியும் நான் விளக்க வேண்டுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I would like to point out that there has been violation of Rule 82.

Mr. SPEAKER : Rule 82 or 82A.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Rule 82A states as follows :—

" When any statment made by a Minister on the floor of the House either by way of answer to a question (main or supplementary) or under rule 82 or otherwise is found to be incorrect by the Minister, he may, with the permission of the Speaker, make a further statement either in the same sitting or at any time thereafter ".

So far as Rule 82HA is concerned, the Hon. Minister must have made a wrong statement either by way of answer to a question, or a supplementary question. But here Dr. Haude was speaking and the Law Minister butted in and corrected it.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் படியுங்கள். இந்த அவையிலே பேசும்போது அமைச்சர்கள் தவறான கருத்தைச் சொல்லிவிட்டால் அதைத் திருத்தி, சரியான தகவல் கொடுக்க இந்த விதியில் இடமிருக்கிறது. தான் கொடுத்த தகவல் தவறானது என்று தெரிந்தவுடன், தவறைத் திருத்தி சரியான தகவல் கொடுக்க இந்த விதியின் கீழ் அவர்களுக்கு முழுக்க முழுக்க உரிமை இருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அமைச்சர் ப. உ. ச. கொடுத்த ஸ்டேட்மெண்டுக்கு திருத்தம் கொடுக்க உரிமை இருக்கிறது இந்த விதியின்படி. ஆனால் அமைச்சர் மாதவன் சொன்னது எந்த விதியின்கீழ் வரும்?

[1975 மார்ச் 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர்கள் கொடுக்கின்ற ஸ்டேட்மெண்ட் தவறு என்ற நிலை ஏற்படும்போது, தவறை திருத்தி சரியான ஸ்டேட்மெண்ட் கொடுக்க இந்த விதியின்கீழ் எல்லா அமைச்சர்களுக்கும் உரிமை இருக்கிறது. ஆகவே, இதில் எந்தவிதமான பாயின்ட் ஆஃப் ஆர்டரும் இல்லை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: What I say is, here the Law Minister quoted one case No. 1022/72 and said that what Dr. Hande said was wrong. It was an hon. Member Dr. Hande who was speaking. If he was wrong, it was up to the Hon. Chief Minister to have corrected it. But the Hon. Law Minister butted in and said something. He must have said that he was making statement under Rule 82 or 82-A.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதி 82(1)-ல்

'A statement may be made by a Minister on a matter of public importance with the consent of the Speaker'.

என்று சொல்லியிருக்கிறது. விதி 82-ன் படி எந்த நேரத்திலும் வேண்டுமானாலும் அமைச்சர்கள் ஸ்டேட்மென்ட் கொடுக்கலாம். அதில் தவறு இல்லை. அமைச்சர் ப. உ. ச. அவர்கள் சொன்னது விதி 82 (எ)-யில் வருகிறது. இங்கே 82, 82 (எ) என்று இரண்டு விதிகள் இருக்கின்றன. இந்த இரண்டு விதிகளின் கீழும் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் இந்த அவையில் முக்கிய தகவல் கொடுக்கலாம். விதி 82-ன்படி எந்த நேரத்தில் வேண்டுமானாலும் அமைச்சர்கள் தகவல் கொடுக்கலாம். விதி 82 (எ)-ன் படி கொடுக்கப்பட்ட தகவல் தவறு என்று தெரிந்தால் உடனே அதைத் திருத்தி சரியான தகவலைக் கொடுக்க அமைச்சர்களுக்கு உரிமை இருக்கிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: But it must be on a matter of public importance.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** திரு. தங்கமணி அவர்கள் ஒரு பிரச்சனையை எழுப்பியிருக்கிறார்கள். நான் பதில் சொல்லும்போது கூட்டுத்துறை என்று சொன்னேன். உடனே அமைச்சர் மாதவன் அவர்கள் எழுந்து, கூட்டுத்துறை என்று சொன்னது சரியல்ல; அது பப்ளிக் செக்டார் என்று திருத்திக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். அப்போதே அது திருத்திக்கொள்ளப்பட்டுவிட்டது.



1975 மார்ச் 4] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

The rule also is clear Sir. It says 'that a statement may be made by a Minister on a matter of public importance with the consent of the Speaker'. It does not say the statement will be made by the 'concerned Minister'. My colleague corrected it. It is done by another Minister. It is all collective responsibility.

DR. H. V. HANDE: Where did that 'collective responsibility' go yesterday? The Hon. Thiru P. U. Shanmugam wanted to salvage himself and I told clearly that he was letting down the Cabinet.

THIRU K. T. K. TANGAMANI: My point of order is specific, Sir. I would request you to go through Rule 82-A once again. It says that when a statement is made, etc. etc. by a Minister he may with the permission of the Speaker make a further statement either in the same sitting or at any time thereafter. My contention is that the Hon. Minister who made a wrong statement, has not to this day, with your leave, corrected it. That is my point. On that I want your ruling. The Hon. Minister who made that statement was the Minister for Industries. He made a statement which was incorrect. If he thinks it is incorrect statement, he has to get up and with your leave, say, 'Sir, I have made an incorrect statement' in the same sitting or in the subsequent sitting. My contention, is, to this day, that has not been done. Rule 82-A has not been invoked. The House is at a disadvantage. We do not know whether the statement made by the Minister for Industries is the correct statement or the statement made by another Minister correcting it is the correct statement. The Rule is quite clear, Sir. It does not speak of collective responsibility. The Minister who made the wrong statement, himself must say that he had made an incorrect statement and correct it. To this day that has not been done. I want your ruling on that piont.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஒரு தீர்ப்பைச் சொன்னால் அதைப் பிடித்துக் கொண்டு டாக்டர் ஹாண்டே அவர்கள் இன்னொரு தகவலுக்குப் போகிறார்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** நான் சொல்லும்போது, காலை வாரி விட்டார்கள் என்று சொன்னேன். அந்தமாதிரி சொல்லக் கூடாது என்று நீங்கள் சொன்னீர்கள். நான் பின்னால் ஆங்கிலத்தில் பேசினேன்.

The Hon. THIRU P. U. SHANMUGAM is letting down the Ministry. Let the Hon. Chief Minister say whether Mr. P. U. Shanmugam has 'dissociated' himself from the Ministry. Why has he not come to the House now?

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அந்தப் பதிலைத் திருத்திக் கொள்ளும் வகையில் அமைச்சர் மாதவன் அவர்கள் சொன்னார்கள். ஆனால் மாதவன் சொன்னது சரி, நான் சொன்னது சரியல்ல என்று சாதிக் அவர்கள் சொல்லவில்லை. அப்படிச் சொல்லாமல் இருந்தாலும் அமைச்சர் மாதவன் சொன்னதுதான் சரி என்று அர்த்தம். ஆகவே, இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை. அந்த நேரத்தில் மாதவன் அவர்கள் சொன்னது தவறு என்று சொல்லவில்லை. அதை ஒப்புக் கொண்டார்கள். அதனால் அது சரி என்றுதான் அர்த்தம். அப்போதே தங்கமணி அவர்கள் இப்படி ஒரு பாயின்ட் ஆப் ஆர்டரை எழுப்பி இருந்தால் அன்றே பிரச்சினை தீர்ந்திருக்கும். அவ்வப்போது சரியான தகவல் தெரிந்து கொள்வதற்குத்தான், அல்லது குறை இருந்தால் சுட்டிக்காட்டுவதற்குத்தான் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவது முறை. பல நாள் கழித்து ஏற்கெனவே சொன்ன கருத்துக்கு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புவது நல்லதல்ல.

டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டரை எழுப்பினார்கள். அது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. அவர்கள் சொன்ன குற்றச்சாட்டுக்குப் பொறுப்பேற்றுக்கொள்கிறீர்களா என்று கேட்டார்கள். பொறுப்பேற்றுக்கொள்கிறேன் என்று நீங்கள் சொன்னீர்கள். பின்னர் ரிக்கார்டுகளைப் பார்த்ததில் ஹாண்டே அவர்கள் சொன்னது உண்மை என்று தெரியவந்தது. அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு இந்த அவையிலே 'கான்ட்ராக்ட்' கொடுக்கவில்லை என்று முதலில் சொன்னார்கள். பின்னாலும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று ரிக்கார்டுகள் மூலம் தெரிய வந்ததால், கொடுக்கப்பட்டிருக்கிறது என்று இந்த அவையிலே தெரிவித்தார்கள்.

*டாக்டர் எச். வி. ஹாண்டே:* He is letting down the Ministry. Has he dissociated himself from the Ministry? நான் க்ளியராக சொன்னேன். அதற்கு முதலமைச்சரவர்கள் பதில் சொல்லவேண்டும். அவர் சொன்னால் ஏற்றுக்கொள்கிறேன்.



*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* அவர் சொல்லட்டும், இவர் சொல்லட்டும் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் வற்புறுத்துவது முறையல்ல. நான் இப்படிச் சொன்னேன், அவர் இப்படிச் சொன்னார், அவர் இப்படிச் சொல்லியிருக்கலாம் என்று விவாதத்தில் வேண்டுமானால் பேசலாம்; ஆனால் பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. நீங்கள் சொன்னது தவறு என்று முதலில் சொன்னார்கள். பிறகு அது உண்மைதான் என்று தெரிந்த பின்னால் திருத்தம் கொடுத்தார்கள். இதில் முறைகேடு எதுவும் இல்லை.

அடுத்து, விதி, 41-ன் கீழ் திரு. பெ. சௌந்தரபாண்டியன் அவர்கள் . . . .

THIRU M. A. LATHEEF: On a point of order. Sir, arising out of your ruling on the point of order of Dr. Hande.........

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* அவர் சொன்னது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று தீர்ப்பு சொல்லிவிட்டேன். அதற்குப் பிறகு இன்னொரு ரூலிங் கொடுக்க வேண்டியதில்லை.

THIRU M. A. LATHEEF: I am raising a different point of order arising out of your ruling on the point of order raised by Dr. Hande. My point is no doubt any Minister is entitled to make a statement under Rule 82 of the Assembly Rules and he is also entitled to correct himself under Rule 82-A or to correct a statement made by any member of the Council of Ministers under Rule 82-A.

[முற்பகல் 10-30]

But the main contention of Dr. Hande was that the time that was chosen to make such a statement was at the fag end of the sitting . .I will just finish and then the Hon. Speaker may give his ruling. He made the statement at the fag end of the sitting at about 1.10 p.m. Thereby the hon. Member feels that he has been deprived of the opportunity to meet the charge and that the Minister has done it in tentionally. That was the point raised by him—whether the Minister can choose such a time whereby the rights of the Members can be deprived of? On that point the Hon. Speaker may give his ruling.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* At any time என்று இருக்கிறது. பேரவை நிகழ்ச்சிகள் 1-30-க்கு முடிகிறது என்றால் 1-29-ல் கூடச் சொல்லலாம். அதில் எந்தவிதமான தவறும் இல்லை.

[1975 மார்ச் 4

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Last time I raised the point that when the Budget is being discussed whether the Speake can allow motions under Rule 41 or 42. If the Hon. Speaker is giving to relax that policy, we will all give notice of a number of motions under Rules 41 and 42. By that you are taking away the time for discussion on the Budget. Everybody will start talking under Rule 41 or 42 for half-an hour or one-hour. Then where is the time for discussion on the Budget?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்பி ½ மணி நேரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறீர்களே, அந்த நேரத்தை மிச்சம் செய்யலாம். (திருமதி அனந்தநாயகி குறுக்கிடு) நீங்கள் உட்காருங்கள், அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தில் அதுபற்றி முடிவு செய்துவிட்டால்—ரூல் 41, ரூல் 42 வரக்கூடாது என்று சொல்லிவிட்டால் நல்லது. அப்படி முடிவு எடுத்து விடுங்கள்.

## 4. கவன ஈர்ப்பு

### திருச்சி நகரத்தில் உள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டை போக்குவது குறித்து

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி நகரத்தில் தற்போது இருந்துவரும் குடிநீர்த் தட்டுப்பாட்டினைப் போக்க வேண்டியது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு சட்டப் பேரவை விதி 41-ன் கீழ் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, தற்போதைய திருச்சிராப்பள்ளி குடிநீர் திட்டம், குழாய்க் கிணறுகளிலிருந்தும், வடி கிணறுகளிலிருந்தும் தண்ணீர் எடுப்பதாகும். ஐந்து பழைய கிணறுகளும், ஆறு புதிய கிணறுகளும், மூன்று வடி கிணறுகளும் உள்ளன. ஒரு நாளைக்கு மேற்சொல்லப்பட்ட எல்லா கிணறுகளிலிருந்தும் சுமார் 68 லட்சம் காலன் தண்ணீர் கிடைக்கிறது. பழைய நீர் இறைக்கும் நிலையத்திலிருந்து பம்ப் மூலம் நகரின் தென்மேற்குப் பகுதிக்கும். அதாவது உறையூர் கன்டோன்மெண்ட், பாலக்கரை,



1975 மார்ச் 4] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

தில்லைநகர் முதலிய இடங்களுக்கும், புதிய நீர் இறைக்கும் நிலையத்திலிருந்து மலைக்கோட்டைப் பகுதிக்கும் எடுத்துச் செல்லப் படுகிறது.

காவேரி நதியில் நீர் இருக்கும்போது ஒரு நாளைக்கு, இந் நகருக்கு சாதாரணமாக 65 லட்சம் காலனிலிருந்து 70 லட்சம் காலன் வரை தண்ணீர் கொடுக்கப்பட்டது. நதியில் நீரோட்டமில்லாமல் இருக்கும்பொழுது இந்த அளவு 40 முதல் 45 லட்சம் காலன் அளவுக்குக் குறைந்துவிடுகிறது. 1974-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை தண்ணீர் திருப்திகரமான அளவுக்குக் கிடைத்து வந்தது. பின்பு 12—2—1975 வரை ஒரு நாளைக்கு 50 லட்சம் முதல் 60 லட்சம் காலன் அளவுக்குக் குறைந்தது. இது 13—2—1975-ல் இருந்து 17—2—1975 வரை ஒரு நாளைக்கு 40 முதல் 45 லட்சம் காலன் ஆகக் குறைந்தது. 17—2—1975-க்குப் பிறகு, தலைமை நிலையத்திற்குத் தண்ணீர் கொண்டுபோக ஊற்றுக் கால்வாய் வெட்டப்பட்டு, இப்போது ஒரு நாளைக்கு 55 முதல் 60 லட்சம் காலன் கிடைக்கிறது. இது மிகவும் திருப்திகரமான அளவில் உள்ளது. குறைவைச் சரி செய்வதற்கு ஆறுவது என் கொண்ட கிணற்றைச் சுற்றி ஆறு அங்குலக் குறுக்களவுள்ள வடி கிணறுகள் அமைத்து அவைகளைக் கிழ வளைகால்கள் (Syphon arms) மூலமாக கிணற்றில் இணைப்பதற்கான வேலை நடைபெறுகிறது. 1975-ஆம் ஆண்டு மார்ச் 31 தேதிக்குள் இவ்வேலை முடிவுபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதிலிருந்து மேலும் 9-லிருந்து 10 லட்சம் காலன் வரை தண்ணீர் அதிகமாகக் கிடைக்கலாம்.

இதோடு திருச்சிராப்பள்ளி குடிநீர்த் திட்டத்தை மேலும் அபிவிருத்தி செய்யும் திட்டம் ஆயுள் காப்புக் கழகத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்படி ஒரு நாளைக்கு பத்து மில்லியன் காலன் நீர் கொடுக்கும் அளவுக்கு 2 சேர்க்கும் கிணறுகள் ( Collector wells ) கட்டப் படவேண்டும். இந்த நீர் மேலும், மூன்று தேக்க நிலைகளுடன் (Reservoirs) நகருக்கு எடுத்துச் செல்லப்படும். இந்தத் திட்டத்திற்கு ரூ. 130 லட்சம் அரசு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, ஆயுள் காப்புறுதிக் கழகத்தின் உதவியுடன் நடைபெற இருக்கிற இந்தத்

[திரு. பெ. சௌந்தரபாண்டியன்] [1975 மார்ச் 4

திட்டம் எந்தத் தேதியில் இருந்து அமுலுக்கு வரும்? அந்தப் பணி எப்போது துவங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** இப்போதுதான் அந்த வேலை துவங்க இருக்கிறது. சீக்கிரமாக முடிந்துவிடும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தற்போது நிலவி வரும் தண்ணீர் பற்றாக்குறையைப் போக்க உடனடியாக ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** வருகிற டிசம்பர் மாதத்திற்குள் 60 அடி ஆழம் வரை 2.3 லட்சம் ரூபாய் மதிப்பில் ஒரு கிணறு எடுக்க விசேஷ திட்டம் போட்டு அது நடவடிக்கையில் இருக்கிறது. மார்ச் 31 ஆம் தேதிக்குள்ளாகவே 10 லட்சம் காலன் அதிகமாகத் தண்ணீர் கொடுக்க வசதி ஏற்பட்டுவிடும்.

### 3. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி

### (ஆ). ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்குப் பேசுவதற்கு அதிக வாய்ப்புக் கொடுக்காதது குறித்து

**திரு. நா. வீராசாமி:** சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, பட்ஜெட் உரையின் மீது விவாதம் நடைபெறுகிற நேரத்தில் ஆளுங்கட்சியைச் சேர்ந்த எங்களுக்குப் பெரும்பாலும் நேரம் கிடைப்பதில்லை. 168 உறுப்பினர்கள் ஆளுங் கட்சியில் இருக்கிறோம். பெரும்பான்மையோர் பங்கேற்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். நீங்கள் நேரம் ஒதுக்குவதில் ஏதாவது ஒரு முறையைக் கடைப் பிடித்தால் நன்றாக இருக்கும். எங்கள் 168 பேர்களில் பெரும்பாலோருக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை. நாங்கள் கொறடா விடத்தில் சண்டை போடவேண்டியதாக இருக்கிறது. ஒரு நாளைக்கு ஐந்து பெயர்களைத்தான் எழுதிக்கொடுப்பேன் என்கிறார்கள். ஒருவருக்குப் பேச பத்து நிமிடம்தான் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். அதனால் ஆளுங்கட்சியைச் சேர்ந்த பெரும்பாலான உறுப்பினர்கள் வருத்தத்தோடு இருக்கிறார்கள். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள், நீங்கள்



1975 மார்ச் 4] [திரு. நா. வீராசாமி]

மொத்தம் இருக்கக்கூடிய நேரத்தில் ஆளுங்கட்சிக்கு இவ்வளவு நேரம், எதிர்க்கட்சிகளுக்கு இவ்வளவு நேரம் என்பதாக நேரத்தை ஒதுக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுபற்றி அலுவல் ஆய்வுக் குழுவில் பேசி முடிவு செய்யலாம். அடுத்து திரு. பொம்மன் அவர்கள் தம்முடைய பேச்சைத் தொடர்வார்கள்.

### 5. 1975-76-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

* **திரு. கு. அ. பொம்மன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று என்னுடைய பேச்சின் இறுதியில் எப்பநாடு நிலம்பற்றி எடுத்துக் கூறினேன். எப்பநாடு கிராம விவசாயிகளின் கோரிக்கைகிணங்க மாவட்ட ஆட்சித் தலைவர், வருவாய்த் துறை அதிகாரிகள், வனத் துறை அதிகாரிகள் ஆகியவர்களைக் கூட்டி விவாதித்தபோது அந்த நிலம் நெல் சாகுபடிக்கு ஏற்றதுதான். ஆனால் தடுப்புகள் கட்ட வேண்டும். அதற்கு 1 லட்சம் செலவாகும் என்றார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரும் அந்தக் கிராம விவசாயிகளை 1 லட்சம் ரூபாய் கட்டச் சொல்லி உத்தரவிட்டிருந்தார்கள். அந்த 1 லட்சம் ரூபாய் பணத்தை விவசாயிகள் உடனடியாகக் கட்டிவிட்டார்கள். ஆனால் ஓராண்டு கழித்த பிற்பாடு அந்தப் பணத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும் படியாக உத்தரவு வந்து அந்தப் பணத்தைத் திரும்பவும் பெற்று விட்டார்கள். அந்த இடம் நெல் விளைவிப்பதற்கு ஏற்றது என்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. விவசாய அமைச்சரிடத்திலும் அந்த விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது. அதைப் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

100 ஏக்கரா வீதம் மூன்று பண்ணைகளை பரிட்சார்த்தமாக ஏற்படுத்தி, மீதமுள்ள நிலத்தை தலைக்கு 3 ஏக்கரா வீதம் கொடுத்தால் 4,000 நிலமில்லாத ஏழை மக்கள் பிழைப்பதற்கு உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதனால் நீலகிரி மாவட்டத்தில் அரிசி கிடைப்பதற்கும் வாய்ப்பு ஏற்படும். இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கு. அ பொம்மன்] [1975 மார்ச் 4

அடுத்தபடியாக, அந்த மாவட்டத்தில் வறட்சி நிலைமை பெரும் பான்மையான மாவட்டம் பூராவாக இருந்தும்கூட, குன்னூர் வட்டம், உதகை வட்டம் ஆகிய இரண்டையும் மட்டும் வறட்சிப் பிரதேசமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்திருக்கிறார்கள். இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையும் 13½ லட்சம்தான். அதுவும் குடிதண்ணீருக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறதே தவிர, வேறு வறட்சி நிவாரணப் பணிகள் எதற்கும் ஒதுக்கப்பட வில்லை. அதேசமயத்தில் டீ, காப்பி போன்ற தோட்டங்களுக்கு இந்த வறட்சி நிவாரணங்கள் விலக்கப்பட்டிருக்கின்றன. அளிக்கப் பட்டிருக்கிற சலுகை இந்தப் பகுதியில் உள்ள சிறுசிறு தேயிலை தோட்ட விவசாயிகளுக்கும் நிவாரணப் பணிகளில் கண்டுள்ள சலுகைகளையும் அளிக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில் உற்பத்தித் திறன் மற்ற மாவட்டங்களைவிட இந்த மாவட்டம் முதன்மை ஸ்தானம் வகிக் கின்றது. அதிகம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும் இங்கே 60 சதவிகிதம் வெட்டு—இதனால் இங்குள்ள சிறு தொழில்கள் நசித்துப் போகக்கூடிய நிலைமை இருப்பதால், சிறு தொழில்களில் வேலை செய்கிற தொழிலாளர்களும் மின்வெட்டினால் பாதிக்கப்படக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.

பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தைப் பொறுத்த வரை, முதலிலே ஒரு திட்டத்தைத் தீட்டினோம். பிறகு, இரண்டாவது ஒரு திட்டத்தைத் தீட்டினோம். அண்டை மாநிலமான கேரளத் தோடு சமரசம் செய்து கொண்டபிறகு, முதல் திட்டம் ஒப்புக் கொள்ளப்பட்டுக் கடந்த ஆண்டே இந்தத் திட்டம் நிறை வேற்றப்படும் என்று வரவு-செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கி யிருந்தும் செயல்படாமலிருக்கிறது. அதுபோல், சோழாட்டிப் புழா திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்திருப்பதாகச் சொல்லப்பட்டது. அதற்கு ஒப்பந்தம் அளிக்கப்பட்டதா இல்லையா என்பது தெரியவில்லை. அதையும் இந்த ஆண்டே செய்வதற்கு அரசு முன்வரவேண்டும். ஆகவே, அதன் மூலம் மின்சாரத்தைப் பெறுவதற்கு வாய்ப்பிருக்கும். நாம் ஹைட்ரோவை நம்பிக் கொண்டிருக்க முடியாது, பல அனல் மின் நிலையங்களை இம் மாநிலத்தில் ஏற்படுத்த வேண்டும்.



1975 மார்ச் 4] [திரு. கு. அ. பொம்மன்]

தொழில் திட்டங்களைப் பொறுத்தவரை, 9 திட்டங்களை 1975-76-லே நிறைவேற்றுவோம் என்று கூறப்பட்டிருக்கிறது. காகிதத் தொழிற்சாலையைக் கூடலூரிலே அமைப்பதைப்பற்றி ஒரு கேள்வி கேட்டதற்கு, அது ஆய்விலிருப்பதாக அமைச்சரவர்கள் தெரிவித் தார்கள். நீலகிரியிலே இருக்கிற மூங்கிலை ஈரோட்டிலே உள்ள பள்ளிப்பாளையத்திற்குக் கொண்டு செல்கிறார்கள். அதே போல், நீலகிரியிலே இருக்கிற கற்பூர மரங்களை, மலபாரிலுள்ள ரேயான் ஃபாக்டரிக்குக் கொண்டு போகிறார்கள். நீலகிரியில் ஏராளமாகக் கற்பூர மரங்களிருக்கின்றன. கற்பூர மரங்களிலிருந்து காகிதம் செய்யலாம் என்று விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். ஆகவே, அதை உடனடியாக ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றுமொன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த 6 ஆண்டு களுக்கு முன்பே நிறைவேற்றப்பட்டும் தண்ணீர் கிடைக்கா மலிருக்கிறது. பார்சன் வாலி திட்டத்தில், மின்சார வாரியத் திற்கும் நகராட்சிக்கும் டாரிஃப் பிக்ஸ் பண்ணுவதில் தகாறு இருப்பதால், அத்திட்டத்தின் தண்ணீர் உதகை நகர மக்களுக்கு கிடைக்காமலிருக்கிறது. தற்போது மின்துறை அமைச்சர் மாண்புமிகு சாதிக் அவர்கள், கனம் முதலமைச்சரவர்கள், டாரிஃபை பின்னால் ஆலோசித்துக் கொள்ளலாம், இப்பொழுது உடனடியாகத் தண்ணீர் விடவேண்டுமென்று உத்தரவிட்டார். அதற்காக, நகர மக்களின் சார்பாக அவருக்கு நன்றி சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, அரிசன வீட்டு வசதி வாரியத்தாலே வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. அவ்வீடுகள் இப் பொழுது கிராமங்களிலேதான் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. கிராமங்களிலுள்ள, யூனியனிலுள்ள அரிசனங்களுக்குத்தான் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று இதிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆகவே, நகரத்திலுள்ள அரிசன மக்களது நிலைமையென்ன? ஆகவே, யூனியனிலே, நகரங்களிலே, ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு தலைநகரத்திலும் அந்த மாதிரி வீடுகள் கட்டித் தருவதற்கு இந்த வாரியம் முற்பட வேண்டு மென்று நான் மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றே 5 நிமிஷம் பேசியிருக்கிறீர்கள்.

திரு. கு. அ. பொம்மன்: உணவுக் கார்டுகளைப் பற்றி பேசி முடித்து விடுகிறேன்.

நீலகிரி மாவட்டத்தில், உணவுக் கார்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஒரு குடும்பத்திற்கு 5 கிலோ அரிசி என்றுதான் கொடுக்கப்படுகிறது. ஒரு குடும்பத்திலும் 2 பேர் இருந்தாலும், 10 பேர் இருந்தாலும் அந்த 5 கிலோ அரிசிதான் கொடுக்கப்படுகிறது. எங்கள் மாவட்டமோ, நஞ்சையோ, புஞ்சையோ விளையாத நிலம். அண்டை மாவட்டத்தை எதிர்பார்க்கிற—மாவட்டம்—நிலைமை. ஆகவே, நடஃவாரியாகக் கொடுத்தால் மிகப் பிரயோஜனமாக இருக்கும். அது தவிர, ரூ. 500-க்கு மேல் வாங்குகிறவர்களுக்கு உணவு கிடைப்பதில்லை. ஃபுட் கார்ப்ப ரேஷனிலேதான் உணவு பெறுகிறோமே தவிர, வெளிமார்க்கட்டு என்பது கிடையாது. வேறு வழியில் கிடைப்பதில்லை, இண்டர் ஸ்டேட் ரெஸ்ட்ரிக்ஷன் இருப்பதால். ஆகவே, நீலகிரிக்கு மட்டும் கோயம்பத்தூரிலிருந்து அரிசியைக் கொண்டு வர இருக்கிற தடையை நீக்கவேண்டுமென்று சொன்னால் ரூ. 500-க்கு மேலே உள்ளவர்களுக்கு வெளி மார்க்கெட்டில் அரிசி வாங்கிச் சாப்பிட்டு ஜீவனம் நடத்த வாய்ப்பு ஏற்படும் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இத்துடன் என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 16 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு உறுப்பினரையும் 10 நிமிடத்திற்கு மேல் எடுத்துக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. கு. பாலகிருட்டிணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் வர்களே, இந்த் மாமன்றத்தில் டாக்டர் கலைஞர் அவர்கள் அளித்துள்ள 1975-76-வது ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை நான் முழுமனதோடு பாராட்டுகின்றேன்.

இந்த நிதிநிலை அறிக்கை, சாதாரணமாக தமிழகத்திலேயுள்ள, சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கக்கூடிய ஏழை மக்களுக்காகவும், பாட்டாளி மக்களுக்காகவும் நடுத்தர மக்களுக்காகவும்



தீட்டப்பட்ட ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையென்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக, இன்றைய தினம் நாட்டிலே ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் நல்ல அருமையான ஒரு நிதிநிலை அறிக்கையை, ஏறக்குறைய ரூ. 537 கோடிக்கு டாக்டர் கலைஞர் அவர்கள் தீட்டியிருக்கிறார்கள் என்று சொன்னால் உண்மையாகவே இந்த நாட்டிலேயுள்ள சமுதாய மக்களைக் காப்பாற்றுகின்ற வகையிலே இன்றைய தினம் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்திருக்கிறார்கள். சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கக்கூடிய ஏழை மக்களுக்கு எந்த அளவுக்குப் பாதுகாப்பு அளிக்கமுடியுமோ, அந்த அளவுக்கு அதையெல்லாம் தெளிவாக இந்த நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

சமுதாயத்தின் அடித்தளத்திலே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற மீனவர்களுக்காக ஏறக்குறைய 5,000 வீடுகளைக் கட்டிக் கொடுக்க இந்த நிதிநிலை அறிக்கையிலே வகை செய்யப்பட்டிருக்கிறது. இதுபோல், சமுதாயத்திலே அரசியல்வாதிகளாக இருந்தாலும், யாராக இருந்தாலும், கைத்தறி நெசவாளர்களைப் பற்றி பேசாதவர்கள் இல்லை, அரசியல் கட்சிகளில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கியபொழுது கூட, அறிஞர் அண்ணா அவர்கள் கைத்தறித் துணி தேங்கிய காரணத்தாலே, அந்தக் கைத்தறித் துணியைத் தலையிலே சுமந்து, தெருத்தெருவாக விற்று நெசவாளர் துயரைத் துடைத்த வரலாறு அனைவருக்கும் தெரியும். அதை மனதிலே வைத்து, டாக்டர் கலைஞர் அவர்கள் இன்றையதினம் மிகச் சிறப்பான கைத்தறி நெசவாளர் சேமிப்புத் திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இந்த வகையிலே பார்க்கும்போது டாக்டர் கலைஞர் அவர்கள் சமுதாயப் பணி, சமூகப் பணி, இதிலே கண்ணுங்கருத்துமாக இருப்பதை யாரும் மறந்துவிட முடியாது.

அதுமட்டுமல்ல. இன்றையதினம் தமிழகத்திலே இருக்கிற 11 இலட்சம் ஏக்கர் தரிசு நிலத்தை விளை நிலமாகக் கொண்டு வரத் திட்டம் தீட்டியிருக்கிறார் என்றால், அதற்காக உண்மையிலே அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதிலே, குறிப்பாக, கடலோரப் பகுதியிலே, எல்லா மாவட்டங்களிலும் மரவள்ளிக் கிழங்கை, 1 இலட்சம் ஏக்கர் பரப்பில் பயிர் செய்ய திட்டம் வைத்துள்ளார்கள். 3 விதைப் பண்ணைகளுக்கும்

[திரு. கு. பாலகிருட்டிணன்] [1975 மார்ச் 4

ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதில் ஒன்றை தஞ்சையிலே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிச்சயமாக, ஒன்று தஞ்சைக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

நான் முன்பே சொன்னமாதிரி டாக்டர் கலைஞர் அவர்கள் பல நல்ல திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தியிருக்கிறார். தொழு நோய் பிச்சைக்காரர்களுக்கு புதுவாழ்வுத் திட்டம், கண்ணொளி வழங்குகின்ற திட்டம், சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்குகின்ற திட்டம், உடல் ஊனமுற்றோர்க்கு நல்வாழ்வுத் திட்டம், அதே போல் அனாதைக் குழந்தைகளுக்கு ஆதரவு அளிக்கின்ற திட்டம், விதவைகளுக்குப் பாதுகாப்புத் திட்டம் இவைகளை நிறைவேற்றிட முனைந்திருக்கிறார்கள். எனவே, அத்தனை திட்டங்களுக்காகவும் நாம் நிச்சயமாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். தமிழக அரசு அதில் கண்ணுங்கருத்துமாக இருப்பதை யாரும் மறந்து விட முடியாது.

இன்றையதினம் கோடை சாகுபடியாக 5 இலட்சம் ஏக்கரில் நெல்லும், 6 இலட்சம் ஏக்கரில் சிறுதானியமும், 6 இலட்சம் ஏக்கரில் பயறும் விளைவிக்க நல்ல பல திட்டங்களைத் தீட்டி வருவதை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த வகையிலே பார்க்கும்போது கோடை சாகுபடி செய்யக்கூடிய அத்தனை நிலங்களுக்கும் உரமும், பூச்சி மருந்தும், கடனும் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், 1975-76-ஆம் ஆண்டு நீர்ப்பாசனத்திற்காக பல புதிய திட்டங்களை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். அதிலே குழாய்க் கிணறுகள் 2,500-ம், வடிமுனைக் கிணறுகள் 2,000-ம், துளைக் கிணறுகள் 800-ம் என்ற வகையிலே இன்றைய தினம் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

ஆனால், தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை, காவிரித் தண்ணீரை நம்பிப் பயனில்லையென்ற நிலைமைக்கு வந்திருக்கிறோம். எத்தனை முறை பேசினாலும் பயன் வருமா? காவிரியை நம்பியிருக்கிற தஞ்சை மாவட்டத்தில் 5 ஏக்கர் வைத்திருக்கிற விவசாயிகளுக்கு குழாய்க் கிணறு போட வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1975 மார்ச் 4] [திரு. கு. பாலகிருட்டிணன்]

வறட்சிப் பணிகளுக்கு நடப்பு ஆண்டிலே 7 கோடி உட்பட, 1975-76-லே ரூ. 57 கோடி ஒதுக்கியிருக்கிறோம். அதிலே, சிறிய கிராமமாக இருந்தாலும் கூட, சாலை வசதி, குடி நீர் வசதி, மற்ற வசதிகளெல்லாம் அளிக்கப்பட்டு, நிச்சயமாக முன்னேற்றம் காண்போம் என்ற நம்பிக்கையிருக்கிறது.

இந்த நேரத்திலே நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன். வறட்சி நிலையால் கடன்களைத் தள்ளி வைத்துள்ளோம். அந்தக் கடன்களை அடுத்த ஆண்டுகூட வசூலிக்காமல் 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள் என்று தவணை கொடுத்து வசூல் செய்தால்தான் சாதாரண விவசாயிகளுக்குப் பயன்கிடைக்கும், அதைச் செய்ய வேண்டும்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்காக என்று ரூ. 16 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே இப்படிப் பட்ட நெருக்கடியான நேரத்திலேகூட தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் உதவி செய்கிற அரசு எப்போதும் அவர்களை கைவிட்டுவிடாது என்ற நம்பிக்கை இருக்கிறது என்ற காரணத்தினாலே இந்த நிதிநிலை அறிக்கையை நான் ஆதரித்து வரவேற்று, அமர்கிறேன். வணக்கம்.

**திரு. மு. சி. ஆ. ரெத்தினசாமித் தேவர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் 1—3—1975 ஆம் நாளன்று தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கின்ற 1975–76 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூறலாமென நினைக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையானது தமிழகம் என்றுமே கண்டிராத வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள இந்த நேரத்திலே நம்முடைய முதல்வர் அவர்களால் அளிக்கப்பட்டுள்ளது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

நம்முடைய மாநிலத்தின் மிக முக்கியமான, அதிகமான வருமானமாக இருந்த—மதுவிலக்கு ஒத்திவைப்பை ரத்து செய்ததன் மூலமாகப் பெரிய இழப்பு ஏற்பட்டு இருந்தும், அதிகமாக வருமானம் தரக்கூடிய நிலவரி போன்றவைகளைத் தள்ளி

வைப்பதால் நிதி இழப்பு ஏற்பட்டிருந்தும் இப்படிப்பட்ட நல்ல நிதிநிலை அறிக்கையை நம்முடைய முதல்வர் அவர்கள் அளித்திருக்கிறார்கள்.

கழக அரசு பதவிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட காலத்திலிருந்து தமிழகத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள், பின்தங்கிய மக்கள், அடித்தளத்தில் உள்ள ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்கள் ஆகியவர்களின் முன்னேற்றத்தை மையமாக வைத்துத்தான் கடந்த 8 ஆண்டுக் காலத்திலே பல நிதிநிலை அறிக்கைகளை இங்கே சமர்ப்பித்து வந்துள்ளார்கள். அந்த முறையிலே இந்த ஆண்டும் எவ்வளவு சிரமங்கள் இருந்தாலும் கூட இப்படிப்பட்ட வறட்சியான நிலைமை இருந்தும்கூட நல்ல நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையில் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக என்று 57 கோடி ரூபாய் ஒதுக்கியது மட்டுமல்லாமல் வழக்கம் போல் செயல்படுகிற திட்டங்கள் எதுவும் சுணங்கிப் போகாத முறையிலே கல்விக்காகவும், பொதுச் சுகாதாரத்திற்காகவும் கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கி இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள், பின்தங்கிய மக்கள் இவர்களுக்காக 15 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல. கடலோரப் பகுதியில் வாழும் மீனவர்களுக்கு வீடு கட்டும் சிறந்த திட்டத்தை இந்தக் கஷ்டமான நிலைமையிலேயும் முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆகவே, இந்த நிதிநிலை அறிக்கையை நான் பாராட்டி வரவேற்பதோடு என்னுடைய தொகுதியில் நடக்கவேண்டிய சில முக்கியமான விஷயங்களைப் பற்றியும் குறிப்பிட்டுவிட்டு என்னுடைய உரையை முடிக்கலாம் என நினைக்கிறேன்.

நீண்ட நெடுங்காலமாகவே எங்களுடைய திருமங்கலம் பகுதியிலே உள்ள மக்களின் கோரிக்கையான வைகை அணையிலிருந்து ஏற்கனவே இருக்கக்கூடிய பாசனத்திற்கு மேல் 5 ஆயிரம் ஏக்கர் பாசன விஸ்தரிப்புச் செய்ய வேண்டுமென்று பலமுறைகள் கேட்டு வந்திருக்கிறோம். நான் மட்டுமல்ல, மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்களும் இதை முக்கியமாக வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் எங்களுக்கு அந்த வைகை அணையிலிருந்து





தண்ணீர் விஸ்தரிக்கக்கூடிய வேலை நடக்கவில்லை. நம்முடைய முதல்வர் அவர்கள் 73-வது ஆண்டில் செக்கானூரணியில் ஒரு ஊரில் பேசியபோது அதைக் குளமாக்கிக் கொடுப்பேன் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அப்படிக் கொடுத்தும் கூட இந்த வேலை இன்னும் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

விக்கிரங்குளம் கால்வாயிலிருந்து ஆய்வு வேலை நடைபெற்றதாகக் குறிப்பிடப்படுகிறது, அந்த வேலை மேலும் நடைபெறுவதாகத் தெரியவில்லை. வறட்சி வேலைகளோடு இந்த வேலையையும் எடுத்துக் கொண்டால் வறட்சிப் பணிகளும் நல்ல முறையிலே நடைபெறும், அதே நேரத்திலே அந்தப் பகுதி மக்களுக்கும் தண்ணீர் கிடைக்கக்கூடிய நிலைமை ஏற்படும்.

எங்களுடைய மதிப்பனூர் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாகும். அங்கே புதிய கண்மாய் ஏற்படுத்துவதற்கு ஏற்கனவே பரிசீலனை இருந்துள்ளது. மதுரை மாவட்ட விவசாயக் கருத்தரங்கிலே கூட அதை எடுத்துக் கொள்வது பற்றிப் பேசப்பட்டு அரசினுடைய ஆய்வில் இப்போது உள்ளதாகத் தெரிகிறது. அந்த வேலையையும் இந்த வறட்சிப் பணிகளோடு சேர்த்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உண்மையிலேயே வறட்சிப் பணிகள் வேகமாக நிறைவேறு விட்டாலும்கூட ஒழுங்காக மாவட்ட ஆட்சித் தலைவருடைய கண்காணிப்பில் நடந்து வருகிறது. அத்தோடு மதிப்பனூர் புதுக் கண்மாய் வேலையையும் வைகைத் தண்ணீரைக் கொண்டு வரக்கூடிய அமைப்பு வேலைகளையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீண்ட நெடுங்காலமாக திருமங்கலத்தில் உள்ள மருத்துவ மனைக்குப் பக்கத்திலே உள்ள முன்சீப் கோர்ட் இடத்தை அந்த மருத்துவமனைக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் பட்டு வருகிறது. மாண்புமிகு முன்னாள் முதல்வர் திரு. பக்தவத்சலம் அவர்கள் முதல்வராக இருந்தபோது அந்த முன்சீப் கோர்ட் அந்த மருத்துவ மனையினுடைய விஸ்தரிப்புக்காகக் கொடுக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடப் பட்டது. இவ்வளவு காலமாகியும் அந்த வேலை நடைபெறவில்லை. மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள்கூட வேகமாக அந்த

[திரு. மு. சி. ஆ. ரெத்தினசாமித் தேவர்] [1975 மார்ச் 4

வேலையை முடித்துக் கொடுப்பதாகச் சொன்னார்கள். இன்னும் அந்த வேலை நடைபெறவில்லை. அதற்கு மாறாக அந்த இடத்தில் சப்-மாஜிஸ்திரேட்டுக்கு ஒரு வீடும் முன்சிப்புக்கு ஒரு வீடும் கட்ட அனுமதித்து இருக்கிறார்கள். ஆகவே, அதைச் செய்யாமல் மருத்துவமனையின் விஸ்தரிப்புக்கு அந்த இடத்தைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாதாரணமாக, வறட்சி நேரங்களில் விவசாய மக்கள் மட்டுமல்ல, பல தொழிலாளர்களும் பாதிக்கப்படுவார்கள். முக்கியமாக திருமங்கலம் நகரத்தில் கிட்டத்தட்ட 30 ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். அந்த நகரத்திலே 30 தையல் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இதுவரையில் தினசரி 5, 6 ரூபாய் கிடைத்து வந்தது. ஆனால் வறட்சிக்குப் பின்னால் 1, 1½ ரூபாய்க்குக் கூட வேலை கிடைக்கவில்லை, அதுகூட சில தொழிலாளர்களுக்குத்தான் கிடைக்கிறது. சிலருக்குக் கிட்டுவது இல்லை. ஆகவே அவர்கள் எல்லாம் முதலமைச்சர் அவர்களுக்குக் கோரிக்கை மனு அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் 1,000 ரூபாய் கடன் கொடுக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த நகர வங்கியின் மூலமாக 1,000 ரூபாய் அல்லது 500 ரூபாயாவது கடனாகக் கொடுக்கச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு அந்தக் கடனை நபர் ஜாமீனிலாவது கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்களுக்கு உணவுப் பொருட்கள்கூட கிடைக்கவில்லை. அதை வாங்கக்கூட முடியவில்லை. ஆகவே, அதனால் அவர்கள் பட்டினியால் வாடக்கூடிய நிலைமை இருக்கிறது.

(முற்பகல் 11.00)

ஆகவே, இந்த தையல் தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு அவர்களுக்குக் கடன் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தவிர, பேரறிஞர் அண்ணா அவர்கள் காலமான சந்தர்ப்பத்தில் திருமங்கலம் நகர பஸ் நிலையத்தை அண்ணா அவர்களின் பெயரால் நாங்கள் ஏற்பாடு செய்தோம். அந்த பஸ் நிலையத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று அரசிடம் நாங்கள் பேரூராட்சி மூலமாகக் கடன் கோரியுள்ளோம். அதைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.



1975 மார்ச் 4]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து திரு. செபமாலை அவர்கள் பேசுவார்கள்.

**திரு. எஸ். வடிவேல்:** நேற்று நம்பர் வரிசைப்படி கூப்பிடப் போவதாகச் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, நீங்கள் தான் பேச வேண்டும். செபமாலைக்கு அடுத்து வடிவேலுவைத் தான் கூப்பிடப் போகிறேன்.

**திரு. எஸ். வடிவேல்:** நேற்று கொடுத்த வரிசைப்படி பேசிக் கொண்டு வந்தார்கள். அதன்படி திரு. ரெத்தினசாமி பேசிய பிறகு நான்தான் பேச வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைத் தலைவர் எழுதிக் கொடுத்த லிஸ்டிலே செபமாலைக்கு அடுத்தது வடிவேல். பேரவைத் தலைவர் வந்தவுடனே அதைப்பற்றி விசாரித்துக் கொள்ளலாம். லிஸ்டிலே இருப்பது மாதிரிதான் நான் கூப்பிடுகிறேன்.

**திரு. எஸ். வடிவேல்:** நேற்றைக்கும் அப்படித்தான் சொன்னார்கள்.

***திரு. கோ. செபமாலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற 1975 76 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை நான் வரவேற்று இந்தச் சட்டமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறிப் பேச ஆரம்பிக்கிறேன்.

இன்றையதினம் நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் மீனவர்களுக்கு வீடுகட்டும் திட்டத்தில் ஒரு புதிய முறையை ஏற்படுத்தி அதில் எழில் மிக்க காட்சியை ஏற்படுத்தும் வகையில் செய்திருக்கிறார்கள். ஏழை எளிய மக்கள் பின்தங்கிய மக்கள் அலைகடலில் தினம் ஆடி ஓடி, தண்ணீரையும் காற்றையும் மூச்சாகக் கொண்டு தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கும் நேரத்தில் அவர்களுக்குக் குடியிருக்க ஒரு வீட்டைக் கட்டிக் கொடுக்கும் விதத்தில் மீனவப் பெருங்குடி

மக்களுக்கான வீடுகள் கட்டித் தரும் திட்டத்தை வகுத்து அவர்களுக்கு நிரந்தரமாக கல்விடுகள் கொடுக்கும் நிலைமை உருவாக இருக்கிறது.

மேலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் வீட்டு வசதி மேம்பாட்டு வாரியத்தை நிறுவி அரிசனங்களுக்கு இலவச வீடுகள் கட்டித் தரும் திட்டத்தையும் தொடங்கி தொடர்ந்து நிறைவு செய்து வருகிறது. தினம் தினம் கூலி வேலையே செய்து, கூலியிலேயே பிறந்து கூலியிலேயே வாழ்கின்ற அவர்கள் தனக்கென்று ஒரு வீடு இல்லாமல் ஏழை எளிய மக்கள், அரிசன மக்கள் பாடுபடுகின்றார்கள் என்று கருதி தாழ்த்தப்பட்ட வம்சத்தில் பிறந்த இந்த பரம்பரையைச் சேர்ந்த நமது முதல்வர் அவர்கள் அந்த ஏழை எளிய மக்களுக்கும், அரிசன மக்களுக்கும் 10 இலட்சம் வீடுகள் கட்டித் தரும் திட்டத்தை வகுத்து அது படிப்படியாக இன்றையதினம் நிறைவேறி வருகிறது.

இப்படிப்பட்ட திட்டங்களையும், மேலும் அரிசனங்களுக்கு வீட்டு வளர்ச்சிக் கழகத்தில் அவர்களுக்குத் தனிப் பட்டாக்கள் இல்லாமல், அது தரிசு நிலமாகவும், நத்தமாகவும் இருந்தாலும் உடனடியாக அதை அரசாங்கம் ஏற்று வீடு கட்டித் தருவதற்காக மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சரவர்கள் இன்றைய தினம் தீவிர நடவடிக்கை எடுத்து வருவதற்காக அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் இந்த ஆண்டு பிற்படுத்தப்பட்டவர்களுக்காக 20 ஹாஸ்டல்களை தங்கிப் படிக்கவும், உனவு உண்ணவும் தொடங்கவும், அதேபோல் தாழ்த்தப்பட்டவர்களுக்காக 20 ஹாஸ்டல்களைத் தொடங்கவும் இந்த ஆண்டில் தொகை ஒதுக்கியிருக்கிறார்கள்.

மேலும் இவ்வாண்டில் நூறாண்டுக் காலமாக இல்லாத பெரும் வறட்சி ஏற்பட்டது. வான் மழை பொய்த்தது. அதனால் ஏழை எளிய மக்கள் இன்றைக்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் அவர்களுக்கு 57 கோடி ரூபாய் வளர்ச்சி நிதியை அளித்து பல திட்டங்களைத் தீட்டி மேலும் தீவிரமான வேலைகள் நடந்து வருகின்றன.



இந்த ஆண்டில் 2,000 ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் நிலையும் இந்த நிதி நிலை அறிக்கையில் காணப்படுகிறது. மற்றும் குடிநீர்த் திட்டம், கழிவு நீர் அகற்றும் திட்டம் போன்ற புதுத் திட்டங்களை வகுத்து அவற்றை ஆய்வு செய்து தீவிரப்படுத்தி மக்களுக்குப் பயன்படும் அளவில் இன்றையதினம் அரசாங்கம் செய்து வருகிறது.

மேலும் கண்ணொளி வழங்கும் திட்டம், மனிதனை மனிதன் இழுக்கும் கைரிக்ஷாக்களை ஒழித்து சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கும் திட்டம்—மனிதனை மனிதன் வைத்து இழுத்து மாடாக உழைத்து பிணமாகக் கூடாது, அவன் மனிதனாக இருக்க வேண்டும் என்று கருதி—சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கும் திட்டம் முதலியவைகள் கொண்டு வரப்பட்டன.

அடுத்து, தாய் தகப்பன் அற்ற அனாதைக் குழந்தைகளை அரசே எடுத்துக் காப்பாற்றுவதற்காக இந்த அரசு திட்டத்தை வகுக்க இருக்கிறது. அவர்களை அரசே ஏற்று, அவர்களுக்குப் படிப்பும் கொடுத்து உதவி செய்வது என்றால் அது மிகையாகாது. அந்தத் திட்டத்தை முதல்வரவர்கள் கொண்டு வந்து சமர்ப்பித்திருப்பது ஏழை எளியவர்களுக்கு வழிகாட்டியாக அவர்கள் இருக்கிறார்கள் என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது.

மேலும் கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் சேமிப்புப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றையும் கொடுத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட பல நல்ல திட்டங்களையெல்லாம் கலைஞர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். பல நல்ல திட்டங்களைச் செய்து முடித்திருக்கிறார்கள். இப்படி முடிக்கப்பட்ட நேரத்தில் கலைஞர் அவர்கள் பல திட்டங்களையும் உருவாக்கிய நேரத்திலும், அவர் என்ன செய்கிறார், எது செய்கிறார் என்று கேட்கிறார்கள். சொல்வது யாருக்கும் எளிது, ஆனால் செய்வதுதான் அரிது என்று சொல்வதைப் போல் யாரும் சொல்வது எளிது, செய்வது தான் கடினம். அதை மனதில் கொண்டு ஏழை எளியவர்களுக்காகவே பிறந்த முதல்வரவர்கள், தமிழக அரசு இன்னும் சொல்லப் போனால் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏழை வம்சத்தில் தோன்றியதால் பல நல்ல காரியங்களை, பல நல்ல திட்டங்களைச் செய்து வருகிறார்கள்.

மேலும், என்னுடைய தொகுதியில் வெலிங்டன் ரிசர்வாயர் என்று ஒரு ஏரி இருக்கிறது. வெள்ளைக்காரன் ஆட்சிக் காலத்தில் வெலிங்டன் துரை என்பவர் அதை அமைத்திருப்பதால் அதற்கு அந்தப் பெயர் ஏற்பட்டது. அது கிட்டத்தட்ட 40,000 எக்கர் நிலம் சுற்றளவாகக் கொண்டது. அதன் ஆயக் கட்டுகள் தண்ணீர் இல்லாமல் வறட்சியாக இருக்கின்றன. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் 17—2—75 அன்று திட்டக்குடிக்குச் சென்றபொழுது அதைப் பார்த்து அதைப்பற்றி அதிகாரிகளிடத்திலேயும் ஆலோசித்தார்கள். அந்த வேலைகளைச் சீக்கிரத்தில் முடிக்க வேண்டுமென்று அதிகாரிகளிடத்தில் கேட்டுக் கொண்டார்கள். நான் சொல்கிறேன், அந்த ஏரி 40,000 ஏக்கர் நிலத்தைக் கொண்டது. அந்த ஏரி மூலம் பாசன வசதி கொடுத்தால் திட்டக்குடி மக்களும், விருத்தாசலத்திலுள்ள ஒரு பகுதி மக்களும் பயன் அடைவார்கள். அப்படிப்பட்ட நல்ல திட்டமாக அது இருக்கிறது. அதற்கான வேலைகள் இன்னும் துவங்கப்படவில்லை. இந்த வறட்சிப் பணியிலாவது மாண்புமிகு முதல்வரவர்கள் அந்த ஏரியை சீராக்க வேலைகளைத் தொடங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விருத்தாசலத்திலிருந்து சேலம் செல்லும் நெடுஞ்சாலையில் விருத்தாசலத்திலிருந்து வேப்பூர் வரை செம்மைப்படுத்துவதற்காக நான்காண்டுக் காலமாக கல் கொட்டியும் அந்தச் சாலை இன்னும் செம்மைப்படுத்தப்படவில்லை. அதில் கார், வண்டி முதலியவை செல்லும் சந்தர்ப்பத்தில் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதிகாரிகளிடத்தில், டி.டி.சி. கூட்டம் நடக்கும்போது சொல்லியும் இந்த வேலை சரியாக நடைபெறவில்லை. விருத்தாசலத்திலிருந்து சேலம் செல்லும் அந்தச் சாலைப் பகுதியில் நல்ல முறையில் வேலை செய்ய ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், வெள்ளாறு என்ற ஒரு ஆறு திட்டக்குடிக்குப் பக்கத்தில் ஓடுகிறது. அமைச்சரவர்கள் 17—2—75 அன்று திட்டக்குடியில் மாபெரும் வரவேற்பைப் பெற்றுக் கொண்டு கும்பகோணத்திற்குச் செல்லும் நேரத்தில் அந்த ஆற்றைக் கடக்க நேரிட்டது. அந்த ஆற்றிலே சென்றபொழுது அங்கே



ஒரு பாலம் கட்ட வேண்டுமென்று மக்கள் கேட்டுக் கொண்டார்கள். நீண்ட நெடுங்காலமாக அரசின் பரிசீலனையில் இருப்பதாகக் கூறினார்கள். உடனடியாக நமது அரசு அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

திரு. எஸ். வடிவேல்: தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற 1975-76-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவன் என்ற முறையில் ஒருசில கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை மத்திய அரசாங்கத்தை மறைமுகமாகச் சாடுவதோடு, மாநில சுயாட்சிக்கு அடித்தளமாக, சரடாக விளங்குகிறது. வெளிநாடுகளின் தாக்குதலும், உள்நாட்டு மக்களின் பிரச்னையும், அதற்குத் தீர்வு காண வேண்டிய தமிழக அரசின் கடமையும் இந்த பட்ஜெட்டில் காணப்படவில்லை என்பதை நான் பார்க்கிறேன்.

அடுத்தபடியாக, உலகமெங்கும் விலைவாசி உயர்வு கடுமையாக இருக்கிறது. அந்த நிழல் நம் மீதும் விழுகிறது என்று சொல்கிறார்கள். உலகத்தில் இன்றைக்கு மூன்றில் ஒரு பகுதி சோஷலிச நாடுகளில், ஏறக்குறைய 100 கோடிக்கு மேற்பட்ட மக்கள் வாழும் சோஷலிச நாடுகளில் கடந்த 15 ஆண்டுகளில் 16 சதவிகிதம் விலைவாசி குறைந்திருப்பதாக அறிக்கைகள் கூறுகின்றன.

ஆக, சோஷலிச நாடுகளில் விலைவாசிகள் குறைவதற்கும் மற்றைய நாடுகளில் விலைவாசி ஏறவும் காரணம் முதலாளித்துவத்தின் பெருநோயான நிர்வாக அமைப்பும், கொள்கையுந்தான் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதிலிருந்து மாற்றம் காண மத்திய அரசும் சரி, மாநில அரசும் சரி, சரியான நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்காததோடு மட்டுமல்ல, சரியான கொள்கைக்கும் வழி வகுக்கவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

வறட்சியை எடுத்துக் கொண்டால் மக்களுக்கான துயர் தணிப்புப் பணியை பரவலாகப் பார்க்க முடியவில்லை.

[திரு. எஸ். வடிவேல்] [1975 மார்ச் 4

உடனுக்குடன் போர்க்கால நடவடிக்கை போல் அரசு காரியமாற்ற முனைய வேண்டும். இந்த பட்ஜெட்டைப் பார்க்கும்போது ஒரு முப்பெரும் பஞ்சத்தை முன்னே நிறுத்திக் காட்டுவது போல் எனக்குத் தோன்றுகிறது. ஒன்று உணவுப் பஞ்சம், இரண்டு தண்ணீர்ப் பஞ்சம், மூன்றாவது மின்சாரப் பஞ்சம். உணவுப் பஞ்சத்திற்குக் காரணம் இந்த ஆண்டு ஏற்பட்ட பயங்கரமான வறட்சி அல்ல. தன்னிறைவு பெற்ற தமிழகம் மற்றைய மாநிலங்களுக்கு உணவுப் பொருள் வழங்கிக் கொண்டிருந்த நிலையில் இந்தப் பஞ்சம் ஏற்பட்டதற்குக் காரணம் கொள்முதல் செய்வதில் ஏற்பட்ட கோளாறு, கொள்முதல் செய்ததைச் சரியாகச் சேமித்து வைக்காததுதான். இதுதான் இந்த நிலைக்குக் கொண்டு வந்து நிறுத்தி வைத்து வேடிக்கை பார்க்கிறது என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

தண்ணீர்ப் பஞ்சம் தமிழ்நாட்டு மக்களைத் தடுமாற வைத்திருக்கிறது. இப்போதே தடுமாற வைத்திருக்கிறது என்று சொல்லும்போது வருகிற கடுமையான வெயில் காலத்தில் பயங்கரமான தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டு நாட்டு மக்களின் நிலை பரிதாபகரமாகப் போய்விடப் போகிறது என்று அஞ்சுகிறேன். அந்த நிலையைத் தவிர்க்க அரசு துரிதமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தது, மின்சாரப் பஞ்சம். ஏற்கனவே நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது; மின்சாரப் பஞ்சத்தால் மேலும் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும் என்ற அச்ச நிலையை உண்டாக்கியிருக்கிறது. உற்பத்திக் குறைவு ஏற்பட்டு மேலும் பொருள்களின் விலை உச்ச கட்டத்திற்குச் செல்லுகிற நிலைமை ஏற்படப் போகிறது. சாதாரண ஏழை எளிய மக்களைப் பாதிக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டின் மின்சார உற்பத்தி 2,254 மெகாவாட் என்றும் அது இந்தியாவின் வேறு எந்த மாநிலத்தைக் காட்டிலும் அதிகமானது என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதே சமயத்தில் ஆண்டு ஒன்றுக்கு 40 கோடி ரூபாய் நட்டம் ஏற்படுவதாக மின்துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 15—2—75 அன்று அவர்கள் பேசிய பேச்சாக தினமணிப் பத்திரிகையில் வந்திருக்கிறது. அப்படிப் பார்க்கிறபோது ஏற்படுகிற மின்சாரத் திருட்டைக்



1975 மார்ச் 4] [திரு. எஸ். வடிவேல்]

கண்டுபிடித்துத் தக்க நடவடிக்கை எடுக்கத் தயங்குகிற நிலையை நாம் பார்க்கிறோம். உலகத்தில் எங்கும் இல்லாத அளவுக்கு தமிழ்நாட்டில் இழப்பு 20 சதவிகிதம் ஏன் ஏற்படுகிறது என்று கண்டுபிடித்தாக வேண்டும்.

என்.ஜி.ஓ.க்கள் அகவிலைப்படி உயர்வு வேண்டுமென்று கேட்டு பல ஆண்டுகளாகப் போராட்டம் நடத்தி வருகிறார்கள். அவர்களுடைய கோரிக்கை நிறைவேறும் என்று எதிர்பார்த்த ஏழு லட்சம் என்.ஜி.ஓ.க்களுக்கு இன்றைக்கு ஏமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப் படுகிற அந்த அளவை நம்முடைய மாநில அரசு ஊழியர்களுக்குக் கொடுக்க வேண்டாமா ?

உணவு தானிய மொத்த வியாபாரத்தை மத்திய அரசு ஏற்கத் தயங்குகிறது. மாநில அரசும் ஏற்கத் தயங்குகிறது. ஊதிய முடக்கத்தை எடுத்துக் கொண்டாலும் இரண்டு அரசும் ஒன்றாகத்தான் செயல்படுகிறது. தொழிலாளர் பிரச்சினையை எடுத்துக் கொண்டாலும் அடக்குமுறை செய்வதில் இரண்டு அரசும் ஒன்றாகத்தான் செயல்படுகிறது. மத்திய அரசு ரயில்வே தொழிலாளர் போராட்டத்தை நசுக்க நடவடிக்கை எடுத்ததைப் பார்க்க முடிந்தது. மாநில அரசு என். ஜி. ஓ.க்களுடைய போராட்டத்தை அடக்கப் பார்த்த நிலையை நாம் பார்க்க முடிந்தது. மத்திய அரசு 1973-ம் ஆண்டு முதல் இன்று வரை அகவிலைப் படியை 11 தடவை வழங்கியிருக்கிறது; ஆனால் நம்முடைய மாநில அரசு இரண்டு தடவைதான் கொடுத்திருக்கிறது. மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாகக் கொடுக்க வேண்டுமென்றால் 90 ரூபாயாவது நம்முடைய அரசு ஊழியர்களுக்குக் கொடுத்திருக்க வேண்டும். நான் அரசைக் கேட்டுக் கொள்வது அரசு ஊழியர்களுக்கு மலிவு விலையில் அத்தியாவசியப் பண்டங்களைக் கொடுக்க முன்வந்தால் அவர்கள் விலைவாசி ஏற்றத்தை ஓரளவு சமாளிக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டோருக்காக ஒரு லட்சம் வீடுகள் கட்டப் போவதாக நிதிநிலை அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். இந்த ஆண்டு 15,000 வீடுகள் கட்டப் போகிறார்கள். நாலரைக் கோடி தமிழ் மக்கள் வாழும் தமிழ் நாட்டில் இது யானைப் பசிக்கு சோளப் பொறி கொடுத்த கதையாகத்தான் இருக்கிறது.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: ஒரு லட்சம் வீடுகள் அரிசனங்களுக்குக் கட்ட முடிவு செய்யப்பட்டிருக்கிறது. 4½ கோடி தமிழ் மக்களில் எல்லா சாதியினரும், எல்லா இனத்தினரும், மதத்தினரும் இருக்கிறார்கள். ஆகவே, இந்து மதத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒரு லட்சம் வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். வடிவேல்: இந்து மதத்தைச் சார்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் 74 லட்சம் என்று கணக்குச் சொல்லுகிறார்கள். இப்போது ஒரு கோடி கூட இருக்கும்.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: 74 லட்சம் குடும்பங்கள் இருக்கின்றன. அவர்கள் அனைவருக்கும் வீடு கட்டித் தரவேண்டுமென்பதுதான் நம்முடைய கொள்கை. பத்து லட்சம் வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டிருக்கிறது. முதலில் கட்டி முடிக்கப்பட வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருப்பது ஒரு லட்சம் வீடுகள். தொடர்ந்து அது செயல்படுத்தப்படும்.

திரு. எஸ். வடிவேல்: அடுத்து, வளர்ச்சிப் பணிகள், வறட்சி நிவாரணப் பணிகள், சமூக நல சிறப்பு சமதர்மப் பணிகள் என்று சொல்லியிருக்கிறார்கள். பழைய மன்னர்கள் காலத்தில் ஏழைகளுக்கு இரக்கம் காட்டிச் சில சலுகைகளைச் செய்து விட்டால் அதுவே சமதர்ம சமுதாயத்திற்கு அடிகோலிவிடப்பட்டதாகச் சொல்லுவார்கள். சமதர்ம சமுதாயத்தை அமைப்பதற்கு மாநில அரசும் சரி, மத்திய அரசும் சரி, சரியான கொள்கையை, உண்மையான சோஷலிசக் கொள்கையை உருவாக்கினால் அல்லாது இத்தகைய சமதர்ம சமுதாயத்தை அமைத்துவிட முடியாது.

ஐந்தாண்டுத் திட்டங்கள் குறுகிய ஆண்டுத் திட்டங்கள் அளவுக்கு ஆகிவிட்டன என்று முதல்வர் அவர்கள் கூறினாலும் முதலாளித்துவக் கொள்கை இருக்கும் வரையில் இந்த சோஷலிச சமதர்ம சமுதாயத்தை ஏற்படுத்த முடியாது என்பது என்னுடைய கருத்து.

மொழி வளர்ச்சியும் வரலாற்றுப் பாதுகாப்பும் என்ற தலைப்பில் காரைக்குடியில் தமிழ்த்தாய்க் கோயில் எழுப்பப் போவதாகக் கூறி இருக்கிறார்கள். இராமநாதபுரம், புதுக்கோட்டையிலுள்ள



உழைக்கும் தெய்வங்கள், தமிழ்த் தாய்கள் இன்றைக்கு பஞ்சமோ பஞ்சம் என்ற நிலையில் தஞ்சையிலே வந்து சரணடைந்து கொண்டிருக்கிற நிலையில், உழைக்கும் தமிழ்த் தாய்கள் தடுமாறிக் கொண்டிருக்கிற நிலையில் இப்படி ஒரு கோயில் தேவைதானா? தாய் பட்டினி கிடக்கும்போது மகன் கோதானம், வஸ்திர தானம், சம்பத்து தானம் கொடுத்தானாம். இந்த பஞ்ச நிலையில் இன்றைக்கு இது அவசியந்தானா என்று ஆலோசித்து முடிவுக்கு வரவேண்டும்.

வேளாண்மைத் துறை மக்களின் உயிர்நாடி. குத்தகைதாரர் தாங்கள் உழும் நிலத்தின் உரிமையை வாங்க அனுமதிக்கும் மசோதா ஜனாதிபதியால் திரும்ப அனுப்பப்பட்டு பொறுக்குக் குழுவுக்கு மறுபடியும் விடப்பட்டு இன்றைக்கு உயிரிழந்த நிலையில் இருக்கிறது. நடப்புச் சட்ட மன்றக் கூட்டத்தில் அந்தச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும்.

சென்ற ஆண்டு சட்டமன்றக் கூட்டத்தின்போது சூரிய காந்தியைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள். இந்த ஆண்டு மரவள்ளிக் கிழங்கைப் பற்றிப் பேசுகிறார்கள். இப்படி ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொன்றைச் சொல்லுவது நம்முடைய நிலையாக இருக்கிறது.

இன்றைக்கு வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கும் பகுதிகள் பல ஆண்டு காலமாக பின் தங்கிய மாவட்டங்களாக இருந்த பகுதிகள். அவைகளில் ஏற்கனவே அரசு செயல்பட்டிருந்தால் அவைகள் இன்றைக்கு வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்காது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கரும்பிற்கு அதிக விலை கொடுப்பதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். உத்திரப்பிரதேசம், மஹாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் ஒரு டன் கரும்பிற்கு 135 ரூபாய் முதல் 175 ரூபாய் வரை தருகிறார்கள். நமது அரசு கொடுப்பது 120 ரூபாய்க்கு மேல் போகவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலை, கரும்பாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு நியாயமான கூலி, சம்பளம், சர்க்கரையை வாங்கி உபயோகிப்பவர்களுக்குக்

[திரு. எஸ். வடிவேல்] [1975 மார்ச் 4

குறைந்த விலையில் சர்க்கரை அளிப்பது ஆகியவைகளை உத்திரவாதப்படுத்த சர்க்கரை ஆலைகளை நாட்டுடமை ஆக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு போட்டிருக்கிற புதிய வரி விதிப்பின் மூலம் 6 கோடி ரூபாய் வரி வரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது சிட்டுக் குருவி தலையில் பனங்காய் வைத்தது போல் இருக்கிறது. இது அடித்தளத்தில் இருக்கிற மக்களைப் பெரிதும் பாதிக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பணக்காரர்கள் மீது வரிகளைப் போட்டிருந்தால் பரவாயில்லை. பணக்காரர்கள் வரிகளைக் கொடுக்காமல் லட்சக்கணக்கில் வரிகளைக் கட்டாமல் டிமிக்கி கொடுக்கிறார்கள். 84 லட்சம் ரூபாய் உணவு இலாகாவிலிருந்து வாங்கிய கடனைத் திருப்பிக் கட்டாமல் இருக்கிறார்கள். இன்றைக்குச் சாதாரண ஏழை எளிய மக்கள், என்.ஜி.ஓ.க்கள் ஏறியிருக்கிற விலைவாசியில் டீயாவது குடித்து விட்டுப் பணி ஆற்றலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறபோது, டீ, பிண்ணாக்கு போன்ற பண்டங்களுக்கு வரி உயர்த்தியிருப்பது சரியான கொள்கைதானா என்று அரசு பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். இந்த 6 கோடி ரூபாய் வரியை ரத்து செய்து, வரி கொடுக்காதவர்களிடம் வரி வாங்க முயல வேண்டும். ஒவ்வொரு இலாகாவிலும் உள்ள அனாவசியமான செலவுகளைக் குறைக்க வேண்டும். உணவு இலாகாவில் இப்போது 84 லட்ச ரூபாயை ரைட் ஆஃப் செய்யலாம் என்ற யோசனை இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அவைகளையெல்லாம் வசூலிக்க நடவடிக்கை எடுத்து, இந்தப் புதிய வரியை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. சொ. காவேரிமணியம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்தில் டாக்டர் முதல்வரவர்களால் வாசித்து அளிக்கப்பட்ட 1975-76-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை மிகவும் மனநிறைவோடு வரவேற்கிறேன். குறிப்பாக இந்த நாட்டு மக்களுடைய நிலையினையும், நாட்டின் சூழ்நிலையினையும் மனதில் கொண்டு மிகக் கவனமாக தயாரிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையாகும்.

இந்த நிதி நிலை அறிக்கையில் நாம் பார்க்கிற நிலை என்ன என்பது உங்களுக்கெல்லாம் மிக நன்றாகத் தெரியும். இந்த ஆண்டு தமிழகத்தின் பெரும் பகுதிகளில் கவ்வி இருக்கக்கூடிய வறட்சி



1975 மார்ச் 4] [திரு. சொ. காவேரி மணியம்]

நிலையைப் போக்கக்கூடிய பணிகளை இந்த அரசு திட்டவட்டமாக எடுத்து வருகிறது. இப்படிப்பட்ட வறட்சி நிலையினை அரசியல் ஆக்குவோர் அவசரக்காரர் என்று கூற விரும்புகிறேன். வறட்சி நிவாரணப் பணிகளில் ஆதாயம் தேட நினைப்போர் இழி குணம் படைத்தவர்கள் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, இந்த நேரத்தில் அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகளுக்கு தங்களுடைய கட்சி அல்லது கொள்கை இவைகளையெல்லாம் ஒரு கணம் மறந்து, உறுதுணையாக இருக்கக் கூடியவர்கள் இந்த நாட்டினுடைய காக்கும் கரங்களாக வணங்கப்படவேண்டிய தெய்வங்கள் என்று சொல்வேன்.

இன்னும் தெளிவாக இந்த நிதி நிலை அறிக்கையைப் பார்க்கின்ற நேரத்திலே இதில் பல நல்ல திட்டங்களை டாக்டர் அவர்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். மதுரை மாநகரைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேர்களுக்கும் தெரியும். மதுரை மாநகரம் சிறப்பு வாய்ந்த நகரம் மட்டுமல்ல, இரண்டாயிரம் ஆண்டு காலத்திற்கு முன்னாலேயே தமிழ் வளர்த்த மாமதுரை, கூடல் மாநகரம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அறிஞர் பெருமக்கள் மட்டுமல்லாமல் புலவர் பெருமக்கள் எல்லாம் பாராட்டிப் புகழ்ந்த மாமதுரையில் இன்று திருமலை மன்னருடைய சின்னமாக, அவருடைய கைவண்ணமாக விளங்கக்கூடிய மஹாலில் பொருட்காட்சி அமைப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அப்படிப் பொருட்காட்சி அமைகிற அந்த நேரத்தில் இதற்கு முன்னால் மதுரையைத் தலைநகராக வைத்து ஆண்ட மன்னர்கள்—பாண்டிய மன்னர்கள் வரலாறுகள், அவர்கள் காலத்தில் ஆதரிக்கப்பட்ட பெரும் புலவர்கள், அந்தப் புலவர்கள் பாடி இன்றைக்குத் தமிழுக்கு அரணாக இருக்கக்கூடிய இந்த இலக்கியங்கள் இவைகளையெல்லாம் அந்தப் பொருட்காட்சியில் இடம் பெறச் செய்ய வேண்டுமென்று மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நல்ல திட்டத்தை, குறிப்பாக மதுரை நகரத்தில் ஏற்படுத்திய தமிழக அரசுக்கு நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. சொ. காவேரி மணியம்] [1975 மார்ச் 4

எப்பொழுதும் எந்த ஆண்டிலும் புரட்சிகரமான ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்துவதில் எங்களுடைய முதல்வரவர்கள் தேர்ந்தவர்கள் என்பதற்கு எடுத்துக் காட்டாகத்தான் ஆம்னி பஸ், காண்டிராக்ட் கேரேஜ் போன்றவைகள் எல்லாம் நாட்டுடைமை ஆக்கப்பட்டிருக்கின்றன. இந்த நல்ல திட்டத்தை எதிர்கட்சியைச் சேர்ந்த நண்பர்களானாலும், எங்களோடு கருத்து மாறுபட்டவர்களானாலும் வரவேற்பார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் இப்படி நல்ல பல திட்டங்கள், நாதியற்று, ஆதரவற்று, எங்கோ ஒரு மூலையில் இருந்த கைத்தறி நெசவாளர்களுக்குப் பாதுகாப்பான ஒரு திட்டத்தை, அவர்களுடைய வாழ்வை வளமாக்கக்கூடிய திட்டத்தைப்பற்றி இந்த நிதிநிலை அறிக்கையில் சிறப்பாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதுபோன்ற அரசில் பணி புரியக்கூடிய அலுவலர்களுக்கு குறைகள் பல போக்கப்பட்டிருக்கின்றன. சலுகைகள் பல இடங்களுக்கு விரிவு செய்யப்பட்டிருக்கின்றன. இவை சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன.

எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியது போல கடலோடு போராடிக் கொண்டிருக்கிற, தங்களுடைய உடைமை, உயிர் இவைகளைப் பணயம் வைத்துப் போராடிக் கொண்டிருக்கிற மீன் பரவர்களுக்கு என்று இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கி முதல் கட்டமாக 5 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த நல்ல திட்டங்களையெல்லாம் உள்ளடக்கிய நிதிநிலை அறிக்கையை நிச்சயமாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த நேரத்தில் நான் ஒன்றை மட்டும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏறத்தாழ, இந்த நிதி நிலை ஆண்டில் 118 கோடி ரூபாய்களை நாம் கல்விக்காக செலவிட இருக்கிறோம். "கேடில் விழுச் செல்வம் கல்வி, ஒருவற்கு மாடல்ல மற்றையவை" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாறு சிறந்த கல்விக்கு உறுதுணையாக இருப்பது நூலகங்கள் என்பதும் அனைவருக்கும் தெரியும். நூலகங்கள், நடமாடும் கல்வி நிலையங்களுக்கு ஒப்பானவையாகும். இப்படிப்பட்ட நூலகங்கள் மாவட்டந்தோறும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதில் பணி புரியக்கூடியவர்கள் ஏறத்தாழ பல்லாயிரக்கணக்கான ஊழியர்கள் ஆவார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் 300-க்கு மேற்பட்ட ஊழியர்கள்



1975 மார்ச் 4] [திரு. சொ. காவேரி மணியம்]

பணி புரிந்து வருகிறார்கள். இப்படிப்பட்ட ஊழியர்கள் அரசு ஊழியர்களாக மாற்றப்படவில்லை என்பது பல நேரங்களில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல, சாதாரணமாகப் பணி புரியக்கூடிய ஊழியர்களுக்குக்கூட குடும்ப நலத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. நூலகங்களில் பணி புரியக்கூடிய ஏறத்தாழ பத்தாயிரம் ஊழியர்களுக்கு இந்தத் திட்டமானது விரிவுபடுத்தப்படவில்லை என்பதை மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இதிலே கவனம் செலுத்தி இந்த ஊழியர்களும் பயனடையக்கூடிய அளவிற்கு ஒன்று அவர்களை அரசு ஊழியர்களாக மாற்ற வேண்டும். அல்லது அப்படி அவர்களை மாற்றுவதற்கு இடைப்பட்ட காலத்தில் அவர்கள் அத்தனை பேர்களுக்கும் குடும்ப நலத் திட்டத்தை அமுல்படுத்தக்கூடிய திட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று பணிவோடு இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இன்னும் ஒன்றையும் கூறி, உரையை முடிக்கலாம் என்று நான் கருதுகிறேன். குறிப்பாக நகரங்களில் வாழுகிற மக்களுக்கு மட்டும் நாம் அரிசி, கோதுமை மற்ற உணவுப் பொருள்களை வினியோகம் செய்வதில் அதிகக் கவனம் செலுத்துவதைக் காட்டிலும் கிராமப்புறத்தில் இருக்கிற மக்களுக்கு வினியோகம் செய்வதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். கிராமப்புற மக்கள் இந்த வறட்சியின் காரணமாக வேலையில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் வேலை உருவாகக் கூடிய சந்தர்ப்பத்தையும் அவர்கள் இழந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிப்பதில் இந்த அரசு அக்கறை செலுத்தியிருக்கிறது. மேலும் நல்ல முறையில் அக்கறை செலுத்தவேண்டுமென்று நான் மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் கொள்முதல் என்ற ஒரு திட்டத்தில் நடந்து கொள்ளக்கூடிய முறையை விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒருபுறம் கிராமங்களிலெல்லாம் பங்கிட பொருள் வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதே சமயத்தில் நாம் கொள்முதலில் கவனம் செலுத்துகிற நேரத்தில் கொள்முதலை விரிவுபடுத்தக்கூடாது என்று சொல்வது முரண்பட்ட வாதமாகும் என்பதை இந்த

[திரு. சொ. காவேரி மணியம்] [1975 மார்ச் 4

நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த அரசு சிறந்த காரியங்களை, திட்டங்களை, கொள்கைகளைச் செயல்படுத்துவதில் அக்கறை செலுத்தியிருக்கிறது, மாண்புமிகு அமைச்சர்களானாலும் சரி, உறுப்பினர்களானாலும் சரி, இவைகளை நிறைவேற்றுவதில் அக்கறை கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் இந்தத் திட்டங்களை நிறைவேற்றுகிற பங்கைக் கொண்ட உயர் அதிகாரிகளில் பெரும்பான்மையான அதிகாரிகளைப் பாராட்டுவதற்கு நாம் கடமைப்பட்டிருந்தாலும், கீழ் மட்டத்தில் இருக்கிற அதிகாரிகளில் ஒரு சிலர் இந்தக் கொள்கைகளுக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய வகையில் இருப்பதைப் பார்க்கும் போது நாம் வருத்தப்படுகிறோம்.

(முற்பகல் 11-30)

இரண்டு நாட்களாக என்னுடைய தொகுதியிலிருந்து தொலைபேசி மூலமாகச் சொல்லப்பட்டது. மதுரை வடக்குப் பகுதியில் அதிகாரிகள் விவசாயப் பெருங்குடி மக்களை மிகவும் கொடுமைப்படுத்துகிறார்கள். கொள்முதல் என்ற பெயரால் மிகவும் கொடுமைப்படுத்துகிறார்கள் என்று சொல்லப் பட்டது. அதைத் தடுக்க மிகவும் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நேரத்தில் நான் அந்த அதிகாரிகளுக்கு, துணைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் சேகரிக்கிற தேனீக்களாக இருக்கலாம், ஆனால் அவர்கள் கொட்டும் தேள்களாக இருக்கக்கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஏனெனில் ஏழை எளிய விவசாயப் பெருங்குடி மக்களிடமிருந்து அவர்கள் கொள்முதல் செய்கிற நேரத்தில் மிகவும் பண்போடு நடந்து கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நான் ஏற்கனவே சொன்னதுபோல் மதுரை மாநகரத்தில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருப்பதி அவர்கள் கூறியது போல், எழில் மிகுந்த கோபுரங்கள், எழில் மிகுந்த கட்டிடங்கள் இருந்தாலும், அங்கே தொழிற்சாலைகள் இல்லை என்று சொன்னார்கள். அந்தக் கொள்கையை வலியுறுத்தி அங்கே தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1975 மார்ச் 4] [திரு. சொ. காவேரி மணியம்]

புராதனச் சின்னங்களைக் காக்கவேண்டுமென்பதில் இந்த அரசு நன்கு கவனம் செலுத்தி வருகிறது. அதற்கு உறுதுணையாக இங்கே சென்னையில் திருவள்ளுவர் கோட்டம் ஒன்று கட்ட திட்டமிட்டு இருக்கிறார்கள். அதிலே எனக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. வள்ளுவர் தந்த வான்மறை உலகத்திற்கு அரங்கேற்றிய இடம் மதுரை மாநகரம் என்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட சிறப்புமிக்க இடத்தில் ஒரு 'வள்ளுவர் கோட்டம்' ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ஆலடி அருணா: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் இந்த மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதி நிலை அறிக்கை மீது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்களை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை தமிழகத்தின் வரவு செலவுத் திட்டங்கள், பொருளாதாரச் சூழ்நிலைகள், அதற்கான புள்ளி விவரங்கள், அதற்கான ஆதாரங்கள், ஆகியவற்றை அதிகமாக விளக்குவதற்குப் பதிலாக ஆளும் கட்சியின் அரசியல் கொள்கை, அதனுடைய விமர்சனங்கள், விளக்கங்கள் ஆகியவற்றை அதிகமாகக்கொண்டுள்ளதாக இது அமைந்து இருக்கிறது என்பதை இந்த அவை ஏகமனதாக ஒப்புக்கொள்ளும் என்று நம்புகிறேன்.

நான் இந்த நிதிநிலை அறிக்கையின் மீது பேசுகிற நேரத்தில் பொருளாதாரச் சிக்கலையும், அதனால் ஏற்படுகிற பிரச்சினைகளையும் விளக்குவதற்குப் பதிலாக, அரசியல் விமர்சனங்களையும், விளக்கங்களையும் எடுத்துச் சொல்லவேண்டிய நிர்ப்பந்தமான நிலைமை இருக்கிறது என்பதைத் துணைத் தலைவரவர்களே, உங்களிடம் தாழ்மையாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய உரையின் இறுதிப் பகுதியில் பேரறிஞர் அண்ணா அவர்கள் மாநில சுயாட்சிக் கொள்கையை ஆதரித்தார் என்பதற்கு ஆதாரமாக ஒரு கருத்தை, ஒரு மேற்கோளை தன்னுடைய உரையின் இறுதியில் இணைத்து இருக்கிறார்கள். இதைப் படிக்கிற நேரத்தில் ஏதோ அண்ணா அவர்கள் 1967-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 26-ம் தேதி

[திரு. ஆலடி அருணா] [1975 மார்ச் 4

இந்தத் தமிழகத்தின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொள்கிற நேரத்தில் மாநில சுயாட்சிக்காகப் பொறுப்பை ஏற்றதுபோல் இந்த நாடும், மன்றமும் நம்பவேண்டுமென்ற தொனியில் முதலமைச்சர் அவர்கள் அந்தக் கருத்தை இங்கே வெளியிட்டிருக்கிறார்கள்.

அது எந்தச் சூழ்நிலையில் சொல்லப்பட்டது, எந்த மாநாட்டில் சொல்லப்பட்டது, எந்தக் கட்சி மாநாட்டில் சொல்லப்பட்டது என்ற விவரங்களையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய இறுதி உரையில் விளக்கிச் சொல்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

நான் இந்த நேரத்தில் குறிப்பிடுவதெல்லாம், மாநில சுயாட்சிக்கு எதிராக, அதிலே இருக்கிற சாதக பாதகங்கள், அதிலே இருக்கிற நன்மை தீமைகளையெல்லாம் இந்த மன்றத்தில் விளக்க நான் ஆசைப்படவில்லை. அதற்கு மாறாக, மாநில சுயாட்சிக் கொள்கை அண்ணாவின் கொளகை அல்ல, அண்ணாவின் திட்டம் அல்ல என்பதை மட்டும்தான் உறுதிப்படுத்திக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன். அதை நான் விளக்க வேண்டுமானால் அது அண்ணாவின் கொள்கை இல்லை என்று நான் உறுதிப்படுத்த வேண்டுமானால், அண்ணாவின் லட்சிய வரலாறு துவக்கப்பட்டதிலிருந்து சில விவரங்களை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டியது என்னுடைய தலையாய கடமையாகும்.

1940-ம் ஆண்டு திருவாரூரில் நடைபெற்ற ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற லட்சிய முழக்கத்தை வழி மொழிந்தார்கள். அந்த முழக்கம் நாட்டு மக்களிடம் நல்ல செல்வாக்கை உண்டாக்கியது. புகழை உண்டாக்கியது. அண்ணாவின் பாதையில் லட்சியத் துடிப்பு மிக்க இளைஞர்கள் சேர்ந்தார்கள். எங்கே பார்த்தாலும் அண்ணாவின் அரசியல் கொள்கைக்கு நாட்டிலே நல்ல ஆதரவு இருப்பதைப் பார்த்து காங்கிரஸ் நண்பர்கள் பிரமித்தார்கள். திரு. ம. பொ. சி. அவர்களைத் தூண்டிவிட்டு 'மாநில சுயாட்சி' கேட்கும்படி தூண்டினார்கள். எனவே, மாநில சுயாட்சி என்ற கோஷம், அரசியல் கொள்கை, அண்ணாவின் கொள்கைக்கு எதிராகத் துவக்கப்பட்ட கொள்கை என்பதை இந்த மன்றத்தில் நான் எடுத்துச் சொல்வதை என்னுடைய கடமையாகக் கருதுகிறேன்.



1975 மார்ச் 4] [திரு. ஆலடி அருணா]

எனவே, அண்ணாவின் அரசியல் கால ஆரம்பத்தில் இந்த மாநில சுயாட்சிக் கொள்கை அவருடைய கொள்கைக்கு எதிர்க் கொள்கையாகும். அறிஞர் அண்ணா அவர்கள் மாநில சுயாட்சி பற்றிப் பல இடங்களில் விமர்சித்தார்கள், விமர்சித்தது மட்டுமல்ல, ஒரு இடத்தில் அண்ணா அவர்கள் நகைச்சுவையாகச் சொன்னார்கள். 'நான் சொல்கிற ஒரு அணாவில் ம.பொ.சி. கேட்கிற காலணா இருக்கிறது' என்று சொன்னார்கள். அது மட்டுமல்ல, வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு மாநாட்டைத் திருப்பரங்குன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் கூட்டியது. அந்த மாநாட்டில் மாநில சுயாட்சிக்கு எதிராக, சர்வோதயத்திற்கு எதிராக, வினோபாஜிக்கு எதிராக, ஜெயப்பிரகாஷ் நாராயணனுக்கு எதிராக பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதையும் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

"ஜனநாயகம் குழப்பம் நிறைந்தது; பொருளற்றது. எனவே சர்வோதயமும், சுயாட்சியும் தான் வேண்டும் என வினோபாவே கூறுகிறார். கட்சிகளற்ற ஜனநாயகம் வேண்டும் என்று ஜெயப்பிரகாச நாராயண் வலியுறுத்துகிறார். அயூப்கான் கூறுகிற மாதிரியில் அமைந்த அடிப்படை ஜனநாயகம் வேண்டும் என்று சிலர் கூறுகின்றனர். தத்துவார்த்தமாகப் பார்க்கும்போது இந்தத் திட்டங்கள் அனைத்திலும் சில நன்மைகள் இருக்கின்றன என்பது உண்மை. ஆனால் இவைகள் அனைத்தும் நடைமுறைக்கு ஒத்து வராதவை" என்று அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். "பார்ட்டிலெஸ் டெமாக்ரசி" என்ற பெயரில் ஜெயப்பிரகாஷ் நாராயண் எதைச் சொல்கிறாரோ, எந்த சர்வோதயம் சொல்கிறதோ, அயூப்கான் அடிப்படை ஜனநாயகம் பேசுபவர்கள் எதைச் சொல்கிறார்களோ இவைகளில் எல்லாம் சில தத்துவ நியாயங்கள் இருந்தாலும் நடைமுறைக்கு ஒத்து வராது என்று சொன்னது யார்? நாம் யாரைத் தெய்வம் என்று கருதுகிறோமோ, யாரை வழிகாட்டி என்று நாம் கருதுகிறோமோ, யாரை நாம் அரசியல் ஆசான் என்று கருதுகிறோமோ, அந்த அண்ணா அவர்கள் சொன்னார்கள். எனவே, மாநில சுயாட்சிக்கு எதிராக அன்றே குரலைக் கொடுத்து இருக்கிறார்கள்.

எனவே, அண்ணா அவர்களின் குரலுக்கு மக்கள் செவிசாய்க்க ஆரம்பித்த நேரத்தில், அண்ணா அவர்களின் புகழ் ஓங்குகிற

[திரு. ஆலடி அருணா] [1975 மார்ச் 4

நேரத்தில்தான் பெருமதிப்பிற்குரிய காமராஜர் அவர்கள், அண்ணா அவர்கள் புகழ் வெற்றிப் பாதைகளில் வேகமாகச் சென்று கொண்டிருப்பதைத் தடுக்கும் சக்தி தமிழகத்தில் இல்லை என்ற சூழ்நிலை உருவாகிக் கொண்டிருந்த நேரத்தில், அண்ணாவிற்கு எதிராக—இன்றையதினம் இந்த மந்திரி சபையில் இடம் பெற்றுள்ள ஆதித்தனாரைத் தூண்டிவிட்டு—'நாம் தமிழர்' இயக்கத்தை ஆரம்பித்து, 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற ஒரு கோஷத்தை உருவாக்கினார்கள் என்பதை நான் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

THIRU J. JAMES : On a point of Order, Sir.

MR. DEPUTY SPEAKER : There is no time for such things. I am not prepared to allow points of order of interruptions. Thiru Aladi Aruna may continue.

THIRU J. JAMES : In that case he ought not to have dragged in the name of Mr. Kamaraj.

MR. DEPUTY SPEAKER : When he was tracing the political history of some political parties, in that context he referred to the name of Mr. Kamaraj. That is all. There is no point of order. Thiru Aladi Aruna may continue.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** திரு. காமராஜர் அவர்களைக் குறித்துச் சொன்னதால் கேட்கிறேன். . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. டென்னிஸ் அவர்கள் உங்கள் கட்சியின் சார்பில் பேச இருக்கிறார். அப்போது அதை 'ரெஃபியூட்' செய்துவிட்டுப் போங்கள். அதை நோட் செய்து அவர்களிடம் கொடுத்துப் பேசச் சொல்லுங்கள். திரு. ஆலடி அருணா, தயவுசெய்து தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, இது ரொம்ப முக்கியமான விஷயம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நேரம் இல்லை. நோ பாயின்ட் ஆப் ஆர்டர்.

**திரு. ஆலடி அருணா :** தலைவரவர்களே, அண்ணாவின் தீவிரக் கொள்கையை எதிர்ப்பதற்கு இன்னொரு தீவிரக் கொள்கையால் தான் முடியும் என்று கருதி. . .



1975 மார்ச் 4]

**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுபவர் இங்கே அமைச்சராக இருக்கிறார். . .

**திரு. பெ. சீனிவாசன் :** அது எல்லோருக்கும் தெரிந்தது தான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்கள் வாய்ப்பில் பேசுங்கள். ஆலடி அருணா, நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஆலடி அருணா :** துணைத் தலைவரவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களின் தீவிர விடுதலைக் கொள்கையை எதிர்ப்பதற்கு இன்னொரு விடுதலைக் கொள்கையால்தான் முடியும், அதன் மூலமாகத்தான் அண்ணா அவர்களின் செல்வாக்கைச் சீரழிக்க முடியும், அவர்களுடைய பெருமையைக் குலைக்க முடியும் என்று கருதி, 'நாம் தமிழர் இயக்கத்தை' ஆதித்தனார் அவர்களைத் தூண்டிவிட்டு ஆரம்பிக்கச் செய்தார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், அண்ணாவிற்கு எதிராக இந்த இயக்கம் வெற்றி பெறாததால், இதிலும் அண்ணாதான் வெற்றி பெற்றார். திருச்செங்கோடு தேர்தலும், திருவண்ணாமலைத் தேர்தலும் அண்ணாவின் கொள்கைக்கு நாடு அணி வகுத்து விட்டது என்பதற்கு ஆதாரமாக விளங்கி விட்டது. அதனால்தான் அண்ணாவின் கொள்கையை எதிர்த்த இவர்கள், நாட்டின் தேர்தல் களத்தில் அண்ணா கொள்கை வெற்றி பெற்ற பின்னால், அரசியல் கோழைகள் அவர்களுடைய அரசியலை விமர்சிக்க தெம்பில்லாமல் சட்டத்தின் சன்னிதானத்தில் சரணடைந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 'கோழைகள்' என்ற கடுமையான வார்த்தை வேண்டாம். வேறு வார்த்தை போட்டுக் கொள்ளுங்கள். ரொம்பக் கடுமையான விமர்சனம் அது.

**திரு. ஆலடி அருணா :** அப்படியானால் 'கவர்ட்ஸ்' என்று சொல்ல வேண்டுமா? நீதி மன்றத்தைச் சந்திக்கத் தைரியமற்றவர்கள் சட்டத்தின் சன்னிதானத்திலே இருந்து கொண்டு பிரிவினைத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அன்று முதல் 1969 பிப்ரவரி 3-ந் தேதி வரையிலும் பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த மண்ணிலே இருந்து இருக்கிறார்கள்.

[திரு. ஆலடி அருணா] [1975 மார்ச் 4

நான் இந்த மன்றத்திலே வேண்டுவதெல்லாம் எத்தனையோ தி.மு.க. மாநாடுகள், செயற்குழுக்கள், பொதுக் குழுக்கள் தி.மு.க. சார்பிலே கூட்டப்பட்டிருக்கின்றன. நான் பொறுமையோடு, அடக்கத்தோடு கேட்டுக்கொள்கிறேன், உண்மை தெரிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், அண்ணாவின் கொள்கைதான் சுயாட்சிக் கொள்கை என்று சொன்னால் எந்த மாநாட்டிலாவது, எந்தப் பொதுக் குழு, செயற் குழு கூட்டத்திலாவது சுயாட்சி வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது உண்டா? அப்படி ஒரு தீர்மானத்தை இந்த மன்றத்தில் ஆளும் கட்சியினர் கொடுப்பார்களேயானால் நான் என்னுடைய குற்றச்சாட்டை திரும்பப் பெறுவது மாத்திரமல்ல, அதற்காக மன்னிப்புக் கேட்கவும் தயாராக இருக்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)**: பாயின்ட் ஆப் ஆர்டர். நண்பர் ஆலடி அருணா அவர்கள் மாநில சுயாட்சி தேவையில்லை என்ற விவாதத்திலே பேசுகிறபோது ஒரு புதிய தத்துவத்தைச் சொன்னார்கள். இதே அருணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தபோது ஒரு மணி நேரத்திற்கு மேலாக இந்த அவையிலே மாநில சுயாட்சிக்கு ஆதரவாகப் பேசியவர், அவருக்கு இன்றையதினம் என்ன ஆகிவிட்டது என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: இல்லை, இல்லை. அவர் பேசுவது அவர் ஒரு நல்ல வக்கீல் என்பதை எடுத்துக் காட்டுகிறது. அவர் ஒரு நல்ல வக்கீல்.

**திரு. ஆலடி அருணா**: துணைத் தலைவரவர்களே, நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் என்னுடைய வாதத்தைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். நான் மாநில சுயாட்சிக் கொள்கைக்கு எதிராகப் பேசவில்லை. இது அண்ணாவின் கொள்கையல்ல என்பதுதான் என்னுடைய வாதம். அதைத் தான் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**திரு. நா. வீராசாமி**: பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். அதில்தான் நானும் ஒரு விளக்கம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இதே நண்பர் ஆலடி அருணா அவர்கள் லோகல்



[திரு. நா. வீராசாமி]

லைப்ரரி அத்தாரிட்டி என்ற அந்த இடத்திலே திராவிட முன்னேற்றக் கழக மாணவர்கள் அங்கே பயிற்சி எடுத்துக் கொண்ட நேரத்திலே அவர்கள் உரையாற்றிய நேரத்தில் அதைக் கேட்கக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்போது அவர் சொன்னார், மாநில சுயாட்சிக் கொள்கை பேரறிஞர் அண்ணாவின் கொள்கை. அதற்கு நம்முடைய தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு வடிவம் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் கொள்கைக்காக நான் பாடுபடுவேன் என்று சொன்னார்கள். அப்படி அவர் பேசியது உண்மையில்லையா? அல்லது அப்போதும் அண்ணா அவர்களைத் துணைக்கு அழைத்துக் கொள்கிறாரா?

**திரு. ஆலடி அருணா**: எவ்வளவு வேண்டுமானாலும் தலையிடுவதற்கு நான் அனுமதிக்கிறேன். எனக்கு நேரம் மட்டும் தரவேண்டும். தி.மு.க. மாநாட்டினை நான் சொன்னேன். இறுதியில் ஒரு ரகசியத்தைக்கூட சொல்கிறேன். நண்பர் மாறன் அந்த நேரத்தில் முதலமைச்சரே ஆளுநராக இருக்க வேண்டுமென்ற கருத்தைப் பரிந்துரை செய்தார். அதைப்பற்றி என்னைப் பேசச் சொன்னபோது நான் அதை மறுத்துவிட்டு பேசவில்லை. நான் 65 நிமிட நேரம் இந்த மன்றத்தில் பேசியிருக்கிறேன்.

**திரு. துரை முருகன்**: பாயின்ட் ஆப் ஆர்டர். மாறன் சொன்னபோது அதை மறுத்தேன் என்று அருணா அவர்கள் சொன்னார்கள். மாறன் அவர்கள் இந்த அவையிலே உறுப்பினர் அல்ல. ஆகவே அவரைப்பற்றி எப்படிப் பேசுவது?

**திரு. முனு ஆதி**: அதற்கு ஏதாவது ரூல் இருக்கிறதா. ரூலை கோட் பண்ணுங்கள்.

THIRU DURAI MURUGAN: I am talking with the Deputy Speaker. Who are you to intervene.

(திரு. முனு ஆதி எழுந்து நின்றார்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: துரை முருகன் பேசிக் கொண்டிருக்கிறார். முனு ஆதி, நீங்கள் உட்காருங்கள்.

THIRU DURAI MURUGAN: I have raised a point of order. Who are you to intervene?

திரு. முனு ஆதி : யார் பேசினாலும் தலைவரைப் பார்த்துத்தான் பேச வேண்டும் *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர்கள் பேசும்போது தனிப்பட்ட முறையில் ஒருவருக்கொருவர் குற்றச்சாட்டு சொல்வது முறையல்ல.

* * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து எல்லோரும் இருக்கையில் அமருங்கள். அருணா தொடர்ந்து பேசட்டும்.

திரு. பெ. சீனிவாசன் : பேசுவதற்கு ஒரு மரியாதை வேண்டாமா ?

திரு. முனு ஆதி : [ * ] அதை வாபஸ் வாங்க வேண்டும். வாபஸ் வாங்காமல் விடமாட்டேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தமாதிரி அவதூறான வார்த்தைகள் சொல்லப்பட்டதையெல்லாம் அவைக்குறிப்பேட்டிலிருந்து நீக்குகிறேன். நீங்கள் பாயின்ட் ஆப் ஆர்டரில் குறுக்கிட்டதால்தான் இந்தமாதிரி நிலைமை ஏற்பட்டது.

திரு. முனு ஆதி : உங்களுடைய தீர்ப்புக்கு நான் தலை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆலடி அருணா பேசட்டும்.

திரு. பெ. சீனிவாசன் : திரு. வகாப் அவர்கள் நீண்ட நேரம் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்டார். நீங்கள் அவருக்குச் சந்தர்ப்பம் தரவேயில்லை. அதை முருகனுக்கு மாத்திரம் எப்படி அனுமதித்தீர்கள் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வகாப் கேட்ட நேரத்தில் இருந்த சந்தர்ப்பம் சூழ்நிலை வேறு. இப்போது

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





பேசுகிற உறுப்பினரே ஈல்டு செய்து இன்டர்வீன் பண்ணுவதற்கு அனுமதிக்கிறேன் என்று சொன்னபோது நான் அதை அனுமதிக்கத்தானே வேண்டியிருக்கிறது. திரு. வகாப், திரு. ஜேம்ஸ் இவர்களுக்கு பாயின்ட் ஆப் ஆர்டருக்கு சந்தர்ப்பம் கொடுக்காததற்கு வருத்தப்படுகிறேன்.

(சில உறுப்பினர்கள் எழுந்து நின்றார்கள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த வார்த்தைகளையெல்லாம் எக்ஸ்பஞ்ச் பண்ணியாகிவிட்டது. எல்லோரும் உட்காருங்கள்.

திரு. கோவை செழியன் : பேரவை துணைத் தலைவரவர்களே, இன்று மாண்புமிகு உறுப்பினர் ஆலடி அருணா அவர்கள் சில அரசியல் கருத்துக்களைச் சொல்லும்போது சில எடுத்துக் காட்டுகளைச் சொன்னார்கள். இந்த மன்றத்திலே நாம் சில நேரங்களில் சாக்ரடீசைப் பற்றி, பிளாட்டோவைப் பற்றி, லிங்கனைப் பற்றி, அண்ணாவைப் பற்றியெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறோம். அவர்களெல்லாம் இந்த மன்றத்திலே உறுப்பினர்களல்ல. இந்த மன்றத்தில் இருக்கிற உறுப்பினர்களைப் பற்றி மட்டும்தான் பேச வேண்டுமென்றால் இங்கே என்னைப் பற்றியும், சீனிவாசனைப்பற்றியும், அருணாவைப்பற்றியும்தான் பேசவேண்டும். ஆகவே, இதற்குத் தாங்கள் ஒரு நீதி தர வேண்டும்.

THIRU V. KRISHNAMOORTHI (NELLIKUPPAM) : The same rule applies to Thiru M.G.R. also.

திரு. ஆலடி. அருணா: துணைத் தலைவரவர்களே, நான் எந்தக் கோணத்தில் இருந்து என்னை விவாதத்தில் வைக்கிறேன் என்பதை இந்த மன்றம் கொஞ்சம் உன்னிப்பாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இது அண்ணாவின் கொள்கை அல்ல என்று சொல்கிறேனே தவிர மாநில சுயாட்சியை எதிர்க்கிறேன் என்று யாரும் எண்ணிடக் கூடாது. ஆனால், பேரறிஞர் அண்ணா அவர்கள் மாநில சுயாட்சி கேட்டார்கள் என்று நீங்கள் சொல்வதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. நானே மாநில சுயாட்சி பற்றிப் பேச யிருக்கிறேன். இல்லை என்று நான் சொல்லவில்லை. இந்த

மன்றத்திலேயும் பேசியிருக்கிறேன்; வெளியிலேயும் பேசியிருக்கிறேன். 'அருணா' நீ மாநில சுயாட்சி பற்றி பேசவில்லையா' என்று கேட்கிறார்கள். பேசினேன். மாநில சுயாட்சி பற்றிப் பேசுவதற்கு என்னை ஏன் ஆசானாக வைக்க வேண்டும்? என்னைப் பேசச் சொன்னார்கள்; பேசியிருக்கிறேன்.

"மாநில சுயாட்சி அண்ணாவின் கொள்கைதான்; மாநில சுயாட்சி அண்ணாவின் திட்டம்தான்; மாநில சுயாட்சி அண்ணாவின் தத்துவம்தான்; இந்த அரசு 1967 தேர்தல் மானிபெஸ்டோவில் மாநில சுயாட்சிக் கொள்கையை வைத்திருக்கிறது; அண்ணா அவர்களின் இறுதி காலம் வரையில் மாநில சுயாட்சி கொள்கையைக் கொண்டிருந்தார்" என்று நிரூபித்துக் காட்டினால் இந்த நிமிடமே என்னுடைய வார்த்தைகளை திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். உங்களிடம் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மாநில சுயாட்சி கொள்கையை ஏற்றுக் கொண்டார்கள் என்பதற்கு நீங்கள் காட்டுகின்ற ஆதாரமெல்லாம் ம.பொ.சி. மாநாட்டிலே அண்ணா பேசினார்கள். இல்லஸ்ட்ரேட்டட் வீக்லியிலே சொல்லியிருக்கிறார்கள் என்பது தான். ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் திட்டம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் அபிப்பிராயம் மாநில சுயாட்சி பெறுவதுதான் என்று நீங்கள் சொல்கிறீர்கள். கொள்கை என்பது வேறு; திட்டம் என்பது வேறு, அபிப்பிராயம் என்பது வேறு. கருத்து என்பது வேறு. இவை எல்லாம் அரசியல் வாதிகள் அவ்வப்போது ஏற்படுகிற சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப பேசிக் கொள்பவை. புகாரி ஓட்டலுக்குப் போகிறவர்கள் எல்லாம் புலால் உண்பவர்கள் என்று அர்த்தமல்ல. அல்லது போத்தி ஓட்டலுக்குப் போகிறவர்கள் எல்லாம் புலால் உண்ணமாட்டார்கள் என்றும் சொல்லிவிட முடியாது. ஆகவே, ஒரு அரசியல்வாதி வெளியிடுகின்ற கருத்தை வைத்துக்கொண்டு, வெளியிடுகின்ற அபிப்பிராயத்தை வைத்துக்கொண்டு அதுதான் அவருடைய லட்சியம், கொள்கை என்று சொல்லிவிட முடியாது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் நபிகள் நாயகம் விழாக்களில் கலந்து கொண்டிருக்கிறார்கள். நபிகள் நாயகத்தினுடைய பெருமைகளைப்பற்றி, அவருடைய அருமைகளைப் பற்றி,



அவருடைய அறிவுத் திறனைப்பற்றி, ஆற்றல் திறனைப்பற்றி எல்லாம் மிக அருமையாகப் பேசியிருக்கிறார்கள். அதனால் அண்ணா அவர்கள் இஸ்லாமியர் என்று சொல்லிவிட முடியுமா?

பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் தான் உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி என்று சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, மாஸ்கோவுக்குச் செல்வேன்; மாலங்கோவை சந்திப்பேன்; திராவிட முன்னேற்றக் கழகம்தான் உண்மையான கம்யூனிஸ்ட் கட்சி என்பதை விளக்குவேன் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். அதனால் அண்ணா அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் என்று சொல்லிவிட முடியுமா?

மாநில சுயாட்சி என்பது ம.பொ.சி.-யின் கொள்கை; அண்ணாவின் கொள்கை என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். ஆக, அண்ணாவைக் கொண்டுபோய் ம.பொ.சி-யின் பின்னால் நிறுத்துகிறீர்கள். அண்ணாவினுடைய ஐடன்டிட்டியை, அண்ணாவினுடைய இன்டிவிஜுவாலிட்டியை, அண்ணாவினுடைய இன்டகிரெட்டியை நீங்கள் தயவுசெய்து குறைக்காதீர்கள். அண்ணாவின் பெயரால் மாநில சுயாட்சி என்று சொல்வது பெரிய அரசியல் மோசடி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் நீண்டகாலமாக இருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூலம் பொது வாழ்விலே இறுதிவரையில் இருந்தார்கள். இந்த மாநில சுயாட்சி பற்றி பல சந்தர்ப்பங்களில் அண்ணா அவர்கள் பேசியிருக்கிறார்கள். இந்தக் கருத்து திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுக் குழுவிலும், செயற்குழுவிலும் விவாதிக்கப்பட்டிருக்கிறது. அதை எல்லாம் மறந்துவிட்டு இன்றைக்கு அருணா அவர்கள் பேசுகிறார்கள். நீங்கள் இப்போது சொல்வதற்கு நானோ நானோ அல்லது அமைச்சர்களோ ஆதாரம் காட்டி பேச முடியும். ஆனால், அண்ணாவின் கொள்கை மாநில சுயாட்சிக் கொள்கை அல்ல என்று 'முழுப் பூசணிக்காயை சோற்றிலே மறைக்கும் முயற்சி'யில் ஈடுபட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். அது தப்பு.

[1975 மார்ச் 4

**திரு. ஆலடி அருணா:** பிரிவினைத் தடைச் சட்டம் வந்த பின்னால், அண்ணா அவர்கள் இறுதி வரையில், இந்த அரசில் அங்கம் வகித்துக்கொண்டிருந்த காலத்திலேகூட, அல்லது விருகம்பாக்கம் மாநாட்டில் கூட—மாநில சுயாட்சித் தீர்மானம் மேற்கொண்டது கிடையாது. அண்ணா அவர்கள் காலத்திலே அப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினோம் என்று நீங்கள் நிரூபித்துக் காட்டினால் நான் உங்களிடம் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்து விடுங்கள். ஏற்கெனவே நீங்கள் 25 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** அண்ணா அவர்கள் சொன்னது இல்லஸ்ட்ரேட் வீக்லியில் வந்திருக்கிறது என்று அருணா அவர்கள் குறிப்பிட்டார்கள். இல்லஸ்ட்ரேட்டட் வீக்லியில் என்ன வந்தது, எப்போது வந்தது என்பதை விளக்குவார்களா?

**திரு. ஆலடி அருணா:** ஒரு அரசியல் கட்சித் தலைவர், அவ்வப்போது ஏற்படுகிற சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப சொல்கிற கருத்துக்கள் கொள்கை ஆகாது; அது ஒரு திட்டமும் ஆகாது.

(திரு. கு. காமாட்சி எழுந்தார்.)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, அது கொள்கையா இல்லையா என்பது வேறு. அதில் என்ன வந்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வார்களா?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். இரண்டு பக்கத்திலிருந்தும் ரொம்ப நேரமாக கொள்கை, கொள்கை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். பிரிவினை தடைச் சட்டம் வந்த பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் தங்களுடைய கொள்கையை தூக்கி எறிந்துவிட்டார்கள். ஆகையால், இங்கே கொள்கை, கொள்கை என்று சொல்லி அவையின் நேரத்தை வீணாக்கிக் கொண்டிருப்பது சரியா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரத்தை வீணாக்குவது என்று சொல்வது சரியல்ல.

**திரு. பெ. சீனிவாசன்:** தலைவரவர்களே, அம்மையார் அவர்கள் கூறியதைக் கேட்டு நான் வருத்தப்படுகிறேன். இந்தச் சந்தர்ப்



1975 மார்ச் 4] [திரு. பெ. சீனிவாசன்]

பத்தில் இந்தப் பிரச்சனையை அவர்கள் கிளப்பியிருக்கக் கூடாது. இதுபற்றி எங்களிடம் கேட்டால் நாங்கள் பதில் சொல்லத் தயாராக இருக்கிறோம். மத்திய அரசு "இந்தோ-சீனா பாய், பாய்" என்று வைத்துக்கொண்டிருந்த கொள்கையை தூக்கி எறிந்தது நமக்கெல்லாம் தெரியாதா? அந்தக் கொள்கையையே மாற்றியிருக்கும்போது மற்றவர்கள் கொள்கையை மாற்றக் கூடாது என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

**திரு. ஆலடி அருணா:** இந்த நிதிநிலை அறிக்கையில் வறட்சி வந்துவிட்டது; பருவமழை பொய்த்துவிட்டது என்று எல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதற்கு விளக்கம் கேட்டேன். அதை அவர்கள் கொடுக்கவில்லை. நான் கேட்டதற்கு என்ன விளக்கம் என்பதை தெரிவிப்பார்களா?

**திரு. ஆலடி அருணா:** என் பேச்சின் தொடக்கத்திலேயே நான் சொன்னேன். ம.பொ.சி.-யின் மாநாட்டிலே சொன்னதும், இல்லஸ்ட்ரேட் வீக்லியிலே வந்ததும் அண்ணாவின் கொள்கை என்று சொல்ல முடியாது. அது ஒரு கருத்து. ஒரு அபிப்பிராயம். அவ்வளவுதான். அதுதான் அண்ணாவின் கொள்கை என்று சொல்ல முடியாது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, அண்ணா அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதை படித்துக் காட்டுவார்களா?

**திரு. ஆலடி அருணா:** அதுதான் அண்ணாவின் கொள்கை என்றால், செயற்குழுவிலும், பொதுக் குழுவிலும் அதைக் கொண்டு வந்திருக்கலாமே. ஏன் கொண்டுவரவில்லை? அண்ணாவின் கொள்கை அதுவல்ல என்பதால் கொண்டு வரவில்லை.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, நான் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அருணா நீங்கள் இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

[1975 மார்ச் 4

திரு. க. உரா. எட்மண்ட் : தலைவரவர்களே, எங்கள் கட்சியின் சார்பில் அருணா அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே அதிகமான குறுக்கீடுகள் இருந்ததால் இன்னும் அவருடைய பேச்சை முடிக்க முடியவில்லை. இன்னும் அவருக்கு 15 நிமிடங்கள் கொடுங்கள். வேண்டுமானால் எங்கள் கட்சியிலிருந்து பேசுவதற்கு பெயர் கொடுத்திருக்கும் பட்டியலிலிருந்து ஒருவரைக் குறைத்துக்கொள்கிறோம். இதை சபாநாயகர் அவர்களிடத்திலே கூட சொல்லியிருக்கிறேன். அவர்கள் எழுதி கேட்டிருக்கிறார்கள். அலுவல் ஆய்வுக் குழுவுக்குச் சென்றுவிட்டதால் இன்னும் எழுதிக்கொடுக்க முடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் இன்னும் எழுதிக் கொடுக்கவில்லையே.

THIRU G. R. EDMUND : I assure you, Sir. I give the assurance to the Chair that I will give it in writing.

MR. DEPUTY SPEAKER : On the strength of the assurance which was brought to my notice by the hon. Member I have allowed him more than 25 minutes now. Today every member has been permitted to speak only for 10 minutes. He started at 11-30 a.m. Now it is 11.57 a.m. I asked him to resume his seat after he has spoken for about 27 minutes, out of which 7 minutes has been taken by interruptions. He has talked for about 20 minutes.

திரு. க. உரா. எட்மண்ட் : இன்னும் 15 நிமிடங்கள் கொடுங்கள். எங்கள் கட்சியிலிருந்து பேசக்கூடிய ஒருவரைக் குறைத்துக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : காலையில் ப்ரோகிராம் போடுவதற்கு முன்னால் இதைப்பற்றி முடிவு செய்திருக்க வேண்டும். ஒருவர் 30, 40 நிமிடங்கள் எடுத்துக்கொண்டால் மற்றவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்காமல் போய்விடும். ஆகவே, அருணா அவர்கள் இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துவிட வேண்டும்.

திரு. க. உரா. எட்மண்ட் : சபாநாயகர் அவர்கள் சம்மதம் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் 15 நிமிடங்கள் கொடுங்கள்.



1975 மார்ச் 4]

THIRU V. KRISHNAMOORTHI (Nellikuppam) : Let him speak for even 10 more minutes.

MR. DEPUTY SPEAKER : You cannot ask me to allow him to speak for some more time. That is not proper.

திரு. ஆலடி அருணா : மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில். . . .

THIRU V. KRISHNAMOORTHI (Nellikuppam) : What happened to the statement by Anna in the Illustrated Weekly?

THIRU ALADI ARUNA : I have already explained very clearly even in the beginning itself.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அருணா, ஒரு நிமிடம் பொறுங்கள். தலைவரவர்களே, அது என்ன என்பதை வெளியே சொல்ல மறுக்கிறார்கள். ஏனென்றால், அதைச் சொல்லிவிட்டால் அவர்களுடைய அரசியல் முதலீடு அத்தோடு முடிந்துவிடும். அதனால் வெளியே சொல்ல மறுக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் சீன யுத்தத்தின்போது திராவிட நாடு திராவிடர்க்கே என்ற கொள்கையினை கைவிட்டார்கள். அப்படிக் கொள்கையை கைவிட்டபோது, மேற்கொண்டு என்ன கொள்கை வைத்திருக்கிறீர்கள் என்று பேட்டி காண்பதற்காக பேரறிஞர் அண்ணா அவர்களுடைய இல்லத்திற்கு இல்லஸ்ட்ரேட் வீக்லி நிருபர் வந்தார். எப்படி இன்றையதினம் பல்வேறு மாநில முதலமைச்சர்களைப் பேட்டிக் கண்டு, அவர்களுடைய கொள்கை, அவர்களுடைய திட்டங்களை வெளியிடுகிறதோ, அதைப்போல் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வீட்டுக்கே வந்து அன்றையதினம் சந்தித்தார்கள். இன்னும் சொல்லப்போனால் அண்ணா அவர்கள் அப்போது 'ஷேவ்' கூட பண்ணாமல், கைலி கட்டிக்கொண்டிருக்கிற புகைப் படத்தைக் கூட பத்திரிகையில் போட்டிருக்கிறார்கள். திராவிட மக்கள் இந்திய அரசியல் அமைப்பின் சிறுபான்மையினர் அந்த சிறுபான்மையோர் சுயாட்சி பெற்றால்தான் முன்னேற முடியும். ஆகவே, மாநில சுயாட்சி எங்களுடைய திட்டவட்டமான கொள்கை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் பேரறிஞர்

(நண்பகல் 12-00)

அண்ணா அவர்கள் எதை நினைத்தாலும் அதைக் கொள்கையாக ஏற்றுக்கொள்ளக்கூடியவர்கள் இந்தக் கூடாரத்தில் இருக்கிறார்கள்

என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட நாடு திராவிடருக்கே என்று பொதுக்குழுவில் தீர்மானமாகக் கொண்டுவந்து நிறைவேற்றவில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் எதைச் சொன்னாலும் அதுதான் நியாயம். அதுதான் நம்போன்றவர்களின் முன்னேற்றத்திற்கு உகந்தது என்று எண்ணி நாங்கள் இயங்கிவருகிற காரணத்தினால் அதைக் கொள்கையாகவே ஏற்றுக்கொண்டிருப்பது திராவிட முன்னேற்றக் கழகம், அது பேரறிஞர் அண்ணாவின் கொள்கை அல்ல அல்ல என்று திருப்பித் திருப்பிச் சொல்லி அண்ணாவின் பெயருக்கே களங்கம் கற்பிப்பது அண்ணாவின் பெயரால் இயங்குகின்ற இயக்கத்திற்கே சரியானது அல்ல என்ற தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆலடி அருணா:** பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் சுயாட்சிக்கு எதிராக திருப்பரங்குன்றம் மகாநாட்டில் சொன்னதை கவனத்திற்குக் கொண்டுவந்தேன், அவர் நபி நாயகம் விழாக்களில் கலந்துகொண்டு பல கருத்துக்களைச் சொல்லியிருப்பதனால் அவர் இஸ்லாம் மதத்தைத் தழுவியவர் என்று சொல்ல முடியாது, திராவிட முன்னேற்றக் கழகம் கம்யூனிஸ்ட் கட்சிதான் என்றதனால் இது கம்யூனிஸ்டுக் கட்சியாகிவிட முடியாது என்றெல்லாம் சொன்னேன். ம.பொ.சி. சொன்ன மாநில சுயாட்சி என்கிற கருத்தை எடுத்து இது அண்ணாவின் கருத்து என்று சொல்வதுதான் பேரறிஞர் அண்ணாவுக்கு பெருமை அளிப்பது அல்ல என்று நான் குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பேரறிஞர் அண்ணா சொன்னது இருக்கட்டும். சென்ற முறை சட்டசபையில் ஆலடி அருணா இதைப்பற்றிச் சொன்னாரே, இப்போது அவர் இதுபற்றி என்ன சொல்கிறார்?

**திரு. ஆலடி அருணா:** நான் அதைத்தான் முன்பே சொன்னேன். ஆலடி அருணா என்ன சொன்னார் என்று கேட்டு ஆலடி அருணா சொன்னார் என்பதாக அருணாவை ஆசானாக்க ஆக்கவேண்டிய பரிதாபம் வரவேண்டாம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஆலடி அருணா யாரைத் தான் ஆசான் என்றார், யாரை ஆசானாகக் கொண்டிருந்தார்



என்பது எல்லாம் மனச்சாட்சி இருந்தால் அவருக்கே நன்றாகத் தெரியும். அதைப்பற்றிக் கிளறவில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் மாநில சுயாட்சியைப்பற்றி தெளிவாக 1968-லேயே பேசியிருக்கிறார்கள். இல்லஸ்ட்ரேடட் வீக்லியில் வந்ததையும் திரு. இராமச்சந்திரன் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியிருக்கிறார். இதைப்பற்றி எல்லாம் நான் முன்பே விளக்கியும் இருக்கிறேன்.

**திரு. ஆலடி அருணா:** துரதிருஷ்டவசமாக கலைஞர் அவர்கள் என் பேச்சின் துவக்கத்தில் இல்லை. அதை எல்லாம் நான் மறுக்கவில்லை. அதைப்பற்றி பல சந்தர்ப்பங்களில் தம் கருத்துக்களைத் தெரிவித்திருந்தாலும் 1969 பிப்ரவரி 3 ஆம் தேதி ஏன் அதை ஒரு தீர்மானமாகத் தரவில்லை? தேர்தல் அறிக்கையில் என் அதைத் சேர்க்கவில்லை? நபிநாயகம் விழாவில் அவர் ஒவ்வொரு ஆண்டும் கலந்துகொண்டு அதுபற்றித் தம் கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் கம்யூனிஸ்டுக் கட்சிதான்—நான் மாஸ்கோ போவேன், மாலாங்கோவை சந்திப்பேன் என்றெல்லாம் சொன்ன காரணத்தினால் திராவிட முன்னேற்றக் கழகம் கம்யூனிஸ்ட் கட்சிதான் என்பதை ஒத்துக்கொள்ள முடியுமா? அதற்கெல்லாம் இங்கே என்ன சொல்கிறார்கள்? கடைசியாக . . . (மணியடிக்கப் பட்டது)

**திரு. நா. வீராசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். அடுத்ததாக திரு. சுப்பு அவர்கள் பேசுவார்கள்.

**திரு. க. சுப்பு:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1975-76-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கை கொள்கை விளக்க புத்தகமாக இருக்கிறது என்பதுதான் அந்தப் பக்கத்தில் இருந்து குற்றச் சாட்டாகக் கூறப்பட்டது. இது கொள்கை விளக்கக் குறிப்புதான். அரசாங்கத்தின் கொள்கை என்ன, இந்தத் கொள்கை அடிப்படையில் என்ன என்ன திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன என்பதை எடுத்துச் சொல்லத்தான் வரவுசெலவுத் திட்டத்தின் நோக்கமே தவிர வேறு ஒன்றும் இல்லை.

[திரு. க. சுப்பு] [1975 மார்ச் 4

திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயிர் மூச்சான கொள்கைகளை ஒட்டி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை — பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறகு டாக்டர் கலைஞர் சமதர்ம சமுதாயம் அமைக்கும் சீரிய பணியில் எவ்வாறு செயல்பட்டு வருகிறார் என்பதை ஒருசில நிமிடங்களில் சொல்ல விரும்புகிறேன்.

இந்தப் புத்தகத்திலேயே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "ஊதிய உயர்வுக் கோரிக்கை வைப்பதற்கு வாய்ப்பற்ற பல கோடி மக்கள் இந்திய நாட்டில் இருக்கிறார்கள். காரணம் — அவர்களுக்கு எந்த ஊதியமும் இல்லை. ஊதியம் இருந்தால் தானே உயர்த்த வேண்டுமென்ற குரலே எழப் போகிறது? அவர்களுக்கும் சேர்த்துத்தான் — சரியாகச் சொல்வதானால், அவர்களை முக்கியமாக வைத்துத்தான் நமது பொருளாதாரப் புரட்சியையே உருவாக்க வேண்டும்" என்று சொல்லியிருக்கிறார்கள். கம்யூனிஸ்டுகளின் கொள்கையே உழைக்கின்ற வர்க்கம் உயரவேண்டும் என்பதுதான். இந்தக் கொள்கையை நடுமையமாக வைத்து உயர்வுதாழ்வற்ற சமதர்ம சமுதாயத்தை உருவாக்கும் பணியில் இந்த அரசு எப்படியெல்லாம் இயங்கி வருகிறது என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

திட்டங்களைச் சொல்லும்போது — திட்டப் பணிகள், திட்டத்திற்கு அப்பாற்பட்ட வளர்ச்சிப் பணிகள், வறட்சி நிவாரணப் பணிகள், சமூக நல சிறப்புப் பணிகள், சமதர்ம சமுதாய அமைப்புப் பணிகள் ஆகியவற்றை எல்லாம் உள்ளடக்கி இந்த நிதிநிலை அறிக்கை எந்தவகையில் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை விளக்கியிருக்கிறார்கள்.

நம்முடைய நோக்கங்களில், லட்சியங்களில் முழு வெற்றியையும் காண முடியாமல் இருப்பதற்கான காரணங்களையும் சுட்டிக்காட்டி அவற்றைக் களைய வேண்டும் என்கிற அடிப்படையில்தான் மாநில சுயாட்சிக் கொள்கையை வலியுறுத்தியிருக்கிறார்கள்.

அந்த மாநில சுயாட்சிக் கொள்கைதான் இவ்வளவு பெரிய விவாதத்தை இங்கே கிளப்பியது. இது அண்ணாவின் கொள்கையே அல்ல என்று வாதிட்டார்கள். பின் அண்ணா என்னதான் உங்களுக்கு விட்டுவிட்டுப்போயிருக்கிறார்? அண்ணா மாஸ்கோ போவேன், மாலாங்கோவ் உடன் பேசுவேன் என்று சொன்னாரே,



1975 மார்ச் 4] [திரு. க. சுப்பு]

அண்ணா கம்யூனிஸ்டா என்று கேட்டார்கள். அவர்கள் கம்யூனிஸ்டுகளுடன் தொடர்பு கொண்டிருப்பதனால் அவர்கள் கம்யூனிசத்தை ஏற்றுப்போற்றுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. மற்றவர்கள் எதிர்பார்த்திருக்கலாம். சினிமா பாணியில் சொல்வதானால் "துலாபாரம்" என்ற படத்தில் ஒரு டீக்கடை வருகிறது. வயிறு பசிக்கின்றது என்று ஒரு பையன் அந்த டீக்கடையில் இருந்து ஒரு வடையைத் திருடிவிட்டான். அதற்கு தண்டனையாக அந்த டீக்கடைக்காரர் அந்த பையனுக்கு சூட்டுக் கரண்டியால் சூடுபோட்டார். அந்த டீக்கடையின் பெயர் என்ன தெரியுமா? அருள்ஜோதி டீ ஸ்டால், அருள்ஜோதி என்கிற பெயரை வைத்துக்கொண்டிருப்பதினாலேயே அங்குள்ளவரிடம் அருள் வந்துவிடும் என்று அர்த்தமில்லை. ஆகவே அண்ணாவின் பெயரால் கட்சி வைத்துக்கொண்டிருப்பதனாலேயே இவர்கள் அண்ணாவின் கருத்தான இதையும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நினைக்கவில்லை.

அவர்கள் நீண்ட காலம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தவர்கள். திராவிட முன்னேற்றக் கழகமே '— தன்மான உணர்ச்சி இயக்கம் — ஒரு இனம் — ஒரு மொழி — ஒரு மொழியினரின் மேன்மைக்காக தோன்றிய இயக்கம் — அந்த அடிப்படையான கொள்கை ஒன்றுதான் அதனது மூச்சு. வேறுசில பிரச்சினைகள் எழலாம். தமிழகர்களின் விடுதலையும் — தமிழ்மொழியின் வளர்ச்சியிலும் — தமிழ்மக்களின் தன்மான உணர்ச்சியிலும் எழுச்சிகொண்டு அந்த மொழி — இன — நாட்டிற்காகவே பாடுபட்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் மாநில சுயாட்சி என்ற வார்த்தையைச் சொல்லவில்லை என்று சொன்னார்கள். மார்க்ஸ் கொள்கை அவரோடு முற்றுப்பெறவில்லை. அதற்குப் பின்னால் அந்தக் கொள்கையின் அடிப்படையில் லெனின் சில கொள்கைகளை வகுத்தார்கள். அதனால்தான் அந்தத் தத்துவத்தை மார்க்ஸ்— லெனின் சித்தாந்தம் என்பார்கள். அப்படி மாநில சுயாட்சி பற்றிய வார்த்தையை அண்ணா சொல்லவில்லை — கலைஞர் சொல்கிறார் என்றால் இதை அண்ணாயிசம் — கருணாநிதியிசம் என்று சொல்லலாம். அப்படிச் சொல்வதனாலும் தப்பு இல்லை.

ஆனால் அப்படிக்கூடச் சொல்லாது — இது ம.பொ.சி. கொள்கை — யார் யாருடைய பின்னாலோ போகிறார்கள் என்று

[திரு. க. சுப்பு] [1975 மார்ச் 4

சொல்வது — அப்படியே போனால்தான் என்ன? ம.பொ.சி. யார்? தமிழர் — தமிழ்மொழிக்காக — தமிழ் இனத்திற்காக — தமிழ் நாட்டிற்காக — பல்லாண்டுகளாகத் தம்மையே அர்ப்பணித்துக் கொண்டு பாடுபட்டு வருகிறவர்—அவரோடு இணைத்துக் கொண்டிருப்பதனால் ஒன்றும் தப்பு இல்லை. வேறு யாரோடு இணைந்து இருப்பதைவிட இது தாழ்ந்துவிடவில்லை. வெட்கப்படவேண்டிய ஒன்றும் இல்லை. திரு. வடிவேலுகூடச் சொன்னார்கள். வர வேண்டிய வரிப்பணம் ஏராளமாக இருக்கிறதே, வசூல் பண்ண வேண்டாமா? ரைட் ஆப் செய்ய வேண்டுமா என்று சொன்னார்கள். யார் யார் வரி கட்டாது ஏய்க்கிறார்கள் என்பது எல்லாம் உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

**திரு. எஸ். வடிவேல் :** தலைவரவர்களே, நான் சொன்னது, மத்திய அரசிலும் ஏற்பட்ட நிலையைச் சொன்னேன், இந்த மாநில அரசையும் சொன்னேன். இரண்டையும் ஒன்றாகத் தாக்குவதற்குச் சொன்னேனே அல்லாது நான் இந்த அரசைத் தாக்க வேண்டும், அந்த அரசைப் போற்றவேண்டும் என்று அல்ல.

**திரு. கோவை செழியன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, வரியை ஏய்ப்பது என்பதற்கும், தவணை முறையிலே கட்டுகிறேன் என்பதற்கும் இடையிலேயுள்ள வேற்றுமையை மாண்புமிகு உறுப்பினரவர்கள் அறிந்திருக்கிறார்கள். பலபேர் வரி கட்டாமலேயே சொத்து சேர்த்திருக்கிறார்கள். அதுவும் சுப்பு அவர்களுக்கும் தெரியும்.

**திரு. க. சுப்பு :** வரியை ஏய்த்தாரா? தவணை முறையில் கட்டுவாரா என்பதல்ல. தவணை முறையில் கட்டுவாரா? யார் கட்டுவார்? எந்த அடிப்படையிலே கட்டுவார்? எப்பொழுது கட்டுவார், அது உங்களுக்கே தெரியும். நான் கேட்பதெல்லாம், வரி கட்டவில்லையா? எப்படி தடுப்பது? அதற்கு ஆலோசனை கூறுங்கள், வரி கட்ட மறுக்கிறார்கள். அவர்களிடமிருந்து எப்படி வாங்குவது? அதற்கு ஆலோசனை கூறுங்கள். சமதர்மச் சமுதாயத் திட்டத்தைத் தீட்டுகின்ற அரசைப் பார்த்து, வேகமாகப் போகவேண்டும், வேகமாகப் போகவேண்டுமென்று சொல்கிற நீங்கள், எப்படி வேகமாகப் போகவேண்டுமென்று சொல்லாமல், காலை வாரி விடுவதைத்தான் நாம் பார்க்கிறோம்.



1975 மார்ச் 4] [திரு. க. சுப்பு]

நாம் கேட்பது மாத்திரமல்ல, மாநில சுயாட்சி. ஆந்திராவிலே இருக்கிற எதிர்க்கட்சிக்காரர்கள் கேட்கிறார்கள். இங்கேயிருந்து மத்திய அரசுக்குப் போகிற வரிகளின் வருவாயில் 10-ல் ஒரு பங்கு கூடத் திரும்பி வரவில்லையென்று குரலெழுப்பியிருக்கிறார்கள். நாம் நீதி, நியாயம் கேட்கவில்லை. நிதி நியாயம் கேட்கிறோம். ஆகவே, நாம் கொடுக்கக்கூடிய நிதியிலே நியாயமான பங்கைக் கேட்கிறோம்.

பிறர் பங்கைத் திருடுவது பாவம் என்று நீங்கள் சொன்ன பாரதியாரே சொன்ன, அப்படிப்பட்ட பாவமான காரியத்தை, அநியாயமான காரியத்தைச் செய்யாமல், நியாயமான காரியத்தை இந்திரா காந்தி செய்யட்டுமே என்கிற நல்லெண்ணத்தின் அடிப்படையிலே, தோழமை எண்ணத்திலே தான் சொன்னேன். ஆனால், அண்ணாவின் கொள்கை இரண்டு பேரிடத்திலும் இல்லை என்ற அளவுக்கு இங்கே திருமதி அனந்தநாயகி அவர்கள் கிண்டல் செய்யக் கூடிய அளவுக்கு, திரு. அருணா அவர்களுடைய பேச்சு அமைந்திருந்ததை. . .

**திருமதி த. ந. அனந்தநாயகி :** திடீரென்று zeal of a new Convert என் இவ்வளவு தூரம் இருக்கவேண்டும் அவர். வரவுசெலவுத் திட்டத்தை விட்டுவிட்டு, எங்கெங்கோ போய், டெல்லிக்குப் போய், மெட்ராஸுக்கு வந்து, எங்கோ போய்க்கொண்டிருக்கிறாரே. இது என்றைக்கும் . . .

**திரு. க. சுப்பு :** நான் இருப்பதை விட்டுவிட்டு, எங்கெங்கோ போய் அலையவில்லை. இங்கேயே இருந்துகொண்டுதான் பேசுகிறேன், மனம் நிறைந்து சொல்கிறேன். கொள்கையின் அடிப்படையில் பேசுகிறேன். தனிப்பட்ட நபர்களின் அடிப்படையில் பேச விரும்பவில்லை.

தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்கான கொள்கையைப் பிரதிபலிக்கிற திட்டங்களைக் கொண்டிருக்கிற நாங்கள் சொல்கிற கொள்கை குழப்பமாக இருக்கிறது என்று சொன்னால், அமெரிக்காவிலே போய் ஒரு சகாப்தத்திற்கு ஒரு தலைவர்தான் தோன்றுவார்கள். அப்படி ஒரு தலைவர் இன்றைக்குத் தோன்றியிருக்கிறார். அவர், சொல்கிறார்,-காப்பிட்டலிசம், சோஷலிசம், இன்னும் இருக்கிற இசத்தையெல்லாம் ஒன்றாகச் சேர்த்துக்கொள்வது— ஒரு இசம் என்று சொல்வது. இதை யார் ஏற்றுக் கொள்வார்கள்? அருணா அவர்கள் பேசினார்கள், இங்கே. நீங்கள்

சொல்லியிருக்கிற தத்துவங்கள் எல்லாம் . . . (குறுக்கீடு). நீங்கள் இப்பொழுதாவது சொல்லுங்கள்.

**திரு. ஆலடி அருணா:** அமெரிக்காவில் எங்கள் தலைவர், காப்பிட்டலிசத்திலேயிருக்கிற நல்ல அம்சங்கள், சோஷலிசத்திலேயிருக்கிற நல்ல அம்சங்கள், கம்யூனிசத்திலேயிருக்கிற நல்ல அம்சங்கள், இவைகளைத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள் என்று சொன்னார்கள். (சிரிப்பு) அவசரப்படாதீர்கள், சிரித்து உங்கள் சிந்தனையைக் குழப்பிக் கொள்ளாதீர்கள். கொஞ்சம் அமைதியாகக் கேளுங்கள். எந்த அரசியல் தலைவரும் தன்னுடைய கொள்கையை ஒரிஜினலாகக் கொண்டு வரவில்லை. கார்ல் மார்க்ஸ் கொள்கை என்றால், அவர் ஒரிஜினாலிட்டி தரவில்லை. கிரேக்க சரித்தாசிரியர்கள் ஈஸ்கைலஸ், ஈரிப்நேடஸ் போன்றவர்கள் எழுதியுள்ளதைப் படித்தால், எல்லோரும் ஏற்கனவே உள்ள சில விஷயங்களை உள்ளடக்கிக் கூறியிருக்கிறார்களென்பது தெரியும். எனவே, உலகத்திலே எந்த அரசியல் தத்துவமாக இருந்தாலும், சோஷலிசமாக இருந்தாலும், கம்யூனிசமாக இருந்தாலும், காப்பிட்டலிசமாக இருந்தாலும், அண்ணாயிசமாக இருந்தாலும் ஒரே தத்துவத்தின் நியமங்களாக இருக்க முடியாது. அப்படி ஒரு அரசியல் தத்துவம் உலகத்தில் தோன்றியிருக்க முடியாது.

**திரு. க. சுப்பு:** காப்பிட்டலிசமும் சோஷலிசமும் எப்படி இணையமுடியும்? அடிப்படை ஒன்றாக, குறிக்கோளை ஒன்றாக நிறுத்திக்கொண்டு, எதைநோக்கி நடைபோடுவதிலே அவசியம் இருக்கிறதோ, அதை நோக்கி நடைபோட வேண்டும். நீங்கள் சொல்வது இரண்டுக்கும் எவ்வளவு ஒற்றுமையிருக்கிறது? இமயமலைக்கும் பாதாளத்திற்கும் எப்படி ஒன்றாக இணைப்புப் போடுவீர்கள்? நீங்கள் புரிந்து கொண்டிருக்கிற, அண்ணாயிசத்தில் இருக்கிற நல்ல அம்சம் ஒன்றைச் சொன்னால், அது ரொம்ப உதவியாக இருக்கும். ஜே. பி. யைப் பற்றிச் சொல்கிறீர்கள். . .

**திரு. எஸ். வடிவேல்:** கார்ல் மார்க்ஸ் அவர்கள் உலகத்திலேயே சோஷலிச சித்தாந்தத்தையும், கம்யூனிச சித்தாந்தத்தையும் உண்டாக்கியவர். யாருடைய சித்தாந்தத்தையும் அவர் பின்பற்றவில்லை.

**திரு. ஆலடி அருணா:** நண்பர் சுப்பு அவர்களுக்குச் சொல்கிறேன், ஆடம் ஸ்மித் தனது வெல்த் ஆப் நேஷன்ஸ் என்ற



புத்தகத்தில் சொல்லி இருக்கிற தத்துவங்களைப் பார்த்தால், ஒரு காப்பிட்டலிசத்தை சப்போர்ட் பண்ணுகிறார் என்பது அரசியல் வாதிகளுடைய கருத்து. அதிலே,

'Free enterprise and democracy have been involved'.

அதன் அடிப்படையை ஒத்துக்கொள்வதென்றால், அது காப்பிட்டலிசத்தில் ஒரு பகுதியாக இருக்காதா? அதற்காக, அவரது கொள்கையை ஒத்துக்கொள்ள வேண்டியதில்லையென்று பொருளா?

**திரு. பெ. சீனிவாசன்:** தலைவரவர்களே, காப்பிட்டலிசமும், சோஷலிசமும் எப்படி இணையமுடியும் என்று சுப்பு அவர்கள் சொன்னார்கள். நான், பிராக்டிக்கலா இருப்பதைச் சொல்கிறேன். தூத்துக்குடியிலே ஸ்பிக் இருக்கிறது. அது காப்பிட்டலிசமா? சோஷலிசமா? தனியார், நிர்வாகத்திலே இருக்கிறார்கள். 49 சதவிகிதம் பங்கு அரசாங்கத்தினிடம் இருக்கிறது.

**திரு. க. சுப்பு:** நான் ஒன்று கேட்கிறேன், சீனிவாசன் அவர்களை. இங்கே இருக்கிற இந்திய அரசாங்கம் காப்பிட்டலிச அரசாங்கமா? அல்லது சோஷலிச அரசாங்கமா? நீங்கள் உறவு வைத்துக் கொண்டிருக்கிற அரசாங்கம், இந்திரா காந்தி தலைமையிலேயிருக்கிற அரசாங்கம், முதலாளித்துவ அரசாங்கமா? சோஷலிச அரசாங்கமா? அதற்குப் பதில் சொல்லுங்கள்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இந்திரா காந்தியை ஆதரிக்கின்ற வகையிலே பேசுகிறார்கள். நாம் என் அதற்காக நேரத்தை வீணாக்க வேண்டும். அவர்கள் மாநில சுயாட்சியை விட்டுவிட்டால் ஒன்று சேரலாம் என்று சொல்கிறார்கள். அதற்காக மக்களைச் சரி செய்திருக்கிறார்கள். அண்ணா இறந்த பிறகு, அவர் கொள்கையல்லவென்று முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இந்திரா காந்தியை ஆதரித்து எதற்காக இங்கே பேசவேண்டுமென்று புரியவில்லை.

**திரு. பெ. சீனிவாசன்:** திரு. சுப்பு அவர்கள் எம்.ஜி.ஆர். சொன்ன காப்பிட்டலிசம், சோஷலிசம் எப்படி இணைய முடியும் என்று கேட்டார்கள். திரு. சுப்பு அவர்கள் பொருளாதாரம் படித்தவர்கள், கம்யூனிஸ்ட் கட்சியிலே இருந்தவர்கள். அதனாலே தெரிந்துகொள்வதற்காகக் கேட்கிறேன், தூத்துக்குடியிலேயிருக்கிற ஸ்பிக் நிறுவனம் காப்பிட்டலிசமா? சோஷலிசமா?

திரு. க. சுப்பு: நான், இப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகம் சோஷலிஸ்ட் என்று சொல்லமுடியாது, கான்ஸ்டிட்யூஷன் படித்த யாரும் சோஷலிஸ்ட் சொஸைட்டி என்று சொல்ல முடியாது (எதிர்க்கட்சித் தரப்பில் கைத்தட்டல்). நாம் ஒரு கான்ஸ்டிட்யூஷன் கீழே இயங்கிக் கொண்டிருக்கிறோம். அந்த அரசியல் சட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டுதானிருக்க வேண்டும். கேரள அரசும் அதற்கு உட்பட்டுத்தானிருக்க வேண்டும். அச்சுத மேனன் ஆளுகிற கேரள அரசாங்கம் உட்படச் சொல்கிறேன். நீங்கள் ஏன் கை தட்டுகிறீர்கள்? சோஷலிசம் என்றால் என்ன? ஸ்பிக்கைப் பற்றி நான் பேசப் போகிறேன், நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்? ஆனால், நான் தெரிந்துகொள்ள விரும்புவது, காப்பிட்டலிசம், சோஷலிசம், அடுத்து என்னவோ செக்டேரியனிசமோ என்னவோ, அது என்ன இசமோ, புரியவில்லை. ஒருவேளை செக்கரட்டேரியட்டிசமா? அதைப்பற்றி நான் படித்ததில்லை. நீங்கள் படித்ததிலே இருந்தால், தெளிவாகப் புரிகிற மாதிரி சொல்லுங்கள், இதுதானென்று.

திரு. வடிவேல் அவர்கள், ஒரே நாளிலே ஒரு இலட்சம் வீடுகள் கட்ட வேண்டுமென்று கேட்கிறார். இது என்ன அலாவுதீனின் அற்புத விளக்கா? விளக்கைத் தேய்த்தவுடன் திடீரென்று தோன்றுவதற்கு. அல்லது, அலிபாபாவும் நாற்பது திருடர்களுமா? திறந்திடு சீசேம் என்ற உடன் திறந்துகொள்ள. இங்கு திறக்கவும் முடியவில்லை, மூடவும் முடியவில்லை, உள்ளே போகவும் முடியவில்லை. அவையெல்லாம் சினிமாவோடு நின்றுவிடுகிறது. நடைமுறையிலே எதைச் செய்யமுடியுமோ அதைச் செய்ய வேண்டும். இன்றைக்கிருக்கிற சட்டத்தின் அடிப்படையிலே, திட்டத்தின் அடிப்படையிலே அரசு எதைச் செய்ய தவறியிருக்கிறது? அதைச் சொல்லவேண்டும். இது, இது குற்றமாக இருக்கிறது, இதை, இதைச் செய்யத் தவறியிருக்கிறீர்கள் என்றுதான் சொல்லவேண்டும். . .

திரு. கா. காளிமுத்து: சுப்பு அவர்களுக்கும் எனக்கும் தெரிந்த ஒன்றைச் சொல்கிறேன். ஜெய விலாஸ் அதிபருக்கு நாற்பாலைக்கு அனுமதி தந்தது. அது எந்த இசம்? அப்படிப்பட்ட நடவடிக்கைகள் தேவையா என்பதைத்தான் நான் சுப்பு அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.



திரு. க. சுப்பு: ரொம்ப வேதனையோடு மத்திய அரசாங்கத்திடம் நான் அனுமதி வாங்கவேண்டியிருக்கிறது, அந்த நிர்ப்பந்தம். நீங்கள் உறவு கொண்டிருக்கிற இந்திரா காங்கிரஸ் அரசாங்கத்திடம், டெல்லியிலே போய் நேராக, அனுமதி வாங்கிக் கொண்டு வருகிறார்கள். அதைத்தடுக்கத்தான் மாநில சுயாட்சி கோருகிறோம். அதிலே, நீங்கள் காலை வாரிவிட்டால் எப்படி? நாங்கள் கேட்க விரும்புவது, எல்லா வகையிலும் அவர்களிடம் அனுமதி வாங்கிவிடுகிறார்கள். அது வேண்டாமென்று கூறுகிற சர்க்கார் நாமாக இருக்கவேண்டுமென்றுதான், மாநில சுயாட்சி கேட்கிறோம். அது ஜெய விலாசாக இருந்தாலென்ன? எந்த விலாசம் அவுட் ஆகவேண்டுமென்று கூறுகிறோம்.

திரு. ஆலடி அருணா: ஜெய விலாஸ் அதிபர் நாற்பாலைக்கு விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார். அது இவ்வரசால் பரிந்துரை செய்யப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட தனிப்பட்ட முதலாளிகளுக்கு அனுமதியளிக்க இவ்வரசு பரிந்துரைக்கத் தயாராக இருக்கிறதென்றால் . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, கொள்கையைப் பற்றி விவாதிக்கிற நேரத்தில், நடைமுறைகளைப்பற்றி பேசி, இரண்டையும் குழப்புவது நல்லதல்ல. ஒரு இயக்கத்தின் முழுமையான கொள்கை என்ன என்று பார்க்கவேண்டும். இன்றைக்குக் கேரளாவிலே ஆளுகின்ற அரசு, அவர்களது முழுமையான கொள்கையை நிறைவேற்ற முடியவில்லை, ஏனென்றால், இன்றைக்கிருக்கிற நடைமுறையில், இந்திய நாட்டிலிருக்கிற சூழ்நிலையில் தனியார் துறையை அனுமதித்துத் தீர வேண்டுமென்பதால், கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியிலே இருக்கிற அங்கே கூட முழுமையான கம்யூனிசத்தைக் கொண்டு வர முடியவில்லை. இங்கே நண்பர் சுப்பு அவர்கள் பேசியதெல்லாம் கேபிட்டலிஸம், சோஷலிஸம், கம்யூனிஸம் எல்லாம் சேர்ந்ததுதான் அண்ணாயிஸம் என்று சொல்லி ஒரு கொள்கையைக் குழப்பவேண்டாம் என்றுதான் சொன்னார்கள். இன்றைக்கு இருக்கிற நடைமுறை என்றைக்கும் இருக்க வேண்டுமென்று சொல்லவில்லை. சோஷலிஸ சித்தாந்தத்தை நோக்கி நாம் நடைபோட்டுக்கொண்டிருக்கிறோம், இடையிலே இப்படிப்பட்ட நடைமுறைகளை நீக்கித் தீரவேண்டுமென்றுதான் சொல்லிக்கொண்டிருக்கிறோம்.

திரு. ஆலடி அருணா: சோஷலிஸத்தை நோக்கிப் போகிறோம் என்று சொல்கிறவர்கள் நூற்பாலைக்கு தனிப்பட்டவர்கள் லைசென்ஸ் கேட்டால் பரிந்துரை செய்கிறீர்கள், ஏன் கூட்டுறவு அமைப்பிலே அதை ஏற்படுத்தக்கூடாது? முதலாளிகளுக்கு ஏன் லாலி பாடவேண்டும்?

திரு. கே. டி. கே. தங்கமணி: அரசியல் சட்டத்திற்குட்பட்டுத் தான் ஒரு மாநில அரசாங்கம் ஒவ்வொரு மாநில அரசாங்கமும் செயல்படவேண்டியிருக்கிறது. அதற்குட்பட்டு நடைமுறையிலே சில நல்ல காரியங்களைச் செய்வது அவசியம். இதே மன்றத்திலே ஜெயவிலாஸ் கம்பெனிபற்றி நான் ஒரு பிரச்னையை எழுப்பி யிருக்கிறேன். ஜெயவிலாஸ் கம்பெனிக்கு, மற்ற கம்பெனிகளுக்குக் கொடுக்கப்படாத சலுகைகள் கொடுக்கப்படுகிறது என்று தெரிவித்தபோது அதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர் நான் செய்யவில்லை, வேறு அமைச்சர் செய்திருக்கலாம் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் செய்திருக்கலாம் என்று சொன்னார்கள். பஸ்களை தேசியமயமாக்கவேண்டுமென்று இந்த அரசாங்கத்தின் சார்பாகச் சொல்லப்பட்டது. ஆனால் இந்த அரசாங்கம் நடைமுறையிலே என்ன செய்கிறது? அதற்குப்பிறகு எத்தனை தனியார்களுக்கு லைசென்ஸ்கள் கொடுத்திருக்கிறீர்கள். இருக்கக்கூடிய பஸ்களையெல்லாம் தேசியமயமாக்குவோம் என்று சொல்லிவிட்டு நடைமுறையிலே பல புதியவர்களுக்குச் சலுகைகள் கொடுப்பதும், சில குறிப்பிட்ட முதலாளிகளுக்கு மேலும் மேலும் சலுகைகளைக் கொடுத்துக்கொண்டு இருப்பதும் சரிதானா?

திருமதி த. ந. அனந்தநாயகி: லைசென்ஸ் கொடுப்பது கேபிட்டலிஸமா அல்லது சோஷலிஸமா என்று திரு. சுப்பு அவர்கள் கேலி செய்துகொண்டிருக்கிறார்கள். அது 'மியர் ஃபேவரிட்டிஸம்' என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல் கொள்கை வேறு, இருக்கின்ற அரசியல் அமைப்புக்குள் இயங்குகின்ற தன்மைகள் வேறு. கொள்கை என்று பார்க்கின்ற போது இந்திய அரசியல் நல்ல சமதர்மத் திட்டங்களை நிறை வேற்றக்கூடிய சக்தியைப் பெறவேண்டுமென்பதற்காகத்தான் மாநில சுயாட்சி என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் பிரிவினையை விட்டவுடனே எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கொள்கையை



நிறைவேற்றுவது அண்ணா அவர்களுடைய இலட்சியத்தை நிறை வேற்றுவது ஆகும். பேரறிஞர் அண்ணா அவர்கள் ராஜ்ய சபை யிலே அழகாகச் சொன்னார்கள். பொருளாதாரம் என்பது ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு பொருளாதாரம் என்று இருக்க முடியாது. நாடு முழுமைக்கும் ஒரே ஒரு பொருளாதாரம்தான் இருக்கும் அது காஸ்லியாக இருந்தாலும், பேங்கின் ஆக இருந் தாலும் ஒரு அமைப்பு முழுவதற்கும் ஒரு பொருளாதாரம்தான் இருக்கமுடியும்.

Economy is only one unit for the whole of India.
இந்தியா முழுமையும் ஒரு அமைப்பு, ஆகவே
அண்ணா அவர்கள் சொன்னார்கள் இந்தியாவிலே மிக்ஸ்ட் எக்கானமி இல்லை என்று சொன்னார்கள்.

"It is not a mixed economy but an adulterated economy".
என்று அண்ணா அவர்கள் அழுத்தந்திருத்தமாக கலப்புப் பொருளாதாரமல்ல, கலப்படப் பொருளாதாரம் என்ற தன்மை யிலே இயங்குவதாகத் தெரிவித்தார்கள்.

ஜெய விலாஸ் லைசென்ஸ்பற்றிச் சொன்னார்கள். இங்கே கொடுக் காமல் இருந்தாலும்கூட டெல்லிபோய் வாங்கிக்கொண்டு வரலாம் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடாது. திரு. கே. டி. கே. அவர்கள் சொன்னார்கள். நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். டி.வி.எஸ். பஸ்களை தேசியமயமாக்கவேண்டுமென்று நாம் சட்ட மன்றத்திலே சட்டம் நிறைவேற்றி டெல்லிக்கு அனுப்பி 6, 7 மாதங்கள் ஆகியும்கூட டெல்லி சர்க்காரிலே இருந்து கொண்டிருந்தது. என்ன காரணம் என்று எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். முதலாளி களுக்கு அவ்வளவு சக்தி இருக்கிறது. திரு கே. டி. கே. அவர் களுக்குக் தெரியும். தேயிலைத் தோட்டங்களைத் தேசியமயமாக்க வேண்டுமென்று கேரள சர்க்கார் சட்டத்தை நிறைவேற்றி மத்திய அரசின் ஒப்புதலுக்காகக் காத்துக்கொண்டிருக்கிற நேரத்திலே இந்திய நாடாளுமன்றத்திலே எங்கள் காலத்திலாவது அந்தச் சட்டத்திற்கு அமைதி கிடைக்குமா என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஏங்குகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே தனியார்களை ஆதரிக்கின்ற பொருளாதாரத்தைக் கொள்கையை இந்திய அரசு பெற்றிருக்கிறது. சுயாட்சி கிடைத்தால் தான் தேயிலைத் தோட்டங்

[திரு. ச. இராமச்சந்திரன்] [1975 மார்ச் 4

சஸ்களையும் பஸ்களையும் நாட்டுடைமையாக்குகின்ற பணியை நாமே செய்யக்கூடிய முறை ஏற்படும். சுயாட்சி கிடைக்கிற வகையிலே இருந்தால்தான் நாம் அப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற முடியும். ஆகவே, நடைமுறைகளை சொல்லி கொள்கைகளைப் புறக்கணிப்பது சரியல்ல.

திரு. கே. டி. கே. தங்கமணி: நான் கேட்ட கேள்விக்குப் பதில் இல்லை. நான் ஒரு குறிப்பிட்ட ஸ்தூலமான பிரச்னையை எழுப்பினேன். அவர்கள் சொல்வது கஷ்டம்தான். 1956 ஆம் ஆண்டு இண்டஸ்ட்ரியல் பாலிசி ரிசல்யூஷனுக்கு உட்பட்டு நாம தொழில் துறையினை வளர்ப்பதிலே எந்தவிதமான தடங்கலும் கிடையாது. இன்றைக்கு முதல்போடுகிற விஷயத்திலே 20 ஆயிரம் கோடி ரூபாய் மூலதனம் பொதுத் துறையிலே போட்டிருக்கிறோம். 30 ஆயிரம் கோடி ரூபாய் வரையில் தனியார் துறையிலே இருக்கிறது. தனியார் துறையை மேலும் வளரவிடக்கூடாது, 20 ஆயிரம் கோடி ரூபாயாக இருப்பதை மேலும் மேலும் வளர்க்க வேண்டும். நம்முடைய மாநில அரசு இருக்கிற அதிகாரத்தை வைத்துக்கொண்டே இப்படிப்பட்ட காரியங்கள் செய்யவில்லை என்று சொல்கிறோம், எந்த அளவுக்குச் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று அவர்கள் சொல்லவேண்டும்.

திரு. பெ. சீனிவாசன்: அமைச்சர் அவர்கள் பாலிசி பற்றியும் புரோகிராம்பற்றியும் சொன்னார்கள். இப்போது இருக்கிற அதிகாரத்தை வைத்துக்கொண்டே தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்பதுதான் எங்கள் குற்றச்சாட்டு.

திருச்சிக்கும் மதுரைக்கும் இடையே சுந்தரம் மோட்டார்ஸ் பஸ்கள் ஓடிக்கொண்டிருந்தன இன்றைக்கு அரசாங்க பஸ்கள் ஓடுகின்றன, ஆனால் மதுரை-ராஜபாளையம் என்ற செக்டாரிலே பி.ஆர்.சி. பஸ்கள் இரண்டுதான் போகிறது, அந்த முறையிலே அங்கே ஓடிக்கொண்டிருக்கிற ஜெயவிலாஸ் பஸ்களுக்கு உதவிக் கொண்டிருக்கிறார்கள், அதுதான் குற்றச்சாட்டு. இப்போது இருக்கிற அதிகாரத்தையே துஷ்பிரயோகம் செய்யக்கூடிய அளவில் இருக்கிறது. இந்த நிலையில் மாநிலத்தைப்பற்றிப் பேசி சுயாட்சி கேட்பதற்கு உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தனிப்பட்ட கம்பெனிகளைப்பற்றி கேட்டார்கள். தனியாகக் கேள்வி போட்டால் விவர



1975 மார்ச் 4] [திரு. ச. இராமச்சந்திரன்]

மாகப் பதில் தரமுடியும். மதுரை ராஜபாளையம் செக்டாரில் நிறைய பஸ்களை விடமாட்டேன் என்கிறீர்கள் என்று அடிக்கடி சொல்லிவருகிறார்கள். மார்ச் முதல் தேதி முதல் கட்டபொம்மன் கழகத்தின் 2 பேருந்துகளும் பி.ஆர்.சி. கழகத்தின் 2 பேருந்துகளும் ஓடிக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் ஊரில் இல்லாததால் ஒருவேளை அவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம் என்று நினைக்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: Iam sorry to say that it is pure eye-wash

25 ஜெயவிலாஸ் பஸ்கள் போகின்றன, இரண்டே இரண்டு அரசாங்க பஸ்கள்தான் போகின்றன.

திரு. க. சுப்பு: திரு கே. டி. கே. அவர்கள் சொன்ன அந்தக் கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதை நான் ஆதரிக்கிறேன். ஆனால் காலையரி விடுவதைத்தான் எதிர்க்கிறோம். ஷிப்பிங் கார்ப்பரேஷன் என்று நாம் நம்முடைய மாநிலத்திலே பப்ளிக் செக்டாரிலே ஆரம்பித்து இருக்கிறோம். ஆனால் அச்சுத மேனன் ஆட்சி நடத்துகிற கேரள மாநிலத்திலே—ஜாயின்ட் செக்டாரைவிட பப்ளிக் செக்டார்தான் நல்லது, பப்ளிக் செக்டாரில் முடியவில்லையென்றால்தான் ஜாயின்ட் செக்டாருக்குப் போகிறோம்—கேரள மாநிலத்திலே இல்லாததை, அங்கே அவர்கள் செய்யாததை நாம் செய்திருக்கிறோம். அதற்காக இந்த அரசைப் பாராட்டாமல் முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைப்பது சரியல்ல.

சோவியத் யூனியன் மற்ற சோஷலிச நாடுகளுக்கு எல்லாம் உதவிசெய்யக்கூடிய பெரிய நாடு. அந்த நாடே இன்றைக்கு இந்தியாவிலே இருக்கிற முதலாளிகளுடன் சேர்ந்து கொலாப்ரேஷனோடு தொழில்கள் ஆரம்பிக்கப் போவதாக நான் சொல்வது உங்களுக்கே கூட ஆச்சரியமாக இருக்கும். சோவியத் யூனியன் தனியார் துறையை ஒழிக்கவேண்டும், முதலாளிகளின் சுரண்டலை ஒழிக்கவேண்டும் என்பதை கொள்கையாக வைத்துக்கொண்டிருக்கிற நாடு. அது இந்தியாவில் உள்ள தனிப்பட்ட முதலாளிகளோடு சேர்ந்து 'இன்சோ' என்று ஆரம்பித்து டிரக் செய்யக் கூடிய மிகப் பெரிய தொழிற்சாலையை ஆரம்பிக்கப் போகிறார்கள். சோஷலிஸ நாடுகளுக்குத் தலைமை வகிக்கக்கூடிய நாடு சோவியத் யூனியன். அதுவே அப்படிச் செய்யும்போது, இந்திய அரசியல் [illegible]க்கிக்கட்டப்பட்டு இடையிலே உங்களிடம் குட்டை வாங்கிக்

கொண்டு தமிழ்நாடு அரசு இவ்வளவு சிறப்பாகச் செய்கிறது என்பதை நீங்கள் மனச்சாட்சியோடு பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறீர்கள் என்பதைத் தவிர நான் வேறு ஒன்றும்

(பிற்பகல் 12-30)

சொல்வதற்கில்லை. அதே நேரத்தில் நாங்கள் செய்து கொண்டு போவது சரி என்று சொல்லவில்லை. ஜெய விலாசைப்பற்றிச் சொன்னார்கள். ஜெய விலாசைப்பற்றிக் கேள்வி கேட்டதே நாங்கள்தான். அதற்காக ஒரு கட்சியிலே இருப்பவர்கள் முதலாளிகளை ஆதரிப்பதாக அர்த்தம் அல்ல. ஆனால் சில நடைமுறை விஷயங்களிலே பார்க்கும்பொழுது சேர்ந்திருக்கிறார்கள். இப்பொழுது தேர்தல் வருகிறது என்றால் அப்படிப்பட்டவர்களுடைய பலரின் உதவியும் தேவைப் படுகிறது. எனவே படிப்படியாகத்தான் வர வேண்டு மென்ற நிலையில் இருக்கிறோம். இந்தக் கொள்கையில் என்ன குறையிருக்கிறதோ அதைச் சுட்டிக்காட்டுங்கள், நீங்கள் சொல்வதை வரவேற்கிறோம். "சமதர்ம சமுதாயம் அமைக்கும் முயற்சிகளுக்கு, பொதுத் துறையின் வளர்ச்சியே உறுதுணையாக விளங்கும் என்பது நமது கொள்கையாகும்" என்று இந்த பட்ஜெட் உரையிலே கூறப்பட்டிருக்கிறது. அதை விட்டுவிட்டு நீங்கள் எங்கேயோ அலைகின்றீர்கள். எங்களுடைய கொள்கையே, "சமதர்ம சமுதாயம் அமைக்கும் முயற்சிகளுக்கு, பொதுத் துறையின் வளர்ச்சியே உறுதுணையாக விளங்கும்" என்பதாகும். அதைத்தான் இந்திராகாந்தி அம்மையார் அவர்களும் செய்கிறார்கள். அதற்குத்தான் எதிர்ப்பு கிளம்புகிறது. ஆகவே, இரண்டிலும் ஒற்றுமை இருக்கிறது என்பதை அனந்த நாயகி அம்மையார் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுத் துறை வளர வேண்டுமென்பதில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையும், இந்திராகாந்தி அம்மையாரின் கொள்கையும் இணைந்திருக்கிறது. அதில்தான் இணைய வேண்டியிருக்கிறது. அந்தக் கொள்கையின் அடிப்படையில்தான், "தனியார் துறை முயற்சிகள் தக்க கட்டுப்பாட்டில் இருக்கும் வகையில் கூட்டுத் துறையில் பல புதிய தொழில் முயற்சிகளையும் நாம் தொடங்கியுள்ளோம். பொருளாதாரச் சக்தி குவிந்துவிடாமல், பரவலாகும் வண்ணம், கூட்டுறவுத் துறையும், சிறு தொழில்களும் நன்கு வளர்வது அவசியம் என்பதும் நமது கருத்தாகும்" என்றும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒருமுறை லைசென்ஸ் கொடுத்தால் திரும்பத் திரும்பத் தொழில்களை ஆரம்பிப்பதற்குத் தடை இல்லை



என்று சொல்லப்பட்டது. முதலமைச்சரவர்கள் கொடுக்கும் கொள்கை அறிக்கையைத்தான் ஏற்க வேண்டுமே தவிர என்னைப் போன்றவர்கள் சொல்லக் கூடியதை ஏற்க வேண்டியதில்லை. பொருளாதாரக் குவியல் முறையை ஏற்கவில்லை.

ஸ்பிக் நிறுவனம் கூட்டுத் துறையில் துவங்கப்பட்டது. அதற்குப் பதிலாக அதைப் பொதுத் துறையில் தொடங்கியிருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும். அது வரவேற்கக் கூடியதாக இருந்திருக்கும். கூட்டுத் துறைக்குப் போனதால் பல குறைபாடுகள் இருக்கின்றன. இப்பொழுதும் ஒன்றும் குடி முழுகிப் போய்விடவில்லை. 'ஃபைனான்ஷியல் கண்ட்ரோல்' அதாவது பொருளாதார முறையைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை ஒரு முழு நேர அரசாங்க அதிகாரியிடம் கொடுத்தால் கண்காணிப்பாக இருக்கும். ஆனால் இப்பொழுது ஃபைனான்ஸ் செகரட்டரியைப் போடுகிறோம். அவருக்கு தன்னுடைய இலாக்கா வேலைகளைக் கவனிக்கத்தான் நேரம் இருக்கும். அவர் எப்படி அந்தக் கூட்டங்களுக்குப் போக முடியும்? ஃபைனான்ஸ் செக்ரட்டரியை டைரக்டராகப் போட்டால் மட்டும் கட்டுப்படுத்த, கண்காணிக்க முடியாது. அதற்கு முழுநேர ஊழியர் இருந்தால்தான் நல்லது. 'பர்சனல் டிபார்ட்மெண்டில்' கூட்டுத் துறையிலே ஒரு முழுநேர அரசாங்க ஊழியர் பொறுப்பாக இருந்தால் நல்லது.

இப்பொழுதுதான் கூட்டுத் துறை வந்திருக்கிறது. மேலும் பொதுத் துறையிலே கொண்டு வருவதற்கு முயல வேண்டும். தனியார் துறையிலே மட்டும்தான் திறமை இருக்கிறது என்ற வாதத்தை ஏற்க வேண்டியதில்லை. நொடித்துப்போன மில்களை அரசாங்கம் எடுத்து திறமையாக நடக்கிறதா இல்லையா? அவர்களுக்கெல்லாம் உள்ள திறமை என்னவென்றால் கள்ளக் கணக்கு வைத்துக் கொள்வது, இதுதான் தனிப்பட்ட முதலாளிகளின் திறமை. ஆகவே, நமக்குத் திறமை இல்லை என்று யாரும் சொல்ல முடியாது. பொதுத் துறையிலே தொழில்களைத் தொடங்கினால் அதிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தைக் கொண்டு நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய பல நல்ல திட்டங்களைக் கொண்டு வர முடியும்.

கடைசியாக, இந்த பஸ்களைப் பொறுத்தவரையில் மட்டும் ஒன்றைச் சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ள

[திரு. க. சுப்பு] [1975 மார்ச் 4

விரும்புகிறேன். சேரன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்தவரையில், அதற்கான முதலீடு 45 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய். ஆனால் அதிலிருந்து கிடைத்த வருமானம் 45 இலட்சத்து 21 ஆயிரம் ரூபாயாகும். போட்ட முதலுக்குச் சரிக்குச் சரி லாபம். அந்த அளவிற்குப் பொதுத் துறையில் இயங்க முடிகிறது. இதுவரையில் பொள்ளாச்சி மகாலிங்கமும், டி.வி.எஸ். ஐயங்காரும் இந்த அளவிற்கு இலாபக் கணக்கு காட்டியதுண்டா? நமக்கு கணக்கைத்தான் காட்டினார்களே தவிர, நஷ்டக் கணக்கைத்தான் காட்டினார்களே தவிர, இது வரையில் பெற்ற இலாபம் என்று காட்டியிருக்கிறார்களா? அப்படி யென்றால் இதுவரையில் பெற்ற இலாபம் எல்லாம் கள்ளப் பணமாக ஆக்கப்பட்டிருக்க வேண்டும்.

அந்த அடிப்படையிலே பார்த்தால் கள்ளப் பணத்தை ஒழிக்க வேண்டுமென்பதற்காக நாம் போட்டிருக்கும் தீர்மானம் தமிழ் நாட்டிற்கு எவ்வளவு அவசியம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நாம் போட்டிருக்கும் தீர்மானத்தை வலியுறுத்தும் வகையில் அதற்காகப் போராட வேண்டும். பஸ் போக்கு வரத்து மட்டுமல்ல, எல்லாத் தொழில்களையுமே பொதுத் துறையிலே கொண்டுவந்தால் அவைகளை இலாபத்திற்கு கொண்டு வர முடியும்.

'மால்கோ'வை தேசியமயமாக்க வேண்டுமென்று சொல்லியும் மத்திய அரசு அதற்கு இன்னும் அனுமதி அளிக்காததால் கொண்டுவர முடியவில்லை. இதுபோன்ற நிலையில் மாநில சுயாட்சி என்பது ஒரு மாமருந்து என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கூறி இதனை நீங்கள் ஏற்க வேண்டும், நானும் ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. என். டென்னிஸ்:** தலைவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின்மீது சில கருத்துக்களைக் கூறலாம் என்று நினைக் கிறேன். இங்கே பற்றாக்குறை நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கத்திலேயும் பற்றாக்குறை நிதி நிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கத் திலேயும் வரி சுமத்தப்பட்டிருக்கிறது, மாநில அரசாங்கத்திலும்



1975 மார்ச் 4] [திரு. க. சுப்பு]

வரி சுமத்தப்பட்டிருக்கிறது. இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நிதிநிலை அறிக்கை ஏழை எளிய மக்களின் பொருளாதார நிலையைப் பிரதிபலிக்கக் கூடியதாக இருக்கிறதா? அவர்களுடைய பிரச்னைகளைத் தீர்த்துவைக்கும் அளவிற்குத் திட்டங்கள் வகுக்கப் பட்டிருக்கிறதா என்று பார்த்தால் பொதுமக்களின் பொருளாதார நெருக்கடியை அதிக அளவில் பெருக்கக் கூடியதாகத்தான் இருக் கிறது என்பதைக் காணலாம். வரிகளிலிருந்து பொதுமக்கள் விடுவிக்கப்படுவார்கள் என்று எதிர்ப்பார்த்திருந்த வேளையில் பொதுமக்களின் மேல் வரி சுமத்தியிருப்பது வருந்தத்தக்குரிய தாகும்.

இன்றையதினம் அரசினுடைய வருவாய் உயர்ந்திருக்கிறது. ஆனால் செலவழிக்கப்படும் தொகை உயர்ந்திருக்கிறதே தவிர சரியான காரியங்களுக்குச் செலவழிக்கப்பட்டிருக்கிறதா, மக்களின் பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்க்கத்தக்க வழிகளில் செலவழிக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் மக்கள் ஏமாற்றம் தான் அடைந்திருக்கிறார்கள்.

1966-67 ஆம் ஆண்டில் மொத்த வருவாய் 194 கோடியே 55 இலட்சம் ரூபாயாக இருந்தது. ஆனால் இன்றைக்கு—1975-76 ஆம் ஆண்டில்—வருவாய் சுமார் 501 கோடி ரூபாயாக இருக்கிறது. மொத்த வருவாய் 1966-67 இல் இருந்ததை விட இப்பொழுது 307 கோடி ரூபாய் அதிகரித்திருக்கிறது. இந்த 9 ஆண்டுகளில் 307 கோடி ரூபாய் அதிகரித்திருக்கிறது. இவ்வாறு வரி உயர்ந் திருக்கும்போது இங்கே பற்றாக்குறை பட்ஜெட் சமர்ப்பிக்கப் பட்டிருக்கிறது.

விற்பனை வரியை மட்டும் பார்த்தால் 1955-56 ஆம் ஆண்டு பட்ஜெட்டில் இது 9 கோடியே 62½ இலட்சம் ரூபாயாக இருந்தது. ஆனால் 1966-67 இல் விற்பனை வரி 48 கோடியே 75 இலட்சம் ரூபாயாக இருந்தது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மொத்த வருவாய் 194 கோடியே 50 இலட்சம் ரூபாயாக இருந்தது. 1955-56 இல் விற்பனை வரியாக அன்றைக்குள்ள மொத்த வருவாயில் 16 சதவிகிதமாக இருந்தது. 1966-67-இல் விற்பனை வரியின் சதவிகிதம் 25 ஆக இருந்தது. 1975-76 இல்

[திரு. க. சுப்பு] [1975 மார்ச் 4

விற்பனைவரியின் பட்ஜெட் எஸ்டிமேட் 201 கோடியே 28 இலட்சமாக இருக்கிறது. இது மொத்த வருமானத்தில் 40 சதவிகிதமாக இருக்கிறது. விற்பனை வரி எவ்விதமாக உயர்ந்து வந்திருக்கிறது என்று பார்க்கும்பொழுது, 1955-56-லிருந்து 20 ஆண்டுகளில் 1975-76-ல் 20 மடங்காக இந்த விற்பனை வரி உயர்ந்திருக்கிறது. 1966-67-ஐ விட 4 மடங்காக விற்பனை வரி இன்றைக்குள்ள பட்ஜெட் எஸ்டிமேட்டில் அதிகரித்திருக்கிறது. 1966-67 இல் மொத்த வருவாய் 194 கோடியே 54 இலட்சம் ரூபாயாக இருந்தது. ஆனால் 1975-76 இல் விற்பனை வரி மட்டும் 201 கோடியே 28 இலட்சமாக இருக்கிறது. இவ்விதம் மொத்த வருவாயைப் பார்க்கும்பொழுது 1966-67 இல் மொத்த வருவாயை விட, விற்பனை வரி மட்டும் 1975-76 இல் பட்ஜெட் எஸ்டிமேட் 7 கோடி ரூபாய் அதிகமாக இருக்கிறது என்ற நிலைமையைப் பார்க்கிறோம்.

இன்றைக்கு இந்த மாநிலத்தைப் பார்க்கும்பொழுது பொது மக்கள் மத்திய அரசாங்கம் எற்கெனவே அறிவித்த வரிகளும், இந்த ஆண்டு மத்திய அரசின் நிதிநிலை அறிக்கை, அதனால் பொருளாதார நிலையில் பொதுமக்களுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்கள், அடுத்ததாக, தமிழ்நாட்டில் ஏற்கனவே இருக்கும் வரிகள், அதனால் பொதுமக்களுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்கள், பொருளாதார நெருக்கடிகள், விலைவாசி உயர்வு ஆகிய இவற்றின் மத்தியில் இந்த பட்ஜெட்டிலும், இந்த நிதிநிலை அறிக்கையிலும் வரி சுமத்தப்பட்டிருக்கிறது என்றால் பொதுமக்கள் எவ்விதமாகப் பாதிக்கப்படுகிறார்கள், விலைவாசி எப்படி உயராமல் இருக்கும் என்பதைப் பார்க்க வேண்டும். இந்த வரி உயர்வால் விலைவாசி எவ்விதமாக உயரும், சாதாரண மக்களுக்கு எவ்விதப் பொருளாதார நெருக்கடி ஏற்படும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வரி இல்லாமல் அரசு நடத்த முடியாது. ஆனால் பொதுமக்களைப் பாதிக்காத அளவுக்கு இது இருக்கவேண்டும். இன்று பொதுமக்களைப் பாதிக்கக்கூடிய அளவில் காப்பி, டீ போன்றவற்றுக்கு வரி விதிக்கப் பட்டிருக்கிறது. இவை சாதாரண மக்கள் தவிர்க்க முடியாத அளவுக்கு இன்று உபயோகிப்பவை. அடுத்த காலத்தில் ஒரு கப் காப்பி 15 காசாக இருந்தது இப்



1975 மார்ச் 4] [திரு. என். டென்னிஸ்]

போது 30 காசு, 35 காசு என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது. இது இன்னும் உயரும், எண்ணெய் வகைகளுக்கு வரி போடப் பட்டிருக்கிறது. இப்போதே சமையலுக்கு கஷ்டமாக இருக்கும் போது இந்த வரியின் மூலம் பொதுமக்கள் மேலும் பாதிக்கப் படுவார்கள்.

தமிழ்நாட்டில் வறட்சி, அரசு ஊழியர்களுக்குப் படி கொடுக்க வேண்டும், மதுவிலக்கினால் ஏற்பட்ட நஷ்டத்தைத் தவிர்க்க வேண்டுமென்ற காரணங்களை அரசு கூறலாம். எல்லா மாநிலங்களிலும் இவ்விதமான பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன. இதற்கு வரி போடாது சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். வருவாய்க்கேற்றவாறு செலவு செய்ய வேண்டும். மத்திய அரசு வரி விதித்திருக்கும் பொருள்களின் மேலும் கூட மாநில அரசும் விதித்திருக்கிறது. இதனால ஏழைகளுக்குக் கஷ்டம் அதிகரித்திருக்கிறது. சிக்கனத்தின் மூலம் நிர்வாகத்தில் ஆடம்பரத்தைக் குறைத்து செலவுகளைக் குறைத்து, வரிகளைக் குறைத்திருக்கலாம். திட்டச் செலவுகளுக்காக மாத்திரம் அதிகத் தொகையை ஒதுக்கியிருந்தால், அடிப்படையில் இருந்தே பொதுமக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த, பொருளாதாரத் திட்டத்தை வகுக்க செயல் பட்டிருக்க வேண்டும். திட்டமில்லாத காரியங்களுக்கும் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிதிநிலை அறிக்கையில் திக்கற்றவர்களுக்கும் விதவைகளுக்கும் உதவி செய்யும் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அது வரவேற்கக்கூடியது. ஆனால் வயோதிகர்களுக்கு பென்ஷன் திட்டம் சமூக நலப் பணியில் சிறந்ததாக இருக்கிறது. இதற்காக ஒரு கோடி ரூபாய்தான் ஒதுக்கக்கூடிய நிலை இருக்கிறது. ஏற்கனவே உதவி பெற்று வருகிற ஒருவர் இருந்தால்தான் புதிதாக ஒருவருக்கு வயோதிகர் பென்ஷன் கொடுக்கிறார்கள். ஆகவே, இந்த திட்டங்களுக்கு போதுமான நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மீனவர் பெருங்குடி மக்களுக்கு வீடு கட்டும் திட்டம் வகுக்கப் பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. கடற்கரை ஓரங்களில் எல்லா இடங்களுக்கும் வீடு கட்டும் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டும். கடலரிப்பால் அடிக்கடி பாதிக்கக்கூடிய நிலை கன்னியாகுமரி

[திரு. என். டென்னிஸ்] [1975 மார்ச் 4

ம்ாவட்ட கடற்கரையில் இருக்கிறது. அந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு முன்கணனை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

**திரு. இரா. மாணிக்கவாசகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்ட நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய சூழ்நிலை யார் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் யதார்த்தமாகப் பார்க்கிறபோது நாடு பூராவும் வறட்சி ஏற்பட்டு பஞ்சத்தின் கடைக் கோடியில் இருக்கும் காட்சியை நான் பார்க்க முடிகிறது. இதற்கு அடிப்படைக் காரணம் மழை பொய்த்துவிட்டதுதான். இப்படி மழை இன்றுமட்டும் பொய்த்து விடவில்லை. பல நூறு ஆண்டுகள், ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே அடிக்கடி இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நாம் பார்க்க முடிகிறது.

"தானம் தவம் இரண்டும் தங்கா வியன்உலகம்
வானம் வழங்காது எனின்"

"விண்நின்று பொய்ப்பின் விரிநீர் வியன்உலகத்து
உள்நின்று உடற்றும் பசி"

என்று கருத்துக்கள் வள்ளுவர் குறளிலே இருப்பதைப் பார்க்கும்போது இந்த நிலை அந்தக் காலத்திலேயே ஏற்பட்டிருக்கிறது என்பதை உணருகிறோம்.

நாட்டிலே பஞ்சம் வந்து விட்டதே என்று நாங்கள் உண்மையிலேயே வேதனைப்படுகிறோம். ஆனால் இதிலே விளையாட நினைக்கிற சிலர் வேறு வேறு திசைகளைச் சுட்டிக்காட்டி, அரசு எடுக்கும் காரியங்கள் முழுமையாக நடைபெறாதவண்ணம் முடக்கம் செய்கிற சூழ்நிலையை ஒரு புறத்தில் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு, அதுவும் கலைஞர் அவர்களால் நடத்தப்படும் அரசு இப்படிப்பட்ட சங்கடங்களை எல்லாம் சமாளித்துக் கொண்டு நாட்டு மக்களுடைய வாட்டத்தைப் போக்க வேண்டுமென்பதற்காகப் பல புரட்சிகரமான திட்டங்களை உருவாக்கி நாட்டு மக்களுக்கு அளிக்க முன்வந்தால்



1975 மார்ச் 4] [திரு. இரா. மாணிக்கவாசகம்]

அதைத் தடுக்கின்ற சூழ்நிலை, கெடுக்கின்ற சூழ்நிலை, மறைக்கின்ற சூழ்நிலை, மறுக்கின்ற சூழ்நிலையை எல்லாம் உருவாக்குகின்ற நிலையைப் பார்க்கின்றோம்.

மாற்றுக் கட்சியிலே இருக்கிற பெரியவர்களைக் கேட்கிறேன். அரசின் சார்பில் எவ்வளவோ திட்டங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றை எல்லாம் வரவேற்கிறார்களா இல்லையா என்று தெரியவில்லை. இன்று இந்த நாட்டில் பஞ்சம் கடுமையாகி விட்டது. உணவு நிலைமை மிகவும் மோசமான நிலைமைக்குப் போய்விட்டது. நாம் பர்மாவிலிருந்து, தாய்லாந்திலிருந்து நம்முடைய நாட்டில் பிற மாநிலங்களில் இருந்து அரிசியைக் கொண்டு வரவேண்டுமென்று சொன்னோம். அதற்காக மற்ற மாநிலங்களோடு பேச்சு வார்த்தை நடத்தினோம். அவர்களும் கொடுக்க சம்மதித்தார்கள். ஆனால், அதற்கு மத்திய அரசு அனுமதி மட்டும் தாருங்கள் என்று கேட்டிருக்கிறோம். இப்போது தவறு, தவறு என்று பேசுகிறவர்கள் மத்திய அரசாங்கமே அதற்கு அனுமதி கொடு என்று பேசியிருக்க வேண்டாமா? அது கலைஞர் கேட்டாலும் சரி, வேறு யார் கேட்டாலும் சரி தமிழ் நாட்டு மக்கள் பசியாலும், பஞ்சத்தாலும் வாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் மத்திய அரசை நோக்கி அப்படிப்பட்ட ஒரு கண்டனக் குரலை காணோமே. அந்த உணவுப் பொருள்களைக் கொண்டு வர போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கப்பலை வைத்திருக்கிறார்கள். அதுகூடத் தேவையில்லை; அனுமதியைத் தான் கேட்கிறார்கள். இதிலிருந்து என்ன கருத முடிகிறது என்றால், பஞ்சமானாலும் சரி, பசியானாலும் சரி, பட்டினியானாலும் சரி, கட்சியை வளர்க்கத்தான் முதலிடம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது விளங்குகிறது. அதை மறந்து, தயவு செய்து இந்த பஞ்ச நிவாரண வேலைகளில் அந்தப் பகுதியில் இருக்கிறவர்கள் எந்த திட்டத்தை தீட்டினால் பஞ்சத்தைப் போக்க முடியும், எந்தெந்த வழியைக் கையாண்டால் மழை பெய்யும், மழை பெய்யாவிட்டால் எங்கேயிருந்து நீரைக்கொண்டு வரலாம் என்ற குறிப்புக்களைச் சொல்லியிருப்பார்களானால் அவர்களை நாடு வரவேற்றிருக்கும்.

ஆனால், இதிலே சூதாட்டம் இருப்பதாக நான் சந்தேகப் படுகிறேன். "வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்

[திரு. இரா. மாணிக்கவாசகம்] [1975 மார்ச் 4

தூண்டிற் பொன் மீன் விழுங்கியற்று" என்று குறளில் சொல்கிறபடி அரசியல் சூதாட்டமானாலும், வேறு தனிப்பட்ட சூதாட்டமானாலும் தயவு செய்து மறந்து விடவேண்டும். நம்முடைய முதல்வரவர்கள் நிதி நிலை அறிக்கையில் நெகிழ்ச்சியோடு சொல்லியிருக்கிறார்கள். "விலை ஏறுகிறது, ஊதியங்கள் உயர்த்தப்படுகின்றன. விண்ணில் ஏறிப்பறக்கும் காற்றாடி போல் ஏறுகிற விலைவாசிக்கு, உயர்த்தப்படுகிற ஊதியங்கள் மேலும் உயரப் பறப்பதற்கு உதவுகிற நூல் கயிறாக அமைகின்றது. ஊதிய உயர்வுக் கோரிக்கை வைப்பதற்கு வாய்ப்பற்ற பல கோடி மக்கள் இந்திய நாட்டில் இருக்கிறார்கள். காரணம் அவர்களுக்கு எந்த ஊதியமும் இல்லை. ஊதியம் இருந்தால் தானே உயர்த்தவேண்டுமென்ற குரலே எழப் போகிறது. அவர்களுக்கும் சேர்த்துக் தான் —சரியாகச் சொல்வதானால் அவர்களை முக்கியமாக வைத்துத் தான், நமது பொருளாதாரப் புரட்சியையே உருவாக்கவேண்டும்" என்று அவர்கள் சொல்கிற நேரத்தில் அவர்கள் நெஞ்சத்தில் ஓடுகிற ஓட்டம் எந்த அளவிற்கு இருக்கும் என்று சற்று அமைதியாக இருக்கிற வேளையில் எண்ணிப் பாருங்கள்.

கிராமப் பகுதிகளில் ஏழை விவசாயிகள், தொழிலாளர்கள், மலைகளில் வாழுகிற மலைவாசிகள் எந்தக் குரலை எழுப்ப முடியும் என்ற அடிப்படையில்தான் வாழ்வில் நொந்தவர்கள், உழைத்து உருக்குலைந்தவர்கள், என்றைக்காவது தங்களுக்கு வாழ்வில் நிம்மதி ஏற்படாதா என்று ஏங்குகிறவர்கள் இவர்களுக்காகப் புரட்சி ஏற்படவேண்டுமென்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட புரட்சிகரமான இந்த நிதி நிலை அறிக்கையை உருவாக்குகிற இந்த நேரத்தில் மாற்றுக் கட்சிக்காரர்கள் வேறு சில கசப்பு உணர்ச்சிகளைக் கிளப்புகிறார்கள் என்றால் அது வேறு விவகாரம். ஒரு புறத்தில் மதுவை ரத்து செய்ததன் மூலமாக வருவாய் இழப்பு, இன்னொரு புறத்தில் வறட்சி காரணமாக வரிகளைத் தளர்த்தி விட்டதன் மூலமாக வருவாய் இழப்பு, இப்படிப்பட்ட இடையூறுகளுக்கு மத்தியில் தான் புரட்சிகரமான திட்டங்களை முதல்வரவர்கள் செயல்படுத்தியிருக்கிறார்கள்.

ஐந்து ஆயிரம் ரூபாய் வைத்து நடத்துகிற ஒரு கடைக்காரருக்கு விதி விலக்களித்திருக்கிறார்கள். (மணி அடிக்கப்பட்டது).



1975 மார்ச் 4] [திரு. இரா. மாணிக்கவாசகம்]

காலம் குறுகி விட்ட காரணத்தினால் என் தொகுதி பற்றி மட்டும் சொல்லி விடைபெறலாம் என்று எண்ணுகிறேன்.

என்னுடைய தொகுதியில் ஜம்புகுண்டி நீர்த்தேக்கம் என்று அண்ணா அவர்களால் 1968-69 நிதி நிலை அறிக்கையில் ஒரு திட்டத்தை ஏற்பாடு செய்தார்கள். ஆனால் அது என்ன காரணத்தினாலோ ஒத்தி வைக்கப்பட்டு அது நீண்டு கொண்டு வருகிறது. இந்த வேளையில் அந்த ஜம்புகுண்டி நீர்த்தேக்க வேலையை வறட்சி பணியின் கீழ் எடுத்தாவது வேறு எந்த திட்டத்தின் மூலமாவது செயல்படுத்துவதற்கு உதவிட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். காரணம், அந்தப் பகுதி மக்கள் இதை நம்பி வாழ இருக்கிறார்கள். அங்கே நல்ல மண் வளம் இருக்கிறது. ஆகவே இதை செயல்படுத்தவேண்டும்.

அதே போல முண்டந்துறையாறு நீர்த்தேக்கம் இருக்கிறது. அதையும் செயல்படுத்தவேண்டும், என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் சர்க்கரை ஆலை ஏற்படுத்துவது என்று சொல்லி 3 ஆண்டுகள் ஆகிவிட்டன. விரைவிலே அதை ஏற்படுத்த, இடத்தை நிர்ணயம் செய்து அந்த திட்டத்தை விரைவுபடுத்தவேண்டும். என்னுடைய தொகுதியின் மத்தியில் ஒரு மருத்துவ மனை இருக்கிறது. அதை விரிவு படுத்த வேண்டுமென்பதற்காக மாணவர்கள் மத்தியில் 25 ஆயிரம் ரூபாய் வசூல் செய்து ஈட்டுத் தொகையாகத் தந்தோம். அதையும் இந்த ஆண்டிலாவது நிறைவேற்றித் தாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது) இன்னும் என் தொகுதியைப் பற்றிச் சொல்லவேண்டியுள்ளது. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி இருந்தால் அமைச்சரவர்களிடம் எழுதிக் கொடுங்கள்.

திரு. நா. காசிராமன்: தலைவரவர்களே, 1975-76 ஆவது நிதி நிலை அறிக்கையை 20 கோடி ரூபாய்க்கு அதிகமாக துண்டு விழுகிற நிலைமையில் சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்த பட்ஜெட்டின் காரணமாக பலப்பல வரிகள் உயர்த்தப்பட்ட போதிலும் கூட சில நல்ல அம்சங்கள் இருக்கின்றன. அரிஜனங்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல், மீனவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தல்,

[திரு. நா. காசிராமன்] [1975 மார்ச் 4

என். ஜி. ஓக்களுக்கு ஊதியத்தை உயர்த்திக் கொடுத்தல் போன்ற நல்ல அம்சங்கள் இருக்கின்றன. இவைகளைப் பாராட்டத் தான் வேண்டும். ஆனாலும் இந்த பட்ஜெட்டிலே குறிப்பிடப்பட்டிருக்கிற சில வரி மாறுதல் காரணமாக அன்றாடத் தேவையான பண்டங்களின் விலை ஏற்கெனவே உயர்ந்திருப்பதைக் காட்டிலும் இன்னும் அதிகமாக உயர்வதற்கான வழி வகைகள் தான் ஏற்படுகின்றன. உதாரணத்திற்கு போட்டிருக்கிற விற்பனை வரி விகித மாற்றங்களினாலும், மற்ற மாற்றங்களினாலும் 5 கோடி ரூபாய்க்கு வரும் என்று சொன்னாலும் கூட, பட்ஜெட்டிலே குறிப்பிட்டிருக்கிற படி ஒவ்வொரு இனத்திலும் எவ்வளவு எதிர்பார்க்கிறார்கள் என்று பார்க்கிறபோது, முத்திரை வரிகள் மூலமாக 185 ரூபாய் அய்விற்கும், விற்பனை வரி மூலமாக 26 கோடி ரூபாய் அளவிற்கும் வருகிறது. விற்பனை வரி மாற்றங்களினாலும், முத்திரை தாள்கள் மீது விதிக்கப்பட்ட வரிகளின் மாற்றங்களினாலும் 6 கோடி ரூபாய் வரும் என்று சொல்கிறபோது, இதை டிடெயிலாக உள்ளே பார்க்கிற போது இரண்டு இனங்களிலேயும் 28 கோடி ரூபாய்க்கு அதிகமாக வரும் என்று எதிர்பார்க்கிறார்கள் என்று சொன்னால் இது எந்த அளவிற்கு மக்களுடைய வாழ்க்கைப் பொருள்களைப் பாதிக்கும் என்று சற்று சிந்தித்துப் பார்த்தால் அது பயங்கரமானதாக இருக்கும்.

இந்த நிதி நிலை அறிக்கையை மற்ற வருஷங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. உதாரணத்திற்கு 1973-74-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை சமர்ப்பிக்கும்போது 49 லட்ச ரூபாய் உபரி வரும் என்று கூறினார்கள். பிறகு 1973-74-ம் ஆண்டிற்கான திருத்திய நிதி நிலை அறிக்கையை சமர்ப்பிக்கும் போது 483 லட்ச ரூபாய் துண்டு விழும் என்று சொன்னார்கள். ஆனால் இன்றையதினம் அவர்கள் கொடுத்திருக்கிற இந்த நிதி நிலை அறிக்கையைப் படிக்கும்போது 1973-74 ம் ஆண்டு உண்மையாக 1,368 லட்ச ரூபாய் அளவிற்கு அதிகப்படியாக வருமானம் வந்திருக்கிறது என்பதை குறிப்பிட்டுக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் எதிர்பார்த்ததற்கு மேலாக 1851 லட்ச ரூபாய் அதிக வருமானம் வந்திருக்கிறது. அவர்கள் போட்டிருக்கிற வரி மாற்றங்கள் காரணமாக விற்பனை வரிகளை உயர்த்தியிருப்பதன் காரணமாக, மற்ற பண்டங்களுக்கு வரி போடப்பட்டதன் காரணமாக எதிர்பார்த்ததற்கும் மேலாக பல மடங்கு அதிகமாக



1975 மார்ச் 4] [திரு. நா. காசிராமன்]

வருவாய் கிடைத்திருக்கிறது. இப்படி பார்க்கிறபோது இந்த வரிப் பளு பொது மக்கள் மீது எந்த அளவிற்கு விழும் என்று யோசிக்காமலேயே வரிக் கொள்கை பின்பற்றப்படுகின்றனவா என்ற ஐயம் எனக்கு ஏற்படுகிறது. செலவினங்களில் சிக்கனம் கையாளப்பட்டு அதன் காரணமாக வருவாய் பெருகி உள்ளதா என்று பார்த்தால் 21 லட்ச ரூபாய் அளவிற்குத் தான் சிக்கனம் ஏற்பட்டிருக்கிறது. வரிகளின் பளு காரணமாக வரி விதிப்பு அதிகமாகி 18½ கோடி அதிகப்படியாக வந்திருக்கிறது.

இப்படி மற்ற வருஷங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிற போது 1972-73 ஆண்டு 249 லட்ச ரூபாய் அதிகப்படியாக வரும் என்று சொன்னார்கள். ஆனால் போடப்பட்ட வரிப் பளுவின் காரணமாக 2100 லட்ச ரூபாய் அளவிற்கு அதிகப்படியாக வருமானம் கிடைத்தது. இது எதைக் காட்டுகிறது என்றால், போடுகிற வரி எந்த அளவிற்கு மக்கள் மீது பளுவாக விழும் என்பதைப் புரிந்து கொள்ளாத வகையில் நாம் வரிகளைப் போட்டிருக்கிறோமோ என்ற ஐயப்பாடு எழுகிறது. 1973-74-ல் 49 லட்ச ரூபாய் அதிகப்படி வருமானம் வரும் என்று சொன்னதற்குப் பதிலாக 1300 லட்ச ரூபாய் அதிகமாக வரிகள் மூலம் அவர்களுக்கு கிடைத்திருக்கிறது. இப்படி பொருள்கள் மீது வரிகளைப் போடப் போட வாழ்க்கைச் செலவு அதிகரிக்கத் தான் செய்யும். நாம் போடுகிற வரிகளின் காரணமாக வாழ்க்கைச் செலவுகள் அதிகரிக்கிற காரணத்தினால் வாழ்க்கைச் செலவை குறைக்க நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படி அல்லாமல் அந்தப் பளுவை மற்றவர்கள் மீது சுமத்துவது எந்த அளவிற்கு நியாயம் என்பதை சர்க்கார் ஆலோசிக்கவேண்டுமென்று நான் கூறிக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

(பிற்பகல் 1-00)

உதாரணத்திற்கு இரண்டொன்றைச் சொல்கிறேன். 'டாக்ஸ் ஆன் இம்மூவபிள் பிராபர்டி அதர் தேன் அக்ரிகல்சுரல் லேண்ட்' என்ற இனத்தின் கீழே முதலில் அர்பன் லேண்ட் டாக்ஸ் ஒரு கிரௌண்டுக்கு மேலாக இருந்தால் வரி போடவேண்டுமென்று சொன்னார்கள். அப்போது அங்கத்தினர் அனந்தநாயகி அவர்கள் 2 கிரௌண்டுக்கு மேலாக இருக்க வேண்டுமென்று கருத்து தெரிவித்தபோது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தான் இருக்கும் வீடு 1½ கிரௌண்டாக இருப்ப

[திரு. நா. காசிராமன்] [1975 மார்ச் 4

தால், அது இரண்டு கிரௌண்டுக்கு கீழ் வரக்கூடாது என்று போட்டால், முதலமைச்சர் வீட்டிற்கு விலக்கு அளித்ததாக வந்து விடும், ஆதலால் அப்படிப் போடவில்லை எனறு சொன்னார்கள். ஆனால் பிறகு ஏற்பட்ட சூழ்நிலைக்கு ஏற்ப அந்த விலக்கு 2 கிரௌண்டுக்கு கொடுக்கப்பட்டது. இப்படி பல சலுகைகள் கொடுக்கப்பட்டு இருந்தும் கூட ரூ. 129 லட்சம் வருமானம் வரும் என்று எதிர்பார்த்ததற்கு மாறாக ரூ. 249 லட்சம் வருமானம் கிடைத்து இருக்கிறது என்றால் இந்த நாட்டு மக்களின் தலையில் எவ்வளவு வரி விழுந்து இருக்கிறது என்பதை இதன் மூலம் புரிந்து கொள்ள முடியும்.

அதே மாதிரி விற்பனை வரியில் 1973-74-ம் ஆண்டில் 63 லட்சம் ரூபாய் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதிகப்படியாக கிடைத்து இருப்பது ரூ. 262 லட்சம். இதைப் பார்க்கிறபோது, இங்கே ஒரு ½ சத விகிதம் ¼ சத விகிதம் என்றாலும், நடைமுறையில் வருகிறபோது அது ஷொட்டாக இல்லை, சதையைப் பிடிக்கும் அடியாக தமிழ் நாட்டு மக்களின் மீது விழுந்து இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அதே மாதிரி மற்ற விஷயங்களிலும் வரிப் பளு அதிகமாக இருக்கிறது.

அடுத்தப்படியாக, சினிமா தொழில். அது ஒரு நல்ல தொழில். அந்த சினிமா தொழிலுக்கு அரசாங்கம் நல்ல ஆதரவு கொடுக்கிறது. அதற்குப் பாராட்டத்தான் வேண்டும். 1967-க்கு முன்பாக சினிமா தொழில் அதிபர்கள், அணைகள், அரசுக் கட்டடங்கள் இவற்றில் படம் எடுக்க வேண்டுமென்றால், ஒரு நாளைக்கு ரூ. 1,000 கட்டவேண்டும், அதை ரூ. 100 ஆக குறைத்து விட்டார்கள். பிறகு ஷோ டாக்ஸ் 2 ரூபாயாக இருந்தது. சர்க்காருக்கு ரூ. 2 கட்டவேண்டுமென்றால், நகராட்சிக்கு அதைப்போல் 3 மடங்கு கட்டவேண்டும். அதாவது அவர்கள் மொத்தம் 8 ரூ. கட்ட வேண்டும், அதை நான்கு ரூபாயாக மாற்றினார்கள். அப்படியானால் அவர்கள் 16 ரூபாய் கட்டவேண்டும். ஆனால் என்ன நடந்தது. சர்க்காருக்கு கட்டவேண்டிய வரியை மட்டும் நான்கு ரூபாய் ஆக்கிவிட்டு, நகராட்சிக்கு கொடுக்கவேண்டியதை 3 மடங்கு என்பதற்கு பதிலாக 1½ மடங்கு என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்து விட்டார்கள். இந்த சினிமா அதிபர்கள்



1975 மார்ச் 4] [திரு. நா. காசிராமன்]

விஷயத்தில் கருணையோடு இருக்கும் முதலமைச்சர் அவர்கள் உள்ளம், நகராட்சிகளின் விஷயத்தில் கருணைக்கிழங்காக மாறி விட்டது.

விவசாய உற்பத்தியில் நாடு வறட்சியில் இருக்கிறபோது, விவசாய உற்பத்திக்குப் பயன்படும் டிராக்டர் முதலான கருவிகளுக்குத் தேவைப்படும் உபகரணங்களின் மேல், விவசாயக் கருவிகளின் மேல் முன்பு விற்பனை வரி இல்லாமல் இருந்தது; யார் செய்த உபதேசமோ, எந்த அதிகாரி சொன்ன வாக்கோ தெரியவில்லை, 4-5 மாதங்களாக கார்ட் வீல்ஸ், கல்டிவேட்டர்ஸ், போன்ற உபகரணங்களுக்கு 9 சத விகிதம் விற்பனை வரி போட்டிருக்கிறார்கள், இது நியாயம் தானா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்தப்படியாக, மின்சார வாரியம் தற்போது நான்கு மடங்கு டிபாசிட் கேட்கிறார்கள். இன்றையதினம் விவசாயிகளால் நான்கு மடங்கு டிபாசிட் கட்ட முடியவில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** நான்கு மடங்கு என்று சொல்வது தவறு. 3 மாத டிபாசிட் ஏற்கனவே அவர்கள் கட்டியிருக்கிறார்கள். இன்னொரு மாதம் சேர்த்து 4 மாதத்திற்கு டிபாசிட் தொகை வேண்டுமென்கிறார்கள். நான்கு மடங்கு என்று சொல்வது தவறு. மேலும் ஒரு மாதம் சேர்த்துத்தான் செக்யூரிட்டி டிபாசிட் கேட்கிறோம்.

**திரு. நா. காசிராமன்:** ஒரு மாதத்திற்கு ஆகும் மின் கட்டணத்தைப்போல் 4 மடங்கு கேட்கிறார்கள். அம்மாதிரி கேட்பது எதற்காக என்றால், மின்வாரியத்திற்கு நிதி வேண்டியிருக்கிறது. அவர்கள் மின் கட்டணத்திற்கான பில்லை மாதா மாதம் அனுப்பி வைத்தால் நன்றாக இருக்கும்.

**திரு. ஆலடி அருணா:** சார். பாயின்ட் ஆப் ஆடர். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

**திரு. ஆலடி அருணா:** ஏன் பயப்படுகிறீர்கள், நான் யார் மீதும் அலிகேஷன், அக்யூசேஷன் செய்யவில்லை. மாண்புமிகு அமைச்சர் ஒரு கருத்தைச் சொன்னார்கள். மின்சார வாரியம் அனுப்பியுள்ள கடிதத்தைப் படிக்கிறேன், தங்கள் அனுமதியோடு.

"The Tamil Nadu Electricity Board has decided that the Security Deposit from consumers should cover four month's bill subject to a minimum Rs. 40.

ஆக, நான்கு மாத கட்டணம் கட்டவேண்டுமென்கிறார்கள். அதுவும் குறைந்த பட்சம் ரூ. 40 ஆக இருக்க வேண்டுமென்கிறார்கள். இது எல்லோராலும் முடியுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அதைத்தான் சொன்னேன். அவர்கள் ஏற்கனவே 3 மாதத்திற்குக் கொடுத்து இருக்கிறார்கள். மேலும் ஒரு மாதக்கட்டணம்தான் கட்டவேண்டுமென்று கேட்கிறார்கள்.

**திரு. ஆலடி அருணா:** ஒரு மாதக் கட்டணம் என்றாலும், அதற்காக ரூ. 40 குறைந்த பட்சம் இருக்கவேண்டுமென்று சொல்லலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. க. துரைசாமி பேசுவார்.

* **திரு. ஏ. க. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1975-76-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து நம்முடைய தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

501.4 கோடி. வருவாய் ஆகவும், 537.5 கோடி செலவாகவும் தந்து, துண்டு விழுகிற ஒரு பட்ஜெட்டை இந்த மன்றத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தாக்கல் செய்து இருந்தாலும், நம்முடைய தமிழ் நாட்டில் இன்று ஏற்பட்டு இருக்கும் நிலையைக் கருத்தில் கொண்டு—100 ஆண்டுகளாக ஏற்பட்டிராத ஒரு வறட்சி நம் நாட்டில் இன்று ஏற்பட்டுள்ளது—இந்த நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கிற பல திட்டங்களை எடுத்துச்சொல்லி, பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னது போல் "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணுகிற" பல்வேறு திட்டங்களை இந்த மாமன்றத்தின் முன் வைத்து இருக்கிறார்கள். 500 கோடிக்கு மேல் வைக்கப்பட்டிருக்கும் இந்த பட்ஜெட்டில் 6 கோடிக்கு வரி போட்டு இருப்பது ஒரு பொருட்டல்ல என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.





இந்தத் தமிழகத்திலே இன்று ஏற்பட்டு இருக்கும் வறட்சிக்கு இந்த ஆண்டிலே மட்டும் 7 கோடி ரூபாய் கொடுத்து, தொடர்ந்து 55 கோடி ரூபாய் வரை செலவழித்து இயற்கையால் ஏற்பட்டு இருக்கும் நிலையை மாற்றுவதற்கு முதலமைச்சர் அவர்கள் எடுத்து வருகின்ற நடவடிக்கைகளை நான் பாராட்ட விரும்புகிறேன். 1969-ம் ஆண்டில் ஏற்பட்ட வறட்சியின்போது ரூ. 18.64 கோடி செலவழித்தும், 1972-ல் வெள்ளச் சேதத்தால் ஏற்பட்ட நிலையை மாற்ற ரூ. 13.61 கோடி செலவழித்தும், பாதகமான ஒரு சூழ்நிலையை சாதகமாக ஆக்கி, இந்திய துணைக்கண்டத்திலேயே ஒரு சாதனையைச் செய்து காட்டியவர் நம்முடைய முதலமைச்சர் என்பதை இந்த மன்றத்தில் நான் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன்.

இந்த அறிக்கையில் 11 லட்சம் எக்கர் தரிசு நிலத்தை உழவுக்கு ஏற்ற நிலமாக மாற்றும் ஒரு திட்டத்தை அறிவித்து இருக்கிறார்கள். அதுகுறித்து இந்த நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் 25 ஏக்கர் தரிசு நிலத்தை ஏழைகள் ஆக்கிரமிப்பு செய்து பயிர் செய்து வந்தார்கள். அவர்களுக்கு அந்த நிலத்தைப் பட்டா செய்து கொடுக்கவேண்டுமென்று அந்த இலாகா பொறுப்பேற்றுக்கொண்டிருந்த அமைச்சர் திரு. ஓ. பி. இராமன் அவர்களிடம் கூட தெரிவித்து இருக்கிறேன். ஆனால், அந்த வனத்துறை இலாகாவினர் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், அந்தப் பகுதியில் சந்தன மரங்கள் உள்ளதாகச் சொல்லியிருக்கிறார்கள். அது வெறும் பொட்டல் காடு. இருப்பினும் தவறான தகவல் கொடுத்து இருக்கிறார்கள். அதற்குப் பின்னால் அந்த இடத்தைப் படம் எடுத்துக் காண்பித்து, அந்தத் தகவல் உண்மைக்கு மாறானது என்று சொல்லி இருக்கிறேன். இந்த 11 லட்சம் தரிசு நிலங்களை உழவு நிலங்களாக மாற்றும் இந்த நேரத்திலேயே அந்த ஏழை விவசாயிகளுக்கு அந்த நிலத்தைப் பட்டா செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் 31 கோடி ரூபாய் பாசன வசதிக்காக செலவிடப்படும் என்று முதலமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக 8 நீர்த் தேக்கங்களுக்கு 20.2 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதாகத் தெரிவித்தார்கள். இதைக்கண்டு நான் பெருமையடைகிறேன். இந்த 8 நீர்த் தேக்கங்களில் 2 நீர்த் தேக்கங்கள் வட ஆற்காடு மாவட்டத்தில் இடம் பெற்றிருக்கிறது. அதற்காகத் தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ஏ. க. துரைசாமி] [1975 மார்ச் 4

என் தொகுதியைப் பொறுத்தமட்டில் 40 ஆண்டுகளுக்கும் மேலாக அணைக்கட்டு கட்டவேண்டுமென்று மக்கள் வலியுறுத்தி வந்தார்கள். 1954-ம் ஆண்டு அன்றைய முதலமைச்சர் மதிப்பிற்குரிய காமராஜர் அவர்கள் என் தொகுதியிலே போட்டியிட்டார்கள். மக்கள் அவரிடம் அணைக்கட்டு கட்டவேண்டுமென்று முறையீடு செய்தார்கள். அந்த இடங்களையெல்லாம் காமராஜர் அவர்கள் வந்து பார்வையிட்டார்கள். மக்களும் அணை கட்டப்படும் என்று நம்பித்தான் இருந்தார்கள். ஆனால், என்ன காரணத்தாலோ 20 ஆண்டுகளாக இருந்த நான்கு சட்டமன்ற உறுப்பினர்களின் பதவிக்காலத்தில் அந்தத் திட்டம் கிடப்பிலே இருந்தது.

ஆனால், மதிப்பிற்குரிய கலைஞர் அவர்கள் பல காலமாக நான் வலியுறுத்திவந்த மோர்தனா அணை கட்டுவதற்காக இந்த ஆண்டு 1 கோடி 12 லட்சத்து 60 ஆயிரம் செலவிடப்படும் என்று இங்கே அறிவித்தார்கள். அதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

திருச்சியிலுள்ள கல்லணையை என்னுகிறபோது எப்படி கரிகால் சோழனின் நினைவு வருகிறதோ, அதேபோல் இந்த மோர்தனா அணையை நினைக்கும் நேரத்தில் நம்முடைய முதலமைச்சரவர்களின் பெயர் என்றென்றும் நினைவிலே நின்றிருக்கும் என்பதைப் பெருமைபட கூறிக்கொள்கிறேன். தலைவரவர்கள் எனக்கு இன்னும் கொஞ்சம் நேரம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திக்கற்ற குழந்தைகளுக்கான திட்டத்தைப் பற்றியும், ஆதரவற்ற விதவைகளுக்கான திட்டத்தைப் பற்றியும், நெசவாளருக்கான திட்டத்தைப் பற்றியெல்லாம் இங்கே அறிவித்திருக்கிறார்கள். இதிலே என்னுடைய தொகுதியைப் பற்றி ஒன்றைச் சொல்ல வேண்டும். பள்ளிகொண்டாவிலிருக்கிற பாலம் மிகவும் குறுகலாக இருக்கிறது. அந்தப் பாலத்தில் சைக்கிளில் சென்ற ஒருவர் அகலமான இட வசதியில்லாத காரணத்தால் பஸ்ஸில் மாட்டிக்கொண்டு இறந்ததை நானே நேரில் பார்த்தேன். ஆகவே, அங்கு மேம்பாலம் கட்டவேண்டுமென்று நான் கூறவில்லை. இருக்கிற தரைப் பாலத்தை ஒரு 10 அடி அகலப்படுத்தி கட்டவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பாலம் ஒரு முக்கியமான பாலமாக இருப்பதால் அதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1975 மார்ச் 4] [திரு. ஏ. க. துரைசாமி]

குடியாத்தத்திலிருந்து சித்தூர் செல்கிற வழியில் கனவாய் மேட்டூர் என்ற இடத்தில் ஒரு பாலம் கட்டவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அது நீண்ட காலமாக நிறைவேறுமல் இருக்கிறது. ஆகவே, அதை நிறைவேற்றுவதில் அரசு கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மோர்தனா நீர்த்தேக்கத் திட்டத்தைக் கொண்டுவந்ததற்காக முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் நன்றி தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. கே. எ. வகாப் :** பேரவைத் தலைவரவர்களே, டாக்டர் கலைஞர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற 1975-76-ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையைப் பற்றி நான் சார்ந்திருக்கிற முஸ்லீம் லீக் கட்சியின் சார்பிலே வரவேற்றுப் பேச முன் வந்திருக்கிறேன்.

மாண்புமிகு ஆளுநர் அவர்களுடைய உரையைப்பற்றி குறிப்பிடுகிறபோது அது ஒரு வேதனைக் காவியமாக இருக்கிறது என்று சொன்னார்கள். அதேபோல முதலமைச்சர் அவர்களுடைய உரை சாதனைக் காவியமாக, சாதனைப் பட்டியலாக, எடுக்கவேண்டிய திட்டங்களையெல்லாம் எடுத்து இந்த நாட்டிலே இருக்கிற சமுதாய மக்களுக்கு நன்மை செய்ய அவர்களே கூறுவதுபோல் புரட்சிப் பொருளாதாரத்திற்கு முதலடி எடுத்து வைக்கிற ஒரு பட்ஜெட்டாக நான் இதைக் கருதுகிறேன்.

நீண்ட உரை என்று குற்றம் சாட்டுவதுபோல் பலர் அதைச் சொன்னார்கள். இந்த நேரத்திலே நீண்ட உரை தேவைதான் என்பதை நாட்டிலே வறட்சி ஏற்பட்டு மக்கள் வேதனைப்படும் நேரத்தில் அவர்களுடைய வேதனைக்கு இதமளிக்கிற வகையில் ஒரு குழந்தை நோய்வாய்ப்பட்டிருக்கிற வேளையில் தாயின் தாலாட்டு அமைவதைப்போல இந்த பட்ஜெட் உரை அமைந்திருக்கிறது.

வறட்சி நிவாரணத்தைப் பற்றி இங்கே அதிகமாகக் குறிப்பிடத் தேவையில்லை. இங்கே அத்தனைக் கருத்துக்களும் அதைப்பற்றித் தான் குறிப்பிடப்பட்டு இருக்கின்றன. இருந்தாலும்கூட வறட்சியைவிட மிகப் பயங்கரமான ஒன்று நமக்கு எதிர்காலத்தில் இருக்கிறது.

[திரு. கே. எ. வகாப்] [1975 மார்ச் 4

நடந்தாய் வாழி காவேரி என்று சொல்லும்போது நடந்தால் கால்சுடும் வறண்ட பாலாருக மாற இருக்கிறது. அன்றையதினம் மரங்கள் நிறைந்த செழிப்பான பகுதியாக இருந்த தௌலாக் இன்றைய தினம் வறண்ட நிலையில் இருக்கிறது. இந்த நிலைமை தஞ்சைக்கு வாராமல் இருப்பதற்கு, அந்த நிலைமையைப் போக்கு வதற்கு உடனடியாக எல்லா கட்சிகளும் சேர்ந்து ஒரு திட்டத்தை அறிவிக்கவேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்.

மத்திய அரசாங்கம் மாற்றாந் தாய் மனப்பான்மையோடு நடக்கிறது என்பதைப் புரிந்துகொண்டு நாம் காரியம் ஆற்றவேண்டியிருக்கிறது. ஆகவே, அதைப் பற்றி இந்த பட்ஜெட் உரையில் சிந்திக்கவேண்டியிருக்கிறது. அதைப்பற்றி முடிவெடுக்க வேண்டிய கட்டாயத்திலே அனைத்துக் கட்சிகளும் இருக்கின்றன என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

அது மட்டுமல்ல. பாசன திட்டத்திற்காக குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நல்ல திட்டமாக இது அமைந்திருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குடிநீர்ப் பிரச்னையைப்பற்றி நிறையப் பேசியிருக்கிருர்கள். குறிப்பாக, என்னுடைய தொகுதியிலே சோளிங்கரைச் சேர்ந்த வேலம் என்ற ஊரில் 70, 80 அடிக்குக் கீழே கூட தண்ணீர் இல்லை. குடிநீர் வாரியம் ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறது. ஹரிஜன மக்கள் 50 சத விகிதம் வாழ்கிற அந்தப் பகுதியில் குடி நீர் இல்லாத சூழ்நிலை பயங்கரமாக இருக்கிறது. ஆகவே, ஹரிஜன நல அமைச்சரை ஜி.எல்.ஆர். ஸ்கீமை நிறைவேற்றி ஹரிஜன மக்களுக்கு குடி நீர் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் இன்னும் என்னுடைய தொகுதியில் ஜி.எல். ஆர். ஸ்கீம் எடுக்கப்படவில்லை. ஆகவே அதைக் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பாற்கடல் என்ற ஊருக்கு குடிநீர் திட்டம் கேட்டுக் கொண்டு இருக்கிருர்கள். ஆகவே, அதைப் பரிவோடு கவனிக்க வேண்டும்.



1975 மார்ச் 4] [திரு. கே. எ. வகாப்]

அது மட்டுமல்ல. ஓட்டேரியிலே 70,000 ரூபாய் செலவில் ஒரு திட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த ஏரிக்குக் கால் வாய் சரியாக இல்லாத காரணத்தால் தண்ணீர் வரவில்லை. ஆகவே, அதற்குப் பொதுப்பணித் துறை நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இராணிப்பேட்டையில் ஒரு நர்சரி இருக்கிறது. சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் வந்து பார்வையிட்டு அதற்கு மானியம் வழங்குவதாகச் சொன்னார்கள். அதையும் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த பட்ஜெட்டில் வரிகள் சில அம்சங்களில் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அதே நேரத்தில் முதலமைச்சரவர்கள் சொன்னதைப் போல் கொழுந்துவிட்டு எரிகிற வளையத்திற்குள் இருக்கும் கொளுத்தப்படாத கற்பூரத்தைப் போல் இந்த மதுவிலக்கை அமுல் படுத்துகிற காரணத்தால், மத்திய அரசு அதற்காக நிதி அளிக்காத காரணத்தால், வரி போட்டு மக்களிடத்திலே வசூலிக்க வேண்டுமென்ற வாதத்தை நிச்சயமாக ஒப்புக்கொள்கிறோம். அந்த அடிப்படையில் இருக்கிறபோது அதிகமான வரியுள்ள பட்ஜெட்டாக இதைக் கருதமுடியாது. இது டெபிஸிட் பட்ஜெட்டாக இருந்தாலுங்கூட, வரியை அதிகமாக ஆக்கியிருந்தாலுங்கூட, அதிகப்படியான நன்மையை மக்களுக்கு இதன்மூலம் அளித்திருப்பதற்காக நான் பாராட்டுகிறேன். அப்படிப்பட்ட நேரத்திலே, மதுவிலக்கு வந்த பிறகு காப்பி, டீ குடிப்பவர்கள் அதிகமாக இருக்கிருர்கள். அவர்கள் சாதாரண மக்கள். இந்த காப்பி, டீ எல்லாம் ஏழைகள் பானம். அதிலே போட்டிருக்கும் வரியும் அதிகமில்லை. ஆகவே, அதை மறுபரிசீலனை செய்து, அவை மீது போட்டிருக்கிற வரியை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மைனுரிட்டி இனமாக இருக்கிற இஸ்லாமிய சமுதாயத்திற்கு இந்த அரசும், இந்த அரசைத் தலைமைத் தாங்கி நடத்திச் செல்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் செய்திருக்கிற நற்பணிகளுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில் இந்தச் சமுதாய மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான கோரிக்கைகளை நீங்கள் செய்ய முன்வந்தாலுங்கூட சில நேரங்களில் அந்தக் கோரிக்கைகள் அதிகாரிகளிடம் சிக்கி, சிவப்பு நாடா முறையில் சிக்கி நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானுல் வடாற்காடு மாவட்டத்தில் வந்தவாசியில் 10,000 பேர் சேர்ந்து தொழுகை நடத்தும் இடம் ஒன்றிருக்கிறது. அந்த இடத்தைப் பள்ளிவாசலுக்கு ஆர்ஜிதம் செய்து கொடுக்க வேண்டுமென்று மூன்று ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கேட்டுக் கொண்டிருக்கிருேம். அப்போது இருந்த வருவாய்த் துறை அமைச்சரவர்கள் ஆர்ஜிதம் செய்து தருவதாகச் சொன்னுர்கள். அதற்குப் பின்னுல் வந்தவர்களும் செய்யலாம் என்று சொன்னுர்கள். ஆனுல் இன்று வரையில் அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரியவில்லை. அந்தக் கோரிக்கை சிவப்பு நாடா முறையின் சிக்கலில் சிக்கிக் கொண்டிருக்கிறது. அமைச்சர்கள் செய்ய வேண்டுமென்று நினைத்தாலும் கூட அதிகாரிகளினுல் நடைபெற முடியாமல் இருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சிவப்பு நாடா, சிவப்பு நாடா என்று சொல்கிருர்கள். அது எந்த நாடா என்று தெரியவில்லை. . .

**திரு. கே. எ. வகாப் :** அரசாங்க நடைமுறைகளில் ஏற்படுகிற காலதாமதத்தைப்பற்றித்தான் சிவப்பு நாடா என்று குறிப்பிடு கிறேன். வேறு எந்த நாடாவைப்பற்றியும் நான் இங்கே சொல்ல வில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சீக்கிரம் முடியுங்கள் ; நேரமாகி விட்டது.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, இன்னும் 10 நிமிடங்கள் கொடுங்கள். மற்ற கட்சி உறுப்பினர்களுக்கு அதிக நேரம் கொடுத்திருக்கிறீர்கள். அதைப்போல எனக்கும் கொடுங்கள்.

ஆக, மைனுரிட்டி மக்களுக்கு அமைச்சர்கள் செய்ய வேண்டு மென்று நினைத்தாலும் வழியிலே தடை ஏற்படுகிறது. மேலும் தாமதம் ஏற்படாமல் தொழுகை நடத்தும் அந்த இடத்தை ஆர் ஜிதம் செய்து தரவேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

இடுகாட்டுக்குச் செல்ல சாலை வசதி திட்டத்தைப்பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிருர்கள். அதைப்போலவே முஸ்லீம்கள் தொழுகை நடத்தும் இடங்களையும், அவர்களுடைய





அனுபவத்தில் இருந்து வரும் இடங்களையும் அவர்களுக்கே உரிமை யாக்கும் வகையில் சட்டம் போட்டு, நன்மை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. இன்றையதினம் பல நன்மைகள் செய்து வருவதைப் போல, மீனவர்களுக்குக் குடிசைகள் கட்டித்தரும் திட்டம் இருக்கிறது. அதற்கு அடுத்தபடியாக ஆண்டவனுடைய குழந்தைகள் என்று சொல்லக்கூடிய அனுதைக் குழந்தைகளுக்கும் —வேரில் பழுத்த பலா என்று பாரதிதாசன் அவர்கள் சொல் வார்கள்—விதவைகளுக்கும் பாதுகாப்பளிக்கும் திட்டம் இருக் கிறது. இந்த நல்ல திட்டங்களை வரவேற்று பாராட்டுகிறேன்.

இன்னெரு முக்கியமான பிரச்சனை. இன்றையதினம் உணவுப் பிரச்சனைப்பற்றி பேசும்போது நெல் விலை பற்றி பேசப் பட்டது. இன்றைக்கு இருக்கிற நெல்விலை நிச்சயமாக விவசாயி களுக்குப் போதவில்லை. மத்திய அரசு தாவில்லை என்றுலும் நீங்கள் தயவுசெய்து விலையைச் சற்று கூட்டி, நேரடியாகக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மார்க்கெட் விலைக்கு வாங்கி, ஸ்டாக் செய்துகொள்ள வேண்டும். இல்லை என்றுல் ஒரு மூட்டை நெல் 200 ரூபாய்க்கு மேல் விற்றுல் கூட ஆச்சரியமில்லை. இப்போது 100, 120 ரூபாய்க்கு விற்கிறது என்று சொல்லி, இன்று மௌனமா இருந்துவிட்டால் நம்முடைய மாநிலத்திலிருந்து நெல் வெளியே செல்லும் வாய்ப்பு இருக்கிறது. ஆகையால், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மார்க்கெட் விலைக்கு வாங்க ஏற்பாடு செய்தால் எதிர்காலத்தில் தமிழ்நாட்டினுடைய உணவுப் பிரச்சனை சிக்கலாகாமல் இருக்கும். அதற்குத் தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. ஒரு மாவட்டத்திலிருக்கிற தாலுகாக்களுக் கிடையிலே கூட நெல் விலையில் வேறுபாடு இருக்கிறது. செய் யாரில் அரிசி படி 3 ரூபாய் என்றுல் வேலூரில் 6 ரூபாய் இருக் கிறது. மாவட்ட அளவில் இருக்கிற தடைகளை நீக்கினுல் ஓரளவு எல்லா மக்களுக்கும் வசதியாக இருக்கும்.

(மணி அடிக்கப்பட்டு, அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்).

* **திரு. கி. ஜெயராமன் :** பேரவைத் தலைவரவர்களே, இந்த நெருக்கடியான நேரத்தில் நம்முடைய தமிழக முதலமைச்ச ரவர்கள் மக்கள் நலம் நாடுகின்ற நல்ல திட்டங்களை எல்லாம்

வாக்கிக் கொண்டுவந்து, இந்த வரவு-செலவுத் திட்டத்தின் லம் நமக்கு கொடுத்திருக்கிறார்கள். அதை வரவேற்று, ஆதரித்து ன்னுடைய கருத்துக்கள் சிலவற்றை கூற முற்படுகிறேன்.

மத்திய அரசு பட்ஜெட்டை நாட்டிலுள்ள பலரும் ரொடக்ஷன் ஓரியன்டட் என்று சொன்னார்கள். ஆனால் நம்முடைய கலைஞர் அவர்களுடைய பட்ஜெட் ப்ரொடக்ஷன் ஓரியன்டட் மட்டுமல்ல; வெல்பேர் ஓரியன்டட் என்று கூட சொல்லலாம். ஏனென்றால் வேறு பல மாநிலங்களில் இல்லாத பல திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள்.

மீனவர் வீடு கட்டும் திட்டம், கைத்தறி நெசவாளர் பாது காப்புத் திட்டம் போன்ற திட்டங்கள் இருக்கின்றன. அதை விட முக்கியமான திட்டம், சிறு வியாபாரிகள்—5000 ரூபாய் மொத்த டர்ன் ஓவர் பெறக்கூடியவர்கள் விற்பனை வரி லைசென்ஸ் வாங்க வேண்டியதில்லை. இது அவர்களுக்கு ஒரு காமதேனு போல இருக்கும் ஒரு தமிழ் பத்திரிகை இதனை It is a flash in the pan. என்று சொல்லியிருக்கிறது.

மத்திய சர்க்கார் கொண்டுவந்திருக்கிற பட்ஜெட்டில் பல புதிய வரிகள் இருக்கின்றன. சென்ட்ரல் எக்ஸைஸ் என்ற வரியே இல்லாத உற்பத்திப் பொருள்களுக்கெல்லாம் கூட ஒரு சதவீதம் வரி போட்டிருக்கிறார்கள். வரியே இல்லாத பொருள் இல்லை என்ற நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். ஆனால் கலைஞர் அவர்கள் புதிய வரி இல்லாமல் கூடுதல் வருவாய் பெற்றுத் தந்திருக்கிறார்கள். நிதி நெருக்கடி நேரத்தில் கூட இப்படிப்பட்ட வெல்பேர் ஸ்கீம்களை கொண்டுவந்திருக்கிறார்கள்.

உணவு உற்பத்தி குறைந்திருந்தாலும் பல முனைப்பான திட்டங் களை செயல்படுத்தும் முறையில் சேலம், தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு அதிகத் தொகை ஒதுக்கி இருப்பதற்காக என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்து, நன்றி கூறிக்கொள் கிறேன்.

நாம் வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு அதிக நிதி ஒதுக்கித்தர வேண்டுமென்று மத்திய அரசை கேட்டதற்கு, அதைக் கொடுக்க முடியாது என்று சொல்லி, புதிய கொள்கை ஒன்றை உருவாக்கி திட்டச் செலவில் அதை செயல்படுத்தும் முறை களைச் சொல்லியிருக்கிறார்கள். 1969-ல் நாம் கேட்ட பணத்தை ஓடி



ஓடி வந்து கொடுத்தார்கள். பசுமையாக இருக்கிறது என்று பலர் சொன்னாலும் நேரிலே வந்து பார்த்து, அதிகத் தொகை தந்திருக்கி றார்கள். ஆனால் இப்போது கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கக் கூடிய இந்த நேரத்திலே நாம் கேட்கும்போது, திட்டச் செலவிலே இந்தத் தொகையை சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்கி றார்கள். இந்தக் கொள்கை எதிர்காலத்திலே எல்லா மாநிலங் களுக்கும் இருக்குமா என்றால் நிச்சயமாக இருக்காது.

நாம் கூடுதலாக அரிசி பெறுவதற்கு மாற்றுத் திட்டங்களைக் கொடுத்தோம். கோதுமையை மட்டும் கொடுத்தால் இந்த நாட்டு மக்களின் குறையை போக்க முடியாது. பர்மாவிலிருந்து அரிசியும் பெறவேண்டுமென்று சொன்ன மாற்றுத் திட்டத்திற்கு, அதை ஏற்றுக்கொள்வதாக இல்லை. மத்திய அரசுக்கு இங்கே இருக்கிற ஆளும் காங்கிரஸ்காரர்கள் நம்முடைய இந்த மாற்றுத் திட்டத்தை சொல்லியிருக்க வேண்டும். இங்கிருந்து நாடாளுமன்றத்திற்குச் சென்றவர்கள் அங்கே வலியுறுத்திச் சொல்லியிருக்க வேண்டும். அவர்கள் அங்கே வலியுறுத்தியிருக்கிறார்களா என்றால் இல்லை. அதே நேரத்தில் நாம் இங்கே அனல் மின்சார உற்பத்தியையும், அணு மின்சார உற்பத்தியையும் பெருக்க வேண்டுமென்று நடவடிக்கை எடுத்துள்ளோம். ஆனால் இந்தியத் துணைக் கண்டத்தில் நீர் மின்சாரம் பெறும் திட்டம்தான் கட்டுப்படியாகும் என்று உலக வங்கி சொல்வதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இன்னொரு பிரச்சனையையும் நாம் பார்க்க வேண்டும். நாம் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறோம். ஆனால் காவிரி நீர்த் தகராறில் மத்திய அரசு வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது. நாம் எதற்கெடுத்தாலும் 'ட்ரிபியூனலுக்கு' போய் தீர்த்துக் கொள்வது என்பது சாத்தியமல்ல. இப்படிப்பட்ட நேரங்களில் 'கவுன்சில் ஆஃப் ஸ்டேட்ஸ்' என்ற மாநில சுயாட்சிக் கொள்கை உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று தோன்றுகிறது.

நமக்கு பொதுத் துறை தான் முக்கியம் என்று இன்று காலையில் கூடச் சொன்னார்கள். பொதுத்துறை வருவாய் வசதிகள் பெறு வதற்கு முன்னால் நம்முடைய சர்க்கார் கூட்டுத் துறையில் ஒன்பது திட்டங்களை நிறைவேற்ற முன்வந்திருப்பது குறித்து என்னுடைய மகிழ்ச்சியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் நிகழ்ச்சிகள் பிற்பகல் 1.35 வரை நீட்டிக்கப்படுகின்றன.

[1975 மார்ச் 4

**திரு. கி. ஜெயராமன்:** தொழில் ஆரம்பிப்பதற்கு முன்னால் இப்போது வந்திருக்கிற மத்திய அமைச்சர் டி. ஏ. பை அவர்கள் லைசென்ஸ் கொடுக்கும் விஷயங்களில் மாநில அரசின் கருத்தை அறிந்து கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்த உண்மை நிலையை உணர்ந்திருப்பது கொஞ்சம் கொஞ்சமாக மத்திய அரசு நம்முடைய சுயாட்சிக் கொள்கையை உணர ஆரம்பித்து விட்டார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

1967-க்குப் பின்னால் வந்த கலப்புத் திருமணத் தம்பதிகளுக்கு தங்க மெடல், தொழில் வசதிக்கு வட்டி இல்லாக் கடன் கொடுக்கும் திட்டம் எல்லாம் போட்டிருக்கிறோம்.

(பிற்பகல் 1-30)

1967-க்கு முன்னால் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களும் இருக்கிறார்கள். தம் வாழ்வில் என்ன நடக்குமோ என்று இந்தச் சமுதாயத்திற்கு அஞ்சி—பற்பல இடையூறுகளை எதிர் நோக்கி—அவற்றை எதிர்த்துத் திருமணம் செய்துகொண்டவர்களும் இருக்கிறார்கள். அந்தத் தம்பதிகளுக்கும்—பிற்பட்டவர்களுடைய வாழ்வுக்காகவே நம்முடைய சொந்த வாழ்வைப் பணயம் வைத்திருக்கிற நமது மதிப்பிற்குரிய டாக்டர் கலைஞர் அவர்கள்—தங்க மெடலை அளிக்க முன்வரவேண்டும்—வட்டியில்லாக் கடனை அளிக்க அல்லது அவர்களது குடும்பம் மிகத் தாழ்ந்த நிலையில் இருந்தால் அவர்களது குழந்தைகளுக்கு அரசுப் பணிகளில்—நான் முன்னுரிமை என்று சொல்லவில்லை—முதல் சலுகை அளிப்பதற்கு முன்வரவேண்டும். இதை நிச்சயம் செய்வார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. 1967-க்கு முன்னால் கலப்பு மணம் செய்து கொண்டவர்களுக்கும் பரிசுகள் அளிப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

அடுத்து, மனுநீதித் திட்டம்—இது சாதாரண மக்களுக்கு—தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அங்கங்கே பலன் அளிக்கக்கூடிய வகையில் செயல்பட வேண்டும் என்கிற லட்சியத்தில் சற்று தொய்வு ஏற்பட்டிருப்பதை உணர்ந்து இதன்மீது சுறுசுறுப்பாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். ஆங்காங்கு அமைச்சர்கள் செல்கிறபோதும் இதனை வற்புறுத்தி வருகிறார்கள். நிச்சயமாக மக்களுடைய கோரிக்கைகள் மீது விண்ணப்பங்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க—



1975 மார்ச் 4 [திரு. கி. ஜெயராமன்]

தொடர்ந்து அந்தப் பிரச்சினையைக் கவனித்து முடிவு காண வேண்டும் என்கிற எனது வேண்டுகோளைத் தெரிவித்துக்கொண்டு இந்த வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9.00 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.33 மணியளவில் ஒத்திவைக்கப் பட்டது.

## (6) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders*

109. Notification issued in G.O. Ms. No. 523, Commercial Taxes and Religious Endowments, dated the 31st October, 1974 in regard to amendment to Public (Police) Department notification No. 173, dated the 20th November 1935, published at page 1 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated 20th November 1935, as subsequently amended. [Laid on the table of the House under section 10 (4) of the Tamil Nadu Betting Tax Act, 1935 (Tamil Nadu Act XX of 1935).]

110. Notification issued in R. Dis. No. 111624/72-E4, Director of Rural Development, dated the 30th July 1974 in regard to extension of certain provisions relating to building regulations under the District Municipalities Act, 1920 in certain Village and Town Panchayats. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayat Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

### B. *Reports, Notifications and Other Papers*

41. Notification issued in Memorandum No. 147306/M2/73-2 Revenue, dated the 8th February 1974 in regard to cancellation of Notification II-1 No. 4705 of 1969, published at page 1513 of Part II-Section 1 of *Tamil Nadu Govenment Gazette*, dated 15th October 1969.

42. Notification issued in G.O. Ms. No. 615, Commercial Taxes and Religious Endowments, dated the 22nd November 1974, in regard to an amendment to the Tamil Nadu Stamp (Prevention of undervaluation of Instruments) Rules, 1968.

43. Notification issued in G.O. Ms. No. 586, Commercial Taxes and Religious Endowments, dated the 18th November 1974 in regard to reduction of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the sale deed to be executed in favour of the Christian Mission Service, Azhakiapandiapuram, Kanyakumari district.





## இணைப்பு

[42-ம் பக்கத்தில் 168 ஆம் என்னுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

(அ), (இ), (உ) & (எ): சுகாதார மத்தியக் குழு, குடும்ப நலத் திட்ட மத்தியக் குழு ஆகிய இவ்விரு குழுக்களின் கூட்டுக் கூட்டம் 1974 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 5, 6, 7 ஆம் நாட்களில் புது டில்லியில் நடைபெற்றது. இக் கூட்டத்தில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மருந்துவக் கல்வி இயக்குநர், சுகாதாரப் பணிகள் குடும்ப நலத்திட்ட இயக்குநர், சுகாதாரப் பணிகள்—உதவி குடும்ப நலத்திட்ட உதவி இயக்குநர் (ஆரம்பச் சுகாதார நிலையம்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

உணவுப் பொருட்களில் கலப்படம் செய்யப்படுவதைத் தடுக்க சுகாதார மத்தியக் குழுவும் குடும்பநலத்திட்ட மத்தியக் குழுவும் செய்த பரிவுரைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. உணவுப் பொருட்கள் கலப்பட தடுப்புச் சட்டத்தைச் செயல்படுத்துவதில் மத்திய அரசும் மாநில அரசுகளும், தங்களை அதிக அளவிற்கு ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்பதோடு, இச் சட்டங்களைச் செயல்படுத்த வேண்டிய பொறுப்பு முக்கியமாக மாநில அரசுகளைச் சாரும். அதே அளவிற்கு உள்ளாட்சி மன்றங்கள் கலப்படச் சட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து ஆய்வு செய்யவும் வேண்டும்.

2. சட்டத்தைச் செயல்படுத்தும் பணியாளர்களின் அமைப்பையும், ஆய்வுக்கூட்ட வசதிகளையும் பெருக்கப் போதிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

3. தீங்கும், கேடும் விளைவிக்கத்தக்க உணவுக் கலப்படத்தைச் செய்வோருக்கு ஆயுள் தண்டனை உட்பட கடுமையான தண்டனை விதிப்பதற்கு வகை செய்யும் வண்ணம் தற்போதுள்ள சட்டங்களில் உள்ள குறைபாடுகளைத் தகுந்தவாறு திருத்தியமைக்க வேண்டும். ஏனெனில், அவ்வாறு செய்தால்தான், சட்டங்களைச் செயல்படுத்தும் நிர்வாகம் உணவுக் கலப்படம் செய்வோருக்குக் கடுந்தண்டனை அளிக்க இயலும். உணவுப் பொருட்களில் கலப்படம் செய்யும் இந்தச் சமூகக் கேட்டுக்கு எதிராக பொதுமக்களின் கருத்தை உருவாக்க வேண்டியதன்

தேவை குறித்தும், இதையே நோக்கமாகக் கொண்டு பெருமளவில் பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெற வேண்டியதன் தேவை குறித்தும் குழு சிறப்பாக வலியுறுத்தியது ; மேலும்,

4. நிகழ்ச்சி நிரலுடன் எல்லோருக்கும் அனுப்பப்பட்ட உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்திற்கான திருத்தங்களுக்கு, குழு ஒப்புதலளித்தது.

சுகாதார மத்தியக் குழுவின் தீர்மானம் குறித்து கருத்துரை வழங்குவதற்காக, அத்தீர்மானம் சுகாதாரப் பணிகள்—குடும்ப நலத்திட்ட இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. சுகாதாரப் பணிகள்—குடும்ப நலத்திட்ட இயக்குநரிடமிருந்து பதில் எதிர் பார்க்கப்படுகிறது.

இவ்வகையில் செய்யப்படும் முதற் குற்றத்திற்கு 6 திங்கள் கால அளவிற்குக் கட்டாயச் சிறைத்தண்டனையும், இரண்டாவது குற்றத் திற்கு 6 ஆண்டுக் கால அளவிற்குக் கட்டாயச் சிறைத் தண்டனையும் கொடுக்க வகை செய்ய 1954 ஆம் ஆண்டுச் சட்டத்தின் 16, 17 ஆவது பிரிவுகளைத் திருத்துவதற்குச் சுகாதார துறையின் 95803/பி2/73-2 ஆம் எண் அரசுக் கடிதத்தின் மூலம் இந்திய அரசுக்கு எழுதிக் கேட்கப்பட்டுள்ளது. இப்பொருள் குறித்து இந்திய அரசிடமிருந்து இன்னும் பதில் கிடைக்கவில்லை.

(a) (b) (c) £ (d) :—The Joint Meeting of the Central Council of Health and the Central Council of Family Planning was held on 5th, 6th and 7th April 1974 at New Delhi. The Hon'ble Minister for Health, Director of Medical Education, Director of Health Services and Family Planning, Assistant Director of Health Services and Family Planning (Primary Health Centre) have attended the meeting.

The recommendation of the Central Council of Health and the Central Council of Family Planning on the Prevention of Food Adulteration is as follows :—

1. the State and Central Governments should involve themselves to a greater degree in the implementation of the Prevention of Food Adulteration Act and also examine the functioning of local bodies inasmuch as the responsibllity for enforcement falls essentially on the States ;



2. adequate measures be taken for augmenting the enforcement machinery and laboratory facilities;

3. the existing laws be suitably amended so as to plug the existing loop-holes and also to provide for deterrent punishment including life imprisonment to those indulging in harmful and injurious type of adulteration, so that the Administration can come down with a heavy hand on such persons. The Council specially stresses the need for creating public opinion against this social evil and to secure public participation to the maximum extent towards this end ; and

4. the Council approved of the suggested amendments to the Prevention of Food Adulteration Act circulated with the agenda.

The resolution of the Central Council of Health was referred to the Director of Health Services and Family Planning for remarks. The reply from the Director of Health Services and Family Planning is awaited.

In Government Letter No. 95803/P2/73-2, Health, dated 22nd July 1974, the Government of India have been addressed to amend sections 16 and 17 of the Act, 1954 to provide for compulsory imprisonment for a period of 6 months for the first offence and compulsory imprisonment of six years in respect of the second offences. The matter is pending with the Government of India

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

---

**புதன்கிழமை, 1975 மார்ச் 5.**

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. நீத்தார் நினைவுக் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் திரு. ஆர். தங்கவேல் அவர்கள்
மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

1946-ம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரை திருவண்ணாமலை பொது-கிராமப்புற (தாழ்த்தப்பட்டோர்) தொகுதியிலிருந்தும், பின் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டுவரை திருவண்ணாமலை (ஒதுக்கப்பட்ட) தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அன்றைய ஒருங்கிணைந்த தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. ஆர். தங்கவேல் அவர்கள் 3—3—1975 ஆம் நாள் அன்று மறைந்ததைக் குறித்து இப்பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு இப் பேரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் மௌனமாக ஒரு நிமிடம் நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் மௌனமாக ஒரு நிமிடம் எழுந்து நின்றனர்.

## 2. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

### காவல்துறை : ஆணைக்குழுவின் பரிந்துரைகள்

* 181 வினா—திரு. ஏ. சுப்பிரமணியம் :

திரு. என். கே. பழனிசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போலீஸ் கமிஷனின் பரிந்துரைகளில் எவையெல்லாம் அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன ?

(இ) எவையெல்லாம் செயலாக்கப்பட்டிருக்கின்றன ?

(உ) எந்தப் பரிந்துரையேனும் புறக்கணிக்கப்பட்டுள்ளதா ?

(எ) ஆமெனில், அவை யாவை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ), (இ), (உ) & (எ) பேரவையின் முன் விவர அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, 114 ஆவது பரிந்துரையில்

These are a numbes of shortcomings in the working of local police stations which tend to cause public dissatisfaction and to impair good relations between the Public and Police. . . .

என்று இருக்கிறது. முக்கியமாக வருவது என்னவென்றால், கேஸ் கொடுத்தால் கேஸை எடுப்பதில்லை. குற்றம் செய்திருந்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதில்லை. சமயத்தில் விடுதலையும் செய்துவிடுகிறார்கள். இம்மாதிரி இருப்பதன் காரணமாகத்தான் போலீஸ் மீது அதிருப்தி இருக்கிறது. அதைப் போக்கக்கூடிய முறையில் சர்க்கார் ஏதாவது உத்தரவிட்டு, அதை சரியான முறையில் அமுல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இது போலீஸ் கமிஷனின் பரிந்துரைகள் பற்றிய கேள்வி. அதற்கான விவர அறிக்கைதான் அவையில் வைக்கப்பட்டிருக்கிறது. நடைமுறையில் வருகிற சங்கடங்கள் குறித்து தனியாகத் தகவல் அனுப்பினால் கவனிக்கலாம்.

---

@666-698 ஆம் பக்கங்களில் இணைப்பு - ஆக அச்சிடப்பட்டுள்ளது.





திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, காவலர்களுக்குரிய சீருடையும் தொப்பியும் வெள்ளையர் காலத்தில் உருவாக்கப்பட்டது. அதை மாற்றியமைக்க வேண்டுமென்ற பரிந்துரை இருக்கிறதே. அது எப்பொழுது மாற்றி அமைக்கப்படும் என்பதை அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒரு வகையில் இது மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் மாற்றியமைக்கின்ற உத்தேசம் இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, ஏற்றுக்கொள்ளப்பட்ட பரிந்துரைகளில் போலீஸ்காரர்களுக்குரிய படிகள் பற்றிய பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தப் பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்னால் அவர்களுக்கு வழங்கப்பட்ட படிகளின் விகிதாசாரம் எவ்வளவு, இப்பொழுது வழங்கப்படுகிற படிகளின் விகிதாசாரம் எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, விகிதாசாரம் எவ்வளவு என்று கணக்கிட்டு அறிவிக்க இயலாது. ஆனால், அவர்கள் திருப்திபடுகிற அளவுக்கு விகிதாசாரம் உயர்த்தப்பட்டிருக்கிறது.

திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அசிஸ்டென்ட் பப்ளிக் ப்ராசிக்யூடருடைய அந்தஸ்தை உயர்த்துவதற்கு ஒரு சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. அதை நடைமுறைக்குக் கொண்டுவந்து அசிஸ்டென்ட் பப்ளிக் ப்ராசிக்யூடருடைய சம்பளம் உயர்த்தப்பட்டிருக்கிறதா என்பதை அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் இல்லை.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, போலீஸ் கமிஷன் பரிந்துரைகளின் மூலம் போலீஸ் சம்பந்தப்பட்ட எல்லோரும் நன்மை அடைகிறார்கள் என்று பேசிக்கொள்ளப்படுகிறது. காலத்திற்குக் காலம் நிலைமைகள் மாறுகின்றன. ஆகவே, ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை இத்தகைய கமிஷனை உருவாக்கி, அந்தக் கமிஷனின் பரிந்துரைகளை ஏற்றுச் செயல்படுகிற முறை ஏதாவது அரசிடம் இருக்கிறதா ?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :* தலைவர் அவர்களே, போலீஸ் கமிஷனை இந்த அரசு வந்த பிறகுதான் உருவாக்கி, அதன் பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு இப்பொழுது படிப்படியாக நடைமுறையில் இருந்து வருகிறது. இவைகளெல்லாம் செய்து முடித்துவிட்ட பிறகு வேண்டுமானால் மேலும் தேவைப்பட்டால் அதுபற்றி அரசு ஆலோசிக்கும்.

*திரு. கே. எ. வகாப் :* தலைவர் அவர்களே, போலீஸ் துறையில் திறமையாக வேலை செய்து ஓய்வு பெற்ற போலீஸ் இன்ஸ்பெக்டர்கள், சப்-இன்ஸ்பெக்டர்கள் போன்றவர்களுக்கு மேலும் ஓராண்டு பதவிக் காலத்தை நீட்டிக்கும்படி சிபார்சு செய்யப்பட்டிருக்கிறதா ? அப்படி யென்றால், அரசு ஏதாவது பரிசீலித்துக் கொண்டிருக்கிறதா ?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :* தலைவர் அவர்களே, அப்படி எதுவும் சிபார்சு செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

*திரு. கே. டி. கே. தங்கமணி :* தலைவர் அவர்களே, மத்திய சர்க்காரும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இம்மாதிரியான ஒரு கமிஷன் நியமித்ததாகச் செய்தி வந்ததே, அப்படியொரு கமிஷன் நியமித்திருந்தால், நம்முடைய சிபார்சுகளை அமல் நடத்துவதுபற்றி அவர்களுக்கு அறிவித்திருக்கிறோமா ?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :* தலைவர் அவர்களே, நம்முடைய போலீஸ் கமிஷன் சிபார்சுகளின் அடிப்படையில் நம்முடைய போலீஸ் துறையில் பல நவீன முறைகளைப் புகுத்துவதற்கு மத்திய அரசிடம் பல முறையீடுகளைச் செய்து, அதற்கேற்ப மாடர்னைஸேஷன் ஸ்கீமை போலீஸ் துறையில் நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய அரசும் ஓரளவுக்கு உதவி வழங்க முன்வந்திருக்கிறது.

*திரு. அ. ஆறுமுகம் :* தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாற்றியமைக்கப்பட்ட தொப்பி, இரயில்வே கார்டு அணியும் தொப்பிபோல் தலைமைக் காவலருக்கு இருக்கிறது என்று பேசப்படுகிறது. அதை மாற்றியமைக்க அரசு முன்வருமா ?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :* தலைவர் அவர்களே, நான் அந்த இரண்டு தொப்பிகளையும் ஒப்பிட்டுப் பார்க்கவில்லை.

*திரு. என். கே. பழனிசாமி :* தலைவர் அவர்களே, சொல்லப்பட்ட பரிந்துரைகள் பூராவும் அமுலில் இருக்கின்றனவா ? பூராவும் அமுல் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ? அதற்காக ஆகக்கூடிய அதிகப்படியான செலவு என்ன என்பதை அறியலாமா ?



*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :* தலைவர் அவர்களே, ஏற்றுக் கொள்ளப்பட்ட பரிந்துரைகளில் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டுள்ள பரிந்துரைகள் 41. அரசு ஏற்றுக் கொண்ட மொத்தம் 116 பரிந்துரைகளில் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது போக மீதம் இப்பொழுது செயல்படுத்தப்பட்டு வருகிற பரிந்துரைகள் 38. இந்தப் பரிந்துரைகள் முழுமையாகச் செயல்படுவதற்கு ஆறு கோடி ரூபாய் செலவாகும்.

### காவலர் படையை மாற்றியமைத்தல்

*** 182 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

*1974-75-ம் ஆண்டில் காவலர் படையை காலத்திற்கேற்ப மாற்றியமைக்கும் திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட உள்ள நடவடிக்கைகள் யாவை ?*

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :* பேரவைமுன் விவர அறிக்கையொன்று @ வைக்கப்பட்டுள்ளது.

*திரு. கா. வேழவேந்தன் :* தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் பல உட்கோட்டங்கள் தொடங்கப்பட்ட விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவை சிறிய முறையில், பலனுள்ள வகையில் செயல்பட்டுக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. சர்க்கிள் இன்ஸ்பெக்டர்களாக இருப்பவர்கள்—லா அண்டு ஆர்டர்—தொடர்பாக பல கிராமங்களுக்குப் போக வேண்டிய சூழ்நிலை சில நேரங்களில் ஏற்படுகிறது. அவர்களுக்குக் குறைந்த பட்சம் மோட்டார் சைக்கிள்கூட இல்லாத நிலையில் மிகவும் சிரமமாக இருக்கிறது. அவர்களுக்கு மோட்டார் சைக்கிள் அல்லது ஜீப்—உடனடியாக இல்லாவிட்டாலும், படிப்படியாக வரும் காலத்திலாவது வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :* படிப்படியாக அவர்களுக்கெல்லாம் மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டு வருகின்றது. விரைவில் அவை முழுமையாக நிறைவேற்றப்படும்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, in view of the increase in the number of crimes in the City of Madras, is there any proposal to increase the strength of the Crime Branch and particularly to modernise the Police Force.

---

@ 698–708-ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படி ஏதாவது தேவைப்படு மானால் அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, கொடுக்கப்பட்ட விவர அறிக்கையில் 1974-75 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட உட்கோட்டங்கள் வட்டங்கள் வட ஆற்காடு மாவட்டத்தில் ஒன்றுகூட இடம் பெறவில்லை. அதற்கு ஏதாவது சிறப்பான காரணங்கள் இருக்கின்றனவா? இல்லையென்றால், வடார்க்காடு மாவட்டத்தில் இந்த ஆண்டிலாவது இப்படிப்பட்ட வட்டங்களை உருவாக்கு வதற்கு முதல் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஒருவேளை வடார்க்காடு மாவட்டத்தில் குற்றவாளிகள் குறைவாக இருக்கலாம் (சிரிப்பு).

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, காவல் நிலையங்களின் எல்லை வரம்பு பல ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்டது. இதை மாற்றியமைத்தால் காவலர்களுக்கு எளிதாகவும், குற்றவாளிகளை விரைவில் கண்டு பிடிப்பதற்கும் வசதியாக இருக்கும். ஆகவே, இதை மாற்றியமைக்க அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியை நான் புரிந்துகொண்ட வரையில், ஒரு காவல் நிலையத்திற்கும் இன்னொரு காவல் நிலையத்திற்கும் உள்ள தொலைவைக் குறிப்பிடுகிறார் என்று கருதுகிறேன். தொலைவு அடிப்படையில் மட்டுமல்லாமல், அங்கிருக்கும் மக்கள் எண்ணிக்கையின் அடிப்படையிலும், குற்றங்கள் எண்ணிக்கைப் பெருக்கத்தின் அடிப்படையிலும் காவல் நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. ஆகவே, அந்த வகையில் இப்பொழுது எந்த எந்தப் பகுதிகளில் இந்த நிலையங்கள் தேவைப்படுகின்றன என்பதை ஆராய்ந்து செயற்குறிப்பு அனுப்பப் படும்போதெல்லாம், அரசு அவைகளைப் பரிசீலித்து கூடுமானவரையில் புதிய காவல் நிலையங்களை அமைக்க ஏற்பாடுகள் செய்து வருகின்றது.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, காலத்திற்கேற்ப என்ற அடிப்படையில், கோடைக் காலத்தையும் குளிர் காலத்தையும் மனதிலே வைத்து, அவர்களுக்கு உடை விஷயத்திலே கவனம் செலுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை, அப்படிப்பட்ட உடை மாற்றங்கள் நீலகிரி போன்ற குளிர்ந்த பகுதிகளைத் தவிர வேறு இடங்களில் தேவைப்படவில்லை.



## சட்டப் படிப்புக்கு மாணவர்கள் அனுமதி

*83. வினா—திரு எம் முத்தையா: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973-74 ஆம் கல்வி ஆண்டில், எம்.எல். வகுப்புகளுக்கு சட்டக் கல்லூரியிலும், சென்னைப் பல்கலைக் கழகத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட தாழ்த் தப்பட்ட மாணவர்கள் எத்தனை நபர்கள்?

(இ) மொத்தம் மனுச் செய்த தாழ்த்தப்பட்ட நபர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) 3 பேர்கள்.

(இ) 3 பேர்கள்.

திரு. எம். முத்தையா: தலைவரவர்களே, இந்தச் சட்டக் கல்லூரியில் பெண்கள் யாரும் தேர்வுக்கு வந்துள்ளார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தனிக் கேள்வி வேண்டும்.

திரு. தொ. ப. சீனிவாசன்: தலைவரவர்களே,. தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சட்டக் கல்லூரியில் இடம் அளித்ததைப் போல் மிகவும் பின்தங்கிய சலவைத் தொழிலாளர்கள், மருத்துவ இனத்தைச் சேர்ந்தவர்கள், மீனவர்கள் போன்றவர்களுக்கும் வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறதா? அவர்கள் மனுச் செய்திருக்கிறார்களா? எத்தனை பேர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, கல்வி நிறுவனங்களில், குறிப்பாக இப்படிப்பட்ட தொழிற்கல்வி நிறுவனங்களில் நாம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்று 18 சதவிகிதமும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 31 சதவிகிதமும் ஒதுக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் மாணவர்களைச் சேர்க்கின்றோம். அந்த அடிப்படையில்தான் அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட கோட்டாக்கள் நிரப்பப்படுகின்றன. எம்.எல். படிப்பிற்கு மொத்தம் 182 மாணவர்கள் எடுக்கப்பட்டார்கள். 3 பேர்கள்தான் தாழ்த்தப் பட்டவர்கள் விண்ணப்பித்தார்கள், அவர்கள் எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். தனிக் கேள்வி போட்டால், பிற்படுத்தப்பட்டவர்கள் எவ்வளவு பேர் விண்ணப் பித்தார்கள், எவ்வளவு பேர் எடுத்துக்கொள்ளப்பட்டார்கள் என்ற விவரம் தரலாம்.

[1975 மார்ச் 5

## *Admission of students for Engineering Course*

*184 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether it is a fact that selection of students for admission to Engineering Colleges in Tamil Nadu has been made by the Selection Committee this year; and

(b) the number of students selected?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(ஆ) 1,228 பேர்.

திரு. என். கே. பழனிசாமி: சார், நம்முடைய கல்வியினுடைய அடிப்படை ஜாப் ஓரியண்டட் என்பது. அதை அனுசரித்து இந்த மாதிரி இன்ஜினியரிங் கல்லூரிகளிலும், டெக்னிக்கல் இன்ஸ்டிட்யூட்களிலும் அதிகப்படியான மாணவர்களைச் சேர்க்க சர்க்கார் என்ன திட்டமிட்டிருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்பொழுதிருக்கிற சூழ்நிலையைப் பொறுத்தவரை அதிகப்படியான மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளலாமா அல்லது இதே நிலைமையை வைத்துக் கொள்ளலாமா என தொழில் நுட்ப போர்டிடம் கேட்கப்பட்டது. அவர்கள் ஓரளவு உயர்த்தலாம் என்று கூறியிருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது. இப்பொழுது மாணவர்களை எடுத்தாலும் அதனுடைய விளைவுகளை 5 ஆண்டுகளுக்குப் பிறகுதான் நாம் காண வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இப்படித் தொழில்நுட்பத்தில் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்தலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, கழிந்த ஆண்டு இன்ஜினியரிங் கல்லூரிகளுக்கு மனுச் செய்தவர்கள் மொத்தம் எத்தனை பேர்? இடமில்லாததன் காரணமாக, தகுதி இருந்தும் இடம் கிடைக்கப் பெறாதவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, விண்ணப்பித்த மாணவர்கள் மொத்தம் தகுதி படைத்தவர்கள்—4,748 ஆண்கள், 87 பெண்கள்; ஆக மொத்தம் 4,835 பேர். அதில் 1,290 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பல்வேறு வகைகளிலே ஒதுக்கப்பட்டு 1,228 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் இந்தக் குழுவினால்.



1975 மார்ச் 5]

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் எத்தனை பேர்களென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அது பற்றிய விவரமில்லை. ஆனால், தாழ்த்தப்பட்டவர்களுக்குரிய கோட்டா அளவுக்கு அவர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே பொறியியல் கல்லூரியிலே படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறதா? வேலை வாய்ப்பு கிடைக்காத காரணத்தாலே, மாணவர்களுடைய எண்ணிக்கை குறைக்கப்படுகிறதா என்பதற்கு அமைச்சரவர்கள் பதில் சொல்வார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, 3, 4 ஆண்டுக்காலத்திற்கு முன்னால் வேலை வாய்ப்பு ஓரளவுக்குக் குறைவாக இருந்தது. அப்பொழுது படித்துவிட்டு வெளியே வந்த பட்டம் பெற்றும் வேலை கிடைக்கப் பெறாமலிருந்தவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருந்த காரணத்தாலே, அகில இந்திய அளவிலே மாணவர்கள் சேர்க்கையை ஓரளவுக்குக் குறைக்க வேண்டுமென்று மத்திய அரசு தெரிவித்தது. அதையொட்டி, சேர்க்கப்படுகிற மாணவர்கள் எண்ணிக்கையைக் குறைத்தோம். மீண்டும் சிலபல ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றியதன் காரணமாக, வேலை வாய்ப்பு இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது, அதன் காரணமாகத்தான், இப்பொழுது மாணவர்களைச் சேர்க்கின்ற எண்ணிக்கையை உயர்த்தலாம் என்று குறிப்பிட்டார்கள். அதன்படிதான், ரீஜினல் இன்ஜினியரிங் காலேஜ், திருச்சியில் 180 மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்தார்கள், அந்த எண்ணிக்கையில் 20-ஐக் கூட்டி, 200 ஆக்கியுள்ளோம். இந்த ஆண்டு கூடிய குழுவினர் அந்த எண்ணிக்கையை இன்னும் கூட்டலாம் என்று, இருக்கிற நிலைமையைப் பார்த்துச் சொல்லியிருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இப்பொழுது, இன்ஜினியரிங், பாலிடெக்னிக் போன்ற படிப்பு படித்தவர்களுக்கு ஓரளவு வேலை வாய்ப்பு வந்திருக்கிறது. ஆகவே, படித்துவிட்டு, அதிகமாக வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள் என்ற நிலை இப்பொழுது இல்லை.

## *Appointments for blind graduates*

*185 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether it is a fact that a blind graduate has been appointed as a College lecturer; and

(b) if so, when?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) நான்கு பேர்கள்.

(இ) 1974 ஆம் ஆண்டு ஜூலை-அக்டோபர் திங்களுக்கு இடையில் அவர்கள் வேலையில் அமர்த்தப்பட்டார்கள்.

**திரு. என். கே. பழனிசாமி:** சார், இவர்கள் எந்த அடிப்படையிலே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்? இவர்கள் வந்து லெக்ச்சர் செய்துவிட்டுப் போவதாகத்தானே இருக்கும். இவர்கள் நேரடியாக மாணவர்களைக் கன்ட்ரோல் செய்ய எப்படி வாய்ப்பிருக்கும்? ஆகவே, இப்படி ஏற்படுத்துவதைவிட, இவர்கள் நல்ல திறமையாக இருக்கிறபடியால், இவர்களை பிளைண்ட் ஸ்கூலிலே நியமிக்கப்படுவதைப்பற்றி கனம் அமைச்சரவர்கள் சொல்வார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்.** தலைவரவர்களே, ஊனமுற்றோர்களுக்கும் ஓரளவுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற அடிப்படையிலும், உடல் ஊனமுற்றவர்களை ஊக்குவிக்க வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையிலும், அவர்களுக்கும் பாடங்களைச் சொல்லிக் கொடுக்கின்ற அளவுக்குத் திறமையிருக்கிறதென்ற அளவுக்குத்தான் 4 பேர் சேர்க்கப்பட்டார்கள். என். சுரேஷ் குமார், ஆங்கிலப் போதனா ஆசிரியர், பயனியர் குமாரசாமி தனியார் கல்லூரி, நாகர்கோவில்; எம். நாகபூஷணம், ஆங்கிலப் போதனா ஆசிரியராக, ஆடவர் அரசினர் கல்லூரி, நந்தனத்தில் வேலை பார்க்கிறார். என். பாலகிருஷ்ணன், ஆங்கிலப் போதனா ஆசிரியராக, சென்னை மருத்துவக் கல்லூரியில் வேலை பார்க்கிறார். சுந்தர இராமலிங்கம், வாய் இயல் (லாஜிக்), உதவிப் பேராசிரியர், டாக்டர் அம்பேத்கார் அரசினர் கல்லூரி, வியாசர்பாடியில் வேலை பார்க்கிறார்.

இதிலே, என். சுரேஷ்குமாரும், சுந்தர இராமலிங்கமும் அவர்களுடைய துறையிலே முதல் வகுப்பிலே—கல்லூரியிலே வெற்றி பெற்றிருக்கிறார்கள். பாடம் சொல்லிக் கொடுப்பதிலே திறமையாகத்தான் சொல்லிக் கொடுக்கிறார்கள் என்றிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல் திருத்துவது இயலாது என்பதைத் தவிர, பாடம் நன்றாகத்தான் சொல்லிக் கொடுக்கிறார்கள் என்றிருக்கிறது. இவர்கள், 1974-ம் ஆண்டுதான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் ஓரிரண்டு ஆண்டு கழித்து பார்ப்போமானால், அதனுடைய நிலைமைகளை நாம் ஆராயலாம்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, கண் பார்வையற்றவர்கள் விரிவுரையாற்றுவது அவர்களுடைய சிறப்பை எடுத்துக் காட்டும். ஆகவே, உடல் ஊனமுற்றோர் நிதியிலிருந்து அவர்களுக்கு மேலும் கூடுதல் நிதி உதவி அளிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, உடல் ஊனமுற்றோர்களுக்கு, வேறு பல வகையிலே எந்த வாய்ப்பும் இல்லாதவர்களுக்கு, வசதியில்லாதவர்களுக்கு, தங்களைத் தேற்றிக்கொள்ள வாய்ப்பில்லாதவர்களுக்குத்தான், உதவி அளிக்கப்படுகிறது. ஆனால், இப்படிப்பட்ட பேராசிரியர்களுக்கு அளிக்கப்பட வேண்டியதில்லை. அவர்களுக்குப் போதுமான ஊதியம் அளிக்கப்படுகிறது.

**திரு. எஸ். வடிவேல்:** கண்ணொளி மங்கினாலும் அறிவொளி மங்காத பல ஆசிரியர்கள் இம்மாதிரி நிலைமையிலிருக்கிறார்கள். அவர்களுக்கு நமது அரசு ஊக்கம் அளிக்க. இத்தகைய பணியிலே சரியான வாய்ப்பு அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அந்த எண்ணத்தின் அடிப்படையிலேதான் சென்ற ஆண்டு அவர்களுக்கு இந்த வாய்ப்பு அளித்தோம். கண்ணொளி இல்லாதவர்கள் மாணவர்களுக்குப் பாடப் போதனையை நடத்தக் கூடாது என்ற ஒரே காரணத்தால், பாடப் பயிற்சி வகுப்பிலேகூட, அவர்கள் சேர்க்கப்படாத அப்படிப்பட்ட நிலையிருந்தது. ஆனால், உலகப் பார்வையற்றோர் சங்கத் தலைவர் வேறு பல நாடுகளிலே இதைக் கையாண்டு, சிறப்பாக இருக்கிறது என்றும் அந்த அடிப்படையிலே இந்த நாட்டிலும் கையாள வேண்டுமென்றும் ஆலோசனை தெரிவித்தார்கள். அந்த அடிப்படையிலே 4 பேராசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஓராண்டுக் காலம் பார்ப்போமானால், ஊக்கமளிக்க வேண்டிய அவசியம் ஏற்படுமானால் மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்றதைப் போல், ஊக்குவிக்க அரசு நடவடிககை எடுக்கும.

**திரு. வீ. கார்த்திசன்:** இந்தப் பட்டதாரிகளுக்கு உதவியாளர்கள் நியமிக்க அரசு பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அந்த உதவியை அவர்களே கேட்கவில்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, பார்வையற்றவர்கள் ஆசிரியர்களாகவும் பேராசிரியர்களாகவும் நியமிக்கப்படுகிறார்கள். அதைப்போலவே ஊனமுற்றவர்கள் கை கால் நொண்டியாக இருக்கிறவர்கள் பள்ளிக்கூடங்களிலே ஆசிரியர்களாக நியமிக்கப்படுவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்குமா? அவர்கள் நடமாடுவதற்கு ஏற்ற வகையில் வசதியாக அவர்களுக்கு ஆட்டோ-ரிக்ஷா போன்றவை இலவசமாகக் கொடுப்பதற்கும் கடன் உதவி போன்றவற்றைச் செய்வதற்கும் அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஏற்கனவே ஒரு தடை இருந்தது. ஊனமுற்றவர்களை மாணவர்கள் எதிரே கொண்டுபோய் நிறுத்தினால் மாணவர்கள் கேலி செய்வார்கள், அவர்கள் மாணவர்களிடையே புழங்குவது கடினம் என்ற நிலைமை இருந்தது. அதிலே இரண்டுவித கருத்துக்கள் இருந்தன. ஒன்று அவர்களிடம் மாணவர்களுக்கு இரக்க உணர்வு ஏற்படும் என்ற ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. இன்னொரு கருத்து மற்ற ஆசிரியர்களிடம் நடந்து கொள்வதைப்போன்று மாணவர்கள் அவர்களிடம் நடந்து கொள்ளமாட்டார்கள் என்று கருதப்பட்டது. கை கால் ஊனமுற்றவர்கள் வசதியற்றவர்களாக இருந்தால் அவர்களுக்கு ஏற்கனவே சக்கர வண்டி கொடுக்கப்பட்டது. அந்த வகையிலே விண்ணப்பித்து அவர்கள் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இப்படி ஊனமுற்றவர்களை எழுத்தாளர்களாகவும் ஸ்டேனோகிராபர்களாகவும் கால் நொண்டியாக இருந்தாலும் பாவாயில்லை, கை சரியாக இருந்தால் டைப்பிஸ்ட் போன்ற பணிகளிலே அமர்த்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

## *Village Courts.*

* 186. *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether any decision has been taken regarding the constitution of Village Courts; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) இல்லை ஐயா.

திரு. என். கே. பழனிசாமி : சார், அன்றைய தினம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். இன்னும் பரிசீலனையில் இருக்கிறதா அல்லது அதைப் பற்றி முடிவு எடுக்கப் பட்டிருக்கிறதா ? அதைப்பற்றி முடிவு எடுப்பதிலே என்ன கஷ்டம் இருக்கிறது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த மசோதா பற்றி உயர்நீதி மன்றத்திலேயும் பார் கவுன்சிலிலேயும் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். வழக்குரைஞர்களைப் பொறுத்தவரையிலே இது கூடாது என்ற வாதத்தை எடுத்து வைக்கிறார்கள். இப்போது இருக்கிற நடைமுறை அமைப்பிலே எப்படிக் கொண்டுவர முடியும் என்று ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, வழக்குரைஞர்கள் வேறு காரணங்களுக்காக வேண்டாம் என்று சொல்லியிருக்கலாம். இதுபோன்ற கிராமப்புற கோர்ட்டுகளாலே எத்தனையோ விவகாரங்கள் தீர்க்கப்பட்டு இருக்கின்றன, இவற்றை ஏற்படுத்துவதன் மூலமாகப் பொதுமக்களுக்கு வீண் பண விரையமும் ஆகாமல் இருக்கும். ஆகவே, இதை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா ?



மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆலோசித்த பின் முடிவு எடுக்கலாம்.

திரு. கே. என். குமாரசாமி : இந்த மாதிரி நீதிமன்றங்கள் இப்போது இல்லாத காரணத்தினால் முன்சீப் கோர்ட்களிலே சிவில் வழக்குகள் 6, 7 ஆண்டுகள் என்று நீட்டித்துக் கொண்டுபோய் மக்கள் அவஸ்தை படுகிறார்கள். முன்னாலே எல்லாம் பெரும்பாலும் வழக்குகள் கிராமக் கோர்ட்டுகள் மூலம் பைசல் செய்யப்பட்டிருக்கின்றன. அதே மாதிரி இப்போது பைசல் செய்யக் கூடிய முறையில் அரசு இதைக் கொண்டு வர ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1958 ஆம் ஆண்டிலேயே இப்படிப்பட்ட நீதி மன்றங்கள் எடுக்கப்பட்டுவிட்டன. அதை மீண்டும் வைக்க வேண்டுமா என்பதைப் பற்றி இருவேறு கருத்துக்கள் இருக்கின்றன. நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் இதற்காக ஒரு புதிய சட்டத்தைத் தயாரித்து இருக்கிறோம். எப்படிச் செயல்படுத்துவது என்பது பற்றி உயர்நீதி மன்றத்திடம் ஆலோசனை கேட்டோம். அவர்கள் சில குறிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். அதைப் பரிசீலித்துத்தான் முடிவு எடுக்க வேண்டும்.

## சூரியகாந்தி எண்ணெய்

* 187 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சூரியகாந்தி விதைகளைப் பதப்படுத்துவதற்கான திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சூரியகாந்தி விதைகளைப் பதப்படுத்தும் இரண்டு ஆலைகளை (எண்ணெய் பிழியும் ஆலைகள்) ஒன்று கோயம்புத்தூர் கூட்டுறவு மாவட்ட விற்பனை வழங்கு சங்கத்தால், ஒண்டிப்புதூரிலும், மற்றொன்று தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை சம்மேளனத்தால் விருத்தாசலத்திலும் நிறுவ அரசு ஒப்புதல் அளித்துள்ளது. விரைவில் வேலை முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

[1975 மார்ச் 5

திரு. பெ. சௌந்திரபாண்டியன் : தலைவர் அவர்களே, சூரியகாந்தி இப்போது தமிழகத்திலே பல இடங்களில் பயிரிடப்படுகிறது. ஆகவே இந்த ஆலையைத் தென்மாவட்டங்களிலே எங்காவது நிறுவுவதற்கு உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது தொடங்கி இருப்பது நடந்தவுடன் அதை நடைமுறையிலே பார்த்ததற்குப் பின்னாலே ஆலோசிக்கலாம்.

திரு. கி. ஜெயராமன் : தலைவர் அவர்களே, இந்த சூரியகாந்தி எண்ணெய் மஞ்சள் நிறமாகவும் கொழுப்பு சக்தியைக் குறைப்பதாகவும் இருக்கின்ற காரணத்தினால் மக்கள் அதிகமாக விரும்புகிறார்கள், மேலும் மக்கள் இதை விரும்பக்கூடிய அளவிற்கு எப்படி டீ, சோப்பு போன்றவற்றை எல்லாம் இலவசமாகக் கொடுத்து விருப்பத்தை உண்டாக்குகிறோமோ அதைப்போன்று இந்த எண்ணெயையும் இலவசமாகக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வியாபார நோக்கத்தோடுதான் இதை ஆரம்பித்திருக்கிறோம். ஆகவே, இலவசமாகக் கொடுக்க முடியாது.

திரு. மா. வெ. கரிவேங்கடம் : சூரியகாந்தியைப் பயிர் செய்வதற்குத் தனி நிலம் தேவையில்லை. எங்கு போட்டாலும் பயிராகிறது. ஆகவே அரசாங்கம் உற்பத்தியைப் பெருக்க தனித் திட்டம் வைத்திருக்கிறதா ? இந்த எண்ணெயை எந்த எந்தக் காரியங்களுக்குப் பயன்படுத்துகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பயிரிடுவது பற்றி வேளாண்மைத் துறையிடம் கேட்க வேண்டும். உற்பத்தி செய்தவற்றிலிருந்து எண்ணெய் எடுத்து விற்பனை செய்வது பற்றித்தான் முயற்சி செய்து வருகிறோம்.

திரு. கே. டி.கே . தங்கமணி : சூரியகாந்தி எண்ணெயை அதிகமாக மற்ற நாடுகளிலேயும் பயன்படுத்துகிறார்கள். இது தமிழ்நாட்டிலே எந்த அளவிற்கு உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைத்தான் நான் சொன்னேன் உற்பத்தியைப் பற்றி விளக்கம் என்னிடம் இல்லையென்று. கடலை எண்ணெயைப் பயன்படுத்துகின்ற பழக்கமுடைய நம்முடைய மக்கள் இந்த சூரியகாந்தி எண்ணெயைப் பயன்படுத்த வாய்ப்பு இருக்கிறது. உற்பத்தியைப் பெருக்க வேளாண்மைத் துறை முயற்சியிலே ஈடுபட்டது. அதிலிருந்து எண்ணெய் எடுக்கக்கூடிய முறையிலே ஆலைகளை உருவாக்குகின்ற முயற்சிகளைத்தான் இப்போது நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.



1975 மார்ச் 5]

திருமதி ஜோதி வெங்கிடாசலம் : சூரியகாந்தி எண்ணெயையும் மற்ற எண்ணெய் ரேஷன் கடைகளிலே கொடுக்கப்படுவதைப்போல—ரேஷன் கடைகளிலே கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவுத் துறையிலே, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடைகள் இவைகள் மூலம் அதை விற்க முயற்சி எடுக்கலாம்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, இந்த சூரியகாந்தியிலிருந்து தயாரிக்கப்படுகின்ற எண்ணெய் மனிதனுடைய கொழுப்பை அடக்கக்கூடியதாகச் சொல்லப்படுகிறதே ? ஆகவே கொழுப்பை அடக்குகின்ற எண்ணெய் நம்முடைய நாட்டிற்கு அதிகமாகத் தேவைப்படுவதால் அதிகமாக இதை உற்பத்தி செய்யக்கூடிய முறையில் இதற்கு சப்ஸிடி கொடுக்க அரசு முன்வருமா ?

(பதில் இல்லை)

## கோவை மாவட்டத்தில் புதிய நீர் மின் திட்டம்

* 188 வினா—திரு. என். கிட்டப்பா:
திரு. என். கே. பழனிசாமி :

மாண்புமிகு தொழில்-மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில், தமிழ்நாடு அரசு கட்ட இருக்கும் நீர் மின்சார நிலையத் திட்டத்துக்கு கேரள மாநில அரசு ஆட்சேபம் தெரிவித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம். கோயம்புத்தூரில் நெல்லித்துறை நீர் மின்சக்தித் திட்டம் காவிரி ஆற்றுப் பள்ளத்தாக்கில் அமைக்கப்படுகிறது என்றும் இது இரு மாநிலப் பாங்குடையது என்றும் கூறி கேரள அரசு இத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

(ஆ) இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் இருமாநிலப் பாங்கு எதுவும் ஏற்படாதென்று இவ்வரசு மத்திய நீர்மின்சக்தி ஆணைக்குழுவிற்குத் தெரிவித்துள்ளது. இறுதியாக, கேரள அரசின் மறுப்புரைகளை உரியவாறு பரிசீலித்த பின்னர், 1974 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் இத் திட்டத்திற்கு மத்திய நீர் மின் சக்தி ஆணைக்குழு அனுமதி வழங்கி, திட்ட ஆணைக்குழுவும் இதற்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. தற்பொழுது இந்தத் திட்டம், தமிழ்நாடு மின்சார வாரியத்தால் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

[1975 மார்ச் 3

*திரு. என். கிட்டப்பா :* தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக எவ்வளவு மெகோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது? இதை விரைவுபடுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை அறிவிக்க இயலுமா?

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :* இந்த மின் நிலையத்தின் உற்பத்தித்திறன் 50 மெகோவாட். இதிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு சராசரி 109 மிலியன் யூனிட் மின்சாரம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மதிப்பீட்டுச் செலவு சுமார் 10 கோடி ரூபாய் என்று இருக்கிறது. இது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேற்றப்படுவதாகக் குறிப்புகள் இருக்கின்றன.

*திரு. என். கே. பழனிசாமி :* சார், அதற்கான மெஷினரிகள் எல்லாம் வந்துவிட்டனவா? அல்லது ஆர்டர்தான் கொடுக்கப்பட்டிருக்கிறதா? இந்தத் திட்டம் எப்போது பூர்த்தி செய்யப்படும்?

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :* இந்தத் திட்டம் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே நிறைவேற்றுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஆரம்ப வேலைகள்தான் நடைபெற்று வருகின்றன.

## அலுமினியம் ப்ளோரைட் தொழிற்சாலை

* 189 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர், 28—1—1974 அன்று வினா எண். 197-க்கு அளித்த விடையை யொட்டி, தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அலுமினியம் ப்ளோரைட் தொழிற்சாலை ஒன்று தமிழ்நாட்டில் அமைப்பது தற்போது எந்நிலையில் உள்ளது?

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :* தொழிற்சாலை அமைப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அயல்நாட்டு நிறுவனம் ஒன்றின் கூட்டு உதவியைப் பெறுவதற்கு மத்திய அரசின் அனுமதி கோரப்பட்டு இருக்கிறது.

*திரு. என். கிட்டப்பா :* தலைவர் அவர்களே, இதை எங்கே அமைக்க இருக்கிறீர்கள்? இதற்காகும் மதிப்பீட்டுத் தொகையை அறிவிக்க இயலுமா?

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :* மதுரைக்குப் பக்கத்திலே அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. மதிப்பீட்டுச் செலவு ஐந்து கோடியே ஐம்பது லட்சம் ரூபாய்.



1975 மார்ச் 5]

*திரு. எம். சுரேந்திரன் :* அலுமினியம் ப்ளோரைடு தொழிற்சாலை ஆரம்பிக்கப் போவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே அலுமினியம் தொழிற்சாலைகளுக்கு மின்சாரக் கட்டணத்தில் மிகவும் சலுகைகள் கொடுக்கப்படுகிறதே அதைப்போன்று இதற்கும் சலுகைகள் கொடுக்கப்படுமா?

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :* இது அலுமினியத் தொழிற்சாலை அல்ல; ப்ளோரைடு அன்ட் அதர் கெமிக்கல்ஸ் சம்பந்தமான தொழிற்சாலை.

*திரு. ஜே. ஜேம்ஸ் :* தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி ஏற்கனவே 28—1—1974 ஆம் தேதியில் கேள்வி எண். 197-க்குப் பதில் அளிக்கப்பட்டதிலிருந்து எழுப்பப்பட்டிருக்கிறது. ஏற்கனவே கொடுக்கப்பட்ட கேள்வி என்ன? அமைச்சர் அவர்கள் அன்றைய தினம் அதற்குக் கொடுத்த பதில் என்ன என்று கூறுவார்களா?

(முற்பகல் 9-30)

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :* தலைவரவர்களே, இந்தக் கேள்விக்கான பதிலை ஒட்டித்தான் சொல்ல முடியுமே தவிர, அந்தக் கேள்விக்கான பதிலைச் சொல்ல இயலாது. அங்கத்தினர்தான் அதைப் படித்து விட்டு வர வேண்டும்.

*திரு. ஜே. ஜேம்ஸ் :* தலைவரவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர், 28—1—1974 ஆம் தேதி அந்தக் கேள்விக்கு அளித்த பதிலில், இந்த அலுமினியம் ப்ளோரைட் பேக்டரி மாநிலத்தில் எல்லா மாவட்டங்களிலும் அமைக்கப்படும் என்று அன்றைக்கிருந்த தொழில் அமைச்சரவர்கள் கூறினார்கள். அந்த வாக்குறுதி காப்பாற்றப்படுமா என்ற விஷயம் அஷ்யூரன்ஸ் கமிட்டியிலேயும் எழுப்பப்பட்டது. ஆகவே, அது சம்பந்தமாக என்ன கூறுகிறீர்கள்?

*மாண்புமிகு திரு. செ. மாதவன்:* இதில் என்ன பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இருக்கிறது என்று தெரியவில்லை. அலுமினியம் ப்ளோரைட் பேக்டரி ஒன்றுக்கே டெல்லியிடம் தவம் கிடக்கிறோம். அந்தத் தவம் முடிந்து அவர்கள் அனுமதித்த பிறகு மற்ற மாவட்டங்களைப்பற்றி யோசிக்கலாம்.

## இரயில்வே செஸ் நிதி

* 190 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சேரவேண்டிய இரயில்வே செஸ் எந்த ஆண்டு வரை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இன்னும் பகிர்ந்தளிக்கப்படவில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த ரயில்வே செஸ் நிதி எந்த அடிப்படையில் பகிர்ந்து அளிக்கப்பட இருக்கிறது? இந்த நிதியைக் கொண்டு ஊராட்சி ஒன்றியங்கள் எந்தெந்த வகையிலே செலவினங்களைச் செய்து கொள்ளலாம் என்று அனுமதிக்கப்பட இருக்கிறது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அவர்கள் தஞ்சை மாவட்டத்தைப் பற்றிக் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர், சாலைப் பணிகள் 34 ஒன்றியங்களில் 508 வேலைகளுக்கு எஸ்டிமேட் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். அது சார்க்காரின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் பகிர்ந்து அளிக்கப்பட இருக்கும் இந்த நிதியில் மாயூரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு எவ்வளவு அளிக்கப்பட இருக்கிறது என்பதை அறிய இயலுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தனியான விவரம் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இரயில்வே கட்டணத்தைப் பொறுத்த வரையில் இன்றைக்கு செஸ் நிதி எவ்வளவு இருக்கிறதோ அது மாநிலங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்படுகிறதே, நமது மாநிலத்திற்கு எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, இது நிலத்தின் மீது போடப்பட்டு இருக்கிறது. இதற்குமுன் சில மாவட்டங்களில், சேலம், கோவை, தஞ்சை, திருநெல்வேலி மாவட்டக் கழகங்களே இரயில்வேயை நிர்வகித்து வந்திருக்கிறார்கள். அப்படியே மாற்றியதிலிருந்து லேண்ட் செஸ் என்று கணக்கு வந்திருக்கிறது. அதன் மூலம் தஞ்சை மாவட்டத்திற்கு வந்திருப்பது 1.27 கோடி ரூபாய், சேலம் மாவட்டத்திற்கு 40.17 இலட்சம் ரூபாய், தென்னார்க்காடு மாவட்டத்திற்கு 9.22 இலட்சம் ரூபாய், திருநெல்வேலி மாவட்டத்திற்கு 7.7 இலட்சம் ரூபாய், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு 1.16 இலட்சம் ரூபாய், இராமனுதபுரம் மாவட்டத்திற்கு 1.6 இலட்சம் ரூபாய், மதுரை மாவட்டத்திற்கு 7 இலட்சத்து 8,000 ரூபாய், கோவை மாவட்டத்திற்கு 32 இலட்சம் ரூபாய்





## நகராட்சிகளில் பணிபுரியம் கடைநிலை ஊழியர்கள்

* 191 வினா—திரு. என். மருதாசலம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் நகராட்சியில் பணிபுரியும் பியூன், வாட்ச்மேன்களுக்கு அடிப்படைச் சம்பளம் உயர்த்த அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இல்லை.

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, கோவை நகராட்சியிலே பணிபுரியும் பியூன், வாட்ச்மேன்களுக்கு அடிப்படைச் சம்பளம் 15 ரூபாய், 18 ரூபாய் என்றுதான் இருக்கிறது. இவர்களது அடிப்படைச் சம்பளத்தை 100 ரூபாய் என்ற அளவிற்காவது உயர்த்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, பியூன்களின் சம்பளம் மாற்றப்பட்டாகிவிட்டது. இவர்களெல்லாம் வாட்ச்மேன்கள் என்ற அடிப்படையில் சர்க்காரின் எல்லாத் துறைகளிலேயும் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு இப்பொழுது அந்த அடிப்படைச் சம்பளத்தைப் பற்றி பரிசீலனை செய்ய வேண்டுமென்ற ஒரு தாக்கீது நம்முடைய பரிசீலனையில் இருக்கிறது.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, இந்த நான்காம் தர சிப்பந்திகள் என்று சொல்லப்படும் பியூன், வாட்ச்மேன்கள் பல நகராட்சிகளிலே நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு நிரந்தரமான சம்பளம் கிடைக்கவில்லை என்ற குறைபாடு நீண்டகாலமாக இருக்கிறது. அந்தக் குறைபாட்டை நிவர்த்திக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அவர்களை யெல்லாம் நிரந்தரமற்ற ஊழியர்களாகவே அவசரச் செலவு நிதியிலிருந்து வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தால் நிர்ந்தரமற்றவர்களாக இருப்பார்கள். அவர்களை நிரந்தரமாக்குவதா என்ற பரிசீலனை இப்பொழுது சர்க்காரிடம் இருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, அப்படிப்பட்ட சிப்பந்திகளை டெம்பரரியாக ஓராண்டு, இரண்டாண்டு வைத்துக் கொண்டு பிறகு நீக்கி விடுவது, மறுபடியும் 3 மாதம் கழித்து மீண்டும் எடுப்பது என்று

இப்படிச் செய்து சர்வீஸ் இல்லாத அளவிற்கு பியூன்களுக்கும், வாட்ச்மேன்களுக்கும் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்கி 'லோயர் கிரேட் கிளார்க்'குக்கு உண்டான சம்பளம் வழங்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, இரண்டு பகுதிகளாக வேலைக்கு எடுக்கிறோம். முனிசிபாலிட்டிகளிலேயும், மற்ற நகரங்களிலேயும், சர்க்காரிலேயும் கூட சில ஸ்தாபனங்களில் டெம்பரரியாக புதிதாக வேலைக்கு எடுத்துச் செய்கிறோம். புதிதாக எஸ்டிமேட் போட்டு வேலை செய்தால் டெம்பரரியாக 3 மாதங்களுக்குத்தான் அந்த வேலையே இருக்கும். அப்படி அந்த வேலைகள் நடக்கும் நேரத்தில் டெம்பரரியாக வேலைக்கு எடுத்துக் கொள்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்குவது என்றால் நிரந்தரமான காலி இடங்கள் வந்தால் நிரந்தரமாக்குவார்கள்.

## *Kothwal Market*

* 192 *Q*.—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal for providing a modern market in the place of Kothwal Market in George Town; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, கொத்தவால் சாவடியில் நெருக்கடி அதிகமாக இருப்பதால் இப்பொழுது 'லா' அமைந்திருக்கும் இடத்தில் கொத்தவால் சாவடியைக் கொண்டு செல்லும் செயற்குறிப்பு இருந்ததாகவும், 'லா'-வை வேறு இடத்திற்குக் கொண்டு போவதற்கான செயற்குறிப்பு இருந்ததாகவும் நான் அறிகிறேன். அப்படி இல்லையென்றாலும்கூட, கொத்தவால் சாவடியின் உள்ளே சென்று பார்த்தால் மிகவும் கஷ்டமாக இருக்கிறது, எனவே உடனடியாக கொத்தவால் சாவடியை நல்ல காற்றோட்டமுள்ள தாராள இட வசதி நிறைந்த இடத்திற்கு மாற்றுவதற்கு அமைச்சரவர்கள் முயற்சிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, அப்படி ஒரு யோசனை இருக்கிறது. கேசவ பிள்ளை பூங்காவில். 'சால்ட்குவாட்டர்ஸ்' பக்கத்தில் பெரிய மார்க்கெட்டை ஏற்படுத்த 46 இலட்சம் ரூபாயில் திட்டமிட்டு, எஸ்டிமேட் போடப்பட்டு அது பரிசீலனையில் இருந்து வருகிறது.





*மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள்.*

Thiru K. M. SUBRAMANIAM: I got the answer, Sir.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, கொத்தவால் சாவடி வாணிகச் சந்தையில் தற்பொழுது எப்பொழுது பார்த்தாலும் சுத்தமில்லாமல் இருக்கிறது. இதைத் தூய்மைப்படுத்த அரசாங்கம் ஏதாவது முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, தூய்மைபடுத்தப்பட்டுத்தான் வருகிறது. தினம் தினம் கூட்டம் அதிகமாக வருவதால் மாலையிலே தூய்மைப்படுத்தினால் மறுநாள் காலையில் தூய்மை குலைந்து விடுகிறது. இப்படிப்பட்ட கூட்டங்கள் நிரந்தரமாக வரும் பகுதிகளில் தூய்மையைப் பார்க்க முடியாது.

## *Houses allotted to Industrial workers*

* 193 *Q*.—Thirumathi T. N. ANANDANAYAKI: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the industrial workers to whom houses have been allotted on rental basis in the Thiru-vi-ka Nagar and in the V.O.C. Nagar, Vyasarpadi, Madras have requested for allotting the respective houses on hire purchase scheme; and

(*b*) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) & (இ) 1971 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலும், 1974 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலும் திரு. வி. க. நகரில் இருக்கும் தொழிற்சாலை பணியாளர்கள் குடியிருப்புகளை தவணை முறையில் வாங்குதல் அடிப்படையில் (Hire Purchase Basis) தங்களுக்கு ஒதுக்கீடு செய்யக்கேட்டுக்கொண்டார்கள். அவர்களது கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டது. வ.உ.சி. நகரில் இருக்கும் குடியிருப்பு, குடிசைப்பகுதி முன்னேற்ற திட்டத்தின்கீழ் கட்டப்பட்டது. அந் நகரில் உள்ள எந்த ஒரு தொழிற்சாலை பணியாளரிடமிருந்தும் குடியிருப்புகளை தவணை முறையில் வாங்குதல் அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய இந்நாள் வரை கோரிக்கை பெறப்படவில்லை.

Thiru K. M. SUBRAMANIAM: Was the request rejected because the factory owners or the mill owners contributed to the construction of these houses? Did they contribute anything?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, தொழிற்சாலையின் பங்கு அந்த வீடு கட்டுவதில் இருக்கிறது. அதுமட்டும் அல்லாமல், இந்த வீடுகள் எந்தெந்தத் தொழிற்சாலைகளிலே பணியாற்றுகிறார்களோ அந்தத் தொழிலாளர்களுக்காகக் கட்டப்படும் வீடுகள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், திரு. வி. க. நகரில் பக்கிங்காம் ஆலைத் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள், அதற்காக பக்கத்தில் குடியிருப்பு இருக்கிறது. நாளைக்கு அந்தத் தொழிலாளர்கள் அந்தத் தொழிற்சாலையை விட்டுப் போய்விட்டால் அதற்குப் பிறகு வரும் தொழிலாளர்கள் அங்கே வாழ வேண்டுமென்பதற்காக அந்தக் குடியிருப்புகள் நிரந்தரமாக விற்கப்படுவதில்லை. இப்படிப்பட்ட குடியிருப்புகள் விற்கப்படக் கூடாது என்ற முடிவு சென்னையிலே கூடிய வீட்டு வசதி அமைச்சர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்டிருக்கிறது.

## *Houses constructed in Mambalam Tank Bund area*

* 194 *Q*.—THIRU K. M. SUBRAMANIAM: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the flats constructed under the Hire Purchase Scheme at Mambalam Tank Bund in Division No. 109 in Madras City have not been allotted to the slum dwellers in the area; and

(*b*) if so, the reasons therefor?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, (அ) & (இ) மாம்பலம் ஏரிக்கரைப் பகுதியில் மட்டுமல்ல, எல்லாக் குடிசை வாரியத் திட்டங்களிலும் தவணை முறையில் குடிசைவாழ் மக்களுக்கு வீடுகளை ஒதுக்க வேண்டும் என்பதுதான் அரசின் நோக்கம். அந்தப் பகுதி வாழ் மக்கள் தவணை முறைக்கு முன்வராவிடில் குடிசை வாரிய விதிகளுக்குட்பட்ட மற்ற ஏழை மக்களுக்கும் இந்தச் சலுகை நீட்டிக்கப்படும். மாம்பலம் ஏரிக்கரைப் பகுதி திட்டம் குடிசை மாற்று வாரியம் துவக்கிய முதல் திட்டமாகும். அண்ணா சாலையை ஒட்டியுள்ள முன்வரிசைப் பகுதியில் 128 குடியிருப்புகள் தவணை முறைக்கும், வாடகைக்கு என்று உள்ளே 392 குடியிருப்புகளும் கட்டப்பட்டன. ஆரம்பகாலத் திட்டமாதலால் தவணை முறையில் நன்மையை உணராததால் அந்தப் பகுதிவாழ் மக்கள் வாடகைக் குடியிருப்புகளையே நாடினர். அதனால் மேற்கண்ட 128 குடியிருப்புகளும் தவணைமுறைக்கு விரும்பிய இயலாதோருக்கு அளிக்கப்பட்டன.



THIRU K. M. SUBRAMANIAM: Sir, is the Hon. Minister aware that many of the persons who have applied for the Hire Purchase Scheme in Eri Karai have been allotted houses in Korattur instead of in 'Eri Karai'? So, will he examine the matter and see that justice is done to those who are staying in that particular area?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, நான் ஏற்கெனவே எடுத்துச் சொன்னது போல 128 குடியிருப்புகள் தவணை முறையில் விற்கப்பட்டிருக்கின்றன. யார் யார் கேட்டார்கள் என்ற புள்ளி விவரம் என்னிடத்தில் இல்லை. அப்படி ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் தக்க நடவடிக்கை எடுக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, வாடகைக்கு விடுவதில் முன் பணம் கட்டச் சொல்வதனால் தகராறுகள் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். இப்படி வாடகைக்கு இருப்பவர்களை முன் பணம் ரூ. 500 கட்ட வேண்டும் என்று சொல்வதாகக் கேள்விப்படுகிறோம், இது உண்மைதானா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, அப்படிப்பட்ட முறையில் பணம் வசூலிக்கப்படுகிறதா என்ற குறிப்பு என்னிடத்தில் இல்லை. வீடுகளைத் தவணை முறையில் வாங்குகிறவர்களுக்குத் தருகிற புதிய திட்டத்தை சென்னை நகரில் பல பகுதிகளைத் தேர்ந்தெடுத்து செயல்படுத்தி வருகிறோம். ஒருவர் தரைப் பகுதிக்கு 40 ரூபாய் விதம் தவணையாக 25 ஆண்டுகள் செலுத்தி வந்தால் அவருக்கு அது தரப்பட்டு விடுகிறது. முதல் மாடியில் இருப்பவர்கள் 35 ரூபாய் விதம் செலுத்த வேண்டும், இரண்டாவது மாடியில் இருப்பவர்கள் 30 ரூபாய் விதமும், மூன்றாவது மாடியில் இருப்பவர்கள் 25 ரூபாய் விதமும் செலுத்தி வந்தால் அவர்களுக்கு அது சொந்தமாகி விடுகிறது. இன்றைக்கு இப்படிப்பட்ட திட்டம் துவக்கப்பட்டு, பல ஏழை மக்கள் பயன் அடைந்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவரவர்களே, தவணை முறையில் சொந்தமாக்கிக் கொள்கிற இல்லங்களில் குடி போகிற தாழ்த்தப்பட்ட மக்கள் அவர்களுக்கிருக்கிற 18 சதவீத விகிதாசாரப்படி அளிக்கப்படுகிறார்களா என்று பரிசீலனை செய்கிற அளவிற்கு அரசிடம் குறிப்பு உண்டாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, அந்தந்தப் பகுதியில் கட்டப்படுகிற வீடுகள் அந்தந்தப் பகுதியில் உள்ள மக்களுக்குத் தான் கொடுக்கப்படுகிறது. விகிதாசார அடிப்படையில் பார்த்தாலும் தாழ்த்தப் பட்ட மக்களுக்குத்தான் அதிகம் இருக்கும். அங்கத்தினருக்கு வேண்டுமானால் விகிதாசாரம் எவ்வளவு என்பதை பின்னால் தெரிவிக்கிறேன் இப்போது என்னிடம் விவரம் இல்லை. ஆனால் 18 சதவீதத்திற்கு மேல் தான் தாழ்த்தப் பட்ட மக்களைப் பொறுத்த வரை விகிதாசாரம் இருக்கும். ரூபாய் 500-ஐ அவர்களும் முன் பணமாக இப்படிப்பட்ட தவணை முறையில் சொந்தமாக்கிக் கொள்ளும் வீடுகளுக்குக் கட்ட வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## *State Board for Handicapped.*

*195. Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state—

(a) whether it is a fact that a State Board for physically handicapped has been set up; and

(b) if so, what are its functions?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : (அ) ஆம் ; "ஊனமுற்றோருக் கான மாநிலக்குழு" என்பதே அதன் சரியான பெயர்.

(இ) இக் குழுவின் பணிகள் வருமாறு :

( i ) தமிழ்நாட்டிலுள்ள உடல் ஊனமுற்றோர், குறிப்பாக பார்வை யற்றோர், செவிட்டு—ஊமையர், கைகால் இழந்தவர்கள், மனவளர்ச்சி குன்றி யவர்கள், தொழு நோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்கள் அல்லது ஊனத்துடன் குணமடைந்தவர்கள் ஆகியோருக்குப் புதுவாழ்வு அளிக்கும் பிரச்சினையின் அளவைக் கண்டறிதல் ;

(ii) அரசுடன் கலந்தாலோசித்து உடல் ஊனமுற்றோரில் பெரும் பான்மையினர் வாழ்க்கை நிலையை உயர்த்துவது, முக்கியமாக மருத்துவம், தொழில், சமூக மறுவாழ்வு வகையில் அவர்களின் நிலையை உயர்த்தும் நோக்கம் கொண்ட பல்வேறு திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தல் ;

(iii) உடல் ஊனமுற்றோருக்குள்ள வேலைவாய்ப்புக்களை கண்டறி வதிலும் அவர்களைக் கூடிய விரைவில் பணியிலமர்த்தவும் வேலை வாய்ப் பகங்களுக்கு உதவி புரிதல் ;



( iv ) உடல் ஊனமுற்ற தனி நபர்கள்/கூட்டாகச் செயல்பட்டு வரும் தனி நபர்கள், உடல் ஊனமுற்றோருக்குப் பயிற்சியளித்தல், சொந்தத்தொழில் நடத்துவதற்கு வகை செய்தல், உடல் ஊனமுற்றோரில் பெரும்பான்மையினர் வாழ்க்கையை வளமாக்குவதற்கென்று மேற்கொள்ளப்படும் ஏனைய முயற்சிகள் ஆகிய வகைகளில் உடல் ஊனமுற்றோர் நலன் தொடர்பான பணிகளைச் செய்துவரும் நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு நிதி உதவி அளிப்பது குறித்து பரிசீலனை செய்து நிதியுதவி வழங்குதல்.

(v) உடல் ஊனமுற்றோருக்குக் கல்வியும் பயிற்சியும் மறுவாழ்வும் அளிப்பதில் ஈடுபட்டுள்ள பல்வேறு நிறுவனங்கள் மேற்கொள்ளும் முயற்சி களுக்கு ஒத்துழைப்பு நல்கி அவற்றுடன் இணைந்து செயல்படுதல் ;

(vi) மேற்சொன்ன நோக்கங்களை நிறைவேற்றுவதற்குரிய வேறெந்தப் பணிகளையும் மேற்கொள்ளுதல்.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்களின் கீழ் ஒரு போர்டு, ஸ்டேட் போர்டு என்று இப்படி இரண்டு போர்டு இருக்கிறது. இரண்டுக்கும் தனித் தனியாக வேலைகள் என்ன ? இவைகள் தனித் தனியாக இருப்பதால் என்ன லாபம் ?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, உடல் ஊனமுற்றோர் மாநிலக் குழு 4-2-1974 நாளிட்ட 166 எண், அரசாணையில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதில் மாநில அரசு அதிகாரிகள் சிலரும், இந்திய அரசு அதிகாரிகள் சிலரும் மற்றும் குறிப்பிட்டவர்களும் அங்கத் தினராவார்கள். சமூக நலத் துறை அமைச்சர் பெருந்தலைவராக இருந்து, அரசு சமூக நலத்துறைச் செயலாளர் அதன் செயலாளராக இருந்து இந்தக் குழு பணியாற்றி வருகிறது. வேறு ஒரு குழு இருக்கிறது என்றாலும் ஊனமுற்ற வர்கள் என்ற பெயரால் எந்தெந்த வகையில் ஊனம் உடையவர்கள் என்ற அடிப்படையில் உதவி பெறுவதற்குரிய வாய்ப்பைப் பெறலாம் என்பதை பற்றி நுண்ணிய கருத்துக்களைக் கூறுவதற்கென்று உள்ள பிரிதொருகுழு, மத்திய அரசின் அதிகாரிகள், மாநில அரசின் அதிகாரிகள், சேவையில் ஈடுபடுகிற நல்லோர் ஆகியோரைக் கொண்ட குழு மாநில அளவில் செயல் பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, இந்தக் குழுவிலே யார் யார் அங்கம் பெற்றிருக்கிறார்கள் ? அவர்கள் எத்தனை ஊனமுற்றவர்களை அரசுக்குச் சிபாரிசு செய்து, அரசு எத்தனை பேர்களுக்குச் சலுகை அளித்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை :** தலைவரவர்களே, யார், யார் இதிலே முறையாக அங்கம் பெற்றிருக்கிறார்கள் என்ற தகவல் இல்லை. பொதுவாக தமிழ் நாட்டில் ஊனமுற்றோர்கள் என்ற அடிப்படையில் இருக்கிற எண்ணிக்கையினுடைய விகிதம் 230 ஆயிரம் ஆகும். தற்போது திட்டத்தின் பயன் பெறுகிறவர்கள் 22 ஆயிரம் பேர்கள். படித்த உடல் ஊனமுற்றோர்கள் எண்ணிக்கை 23.9 சதவீதம் ஆகும். கல்வி அறிவு இல்லாத உடல் ஊனமுற்றோர்கள் எண்ணிக்கை 69.3 சதவீதம் ஆகும். தற்சமயம் படித்த உடல் ஊனமுற்றோர்கள் எண்ணிக்கை 5.81 சதவீதமும் ஆகும். இவர்கள் எப்படி பயிற்சி பெறுகிறார்கள் என்றால், இந்தத் திட்டம் எவ்வாறு வழி வகை செய்கிறது என்றால், உற்பத்தி தொழில் கூடம் நிறுவனத்தில் இவர்கள் பயிற்சி பெறுகிறார்கள், மற்றும் தொழில் நிறுவனங்களில், அரசு போக்குவரத்து நிலையங்களிலே மற்றும் அரசுத் துறை பிரிண்டிங் பிரஸ்ஸிலே இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. கைத்தறி நெசவுப் பயிற்சி, மற்றும் மாநில அளவிலே இருக்கிற மற்ற விசைத் துறை பயிற்சிகள், சுருட்டு, பீடி போன்ற தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றன.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவரவர்களே, இந்தக் குழு எத்தனை ஊனமுற்றோர்களுக்குச் சலுகை தர வேண்டுமென்று சிபாரிசு செய்திருக்கிறார்கள். அதை அங்கீகரித்த அரசு எத்தனை பேர்களுக்கு இது வரையில் செய்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். அவர் அளித்த பதில் நான் கேட்ட கேள்விக்குப் பதில் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை :** தலைவரவர்களே, இந்தக் குழுவின் பரிந்துரை மூலம் 22 ஆயிரம் பேர்கள் பயன்பெற இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### சீர்திருத்தப் பள்ளிகள்.

*** 196. வினா—டாக்டர் எச். வி. ஹாண்டே :** மாண்புமிகு சமூகநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சீர்திருத்தப் பள்ளிகளில் தற்போது பணிபுரியும் ஆசிரியர்கள் எண்ணிக்கை என்ன?



**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை :**

| பதவி வகைகள். | பதவிகள் எண்ணிக்கை. |
|---|---|
| 1. தலைமையாசிரியர்கள் (உயர்நிலைப்பள்ளி பிரிவு-1) (நடுநிலைப்பள்ளிப் பிரிவு—6) | 7 |
| 2. பி.டி. ஆசிரியர்கள் | 8 |
| 3. மாணவர் இல்லக்காப்பாளர் உட்பட (இடைநிலைத்தர ஆசிரியர்கள்) பாலர்பள்ளி ஆசிரியர்கள் | 89 |
| 4. தமிழ் ஆசிரியர்கள், நிலை 1 | 6 |
| 5. உடற்பயிற்சி ஆசிரியர்கள் | 14 |
| 6. ஓவியப்பயிற்சி ஆசிரியர்கள் | 5 |
| 7. உயர்தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் | 29 |
| மொத்தம் | 153 |

**திரு. கே. எ. வகாப் :** இப்படிப்பட்ட அப்ரூவ்டு ஸ்கூல்களில் பி. டி. ஆசிரியர்கள் குறைவாக இருக்கிறார்கள். ராணிப்பேட்டையில் அமைச்சர் அவர்களே பார்த்திருக்கிறார்கள். பி.டி. ஆசிரியர்கள் செய்கிற சாதனை அவர்களுக்கே தெரியும். ஆகவே, பி. டி. ஆசிரியர்களை அதிகமாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை :** கல்வி சட்ட முறைப்படி கல்வி சட்டத்தை வழுவாத வகையிலே புறநகர்ப் பகுதிகளிலும், நகரப் பகுதிகளிலும் பி. டி. ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். உறுப்பினர் அவர்கள் கூறியது போல் பி. டி. ஆசிரியர்கள் போதவில்லை என்ற புகார் எதுவும் அரசுக்கு வரவில்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** சீர்திருத்தப் பள்ளிகள் எவ்வளவு இருக்கின்றன? அதிலே எவ்வளவு மாணவர்கள் இருக்கிறார்கள். மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இருக்கிற விகிதாசாரம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை :** கேள்வி ஆசிரியர்களைப் பற்றியது என்றாலும் உறுப்பினர் அவர்களுடைய சந்தேகத்தைத் தீர்க்க முற்படுகிறேன். தமிழ்நாட்டில் அரசுத் துறையின்மூலம் நேரடியாக நடைபெறுகிற பள்ளிகள் 6; தனியார் துறைப் பள்ளிகள் 14. இதிலே செங்கற்பட்டு மாவட்டத்திலே நடைபெறுகிற சீர்திருத்தப் பள்ளிகள் இரண்டில் மாணவர்கள் முறையே 689, 381 ஆகும். அரசினர் இளநிலைப் பள்ளி, ராணிப்பேட்டையில் 574 மாணவர்கள்; தஞ்சையில் 640 பேர்கள்; கடலூரில் 47 மாணவர்கள்; அரசினர் முதுநிலை, இளநிலை சீர்திருத்தப்பள்ளி சென்னையில் 301. இதற்காக அரசாங்கத்திலிருந்து செலவு செய்யப்படுகிற தொகை சென்னை 9,89,000 ரூபாய், செங்கற்பட்டு 5,85,000 ரூபாய்; ராணிப்பேட்டை 6,17,000 ரூபாய், தஞ்சை 8,31,000 ரூபாய். கடலூரில் மாணவர்களுடைய மொத்த சதவிகிதத்தின் அடிப்படையில் ஒதுக்கப்படுகிறது. சரியான எண்ணிக்கை விவரம் இல்லை. இது போலவே தனியார் நடத்தும் பள்ளிகளுக்கும் அரசு மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

### புளிய மரங்கள் வளர்ப்பு.

* 197 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் புளிய மரங்களை அதிகம் பயிரிடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** 1975-76 ஆம் ஆண்டு 696 ஹெக்டர் பரப்பளவில் புளிய மரங்கள் வளர்க்கும் திட்டம் இருக்கிறது.

**திரு. என். கிட்டப்பா :** நமது மாநிலத்திற்குத் தேவையான புளி கிடைக்காமல் பெரும்பாலும் கர்நாடகத்திலிருந்தும் கேரளத்திலிருந்தும் கொண்டு வரப்படுவதாகச் சொல்கிறார்கள். இந்தக் குறையைப் போக்க அரசினர் நெடுஞ்சாலையின் இரண்டு பக்கங்களிலும் புளிய மரங்களை வைத்தால் வடலூர் இராமலிங்க அடிகளார் கூறியதுபோல் 'கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர்தருவே' என்றது போல் நிழல் கிடைப்பதோடு புளியும் தேவையான அளவு கிடைக்குமாதலால் அதற்கு ஆவன செய்ய அரசு முன்வருமா?



**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** அதற்காகத்தான் வர இருக்கும் நிதியாண்டில் 696 ஹெக்டர் பரப்பளவில் புளிய மரங்களை வளர்ப்பதற்கான திட்டம் இருக்கிறது என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை அதிகப்படுத்த வேண்டுமென்று சொன்னால் அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** புளிய மரங்களை அதிகம் பயிரிட அரசுக்கு உத்தேசம் இருப்பதாகச் சொன்னார்கள். ஏற்கனவே நெடுஞ்சாலையில் இருக்கக்கூடிய பல புளிய மரங்கள் பலரால் வெட்டப்படுகின்ற நிலையும், ரோட்டை விஸ்தரிப்பதற்காக, உயர்த்துவதற்காக என்ற காரணங்களால் வெட்டப்படுகின்ற நிலையும் புளிய மரத்தை அதிகப்படுத்தும் திட்டம் அல்லவே. இது குறித்து அரசின் நிலை என்ன?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தவிர்க்க முடியாத காரணத்தால் ரோட்டை விஸ்தரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் இருக்கின்ற மரங்களை வெட்டித்தான் ஆகவேண்டும்.

**திரு. கு. இராசமாணிக்கம் :** புளிய மரம் குறைந்த காலத்தில் பலன் அளிக்கிறது. ஆயிரக்கணக்கான ஆண்டுகள் நிலைத்து நிற்கிறது. இன்றைய தினம் பஞ்சாயத்துகளுக்கு வருவாய் இல்லாத நிலையில் கிராமப் பஞ்சாயத்துப் புறம்போக்குகளிலும் சாலை மருங்கிலும் புளிய மரங்களை வைத்து பஞ்சாயத்துகளுக்கு வருமானத்தைத் தேடித் தர அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** புளிய மரங்களை அதிகமாக வளர்க்க வேண்டுமென்பது நல்ல திட்டந்தான். ஒவ்வொரு ஆண்டுத் திட்டத்திலும் இதற்காக எவ்வளவு நிதி ஒதுக்க முடிகிறதோ அந்த அளவுக்கு வளர்க்கப்படுகிறது. அதையொட்டித்தான் வர இருக்கிற ஆண்டில் 696 ஹெக்டரில் வளர்க்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

### *Rosewood cultivation*

* 198 Q.—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state—

(a) whether Rosewood is cultivated in this State;

(b) if so, the details thereof; and

(c) the incentives offered for the cultivation of Rosewood?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ, இ & உ) ஆம். இம்மரங்கள் முதிர்ச்சி அடைவதற்கு 120 ஆண்டுகள் வரை ஆவதால், அதிக அளவில் வனத்துறையில் இவைகளை வளர்க்கவில்லை. ஆனால் இம்மரங்களுக்கு, இப்பொழுது, வெளிநாடுகளில் அதிகத் தேவை இருப்பதால், தற்பொழுது அதிக அளவில் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இம்மரங்களை வளர்ப்பதற்கு 120 ஆண்டுகள் வரை ஆவதால், தனிப்பட்டவர்களுக்கு ஆர்வம் இல்லை. ஆகவே எவ்வித ஊக்கமும் கொடுப்பதற்கு வகையில்லை.

**திரு. என். கிட்டப்பா :** தேக்க மரங்களை ஊக்கமுடன் வளர்க்க தஞ்சை மாவட்டத்திற்கு அரசு ஏதேனும் சலுகை கொடுத்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** முன்பு தேக்க மரத்திற்கு அதிகம் கிராக்கி இல்லாத காரணத்தால் தனித் திட்டமாக கவனிக்கப்படவில்லை. ஆனால் சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் வெளிநாட்டுச் சந்தையில் இது அதிக அளவில் விலை போவதாகக் குறிப்பு இருக்கிறது. சென்ற ஆண்டு 25 லட்சம் ரூபாய் அளவுக்கு இங்கிருந்து இந்த மரங்கள் விற்கப்பட்டிருக்கின்றன. அதையொட்டி இந்த ஆண்டு புதிய திட்டம் வகுக்கப்பட்டு மேலும் அதிக அளவுக்கு இந்த தேக்க மரங்களைப் பயிரிடத் திட்டம் இருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, rosewood tree is a very costly tree and there are a number of such trees in Hosur and Denkanikottah forest and also in the forests of Mysore State. Each tree costs thousand of rupees. There is a lot of demand for the same in foreign countries and also in other parts of our own country. So, will the Hon. Minister for Commercial Taxes instruct the officers to plant more such trees in places where they grow well.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** வன இலாகாவில் ஒவ்வொரு வகை மரங்களை வளர்க்கவும் ஆண்டுத் திட்டங்களில் குறிப்பிட்ட அளவு நிதி ஒதுக்கப்படுகிறது. அந்த வகையில் இந்த ஆண்டு எந்த அளவுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதோ அந்த அளவுக்குப் பயிரிடப்படும். அதற்கு மேல் அதிக அளவில் வளர்க்கும் திட்டம் இல்லை.



**திரு. தொ. ப. சீனிவாசன் :** வட ஆற்காடு மாவட்டத்தில் ஜவ்வாது மலையில் சந்தன மரக் காடுகள் அதிகமாக இருக்கின்றன. தேக்க மரங்களும் பயிரிட வாய்ப்பு இருக்கிறது. அங்கு தேக்க மரங்களை வளர்க்க சிறப்புத் திட்டம் அமல்படுத்தப்படுமா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தேக்க மரங்களை எந்த எந்த இடங்களில் வளர்ப்பது என்பது திட்டத்தை நிறைவேற்றும்போது பரிசீலிக்கப் படும்.

## விரைவுப் பேருந்துகளில் கம்பியில்லாச் செய்திக் கருவிகள்

*** 199 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசினால் நடத்தப்படும் நெடுந்தூர எக்ஸ்பிரஸ் பஸ்களில் வயர்லெஸ் கருவிகள் வைக்க அரசிடம் செயற்குறிப்பு யாதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) ஆம்.

(இ) ஏதாவது ஒரு பகுதியில் ஓடும் விரைவுப் பேருந்துகளில் எடுத்துக்காட்டாக, சென்னைக்கும் திருச்சிராப்பள்ளிக்கும் அல்லது சென்னைக்கும் மதுரைக்குமிடையே ஓடும் விரைவுப் பேருந்துகளில் கம்பியில்லாச் செய்திக் கருவிகளைப் பொருத்துவது என்றும் இதனைச் சோதனை ஏற்பாடாகக் கொண்டு, பின்னர், மாநிலத்திலுள்ள பிற பகுதிகளுக்கும் நீட்டிப்பது என்றும் கருதப்பட்டுள்ளது.

**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** இந்தத் திட்டம் எப்போது நிறைவேற்றப் படும் ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இது சம்பந்தமாக ஏற்கனவே கர்நாடக மாநிலம் பெங்களூரில் உள்ள பாரத் எலக்ட்ரானிக்ஸ் என்ற நிறுவனத்தோடு பேச்சு வார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** ஒரு பஸ்ஸில் ஒயர்லெஸ் செட் வைக்க எவ்வளவு செலவாகும் ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அத்தகைய விவரங்கள் இனிமேல் முடிவு செய்யப்பட வேண்டிய ஒன்று.

[1975 மார்ச் 5

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நெடுந்தூரம் செல்லக்கூடிய எக்ஸ்பிரஸ் பஸ்கள் பிரேக் டவுன் ஆனவுடன் உடனடியாக தகவல் சொல்லி பாசஞ்சர்களை வேறு ஒரு பஸ்ஸில் ஏற்றிக்கொண்டு செல்ல என்ன ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** அதற்காகத்தான் இந்த ஒயர் லெஸ் கம்யூனிகேஷனை நாம் தமிழகத்தின் விரைவுப் பேருந்துகளில் பொருத்துவது பற்றிய திட்டத்தை மேற்கொண்டிருக்கிறோம்.

### தஞ்சாவூர் மாவட்டத்தில் புதிய பேருந்து வழித்தடங்கள்.

* 200. **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் புதிய பஸ் ரூட்டுகளை எந்தெந்தப் பகுதிகளில் துவங்க அரசு ஆலோசித்துள்ளது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தஞ்சை மாவட்டத்தில் 94 புதிய பேருந்து வழித்தடங்களைத் துவங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளின் விபரம்:—

(1) தஞ்சாவூர் பஸ் நிலையத்திலிருந்து சதுராப்பட்டி, திருமானூர், கோட்டைத்தெரு, மீலட்டூர், கணபதி அக்ரகாரம், சேதுராயன் குடிக்காடு.

(2) கும்பகோணம் பஸ் நிலையத்திலிருந்து திருப்பனந்தாள், ஐயம் பேட்டை, திருவைகாவூர், ஆடுதுறை, நிலதநல்லூர்.

(3) மன்னார்குடி பஸ் நிலையத்திலிருந்து திருப்பத்தூர், பெருகவளந் தான், கருவக்குறிச்சி, புல்லவராயன் குடிக்காடு.

(4) சீர்காழியிலிருந்து சிதம்பரம், மாயவரம், ஆக்கூர், புதுப்பட்டினம், காவிரிப்பூம்பட்டினம்.

(5) மாயவரத்திலிருந்து விருத்தாசலம், சிதம்பரம்.

(6) மாயவரம் பஸ் நிலையத்திலிருந்து குத்தாலம், மணல்மேடு போன்ற இடங்களுக்கும்.

(முற்பகல் 10-00)

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, இந்த புதிய பஸ் ரூட்டுகள் எந்த அடிப்படையில் துவங்கப்படுகிறது என்பதை அறிவிக்க இயலுமா? அதைப் போலவே தஞ்சை மாவட்டத்தில் பல முக்கிய கிராமங்களின்



1975 மார்ச் 5]

இணைப்புச் சாலைகள் மிகக் குறுகலாக இருக்கிறது என்கிற காரணத்தால் பஸ்களை விட அனுமதி மறுக்கப்படுகிறது. எனவே அந்தப் பகுதியில் மிக அதிக அகலமில்லாத, ஓரளவிற்கு அதிக அகலமுள்ள சாலைகளில் மினி-பஸ்களை யாவது விட திட்டமிட்டு, அதை செயல்படுத்த அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, மினி-பஸ்களைப் பொறுத்தவரையில், இப்போது தயாராகிற மினி-பஸ்களின் அகலமும், சாதாரண பஸ்களின் அகலமும் ஒன்றுதான் என்று சொல்வதால், அவைகள் எந்த அளவுக்குப் பயன்படும் என்று சொல்ல முடியாது. நீளத்தை வேண்டுமானால் குறைக்கலாம். அது சம்பந்தமாக போக்குவரத்துத் துறையில் ஆராய்ந்தபோது நீளத்தைக் குறைத்து பஸ்களை விடுவதை விட, சாதாரண பஸ்களையே விடலாம் என்ற கருத்தைத்தான் மேற்கொண்டு இருக்கிறோம்.

புதிய பேருந்து வழித்தடங்கள் உருவாக்குகிறபோது, பொதுமக்களின் கோரிக்கையின் பேரிலோ அல்லது பொதுமக்களின் பிரதிநிதிகள்—ஒன்றியத் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள்—மனுவின் பேரிலோ அல்லது மோட்டார் வாகன ஆய்வாளர்கள் ஒவ்வொரு வழித் தடத்திலும் எந்த அளவுக்கு பயணிகள் செல்கிறார்கள் என்று கணித்து வைத்துள்ள எண்ணிக்கையின் அடிப்படையிலும், புதிய வழித் தடங்கள் உருவாக்கப்படுகின்றன.

ஆனால் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இப்போது ஒரு புதிய திட்டத்தைக் கடந்த நான்கு மாதங்களாக பரிட்சார்த்தமாக செய்துகொண்டு வருகிறோம். அது என்னவென்றால், கம்ப்யூட்டர் வைத்து, ஒரு மாவட்டத்தில் பயணம் செய்யவேண்டிய மக்கள் தொகை எவ்வளவு அந்த மாவட்டத்தில் இருக்கிறது, எத்தனை கிராமங்களில் இருந்து மக்கள் பயணம் செய்கிறார்கள், பேருந்துகளின் எண்ணிக்கை எவ்வளவு, ஒரு பேருந்து குறைந்தது 400 அல்லது 500 கிலோ மீட்டர் ஓடவேண்டும் என்ற அடிப்படையில் இவைகளை யெல்லாம் வைத்து, மின் அணுக் கருவி மூலம், கம்ப்யூட்டர் மூலம் சீரமைப்புச் செய்யலாம் என்பதை பரிட்சார்த்தமாக செய்து வருகிறோம். இன்னும் சொல்லப் போனால், நாம்தான், தமிழ் நாட்டில்தான், பரிட்சார்த்தமாக முதன் முதலில் செய்யவேண்டும் என்று தொழில் நுட்ப வல்லுநர்களுக்கு தெரிவித்து இருக்கிறோம். அவர்களும் தஞ்சை மாவட்டத்தில் கடந்த 4 மாதங்களாக ஆய்வு செய்து கொண்டு வருகிறார்கள். இதிலே வெற்றி கிடைக்குமானால், புதிய வழித்தடம் அமைப்பதிலும், இருக்கிற பேருந்துகளை நல்ல முறையில் பயன் படுத்துவதிலும் ஒரு புரட்சிகரமான முன்னேற்றத்தை நம்மால் காணமுடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ந. சோமசுந்தரம் : தலைவரவர்களே, இந்த புதிய வழித் தடங்கள் அறிவிக்கப்பட்டதில், பஸ்களை விடுவதற்கு தனியாருக்கு அனுமதி வழங்கப்படுமா அல்லது புதிய வழித்தடங்களில் அரசு பஸ்கள் விட அரசு உத்தரவிட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, புதிய வழித் தடங்கள் அனைத்திலும் அரசு பஸ்களை விடுவது என்றால் இன்றுள்ள நிதி நிலையில், அரசு போக்குவரத்துக் கழகங்களிலே விடக்கூடிய சாத்தியம் இல்லை. அதனால் தான் நாம் அதைப் படிப்படியாக மேற்கொள்ளவேண்டுமென்று, ஒவ்வொரு மாவட்டமாக தேசீயமயமாக்க வேண்டுமென்று சட்டத்தைக் கொண்டு வந்தோம். அந்தச் சட்டம் சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிறது. அநேகமாக இந்த மார்ச்சு மாதத்திலேயே தீர்ப்புக் கிடைக்கும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

திரு. எஸ். வடிவேல் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் தெரிவித்தபடி சீர்காழியிலிருந்து செல்லும் பஸ்ஸை, கொள்ளிடம், மாதரைவேலூர் வழியாக விடுவதற்கு அந்தத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த யோசனை கருத்தில் கொள்ளப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, இந்த பஸ்களை தேசியமயமாக்கும் சட்டமீது சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதைச் சீக்கிரமாக எடுத்துக்கொள்ளவேண்டுமென்று ஏதாவது பெட்டிஷன், விண்ணப்பம் அரசு சார்பாக தாக்கல் செய்யப்பட்டதா அல்லது இதிலே காலதாமதம் ஆகட்டும் என்று போசாமல் இருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மத்திய சர்க்காரின் கருணையோடு காலதாமதம் ஆகிக்கொண்டு இருக்கிறது

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, கம்ப்யூட்டர் வைத்து கணக்கு எடுத்துக்கொண்டு வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். புதிய வழித்தடங்கள் தேவையா என்பதை ஆராய தஞ்சை மாவட்டத்தில் மின் அறு கருவி வைத்து ஆய்வு செய்வதாகச் சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தில் தற்போது ஓடிக்கொண்டிருக்கிற போக்குவரத்துக்கள் நடைமுறையில் போதவில்லை. சோழன் போக்குவரத்து மேனேஜிங் டைரக்டர்



சரிவர இயங்கவில்லை என்று பொதுமக்கள் சொல்கிறார்கள், மக்கள் பிரதிநிதிகள் சொல்கிறார்கள். ஆகவே, சோழன் போக்குவரத்து மேனேஜிங் டைரக்டர் அவர்களை வேறு இடத்திற்கு மாற்றிவிட்டு, அந்த இடத்தில் ஒரு கம்ப்யூட்டர் வைக்க அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அந்தக் கேள்விக்கு இடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 3. அறிவிப்பு.

### பேரவை அலுவல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டப்பேரவையின் நிகழ்ச்சி விவரம் ஏற்கனவே உறுப்பினர்களுக்கு அச்சிட்டு அனுப்பியவாறு நடைபெறும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## (4) 1975-76-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, 1975-76-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் பேரில் . . .

திரு. கோவை செழியன் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இன்று நடக்கும் இந்த விவாதத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேசவேண்டுமென்று பெயர் கொடுத்து இருக்கிறார்கள். எங்களுடைய கட்சித் துணைத் தலைவர் அவர்கள், மாண்புமிகு ஆலடி அருணா அவர்களுக்கு அதிக நேரம் தந்தால் எங்களில் ஒரு உறுப்பினர் பேசுவதைக் குறைத்துக்கொள்கிறோம் என்று சொன்னார்கள். நீங்கள் அதற்கு ஒன்றும் பதில் சொல்லவில்லை. திரு. ஆலடி அருணா அவர்கள் நேற்று 31 நிமிடம் பேசினார் என்றாலும், 16 நிமிடம்தான் அவர் பேச்சு இருந்தது. மற்றவர்கள் மிகுதி நேரத்தை எடுத்துக்கொண்டார்கள். அதேபோல் திரு. சுப்பு அவர்களும் பேசியிருக்கிறார்கள். இன்று நாங்கள் பேசுவதற்கும் அந்த அடிப்படையில் அனுமதி வழங்கவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது தான் உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டரா ?

**திரு. கோவை செழியன் :** எங்களுக்கு பேச அனுமதி தரவில்லையென்றால் அது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லையா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர்கள் பேசுவதற்கு எவ்வளவு நேரம் கொடுக்கவேண்டுமென்பது எல்லாம் பேரவைத் தலைவரின் உரிமையாகும். அவர் இவ்வளவு நேரம் பேசினார், ஆகவே எங்களுக்கும் அவ்வளவு நேரம் வேண்டும் என்று கேட்க உரிமை இல்லை. இதிலே எந்தவிதமான பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை. மற்ற உறுப்பினர்களுக்கு பேசுவதற்கு எந்த அளவுக்கு நேரம் கொடுக்கப்படுகிறதோ, அந்த அளவுக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கும் பேச நேரம் கொடுக்கப்படும். திரு. மாரிமுத்து அவர்கள் பேசுவார்கள்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவரவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையை ஆழ்ந்து படித்துப் பார்க்கிறபோது, சென்ற ஆண்டைவிட குறைந்த அளவிலே இருக்கக்கூடிய ஒரு திட்டம் என்பதை நான் முதலிலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நடப்பு ஆண்டிலே 510 கோடி ரூபாய் அளவுக்கு நாம் செலவழித்து இருக்கிறோம். வரும் ஆண்டிற்கு 537 கோடி ரூபாய்க்குச் செலவழிக்க இருப்பதாக இந்த நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டு இருக்கிறது. ஆனால், இந்த இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு அரசு ஊழியர்களுக்காக அதிகப்படியாக கொடுக்கிற ஊதிய உயர்வின் காரணமாக 32 கோடி ரூபாய் அதிகமாக செலவழிப்பதன் மூலம், அதைக் கழித்துப் பார்ப்போமானால் 505 கோடி ரூபாய்க்குத்தான் சாதாரணமாகச் செலவழிக்கக்கூடிய ஒரு பட்ஜெட்டாக, நிதிநிலை அறிக்கையாக இது இருக்கிறது. ஆகவே, சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு நாம் நாட்டு மக்களுக்காகச் செலவழிக்கும் தொகை குறைந்து இருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்த முதலீட்டுச் செலவினங்களிலே நாம் போதிய அளவு நிதி ஒதுக்க முடியாத நிலையில் இந்த நிதிநிலை அறிக்கை காணப்படுகிறது. இதிலே "எகனாமிக்ஸ் சர்விசஸ்" என்ற பகுதியை எடுத்துப் பார்த்தால் சென்ற ஆண்டு 147 கோடி செலவழித்து இருக்கிறோம், இந்த ஆண்டு 131 கோடி தான் செலவழிக்க இருக்கிறோம். இந்த நிதிநிலை அறிக்கையில் முக்கி



யமாக 'எகனாமிக்ஸ் சர்விஸ், சோசல் சர்விஸ்' என்பதற்கு அதிகமாகச் செலவழித்து இருந்தால், பொருளாதார வளர்ச்சிக்கு, முதலீடு செய்கிற பொருளாதார திட்டங்களுக்கு நாம் செலவழித்து இருந்தால், தற்போது இருக்கும் சூழ்நிலையை மாற்றுவதற்கு உதவியாக இருந்து இருக்கும். ஆனால், சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு நாம் 16 கோடி குறைத்து செலவழிக்க இருப்பது வருந்தத்தக்க ஒன்றாகும். இந்த மாதிரி எல்லா வகையிலும் இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கிறபோது, சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு நாம் செலவழிக்கிற தொகை எல்லா இனங்களிலும் குறைந்து இருக்கிறது. அதனால் நாட்டு மக்களுக்கு சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு குறைந்த பலன்தான் கிடைக்கும் என்ற அளவில் இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது என்ற காரணத்தால், இது பாராட்டுவதற்குரிய ஒரு நிதிநிலை அறிக்கை இல்லை என்பதை முதலில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு நாட்டிலே இருக்கின்ற பொருளாதார நிலைமையை எடுத்துப் பார்க்கின்றபோது ஒரு சங்கடமான சூழ்நிலை இருக்கிறது என்பதை நாம் எல்லோரும் ஒத்துக்கொள்ள வேண்டும். விலைவாசி ஏற்றம் இன்றைக்கு தேசத்திலே போடுகின்ற திட்டத்தையெல்லாம் பாதித்திருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அவர்களுடைய உரையிலே குறிப்பிடுகின்றபோது மத்திய அரசு தன்னுடைய ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தைக் காலத்தில் வரையறுக்காமல், அந்தத் திட்டம் எவ்வளவு என்று வரையறுத்துக் கூறாமல் இருப்பதன் காரணமாக மாநில அரசு திட்டங்களை ஒழுங்காக போட முடியவில்லை என்பதைப்பற்றி குறிப்பிடும்போது இதில் மத்திய சர்க்கார் ஏதோ தவறு செய்கிறது என்ற ஒரு எண்ணம் ஏற்படுகின்ற வகையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது மத்திய சர்க்காரின் தவறல்ல. திட்டத்தை ஒத்திப் போடுவதால் மத்திய ஆட்சியில் உள்ள கட்சிக்கோ, அல்லது சர்க்காருக்கோ எந்தவிதமான லாபமும் கிடையாது. ஆனால், நாட்டிலே இருக்கிற விலைவாசி ஏற்றமும், பொருளாதார நெருக்கடியும் அந்த அளவிற்கு முடிவிற்கு வரமுடியாமல் இருக்கிறது என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

இன்று தமிழ்நாட்டை எடுத்துக்கொண்டால் இந்த வருஷம் இந்த அளவிற்கு வறட்சி ஏற்படும் என்பதை நாம் யாரும் எதிர்பார்த்தது கிடையாது. இந்த மாதிரி ஏற்படுகிற பல எதிர்பாராத காரணங்களின் விளைவாக சங்கடமாக இருக்கிற காரணத்தாலே கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். விலைவாசி ஏறுவதால் என்ன விளைவு என்று

பார்த்தால் ஒரு பக்கத்திலே அரசு ஊழியர்களாக இருந்தாலும், தனியார் துறை ஊழியர்களாக இருந்தாலும் விலைவாசி உயர்விற்கேற்ப ஊதிய உயர்வு வேண்டுமென்று கோரி போராடுகிற சூழ்நிலை இருக்கிற காரணத்தாலே ஒரு பக்கத்திலே விலைவாசி உயர்வு, அதற்கேற்ப ஊதிய உயர்வு, மறுபடியும் விலைவாசி ஏற்றம், ஊதிய உயர்வு இம்மாதிரி ஒரு சைக்கிள் தொடர்ந்து நடைபெறுவதன் நிமித்தமாக இது எந்த அளவில் பொருளாதாரத்தை சீர்குலைக்கப் போகிறது என்று சங்கடப்படக்கூடிய அளவுக்கு ஒரு மோசமான சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறதென்பதை நாம் மறுத்துவிட முடியாது. அதைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சரவர்கள் உரையிலே குறிப்பிட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன்.

அதிலே 'நேஷனல் வேஜ் அண்டு இன்கம் பாலிசி' ஒன்றை அமுலாக்க வேண்டுமென்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நிச்சயமாக இதைச் செய்ய வேண்டும். இதை ஒரு பத்து ஆண்டுகளுக்கு முன்பே செய்திருந்தால் இவ்வளவு நெருக்கடி ஏற்பட்டிருக்காது. இதைச் செய்யாவிட்டால் பொருளாதாரத்தை ஒரு கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியாது. அப்படி கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முடியாத நிலை இருந்த காரணத்தால்தான் சீர்கேடு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, 'நேஷனல் வேஜ் அண்டு இன்கம் பாலிசி' அமுலாக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இதை மாநில சர்க்கார் மட்டும் செய்ய முடியாது, மத்திய சர்க்காரும் சேர்ந்து செய்ய வேண்டியது ஒன்று.

ஆகவே, ஆளும் கட்சி கேட்கிற மாநில சுயாட்சி கிடைத்தாலுங்கூட நாம் மட்டும் இதைச் செய்ய முடியாது. தேசிய அளவிலேதான் இதைக் கொண்டு வர முடியும். இதற்கு விரைவிலேயே மத்திய சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்கள் என்று நாம் நம்பலாம். ஆனால், அதுமட்டும் போதாது. விலைவாசியை நாம் கட்டுப்பாட்டிற்குள் வைக்கவில்லை என்று சொன்னால் எவ்வளவு தூரம் ஊதியத்திற்கும், வருமானத்திற்கும் கட்டுப்பாடு விதித்தாலுங்கூட விலைவாசி உயர்வு அதைத் தகர்த்துவிடும் என்ற காரணத்தால் 'நேஷனல் வேஜ், இன்கம் அண்டு ப்ரைஸ் பாலிசி' இந்த மூன்றையும் அமுலாக்க வேண்டுமென்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே சமயத்தில் இந்த மூன்று கொள்கையை அமுலாக்குவதன் மூலம் பொருளாதார சிக்கலைத் தீர்த்துவிடமுடியுமா என்று பார்த்தால் முடியாது. உற்பத்தி பெருக்கம் அவசியம். இன்று உற்பத்திப் பெருக்கம் என்று எடுத்துக் கொண்டால் தொழில் துறை உற்பத்திப் பெருக்கமும், விவசாயத்துறை உற்பத்திப் பெருக்கமும் அவசியம். தொழில்துறை உற்பத்திப் பெருக்கத்திற்கு





இடையூறாக மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. ஆகவே, தொழில்துறை உற்பத்திப் பெருக்கம் செய்யவேண்டுமென்றால் மின்சார உற்பத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். மத்திய அரசும் அப்படிக் கொடுக்க வேண்டுமென்றுதான் முடிவெடுத்து இருக்கிறார்கள். நம்முடைய அரசும் அதை உணர்ந்திருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்.

மின்சார உற்பத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காமல் தொழில் உற்பத்தி சுணக்கத்தை நாம் தடுத்து நிறுத்திவிட முடியாது. மின்சாரம் இல்லாத காரணத்தால் தொழிற்சாலைகள் மூடப்படுவதன் மூலம் என்ன விளைவு ஏற்படுகிறது என்று பார்த்தால் ஒரு பக்கத்தில் தொழிலாளர்களுக்கு வேலை கிடையாது, கிளர்ச்சி, லே-ஆப் இம்மாதிரி பல்வேறு வகையான கேடுகள் நாட்டிற்கு ஏற்பட்டு அதனால் சங்கடங்கள் ஏற்படுகிற காரணத்தால் அதில் கவனம் செலுத்துவதோடு விவசாய விளை பொருட்களை அதிகரிக்கவேண்டும். அதற்காக நாம் எடுக்கவேண்டிய நடவடிக்கை என்னவென்று பார்த்தால் நாம் உரங்களை போதிய அளவு உற்பத்தி செய்கிறோம், நவீன முறைகளைக் கையாள்வதற்கு விவசாயிகளுக்கு வழி சொல்லிக் கொடுக்கிறோம் என்பது மாத்திரம் போதாது. நில உடைமை உறவுமுறை இருக்கிறதே அதிலே பெருமளவில் மாறுதலைச் செய்ய வேண்டும். ஆனால், இதுவரையில் அதைச் சரியாக செய்ததே கிடையாது. அதிலே ஒரு முயற்சி எடுத்தாலுங்கூட அந்த முயற்சி 'வெஸ்டட் இண்டரஸ்ட்ஸ்' இடையூறாக இருந்து அதனால் பலன் கிடைக்காமல் தடுத்து நிறுத்துகிறார்கள்.

ஆகவே, நாம் நில உடைமை உரிமைக்கு சரியான முறையில் மாற்றம் காணவேண்டும். அதைச் செய்யாமல் உற்பத்திப் பெருக்கம் என்று வாயால் சொல்வதால் மட்டும் உற்பத்திப் பெருக்கம் வந்துவிடாது. அது இன்னொரு கொள்கையோடு இணைந்திருக்கிறது. இன்று நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் என்று இருப்பதுங்கூட உற்பத்திப் பெருக்கத்திற்கு 'மேன்-பவரை' மனித சக்தியைப் பயன் படுத்த வேண்டிய அளவிற்கு பயன்படுத்த முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. கடந்த பல ஆண்டுகளாக மனித சக்தி பூராவாகப் பயன்படுத்துவதற்கு ஒரு முழு திட்டம் அமையவில்லை என்று இந்த சந்தர்ப்பத்திலே நான் எடுத்துச் சொல்ல வேண்டிய முக்கியமான ஒன்று என்று கருதுகிறேன். இந்த மனித சக்தியை எந்தத் துறையிலே அதிகமாகப் பயன்படுத்த முடியுமென்று சொன்னால் விவசாயத் துறையிலேதான் பயன்படுத்த முடியுமே தவிர மற்றெந்தத் துறையிலேயும் பயன்படுத்த முடியாது. அதற்கான முழு வசதியும், பண வசதியும் இல்லாத காரணத்தாலே இந்த விவசாயத்துறையை

நம்பித்தான் மனித சக்தியைப் பயன்படுத்த ஒரு பெரும் திட்டத்தை நாம் ஏற்படுத்தியாகவேண்டும். அது இல்லை என்று சொன்னால் உற்பத்திப் பெருக்கம் என்பது வீண் முயற்சிதான்.

விவசாயத்துறையிலே இருக்கிற சங்கடங்கள் என்னவென்பதைப்பற்றி நாம் ஆராய்ச்சி செய்யவேண்டும். நில உரிமை முறையிலே இரண்டுவித உரிமை இருக்கிறது. ஒன்று சொந்த உரிமை, இன்னொன்று குத்தகை முறை. செலெக்ட் கமிட்டியில் நாங்கள் சாட்சியம் கேட்கிறபோது ஒருவர் ஒரு கருத்தைச் சொன்னார். நிலம் அரசுக்குச் சொந்தம். அரசு நமக்குப் பட்டா கொடுத்திருக்கிறது. நான் இப்போது சொல்வது யாரோ ஒரு கம்யூனிஸ்டோ அல்லது ஒரு சோசலிஸ்டோ சொன்ன வாதம் அல்ல. ஒரு தர்ம ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர் சொன்னார். சொத்தை அனுபவிக்க பட்டா கொடுத்திருக்கிறோம். அதனால் அதை தரிசாகப் போட அவருக்கு உரிமை இருக்கிறது என்று அர்த்தமல்ல. அப்படி உரிமை இருக்கிறது என்று சொன்னால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. பொருட்களின் உற்பத்தி பெருக வேண்டும். நிலம் உற்பத்திப் பெருக்கத்திற்கான ஒரு சாதனம். ஆகவே, நிலத்தை தரிசாகப் போட யாருக்கும் உரிமை கிடையாது என்பது என்னுடைய கருத்து.

இந்த அறிக்கையில் 11 லட்சம் ஏக்கர் நிலத்தை அரசு பண்ணை கார்ப்பரேஷன் மூலம் எடுத்து நடத்தப்போவதாக சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் இன்னும் சரியான முறையில் சாகுபடி செய்யாமல் தரிசாக விடப்பட்டிருக்கிற நிலம் எவ்வளவு இருக்கும் என்பதை நம்மால் யூகிக்க முடியவில்லை. கிட்டத்தட்ட ஒரு கோடியே 40 லட்சம் ஏக்கர் நிலம் சாகுபடியில் இருப்பதாகச் சொல்கிறார்கள். அவை எல்லாம் விளையக்கூடிய நிலையில் இருக்கிறதா என்று பார்த்தால் அதுவும் இல்லை. ஆகவே, எங்கெல்லாம் நிலம் தரிசாகக் கிடக்கிறதோ, அதற்கு எந்தச் சட்டம் தடையாக இருந்தாலும், தரிசு நிலத்தை விளைநிலமாக்குவதற்கு எந்தச் சட்டம் 'தடையாக இருந்தாலும் அந்தச் சட்டம் தகர்த்தெறியப்பட வேண்டும். இந்த நாட்டிலே பட்டினி கிடக்கும் மக்கள் நலனைக் கருதி, வேலை இல்லாமல் இருக்கும் மக்கள் நலனைக் கருதி இந்தச் சட்டத்தை வெகு வேகமாக அமுலாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



மனித சக்தியை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு கிராம மட்டத்திலிருந்துதான் திட்டம் போடப்பட வேண்டும். மேல் மட்டத்திலிருந்து அதற்கான திட்டத்தை போட முடியாது. இந்தக் கருத்தை இதற்கு முன்னாலும் பல முறை நான் பேசியிருக்கிறேன். இதை அடிக்கடி சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் என்னுடைய வாதத்திற்கு மீண்டும் இங்கே குறிப்பிட வேண்டியிருக்கிறது.

திட்டம் என்ன முறையிலே போடப்பட வேண்டும்; அதனால் எத்தனை பேருக்கு வேலை கிடைக்கும், என்பதைப் பார்த்து கிராம மட்டத்திலே கிராமத்திற்கு ஒரு திட்டம் என்ற அடிப்படையிலே திட்டங்கள் கீழ் மட்டத்திலிருந்து உருவாக்கப்பட வேண்டும். அதைப் பற்றி இந்த அவையிலேயே நான் பேசியிருக்கிறேன். பஞ்சாயத்துக்களில் இன்றைக்கு இருக்கிற அமைப்பின் அடிப்படையை மாற்றி அமைக்க வேண்டும். 300 பேர், 400 பேர், 500 பேர் அல்லது ஆயிரம் பேர் ஜனத்தொகை இருந்தால் அது ஒரு பஞ்சாயத்து என்று இருக்கக் கூடாது. 10,000 பேர் அல்லது 5,000 பேர் கொண்ட ஒரு யூனிட்டாக இருக்க வேண்டும். நாடு முழுவதும் அந்த யூனிட் முறை பரவலாக்கப்பட வேண்டும். அந்த யூனிட் எப்படி இருக்க வேண்டுமென்றால், அந்த யூனிட்டிலுள்ள மக்கள் தேவைகளை அங்கேயே பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்க வேண்டும். அங்கே இருக்கிற மக்கள் எல்லோருக்கும் அங்கேயே வேலை வாய்ப்பு கிடைக்க வேண்டும். மக்களுக்கு என்னென்ன தேவைப்படுகிறதோ அத்தனையும் அங்கேயே உற்பத்தியாக வேண்டும். அப்படிப்பட்ட திட்டங்களை உருவாக்கினால், வேலையில்லாத் திண்டாட்டத்தை எப்படி போக்குவது, எந்த வகையிலே உற்பத்தியைப் பெருக்குவது என்ற சிந்தனை மக்களுக்கு ஏற்படும். அந்த சிந்தனையை தூண்டும் வகையில் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்; உருவாக்கப்படும் திட்டங்கள் செயலாக்கப்பட வேண்டும்.

அதற்கு முதலீடு கோடிக்கணக்கில் தேவையில்லை. அங்கே 'மனித சக்தி' இருக்கிறது, நிதி வாய்ப்பும் இருக்கிறது. இந்த இரண்டும் இணைந்தால் வேலை வாய்ப்பு ஏற்படும். உழைக்கும் மனிதர்கள் இருக்கிறார்கள். உழைக்க நிலம் இருக்கிறது. இந்த இரண்டையும் இணைக்க வேண்டும்.

என்னிடம் 5 ஏக்கர் நிலம் இருக்கிறது. ஆனால் அதைப் பண்படுத்த போதிய பண வசதி இல்லை. இன்னொருவரிடம் பணம் இருக்கிறது; ஆனால் நிலம் இல்லை. மனித சக்தி இருக்கிறது; ஆனால் அந்த சக்தியைப் பயன்படுத்திக்கொள்ள வழியில்லை என்றால் யாரிடம் எது இருந்தும் பயனில்லை.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1975 மார்ச் 5

ஆகையால்தான் உழைப்பு சக்தி, உழைக்க நிலம் இந்த இரண்டையும் இணைக்க வேண்டுமென்று சொல்கிறேன். அதற்கு பஞ்சாயத்து அமைப்பு ஒரு யூனிட் அமைப்பாக இருக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் கிராம மட்டத்தில் இருந்து திட்டங்கள் உருவாக்க வேண்டும்.

மாநில அளவில் இங்கே ஒரு திட்டக் கமிஷனைப் போட்டார்கள்; அதை எல்லோரும் பாராட்டினோம். அதைப்போலவே மாவட்ட அளவில் திட்டக் கமிஷன் போடப்பட்டு, இப்போது கைவிடப்பட்டதாக அறிகிறேன். அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. மாவட்ட அளவிலேயே திட்டமிடப்பட முடியவில்லை என்றால் எப்படி கிராம அளவிலே போடப்போகிறீர்களா? இனி மேலாவது கிராம அடிப்படையில் திட்டமிடும் கொள்கையை கண்டிப்பாக உருவாக்க வேண்டும்; நாட்டின் நலனை கருதியாவது அதைச் செய்ய வேண்டும்.

திரு. கு. காமாட்சி: அப்படியானால் மைனர் பஞ்சாயத்துப் போர்டை எடுத்துவிட வேண்டுமென்று சொல்கிறீர்களா?

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மைனர், மேஜர் என்று நான் சொல்லவில்லை. 300, 500 மக்கள் தொகை என்று பிரிக்காமல் 10,000, 5.000 மக்கள் தொகை கொண்ட ஒரு யூனிட்டாக பிரிக்க வேண்டும். அப்படியானால்தான் அங்கே இருக்கிற மக்கள் ஒருவருக்கொருவர் தொடர்பு கொண்டு, ரோடு வசதி, கிணறு வசதி, தண்ணீர் வசதி, பாசன வசதி போன்ற எல்லா வசதிகளையும் அவர்களாகவே செய்துகொள்ள முடியும்.

திரு. கு. காமாட்சி: நீங்கள் சொல்வதைப்போல செய்ய வேண்டுமானால் பல மைனர் பஞ்சாயத்துக்கள் சேர்ந்தால்தான் ஒரு யூனிட் உருவாகும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், ஒரு கிளாரிபிகேஷன். இப்போது சுமார் 370 பிளாக்குகள் இருக்கின்றன. அதை எல்லாம் ஒரு லெவல் படுத்தி சின்ன பிளாக், பெரிய பிளாக் என்று இல்லாமல் ஒரே சீராக்கினால் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அதை கட்சிக் கூட்டத்தில் கலந்து பேசிவிட்டு இங்கே சொல்கிறார்களா அல்லது கலந்து பேசாமலே சொல்கிறார்களா?

திருமதி த. ந. அனந்தநாயகி: இது ஒன்றும் பாலிசி மாட்டர் இல்லை. ஒரு விளக்கத்திற்காகக் கேட்டேன். இந்த 370 யூனிட்டுகளையும் சீராக்கி அமைக்கலாமே என்று சொன்னேன்.



1975 மார்ச் 5]

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: நான் என்னுடைய கருத்தை சொன்னேன். அதைப்பற்றி அதிகாரிகள் எல்லாம் கலந்து பேசி முடிவு செய்ய வேண்டும். என்னுடைய அனுபவப் பூர்வமாக இதைச் சொல்கிறேன். ஆகையால் கிராம மட்டத்தில் திட்டம் போடுவதற்கு முதலமைச்சரவர்கள் மிகுந்த கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாய இலாகா வேகமாக செயல்பட பல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அதன் விவரத்திற்குள்ளே நான் இப்போது போகவில்லை; அதைப் பற்றி அந்த டிமாண்டிலே பேசிக்கொள்ளலாம். ஒரு முக்கியமான கருத்தை மட்டும் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 'டீப் போர் வெல்ஸ்' ஆயிரக்கணக்கில் நாம் போடுகிறோம். அப்படிப் போடும்போது கருங்கல் பகுதியாக இருந்தால் அங்கே பைப் சொருக வேண்டிய அவசியம் இல்லை. தஞ்சை மாவட்டத்திலே முழுவதும் பைப்தான் போட்டாக வேண்டும். சென்ற தடவை பேசும்போது கூட நான் இந்த பைப் போடுவது பற்றி ஒரு கருத்தைக் குறிப்பிட்டேன். அதுபற்றி எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. குழாய்க் கிணறுகளுக்குப் பைப் இறக்கும்போது 300 அடி, 400 அடி, 500 அடி என்று இறக்க வேண்டியிருக்கிறது. அதற்கு இப்போது கலாய் அல்லது இரும்பு குழாய்களைப் பயன்படுத்துகிறோம். இப்படி இறக்கும் கலாய் அல்லது இரும்பு பைப்புகள், 6 அல்லது 7 ஆண்டு காலத்தில் துருப்பிடித்து கெட்டுவிடுவதாக சொல்லப்படுகிறது. மிகக் குறுகிய காலத்திலேயே அவை கெட்டுவிடுவதால் அதற்குப் பதிலாக ஏன் சிமெண்ட் பைப்புகளைப் பயன்படுத்திப் பார்க்கக்கூடாது என்று சென்ற முறையே கேட்டேன். அதற்கு ஒரு முயற்சி செய்து பார்த்திருக்கலாம்.

இரும்பு பைப் இறக்குவதற்கு ஒரு கிணற்றுக்கு 15,000, 20,000, 25,000 ரூபாய் செலவாகிறது. இவ்வளவு செலவு செய்தும், 6 அல்லது 7 ஆண்டுகளில் அந்த பைப்புகள் கெட்டுவிடுவதாக இருந்தால் அதனால் விவசாயிகளுக்கு எவ்வளவு நஷ்டம் உண்டாகும், அவர்களின் நிலைமை என்னவாகும் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். பணம் தான் விரயமாகிறது. அதே நேரத்தில் சிமெண்ட் பைப்பின் விலை மிகவும் குறைவு. இரும்பு பைப் இறக்க 10,000 ரூபாய் செலவாகிறது என்றால் சிமெண்ட் 3.000 ரூபாய்தான் ஆகும். ஒரு அடி

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இரும்பு பைப்பின் விலை 30 ரூபாய் என்றால் ஒரு அடி சிமெண்ட் பைப்பின் விலை 3 ரூபாயைவிட குறைவுதான். அப்படிப் பார்க்கும்போது 10,000 ரூபாயில் 5 கிணறுகள்கூட வெட்டி விடலாம். அது மட்டுமல்லாமல் சிமெண்ட்

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1975 மார்ச் 5

பைப்பின் ப்ருசேஷனும் அதிகம். ஆகவே, 5 லட்சம் ரூபாய் பரிசு கொடுத்தாவது, சிமெண்ட் பைப்பை 500 அடி இறக்கி, சோதனை செய்து பார்க்க வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். சிமெண்ட் பைப் இறக்கி வெற்றி கண்டால் அது விவசாயிகளுக்கு பெருத்த நன்மை விளைவிப்பதாக இருக்கும். அதிகமான வேலை வாய்ப்பும் கிடைக்கும். ஆகவே இதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் ஏற்கெனவே சொல்லி 3 மாதங்கள் முடிந்துவிட்டன. அந்த முயற்சியில் சம்பந்தப்பட்ட இலாகாவினர் ஈடுபட்டதாகவே தெரியவில்லை. உடனே அதற்குரிய முயற்சிகள் எடுத்திருந்தால் இந்த நேரம் அதன் பலன் ஓரளவு தெரிந்திருக்கும்.

அடுத்தபடியாக, 'பவுல்ட்ரி டெவலப்மெண்ட்' இருக்கிறது. அதற்கு தனி கார்ப்பரேஷன் வைத்திருக்கிறோம். அதனால் லாபமா அல்லது நஷ்டமா என்ற விவரம் தெரியவில்லை. ஆனால் கோழிப்பண்ணை வைத்தவர்கள் எல்லாம் பெருமளவில் நஷ்டப்பட்டிருக்கிறார்கள். ஆனால் வெளிநாடுகளில் கோழிப் பண்ணையினால் அதிக லாபம் கிடைக்கிறது; நம்முடைய நாட்டில் நஷ்டம் ஏற்படுகிறது. இதற்கு என்ன காரணம்? இங்கு தீவன விலைக்கும், முட்டை விலைக்கும் சம்பந்தம் இல்லாமல் இருக்கிறது. கட்டுப்படியான விலைக்கு கோழித் தீவனம் கிடைக்கவில்லை. கட்டுப்படியான விலைக்கு தீவனம் கிடைத்தால்தான் கோழிப்பண்ணை வைப்போருடைய முடியும், அவர்கள் லாபம் பெறவும் முடியும். இல்லை என்றால் அதனால் நஷ்டம்தான். பல 'நேஷனலைஸ்டு பாங்கு'-களிலிருந்து கோழிப்பண்ணை வைப்பதற்கு கடன்கூட கொடுத்தார்கள். இப்போது அதை எப்படி வசூல் செய்வது என்று விழித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் லாபம் பெற முடியாவிட்டாலும் கொடுத்த முதலும் போய்விட்டது. கோழிப் பண்ணை வைத்தவர்கள் போட்ட முதலும் போய்விட்டது. இப்போது மிகுந்த கஷ்டத்தில் இருக்கிறார்கள். இதை சற்று கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

மீனவத் துறையை எடுத்துக்கொண்டால் நாம் இப்போது படகுகள் கட்டிக் கொடுக்கிறோம். அதன் மூலம் கடலிலே நீண்ட தூரம் சென்று மீன் பிடித்து வருகிறார்கள் என்று சொல்கிறார்கள். மீன் பிடித்து வருவது ஒரு பயன் தான். ஆனால் இந்த மீன் பிடிக்கும் தொழிலில் பரம்பரை பரம்பரையாக ஈடுபட்டு வருகிறவர்களுக்கே நாம் படகுகள் கொடுக்கிறோமா என்றால் இல்லை. போட்டை யார் பேரிலேயோ கொடுக்கிறோம். அவர்கள் இந்த மீனவர்களை



1975 மார்ச் 5] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

கூலியாட்களாக வைத்துக்கொண்டு நிறைய இடையில் சம்பாதிக்கிறார்கள். இவர்களுக்கும் மீன் பிடித் தொழிலுக்கும் சம்பந்தமில்லை. இதை எப்படி மாற்றி அமைப்பது? நாம் கட்டுகிற படகுகளை நேரடியாக பரம்பரை பரம் பரையாக அந்தத் தொழிலில் ஈடுபட்டு வருகிற மீனவர்களுக்கே கொடுத்தால் இவர்களுடைய வாழ்வை வளப்படுத்தியதாகவும் ஆகும்—கடலில் உள்ள மீன்களைப் பிடித்து வருகின்ற பயனும் ஏற்படும். ஆக இப்படி நாம் செய்கிற காரியத்திலேயே இரட்டைப் பயன் ஏற்படும்படியாக நாம் கவனம் செலுத்தி யாக வேண்டும்.

பாசன வசதி என்று எடுத்துக்கொண்டால் ஒன்றைக் குறிப்பிட விரும்பு கிறேன். பரம்பிக்குளம் ஆழியாறு பகுதியில் 89 ஆயிரம் ஏக்கரா பாசனத்திற்குக் கொண்டுவர முயற்சி எடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். ஏற்கனவேயே அங்கே வெட்டப்பட்ட வாய்க்கால்களில் தண்ணீர் ஓடுவதில்லை. அப்படியிருக்கிற போது மேலும் 89 ஆயிரம் ஏக்கராவுக்கு விஸ்தரிக்கப் போவதாக புதிய கால் வாய்களை வெட்டுவதனால் என்ன பயன் ஏற்படும் என்பதையும் சிந்தித்தாக வேண்டும். நாம் போடுகின்ற முதல் வீணாகப் போய்விடக்கூடாது. ஏற்கனவே நாலாண்டுக்கு ஒரு முறைதான் இப்போதே தண்ணீர் கொடுக்கிற நிலை இருக்கிறது. ஆகவே இதையும் சிந்திக்க வேண்டும்.

மின்சார உற்பத்தியைப் பொறுத்தவரையில்—பெரிய நீர் மின்சாரத் திட்டங்கள் அநேகமாக முடிந்துவிட்டன. ஒரு சில சாதாரணத் திட்டங்கள் தான் இருக்கின்றன. அனல் மின்சாரத் திட்டம்—அணு மின்சாரத் திட்டம் ஆகியவற்றில்தான் நாம் கவனம் செலுத்தியாக வேண்டியதாக இருக்கிறது.

இதே நோக்கில் கிராமங்களில்—சென்ற ஆண்டு விவசாய அமைச்சர் குறிப்பிட்டதைப்போல—ஏரியில் இருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியுமா, சாணத்தில் இருந்து கோபர்காஸ் உற்பத்தி செய்து அதைப் பயன் படுத்த முடியுமா என்று பார்க்க வேண்டும். இதனால் கிடைக்கக்கூடிய அளவு குறைவாக இருக்கலாம். ஆயினும் விளக்கு எரிக்க, பம்பு செட்டு ஓட்ட சிறிய சிறிய அளவில் அங்கங்கே உற்பத்தி செய்துகொள்கிற நிலை பரவலாக ஏற்பட்டால் இதன் மூலம் இன்றைக்குச் செலவாகிற மின்சாரம் ஓரளவு குறைந்து அதை மற்றவற்றுக்கு உபயோகப்படுத்திக்கொள்கிற நிலையும் உண்டாகலாம்.

கோபர்காஸ் உற்பத்தியில் மத்திய சர்க்கார் இப்போது கதர் கிராமத் தொழில் வாரியம் மூலமாக கவனம் செலுத்தி வருகிறது என்று சொல்லலாம். இரண்டாயிரம் மூலதனம் இருந்தால் கோபர்காஸ் உற்பத்தி செய்துகொள்ள

முடியும் என்று சொன்னீர்கள். போடுகிற மூலதனம் குறைவு—இதைப் பெரும் அளவில் நம் சர்க்காரும் கவனம் செலுத்தி நடைமுறைப்படுத்த முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** சாணம், உமி போன்றவற்றில் இருந்து சிறிய சிறிய யூனிட் அளவுக்குத்தான் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். நம்முடைய பெரிய தேவையைப் பூர்த்தி செய்ய அவை எந்த அளவுக்கும் நிறைவு செய்யாது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** சிறிய அளவுக்குக் கிடைத்தாலும் இது நம்முடைய உற்பத்தியில் கொஞ்சமாவது மிச்சத்தை ஏற்படுத்தும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** சாணம், உமி இவைகளில் இருந்து தயாரிக்கப்படுகிற மின்சார விளக்குகள் எரிப்பதற்குப் பயன்படுமே தவிர வேறு எதற்கும் பயன்படாது. தியேட்டர்கள், தெருவிளக்குகள் ஆகியவற்றுக்கு மொத்தமாக ஒரு நாளைக்கு 1 லட்சம் யூனிட் தான் செலவாகிறது. நம்முடைய மொத்தச் செலவு 220 லட்சம் யூனிட்டில் அது மிகக் குறைவானது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** கோபர்காசை வைத்துக்கொண்டு பம்பு செட்டு ஓட்டலாம் என்று சொன்னார்கள். எனக்குத் தெரியாது. சொன்னதைச் சொன்னேன். முடியாது என்றால் விட்டுவிடுவோம்.

அடுத்து, இந்த உரையில் பெரிய ஏமாற்றம்—சிறு தொழில்கள் சம்பந்தமாக கவனம் எதுவும் செலுத்தப்படவில்லை என்பது. குறைந்த முதலீட்டில் அதிகமான பொருள்களை உற்பத்தி செய்வதற்கு முன்னுரிமை முயற்சிகள் எதுவும் செய்யப்படவில்லை—ரொட்டீன் வேலை நடக்கிறது—அதிகப்படியான முயற்சியைக் காணோம். இது சங்கடமான பிரச்சினை.

வழக்கமாக இருக்கக்கூடிய தொழில்கள் கூட ஸ்திரப்படும்படியான பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. கைத்தறியை எடுத்துக்கொண்டால்—நெசவாளர்கள் ஆண்டாண்டு காலமாக—நூல் கிடைக்கவில்லை—விலை ஏறிவிட்டது—துணி தேங்கிக் கிடக்கிறது—என்பது போன்ற பிரச்சினைகளுக்கு ஆளாகி வருடா வருடம் அல்லல் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நிம்மதியாக அந்தத் தொழிலில் ஈடுபட்டோம். வருவாயைக் கொண்டு சாப்பிட்டோம் என்கிற நிலையே இல்லை. அந்தத் தொழில் ஸ்திரப்படுவதற்கான ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை. அதற்கு என்ன யோசனை என்றால் எனக்குத் தெரியாது. அரசுதான் வழிவகைகளைக் கண்டாக வேண்டும்.



அடுத்து, கல்வியைப்பற்றி கல்வி மானியத்தில் சொல்லலாம் என்று நினைக்கிறேன் என்றாலும், என் தொகுதிப் பிரச்சினையை இந்தச் சந்தர்ப்பத்தில் இடையில் சொல்லிவிட ஆசைப்படுகிறேன். பட்டுக்கோட்டையில் ஒரு கல்லூரியை ஆரம்பிக்க வேண்டுமென்று அரசாங்கத்தின் அனுமதியின் பேரில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு முயற்சியை எடுத்துக்கொண்டார். பத்தாயிரம், இருபதாயிரம் ரூபாயை வசூல் பண்ணினார்கள். அந்த வேலை அப்படியே நின்று போய்விட்டது. எடுத்த முயற்சியைத் தொடர்ந்து—எப்படியாவது பட்டுக்கோட்டையில் ஒரு கல்லூரி ஏற்பட்டது என்கிற நிலையை உருவாக்க வேண்டுமென்று தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன். கலெக்டர் முயற்சி எடுத்துக் கொண்டால் நாங்களும் ஒத்துழைக்கத் தயார்.

அடுத்து, நம்முடைய திட்டங்களை எடுத்துக்கொண்டால் அது ப்ரொடக்ஷன் ஓரியென்டெட் ஆக இருந்தாக வேண்டும். உற்பத்தி பெருகினால்தான் நாட்டில் வறுமையைப் போக்க முடியும். ஆகவே ஒரு பைசாவைக்கூட வீணாகச் செலவழிக்கக் கூடாது. நாம் போடுகிற திட்டங்கள் ப்ரொடக்ஷன் ஓரியென்டெட் ஆக இருக்கவேண்டுமென்பது என் கருத்து. இந்தக் கண்ணோட்டத்தோடு இந்த அரசு செயல்படுகிறதா என்றால் இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். பாஞ்சாலங்குறிச்சி திட்டம், திருவள்ளுவர் கோட்டம், தமிழ்த்தாய் கோட்டம் என்பதாக எல்லாம் திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். இதற்கு ஆகும் தொகை குறைந்ததாக இருக்கலாம். திருவள்ளுவருக்குக் கோட்டம் அமைத்தால்தானா அவரை நினைவில் கொள்ள முடியும்? அவர் எழுதிய திருக்குறள் நூலே நிற்கிறதே, செழுமையாக வளர்ந்திருக்கக்கூடிய பொருளாதார நிலை இருக்கிறபோது இதையெல்லாம் செய்யலாம். நம்முடைய பொருளாதார நிலை சீரழிந்து—ஸ்திரத் தன்மையற்ற நிலையில் இருக்கிறது. இந்த மாதிரி செலவினங்கள்—திட்டங்கள் எல்லாம் எந்த வகையிலும் நம்முடைய பொருளாதார நிலைமையை மேம்படுத்தாது. பொதுவாக ஆடம்பரச் செலவுகளைக் குறைத்தாக வேண்டும்—விழாக்கள்—விருந்துகள்—இன்னும் திருமணத்தை 50 ஆயிரம், 60 ஆயிரம் செலவழித்து நடத்துகிற பழக்கத்தை நிறுத்தவே சட்டம் கொண்டு வரலாம். அதற்கு அவ்வளவு செலவா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பாஞ்சாலங்குறிச்சிக் கட்டபொம்மன் கோட்டை கட்ட ஏறத்தாழ ஐந்து லட்சம் தான் செலவாகியிருக்கிறது. இதனால் அங்கு தொழிலாளர்கள் பலருக்கு வேலை கிடைத்திருக்கிறது. கட்டபொம்மன் கோட்டை மட்டுமல்ல—கட்டபொம்மன் வார்சுதாரர்கள் 200 குடும்பங்களுக்கு வீட்டு மனை வழங்கப்பட்டிருக்கிறது—மாடு போன்றவைகள்

செலவழிக்கப்பட்டிருக்கிறது. இதுபோல இன்னும் பல திட்டங்கள்—இவற்றுக்கு எல்லாம்—பிரதமர் தமிழ் நாட்டிற்கு ஒருமுறை வந்துபோனால் என்ன செலவாகிறதோ அந்தச் செலவைவிடக் குறைவுதான்.

**திரு. எ. ஆர். மாரிமுத்து:** நன்றாகப் புரிகிறது. சுருக்கென்று நான் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஐந்து லட்ச ரூபாயைக் கொண்டு அந்தப் பகுதியிலேயே பம்பு செட்டுகள் வைத்துக்கொடுப்பதற்குச் செலவிட்டால் உற்பத்தியைப் பெருக்க முடியும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதுவும் செய்யப்படுகிறது. அதை விட்டுவிடவில்லை. பூம்புகாரை எடுத்துக்கொண்டால் அங்கிருக்கிற மீனவர்களுக்கு வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. வள்ளுவர் கோட்டம் என்றால் ஆயிரம் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கிறது. 500 சிற்பிகளுக்குப் புதியதாக வேலை கிடைக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். பிரதமர் அவர்கள் வந்து போவதனுடைய செலவு என்று குத்தலாகக் கனம் முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறாரே, அப்படியென்றால், பிரதமர் வந்து போகக் கூடாதா? நாட்டின் பல பாகங்களுக்குப் போகக் கூடாதா? பிரதமர் நாட்டின் பல பாகங்களுக்குப் போவதன் காரணமாக, எந்த அளவில் மக்களின் நிலையிருக்கிறது என்று புரிந்துகொள்ள அது ஒரு முக்கியமான அம்சம். இங்கேயிருக்கிற கனம் முதலமைச்சர் அவர்கள் மாவட்டங்களுக்குப் போகிறாரே, அது . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பிரதமர் வருவதற்கான செலவு எவ்வளவு அதிகமான செலவோ, அதைப் போலத்தான் இதுவும் என்று சொன்னேன் தவிர, நான் ஒன்றும் குத்தலாகச் சொல்லவில்லை.

**திரு. க. மு. இராசகோபால்:** நம்முடைய நாட்டுப் பிரதம அமைச்சர் சங்கராச்சாரியாரைப் பார்க்கமட்டும் இங்கு வந்து போயிருக்கிறார்கள். அதற்கு எவ்வளவு செலவு . . . .

**திரு. எ. ஆர். மாரிமுத்து:** இது ரொம்பத் தவறான செய்தி. பிரதமர் வேறு விஷயமாக வந்திருக்கிறார். அப்பொழுது அவர் சங்கராச்சாரியாரைப் பார்க்கப் போயிருக்கிறார். உறுப்பினர் சொல்வதை நான் ஆட்சேபிக்கிறேன்.

நம்முடைய நாட்டுப் பொருளாதாரம், வளர்ந்து வரக்கூடிய, வளரக்கூடிய நிலையிலே இருக்கிறபொழுது, நாம் செலவழிக்கின்ற ஒவ்வொரு பைசாவும் உற்பத்திக்கும் போகவேண்டும் . . . .



**திரு. துரைமுருகன்:** ஒரே ஒரு கிளாரிஃபிகேஷன். நம்முடைய மாரிமுத்து அவர்கள் சொல்கிறார்கள், வளருகின்ற பொருளாதாரத்திலே வேலையில்லாத் திண்டாட்டம், பசிக் கொடுமை, இவையெல்லாம் போன பிறகுதான், வள்ளுவர் கோட்டம் எல்லாம் எழுப்ப வேண்டும் என்று. இந்தியத் துணைக் கண்டத்தை எடுத்துக் கொண்டால், வேலையில்லாத் திண்டாட்டம், பசிக் கொடுமை, வறுமை இவையெல்லாம் இருக்கத்தான் செய்கின்றன. இப்படி, வேலையில்லாத் திண்டாட்டம், பசிக் கொடுமை, வறுமை இவையெல்லாம் இருக்கும்போதுதான், காலப் பெட்டகத்தை, பல இலட்சம் ரூபாய் செலவு செய்து, புதைத்து வைத்திருக்கிறார்கள். எத்தனையோ வரலாற்றாசிரியர்கள் வரலாற்றை எழுதிக் கொண்டிருக்கிறார்கள். இதைப் புதைப்பதற்குப் பல இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இவ்வளவு பெரிய வேலையில்லாத் திண்டாட்டம், பசிக் கொடுமை, வறுமை எல்லாம் இருக்கும்பொழுது, இது தேவையா என்று யாரும் கேட்பதில்லை. ஒரு நாட்டினுடைய பண்பாட்டையும், மொழி உணர்ச்சியையும், கலாச்சாரத்தையும் கட்டிக் காக்க இவற்றையெல்லாம் செய்யத்தான் வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எ. ஆர். மாரிமுத்து:** ஏதோ பெரிய தப்பு பண்ணிவிட்டீர்கள் என்று சொல்லவில்லை. காலப் பெட்டகத்திற்கு ரொம்பக் குறைச்சலான செலவுதான். அது சரித்திரம். இன்றைக்கிருக்கிற பொருளாதார நிலையைப் பார்க்க வேண்டும். பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் புகழைப் பரப்ப வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. புகழைப் பரப்ப வேண்டுமென்பதிலே நானும் பங்கு கொள்கின்றேன். தற்பொழுதுள்ள பொருளாதார நிலையில் பொருள்களை உற்பத்தி பண்ணுவதற்கு ஏதுவாக . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மறைமுகமாக வருகின்ற பலன்களை நாம் மறைத்துவிடவும் கூடாது, மறந்துவிடவும் கூடாது. பூம்புகாரைப் பொறுத்தவரையிலே, ஒரு நாளைக்கு ஆயிரம் பேர் வருகிறார்கள். பூம்புகார் வெறும் கிராமமாக இருந்தபொழுது ஒரு நாளைக்கு 10 பேர் கூட வரமாட்டார்கள். இப்பொழுது ஒரு நாளைக்கு ஆயிரம் பேர் பூம்புகாருக்கு வருகிறார்கள். அதைத் துவக்கியதிலிருந்து இதுவரையில் 4½ இலட்சம் பேர் அங்கே போயிருக்கிறார்கள். அதற்கு 10 பைசா கட்டணம் வைக்கப்பட்டிருக்கிறது. 45, 50 ஆயிரம் ரூபாய் வசூலாகி இருக்கிறது. அதை வைத்துத் தான் அங்கு செலவோர் கணக்கெடுக்கப்பட்டது. இந்த ஞாயிறன்று இவ்வளவு வசூல் செய்திருப்பார்களானால், அதையொட்டி வருகின்ற கடைகள், வியாபாரம், போக்குவரத்து, இவைகள் எல்லாம் நம்முடைய பொருளாதாரத்தை வளர்க்கக் கூடியவைதான்.

[1975 மார்ச் 5

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அரை மணி நேரம் பேசி இருக்கிறீர்கள். இன்னும் எவ்வளவு நேரம் பேசுவீர்கள்?

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** இன்னும் 1 மணி நேரம் கொடுங்கள், போதும்.

தலைவரவர்களே, இப்படி இருக்கிறபொழுது பூம்புகாரைப் பொறுத்த வரையிலும் மக்கள் வரவில்லை, போகவில்லையென்று நான் சொல்லவில்லை. அதிகமாக, போகிறார்கள் வருகிறார்கள். ஆனால், நாட்டிலே இதனால் ஒட்டு மொத்தமாக என்ன நிலைமை? புரடக்ஷன் இங்கே இருப்பது அங்கே போகிறது. இங்கே இருக்கிற வியாபாரம் அங்கே போகிறது. ஒட்டுமொத்தமாக, உற்பத்தி இல்லை. ஆகவே, இம்மாதிரி விழாக்களை, போக்குவரத்துக்களை எல்லாம் கொஞ்சம் குறைத்துக் கொள்ளவேண்டும். அதற்காகப் பாரம்பரியத்தைக் குறைக்கவேண்டும், சரித்திர முக்கியத்துவத்தை குறைத்துக் கொள்ளவேண்டுமென்று நான் கூறுவதாகக் கொள்ளக் கூடாது.

அடுத்து, முக்கியமான பிரச்னை, மனித சக்தியை, அதிகமாக உபயோகப் படுத்த வேண்டுமென்று கூறுகின்றபொழுது, அதனுடைய பலன் கீழேயிருக்கிற 40 சதவிகிதம் மக்கள் பெறவில்லையென்றால், வறுமையில் சிக்கியுள்ள அகப் பட்டுக் கொண்டிருக்கிற 40 சதவிகிதம் மக்களுக்குப் பலன் கிடைக்கவில்லை யென்றால் என்ன பிரயோஜனம்? அவர்களை வாழவைக்கக்கூடிய திட்டமாக இருக்கவேண்டும். அப்படி இருக்கிற பொழுதுதான் அது பயனளிக்கும்.

சோஷியல் செக்யூரிட்டி ஸ்கீமென்று ஒன்றை அறிவித்திருக்கிறார்கள். முன்னாலேயே அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதிலே, நான் சொல்வது, அரசு என்பது, மக்களுக்கு இம்மாதிரியான திட்டங்களை நிறைவேற்றக் கடமைப் பட்டிருக்கிறது, அதனுடைய சேவைப் பாராட்டப்படக் கூடிய ஒன்று, நான் பாராட்டுகின்றேன். ஆனால், அதிலே சில மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்பது என்னுடைய கருத்து.

இந்த அரசு ஊழியர்களுக்கு, கவர்ன்மென்ட் எம்ப்ளாயீஸ் ஃபாமிலி பெனிஃபிட் ஃபண்ட் ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறது. மாதத்திற்கு ரூ. 10 அவர்கள் ஊதியத்திலிருந்து அவர்கள் கட்ட வேண்டுமென்று முன்னால் அறிவிக்கப் பட்டது. ஆனால், அதன்பிறகு, அது ரூ. 1 ஆகக் குறைக்கப்பட்டது. இது அரசு ஊழியர்களுக்கு திருப்திகரமான ஒன்றாக இருக்கமுடியும். அதனுள்ளே புக விரும்பவில்லை.

அடுத்து, தமிழ்நாடு சோஷியல் செக்யூரிட்டி ஸ்கீம். அதில் பொதுமக்களாக இருந்தாலும், யாராக இருந்தாலும், பங்குகொள்ளலாம். தொழிற்சாலையிலே வேலைச் செய்கின்ற தொழிலாளியாக இருக்கலாம், அல்லது வயல்களிலே வேலை



1975 மார்ச் 5] [திரு. ஆர். மாரிமுத்து]

செய்கின்ற விவசாயியாக இருக்கலாம், யாராக இருந்தாலும் அதில் பங்கு கொள்ளலாம். ஆனால், அவர்கள் மாதம் ரூ. 10 கட்டவேண்டும். அரசாங்க ஊழியர்கள் ரூ. 1 கட்ட வேண்டும், மாதம் ஒன்றுக்கு. ஆனால், பொதுமக்கள் ரூ. 10 கட்ட வேண்டும்.

இந்த ஆண்டு புதிதாகப் பட்ஜெட் உரையிலே குறிப்பிடப்பட்டிருப்பது, ஹாண்ட்லூம் வீவர்ஸ் சேவிங்ஸ் அண்ட் செக்யூரிட்டி ஸ்கீம், என்பதாகும். இதன்படி ரூ. 100 சம்பாதித்தால் ரூ. 6 கட்டவேண்டும். ஆக, ரூ. 150 வந்தால், ரூ. 10 கட்டவேண்டும். நான், கேட்டுக்கொள்வது, இதையெல்லாம் ஒன்றுபடுத்தி யார் விரும்புகிறார்களோ, அவர்களுக்கு இந்தப் பாதுகாப்புக் கிடைக்கவேண்டுமானால், மாதம் குறைந்தபட்சம் இவ்வளவு கட்ட வேண்டுமென்று வைத்து, இந்த ரூ. 10-ஐயும் குறைக்க வேண்டும்.

கவர்ன்மென்ட் எம்ப்ளாயீஸ் என்று சொன்னால், கடைநிலை ஊழியர் களுக்குச் சம்பளம் ரொம்பக் குறைவு. அது போதாது. அவர்களுக்கு ரூ. 130-லிருந்து ரூ. 195 வரை அளிக்கப்படுகிறது. ஆனால், அதைவிடக் குறைந்த அளவு, மாதம் ரூ. 60, ரூ. 70 சம்பாதிக்கின்றவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இந்தத் திட்டத்தினாலே பயனடைய வேண்டுமென்றால், வயதான காலத்திலே அவன் காலமாகிவிட்டால், தன் குடும்பத்திற்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கின்றபொழுது, அவர்களால் மாதம் ஒன்றுக்கு ரூ. 10 கட்ட முடியாது. அவர்களை ரூ. 10 கட்ட வேண்டுமென்று சொல்வது சாத்தியமானதல்ல. அவனால் இந்த அரசாங்கத் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளமுடியுமா? இந்தத் திட்டத்தை நாம் அறிவித்திருக்கிற பொழுது மாதம் ஒன்றுக்கு ரூ. 10 கட்டக் கூடிய நிலையிலே அவர்கள் பொருளாதார நிலையிருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும். ஏதோ, சிலபேர் சிரமப்பட்டு, பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றிருந்தாலும், நாட்டிலே கஷ்டப்படுகின்றவர்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய அளவுக்கு இருக்கவேண்டு மானால், யார் வேண்டுமானாலும், சர்க்கார் ஊழியர்களாக இருந்தாலும், தொழிற் சாலையிலே வேலை செய்கின்ற தொழிலாளியாக இருந்தாலும், சிறுகடை வைத்திருக்கின்ற யாராக இருந்தாலும், அனைவருக்குமே இந்தத் திட்டம் பயன்படுகின்ற வகையிலே ஒரே திட்டமாக வைத்து, இதைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய அளவுக்கு இதை அமுல் படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

முன்னாலே சொன்னதை அடிப்படையாக வைத்து, இதிலே கூறப்பட்டிருக் கிறது, மீனவர்களுக்கு இந்த ஆண்டு ரூ. 2 கோடியில் 5,000 வீடுகள் கட்டிக்

கொடுக்கப்படுமென்று. நல்லத் திட்டம். எல்லோருக்கும் வீடு கட்டி இருக்க வேண்டும். நான் பார்க்கிற கோணத்தில், கிரிட்டிசைஸ் பண்ணுவதாக தயவு செய்து முதலமைச்சர் நினைத்துக் கொள்ளக்கூடாது.

வீடு கட்டிக் கொடுக்க வேண்டியது அவசியம். வீடு கட்டிக் கொடுத்தால், அவனுடைய வீட்டிலே அடுப்புப் புகைய வேண்டியது அவசியம். வீடு கட்டு வதற்காக ரூ. 2 கோடி ஒதுக்குகிறீர்கள். அந்த ரூ. 2 கோடியைக் கொண்டு அவர்கள் வாழ்க்கை நிலையை உயர்த்திக்கொள்ள பயன்படுத்திக்கொள்ள முடியுமா? நான் அந்தக் கோணத்திலே பார்க்கிறேன். வீடு கட்டிக் கொடுப்பதைவிட, 4, 5 கிராமங்களிலே 50 போட்களை வாங்கிக் கொடுத்தால், அதிலே வருகின்ற வருமானம் அவர்களுக்குப் போய்ச் சேருமானால், அந்த ரூ. 2 கோடி முதலீட்டின் மூலம் இன்றைக்கு மாதம் ரூ. 150 பெறக்கூடியவர்கள், ரூ. 300 பெறக்கூடியவர்களாக ஆவார்களானால், 3 ஆண்டுகளுக்குப் பிறகு, அவர்களே வீடுகளைக் கட்டிக்கொள்வார்கள் அல்லது நாமே அப்பொழுது வீடு கட்டிக் கொடுத்து, அவர்களிடம் அந்தத் தொகையை வசூல் செய்து கொள்வோம். அந்த மாதிரி கோணத்தில் இந்தத் திட்டத்தை அமலாக்குவோமானால், அது நல்ல பலன் அளிக்கக் கூடியது பின்னாலே, இந்த வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறீர்களே, அவர்களே தாங்களாகவே, தானே அந்த வீடுகளைக் கட்டிக்கொள்ளக்கூடிய நிலைமையை அது உருவாக்கும். திட்டம் போட்டவரை கட்டுங்கள். அதற்கு குறுக்கே நிற்கவில்லை. இனிமேல் கட்டுவதற்குத் திட்டம் தீட்டும்போது, அவர்களது வருவாயை இரண்டு மடங்கு, மூன்று மடங்குப் பெருக்கிக் கொள்வதற்கான திட்டங்களை அறிவிப்பீர்களானால் அது இன்னும் ரொம்பப் பாராட்டுக்குரியதாக, பாராட்டக் கூடியதாக இருக்கும் என்பதிலே சந்தேகம் கிடையாது.

அடுத்து, மாநில சுயாட்சி பற்றி இங்கே பேசப்பட்டது. அரசியல் ரீதியாக இரண்டொரு கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாநில சுயாட்சி என்பதுபற்றி ஏற்கனவே இந்த அவையிலேயே நாம் விவாதித்து இருக்கிறோம். எங்கள் கட்சியின் பொறுத்தவரையில் கருத்துக்களை மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம் என்று கருதுகிறேன். நாங்கள் என்ன சொன்னாலும் உங்களை கன்வின்ஸ் பண்ண முடியாது, காரணம் நீங்கள் ஏற்கனவே முடிவு எடுத்துவிட்டீர்கள், மாநில சுயாட்சிதான் சர்வரோக நிவாரணி, அதைத் தவிர வேறு வழியில்லை என்று திட்டவட்டமான முடிவிற்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள். அப்படி ஒரு முடிவிற்கு வந்துவிட்டபிறகு அது தப்பு என்று நீங்கள் உணரப்போவது அது வந்தபிறகுதான், ஆனால் நாட்டிற்கு வரமாக அது வரப்போவது கிடையாது, ஆகவே நீங்களும் உணரப்போவது இடையாது என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்தாகும். மாநில





சுயாட்சி பயன் தரத் தக்கதல்ல. நீங்கள் நினைக்கிற மாதிரி அது வந்தாலே எல்லாப் பொருளாதார மாறுதல்களையும் செய்துவிட முடியும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறபடி அது சாத்தியமல்ல . . .

**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்:** தலைவர் அவர்களே, நம்முடைய காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. மாரிமுத்து அவர்கள் தன்னுடைய பேச்சில் மாநில சுயாட்சியைப் பெற்றாலும் சரியான பயனடைய முடியாது என்று குறிப்பிட்டு மொட்டையாக குறிப்பிட்டிருக்கிறார்கள். எந்த எந்த வகையில் பயன் அடைய முடியாது எப்படிப் பயன் அடைய முடியாது என்று அவர்கள் விளக்கினால் நாங்கள் பேசும்போது பேசுவதற்கும் சௌகரியமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** நான் பெரும் மரியாதையோடு முஸ்லீம் லீக் கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் தெரிவித்ததைப்போல் பேசவேண்டுமென்றால் இந்த அவையிலே அதைப்பற்றி பேசினால் அதற்கு ஒரு மணி நேரம் வேண்டும். அவைத் தலைவர் அவர்கள் நேரம் கொடுக்க முடியாது. நான் அவைத் தலைவர் அவர்களுக்கு அந்தச் சங்கடத்தை ஏற்படுத்த விரும்பவில்லை. ஏற்கனவே நான் அதைப்பற்றி பேசியிருக்கிறேன். என்னுடைய பேச்சை வேண்டுமானால் அவர்கள் படித்துப் பார்க்கட்டும், அதைத் தான் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். முற்போக்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று உங்களுக்கு ஆசை இருக்கலாம். அதை நான் குறையாகச் சொல்லவில்லை. ஆனால் முற்போக்கான நடவடிக்கைகளை மாநில மட்டத்தில் செய்வது என்பது சாத்தியமல்ல. நாடு ஒன்று என்று ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு இதரப் பகுதிகளிலே எடுக்கிற நடவடிக்கைகள் நம்மையும் பாதிக்கும். அங்கே பாதகம் ஏற்பட்டால் அந்த மாநிலத்து மக்கள் மட்டுமல்ல, நாமும் சேர்ந்து அந்தப் பாதகத்தை அனுபவிக்கவேண்டும். அங்கே அதிகப்படியான நல்ல விளைவுகள் ஏற்பட்டால், மழைபெய்து நல்ல விளைச்சல் ஏற்பட்டால், அதனுடைய நன்மையை நாமும் அனுபவிக்கிறோம். ஆகவே நம்முடைய பொருளாதார வளர்ச்சி என்பது ஒட்டுமொத்தமாக இருக்கிறது. தமிழகத்திலே இருக்கிறவர்கள் இந்தியாவின் எந்தப் பகுதிக்கு வேண்டு மானாலும் சென்று பொருட்களை விற்கலாம், வாங்கலாம், அதுபோன்று மற்ற மாநிலங்களிலே உள்ளவர்கள் இங்கே வந்து தங்களுடைய பொருட்களை விற்கலாம், வாங்கலாம், இங்கேயிருந்து அங்கே சென்று வேலை செய்யலாம். அங்கேயிருந்து இங்கே வந்து வேலை செய்யலாம், இம்மாதிரியான அரசியல் சட்டப் பாதுகாப்பு இருக்கிறது, நாம் அதை ஒத்துக்கொண்டு, நாடு ஒன்று என்று நாம் சொல்கிறோம் . . .

**திரு. நா. வீராசாமி:** ஒரு கிளாரிபிகேஷன் சார் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் இல்லை, அவர் முடித்த பிறகு கேளுங்கள்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** நான் சொல்கிற கருத்துக்களை நீங்கள் ஏற்றுக் கொள்விர்கள் என்று நம்பி நான் சொல்லவில்லை . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பிரதமரே திட்டவட்டமாகக் கூறியதற்குப் பிறகு திரு. மாரிமுத்து அவர்களிடமிருந்து நாங்கள் அந்த விளக்கம் எதிர்பார்க்க முடியாது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** பிரதமர் அவர்கள் கருத்தைக் கூறியிருக்கிறார்கள். தேசிய நலனுக்கு உகந்தது அல்ல, மாநில சுயாட்சி தேசத்தினுடைய வளர்ச்சிக்குப் பாதகமானது என்பது என்னுடைய மனப்பூர்வமான கருத்து.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாநில சுயாட்சி மட்டுமல்ல, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தரப்பட வேண்டுமென்பதையும் பிரதமர் அவர்கள் மறுத்திருக்கிறார்கள், அதுவும் திரு. மாரிமுத்து அவர்களுக்கு உடன்பாடு தானா?

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** இன்றைக்கு இருக்கிற நிலைமையிலே அது முடியாது என்று தெரிவித்து இருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற நிலைமையிலே அது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் . . .

**திரு. ஏ. ஆர். பெருமாள்:** மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கேட்பது பாதகமானது என்று அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையிலே அது எந்த வகையில் பாதகமானது என்று அவர்கள் விளக்கினால் நல்லது. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்பது ஏதோ தேசிய ஒருமைப்பாட்டிற்கு ஊறுவிளைவிக்கும் என்று சொல்வதுபோல் பேசுகிறார்கள். இந்திய தேசியத் தலைவர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்கள் பாதுகாப்பு, வெளிநாட்டு உறவு, கரன்ஸி, போக்குவரத்து போன்ற ஐந்து அம்சங்கள் மட்டும் மத்திய அரசிடம் இருக்கவேண்டும், மற்ற அதிகாரங்கள் எல்லாம் மாநிலங்களுக்குக் கொடுக்கப்படவேண்டுமென்று சொன்னார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தலைவர் தனிப் பேச்சாகப் பேசிக் கொண்டிருக்கிறார். மாரிமுத்து பேசி முடிக்கட்டும்.



**திரு. கே. டி. கே. தங்கமணி:** பார்வர்ட் பிளாக் கட்சித் தலைவர் அவர்கள் இந்திய ஒற்றுமைபற்றி என்ன கருத்துகொண்டிருக்கிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. நா. வீராசாமி:** ஆளுங்காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் சொல்லும் போது இந்தியா ஒன்று என்று ஏற்றுக்கொண்டபிறகு மாநில சுயாட்சி கூடாது என்று சொன்னார்கள். ஏனென்றால் ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு யார் வேண்டுமானாலும் வேலைக்குப் போகலாம் என்று சொன்னார்கள். ஆளுங்காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. மாரிமுத்து அவர்கள் கட்சி ஆளுகின்ற மகாராட்டிரம், ஆந்திரம், குஜராத் போன்ற மாநிலங்களிலே அந்த அந்த மாநிலங்களில் உள்ள மக்களுக்குத்தான் வேலை கொடுக்க வேண்டுமென்று 'சன்ஸ் ஆப் தி சாயில்' என்ற பாலிஸியை இம்ப்ளிமெண்ட் செய்து வருகிறார்கள். அப்படியிருக்கும்போது ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு எப்படி வேலைக்குப் போக முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** 'சன்ஸ் ஆப் தி சாயில்' என்பது தப்பு என்பதை மேல்மட்டத்திலேயே முடிவு செய்து அதைக் கைவிடவேண்டுமென்று சொல்லப்பட்டு இருக்கிறது என்பதை மாத்திரம் இப்போது தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவிலே இருக்கின்ற பொருளாதார நிலைமையை வலுப்படுத்துவதற்குத் தான் நாம் முயற்சி செய்ய வேண்டும். இரண்டுவிதமான கருத்து மோதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு பக்கம் சோஷலிஸத்தை நம்பக்கூடிய சக்திகள், மற்றொரு பக்கம் சோஷலிஸத்திற்கு எதிரான சக்திகள். இன்றைக்கு இந்தியாவிலே அரசியல் கருத்துக்கள் இரண்டு பெரும் கூறுகளாக இருக்கின்றன. காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் தெளிவாகச் சொல்ல முடியும். சோஷலிஸம்தான் வேண்டுமென்று திட்டவட்டமாகச் சொல்லிக்கொண்டு வருகிற கட்சி. உங்களுக்கு அதிலே கருத்து வேறுபாடு இருக்காது என்று கருதுகிறேன். அந்தக் கட்சி அந்த முறையிலே நடவடிக்கைகளை எடுக்கும்போது அதற்கு மாறாக அந்தக் கட்சியை ஆட்சியிலிருந்து இறக்க வேண்டுமென்ற முயற்சியிலேயும் இன்றைக்கு இருக்கிற பொருளாதார நிலைமைகளைப் பயன்படுத்திக் கொண்டு சிக்கல்களை ஏற்படுத்த வேண்டுமென்றும் அரசியல் ரீதியாக ஒரு பெரும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

இன்றைக்கு புரட்சி என்ற வார்த்தை அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. ஜெயப்பிரகாஷ் நாராயணன் முழுப் புரட்சி வேண்டுமென்று சொல்கிறார். முழுப் புரட்சி என்றால் என்ன? சமூகப் புரட்சி, பொருளாதாரப் புரட்சி இரண்டையும் சேர்த்துத்தான் அப்படிக் கூறுகிறார்கள் என்று கருதுகிறேன். புரட்சி நடந்த நாடுகளின் சரித்திரத்தைப் படித்துப் பார்த்தால் தெரியும். பிரெஞ்சுப் புரட்சியாக இருந்தாலும் சரி, ரஷ்ய புரட்சியாக இருந்தாலும் சரி, புரட்சி என்று வாயால் சொல்லிவிட்டால் மட்டும் புரட்சி வந்துவிடாது, புரட்சி என்பது

(முற்பகல் 11-00 மணி)

ஆக்குகின்ற சக்தி படைத்ததாக இருக்கவேண்டும். இதிலே இரண்டுவிதமான குணாம்சங்கள் கொண்டதாக இருக்கவேண்டும். ஒன்று அழிப்பது, இன்னொன்று அழித்த இடத்திலே ஆக்குவது. இந்த இரண்டும் இருந்தால்தான் புரட்சி நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கக்கூடியதாக இருக்கும். ஆனால் இன்றைக்கு ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்களின் தலைமையில் நடக்கும் இந்தப் புரட்சியானது இருப்பதை அழிப்பதற்குப் பயன்படுமே தவிர அழிக்கின்ற இடத்தில் ஆக்குவதற்கான ஒரு 'Constructive line of thinking' என்ன இருக்கிறது என்று பார்த்தால் ஒன்றும் தெரியவில்லை. அவர்கள் பின்னால் இருக்கும் சக்தி இருப்பதை அழிப்பது, சோஷலிச முற்போக்குத் திட்டங்களை ஆரம்பத்திலிருந்தே தடுப்பது. ஜனநாயகத்தின் மூலம் பொருளாதாரத்திலே மாற்றங்களைக் கொண்டு வரும்பொழுது எவ்வளவோ சிரமங்களை அனுபவிக்க வேண்டியதாக இருக்கிறது.

சட்டங்களைப் போட்டாலும் அவற்றை அமலாக்குவதிலே சிரமங்கள் இருக்கின்றன. ஜனநாயக முறையிலே சோஷலிச பொருளாதாரம் நாட்டிலே ஏற்படுத்த வேண்டுமென்ற லட்சியத்தை, அதுதான் நல்லது என்று மக்களெல்லாம் ஏற்றுக்கொள்ளும் வகையில் செயல்படுத்த வேண்டும். இதில் சங்கடங்கள் ஏற்படும். இதை 'அலாவுத்தீன் அற்புத விளக்கை'க் கொண்டு செய்வதைப் போல செய்ய முடியாது. அப்படிப்பட்ட நடவடிக்கைகளை எடுக்கும்பொழுது, சில சங்கடங்கள் வரலாம், சில தவறுகள்கூட நேரிடலாம். அப்பொழுது திருத்திக்கொண்டு செயல்படுகிறோம். நாம் எடுத்த நடவடிக்கைகளிலே, பொருளாதாரத்திலே பல சங்கடங்கள், தவறுகள் ஏற்பட்டு விட்டன என்று கூடக் கூறலாம். இன்றைக்குப் பொருளாதார வளர்ச்சியிலே சிக்கல் இருக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொண்டு முழுப் புரட்சி என்று சொல்வது என்றால், பின்னால் எதாவது நடக்குமா என்றால் ஒன்றும் நடக்காது. அவர் பெரிய மனிதர், தர்க்க ரீதியாக வைத்துக் கொண்டால்கூட, இந்தப் புரட்சி வரலாம், இப்பொழுது இருக்கின்ற காங்கிரஸ் கட்சியின் ஆட்சியை அகற்றி விட்டு, அந்த இடத்திலே அமருகின்ற அரசாங்கம் இதைவிட முற்போக்கான காரியங்களை வேகமாகச் செய்து பொருளாதார மாற்றத்தை உண்டாக்கும் விதத்தில் பின்பலம் இருக்கிறதா என்று பார்த்தால் அப்படி இருக்கக் கிடையாது. அப்படியல்லாமல் அழிவை மட்டுமே கொண்டு வரும் இந்தப் புரட்சியை அழிவுப் புரட்சி என்றுதான் சொல்ல முடியுமே தவிர முழுப் புரட்சி என்று ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆனால் இன்றைக்கு ஆட்சியிலே இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சிந்தனையைப் பார்த்தால் சுயாட்சி என்று வேகமாகக் கோஷம் போடுவதன் விளைவாக, மத்திய அரசுக்கு எதிராகக் கருத்து இருப்பதன்





விளைவாக ஜெயப்பிரகாஷ் பக்கத்தில் கொண்டு போய் விட்டது. மத்திய சர்க்கார் முற்போக்கான சர்க்கார் அல்ல, எங்கள் சர்க்கார்தான் முற்போக்கான சர்க்கார் என்று அவர்கள் சொல்லிக்கொள்ளலாம். ஆனால் முற்போக்கானவர்கள் இப்படிப்பட்ட பிற்போக்கான கொள்கை வைத்திருப்பவர்களின் பின்னால் எப்படிப் போக முடியும் என்பதைச் சிந்திக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தேர்தலைப்பற்றி இங்கே சில கருத்துக்கள் பேசப்பட்டன. 'ரீ கால்' என்பதைப்பற்றிப் பேசப்பட்டது. என்னைப் பொறுத்தவரையில் இந்த விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் கூடாது என்பதுதான் கருத்தாகும். நம்முடைய நாட்டிலே அரசியல் ஸ்திரத் தன்மை கிடையாது, அரசியல் வளர்ச்சி போதவில்லை. இந்த நிலையிலே விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையைத் தேர்தலில் புகுத்தினால் ஸ்திரமான சர்க்கார் அமைய முடியாது. இன்றைக்கு என்னென்னவோ குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டும் இந்த அரசு ஸ்திரமாக இருக்கிறது என்றால் அதற்குக் காரணம் ஸ்திரமான பலம் இருப்பதுதான். உங்களிடத்தில்—ஆளுங்கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே 10 அல்லது 15 பேர்தான் வித்தியாசம் என்று இருந்தால் நீங்கள் இன்றைக்கு ஆட்சியிலே இருக்க முடியாது.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** தலைவரவர்களே, ஒரு விளக்கம்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** நீங்கள் பிறகு கேளுங்கள் சொல்கிறேன். தனியாகக் கேளுங்கள் சொல்கிறேன்.

இந்தச் சூழ்நிலையில் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் அமலாக்கப்படக் கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. இந்த விகிதாச்சாரப் பிரதிநிதித்துவத்தை அமலாக்கவேண்டுமென்று கூறும்பொழுது விகிதாச்சாரப் பிரதிநிதித்துவத்தை அமலாக்கினால் ஒவ்வொரு கட்சிக்கும் இவ்வளவு சீட் என்று அவர்கள் கொடுக்கும் லிஸ்டிலே இருந்து பொறுக்க வேண்டும். அப்பொழுது 'ரீ கால்' என்பது எப்படி வரும்? நாடு தழுவிய முறையில் 'ரீ கால்' எப்படி வரும்? தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைத் திரும்ப அழைப்பது சாத்தியமா? திரும்ப அழைப்பது நல்லதுதான், ஆனால் அதை அமலாக்க முடியுமா? என்னைப் பொறுத்தவரையில் அதை அமலாக்க முடியும் என்று தோன்றவில்லை.
வில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, நான் அந்த முறையைப்பற்றி வாதிட விரும்பவில்லை. அந்த முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டால், ஒவ்வொரு கட்சிக்கும் கிடைத்த வாக்குகளின் அடிப்படையில் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க வேண்டும். 'ரீ கால்' என்று வரும்பொழுது அந்தக் கட்சியே அவர்களை—தவறு செய்தவர்களை—அவர்கள் ரீ கால் பண்ணலாம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: அதை எப்படிக் கண்டு பிடிப்பது? 'ரீ கால்' என்று சொல்லி அவர்களை வெளியே போகச் சொல்வது பிரச்னை அல்ல, ஆனால் மக்களில் பெரும்பாலோர் அவர்களை விரும்பவில்லை என்பதை எந்த அளவு கோலை வைத்துக் கண்டுபிடிப்பது? ஆகவே, இப்பொழுது இருக்கும் முறையில் ரீ கால் என்பது நடைமுறையில் சாத்தியமானது அல்ல என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மணி அடிக்கப்பட்டது) இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

திரு. வீ. இராசகோபால்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த அவையில் முதல்வரவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் நிதி நிலை அறிக்கையை நான் மனதார வரவேற்கிறேன்.

சமதர்ம சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்ற ஒரு அடிப்படையில், குன்றாத ஆர்வத்தில் இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருப்பது கண்டு உள்ளபடியே நாம் எல்லோரும் மகிழ்ச்சியடைய வேண்டும். இந்த நிதிநிலை அறிக்கையில் பல சிறப்பான அம்சங்கள், சமதர்ம சமுதாயத்தை உருவாக்கும் அம்சங்கள் இடம் பெற்றிருக்கின்றன. அதிலும் குறிப்பாக நெசவாளர்களுக்கான பாதுகாப்புத் திட்டம் இடம் பெற்றிருக்கிறது. இன்றையதினம் வறட்சிக்காக நம்மால் கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்கப்படும் நேரத்தில் மேலும் மதுவிலக்கை மீண்டும் கொண்டு வந்து அதனால் நஷ்டம் ஏற்பட்டிருக்கும் இந்த நிலையிலும் அரிசனங்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை முதலமைச்சரவர்கள் மிகவும் தீவிரமாகச் செயல்படுத்துவது உள்ளபடியே நாம் எல்லோரும் வரவேற்கக்கூடிய ஒன்றாகும்.

மீனவர்களுக்கு வீடு கட்டும் திட்டம் ஒரு புரட்சிகரமான திட்டமாகும். இந்தத் திட்டத்தை ஏழை எளிய மக்கள், மீனவ சமுதாயத்தினர் உள்ளபடியே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதுபோலவே, அநாதைச் சிறுவர்களுக்கான திட்டம், விதவைகளுக்கு மறுவாழ்வு கொடுக்கும் திட்டமும் டாக்டர் கலைஞர் அவர்களால் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட பல நல்ல திட்டங்களையெல்லாம் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஆனால் அதே நேரத்தில் விலைவாசி உயர்ந்து கொண்டே போகிறது. மாநில அரசைப் பொறுத்தவரையில் சாதாரண ஏழை எளியவர்களைப் பாதிக்கும் அளவில் வரிகள் விதிக்கப்படவில்லை. திராவிட முன்னேற்றக் கழக அரசு வரி விதிக்காமல் தன்னுடைய நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கும் நிலையை ஒவ்வொரு ஆண்டும் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு ஏதோ 5 கோடி ரூபாய்க்கு, ஏழை எளியவர்களைப் பாதிக்காத அளவில் இந்த வரியை





விதித்திருக்கிறார்கள். அதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் ஒவ்வொரு ஆண்டும் மத்திய அரசாங்கத்தில் 700 கோடி, 300 கோடி என்று வரியை விதித்துக் கொண்டே போகிறார்கள். இதனால் நாட்டிலே விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. நாட்டிலே உள்ள கறுப்புப் பணத்தின் காரணமாக விலை ஏறிக்கொண்டேப் போகிறது, கள்ளக் கடத்தலின் காரணமாக விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது.

மேலும் ஐந்தாண்டுத் திட்டங்களுக்காக இந்திய அரசாங்கம் நோட் அடிக்கிறது. அப்படி நோட் அடிப்பதால் விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. துரதிருஷ்டவசமாக தனியார் துறையிலேயும் நோட் அடிக்கும் நிலைமை இந்த நாட்டிலே இருக்கிறது. அதுவும் விலைவாசியேற்றத்திற்கு ஒரு காரணமாக இருக்கிறது. இப்படி, நாட்டிலே ஏற்படும் வளர்ச்சி ஒரு மடங்கு என்றால் விலைவாசியேற்றம் இரண்டு, மூன்று மடங்கு என்று வேகமாக வளர்ந்து கொண்டே செல்கிறது. பணத்தின் மதிப்பு வெகு அளவிலே குறைந்து விட்டது. ஆனால் மரியாதை இழந்த அந்தப் பணம் சாதாரண மக்களுக்குக் கிடைக்காத நிலை இந்த நாட்டிலே இருக்கிறது என்றால் அதைப்பற்றி சிந்திக்க வேண்டும்.

அதே நேரத்தில் இந்தப் பொருளாதாரச் சீரழிவைத் தடுக்க என்ன வழி வகைகள் காண வேண்டுமென்று எதிர்க்கட்சிக்காரர்கள் ஏதாவது சொல்கிறார்களா என்றால் நிச்சயமாக இல்லை. அவர்கள் சொல்வதெல்லாம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலேயிருந்து இறங்க வேண்டும், அவர்கள் ஆளுங் கட்சியாக வர வேண்டும் என்ற ஆர்வத்தைத்தான் அவர்கள் சொல்கிறார்களே தவிர பொருளாதாரச் சீரழிவைத் தடுக்க என்ன வழிவகை என்பதை எடுத்துக் கூற மறுக்கிறார்கள். அதற்கான பரிகாரத்தைத்தான் மாநில சுயாட்சி என்று சொல்கிறோம்.

இவ்வாறு சொல்லும்பொழுது அன்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆடி. அருணா அவர்கள் அண்ணாவே மாநில சுயாட்சியை ஆதரிக்கவில்லை என்று பெரிய அபாண்டத்தை இந்த அவையிலே சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்வதிலும் பொருள் இருக்கிறது. எனவே, அதற்காக ஆச்சரியப்படத் தேவையில்லை. ஏனென்றால் அண்ணாவைத் தலைவராக ஏற்றுக்கொள்ளாமல் காமராஜர் தான் என் தலைவர் என்று சொல்லிய எம்.ஜி.ஆரை அவர்கள் தலைவராக ஏற்றுக்கொண்டிருப்பதால் அவர்கள் மாநில சுயாட்சியை ஆதரிக்கவில்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. வி. இராசகோபால்] [1975 மார்ச் 5

ஆனால் நம்முடைய நாட்டிலே பொருளாதாரம் சீரழிந்து இருக்கிறது. மாநில சுயாட்சி நமக்கு வேண்டும், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் இருந்தால்தான் நாட்டு மக்களிடத்திலே நல்ல வளர்ச்சியை உண்டாக்க முடியும். நாட்டு மக்களுடன் நேரடித் தொடர்பு கொண்டிருக்கின்ற மாநில அரசுக்கு அதிக அதிகாரங்கள் இருந்தால் மக்களுக்கான வளங்களை உண்டுபண்ண முடியும் என்ற அடிப்படையில் கேட்கிறோம். ரஷ்யாவிலே ரஷ்யப் புரட்சிக்குப் பிறகு சீரழிந்த பொருளாதாரத்தை சீர்படுத்துவதற்காக 'நியூ எகனமிக் பாலிசி' என்று அதாவது புதிய பொருளாதார தத்துவம் என்று ஏற்படுத்தி பொருளாதாரத்தை சீர்படுத்தினார்கள். அதுபோல் இன்றைக்கு இந்தியாவிலேயும் பொருளாதாரம் சீரழிந்து இருக்கிறது. பணத்தின் மதிப்பு வேகமாகக் குறைந்து வருகிறது. இதை எப்படி சீர்திருத்த முடியும்? அதற்காகப் புதிய பொருளாதாரத் திட்டத்தை இந்திய அரசாங்கம் உருவாக்காவிட்டால் இதைச் செம்மைப்படுத்த முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியைப்பற்றி சில கோரிக்கைகளைச் சொல்லி என்னுடைய உரையை முடிக்க ஆசைப்படுகிறேன்.

என்னுடைய வந்தவாசி தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. ஐந்தாண்டுத் திட்டத்திலே சர்க்கரை ஆலைகள் நிறுவுவதாக இருக்கிறது. தற்போது மதுராந்தகத்தில் உள்ள படாளம் சர்க்கரை ஆலைக்கு தேவையான கரும்பில் மூன்றில் இரண்டு பங்கு வந்தவாசியிலிருந்து போகிறது. வந்தவாசியில் கரும்பு உற்பத்தி ஏராளமாக இருக்கிறது. ஆகவே, செய்யாறுக்கும், வந்தவாசிக்கும் இடையே இச்சூர்காட்டில் சர்க்கரை ஆலை அமைய சிறந்த இடமாக இருப்பதால்—அந்த இடத்தை சர்வே செய்ததாகவும் அறிகிறேன்—அந்த இடத்தில் சர்க்கரை ஆலை ஒன்றினை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வந்தவாசியில் ஒரு பெண்கள் கல்லூரியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று ஒவ்வொரு ஆண்டு நிதிநிலை அறிக்கையின்போதும் கேட்டுக்கொண்டிருக்கிறேன். வாலாஜாவில் பெண்கள் கல்லூரி இருக்கிறது. செய்யாற்றில் ஆண்கள் கல்லூரி இருக்கிறது. வந்தவாசி செங்கற்பட்டை ஒட்டி வட ஆற்காடு மாவட்டத்தில் பார்டராக இருக்கும் காரணத்தால் அங்கு ஒரு பெண்கள் கல்லூரி ஏற்படுத்தித் தர அரசு முன்வரவேண்டும்.

வந்தவாசியைத் தாண்டிச் செல்லும்போது ஐந்து கல் பாலம் ஒன்று இருக்கிறது. அந்தக் குறுகிய பாலத்தில் பேருந்துகள் செல்லும்போது மனிதர்கள் நடமாட முடியாது. திருவண்ணாமலை, போளூர் செல்லுகிற பஸ்கள் அந்தப் பாலத்தின் வழியாகத்தான் போகவேண்டும். அந்தப் பாலத்தை விரிவுபடுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



1975 மார்ச் 5]

திரு. கோவை செழியன்: துணைத் தலைவர் அவர்களே, 1975-76-ம் ஆண்டினுடைய நிதிநிலை அறிக்கை பற்றி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த இந்த பட்ஜெட்டில் வழக்கம்போல் வார்த்தை ஜாலங்களும், கதை சொல்லுகிற பாணியிலுந்தான் இந்த பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருக்கிறதே தவிர, இதிலே எந்தவிதமான புரட்சியோ, புதுமையோ, பொருளாதாரத்தில் மாற்றமோ, மக்களுடைய துயர் துடைக்கும் திட்டங்களோ எதுவும் கிடையாது. காரிய சாத்தியமான அறிவிப்புகள் எதுவும் இல்லை. தனிப்பட்ட தர்மஸ்தாபனங்கள், அறநிலையங்கள் செய்கிற காரியங்களை ஒரு பெரிய அரசாங்கம் 'நான் செய்கிறேன், நான் செய்கிறேன்' என்று பெருமையாக எடுத்துச் சொல்லுவது எந்த விதத்தில் சிறப்பு என்பதை என்னாலே புரிந்து கொள்ள முடியவில்லை.

இந்த பட்ஜெட்டைப் பற்றிப் பேசும்போது ஒருவர் சொன்னார்—இந்த பட்ஜட் திருவாசகம் போன்று இருக்கிறது; இது நாலடியார், திருப்பாவை, திருவெம்பாவை, தேவாரம் என்றெல்லாம் புகழ்ந்தார். ஒரு அமைச்சரைப் புகழ எல்லை கூடக் கிடையாதா? எப்படி வேண்டுமானாலும் பேசுகிறார்கள். அது அவர்களுடைய நிலை. நான் தலையிடவில்லை. ஒருவிதத்தில் அந்த நண்பர் உண்மையை ஒப்புக் கொண்டிருக்கிறார். இந்த பட்ஜெட் உரையில் நிதி இல்லை, அரசியல் இல்லை, பொருளாதாரம் இல்லை. இது வெறும் வார்த்தை ஜாலங்களோடு கூடிய பஜனைப் பாடல்தான் என்று அவர் கூறாமல் கூறியிருக்கிறார்.

'தாவாரம் இல்லை, தனக்கு ஒரு வீடும் இல்லை,
தேவாரம் ஏதுக்கடி குதம்பாய்'

என்று சித்தர் பாடினார்.

தாவாரம் இல்லாமல் தெருவே மாளிகையாக, தெரு ஓரமே பள்ளியறையாக வைத்துக்கொண்டு வாழ்கிற ஆயிரக் கணக்கான மக்களுக்கு, அவர்களின் வாழ்க்கைக்கு இந்த பட்ஜெட்டிலே எந்தவிதமான அறிவிப்பும், திட்டமும் இல்லை.

அதைப்பற்றி கேட்டால் மாநில சுயாட்சி வந்தால் எல்லாவற்றையும் செய்வோம், இப்போது அதிகாரம் இல்லை, ஆகவே, செய்ய முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். அந்த அதிகாரத்திற்காகப் போராட ஆட்சியை விட்டுக் கீழே இறங்கி மாநில சுயாட்சி பெறுவதற்காகப் போராட்டம் நடத்தி அதைப் பெற்று ஆட்சியிலே வந்து உட்கார வேண்டும். 'ஆட்சியிலே இருப்பேன்;

அந்த அந்தஸ்தையும், பெருமையும் அனுபவித்துக் கொள்வேன். அதே நேரத்தில் அதிகாரம் இல்லை, ஆகவே, செய்ய மாட்டேன்' என்று சொல்லிக் கொண்டிருந்தால் உண்மையிலேயே நாட்டு மக்கள் இதைக் கேலிக் கூத்து என்று தான் சொல்லுவார்கள்.

நேற்று என்னுடைய அருமை நண்பர் மாண்புமிகு ஆலடி அருணா அவர்கள் அண்ணாவினுடைய கருத்துக்களைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். அண்ணாவினுடைய கருத்துக்களில் அடானமி என்ற வார்த்தையை அவர் சொன்னாரா இல்லையா என்பதைப்பற்றிய விவாதமே தேவையில்லை. அவர் பேசும்போதே அண்ணா அந்த இரண்டு இடங்களில் ஒத்துக்கொண்டார் என்று சொல்லியிருக்கிறார்கள். அண்ணாவின் கருத்துக்களைப்பற்றித் தெரிந்து கொள்ள இல்லஸ்ட்ரேடட் விக்லி திருப்பர் ராமன் ஆபீசுக்கும், ம. பொ. சிவஞான கிராமணியார் வீட்டுக்கும் போகவேண்டாம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் அலுவலகத்திற்கே செல்லலாம். அண்ணாவின் இல்லத்திற்கே செல்லலாம். அண்ணா அவர்கள் சில நேரத்தில் சில கருத்துக்களைச் சொல்லி வந்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் பல கருத்துக்களைச் சொல்லி வருகிறார்கள் என்றால் அவர்கள் ஒரு பெரிய மேதை, பல நூல்களைக் கற்றவர்கள், பல நேரங்களில் பல கருத்துக்களைச் சொல்லிக்கொண்டு வருவார்கள். அந்தக் கருத்துக்கள் அனைத்தும் நாட்டுக்குத் தேவை, கழகத்திற்குத் தேவை, ஆட்சிக்குத் தேவை என்று அவர்கள் எண்ணியிருப்பார்களானால் அதற்காக ஒரு போராட்டத்தையே நடத்தியிருப்பார்.

'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற கருத்தை அவர்கள் நம்பியபோது எப்படி அதைப்பற்றி எடுத்துச் சொன்னார்களோ அந்த அளவு அடானமி பற்றி அவர்கள் எடுத்துச் சொல்லவில்லை. அடானமி பற்றி அண்ணா அவர்கள் சொன்னார்கள். இல்லையென்று மறுக்கவில்லை.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)**: நண்பர் செழியன் அவர்கள் நேற்றையதினம் ஆலடி அருணா அவர்கள் பேசிய பேச்சை, அந்தப் பேச்சிலே ஏற்பட்டுள்ள தேங்கலை இன்றையதினம் நிரப்பிக் கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அன்றையதினம் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். இந்த மாநில சுயாட்சி அண்ணாவின் கொள்கை அல்ல; மாநில சுயாட்சி என்று அறிஞர் அண்ணா அவர்கள் பொதுக் குழுவிலோ செயற் குழுவிலோ முடிவு செய்யவில்லை என்றெல்லாம் சொன்னார்கள். அதனால் அவர்களுடைய கட்சிக்கு ஏற்பட்டிருக்கும் சங்கடங்களைச் செழியன் அவர்கள் பூர்த்தி செய்கிற வகையில் பேசினார். விருகம்பாக்கம் மாநாட்டிலே ஆட்சிக்கு வருவதற்கு முன்பாக அறிஞர் அண்ணா அவர்கள் கூறியிருக்கிறார்கள். நான் அரசாங்கம் அமைத்தால் எப்பேர்ப்பட்ட அரசாங்கம் இருக்க வேண்டும் என்பதைப்பற்றி லட்சிய பூமி



என்ற தலைப்பில் சொன்னார்கள். 'அரசியல் முறையில் அதை ஃபெடராலிசம்—கூட்டாட்சி என்று சொல்லலாம், பொருளாதாரத் துறையில் சோஷலிசம்—சமதர்மம் என்று சொல்லலாம், அரசியலமைப்பு முறைப்படி டெமாக்ரசி—ஜனநாயகம் என்று சொல்லலாம், இலக்கியத் துறையில் ஐடியலிசம் என்று சொல்லலாம், எல்லோரும் இன்புற்றிருக்கும் அந்தப் பூமிதான் என் லட்சிய பூமி' என்று அண்ணா அவர்கள் இன்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருப்பவர்களையும் வைத்துக்கொண்டு சொன்னார்கள். அண்ணா அவர்கள்தான் இன்று உங்களைக் காப்பாற்ற வேண்டும்.

**திரு. ஆலடி அருணா**: நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நேற்றையதினம் எப்படி என்னுடைய வாதத்தை தவறாகப் புரிந்து கொண்டார்களோ அதே அடிப்படையில்தான் இன்றைக்கும் தவறாகப் புரிந்து கொண்டு பேசுகிறார்கள். நாங்கள் 'அண்ணா சொன்னார்' என்பதை மறுக்கவே இல்லை. அது அண்ணாவின் கொள்கை அல்ல என்றுதான் சொல்லுகிறோம்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)**: முஸ்லீம் சகோதரர்களுக்குத் திருக்குரான் எப்படி வேதவாக்கோ, கிறித்தவர்களுக்கு பைபிள் எப்படி வேதவாக்கோ அதே போல்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தினருக்கு திராவிட நாட்டில் அண்ணா அவர்கள் எழுதுவது வேதவாக்காகும். திராவிட நாடு ஏட்டில் 18—3—1959 இதழில் "பொன் விலங்கு" என்ற தலைப்பில் அண்ணா அவர்கள் எழுதியிருக்கிறார்கள்—'இந்திய அரசியலமைப்பு என்ற பொன் விலங்கு பூட்டப்பட்டிருக்கிறது மாநிலங்களின் கரங்களில். அதனாலே மாநிலங்களிலே ஆட்சி பீடத்திலே அமர்த்தப்படுகிற எவரும், டில்லி மூலவரின் ஆணைக்குக் கட்டுப்பட்டு அவர்கள் கிழிக்கின்ற கோட்டைத் தாண்ட முடியாத வகையில் நடந்தாக வேண்டும். எஜமானாக இருந்து டில்லி அவர்களை ஆட்டிப்படைக்கும், எடுபிடிகளாக இருந்து குற்றேவல் புரிந்தாக வேண்டும், இவர்கள்!"—இவை அண்ணா அவர்களுடைய வார்த்தைகள். இதையே மறைக்கின்ற மறுக்கின்ற அளவுக்கு அவர்கள் சென்று கொண்டிருக்கிறார்கள் . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசுகிற பேச்சில் இவற்றையெல்லாம் ஆதாரம் காட்டிப் பேசலாம். குறுக்கீட்டில் இப்படி ஒரு தனிப் பேச்சு பேசக் கூடாது.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்)**: துரதிருஷ்டவசமாக இன்று அறிஞர் அண்ணா அவர்கள் இல்லை—அதை மறுப்பதற்கு.

**திரு. ஆலடி அருணா**: தலைவரவர்களே, திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் கருத்தின் மையம் இந்த மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும், உரிமை வேண்டுமென்று சொன்னால் இந்த மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும்,

உரிமை வேண்டுமென்பதை நாங்களும் ஒத்துக் கொள்கிறோம். அதிக அதிகாரம் என்பது வேறு, மாநில சுயாட்சி என்பது வேறு. அண்ணா என்ன சொன்னாரோ அது வேறாம் என்று சொன்னால் அவர் மது விலக்குப் பிரச்சினையை கொள்கையாக வைத்திருந்தார். தீர்மானமாகவே தந்தார், திட்டமாகவே தந்தார். அதை குற்றுயிராக்கி, குலையுயிராக்கி குழி தோண்டிப் புதைத்தீர்கள். நீங்கள் எவ்வளவு யோக்கியர்கள் என்பது நாட்டிற்குத் தெரியும்.

THIRU V. KRISHNAMOORTHY: Let them not skip the words. What is meant by Federalism?

**திரு. ஆலடி அருணா:** தலைவர் அவர்களே, அதிக அதிகாரங்கள் வேண்டுமென்பதை நாங்கள் மறுக்கவில்லை. கட்டுண்டு வாழ்வோம், சம நிலையில் இருப்போம் என்று சொல்லியிருக்கிறோம். ஆகவே, அதிக அதிகாரங்கள் வேண்டாமென்று சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, இதிலே அதிக விவாதமே தேவையில்லை. ஒரே வார்த்தையில் திரு. ஆலடி அருணா அவர்களும் மற்றவர்களும், எங்கள் தலைமை மாறி விட்டது, இந்த அளவிற்குத்தான் விளக்கத்தை ஏற்றுக் கொள்வோமே தவிர நாங்களே தந்த விளக்கமாக இருந்தாலும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று சொல்லலாம். அப்படிச் சொல்ல அவர்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால், நாங்கள் ஒரே தலைமையில் இருக்கிறவர்கள், ஏற்கெனவே எதை விளக்கிக் கொண்டோமோ அதைச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அவர்கள் புதிய விளக்கங்களைப் பெற்றிருக்கிறார்கள், ஆகவே அதைச் சொல்கிறார்கள்.

(பல அங்கத்தினர்கள் பேச எழுந்திருந்தார்கள்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கோவை செழியன் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார். அவரே விளக்கம் சொல்லட்டும்.

**திரு. ஆலடி அருணா:** தலைவர் அவர்களே, ஆளும் கட்சியினர் இப்படிப் பேசி எதையோ சாதித்து விட்டதாக நினைத்துக் கொள்கிறார்கள். ஆகவே நான் விளக்கம் தரவேண்டும் . . .

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, புதிய ஒரு இயக்கம் ஏதாவது ஒரு பெயரால் அமைந்ததற்குப் பின்னாலே அந்தத் தலைவர் சொல்கிற கருத்துக்களை நாங்கள் சொல்கிறோம். அண்ணா இப்படித்தான் சொன்னதாக விளக்கத்தைப் பெற்றுச் சொல்கிறோம் என்று அவர்கள் சொல்லலாம். ஆனால்



அண்ணா அவர்கள் சொன்னது என்று ஒன்றையே தொடர்ந்து சொல்லி வருகிற கட்சியைச் சேர்ந்த நாங்கள் எப்படி அப்போதைக்கப்போது எங்கள் கொள்கையை மாற்றிக் கொள்ள முடியும்?

DR. H. V. HANDE: Sir, we have taken oath under the Constitution. Although the hon. Member, Mr. Krishnamoorthy has quoted Anna as saying about Federalism, it is not what Mr. Krishnamoorthy means. No one disputes about Anna's ideas. There can be no two opinions about what he has said. But, the way in which he is giving interpretation to what Anna said is not quite correct. Federalism is not State Autonomy. Federalism is Federalism. It means more powers to the States. There is a distinction between the two things. That is what Mr. Aladi Aruna, Kovai Chezhian and myself and all of us are trying to bring home to them. We are agreeing with the Constitution. We have taken oath under the Constitution. It enshrines federalism. Even the Preamble contains it. It is a federal Constitution. Therefore, I say there is no necessity for this and I submit there is no need for this controversy at all.

**திரு. கோவை செழியன்:** தலைவர் அவர்களே, இதற்கு இவ்வளவு பெரிய விவாதமே தேவையில்லை. நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். இந்த கருத்துக்களை, அண்ணா அவர்கள் சொன்ன பெடரலிஸம் என்ற கருத்துக்களை நாங்கள் மறுக்கவில்லை. அதைத்தான் எங்களுடைய கொள்கையில் சொல்லி இருக்கிறோம். அதாவது கட்டுண்டு யாருக்கும் இருக்க மாட்டோம் என்பதன் பொருள் அது தான்.

THIRU L. GANESAN: Your aim is that you are neither dependent nor independent, but inter-dependent.

**திரு. கோவை செழியன்:** இந்தக் கொள்கையைத்தான் அண்ணா அவர்கள் பெடரலிஸம் என்று சொன்னார்கள். இது அரசியல் தத்துவங்கள்—பொலிடிகல் பிலாசபி—படித்த அத்தனை பேர்களுக்கும் தெரியும்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் கோவை செழியன், ஆலடி அருணா இவர்களெல்லாம் அண்ணா அவர்களுடைய கொள்கையில் நிலைத்தவர்கள். எந்த அளவிற்கு நிலைத்தவர்கள் என்றால் இன்றைக்கு அந்தக் கட்சியினுடைய கொள்கை என்னவென்று சொல்வதற்கு முடியாத அளவிற்கு ஏற்கெனவே அண்ணா அவர்களுடைய கொள்கையில் நிலைத்தவர்கள். நேற்றையதினம் பெரிய ஒரு கருத்தை

[திரு. ச. இராமச்சந்திரன்] [1975 மார்ச் 5

மாண்புமிகு உறுப்பினர் ஆலடி அருணா அவர்கள் திரும்பச் சொன்னார்கள். அதாவது மாநில சுயாட்சி என்பதை அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்களே தவிர கொள்கையாக ஏற்றுக் கொள்ள வில்லையென்று சொன்னார்கள்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கோவை செழியன் அவர்களும் மற்றவர்களும் எங்களை எவ்வளவு வேண்டுமானாலும் குறை சொல்லுங்கள், ஆனால் கொள்கைகள் நிரந்தரமாக நாட்டு மக்களிடத்திலே இருக்க வேண்டியவைகள். நாம் எல்லாம், மனிதர்கள், நிரந்தரமானவர்கள் அல்ல. ஆனால் கொள்கை என்பது நிரந்தரமானது. நாட்டு மக்களுக்கு அது பயன்பட வேண்டுமென்ற அந்த அடிப்படையில் பார்க்கிறபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்து விட்டார்கள் என்ற காரணத்தினால் அவர் சொன்னவைகளையெல்லாம் மறந்து விடுவோம் என்று பொருள் அல்ல.

அந்தக் கொள்கைகளை எந்த நிலையில் இருந்தாலும், எங்கே இருந்தாலும், எவ்வளவுக்கெவ்வளவு அவைகளை எடுத்துச் சொல்கிறோமோ அவ்வளவுக்கு நம்முடைய தலைமுறையிலே நன்மை கிடைக்காவிட்டாலும் வருங்காலத்திலே நன்மை கிடைக்கும். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைப் பற்றி எங்கோ நாமன் வீட்டிலேயும் அல்லது வேறு எந்தெந்த அலுவலகத்திலோ சென்று தேட வேண்டிய அவசியம் என்னவென்று மாண்புமிகு உறுப்பினர் கோவை செழியன் அவர்கள் கேட்டார்கள். அவர்கள் கேட்கிற தகவலை எடுத்துச் சொல்ல உரிமை படைத்தவனாக இருக்கிறேன். நேற்றைய தினம் பத்திரிகையை எடுத்து வருவோம் என்று விரும்பினேன். ஆனால் கிடைக்கவில்லை. ஏனென்றால் அண்ணா அவர்களின் கொள்கையைப் பற்றிய தெளிவைப் பெற்றுக்கொள்வது அனைவருக்கும் நல்லது. திராவிட நாடு திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையாக இருந்ததா இல்லையா? ஏனென்றால் தற்பொழுது இல்லையென்று சொல்லிவிடுவோமானால் இது கொள்கை இல்லையென்று ஆகும்.

திரு. ஆலடி அருணா: Whether it is a declared policy? என்ற வகையில் கேட்டேன்.

அமைச்சரவர்கள் என்னைப் பற்றிக் குறிப்பிட்ட காரணத்தினால் சொல்ல விரும்புகிறேன். திராவிட நாடு திராவிடருக்கே என்று திராவிட முன்னேற்றக் கழகம் ஒவ்வொரு மாநாட்டிலும் தீர்மானம் போட்டிருக்கிறது. அதனுடைய சட்ட திட்ட புத்தகத்தில் கொள்கைகளுக்கு முன்னால் முதல் கொள்கையாக அது இருந்து வருகிறது. அமைச்சர் மாண்புமிகு ராமச்சந்திரன் அவர்கள் எங்களைப் பார்த்து நாங்கள் மறந்து விட்டோம்



1975 மார்ச் 5] [திரு. ஆலடி அருணா]

என்று சொன்னார்கள். நீங்கள் மறந்துவிட்ட காரணத்தினால் உங்களுக்கு அந்த விவரங்கள் சரியாகத் தெரியவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட நாட்டைப் பற்றிச் சொல்கிறபோது அவர்களே சொன்னார்கள், கொள்கைகளை எந்த இயக்கமும் தீர்மானமாகப் போட்டு நிறைவேற்றுவதில்லை என்று சொன்னார்கள். பொதுவுடைமைக் கட்சி இருக்கிறதென்றால் அந்தக் கட்சி, வந்ததும் எல்லாவற்றையும் பொதுவுடைமையாக்குவோம் என்று தீர்மானம் போடுவதில்லை. எய்ம்ஸ் அண்டு ஆப்ஜக்ட்ஸ் என்று சொல்லி ஒருவர் உறுப்பினராகச் சேருவதற்கே இந்த திட்டத்தை ஒத்துக் கொண்டால் தான் உறுப்பினராக சேர்ப்போம் என்று சொல்லப்படும். ஆகவே, அந்தக் கொள்கையை, லட்சியத்தை தீர்மானமாகப் போட்டு நிறைவேற்றுவதில்லை. கழக சட்ட திட்டங்களில் நோக்கம், குறிக்கோள் அதாவது எய்ம்ஸ் அண்டு ஆப்ஜக்ட்ஸ் என்று அண்ணா அவர்கள் போட்டிருக்கிறார்கள். இதை ஒத்துக் கொண்டால் தான் உறுப்பினராவதற்கே தகுதி உடையவர்கள். இவைகளை ஏதோ உங்களுக்காகச் சொல்கிறேன் என்பது அல்ல. சில விளக்கங்களை நாங்களே தெரிந்துகொள்வது நல்லது என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இதை படித்துக் காட்டி விட்டால் எல்லா குழப்பமும் தீர்ந்துவிடுமென்று எண்ணி இதை படித்துவிடுகிறேன். குறிப்புகளில் இருந்தால் உங்களுக்கும் நல்லது.

What were the main objectives of your party in those early days? உங்களுடைய கட்சியினுடைய முக்கியமான குறிக்கோள் ஆரம்ப காலத்தில், என்ன?

(1) Dravida Nadu,
(2) Democracy,
(3) Socialism.

Democratic socialism is a mere slogan so far as the Congress is concerned. The terms democracy and socialism mean something different to us. They represent a way of life என்று இதிலே விளக்கமாக வருகிறது.

What are the main aims of the D.M.K. today? திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நோக்கங்கள் இன்று என்ன?

(1) A Dravida Union within the Indian Constitution;
(2) The re-shaping of the Constitution so that it becomes effectively federal;

[திரு. ச. இராமச்சந்திரன்] [1975 மார்ச் 5

நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். அண்ணா அவர்கள் கேட்ட அளவிற்கு நாங்கள் கேட்கவில்லை என்று சொன்னார்கள். அது உண்மை தான்.

(3) Fuller autonomy to the States (Loud Laughter)

நாங்கள் கேட்பது autonomy—What he said was not even greater autonomy but fuller autonomy முழு சுயாட்சி.

So (3) Fuller autonomy to the States

(4) Proportional representation;

(5) Democratic socialism;

(6) Eradication of caste

ஆகவே திராவிட முன்னேற்றக் கழகத்தின் நோக்கம் இது என்பதை ஒத்துக்கொண்டால் நான் உறுப்பினரானதற்கே தகுதி உடையவர்கள் என்ற தன்மையில் வருகிறது. அரசியல் சட்டத்தில் சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டிய உரிமைகளைப் போல எந்தெந்த சுயாட்சி உரிமைகள் கிடைக்கின்றனவோ அந்த அளவிற்கு நல்லது தான் என்பது இயக்கத்தின் அர்த்தமாகும். இதைப்பற்றி மேன்மேலும் விமர்சனம் செய்வது தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-30]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செழியன், இன்னும் 10 நிமிடங்களில் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கோவை செழியன்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் இராமச்சந்திரன் அவர்கள் இவ்வளவு நேரத்தை வீண் செய்து இருக்கத் தேவையில்லை. சென்ற முறை அவர்கள் அப்பால் சென்று இருந்தபோது இதே 'இல்லஸ்டிரேடட் வீக்லியை' எடுத்து வந்து அதே வாசகங்களை நான் படித்துக் காட்டினேன். நாங்கள் அந்தக் கொள்கையில் இருக்கிறோம், நீங்கள் அந்தக் கொள்கையில் இல்லை என்று சொன்னேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையே அது தான், இன்டிபென்டென்ட். இன்டிபென்டென்ட் என்றால் என்ன பொருள்.

அதைத்தான் மாமன்றத்தில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக பொதுக்குழுவில், முதன்முதலில் சட்ட திட்டம் உருவாக்கியபோது— மாண்புமிகு அமைச்சர் அன்பில் தர்மலிங்கம், மாண்புமிகு அமைச்சர்



1975 மார்ச் 5] [திரு. கோவை செழியன்]

ப. உ. சண்முகம் என் அருகில் அமர்ந்து இருந்தார்கள்—ஏறத்தாழ 3 மணி நேரம் அண்ணா அவர்களோடு நான் விவாதித்தேன், இதே கருத்து வரவேண்டுமென்று சொல்கிறபோது, 'பெடரல் செட் அப்' தேவை என்று சொன்னபோது (குறுக்கிட்டு) அதற்கும் மேலே 'கான்பெடரல் செட்-அப்' தேவை என்று சொன்னார்கள். அதைத்தான் வலியுறுத்திச் சொன்னேன். மாண்புமிகு அமைச்சர் சொன்னார்கள், நாங்கள் பயந்து கொண்டோம் என்று. திருச்சி மாநாட்டில் தீர்மானம் போட்டு இருக்கிறோம். அந்த செட்-அப் வரவேண்டுமென்றால், தற்போதுள்ள அரசியல் சட்டத்தையே மாற்றவேண்டுமென்று வலியுறுத்தித் தீர்மானம் போட்டு இருக்கிறோம். உங்களைப்போல் பயந்து கொண்டு இருக்கவில்லை. அண்ணா அவர்கள் பல நேரங்களில் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார். அந்தக் கருத்து நாட்டிற்கும், கட்சிக்கும் தேவை என்றால் . . . .

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** திரு. கோவை செழியன் அவர்கள் தன்னுடைய கருத்தை வலியுறுத்த எவ்வளவு வேண்டுமானால் சொல்லட்டும். ஆனால், அண்ணா அவர்கள் பல நேரங்களில் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள் என்று சொல்ல வேண்டாம். சில நேரங்களில் சில மனிதர்கள் என்று கருத்து வருகிற முறையில் போகக்கூடாது, பல நேரங்களில் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார் என்றால் '[illegible] சேஞ்சஸ்' காலத்தோடு ஒட்டி, தேவைக்கு ஏற்ப எதை மாற்றவேண்டுமென்று நினைக்கிறாரோ அதை உலகத்திற்கு அறிவித்துவிட்டு செய்து இருக்கிறார். சில நேரங்களில் சில மனிதர்கள் என்றால் எப்படித் தோன்றுகிறது, அதே அடிப்படையில் பல நேரங்களில் பல கருத்துக்களை சொன்னார் என்று செழியன் போன்ற நண்பர்கள் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கோவை செழியன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சினிமா தலைப்பில் ஆர்வம் வைத்து இருப்பதற்கு பாராட்டுகிறேன். சில நேரங்களில் சில மனிதர்கள் வேறு யாரும் இல்லை. நீங்கள் தான்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** சில நேரங்களில் சில மனிதர்கள் என்ற கருத்து எவ்வளவு பொதுப்படையாக, எப்படி ஒரு மனிதனின் தடுமாற்றத்தைப் பிரதிபலிக்கிறதோ அந்த மாதிரி பல நேரங்களில் பல கருத்துக்கள் சொல்லியிருக்கிறார்கள் என்று கூறினால் அது நன்றாக இல்லை. திரு. செழியன் அவர்கள் அண்ணா அவர்களைப் பற்றி பெருமையாக நினைத்துக்கொண்டிருப்பவர், அவர் இப்படிப் பேசவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கோவை செழியன்:** திசை திருப்ப வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். அண்ணா அவர்கள் பல நேரங்களில் பல உயர்ந்த தத்துவங்களை சொன்னார்கள். நீங்கள் எதற்காக அதற்கு ஒரு தவறான கருத்தைச்

சொல்கிறீர்கள் நீங்கள் அண்ணாவை மறந்துவிட்டீர்கள், நீங்கள் வேண்டுமானால் அண்ணாவின் கொள்கைகளைச் சிதைக்கலாம், சித்திரவதை செய்யலாம், நாங்கள் அதைச் செய்யமாட்டோம். (குறுக்கீடு) இன்று அமைச்சரவையில் யார் யார் எங்கே உட்கார்ந்து இருக்கிறார்கள் என்பது தெரியும். (குறுக்கீடு) தமிழ் தேசியக் கட்சிக்குப் போனது யார் (குறுக்கீடு) போனதற்குக் காரணம் உங்கள் மாதிரி சில பேர் இருப்பதால் தான் . . .

**திரு. முனு ஆதி :** அண்ணாவைக் கேவலமாகப் பேசியவர்கள்கூட அமைச்சர்களாக இருக்கிறார்கள் . . .

**திரு. கோவை செழியன் :** மனிதர்கள் என்னுகிற பல கருத்துக்களை சில நேரங்களில் எடுத்துச் சொல்வார்கள். அப்படிச் சொல்கிறபோது, 'இன்டன்ஷன்' என்பதற்கும், 'எக்ஸ்பிரஷன்' என்பதற்கும், 'ஆக்ஷன்' என்பதற்கும் வேற்றுமை உண்டு. அண்ணா அவர்கள் சில நேரங்களில் சில கருத்துக்களைச் சொல்வார்கள். சில நேரங்களில் மிக அத்தியாவசியம் என்று எண்ணுகிற கருத்துக்களுக்கு செயல் வடிவம் கொடுப்பார்கள். அது பெரிய அறிஞர்களுக்கே உரிய செயலாகும். நான் இன்னமும் சொல்கிறேன், பேரறிஞர் அண்ணா அவர்கள் 'நியு சிவிலிசேஷன்' என்ற கருத்தில் ஆர்ட்ஸ் காலேஜில் பேசுகிறபோது சொன்னார்கள், ஐரோப்பிய அறிஞர் 'வெண்டல் வில்கி' என்றவர் எழுதிய 'ஒன் கவர்ன்மெண்ட்' என்ற புத்தகத்தைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். "இன்று நான் திராவிட நாடு கேட்கிறேன், காரணம் அதற்கு சில காரணங்கள் இருக்கின்றன. ஒரு காலத்தில் வரும், உலகமே ஒரே நாடு, ஒரே ஆட்சியாக வந்தால், அதற்கு நான் விரோதியாக மாட்டேன்' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. க அன்பழகன் :** உலகம் முழுவதும் ஒரு அரசு என்று சொன்னால், நான் அதற்கு விரோதியாக மாட்டேன் என்று சொன்ன கருத்து, உலகம் முழுவதும் ஒரே அரசு என்ற கருத்தின் அடிப்படையில் அல்ல. அப்படிப்பட்ட அரசு, அப்படிப்பட்ட மக்களுக்கு அடிப்படையாக நன்மை செய்கிற கருத்து என்பதற்கு ஆதாரமாக அதைச் சொன்னார்கள். நம்முடைய உரிமையை இழந்து விட்டு, உலகம் முழுவதும் ஒன்று என்ற அடிப்படையை மட்டும் வைத்து அவர்கள் பேசவில்லை

**திரு. கோவை செழியன் :** நம்முடைய உரிமையை விட்டுக்கொடுக்க வேண்டுமென்று எந்த நேரத்திலும் நான் சொல்லவில்லை. நீங்கள் இப்படி எல்லாம் சொல்லி, என்னுடைய காலத்தை வீணாக்க வேண்டாம். அமைச்சர் அவர்கள் நான் பேசுவதற்கு இடையூறு இல்லாமல் இருக்கவேண்டும்.



அண்ணா அவர்கள் இன்று உயிரோடு இருந்தால் உங்களைப் பார்த்துச் சொல்லியிருப்பார், 'நான் இந்த நாட்டுக்குப் பாடுபட்டேன், இந்த மக்களுக்காக என்னென்ன தியாகங்களைச் செய்தேன், ஆனால் இவைகளையெல்லாம் குலைத்து விட்டு இந்த நாட்டை சுடுகாடாகி விட்டார்கள்' என்று நிச்சயமாக சொல்லியிருப்பார்கள்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அண்ணா அவர்கள் மட்டும் இருந்து இருப்பார்கள் என்றால், ஒரு வேளை அந்த அளவுக்குக் கற்பனை உண்மையாக இருக்குமா என்பது வேறு. அதே நேரத்தில் இந்தத் தம்பிகள் வேறு பக்கம் போவதற்கும், வேறு தலைமை தேடுவதற்கும் அண்ணா அவர்கள் நிச்சயம் இடம் கொடுத்து இருக்க மாட்டார்கள்.

(திரு. ஆலடி அருணா எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் உட்காருங்கள். உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார். அவரே பதில் சொல்வார்.

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவரவர்களே, அண்ணா இருந்தால் தலைமையை மாற்ற மாட்டார்கள் என்று சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன், தலைமை எந்த நேரத்தில் மாற்றவேண்டுமென்று தோன்றுகிறதோ அந்த நேரத்தில் அந்தத் தலைமை எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும், அந்தத் தலைமையிலிருந்து விலகிவிடுகிறேன் என்று சொன்னதற்கு ஒரு ஆதாரத்தை நான் சொல்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். தலைவரவர்களே, நாம் இப்போது பட்ஜெட் மீது பொது விவாதம் நடத்திக்கொண்டு இருக்கிறோம். அனாவசியமாக ஒரு பெரிய பெருமகனைப் பற்றி இங்கே ஒரு கருத்தும், அங்கே ஒரு கருத்தும் கூறப்படுவது, அப்படிப்பட்ட பெருமகனார் மீது நாட்டு மக்கள் எப்படி சிந்திப்பர் என்று பார்க்க வேண்டும். அப்படிப் பேசுவது எங்களுக்கு எல்லாம் மிகுந்த மனவேதனையை அளிக்கிறது. அண்ணா அவர்களைப்பற்றி பேசவேண்டுமானால், நாங்கள் ஒரு செமினார் ஏற்பாடு செய்து தருகிறோம், அதில் 'நாங்கள் கண்ட அண்ணா' என்று அவர்கள் பேசலாம். தயவுசெய்து அவர்கள் இப்படி இங்கே இப்போது பேச வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(திருவாளர்கள் ஆலடி அருணா, பெ. சீனிவாசன், முனு ஆதி ஆகியோர் எழுந்து நின்று ஒரே நேரத்தில் பேசினர்.)

*திரு. முனு ஆதி :* அநாவசியமாக என்று சொல்கிறார். அவர் அப்படிச் சொல்லக்கூடாது. (He should not say that) அப்படி சொல்லக் கூடாது. அப்படிச் சொன்னால், அமைச்சர் சொல்வது 'அனாவசியம்' நாம் என்ன அனாவசியமாகவா பேசிக்கொண்டிருக்கிறோம். இங்கே ஒரு கருத்து, ஒரு கொள்கை முதல் அமைச்சர் சொல்லியிருக்கிறார். அது குறித்து நாம் வாதாடுகிறோம். அவர் 'அனாவசியமாக' என்று சொல்கிறார். அண்ணா அவர்களுக்குச் சம்பந்தம் இல்லாத கட்சியைச் சேர்ந்தவர் அவர், அவர் ஏன் இதில் தலையிடவேண்டும்?

THIRU M. A. LATHEEF : I am also a member of this House. The hon. Member should not make such observations.

I want to clarify one point.

MR. DEPUTY SPEAKER : I shall give my ruling.

THIRU M. A. LATHEEF : Let me be allowed to clarify one thing.

MR. DEPUTY SPEAKER : I have understood your point.

THIRU M. A. LATHEEF : My point of order is this. We are having general discussion on the budget. But we are bringing in the name of a great man unnecessarily. Is it in order?

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* இந்த நிதி நிலை அறிக்கையில்—முதலமைச்சர் அவர்கள்—கடைசி பக்கத்தில் மாநில சுயாட்சி பற்றி அறிஞர் அண்ணா என்ன சொன்னார் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதனால் அது பற்றி விமர்சனம் சொல்வது ரிலெவன்ட் தான். ஆகவே அவர்கள் விமர்சனம் செய்து கொண்டிருக்கிறார்கள். தலைவரைப் பற்றி இங்கே தாக்குதலாகச் சொன்னதாக எனக்குத் தெரியவில்லை. அதனால் திரு. லத்தீப் அவர்கள் அதற்காக ஆட்சேபிக்கவேண்டியதில்லை.

DR. H. V. HANDE : I am raising a very valid point of order. Whenever discussions are taking place in this House, when one member of our party is speaking, it has become invariably a fashion that any Minister can get up and speak. The Hon. Deputy Speaker gives an opportunity for the Minister to rebut what a member of our party speaks. In addition, he gives also an opportunity to other members of the ruling party to get up and rebut our arguments. He gives preference to Ministers and Members of the ruling party. Whenever members of our party get up to rebut the argument of the Hon. Minister or members





of the ruling party, the Hon. Deputy Speaker immediately says 'Mr. Aladi Aruna, I am not allowing you or Dr. Hande, I am not allowing you, let Mr. Kovai Chezhian speak'. So, the discussion becomes wholly lop-sided. What I say is, when two or three members from the ruling party are pitted against a member of our party when he is speaking and when they interrupt him after having been given an opportunity to do so by the Chair, it is but fair that some members from our side also are given an opportunity to rebut the arguments of Ministers and members of the ruling party. Then only the discussion may not be lop-sided. If you have not permitted the Ministers or members of the ruling party to interrupt, then it would have been quite different. Our member would have proceeded. But when opportunity is given to Ministers and others to interrupt our party member, we also must be given opportunity, at least once, to rebut the arguments of the ruling party members. I am raising this valid point of order so that we may not have a lop-sided discussion in this House. I am also to say that we on this side are not going to allow such sort of interruptions hereafter.

*மாண்புமிகு திரு. க. அன்பழகன் :* தலைவரவர்களே, உறுப்பினர்கள் எழுந்து நின்று இன்னொருவர் பேசுகிறபோது குறுக்கிடு செய்வதற்கு பேசுகிற உறுப்பினர் மனம் வைத்து இடம் கொடுத்தால்தான் அவர்கள் பேச முடியும்.

*டாக்டர் எச். வி. ஹாண்டே :* மினிஸ்டர்களுக்கு அப்படி இல்லையே.

*மாண்புமிகு திரு. க. அன்பழகன் :* சட்டமன்ற மரபில் உறுப்பினர்கள் பேசுகிறபோது குறுக்கிட்டுப் பேசுவதற்கு அமைச்சர்களுக்கு உரிமை இருப்பதாகக் கருதப்படுகிறது.

*டாக்டர் எச். வி. ஹாண்டே :* அந்த உரிமையை துஷ்பிரயோகம் செய்யக் கூடாது.

*மாண்புமிகு திரு. க. அன்பழகன் :* துஷ்பிரயோகமா, நியாயமான பிரயோகமா என்பது அவைத்தலைவர்களுடைய தெளிவைப் பொறுத்தது. உறுப்பினர்கள் பேசுகிறபோது அமைச்சர்கள் குறுக்கிட வேண்டாமென்று சொன்னால் நாங்கள் குறுக்கிட விரும்பவில்லை. ஆனால் உறுப்பினர்கள் பேசிக் கொண்டிருக்கிறபோது ஒரு கருத்தைக் கூறுகிறபோது அதில் எங்களுக்குத் தெரிந்ததைச் சொன்னால் அது நிலைமையைத் தெளிவுபடுத்த உதவியாக இருக்கும் என்று எண்ணித்தான் குறுக்கிடுகிறோம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அந்த வாய்ப்பு உறுப்பினர்களுக்குக் கிடைக்காதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அந்த வாய்ப்பு உறுப்பினர்களுக்குக் கிடைக்காது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** அதை சொல்வதற்கு நீங்கள் யார் ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** சட்டமன்ற விதிகளில் அப்படியிருக்கிறது. அந்த உரிமையை உறுப்பினர்களுக்கும் கொடுப்பதென்று சொன்னால் 8, 10 கட்சிகள் இருக்கிறபோது எல்லோருக்கும் அந்த உரிமையைக் கொடுத்தால் சபாநாயகர் சபையை நடத்துவது மிகவும் கஷ்டமாக இருக்கும். நான் இப்போதுகூட ஒரு தவறைச் செய்கிறேன். நான் தனிப்பட்ட முறையில் பேசுவதுபோல் இது இருக்கிறது. அதற்காக மன்னித்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சட்டமன்ற மரபுப்படி அமைச்சர்கள் தலையிட்டுப் பேசுவதற்கு ஒரு தனி மரபை நாம் கடைப்பிடித்து வருகிறோம். உறுப்பினர்களைவிட அமைச்சர்களுக்கு தனி உரிமையைக் கொடுத்து வருகிறோம். இது பாரம்பரியமான மரபு.

நான் சொல்வதெல்லாம் ஒரு உறுப்பினர் பேசுகிறபோது மற்றவர்கள் தலையிட்டு சபையின் நேரத்தை வீணாக்க வேண்டாம் என்பதுதான் என்னுடைய அடிப்படை விருப்பம். அந்த அடிப்படையில்தான் சொல்கிறேன்.

கோவை செழியன் அவர்கள் பேசுகிறபோது 'அதே கட்சியைச் சேர்ந்த மற்றவர்கள் எழுந்து பேசினார்கள். பேசுகிற அந்த உறுப்பினரே தெளிவான விளக்கம் கொடுக்கிற திறமையுடையவராக இருக்கிறபோது அப்படி ஏகப்பட்ட உறுப்பினர்கள் எழுந்து பேசவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பெ. சீனிவாசன் :** பாயின்ட் ஆப் ஆர்டர். லத்தீப் அவர்கள் சொல்கிறபோது அண்ணா அவர்களைப் பற்றி அனாவசியமாகப் பேசுகிறார்கள் என்றும், 'வேஸ்டிங் தி டைம்' என்றும் சொன்னார்கள். அந்த வார்த்தைகளை சட்டமன்றக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அண்ணா அவர்களைப்பற்றி கௌரவக் குறைவான வார்த்தைகளை அவர் உபயோகிக்கலாமா என்று நான் கேட்கிறேன். தான் ஒரு கருத்தரங்கு வைப்பதாகவும், அங்கே விவாதிக்கலாமென்றும் அவர் சொல்கிறார். அண்ணா அவர்களின் பெயரை உபயோகிக்காத விவாதமே இருக்க முடியாது என்பது என்னுடைய கருத்து. எங்கள் கட்சியைச் சார்ந்த ஆலடி அருணா அவர்கள் எழுந்து ஒழுங்குப்



பிரச்னைக்கு சந்தர்ப்பம் கேட்டபோது அவருக்கு சந்தர்ப்பம் கொடுக்கவில்லை. ஆனால் ஒரு சிலருக்கு பிரிவிலெஜ் இந்த அவையிலே இருப்பதாக எங்களுக்கு ஒரு அச்சம் ஏற்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஆலடி அருணா அவர்களைத் தடுத்து மற்றவர்களுக்கு இடம் கொடுத்தேன் என்று சொல்லக்கூடாது. மற்றவர்களுக்கும் இடம் கொடுக்கிறோம்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** நண்பர் சீனிவாசன் அவர்கள் நான் அண்ணா அவர்களைப் பற்றி—மன்னிக்க வேண்டும்—அவமானப்படுத்தும் வகையில் பேசினேன் என்று அவர்கள் சொன்னார்கள். நான் முஸ்லிம் லீக்கிலே இருந்தாலும் அண்ணா அவர்களைப் பற்றி நான் எவ்வளவு உயர்வாக எண்ணுகிறேன், அவர்களை எவ்வளவு மதிக்கிறேன் என்பது நண்பர் சீனிவாசன் அவர்களுக்கே தெரியும்.

THIRU P. SEENIVASAN : Don't compel me to reveal some facts. I know what is your opinion about Anna.

**திரு. எம். ஏ. லத்தீப் :** நண்பர் கோவை செழியன் அவர்கள் சொன்னார்கள். அண்ணா அவர்கள் இப்படி பேசினார்களே தவிர . . .

**மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் :** நீங்கள் சொன்னதற்கு விளக்கம் தாருங்கள்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** அண்ணா அவர்களை அவமதிக்கும் வகையில் நான் பேசியதாக என்மீது குற்றம் சாட்டியிருக்கிறார்கள். அண்ணா அவர்கள் பேசினார்களே தவிர கொள்கை என்று ஏற்றுக்கொள்ளவில்லை என்று அவர்கள் சொன்னது எந்த அளவிற்கு அவர்கள் அண்ணா மீது மதிப்பு வைத்திருக்கிறார்கள் என்ற கருத்தில்தான் நான் சொன்னேன். அண்ணா அவர்களைப்பற்றி நிச்சயமாக அப்படி பேசமாட்டேன். அண்ணா அவர்கள் தனக்கென்று ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டிருந்தார்கள். பேச்சு வேறு, கொள்கை வேறு என்ற வகையில் நண்பர்களுடைய விவாதம் இருந்தது என்பதற்காகத்தான் நான் சொன்னேனே தவிர அண்ணா அவர்களைப்பற்றி பேசக்கூடாது என்று நான் சொல்லவில்லை. என்பதை நண்பர்களுக்கு சொல்லிக்கொள்கிறேன்.

THIRU P. SEENIVASAN : The Hon. Member Thiru M. A. Latheef categorically stated that we were wasting the time of the House. Is it proper?

MR. DEPUTY SPEAKER : That is certainly improper

**திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவரவர்களே, உறுப்பினர் திரு. லத்திப் அவர்கள் அண்ணா அவர்களுக்கு இவ்வளவு பெரிய மரியாதையை தெரிவித்ததற்கு மகிழ்ச்சி அடைகிறேன். அதற்காக அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். 'ஸ்டேட் அட்டானமி' என்பதைப்பற்றி இங்கே விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் இந்த மன்றத்தில் அமைதியை ஏற்படுத்துவது அனைவருடைய கடமையுமாகும். அமைச்சர்கள் குறுக்கிடு வதை யாரும் தடுக்கவில்லை. ஆனால் அமைச்சர்கள் குறுக்கிடுவது சூடான விவாதத்தின்போது அமைதி ஏற்படுத்துவதாக அமையவேண்டும். ஆனால் மாண்புமிகு அமைச்சர் திரு. அன்பழகன் அவர்கள் குறுக்கிட்டுப் பேசியது இருக்கிற சூடான விவாதத்தை இன்னும் அதிகப்படுத்தும் வகையில்தான் அமைந்திருந்தது. அமைச்சர் திரு. ராமச்சந்திரன் அவர்கள் ஸ்டேட் அட்டானமியைப் பற்றி கூறியதாக சொன்னார்கள். அப்படிப் பேசுவதை விட்டு விட்டு சில மனிதர்கள், சில நேரங்களில் என்றெல்லாம் எடுத்துச் சொல்லி, உங்கள் தலைவர் இப்போது மாறிவிட்டார் என்றெல்லாம் பேசி திசை திருப்பி விடுவதால்தான் இந்த மாதிரி விவாதம் ஏற்படுகிறது. அமைச்சர்கள் குறுக் கிடட்டும். அப்படிக் குறுக்கிடுவது மன்றத்தில் அமைதியை ஏற்படுத்து வதற்கு துணையாகப் பேசட்டும். வினை அமைச்சர்கள் குறுக்கிடுவதைத் தடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கோவை செழியன் :** தலைவரவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த மன்றத்திலே பலதரப்பட்ட கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இடையிலே ஏற்பட்ட இந்த ஆவர்த்தனத்தில் பாட்டை மறந்துவிட்டார் போலிருக்கிறது (சிரிப்பு).

**திரு. கோவை செழியன் :** அண்ணா அவர்கள் பல கருத்துக்களைச் சொல்லி யிருக்கிறார்கள். எனக்கு அண்ணாவைப்பற்றி நன்றாகத் தெரியும். நான் சின்னக் குழந்தையிலிருந்தே அண்ணாவோடு பழகியவன். பல நேரங்களில் அண்ணாவோடு சண்டை போட்டிருக்கிறேன்; கோபமடைந்திருக்கிறேன். அதற்கு எனக்கு உரிமை உண்டு. நான் கோபித்துக்கொண்டு போனாலும்கூட அண்ணா அவர்கள் என்னை மறக்கமாட்டார்கள். அவர்களுடைய உள்ளத்திலே எனக்கு எப்போதும் இடம் உண்டு. அவர்களேகூட இதைச் சொல்லியிருக்கி றார்கள். அப்படிப்பட்ட அண்ணாவைப்பற்றி நான் தவறான கருத்துக்களைச் சொல்வதாக அண்ணாவைப்பற்றி சரியாகத் தெரியாத, அதிகம் தெரியாத ஒருவர் சொல்வதைக்கேட்டு நான் வருத்தப்படுகிறேன் என்று சொல்லி, இந்தப் பிரச்சனையை இத்தோடு முடித்துக்கொள்கிறேன்.





**திரு. எம். ஏ. லத்தீப் :** அண்ணாவைப்பற்றி எல்லோரும் நன்றாகத் தெரிந் திருக்கிறார்கள். நானும் நன்றாகத் தெரிந்திருக்கிறேன். தமிழ்நாட்டிலே இருக்கிற யாரும் அண்ணாவைப்பற்றித் தெரியாமல் இல்லை.

**திரு. எம். ஏ. அபுசாலி :** அண்ணாவைப் பற்றி அதிகம் தெரியாதவர் என்று சொல்வது தவறு. அதை நான் ஒப்புக்கொள்ளவில்லை.

**திரு. கோவை செழியன் :** என்னுடைய குற்றச்சாட்டு எல்லாம் அண்ணா வினுடைய கொள்கையை அண்ணாவினுடைய தத்துவத்தை இவர்கள் கேட்ப தில்லை என்பதுதான். அண்ணா அவர்கள் ஒரு படி அரிசி ஒரு ரூபாய் என்று போட்டார்கள். ஆனால் அண்ணா அவர்கள் மறைந்தவுடன் அந்தத் திட்டத்தை இவர்கள் எடுத்துவிட்டார்கள். அண்ணா அவர்கள் எளிமையாக நடந்து கொண்டார்கள். இன்றைக்கு இவர்கள் ஆடம்பரத்தில் நீந்திக் கொண்டிருக்கிறார்கள். இதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

இப்போது ஸ்டேட் அட்டானமி பற்றியோ அல்லது பெடரல் செட்டப் பற்றியோ கவலை இல்லை. முதலமைச்சரவர்களும் மற்ற அமைச்சர்களும் நாட்டு மக்கள் நலனைக் கருதி, நாட்டுப் பிரச்சனைகளைத் தீர்க்காமல் இங்கே அமர்ந்து கொண்டிருக்கிறார்களே என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

மதுரையில் அவர்களுடைய பொதுக் குழுக் கூட்டம் நடைபெறும்போது "தமிழ் நாட்டு முஜிபுர் ரஹ்மானே வருக வருக" என்று எழுதி வைத்திருந் தார்கள். இது முதலமைச்சருக்கு எழுதி வைத்திருந்த வரவேற்பு. அதன் போட்டோக்களைக் கூட நான் வைத்திருக்கிறேன். வேண்டுமென்றால் நானே அவைகளைக் காட்டுகிறேன். அது மட்டுமல்ல, அந்தக் கூட்டத்தில் முதலமைச் சர் பேசும்போது 'முன்பு இந்தியா ஒன்றாக இருந்தது, இப்போது இரண்டாகி மூன்றாகப் பிரிந்திருக்கிறது. அதற்கு மேல் நான் பேச மாட்டேன்' என்று சொன்னார்கள். இவைகளை எல்லாம் பார்க்கும்போது அவர்களுடைய உள்ளம் எங்கே போய்க்கொண்டிருக்கிறது என்ற சந்தேகம் எழுகிறது.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** (நெல்லிக்குப்பம்) சார், பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் உட்காருங்கள். கோவை செழியன், நீங்கள் தொடர்ந்து பேசுங்கள். இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுங்கள். (திரு. வி. கிருஷ்ணமூர்த்தி நின்று கொண்டிருந்தார்).

**திரு. கோவை செழியன் :** இன்றைக்கு 'மண்ணைக் காக்க மத்திய அரசு, மக்களைக் காக்க மாநில அரசு' என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். (திரு. வி. கிருஷ்ணமூர்த்தி தொடர்ந்து பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்டுக்

கொண்டே இருந்தார்) என்னுடைய நேரம் தான் வீணாகிக்கொண்டிருக்கிறது; அதிக நேரமும் கொடுக்கமாட்டேன் என்று சொல்கிறார்கள். அதனால் தலைவர் சொன்னால்தான் உட்காருவேன். இல்லை என்றால் உட்காரமாட்டேன்.

அவர்கள் இன்றைக்குப் போய்க்கொண்டிருக்கிற போக்கு, எங்கே போய் முடியும் என்று தெரியவில்லை. மீண்டும் பிரிவினைக்குத்தான் கொண்டுபோய் விடுமோ என்ற அச்சம் எங்களுக்கு ஏற்படுகிறது. அதனால் தான் இப்படிப் பட்ட காரியங்களை எல்லாம் இந்த மன்றத்தில் நான் எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கொஞ்சம் பொறுங்கள். திரு. கிருஷ்ணமூர்த்தியின் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்று கேட்போம்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** சார், பாயின்ட் ஆப் ஆர்டர். அருமை நண்பர் கோவை செழியன் அவர்கள் என்னுடைய சிறந்த நண்பர் என்பது அனைவருக்கும் தெரியும். அவர்கள் இந்தப் பக்கத்திலே என்னோடு உட்கார்ந்து பல கருத்துக்களைப் பேசியிருக்கிறார்கள். இப்போது அங்கே போயிருக்கிறார்கள். அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் திராவிட நாட்டுப் பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டுவிட்டது என்று சொன்ன பிறகு கோவை செழியன் அவர்கள் என் பக்கத்திலே உட்கார்ந்து கொண்டு, திராவிட நாடு பிரிந்தே தீரவேண்டுமென்று சொன்னதை அவர்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று எண்ணுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது என்ன பாயின்ட் ஆப் ஆர்டர்? பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

**திரு. கோவை செழியன் :** கிருஷ்ணமூர்த்தி அவர்களும் நானும் அந்த இடத்தில் உட்கார்ந்து பல கருத்துக்களைப் பேசியிருக்கிறோம். அவைகளை எல்லாம் சொல்லட்டுமா (கரவொலி). முதலமைச்சரவர்களைப் பற்றி என்னென்ன சொன்னார் என்பதை எல்லாம் சொல்லட்டுமா (கரவொலி)

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** நாங்கள் பலவற்றைப் பேசியிருந்தாலும் அவர்கள் திராவிட நாடு பிரிந்தே தீரவேண்டுமென்று பேசிய பேச்சு குறிப்பில் ஏறியிருக்கிறது. அதைத்தான் நான் சொன்னேன்.

**திரு. கோவை செழியன் :** என்னுடைய குற்றச்சாட்டெல்லாம், இருக்கின்ற அதிகாரங்களை வைத்துக்கொண்டு நீங்கள் இதுவரை என்ன செய்திருக்கிறீர்கள்? மத்திய அரசு தான் ஒன்றும் செய்யவில்லை; நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்? இருக்கின்ற அதிகாரங்களை வைத்து, செய்ய முடிந்தவைகளைக் கூட உங்களால்



செய்ய முடியவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. அதிகாரம் இல்லாததால் செய்ய முடியவில்லை என்றால் ஏன் அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்? செய்ய முடியவில்லை என்று சொல்லி கீழே இறங்கி வர வேண்டியதுதானே?

இந்த பட்ஜெட்டிலே சொல்லியிருக்கிறார்கள். முதலமைச்சர் பல திட்டங்களை வைத்திருப்பதாகவும், அதை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசு குறுக்கிடுவது போலவும் சொல்லியிருக்கிறார்கள். அப்படி என்ன திட்டத்தை வைத்திருக்கிறீர்கள்? திட்டம் இருந்தால் வெளியே சொல்வதுதானே? வெளியே சொல்லாமல் திட்டம் இருக்கிறது, திட்டம் இருக்கிறது என்று சொன்னால் என்ன அர்த்தம்.

(மணியடிக்கப்பட்டு திரு. கா. வேழவேந்தன் பேச அழைக்கப்பட்டார்). சார், எனக்கு இன்னும் 5 நிமிடமாவது கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் 43 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். இடையிலே குறுக்கிடு 20 நிமிடம் இருந்தாலும் 23 நிமிடங்கள் நீங்கள் பேசியிருக்கிறீர்கள். ஆகவே, இதற்கு மேலும் நேரம் கொடுக்க இயலாது. திரு. வேழவேந்தன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. கோவை செழியன் :** எனக்குப் பேசுவதற்கு நேரம் கொடுக்காமல் பேரவைத் துணைத் தலைவர் வழங்கிய தீர்ப்பைக் கண்டித்து, நான் வெளி நடப்புச் செய்கிறேன்.

(கோவை செழியன் அவர்கள் சபையை விட்டு வெளியேறினர். அதைத் தொடர்ந்து திரு. முனு ஆதி அவர்களும் வெளியேறினர்).

* **திரு. கா. வேழவேந்தன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட கழக ஆட்சி ஏற்பட்டு, இன்றைக்கு ஏறத்தாழ 8 ஆண்டுகள் முடிவடைகின்றன. இன்றைக்கு 5-ந் தேதி மிகச் சரியாகச் சொல்ல வேண்டுமானால் கழக ஆட்சி ஏற்பட்டு இந்த 5-ந் தேதியோடு 8 ஆண்டுகள் முடிவடைகின்றன. நாளைக்குக் கழக ஆட்சி தோன்றி 9-வது ஆண்டு பிறக்கிறது.

ஆக 8 வரவு-செலவுத் திட்டங்களை முடித்து, 9-வது வரவு-செலவுத் திட்டத்தை நம்முடைய கலைஞர் அவர்கள் இந்த மன்றத்திலே கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். இதைப்பற்றி இங்கே இருக்கிற எதிர்க் கட்சி உறுப்பினர்கள் சொல்லும்போது, பல்வேறு கருத்துக்களால் விமரிசனம் செய்தார்கள். நண்பர் செழியன் அவர்கள் ஏதோ பஜனை பாட்டுபோல் இருக்கிறது என்று விமர்சித்தார்கள். ஆனால் நல்ல வேளையாக ஒரு ஆண்டிப்பாட்டு என்று அவர்கள் சொல்லவில்லை. கோவில்களுக்குப் போனால் பஜனைப் பாட்டு நடக்கும். பஜனை முடிந்த பின்னால் கொஞ்சம் பொங்கலும், சுண்டலும் கிடைக்கும். வேறு பாட்டுக்களுக்கு அவை கிடைப்பதில்லை.

இந்த வரவு-செலவுத் திட்டத்திலே இந்த நெருக்கடியான நேரத்திலும் கூட நாட்டுக்குத் தேவைப்படுகின்ற நல்ல பல திட்டங்களைக் கொடுத்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நன்மைகள், சமுதாயத்தின் அடிதளத்திலே அழுந்தியிருக்கிற மக்களுக்கு நன்மைகள், மீனவர்களுக்கு நன்மைகள் இப்படிப் பல்வேறு தரப்பினருக்கும் நன்மை தரும் திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையில் வெளியிட்டிருப்பதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொரு உறுப்பினர் இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றிக் குறிப்பிடும் போது, இதுதான் உங்களுடைய கடைசி பட்ஜெட், இறுதி பட்ஜெட் என்று சொன்னார்கள். ஒப்புக்கொள்கிறோம். தேர்தலுக்கு முன்னால் இதுதான் கடைசி பட்ஜெட். அப்படித்தான் இருக்க முடியும். ஆனால் வெளியிலே இருக்கிற நாட்டு மக்கள் எது யாருடைய கடைசி பட்ஜெட் என்பதை நன்றாக அறிவார்கள். எது எப்படி இருந்தாலும், நம்முடைய தமிழக அரசின் சார்பில் வெளியிடப்பட்டிருக்கிற இந்த வரவு-செலவுத் திட்டத்தையும், மத்திய அரசினுடைய வரவு-செலவுத் திட்டத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் நாம் உண்மையிலேயே இந்த நெருக்கடியான சூழ்நிலையிலும் ஒரு மகத்தான திட்டத்தைத் தயாரித்திருக்கிறோம் என்பதையும் அதை எல்லோரும் போற்றுவார்கள் என்பதையும் அறிந்து மகிழ்ச்சியடைகிறேன்.

மத்தியிலே இத்தகைய வறட்சி நெருக்கடி இல்லை. இருந்தாலும் கிட்டத்தட்ட 288 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருக்கிறார்கள். அதுவும் சாதாரண மக்கள் தலையிலே கை வைத்திருக்கிறார்கள். ஏழை மக்கள் பிடிக்கும் பீடிக்கு வரி, அவர்கள் குடிக்கும் தேனீருக்கு வரி, அதற்குப் பயன்படுத்தும் சர்க்கரைக்கு வரி, அவர்கள் போடுகிற பொடிக்கு வரி, புகையிலைக்கு வரி, அவர்கள் உபயோகிக்கின்ற அலுமினிய பாத்திரத்திற்கு வரி. கண்ணாடி பொருட்களுக்கு வரி என்று சாதாரண மக்களைப் பாதிக்கும் வகையிலே வரி





போட்டிருக்கிறார்கள். பாரத மாதா, ஆதி பராசக்தி என்று போற்றப்படுகின்ற அம்மையார் வீற்றிருக்கின்ற மத்திய அரசிலேதான் ஏழை எளிய மக்கள் பயன்படுத்தும் பொருட்களுக்கு வரி போட்டிருக்கிறார்கள்.

ஆனால் நம்முடைய ஆட்சியில் இந்த நெருக்கடியான நேரத்தில் 6 கோடி ரூபாய்க்கு மட்டும் அதுவும் ஏறத்தாழ 5½ சத விதம் இருந்த விற்பனை வரியை ½ சத விதம் கூட்டி 6 சத விதமாக வசூலிக்கின்ற வகையில்—வரி போட்டிருக்கிறார்கள். இந்த வரி கூட சாதாரண மக்கள் பாதிக்கப்படாத வகையில் 6 கோடி ரூபாய்க்குப் போட்டிருக்கிறோம். ஆனால் எடுத்த எடுப்பிலேயே 'எடுத்தான் கவிழ்த்தான்' என்ற முறையில் பேசுகின்றவர்கள் பேசுகிறார்கள்.

(நண்பகல் 12-00)

மதுவிலக்குச் சட்டத்தைத் திரும்பக் கொண்டு வந்ததன் மூலமாக நமது அரசு 50 கோடி ரூபாயை இழந்திருக்கிறது. குதிரைப் பந்தயம் இல்லையென்று சொல்வதன் மூலம் 3 கோடியை இழந்திருக்கிறது. அதே மாதிரி நில வரி விலக்குச் சட்டத்தின் மூலம் 12 கோடி ரூபாயை இழந்திருக்கிறது. இதற்குப் பின்னால் இன்றைக்கு நாம் 6 கோடி ரூபாய்க்கு மட்டுமே தாங்கக் கூடியவர்களுக்கு வரியைப்போட்டு—வறட்சி நிவாரணப் பணிகளை—வாரத்திற்கு ஒரு கோடி என்ற அளவில்—நிறைவேற்றி வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் செய்து வருகிற நேரத்தில் பலபேர் பல்வேறு வாதங்களை எடுத்து வைத்திருக்கிறார்கள்.

ஆளுங் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. மாரிமுத்து பேசினார்கள். அவர் இதை மிகவும் சாடுவார் என்று எதிர்பார்த்தேன். சாடவில்லை. பல்வேறு தத்துவ விளக்கங்களைச் சொல்லிக்கொண்டிருந்தார்.

நான் தமிழ் மகன் என்ற முறையில் ஒருவித மனக்குமுறலோடு சொல்வேன். நமது மாநிலத்தில் வரலாறு காணாத வறட்சி ஏற்பட்டிருக்கிறது. நூறாண்டு காலமாக இதுபோன்ற நிலையைக் காணவில்லை என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். தமிழகத்திற்கு பிரதமர் இந்திரா வந்தார்கள். இன்றைக்கு முகவை மாவட்டத்தில் நிலம் வெடிபட்டுக் கிடக்கிறது. அந்த மாவட்ட மக்கள் வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். புதுக்கோட்டை, தர்மபுரி ஆகிய மாவட்ட மக்களும் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பீகாரில் வெள்ளம் என்றால் இந்திரா அம்மையார் ஹெலிகாப்டரில் சென்று சுற்றிப் பார்க்கிறார்கள். அஸ்ஸாமில் வெள்ளம் என்றால் ஹெலிகாப்டரில் சென்று பார்த்த நிகழ்ச்சிகள் சினிமாப்படமாக ஆக்கப்பட்டு தியேட்டர்களில் காட்டப்படுகிறது. ஆனால் தமிழகத்திற்கு இந்திரா வந்தபோது அவர்களது கட்சி ஊழியர் கூட்டத்தில்

பேசினார்கள்—திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சாடுவதுபோலப் பேசிவிட்டுப் போய் இருக்கிறார்கள். 4½ கோடி மக்களின் நிலை என்ன என்பதை வறட்சிப் பகுதிகளுக்குச் சென்று பார்த்தார்களா? அல்லது அந்த மக்களுக்காக ஆறுதலாக எதாவது ஒரு வார்த்தை சொன்னார்களா?

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** இந்தியப் பிரதமர் அவர்கள் தமிழகத்திற்கு வந்தபோது வறட்சிப் பகுதிகளைச் சென்று பார்க்கவில்லை என்றார்கள். மாநில சர்க்கார் அந்த இடங்களை வந்து பார்க்கவேண்டுமென்று அழைத்திருந்தால் சென்றிருப்பார்கள். இவர்கள் அழைத்தார்களா, சென்று பார்க்க?

**திரு. கா. வேழவேந்தன் :** இதைத்தான் நான் எதிர்பார்த்தேன். இதற்கு முன் இந்த மாநில அரசு பலமுறை அழைத்தும் தான் பிரதமர் வந்தாரா? புதுவைத் தேர்தல் நேரத்தில் நீங்கள் அவர்களை ஹெலிகாப்டரில் உட்கார வைத்து காரைக்கால் பகுதிக்கு அழைத்துச் சென்றீர்களே, வறட்சிப் பகுதியைக் காட்ட அழைத்துச் சென்றீர்களா? இப்போது ஏன் அந்தப் பகுதிக்கு அழைத்துப் போய் இருக்கக் கூடாது என்பது என்னுடைய தாழ்மையான வாதம்.

இன்றைக்கு மாநில சுயாட்சிப் பிரச்னை—மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கப்படவேண்டும் என்று கேட்கிற பிரச்சினை எழுகிறபோது அது உலக மகாபாவத்தைப்போலப் பேசப்பட்டது. எடுத்த எடுப்பில் சொல்கிறேன். மாநிலங்களுக்கு அதிக உரிமை வேண்டுமென்று கலைஞர் சொல்கிறார், நாவலர் சொல்கிறார், பேராசிரியர் சொல்கிறார் என்பதற்காக மட்டும் அதை ஆதரிக்காமல் இருக்கலாமே தவிர அது தேவையில்லாத வாதமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒரு வாதத்திற்காக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நமது வரவு-செலவுத் திட்டத்தில் 20 கோடி துண்டு விழுகிற பட்ஜெட்டாக கலைஞர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள் அதற்காக உளமார அவரைப் பாராட்டுகிறேன். இதற்குப்போய் பாராட்ட வேண்டுமா என்று நினைக்கலாம். இதுபோல செய்வதற்கே ஒரு மதி நுட்பம் இருக்கவேண்டும். பீகார் சட்ட மன்றத்தில் ஏறக்குறைய 40 கோடி ரூபாய் துண்டுவிழுகிற பட்ஜெட்டை வெளியிட்டிருக்கிறார்கள். உத்தரப் பிரதேசத்தில் 90 கோடி ரூபாய் துண்டு விழுகிற பட்ஜெட். இந்த 90 கோடி, 40 கோடியை மத்திய அரசாங்கம் தானே முழுமையும் ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்கிற அளவுக்கு வந்திருக்கிறது இந்த 130 கோடி ரூபாயை நிதிக் கமிஷன் அறிக்கைகள் விதிகள் ஆகியவற்றுக்கு மாறாக வடக்கே இருக்கிற மாநிலம் என்பதற்காக இந்திரா காங்கிரஸ் அள்ளித்



தருகிற நேரத்தில் ஏன் தமிழ் நாட்டுக்கு நாம் கேட்கிற 30 கோடி ரூபாயைக் கொடுக்கவில்லை என்ற பகிரங்க குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்த நேரத்தில் நீங்கள் எங்களைப் பார்த்து மோதிக்கொண்டிராமல்—எங்கே மோதவேண்டுமோ, எங்கே பரிகாரம் காணவேண்டுமோ—எங்கே மருந்து இருக்கிறதோ, அங்கே மோதி போராடி, மருந்தைப் பெற முயலவேண்டும்.

இன்றைக்கும் சரி—நேற்றும் சரி சுயாட்சியைப் பற்றிக் கூட அண்ணா பேசவில்லை என்று சொல்லப்பட்டு—ஆளுங்கட்சித் தரப்பில் அதற்கு மறுப்புகள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. மாநில சுயாட்சி என்பதற்கு அண்ணா இவ்வளவு காரமாகச் சொல்லவில்லை என்றார்கள். நம்மோடு நடமாடிக்கொண்டிருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் இன்றைக்குப் படமாகிவிட்டார்கள் என்றாலும், அவரது குரல் இன்றைக்குக் கேட்கவில்லை என்றாலும் இதே மன்றத்தில் 1967 ஆம் ஆண்டு—எட்டு ஆண்டுகளுக்கு முன்னால் பட்ஜெட் உரையின் விவாதத்திற்கு பதிலளிக்கிறபோது—இதையும்விட மிகக் காரமான முறையில் மிக அழகாக ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு அதனைப் படிக்கிறேன்.

"முன்னாலே நாங்கள் கேட்டுக் கொண்டு வந்த திராவிட நாட்டைத்தான் இன்றைக்கு மத்திய சர்க்காரோடு போராடி பெற்றுவிட சுற்றி வளைத்துக் கொண்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அது தவறு. நான் திராவிட நாட்டு கோரிக்கையை விட்டு விட்டேன். ஆனால் திராவிட நாடு கேட்பதற்கு என்ன என்ன காரணங்கள் இருந்தனவோ அவற்றில் ஒன்றைக்கூட விட்டுவிடவில்லை. அதில் ஒளிவுமறைவு இல்லை. அதைச் சொல்லிக் கொள்வதற்கு வெட்கப்படுவதற்கு ஒன்றும் இல்லை. திராவிட நாடு என்று தனியாக இருந்தால் நாம் தொழில் வளர்ச்சி பெற முடியும் என்று சொன்னோம். அன்றைக்கு இந்த மன்றத்தில் இருந்த திரு. சுப்பிரமணியம் அவர்கள் திராவிட நாட்டுக் கோரிக்கையை எதிர்த்தார்கள். ஆயினும் என்ன சொன்னார்கள்? சேர்ந்து இருப்பதனால்தான் தொழில்கள் வளரும். ஒன்றாக இருந்து தொழில் துறையில் வளர்ச்சி காண்போம், பத்து வருடங்கள் கழித்துப் பார்க்கும்போதும் தொழில் துறையில் வளர்ச்சி அடையாது இருந்தால் நிச்சயமாக நானே அவர்களோடு சேர்ந்து திராவிட நாடு தனித்திருக்க வேண்டுமென்று கேட்கிறேன்" என்று சொன்னார்கள்.

திராவிட நாடு வேண்டுமென்று கேட்டதற்குக் காரணமே இங்கே தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டும். பிராந்திய சமநிலை ஏற்படுவதற்குப் புதுப் புதுத் தொழில்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதுதான், அதை நாங்கள் விட்டு

விடவில்லை. அடுத்து மொழி பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகத் திராவிட நாடு கேட்டோம். அதை விட்டுவிடவில்லை. மத்திய சர்க்காரிடம் அதிகாரங்கள் குவியலாக இருக்கக்கூடாது என்பதற்காகக் கேட்டோம். அதை விட்டுவிடவில்லை. மாநில சர்க்கார் பல அதிகாரங்களைப் பல துறைகளிலும் பெறவேண்டும் என்பதற்காகக் கேட்டோம். அதை நாங்கள் விட்டுவிடவில்லை. பண்பாடு காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகக் கேட்டோம். அதை நாங்கள் விட்டுவிடவில்லை. ஆகவே திராவிட நாடு நாங்கள் கேட்டதற்கான காரணங்களில் ஒன்றைக் கூட விட்டுவிடவில்லை. அதற்குக் காரணம் என்ன வென்றால் அவை நியாயமான காரணங்கள், மனமார்ந்து ஏற்றுக்கொண்ட காரணங்கள், நாங்கள் திராவிட நாட்டை விட்டு விட்டோம்.

"திராவிட நாடு கிடைத்தால் என்ன என்ன பெறுவோமோ அவை ஒவ்வொன்றையும் இந்திய யூனியனின் உள்ளே இருந்தே பெறலாம். பெற வேண்டும், பெற முடியும் என்ற நம்பிக்கையிலேதான் இருக்கிறோமே தவிர, திராவிட நாட்டுக்கான காரணங்கள் ஒன்றையும் நாங்கள் விட்டு விடவில்லை. மாமியார் வீட்டை விட்டுவிட்டான் என்றால் மனைவியை உடன் அழைத்துச் சென்று விட்டான். அல்லது வியாழக்கிழமை வா என்று மனைவிக்குச் சொல்லி விட்டுக் கிளம்பி விட்டான் என்பதுதானே தவிர, மனைவியையே விட்டு விட்டான் என்பது அல்ல. நாடு பிளவுபடக்கூடாது என்றார்கள். ஒத்துக் கொண்டோம். தனித்திருந்தால் அந்நியத் தலையீடு ஏற்படும் என்றார்கள். உணர்கிறோம்." என்பதாக இந்த மாமன்றத்தில்—வெட்ட வெளியில் கூட அல்ல—அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு வடிவம் கொடுக்க வேண்டும் என்பதற்காகத் தான் கலைஞர் அவர்களே கூட அல்ல—சட்ட மேதை ராஜமன்னார் குழு இது பற்றிப் பரிசீலித்து ஒரு அறிக்கையைக் கொடுத்தது. அதை மத்திய அரசுக்கும் அனுப்பினார்கள். அதற்கு இந்திரா ஒரு கடிதம் எழுதினார்கள் "உங்கள் அறிக்கையைப் பெற்றுக் கொண்டேன். விரிவாக அது பற்றி நாம் கூடிப் பேசுவோம்" என்று எழுதி இருந்தார்கள். அவர்கள் கொடுத்த உறுதிமொழி காப்பாற்றப்பட்டிருக்குமானால் மாநில முதல்வர்களை எல்லாம் அழைத்து அவர்கள் அது பற்றிப் பேசியிருப்பார்களானால் இது பற்றிய சர்ச்சை வேறுவிதமாக இருந்திருக்கும். அது பற்றித் திரும்பப் பேசப்பட்டதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

அன்று பேசியதை எல்லாம் எடுத்துக்கொள்ள முடியுமா என்றார்கள். அன்றைக்கே சொல்லியிருக்கிறார்கள். எண்ணம் என்பது எப்பம் அல்ல, எல்லா நேரத்திலும் விடுவதற்கு. எண்ணம் என்பது சிந்தனையில் இருந்து வருவது என்றார்கள்.



நான் வாதத்திற்காக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை ஒன்று என்றால் ஒன்றாகுமா? ஒன்று என்கின்ற நினைப் பில் வடக்கில் உள்ளவர்கள் கருதுகிறார்களா, நடத்துகிறார்களா? காஷ்மீருக்கு 100 ரூபாய் கொடுத்தால் அதில் 90 மானியமாக அளிக்கப்படுகிறது. 10 கடனாக அளிக்கப்படுகிறது. அதே நேரத்தில் ரூ. 100 இல் நமக்கு 70 கடனா கவும் 30 மானியமாகவும் 100 ரூபாய் நமக்கு அரசுக்குக்கொண்டா கது னைநம் முடைய மாநிலத்தில் 100 ரூபாய் வரி மூலம் மத்திய அரசுக்குக் கிடைத்தால் அதில் 66 ரூபாயை மத்திய அரசு எடுத்துக்கொள்கிறது. நமக்கு 34 ரூபாயை கொடுக்கிறது. கடனாகக் கொடுக்கிற பணத்திற்குக் கூட காமராஜர் காலத் தில் இருந்து, பக்தவத்சலம் காலத்தில் இருந்து, கலைஞர் காலம் வரை 400 கோடி கடனாகியிருக்கிறதே, இதற்கு மத்திய அரசு உலக நாடுகள் வங்கியில் ½ சதவிகித வட்டிக்கு வாங்குகிற பணத்தை நமக்கு 6 சதவிகித வட்டிக்குக் கொடுக்கிறது. இப்படி மத்திய அரசு நம்மிடம் பட்டாணியைப் போல, மார் வாடிகளைப் போல வட்டி வாங்கவேண்டியது தேவைதானா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

(திரு. கே. டி. கே. தங்கமணி குறுக்கீடு)

**திரு. கோவை செழியன் :** சார், ஆன் எ பாய்ன்ட் ஆப் ஆர்டர், ஒரு ஜாதியைக் குறிப்பிட்டு, அவர்களை மோசம் என்று சொல்வது சரியா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர்கள் அவர்களே பட்டாணியன் என்று தமிழ்நாட்டிலே சொல்கிறபொழுது கடுமையான வட்டிக்குப் பணம் கொடுத்து வட்டி ஈட்டி வைத்துச் செல்வதைத்தான் குறிப்பிடுகிறாரே தவிர, முஸ்லிம் லீகைக் குறிப்பிடுவதல்ல. ஒருவேளை, தங்கமணி அவர்கள் முஸ்லிம் லீகைக் குறிப்பிடுவதாகக் கருதினால், மாற்றிக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நண்பர் வேழவேந்தன் பட்டாணி யர் என்று சொல்லவில்லை. பட்டாணி என்றுதான் குறிப்பிட்டார். நாம் அதைக் கடலை என்றுகூட எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, நான் மார்வாடிகளைக் கூடக் குறிப்பிட்டேன். ஒரு தொழிலைச் செய்பவர்களை அவர்கள் ஊர்ப்பெயரைச் சொல்லிக் கூப்பிடுகிறோம். தமிழர்களை அவர்கள் மதராசி என்று குறிப்பிடு வார்கள். ஆகவே, அந்தப் பொருளிலேதான் நான் சொன்னேன் என்று தெரி வித்துக்கொள்கிறேன். மொத்தத்திலே இன்றைக்குப் பெரும் பாரபட்சம் காட்டப்படுவதை நான் எடுத்துச் சொல்லமுடியும்.

இங்கே வறட்சி நிலவுகிறது. பற்றாக்குறையாக இருக்கிறது என்ற நிலையில், நமக்கு அரிசியைப் பெற்றுத் தர மத்திய அரசாங்கம் முனைவதில்லை. வட மாநிலங்களுக்குக் கோதுமையைப் பெற்றுத் தருகிற அக்கறை அளவுக்குக் கூட அரிசியைப் பெற்றுத் தருவதில்லை. இங்கு பெரியவர்களுக்குத் தெரியும். முன்பு வெள்ளையன் காலத்தில் பற்றாக்குறை ஏற்பட்ட நேரத்தில், பர்மாவிலிருந்தும் இரங்கூனிலிருந்தும் அரிசியைப் பெற்றிருக்கிறோம். ஆனால், இப்பொழுது மத்திய அரசாங்கம் அரிசியைப் பெற்றுத் தர முன்வரவில்லை. சென்ற ஆண்டு, இதே வரவு செலவுத் திட்டத்திலே நாம் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் அரிசி தந்தோம். இன்றைக்குக் கடுமையான வறட்சி இருக்கும் போது யாரும் உதவுவதில்லை. காவிரி நீரைக் கூடப் பெற்றுத் தர மத்திய அரசாங்கம் வெகு வேகமாக முனையவில்லை. அதற்கிடையிலே, எந்தச் சமுதாய முன்னேற்றத் திட்டமாக இருந்தாலும், மீனவர் முன்னேற்றத் திட்டமாக இருந்தாலும், நெசவாளர் திட்டமாக இருந்தாலும், விதவையர் திட்டமாக இருந்தாலும், அனாதையர் திட்டமாக இருந்தாலும், இருக்கிற மாவை வைத்துக் கொண்டு அருமையான பணியாரத்தைக் கலைஞர் அவர்கள் சமைத்திருக்கிறார்கள். இருக்கிற உணவு அறையிலே, கடுகு இல்லை, பருப்பு இல்லை, உப்பு இல்லை மிளகாய் இல்லை என்றாலும், இருப்பதைக் கொண்டு, அருமையான சமையலைக் கலைஞர் அவர்கள் சமைத்திருக்கிறார்கள். இருக்கிற குறைந்த அதிகாரத்திலேயே இவ்வளவு செய்திருக்கிறார்கள். இன்னும் நிறைய அதிகாரங்கள் இருக்குமானால், தேவையான அதிகாரங்கள் இருக்குமானால், அற்புதங்களை விளைவிக்க வேண்டுமென்று விரும்புகிற, அற்புதங்களை உருவாக்க முடியும்.

இறுதியாக, சொர்க்கவாசலில் வருகிற ஒன்றைச் சொல்லி முடித்து விடுகிறேன். 'ஆரும் நெறி எது? ஆகா நெறி எது?' என்ற ஒரு பாடலைப் பாடுவார், கதாநாயகர் கே. ஆர். ஆர். அந்தப் பாடலைப் பாடவே கூடாது என்று கொடுமையான ஆட்சியைச் சேர்ந்தவர்கள் அவரை கொண்டு போய் சிறையிலே அடைப்பார்கள். ஆஸ்திகம் எது, நாஸ்திகம் எது, என்ற பொருளிலே வரும் அந்தப் பாடலைக் கூடப் பாடக்கூடாது என்று அதிலே வருகின்ற வில்லன் எதிர்க்கிறான். சிறையிலே அடைக்கிறான். அவன் அந்தப் பாடலைப் பாடுவான். சிறையிலேயிருப்பவர்கள் எல்லாம் அந்தப் பாடலைப் பாடுவார்கள். அதுபோல், இன்றைக்கு மாநில சுயாட்சி என்ற குரல் எளிமையான குரலாக இருந்தாலும், ஆந்திராவிலே உள்ள எதிர்க் கட்சிக்காரர்கள் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். நமது கலைஞர் அவர்கள் மட்டும் சொல்வதல்ல. மைசூரின் முன்னாள் முதலமைச்சர் வீரேந்திர பட்டீல் போன்றவர்கள் எல்லாம் பேசுகிறார்கள். இப்பொழுது சிறியதாக இருந்தாலும்





எதிர்காலத்திலே மிகப் பெரிய கீதமாக மாறும் என்று கூறி, இந்த உரையை நான் மனதார வரவேற்று, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. கு. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, 1975-76-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது நடைபெறுகின்ற விவாதத்தில் என்னுடைய கருத்தினைத் தெரிவிக்கின்றேன். தமிழகத்தில் வறட்சியும், பற்றாக்குறையும் உள்ள இந்தக் கடுமையான நேரத்தில் நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நாட்டினுடைய நிலைமை அறிந்து, மக்களுடைய தேவைகளை அறிந்து, மிகவும் கவனமாக இந்த நிதிநிலை அறிக்கையை இந்த மன்றத்தின் வாயிலாக, இந்த நாட்டு மக்களுக்கு அளித்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் எதுவும் இல்லையென்று தேடிப் பார்த்தவர்களைப் போல் இங்கே சொன்னார்கள்.

முன்னாலே பேசிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் கோவை செழியன் அவர்கள் தேவாரம், திருவாசகம் இல்லையென்று—தாவாரம் இல்லை, தேவாரம் எதுக்கடி என்று சித்தர் பாடல்களைப் பாடினார்கள். அவர்களுக்கு நன்றாகத் தெரியும், தூங்குபவர்களை எழுப்பி விடலாம், ஆனால் விழித்துக்கொண்டிருப்பவர்களை எழுப்ப முடியாது என்று சொல்வார்கள். அதைப் போல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போல் தாவாரம் இல்லாமல், தூங்குவதற்கு இடமில்லாமலும், இந்த நாட்டிலே புதைந்து நெளிந்து கொண்டிருக்கிற மக்களுக்கெல்லாம் இன்றைய தினம் கூட இருப்பு மனைகள், சொந்தமான புதிய குடியிருப்புகள் உருவாக்கப்பட இருக்கின்றன, கட்டிக் கொடுக்கப்படுகின்றன. மாடுகள் வழங்கப்படுகின்றன. கோழிகள் கொடுக்கப்படுகின்றன. தென்னங்கன்றுகள் வரை கொடுக்கப்படுகின்றன.

ஆகவே, தாவாரம் இல்லாமல் சிறிய குடில்களை இன்றைய தினம் அரசு உருவாக்கியிருப்பது அவர்களுக்குத் தெரியும். ஆகவே, இன்றைக்குத் தாவாரமும் தேவை இல்லை. தேவாரமும் தேவை இல்லை. இந்த நிதிநிலை அறிக்கையைத் தேவாரம் திருவாசகம் என்று ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் திருக்குறளாக ஏற்றுக்கொள்ளுங்கள். வாழ்க்கையின் வழிகாட்டியாகவும், மக்களின் நிலையில் வழி நடத்திச் செல்லக்கூடிய வரவு-செலவுத் திட்டமாகவும் இன்றைய தினம் கலைஞர் அவர்கள் இந்த மன்றத்திலே வைத்திருக்கிறார்கள். அதிலே என்னென்ன அம்சங்களெல்லாம் இருக்கின்றன?

வறட்சியைப் போக்குவதற்கு, இந்த நாட்டிலேயிருக்கிற உணவுப் பற்றாக்குறையை, தண்ணீரில்லாத பற்றாக்குறையை, மற்றும், மின்சாரம் இல்லாமையைப் போக்க நல்ல திட்டங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இவற்றால்,

இன்றைய தினம் பசி, பட்டினி, பஞ்சம் என்ற நிலைமைக்கு மக்களை விட்டு விடாமல் அவைகளைக் கட்டுப்படுத்துகிற பொறுப்பாற்றல் இன்றைய தினம் கலைஞர் அவர்களுக்கு இருந்து வருகிறது என்பதை எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் கூடப் பாராட்டுவார்கள். அவர்களே, தனியாகப் பேசிக் கொள்வார்கள். இன்றைய தினம் நமது முதல்வர் கலைஞர் அவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்காவிட்டால்—ஏற்றிருக்காவிட்டால், ஆண்டவன் என்று ஒருவன் இருந்தாலுங்கூட, இந்த நாட்டை இந்த வறட்சியிலிருந்து காப்பாற்றி இருக்க முடியாது. ஓராண்டுக்காலம் மழையில்லை. இன்றைக்குச் சிறு விவசாயிகளும் பெரு விவசாயிகளும் வாய்க்காலை நம்பியிருந்தவர்கள் பயன்பெறுகின்ற வகையில், பாதாளத்திலிருக்கிற நீரை மேலே கொண்டு வந்து அதைச் சாகுபடிக்காகவும், குடிநீருக்காகவும் பயன்படுத்துகிறோம். ஒரு காலத்திலே, ஆகாய கங்கை என்று சொல்வார்கள். இப்பொழுது பாதாளத்திலிருக்கிற கங்கையைத்தான் பயன்படுத்துகிறோம். இந்த நிலைக்கு முன்னாலே, விஞ்ஞானிகளையும், பொறியாளர்களையும் அழைத்துக் கடல் நீரைக் குடிநீராக ஆக்க வேண்டும், விவசாயத்திற்குப் பயன்படுத்த வேண்டுமென்ற திட்டங்களைக் கொண்டு வந்தார்கள்.

நமது திட்டங்கள் நிறைவேற வேண்டுமானால், நமக்கு போதுமான மின்சாரம் தேவை என்பதைக் கவனத்தில் கொண்டு, அதற்கு நெய்வேலி இரண்டாவது சுரங்கம் தேவைப்படும் என்று கூறியிருக்கிறோம். ஆகவே, தமிழகத்திற்குத் தேவையான உரத்தை தூத்துக்குடியிலே தயாரித்து எடுத்துக் கொள்வோம் என்று நாம் சொன்ன நேரத்தில், மத்திய அரசு அதனை ஏற்றுக் கொள்ளாமல் அப்படியே வைத்துக் கொண்டிருக்கிற காரணத்தினால், இங்கே இருந்தவர்கள் எல்லாம் மாநில சுயாட்சி வேண்டுமென்று ஆணித்தரமாகக் குரல் எழுப்பியவர்கள், இப்பொழுது அது என்ன? எப்படி இருக்கும்? அது கருப்பாக இருக்குமா? பச்சையாக இருக்குமா என்று விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியும். தெரிந்தும் வேண்டுமென்றே இன்றையதினம் மாநில சுயாட்சியை மறுப்பதன் மூலம் ஒருண்மையை மறைத்து விடவும் முடியாது, இல்லையென்று போக்கிவிடவும் முடியாது. அதைத் தமிழகம் பெற்றே தீரும் என்ற நம்பிக்கையிருக்கிறது. எப்படி இருந்தாலும், இன்றைய தினம் ஐந்து ஆண்டுகளுக்கு மழையில்லாமலிருந்தாலும் ஆட்சி சமாளிக்கும் என்ற நிலையிலிருக்கிறது.

இன்றைய தினம் எவ்வளவோ கடுமையான பணிகளை மேற்கொண்டு, உணவுப் பற்றாக்குறையிருந்த போதிலும், தஞ்சை மாவட்டம், கலைஞருடைய சொந்த மாவட்டம் என்ற வகையில், தஞ்சை மாவட்டத்திலே இருக்கிறவர்



களுக்குக் கொஞ்சம் சங்கடம் வந்தாலும் வரட்டும், மற்ற மாவட்டங்களிலே உள்ளவர்கள் நன்றாக இருக்கட்டும் என்று, நாங்கள் சொல்வதைக் கேட்டு விட்டு விடுகிறார்கள்.

அதே நேரத்தில், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, இப்படிப்பட்ட மாவட்டங்களுக்கு உணவு தானியங்களை அனுப்புவதிலே முனைந்திருக்கும் போது, அங்கேயிருக்கக்கூடிய வறட்சியையும் கொஞ்சம் கவனித்துப் பார்க்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் பம்ப் செட்டுகள் வைக்கவேண்டுமென்று சொன்னால், ஆயில் இன்ஜின்கள் வைக்கவேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். சாகுபடிக்காக ஆயில் இன்ஜின் இப்பொழுது போடுவது, கட்டுபடியாகி வராது என்று தெரிவித்துக்கொள்கிறேன். 2,000 பம்ப் செட்டுகளுக்கு அரசு உத்தரவிட்டிருக்கிறது. அது யானைப் பசிக்குச் சோளப்பொரி என்பது போல்தான். ஆகவே, அதற்கு மாறாக, 5,000 பம்ப் செட்டுகளாவது இந்த ஆண்டு வேண்டும். அதற்கு வேண்டிய மின்சாரத்தைப் பெற உடனடியாக கம்பிகள் தேவைப்படுகிறது. மின் இணைப்புக்குத் தேவையான பொருள்களையும், கம்பிகளையும் தஞ்சை மாவட்டத்திற்குக் கொடுத்து உதவினால், மீண்டும் எங்களால் முடிந்த வரையில் உணவுப் பொருள்களைக் கொடுப்போம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், மற்றொன்று தஞ்சை மாவட்டத்தில் 100-க்கு 60 பங்குக் குத்தகைச் சாகுபடிதாரர்கள் இருக்கிறார்கள். பம்ப் செட் வேண்டுமென்றாலும், ஆயில் இன்ஜின் வேண்டுமென்றாலும் கூட, மடம், கோயில், பெரு நிலச் சுவான்தார்களுடைய அனுமதியைப் பெறவேண்டியிருக்கிறது. அவர்களுடைய அனுமதியைப் பெறுவது என்பது அவ்வளவு சுலபமானதல்ல.

ஆகவே, குத்தகை சாகுபடிதாரர்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன்கள் வழங்கப்படுகிறபோது அவர்களுடைய சொந்த வீட்டை நிலவள வங்கிக்கோ அல்லது மின்சார வாரியத்திற்கோ ஈடாக வைத்து மின்சார பம்பு செட்டோ அல்லது ஆயில் என்ஜினோ வாங்கிக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கும்படி உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு எவ்வளவோ உதவியிருக்கிறார்கள். ஆண்டவன் இருந்தால்கூட இவ்வளவு செய்திருக்க மாட்டார். கடன்களைத் தள்ளி வைத்தீர்கள், வீட்டு மனைகளைத் தந்தீர்கள். அந்த முறையிலே நிலச் சொந்தக்காரர்களுக்கு இந்த வகையிலே இருக்கிற உரிமைகளைப் போல் குத்தகைக்காரர்களுக்கும் கொடுத்தால்தான் அந்த ஊக்கத்தைக் கொடுத்தால்தான் அவர்களும் உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டில் மழையின்மையாலும் ஆற்றில் தண்ணீர் இல்லாததாலும் விவசாயிகள் பெரும் அளவுக்குக் குறைந்த கண்டுமுதலைத்தான் பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, சென்ற ஆண்டு அவர்களுடைய கடன்களை ஒத்திவைத்ததைப் போல் இந்த ஆண்டும் அவர்கள் குத்தகை அளவில் 50 சதவிதம் மட்டும் கொடுக்கலாம் என்று சொல்லிவிட்டு மீதியை வஜா செய்து விட உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் மக்கள் இந்த அரசையும் உங்களையும் கழக அரசையும் பாராட்டி எப்போதும் உங்கள் பின்னாலே இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்த வரவு-செலவுத் திட்டத்தை யார் தருவது என்ற சர்ச்சை வருகிறது. இப்போது போர்க் கால நடவடிக்கைகளாக இராணுவ நடவடிக்கைகளாக வறட்சியை எதிர்த்து அந்தக் காலத்தில் யுத்தத்தில் அர்சுனன் வில் எடுத்தால் ஒன்று, நூறு, ஆயிரம், கோடி, சங்கம், மகா சங்கம் என்று சொல்வார்கள். அதைப்போன்று வறட்சியை எதிர்த்துத் தொடுக்கப்பட்டுள்ள போரில் நீங்கள் எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு தஞ்சை மாவட்டத்து மக்கள் எப்போதும் உங்கள் பின்னால் இருப்பார்கள் என்று தெரிவித்து இந்த நிதிநிலை அறிக்கையை ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

* **திரு. என். கே. பழனிசாமி:** துணை சபாநாயகர் அவர்களே, பொதுவாக இந்த பட்ஜெட்டிலே மத்திய சர்க்காரைப்பற்றியும் நேஷனல் டெவலப்மென்ட் கவுன்சிலில் சொல்லக்கூடியவற்றையும் பார்லிமெண்டிலே சொல்லக்கூடிய விஷயங்களாகவும் தான் இருக்கின்றன. தி.மு.க. கட்சி பார்லிமென்ட் மெம்பர்கள் மத்திய சர்க்காரிலே பேச வேண்டியவற்றை இங்கே எதிர்க்கட்சிகளிடம் சொல்லியிருக்கிறார்கள், அதற்குப் பதில் சொல்வது என்றால் மத்திய சர்க்கார் பிரதிநிதியாக இருந்தால்தான் பதில் சொல்ல முடியும். 25 ஆண்டுகளாக இல்லாத கடுமையான வறட்சி, மின்சாரப் பற்றாக்குறை, பஞ்சம் இவ்வளவு இருந்தும் எப்படி இதையெல்லாம் டேக்கிள் செய்யப்போகிறோம் என்ற முறையிலே இந்த பட்ஜெட் அமையவில்லை.

அது மட்டுமல்ல, உலகம் பூராவும் விலைவாசியேற்றம் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. நான் முன்னமேகூட அதைப்பற்றிப் பேசியிருக்கிறேன். சோஷலிச நாடுகளிலே விலை குறைந்துகொண்டு வருகிறது, உதாரணமாகக் கூட புள்ளிவிவரங்களையெல்லாம் கொடுத்து இருக்கிறேன். நார்த் கொரியாவிலே எந்தவிதமான வரியும் இல்லை, அங்கேயே விலைவாசி குறைந்து இருக்கிறது. 1947-ஆம் ஆண்டிலே பிரிட்டிஷாரிடமிருந்து ஆட்சி நமக்கு வந்தபோதும் அதற்குப் பின்னாலேயும் இந்த நாட்டிலேயுள்ள முதலாளிகள் கேபிடலிசத்தை உருவாக்கிவிட்டார்கள். விலைவாசியேற்றம், வேலையில்லாத்





திண்டாட்டம் எல்லாம் அதனால்தான் ஏற்பட்டது. தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. முதலாளிகள் இந்த நாட்டில் இருக்கிற வரைக்கும் பிரச்னை இப்படித்தான் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்ப்ளேஷன் மட்டுந்தான் விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம் என்று சொல்ல முடியாது. டெபிசிட் பட்ஜெட் கூட காரணம்தான். மத்திய சர்க்காருக்கும் இதிலே பொறுப்பு இருக்கிறது. மாநில சர்க்காருக்கும் பொறுப்பு இருக்கிறது. டெபிசிட் பட்ஜெட் போடக்கூடாது என்று மத்திய சர்க்கார் சொல்கிறது. டெபிசிட் பற்றி இந்த பட்ஜெட்டிலே ஏன் குறிப்பிடவில்லை என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. 20 கோடி ரூபாய்க்கு மேல் பற்றாக்குறை இருக்கிறது, அதற்கு சர்க்கார் என்ன செய்யப் போகிறார்கள் என்பதைச் சொல்லியிருக்க வேண்டும். அதற்கு வரி போடுகிறார்களா அல்லது மத்திய சர்க்கார் சரி பண்ணப் போகிறார்களா என்பதைச் சொல்லியிருக்க வேண்டும்.

மத்திய சர்க்கார் செய்யக்கூடிய தப்பிதம் 7 வருஷங்களாகத் தாங்க முடியாத வரிகளை மக்கள் மீது மேலும் மேலும் போட்டுக்கொண்டு வருகிறார்கள். அது போதாது என்று மாநில சர்க்காரும் போடுகிறது. மாநில சர்க்காரும் குற்றவாளிதான். இந்த வருஷம் பார்த்தால் சிகரி பவுடர், காபி இவைகள் மேல் எல்லாம் வரி போட்டிருக்கிறார்கள் அதிகமாக. இதைத்தவிர 57 பொருட்கள்மீது சிங்கிள் பாயிண்ட் டாக்ஸ் அதிகமாகப் போட்டிருக்கிறார்கள். ஆனால் விலைகள் ஏறாதா? மத்திய சர்க்கார் மட்டுமல்ல, மாநில சர்க்காரும் குற்றம் செய்துகொண்டுதான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பொதுவாக, பல விஷயங்கள் சொல்லப்படுகின்றன. விவசாய உற்பத்தி அனிமல் ஹஸ்பண்டரி, பாசனம் இவற்றிற்கு எல்லாம் அதிகமாகச் செலவிடுகிறோம் என்று சொல்லப்படுகிறது. மின்சாரத்திற்காகவும் அதிகப் பணம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. வாரியங்கள் மூலமாக என்ன என்ன அபிவிருத்திகள் செய்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இது எல்லாம் வாஸ்தவம். ஆனால் இதுவெல்லாம் ஜனங்கள் மத்தியில் எடுபடுமா? ஜனங்களிடம் சொன்னால் ஏற்றுக் கொள்வார்களா? அவர்களுக்கு என்ன பிரயோஜனம்? அவர்கள் சாப்பாட்டுக்கு இல்லாமல் பட்டினியால் சாகக் கூடிய நிலைமை இருக்கிறது.

புதுக்கோட்டை இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களையும் சேர்த்து ஒட்டு மொத்தமாகச் சேர்த்து இதை ஒரு புராப்பளமாக சர்க்கார் பார்க்கவில்லை என்ற குற்றச்சாட்டைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தப் பஞ்சத்திற்கு முன்னாலேயே அரிசி விலை ஏறியிருக்கிறது. ஆகவே, சர்க்கார் முன்னெச்சரிக்கையாக இல்லை, அதனால் வந்த கோளாறு இது. கொள்முதலை முன்னதாகவே செய்திருந்தால்—கொள்முதலை விட்டாகிவிட்டது மத்திய சர்க்கார், இந்த சர்க்காரும் கொள்முதலை விட்டாகிவிட்டது—நல்ல முறையிலே டிஸ்ட்ரிப்யூஷன் இருந்தால் இந்த விலையேற்றம் இருந்திருக்காது.

The least thing that should be done is,

குறைந்த விலையில் மக்களுக்கு அரிசி கிடைக்கச் செய்ய வேண்டும். 45
லட்சம் டன் மொத்தம் இந்தியாவிலே கொள்முதல் என்றால் தமிழ்நாட்டின் சார்பிலே 3 லட்சம் டன் கொடுக்க வேண்டும் சென்ட்ரல் பூலுக்கு என்றால் அதற்கு ஒத்துக்கொண்டிருப்பது சரியல்ல. இரண்டு மாதம் ஆகிறது. எவ்வளவு கொள்முதல் ஆகியிருக்கிறது என்ற கணக்கு இல்லை. எவ்வளவு ஸ்டாக் இருக்கிறது உங்களிடம், எப்படி டிஸ்டிரிப்யூஷன் சென்டர்கள் எல்லாம் வைத்திருக்கிறீர்கள், என்ன என்ன அதிகப்படுத்தப் போகிறீர்கள் என்ற விவரங்களே உங்களிடத்திலே இல்லை.

நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சில் 7 வருஷமாகக் கூடுகிறது. கடந்த பதினைந்து மாதமாகக் கூடவில்லை. அப்படிக் கூடாத சமயத்திலே ஆல்டர் நேடிவ் புரபோசல்ஸ் என்ன வைத்திருக்கிறீர்கள் என்று தெரியவில்லை. மத்திய சர்க்கார் வைத்திருக்கிற வெளிநாடுகளிலிருந்து வாங்கக்கூடிய பொறுப்பை எங்களிடம் கொடுங்கள் என்று சொல்கிறீர்கள். நீங்கள் வாங்கினால் மட்டும் விலை குறைந்து விடுமா? அப்படி வாங்க முடியாது, வாங்கினால் விலையைக் குறைத்து விடமுடியுமா?

இந்த சர்க்காருடைய தொழிற் கொள்கை என்ன? 7 வருஷங்களாக மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. பல பேக்டரிகள் க்ளோஷர் ஆகியிருக்கின்றன. லே ஆப் வேறு. தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். மின்சாரப் பற்றாக்குறையால் இந்த நிலைமை என்றால்—மின்சாரம் தான் எல்லாவற்றிற்கும் தேவைப்படுகிறது; மின்சாரம் இருந்தால்தான் எல்லாக் காரியங்களும் நடக்கும், விவசாயம் நடக்கும், தொழில் நடக்கும்—தொழிலிலே ஸ்டாக்னேஷன். தொழிலில் எவ்வளவு உற்பத்தி ஆயிற்று என்று சர்க்கார் பட்ஜெட்டிலே சொல்லவில்லை. எத்தனை தொழிற்சாலைகள் மூடப்பட்டன? எவ்வளவு தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் போயிற்று என்று சொல்லியிருக்க வேண்டும். பொதுத் துறையை விரிவுபடுத்தி பிரைவேட் செக்டாரை கட்டுப்படுத்தப் போகிறோம் என்று சொல்லி சோஷலிசத்திற்குப் போவதுதான்



எங்களுடைய கொள்கை என்று சொல்கிறார்கள். ஆனால் நடைமுறையிலே பார்த்தால் ஜாயிண்ட் செக்டார்தான் இருக்கிறது.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் ஸ்பிக் என்ன? எல்.ஐ.சி. நேஷனலைஸ்டு பேங்குகள் எல்லாம் சேர்ந்து 5 கோடிக்கு முதலீடு போடப்பட்டிருக்கிறது. தனிப்பட்ட மனிதர் சிதம்பரம் செட்டியார். அவர் எவ்வளவு மூலதனம் போட்டிருக்கிறார் என்றால் கிட்டத்தட்ட சில லட்சங்கள் தான். (மணி அடிக்கப்பட்டது) எப்படி நான் முடிப்பது? இன்னும் கொஞ்சம் டைம் கொடுங்கள்.

(பிற்பகல் 12-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 16 பேர் பேசுவதற்குப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். 6 பேர் தான் பேசியிருக்கிறார்கள். இன்னும் 10 பேர் எப்படிப் பேச முடியும்? இன்னும் 5 நிமிடங்களில் முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. என். கே. பழனிசாமி:** பிரைவேட்டைக் கன்ட்ரோல் செய்யவேண்டுமென்றால் என்ன செய்ய வேண்டும். சர்க்காரும் பணம் போட்டிருக்கிறார்கள். ஆனால் கன்ட்ரோல் பிரைவேட் ஆட்களிடம் இருக்கிறது. சர்க்காரின் கொள்கை என்ன? பிரைவேட்டை சர்க்கார் கன்ட்ரோல் செய்வதா அல்லது சர்க்காரை பிரைவேட் கன்ட்ரோல் செய்வதா? 90 கோடி ரூபாய் உற்பத்திக்காகக் கொடுத்திருக்கிறோம், அதிலே அவர்களின் பங்கு எவ்வளவு என்று சொல்ல வேண்டும்.

அது மட்டுமல்லாமல் மின்சாரத்தைப் பொறுத்த வரையில் எழெட்டு வருஷங்களாக இந்த மாதிரித் தொடர்ந்து பற்றாக்குறையாக இருக்கிறது. சர்க்காரின் கொள்கை என்ன? குந்தா நான்காவது திட்டம், சுருளியாறுத் திட்டம் என்றெல்லாம் காகிதத்தில்தான் இருக்கிறது. இந்தியாவிலேயே முதல் மாநிலமாக நம்முடைய மாநிலத்தில்தான் உற்பத்தி இருப்பதாகச் சொல்கிறோம். அதே நேரத்தில் அதிக மின்சாரம் வேண்டும் இந்த மாநிலத்தில்தான் இருக்கிறது என்பதையும் சேர்த்து அந்த இரண்டையும் போட்டிருந்தால் நல்லது.

அந்தக் காலத்தில், பிரிட்டிஷ்காரர்கள் காலத்தில் 'ஹைடல் பவரை' நம்பிக்கொண்டிருந்தோம். இப்பொழுது தெர்மல் ஸ்டேஷன்கள் அதிகம் தேவை. எண்ணூரை எடுத்துக்கொண்டால் 30 சதவிகிதம் கெபாசிட்டிதான் உற்பத்தி செய்கிறது. இந்தியாவிலேயே தரமான மெஷினரி. அந்த இடத்தை செலக்ட் செய்ய வேண்டுமென்றால் போதுமான தண்ணீர் இருக்கும்படியான இடத்தைச் செலக்ட் செய்திருக்க வேண்டும். ஆனால் சமுத்திர கரை ஓரமாகச் செய்திருக்கிறார்கள். அங்கே எரிந்து வேறு போய் இருக்

கிறது. பாரத் எலக்ட்ரிக் கம்பெனியோடு கூட்டு சேர்ந்து ரிப்பேர் செய்வதாகக் கூறுகிறார்கள்.

அடுத்தபடியாக, விவசாயிகளிடத்திலேயிருந்து ஏற்கெனவே வசூலித்துவிட்டார்கள். ஆனால் இப்பொழுது கொடுக்க வேண்டியதில்லை என்ற அறிவிப்பு வருகிறது. எனவே, ஏற்கெனவே வசூலித்ததைத் திருப்பிக் கொடுக்கப் போகிறார்களா? அல்லது வாங்கிய பணத்தை மாதாமாதம் கழித்துக் கொள்ளப் போகிறார்களா? மூன்று மாதங்களாகி விட்டன. இன்றைக்கு டெபாசிட் வாங்குகிறார்கள். அவர்களுக்கு வரி போட்டு வாங்குவதற்குப் பதிலாக இப்படி வாங்குகிறார்கள். அவர்களால் தங்கள் மாடுகளைக் காப்பாற்ற முடியவில்லை. சாப்பாட்டிற்கே பஞ்சமாக இருக்கிறார்கள். ஒவ்வொரு கிணற்றுக்கும் இரண்டாயிரம், மூவாயிரம் போட்டு இந்த கஷ்ட காலத்தில் இப்படிச் செய்வது முறையா? எனவே, சர்க்கார் இதைத் திருப்பிக் கொடுக்கும் முறையில் செய்ய வேண்டும்.

கல்வியைப் பொறுத்த வரையில் 10 வருஷப் படிப்பு, பிறகு பி.யூ.சி., 2 வருஷம், பிறகு பி.ஏ. 3 வருஷம். இப்படியா அல்ல பழைய முறையா என்று மாணவர்கள் மத்தியிலே குழப்பமாக இருக்கிறது. ஜனங்கள் மத்தியிலேயும் குழப்பமாக இருக்கிறது, ஆசிரியர்கள் மத்தியிலேயும் குழப்பமாக இருக்கிறது. எனவே, சர்க்கார் இது பற்றி ஏன் வெள்ளை அறிக்கை ஒன்றைக் கொடுக்கக்கூடாது என்று கேட்கிறேன். சர்க்காரின் கொள்கை என்ன? 3-வது வகுப்பிலிருந்து கணிதம் என்று சொல்லிக் கொடுக்கப்படுகிறது. அமெரிக்காவிலே கூட பார்த்துக் கைவிட்ட திட்டம். மேத்தமெடிக்ஸ், எக்ஸ், ஒய் எல்லாம் படிப்பு பூராவும் முடிந்த பிறகு, ஹையர் வகுப்புகளுக்கு வைத்தால் போதும். குழந்தைகளுக்கு வேண்டாம். என்ன கணக்கு என்று அவர்களைக் கேட்டால்கூடத் தெரியாது.

கடைசியாக என்.ஜி.ஓ.க்கள் விஷயம். சர்க்கார் ஒரு பார்முலாவை வைத்திருக்கிறார்கள். 1-1-1973-ஆம் தேதியில் டி.ஏ.வையும், பேசிக் பேயையும் இணைத்து 9 மடங்கு போட்டு, இப்படியெல்லாம் கணக்குப் போட்டு, பிறகு அதற்கு 36 சதவிகிதம், 27 சதவிகிதம் என்று சீலிங் நிர்ணயித்திருக்கிறார்கள். இந்தக் கணக்குப்படி என்ன வரும் என்று தெரியவில்லை. 150 ரூபாய் சம்பளம் வாங்கும் பியூனுக்கு 25 ரூபாய் டி.ஏ. வாங்கினால் அதையும் சேர்த்துச் சேர்த்தால் 175 ரூபாய் வருகிறது. இப்படியிருந்தால் 225 ரூபாய்க்குமேல் வரவேண்டும். ஆனால் சீலிங் போட்டதில் 9 ரூபாய்தான் வரும். இதற்கு இவ்வளவு கணக்குப் போட வேண்டுமா? 5 ரூபாய்தான் அதிகம் கிடைத்திருக்கிறது. 300 ரூபாய்க்குமேல் இருந்தால் 14 ரூபாய் கிடைத்திருக்கிறது.

(மணியடிக்கப்பட்டது)



* திரு. வி. மலைக்கண்ணன்: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, மாண்புமிகு டாக்டர் முதல்வரவர்கள் இந்தச் சட்ட மன்றத்தில் அளித்த 1975–76 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை நான் வரவேற்கிறேன்.

அடிப்படை மக்களின் வாழ்க்கையில் அக்கறை கொண்டு, ஒவ்வொரு துறையிலும் அவர்களுக்கு நலன் உண்டாக்கும் வகையிலே இந்த நிதிநிலை அறிக்கை அளிக்கப்பட்டிருக்கிறது. இதை முழுதும் படித்துப் பார்க்கும்பொழுது, நமக்கு இன்னும் நாம் விரும்பும் வகையில் அதிகாரங்களிருந்தால் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழகத்தை ஒரு பொதுவுடைமைப் பூத்துக் குலுங்கும் சோலையாக உருவாக்கியிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

இன்றைக்கு மதுவிலக்கை அமலுக்குக் கொண்டு வந்திருப்பதாலும் வறட்சியின் காரணமாக நமக்கு வரவேண்டிய வருவாயைத் தள்ளுபடி செய்த வகையிலும் 36 கோடி ரூபாய் துண்டு விழுகிறது. இதற்காக நம்முடைய மாநில அரசு மத்திய அரசாங்கத்தை அணுகி இதைச் சரிகட்ட தொகையைக் கொடுக்க வேண்டுமென்று கேட்க வேண்டுமாய் நான் கேட்டுக் கொள்கிறேன்.

வடமாநிலங்களைப் பொறுத்த வரையில் உத்தரப் பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களில் நிதிநிலை அறிக்கைகளில் துண்டு விழுந்தால் உத்தரப் பிரதேசத்திற்கு 90 கோடி ரூபாயும், பீகாருக்கு 40 கோடி ரூபாயும் மத்திய அரசு தந்திருக்கிறது. உத்தரப் பிரதேசத்தில் தேர்தல் நடந்த நேரத்தில் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இல்லாத பல திட்டங்களையெல்லாம் அவர்கள் உருவாக்கி அந்தத் தொகைக்காக 91 கோடி ரூபாயை உத்தரப் பிரதேச மாநிலத்திற்கு இந்திய அரசாங்கம் தந்திருக்கிறது. இப்படி நம்முடைய மாநிலத்திலே துண்டு விழும்போதும் ஆளுங் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் மத்திய அரசை அணுகி இந்தத் தொகையை நமக்குப் பெற்றுத்தர தயாராக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆனால் அவர்களுடைய நோக்கம் எப்படி இருக்கிறது என்று பார்த்தால், 100 ஆண்டுக் காலமாக இல்லாத வறட்சியால் தமிழகம் அலைக்கழிக்கப்படும் பொழுது 5 கோடி ரூபாய் கொடுத்தால் போதும் என்று ஆளுங் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொன்னதாக நாங்கள் அறிகிறோம். எங்கள் மாவட்டத்திற்கு மட்டுமே 25 கோடி ரூபாய் வேண்டுமென்று நாங்கள் கேட்டிருக்கிறோம். அதேநேரத்தில் சென்ற ஆண்டு கர்நாடக மாநிலத்தில் வறட்சி ஏற்பட்ட பொழுது 43 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறது. இதையெல்லாம் இங்கேயுள்ள இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பெருமக்கள் ஏன் புரிந்து கொள்ளவில்லை. ஏன் அதைக் கேட்கவில்லை என்று நினைத்து

[திரு. வீ. மலைக்கண்ணன்] [1975 மார்ச் 5

மிகவும் வருத்தப்படுகிறோம். காரணம் என்னவென்று தெரிகிறது. அவ்வளவு தொகையை வாங்கிக் கொடுத்து இந்த மாநிலத்தில் வறட்சியை நீக்குவதற்கான பல திட்டங்களைச் செய்தால் வாக்கு நமக்குக் கிடைக்காமல் போய்விடுமே என்ற எண்ணமாகத்தான் இருக்கும். அப்படிப்பட்ட எண்ணம் தமிழ்நாட்டில்தான் இந்த அரசியல் கட்சிகளுக்கு இருக்கின்றனவே தவிர மற்ற மாநிலங்களில் மாநிலத்தின் நன்மைகளைக் கருதி எல்லாக் கட்சிகளும் மொத்தமாகச் சேர்ந்து கேட்கிறார்கள். ஆனால் இங்கே மட்டும் இப்படிப்பட்ட அவல நிலை இருப்பதைக் கண்டு வருத்தப்படுகிறோம்.

இப்பொழுது ஏற்பட்டிருக்கும் வறட்சி சாதாரண வறட்சி அல்ல. இதை நான் சொல்லும்பொழுது அதிக நிதி வேண்டுமென்றெல்லாம் சொல்லும்பொழுது நிதி ஆணைக் குழு, நிதி ஆணைக் குழு என்று சொல்கிறார்கள். நிதி ஆணைக் குழு வேதம் அல்ல. நாட்டிலே 100 ஆண்டுக் காலமாக இல்லாத வறட்சி ஏற்பட்டு அதை அப்புறப்படுத்த வேண்டுமென்றால் அதிகமான தொகையை அதற்காகத் தருவதற்கு முன்வர வேண்டும்.

நாம் அரிசி சாப்பிட்டுப் பழக்கப்பட்டவர்கள். கேட்டால், கோதுமையின் விலை குறைவு, அரிசியின் விலை கூடுதலாக இருக்கிறது. எனவே நீங்கள் கோதுமை சாப்பிடுங்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் வடநாட்டிலே கோதுமை கிடைக்கவில்லை என்றால் உலகம் பூராவும் ஆலாய்ப்பறந்து கோதுமையைக் கொண்டு வருகிறார்கள். அவர்களைப் பார்த்து சோளத்தின் விலை குறைவாக இருக்கிறது என்று சொல்வதில்லை. அப்படிச் சொன்னால் என்னென்னமோ செய்வார்கள். இப்பொழுது பொதுக்கூட்டத்திலே குண்டு வீசுகிறார்கள், இப்படிச் சொன்னால் பிறகு பார்லிமெண்டிலேயே குண்டு வைப்பார்கள்.

ஆனால் தமிழ்நாட்டு மக்கள் அப்படியெல்லாம் செய்ய மாட்டார்கள் என்று எண்ணியோ என்னவோ தமிழ்நாட்டிற்கு அரிசிகூட வாங்கிக் கொடுக்க மறுக்கிறார்கள். தமிழ்நாட்டிலுள்ள மக்கள் பாதாம் அல்வா, ரசகுல்லா எது சாப்பிடுபவராக இருந்தாலும் அல்லது சப்பாத்தி சாப்பிடுபவர்களாக இருந்தாலும் குருமா வைத்துச் சாப்பிடுவர்களாக இருந்தாலும் அரைக்கால்படி அரிசியை வேகவைத்து சைவமாக இருந்தால் பருப்பு, நெய் போட்டுச் சாப்பிட்டால் தான் சாப்பிட்ட மாதிரி இருக்கிறது. அசைவர்களாக இருந்தால் கருவாடு, கத்தரிக்காய் வைத்துச் சாப்பிடுவார்கள். எனவே, அரிசி வேண்டாம், கோதுமை சாப்பிடுங்கள் என்று சொன்னால் இதுவா ஒருமைப்பாட்டிற்கு வழி? ஒருமைப்பாடு என்றால் அது ஒரு வழிப்பாதை அல்ல. கலைஞர் அவர்கள்



1975 மார்ச் 5] [திரு. வீ. மலைக்கண்ணன்]

ஒருமைப்பாட்டைக் காக்கும் வகையில்தான் யுத்தத்தின் பொழுது 5 கோடி ரூபாய் வசூலித்துக் கொடுத்தார்கள். ஒருமைப்பாட்டில் எல்லோருக்கும் அக்கறை இருக்கிறது. ஆனால் நாட்டிலே உள்ள மொத்த நலன்களைப் பார்க்கும்படியான அந்த எண்ணமே மத்திய அரசுக்கு இல்லை.

மாநில சுயாட்சி பற்றி இந்திரா காந்தியம்மையார் அவர்கள் திட்டவட்டமாக முடிவு எடுத்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். 1952 ஆம் ஆண்டே திட்டவட்டமாக முடிவு எடுத்துத்தான் ஷேக் அப்துல்லாவை ஜெயிலில் போட்டார்கள். எவ்வளவு உயிர்ச்சேதம், எவ்வளவு பொருட்சேதம்? 23 ஆண்டுக் காலம் ஆயிற்று. கொடைக்கானல் மாளிகையிலே அவரை கைதியாக வைத்திருந்தார்கள். அவரைக் காலையில் மாலையில் நடத்திக் கூட்டிச் செல்ல போலீசார் உடன் சென்றார்கள். ஷேக் அப்துல்லாவின் மாநில சுயாட்சியைப் புரிந்துகொள்ள 23 ஆண்டுக் காலம் ஆயிற்று. அண்ணாவின் மாநில சுயாட்சியை, கலைஞரின் வாதத்தைப் புரிந்து கொள்ள நாட்கள் ஆகலாம். மாதங்கள் ஆகலாம், ஆண்டுகள் ஆகலாம், திட்டவட்டமாக, நிரந்தரமாக இல்லையென்று கூறிவிட முடியாது.

மாநில சுயாட்சி பற்றி நம்முடைய பங்காளிகள் பேசுகிறார்கள். அண்ணா அவர்கள் சொல்லவே இல்லை, பேசவே இல்லை, எழுதவேயில்லை என்றார்கள். 'அண்ணா அவர்கள் பேசினார்கள், எழுதினார்கள்' என்று எடுத்துக் காட்டினோம். அதற்குப் பிறகு 'தீர்மானம் இல்லை, செயற்குழுவிலே இல்லை, பொதுக் குழுவிலே இல்லை' என்று சொல்லுகிறார்கள். செயற்குழு, பொதுக் குழு, எல்லாம் அண்ணாதான் என்று நாம் சொல்கிறோம்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** மதிப்பிற்குரிய ஷேக் அப்துல்லா அவர்கள் 23 வருஷங்கள் ஜெயிலில் இருந்தது போல் இருக்க விரும்புகிறார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அப்படிப்பட்ட லட்சிய வெற்றிக்கு ஷேக் அப்துல்லா போல் சிறையில் இருக்கத் தயாராக இருக்கிறேன்.

**திரு. வீ. மலைக்கண்ணன்:** நீங்கள் விரும்பினால் எங்கள் தலைவரோடு நாங்களும் சிறை செல்லத் தயார். அந்த நிலைமை வரவேண்டாம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அந்த நிலைமை வரவேண்டாம் என்று சொல்லுகிறார்கள். வரும், வந்தே தீரும், அதைச் சந்தித்தே தீருவோம்.

**திரு. வீ. மலைக்கண்ணன்:** அந்தக் கொள்கையை மறைக்க முடியாது . .

**திரு. கோவை செழியன்:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். பேரவைத் தலைவர் அவர்களே, 'அந்த நிலைமை வந்தே தீரும் அதற்காக நான் போவேன்' என்று முதல்வர் அவர்கள் கூறுகிறார்கள். எந்த நிலைமை எதற்காகப் போகிறார்கள்? இதை இந்த மாமன்றத்தில் தெரிவிக்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் பொது விவாதத்திற்கு பதிலளிக்கின்ற நேரத்தில் அவற்றை எல்லாம் பற்றி விளக்கமாகச் சொல்லுகிறேன்.

**திரு. வீ. மலைக்கண்ணன்:** மாநில சுயாட்சி பற்றி அண்ணா அவர்கள் எழுதவில்லை, பேசவில்லை என்று சொன்னார்கள். அதை எடுத்துக் காட்டியவுடன் செயற்குழுவிலே இல்லை, பொதுக் குழுவிலே இல்லை என்று சொல்லுகிறார்கள்[redacted]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைப் பற்றி நீண்ட நேரம் விவாதித்தாகிவிட்டது. உங்களுக்கு இன்னும் மூன்று நிமிடங்கள்தான் இருக்கின்றன. உங்கள் தொகுதியைப் பற்றி ஏதும் சொல்ல வேண்டுமென்றால் சொல்லுங்கள்.

**திரு. வீ. மலைக்கண்ணன்:** நம்முடைய எம்.ஜி.ஆர் அவர்கள் அமெரிக்கா சென்றார்கள். சில பிட் நோட்டீஸ்—விளம்பரச் சீட்டுகளைக் கொண்டு போய்க் கொடுத்திருக்கிறார்கள். அதிலே "மருதூர் கோபால் ராமச்சந்திரன் அரசியலில் கீர்த்தியும், செல்வாக்கும், புகழும் பெற்றிருக்கிற அளவுக்கு உலகத்தில் யாரும் இல்லை" என்று சீட்டுக் கொடுத்தார். தமிழ்நாட்டிலே பிறந்த ராஜாஜி, பெரியார், காமராஜர், அண்ணா, கலைஞர் போன்றவர்களைவிட திடீரென்று தாங்கள் புரட்சியைச் செய்து விட்டீர்களா?' என்று அவர்கள் கேட்டார்கள். 'இப்படிப்பட்ட செல்வாக்கு எப்படித் திடீரென்று வந்தது?' என்று கேட்டார்கள். "நான் நல்லவனாக நடிக்கிறேன்; பரோபகாரியாக நடிக்கிறேன்; பெண்களை எல்லாம் ஆபத்திலிருந்து காப்பாற்றுபவனாக நடிக்கிறேன். என்னுடைய நடிப்புக்குச் செல்வாக்கு" என்று பதில் அளித்திருக்கிறார். நான் பங்காளிகளைப் பார்த்து கேட்கிறேன்—அண்ணாவின் கொள்கைகளைச் செயலாற்றுகிற கலைஞரை நீங்கள் விரும்பாமல், செயலாற்றுவது போல் நடிப்பவரை நீங்கள் விரும்புகிறீர்கள். இப்படிப்பட்ட அவல நிலைமை தமிழகத்திற்கு ஏற்பட்டிருக்கிறது.

என்னுடைய தொகுதியான இராமநாதபுரம் மாவட்டத்தில் பெரிய வறட்சி ஏற்பட்டிருக்கிறது. டாக்டர் கலைஞர், உணவு அமைச்சர் மற்றும் பலரும் சுற்றிப் பார்த்திருக்கிறார்கள். பல திட்டங்களைக் கோடி கணக்கான ரூபாய்க்கு டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். கடந்த 50 ஆண்டுக் காலமாகக் கேட்டுக் கொண்டிருந்த பாலம் கட்டப்பட இருக்கிறது. ராமநாதபுரம் ராஜசிங்கமங்கலம் கால்வாயில் தூர் வார நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அங்கு கடற்கரை ஓரங்களில் 6 மைல் தூரம் வரை நல்ல தண்ணீர் இல்லையென்று சொல்லுகிறார்கள். ஆனால் தனியார் தோண்டுகின்ற கிணறுகளில் குடிதண்ணீர் கிடைக்கிறது. குடிதண்ணீர் நிரந்தரமாகக் கிடைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். வறட்சிப் பணியில் ஒரு கோடி ரூபாய் செலவழித்து நிரந்தரமாக ஒரு ஏற்பாட்டைச் செய்து கொடுக்க வேண்டும். எங்களுடைய மாவட்டத்திற்கு ஒரு வறட்சிப் பணிக்காக 24 கோடி ரூபாய் கேட்டிருக்கிறோம். காங்கிரஸ் கட்சித் தலைவர் பாரிமுத்து அவர்கள் மத்திய அரசுக்கு எடுத்துக்கூறி எங்கள் மாவட்டத்திற்கு அதிகமான தொகையைப் பெற்றுத் தர ஒத்தாசை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.





**திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் முன்னால் இருக்கக்கூடிய 75-76-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையைப் பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இப்போது இருக்கக்கூடிய விலைவாசியேற்றம், பொருளாதார நெருக்கடி, நிதி நிலை, இவைகளை எல்லாம் மனத்தில் கொண்டு பார்க்கும்போது இப்போது அவைமுன் இருக்கக்கூடிய இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறதே, இதைவிட இந்தச் சூழ்நிலையில் வேறு நல்ல முறையில் தயாரிக்க முடியாது என்பதை நான் முதலில் ஏற்றுக் கொள்ள வேண்டிய சூழ்நிலையில் இருந்தாலும் கூட, இந்த நிதிநிலை அறிக்கையை இராமநாதபுரம்வாசி என்ற முறையில் முழு மனத்துடன் வரவேற்க முடியாத நிலையில் இருக்கிறேன் என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இதிலே பல வரவேற்கத்தக்க அம்சங்கள் இருக்கின்றன. கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்காக சோஷல் செக்யூரிடி ஸ்கீம் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் ஒரு கைத்தறி நெசவாளி என்ற முறையில் அந்தச் சமுதாயத்தின் சார்பில் இந்த அருமையான திட்டத்தைக் கொண்டு வந்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதே சமயத்தில் என்னுடைய வேண்டுகோள் ஒன்றையும் முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஒவ்வொரு கைத்தறி நெசவுத் தொழிலாளிக்கும் ஒரு ரூபாய்க்கு 6 பைசா கொடுப்பதிலே அரசு சார்பிலே 3 பைசா கொடுப்பதாக நிதிநிலை அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். வரக்கூடிய காலத்தில் அந்த 3 பைசாவை 6 பைசா பிறகு அதற்கு மேலும் அதிகமாக உயர்த்தக்கூடிய சூழ்நிலையை மனத்தில் கொண்டு செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி] [1975 மார்ச் 5

இப்போது இந்தத் திட்டம் கூட்டுறவுத் துறையில் இருக்கக்கூடிய நெசவாளர்களுக்கு மட்டும்தான் பயன்படக் கூடிய நிலைமை இருக்கிறது. கூட்டுறவுத் துறைக்கு அப்பால் இருக்கக்கூடிய நெசவாளர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இந்தத் திட்டத்தின் பயன் இப்போது கிடைக்கப் போவதில்லை. அவர்களுக்கும் இந்தத் திட்டத்தின் பயன் இப்போது கிடைக்கப் போவதில்லை. அவர்களுக்கும் திட்டத்தின் பயன் கிடைக்கக்கூடிய அளவில் இதை எப்படி விஸ்தரிப்பது என்று ஆலோசித்து அதற்கு வேண்டிய காரியங்களையும் இனிமேலாவது செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரேயொரு சந்தேகத்தை நான் கேட்க விரும்புகிறேன். பருத்திக்கும், பருத்தி நூலுக்கும் 2 சதவிகிதமாக இருந்த விற்பனை வரியை 3 சதவிகிதமாக உயர்த்தியிருக்கிறார்கள். அதன்மூலம் சற்று நிம்மதியாக இருக்கக்கூடிய கைத்தறி நெசவாளர்கள் விலையேற்றத்தின் காரணமாகப் பாதிக்கப்படுவார்கள் என்ற எண்ணம் இருக்கிறது. இப்படி இதன்மேல் விற்பனை வரியை அதிகப்படுத்தியிருப்பதை மறுபடியும் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இராமநாதபுரம் மாவட்ட மக்களின் நிலை முதல்வர் அவர்கள் அறியாதது அல்ல. வறட்சி நிவாரணப் பணிகள் செய்து வந்தாலும்கூட அங்கிருக்கக் கூடிய மக்களுக்கு அந்தப் பணியின் மூலம் முழுப் பலன் கிடைத்து விட்டதாகச் சொல்ல முடியாது. இப்போதும் கூட அங்கிருக்கக்கூடிய மக்கள் தங்கள் பெண்டு பிள்ளைகளோடு எவ்வளவு சாமான்களை எடுத்துக்கொள்ள முடியுமோ எடுத்துக் கொண்டு வேறு ஊர்களுக்கு, வேறு மாவட்டங்களுக்குச் செல்லக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். அதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. தஞ்சைக்குப் போகிறார்கள்; மதுரைக்குப் போகிறார்கள். இந்த மக்கள் அங்கெல்லாம் போய்த் தங்கியிருக்க இடம் இருக்கிறதா என்று கேட்டால் இடம் இல்லை. வேலை கிடைக்கிறதா, கூலி கிடைக்கிறதா என்றே தெரியவில்லை.

பர்மா அகதிகள், இலங்கை அகதிகளுக்கு அகதிகள் முகாம் என்று திறந்திருக்கிறோம். அவர்களுக்குப் பல காரியங்களைச் செய்கிறோம். அதைப் போல் இராமநாதபுரம் மாவட்டம் எப்போதும் அகதிகள் நிறைந்த இடமாக இருப்பதால் தஞ்சைக்குப் போனாலும், மதுரைக்குப் போனாலும் நிரந்தரமாக அவர்களுக்காக அகதிகள் முகாம் திறந்து கஞ்சித் தொட்டிகள் வைத்து கஞ்சி ஊற்ற வேண்டிய நிலைமை எப்போதும் இருந்து கொண்டிருக்கிறது. இதை மாற்ற வேண்டும். 1969-ம் ஆண்டு வறட்சியின் போதும் இராமநாதபுரம் மாவட்டம் பாதிக்கப்பட்டது. இப்போது அடுத்த வறட்சியை நாம் காண்கிறோம்.



1975 மார்ச் 5] [திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி]

இந்த வறட்சி இருக்கக் கூடிய நிலையைப் பார்க்கிறபோது தொடர்ந்து இனிமேல் இராமநாதபுரம் மாவட்டம் பல வறட்சிகளைச் சந்திக்கப் போகிறது என்ற நிலை இருக்கிறது. கடந்த வறட்சியின் போது 18 கோடி ரூபாய் வரை நாம் அந்த மாவட்ட மக்களுக்காகச் செலவு செய்திருக்கிறோம். இப்போது 57 கோடி ரூபாய் வரையில் செலவு செய்வதற்குத் திட்டம் செய்திருக்கிறோம். போன தடவை 18 கோடி ரூபாய்களை வறட்சி நிவாரணப் பணிகளுக்குச் செலவு செய்ததன் மூலமாக அவர்கள் இனிமேல் வரக்கூடிய வறட்சியை தாங்கக் கூடிய சக்தியை அவர்களுக்கு அளித்தோமா என்றால் இல்லை. எப்படி ஏறுகிற விலைவாசிகளுக்கு ஏற்ப மக்களுக்கு அதைத் தாங்கக் கூடிய சக்தியை அதிகப்படுத்தவேண்டுமென்று நினைக்கிறோமோ அவ்வாறு வறட்சி நிலையைத் தாங்கக் கூடிய சக்தியை அந்தப் பகுதி மக்களுக்கு நாம் செலவழிக்கின்ற பணத்தின் மூலம் ஏற்படுத்த வேண்டும்.

நாம் செலவழிக்கின்ற பணத்தின் மூலமாக நாம் அவர்களுக்கு அந்தத் தாங்கும் சக்தியைக் கொடுக்கவேண்டும். அப்படி இல்லாவிட்டால் அவர்கள் இனிமேல் வறட்சியை தாங்கக் கூடிய நிலை இல்லாமல் போகும்.

ஆகவே 57 கோடி ரூபாய்களை நாம் எந்த முறையில் செலவு செய்யப் போகிறோம் என்பதைப் பார்க்கிற போது பழைய முறையில். அதே முறையில் செலவு செய்வதாக இருக்கிறோம். ஏற்கெனவே 18 கோடி ரூபாய்களைச் செலவழித்தோம். இப்போது 57 கோடி ரூபாய்களைச் செலவழிக்க இருக்கிறோம். இவைகளின் மூலமாக அவர்களுக்கு நிரந்தரமான ஒரு பலனை கொடுக்கப்போகிறோமாவென்றால் இல்லை என்பதுதான் என்னுடைய பதிலாகும். அவர்களுக்குச் செலவழிக்கிற பணத்தில் அவர்கள் நிரந்தரமாகப் பஞ்சத்தைத் தாங்கக் கூடிய சக்தியை நாம் அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். எவ்வளவு பெரிய பஞ்சம் வந்தாலும் அதைத் தாங்கக் கூடிய சக்தியைக் கொடுக்கக் கூடிய அளவிலே இந்தப் பணத்தைப் பயன்படுத்தவேண்டும். அதற்கான திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்பது என்னுடைய ஆலோசனை. இதற்கான முறையில் திட்டங்கள் வகுக்கப்படவில்லை என்பது என்னுடைய குறையாகும்.

இராமநாதபுரம் மாவட்டத்திற்கு இந்தப் பணத்தைச் செலவழிப்பதற்கென்று சொல்லித் தனியாக ஒரு டிவிஷன் போடவேண்டும். அவர்கள் எந்த வேலையை எடுத்துக் கொள்ளவேண்டுமென்றாலும் அவர்கள் இங்கே கேட்க வேண்டுமென்ற நிலை இருக்கிறது. அவர்கள் அந்தந்த இடத்திலேயே ஆன் தி ஸ்பாட் டெசிஷன் எடுத்து செயல்படுத்தக் கூடிய நிலையில் அவர்களுக்கு

அதிகாரத்தைக் கொடுத்து அவர்கள் இந்த வறட்சி நிவாரணப் பணிகளைச் செய்ய வேண்டும். அப்போதுதான் நிரந்தரமான வழி வகைகளைச் செய்ய முடியும்.

10, 15 வருடங்களாகப் புதிய கண்மாய்களைத் தோண்டவேண்டுமென்று திட்டம் போட்டு வைத்திருக்கிறோம். 15 வருஷங்களாக எந்தத் திட்டமும் நிறைவேற முடியாத நிலையில் இருக்கின்றது. அந்தத் திட்டங்களையெல்லாம் இந்த ஒரு வருஷக் காலத்திலே எடுத்து செயல்படுத்தவேண்டும். ஏற்கெனவே எவ்வளவு திட்டங்கள் இருக்கின்றனவோ அவைகளையும், புதிய கண்மாய் அல்லது நீர்த் தேக்கங்கள் என்று வேறு திட்டங்கள் இருந்தால் அவைகளையும் ஆக, எல்லாத் திட்டங்களையும் இந்த 57 கோடி ரூபாய் செலவில் அல்லது இதற்கும் மேல் ஆனாலும் செலவழிப்பதன் மூலமாக இவைகளை நிறைவேற்ற வேண்டும்.

அதைப்போலவே ஆழ் குழாய்க் கிணறுகளை, டீப் போர் வெல்ஸ், எவ்வளவு அதிகமாகத் தோண்ட முடியுமோ அவ்வளவு அதிகமாகத் தோண்டத் திட்டங்கள் போடவேண்டும். இரண்டாயிரம் தோண்டப்போகிறோம் என்று சொல்லப்படுகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்து ஒரு லட்சம் போர் வெல்ஸ் போட்டால் கூட போதாது என்பது என் கருத்து. அதைப் போல மண் வளப் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்துச் செய்யவேண்டும். பம்ப் செட்டுகளுக்கு உடனடியாக மின்சார இணைப்புக் கொடுக்கப்படுவதில்லை என்ற குறை இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் பம்ப்செட் போட்டு மின்சார இணைப்புக் கேட்டால் அதற்கு பிரையாரிட்டி வைத்துக்கொண்டு அவர்களுக்கு உடனடியாகச் செய்யவேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன். இப்படி விரிவான அடிப்படையில் அவர்களுக்கு நிரந்தரமான பலன் கிடைக்கக் கூடிய வகையில் திட்டங்களைச் செயல்படுத்தவேண்டும். இதற்காக வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இப்போது தமிழ் நாடு இருக்கிற நிலையிலே இது வரை காணாத வறட்சியின் பிடியில் நாம் இருக்கிறோம். காவிரி வறண்டு விட்டது. மின்சாரத் தட்டுப்பாடு இருந்து கொண்டிருக்கிறது. மற்ற மாநிலங்களைக் காட்டிலும் அதிகமான மின்சாரத்தை நாம் உற்பத்தி செய்கிறோம் என்ற பெருமை நமக்கு இருந்தாலும் அடிக்கடி மின்சாரத் தட்டுப்பாடு இருக்கிறது என்பதை நாம்





மறுக்க முடியாது. பக்கத்தில் இருக்கிற மாநிலங்களிலிருந்து மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டுமென்ற நிலை நமக்கு இருக்கிறது. அதைப் போல பலவற்றிற்கும் மற்ற மாநிலங்களைச் சார்ந்திருக்கவேண்டிய நிலை இருக்கிறது.

இந்த நேரத்தில் நாம் இப்படி மாநில சுயாட்சி என்ற கோஷத்தை எழுப்பிக் கொண்டிருக்க வேண்டுமா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டிய நிலையில் இருக்கிறோம். என்னைப் பொறுத்த அளவிலே இப்போது செய்யவேண்டிய காரியம் வேறு எவ்வளவோ இருக்கின்றன. இதற்கு இப்போது காலமும் நேரமும் உகந்தது அல்ல என்பது என்னுடைய நிலையாக இருக்கிறது. ஏனென்று கேட்டால் நமக்கு முக்கியமாக வேண்டியது தண்ணீர், பவர். இவைகளுக்கெல்லாம் மொத்தமாக செண்ட்ரல் கிரிட் வேண்டுமென்ற கோஷத்தை முன்னாலே வைத்து அதற்காக வேண்டிப் பாடுபட வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம்.

இந்த நிலையில் மாநில சுயாட்சி வேண்டுமென்று கேட்டுக் கொண்டு நம் எண்ணங்களையும், நேரத்தையும் வேறு திசையில் ஏன் திருப்பிக் கொண்டிருக்க வேண்டுமென்று எனக்குப் புரியவில்லை. என்னுடைய நண்பர்கள் இங்கே சிரிக்கிறார்கள். அவர்களை நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். மாநில சுயாட்சி என்பதற்குப் பதிலாக மாவட்ட சுயாட்சி வேண்டுமென்று கேட்டால் அதை உடனடியாக நிறைவேற்றிக்கொள்ள முடியுமா? மாநிலத்தில் எந்த அதிகாரங்கள் இருக்கின்றனவோ அவைகளை நம் மாநிலத்தை மாவட்டங்களாகப் பிரித்து மாவட்டங்களுக்குக் கொடுங்கள், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு அரசு இருக்கட்டும், மாநிலத்தில் கூட்டாட்சி, மத்தியில் கூட்டுக் கூட்டாட்சி என்று இப்படி எதை வேண்டுமானாலும் சொல்லிக் கொண்டிருக்கலாம்.

இப்போது உள்ள வறட்சி நிலையில் மக்களுக்கு இவைகளைச் சொன்னால் ஏற்றுக்கொள்வார்களா? நாம் இந்த கோஷத்தை வைத்துக்கொண்டு இதைப் போய் மக்களிடம் சொன்னால் அவர்கள் இதைக் கேட்கக்கூடிய நிலையில் இல்லை என்பதற்காக நான் இதைச் சொல்கிறேன். இதைப்பற்றிப் பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். வேறு காலம் வரும், பார்த்துக் கொள்ளலாம்.

நம் முன்னால் இருக்கக் கூடிய பிரச்சனை, என்றுமே காணாத வறட்சி. 100 ஆண்டுக் காலம் காணாத வறட்சி, அதை நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். இந்த நேரத்தில் இத்தகைய கோஷங்களை வைத்துக் கொண்டிருப்பது உகந்ததல்ல என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நான் ஒரு விஷயத்தைச் சொல்லி என் பேச்சை முடித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. தோப்பூர் திருவேங்கடம் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது உகந்த நேரமல்ல, இதற்குப் பின்னால் வறட்சி நீங்கிய பிறகு மாநில சுயாட்சிக் கோரிக்கையை எழுப்பலாம் என்று கருதுகிறார்களா வென்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** அந்த நிலை வரும்போது என்ன பதில் சொல்லவேண்டுமென்று தெரியும். நான் இப்போது அதைப் பற்றிப் பேசுவதற்குத் தயாராக இல்லை.

அவையில் முக்கியமான பிரச்சனையைச் சொல்லி முடித்துக் கொள்ள விரும்புகிறேன். வறட்சியைச் சமாளிக்க முக்கியமாக இருப்பது சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்ட் ஆகும். அதைப்பற்றி எஸ்டிமேட்ஸ் கமிட்டி 1973-74-ல் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறது. அந்த ஒரு விஷயத்தைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய நிலையில் இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டில் கீழ் மட்டத்தில் இருக்கிற அதிகாரிகள் எப்படி நடந்து கொண்டார்கள் என்று எஸ்டிமேட்ஸ் கமிட்டியில் சில கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவர்களை வைத்துக் கொண்டு வறட்சி நிலைமையைச் சமாளிக்க வேண்டிய நிலை இருக்கிறது என்பதால் அதைப் பரிசீலிக்க வேண்டிய நிலை இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். அவர்களைப்பற்றி எஸ்டிமேட்ஸ் கமிட்டியில் சில கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அதை வைத்துக்கொண்டு சில விஷயங்களை இந்த நேரத்தில் நான் அவை முன்னால் சொல்ல விரும்புகிறேன்.

(மணி அடிக்கப்பட்டது.)

இன்னும் 5 நிமிஷத்தில் முடித்து விடுகிறேன். நான் அந்த எஸ்டிமேட்ஸ் கமிட்டியில் அங்கத்தினராக இருந்தேன். அந்த நிலையை வைத்துக் கொண்டு நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அந்த கமிட்டியின் ரிப்போர்ட்டில் 6 வது பக்கத்தில்

The Committee is further surprised to note the conspiracy of the parties as well as the Taluk Supply Officer to cheat the Government by putting false claims that the entire paddy were





washed away in the floods as reported by the Revenue Divisional Officer. என்றும்

அதற்குப் பிறகு

The Committee also does not understand why the District Officers have been sheilding the authorised wholesaler without taking immediate steps to make good the loss. என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. கமிட்டி சில விஷயங்களைப் பரிசீலனை செய்தது. பரிசீலனை செய்த விஷயத்தில் கீழே இருக்கக்கூடிய சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்ட் அதிகாரிகள் எல்லாம் எந்த முறையில் நடக்கிறார்கள் அல்லது நடந்து கொள்கிறார்கள் என்பதைப் பற்றிய கருத்துக்களை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கமிட்டிக்கு இருந்த காலம் குறுகிய காலம். அந்தக் குறுகிய காலத்தில் எத்தனை விஷயங்களைச் சொல்ல முடியுமோ அத்தனை விஷயங்களையும் சொல்லியிருக்கிறார்கள்.

அந்தக் கமிட்டி முடிவு சொன்ன பிறகு அதற்கு மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது அவைக்கு இதுவரை தெரியவே தெரியாது. தாண்டவராயன் விவகாரம் பற்றியும் எந்த விவரமும் சொல்லப்படவில்லை. மேற்கொண்டு கோர்ட் நடவடிக்கையில் இருக்கிறதென்று சொல்கிறார்கள். விரிவாக அந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இத்தகைய குற்றங்கள் மேலும் நிகழாமல் இருப்பதற்கு, அரசு என்ன மேற்கொண்டு நடவடிக்கை எடுத்திருக்கிறது, எப்படி சார்ஜ் ஷீட் கொடுத்திருக்கிறார்கள் என்ற விவரங்களையெல்லாம் அவை முன் வைக்கவேண்டும். இத்தகைய நடவடிக்கைகளெல்லாம் இந்த ரெவின்யூ அதிகாரிகள் அல்லது கீழ் மட்டத்தில் இருக்கிற அதிகாரிகள் மேற்கொண்டு சரியான முறையில் நடக்க உதவியாக இருக்கும்.

கீழ் மட்டத்தில் இருக்கிற அதிகாரிகள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பது இந்தக் கமிட்டி அறிக்கையைப் படித்துப் பார்க்கிறபோது தெரிகிறது. இத்தகைய குற்றங்கள் நடக்காமல் இருக்க அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிந்து கொள்வதற்கு அரசு என்ன நடவடிக்கைகளை எடுத்தது என்பதை அவைக்குத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை என்னுடைய வேண்டுகோளாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக ஒரு கமிஷன் ஆஃப் என்குயரி வைக்கவேண்டும். நமக்குத் தெரிந்த விஷயம் கொஞ்சம்தான்.

இந்த சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டைப் பொறுத்த வரையிலே எங்கெங்கே என்னென்ன விஷயங்களில் தவறுகள் நடந்திருக்கின்றன என்பதைப்பற்றி ஆராய இந்த ரிப்போர்ட்டை அளித்த திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களையே

தலைவராகக் கொண்ட ஒரு கமிஷன் ஆஃப் என்குயரி வைத்து இந்த டிபார்ட்மெண்டில் இருக்கும் குற்றங்களை எடுத்துச் சொல்ல வகைசெய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதன் மூலமாக தமிழ் நாட்டிற்கு இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறது என்று சொல்வதற்கு உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 1-00)

திரு. மா. வே. கரிவேங்கடம்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று, போற்றி ஒரு சில கருத்துக்களை இந்த மன்றத்தின் முன்னால் வைக்க ஆசைப்படுகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை தூண்டு விழும் அறிக்கை என்றாலும் கூட, இந்த நிதிநிலை அறிக்கையில், தமிழகம் இப்போது வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னாலும் கூட, நம்முடைய வளர்ச்சிப் பணிகள், முன்னேற்ற திட்டங்கள் குறைவாக இருக்கின்றனவா என்று கணக்கிட்டுப் பார்த்தால், சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டில் கண்ணொளி வழங்கும் திட்டம், உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டம் ஆகியவை முனைப்புடன் செயல்பட வழி வகை செய்யப்பட்டிருப்பதுடன், விதவைகளுக்கும், அநாதைகளுக்கும் மறு வாழ்வு அளிக்கும் திட்டத்தையும் புதிதாகக் கொண்டு வருவதற்கும் வகை செய்ததோடு மட்டுமல்லாமல், நெசவாளர்களுக்குப் பாதுகாப்புத் திட்டமும், கிராம ஊழியர்களுக்கு சமூகப் பாதுகாப்புத் திட்டமும் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை நாம் மறந்து விடுவதற்கு இல்லை.

அதே நேரத்தில் 6, 7 ஆண்டுகளுக்கு முன்னால் தமிழகம் வறட்சியால் பாதிக்கப்பட்டது. அந்த நேரத்தில் முன்னேற்ற திட்டங்களை அரசு நிறைவேற்றி வறட்சியால் தமிழகம் பாதிக்கப்படாமல் நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதே வகையில்தான் வெள்ளச் சேதம் ஏற்பட்டபோதும் அரசு நடவடிக்கை எடுத்து அதனால் பாதிக்கப்படாத அளவுக்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டது இந்த ஆண்டு தமிழகம் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிறது. பத்திரிகையாளர்கள் இந்த ஆண்டு வந்துள்ள வறட்சியை எப்படி வருணிக்கிறார்கள் என்றால், 100 ஆண்டுகளுக்கு முன் எந்த அளவுக்கு வறட்சி இருந்ததோ அந்த அளவுக்கு இருக்கிறது என்று சொல்கிறார்கள். 100 ஆண்டுகளுக்கு முன்தான் இத்தகைய வறட்சி, மழையின்மை இருந்தது என்று தெரிவித்துள்ளார்கள். 100 ஆண்டுகளுக்கு முன் வறட்சி





என்றால், பட்டினிச் சாவு என்ற முறையில் நம் நாடு இருந்து இருக்கிறது. பல ஆயிரம் பேர் பட்டினியால் செத்தார்கள் என்ற நிலைமை இருந்தது. ஆனால் தமிழகத்தில் அத்தகைய மழையின்மை என்ற நிலை இருந்தாலும், பட்டினியால் யாரும் சாகவில்லை. அதற்குக் காரணம் கடந்த 7-8 ஆண்டுகளாக இந்த ஆட்சி செய்த திட்டங்கள்தான் என்றால் அது மிகையாகாது.

விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுத்து, இயந்திரங்களுக்கு மின் இணைப்பு கொடுத்து—இந்த 22 ஆண்டுகளில் எவ்வளவு கொடுக்கப்பட்டதோ அதை விட இரண்டு மடங்காகக் கொடுத்து, புதிய கிணறுகள்—இந்த 22 ஆண்டுகளில் வெட்டிய கிணறுகளை விட இரண்டு மடங்கு கிணறுகளை வெட்டி, இப்படிப்பட்ட காரியங்களை செய்த காரணத்தால்தான், இன்றைக்கு 100 ஆண்டுகளாக இல்லாத ஒரு வறட்சி ஏற்பட்டும், இன்றைக்குத் தமிழகத்தில் பட்டினிச் சாவு இல்லாமல் இருக்கும் சூழ்நிலை இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

மேலும், இந்த வறட்சியைக் கண்டு மிரட்சி அடையாமல் டாக்டர் கலைஞர் அவர்கள் ரூபாய் 55 கோடி அளவுக்கு வறட்சி நிவாரணப் பணிக்காகத் திட்டங்களைத் தீட்டித் தந்து இருக்கிறார்கள். இதன் காரணமாக வறட்சிதான் கலைஞர் அவர்களைக் கண்டு மிரட்சி அடையும் நிலை இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

எனக்கு முன்னாலே பேசிய திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். நான் தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவன். எப்போதுமே இந்த இரண்டு மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள். தஞ்சை, திருச்சி, வடாற்காடு போன்ற மாவட்டங்களில் நல்ல நிலைமை இருக்கிற நேரத்திலேயே இந்த மாவட்டங்களில் மிகுந்த வறட்சி நிலை இருக்கும். தற்போது அங்கேயெல்லாம் வறட்சி ஏற்பட்டு இருக்கிறபோது, இந்த இரண்டு மாவட்டங்களிலும் எத்தகைய அளவுக்கு வறட்சியின் நிலைமை இருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். மற்ற மாவட்டங்களில் ஒரு மடங்கு, இரண்டு மடங்கு வறட்சி என்றால், இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் நான்கு, ஐந்து மடங்கு வறட்சி ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே மத்திய அரசின் உதவியைக் கொண்டு இந்த மாவட்டத்தில் பல நல்ல திட்டங்களை, நிரந்தரமாக வறட்சி நிலைமையைப் போக்குவதற்கான திட்டங்களை அரசு தீட்டியுள்ளது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக மாநில அளவில் 3 கோடி ரூபாயும், மத்திய அரசு உதவி 3 கோடி ரூபாயும்

என்ற அளவில் மொத்தம் 6 கோடி அளவிற்குத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. அதில் இருக்கும் சில நடைமுறைச் சிக்கல்களை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மத்திய அரசு ரூபாய் 3 கோடி நிதி உதவி அளிப்பதாகச் சொல்லியிருந்தாலும், அவ்வப்போது திட்டங்களுக்குப் பணம் ஒதுக்குவது இல்லை. இதனால் அந்தத் திட்டங்கள் ஏட்டளவில் இருக்கின்றனவே தவிர செயலளவில் வரவில்லை. அதிகாரிகளை ஏன் இந்தத் திட்டங்களைச் செயல்படுத்தவில்லை என்று கேட்கிறபோது, அவர்கள் இந்தப் பதிலைத்தான் தருகிறார்கள்.

ஆகவே, இதை மனதில் கொண்டு அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு விசேஷ கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற மாவட்டங்களுக்குத் தருவதை விட விசேஷ சலுகை இந்த மாவட்டத்திற்கு அளிக்க வேண்டும். அப்படிச் செய்தால் அந்த மாவட்டங்களை வறட்சி நிலையிலிருந்து மீட்க முடியும். ஆகவே, விசேஷ கவனம், விசேஷ சலுகை கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல். மாநில சுயாட்சி பற்றி இங்கே வேண்டும், வேண்டாம் என்ற கருத்தை காரண காரியங்களோடு எடுத்துச் சொன்னார்கள். இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், இந்திரா காங்கிரஸ் ஆளுகிற மாநிலமாக இருந்தாலும் சரி, கம்யூனிஸ்ட் கட்சி ஆளுகிற மாநிலமாக இருந்தாலும் சரி, மற்ற கட்சிகள் ஆளுகிற மாநிலமாக இருந்தாலும் சரி, எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அந்த நிதிநிலை அறிக்கைகளில் இல்லாதது ஒன்று இந்த நிதிநிலை அறிக்கையில் இருக்கிறது. எதிர்க்கட்சித் தரப்பில் வாதிட்டார்கள். மாநில சுயாட்சி வேண்டும், வேண்டாம் என்பதற்குக் காரண காரியங்களை விளக்கிச் சொல்லி, வேண்டாம் என்பதற்குக் காரணம் எடுத்துச் சொல்வார்கள் என்று காலையிலிருந்து அமர்ந்து கொண்டிருந்து எதிர்பார்த்தேன். என்ன காரணங்களை மாநில சுயாட்சிக்கு எதிராக எடுத்துச் சொல்லப் போகிறார்கள் என்று எதிர்பார்த்தேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில் பற்றுக்குறை நிதிநிலை அறிக்கையாக இருக்கிறது. இதை எப்படி சரிக்கட்டப்போகிறீர்கள் என்று கேட்டார்கள் சில உறுப்பினர்கள். அதற்கு மாண்புமிகு திரு. வேழவேந்தன் அவர்கள் பீகார் மாநிலத்தில் இந்த மாதிரி நிலைமை இருந்தபோது 90 கோடி ரூபாய் சென்றபோது, தமிழகத்திற்கு அது ஆகக்கூடாதா என்று கேள்வியை எழுப்பினார்கள். அதுவே இதற்குப் பதிலாக அமையும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



இருந்தபோதிலும், நிர்வாகம் என்ற முறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மாநில சுயாட்சி பற்றி சொல்கிறபோது எந்தெந்த விதத்தில் அதிகாரங்கள் மாநிலத்திற்குத் தரப்படவேண்டுமென்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அதிகாரங்கள் இல்லாத காரணத்தால் என்னென்ன செயல்கள் செய்யப்படமுடியாமல் இருக்கின்றன என்பதையும் எடுத்துக்காட்டி இருக்கிறார்கள். அவற்றை நல்ல வகையில் விளக்கியிருக்கிறார்கள். அதற்கேற்ற வகையில் வாதங்களை எடுத்து வைத்து இருக்கிறார்கள். அவற்றிற்கு எதிர் வாதம் யாரும் நிச்சயமாக எடுத்து வைக்கவில்லை. ஆகவே, இந்த மாநில அரசு மக்களுக்கு நல்ல வகையில் செயல்பட வேண்டுமானால், மத்தியில் குவிக்கப்பட்டு இருக்கும் அதிகாரங்கள் மாநிலத்திற்குத் தரப்பட வேண்டும். அப்படி அதிகாரங்கள் மத்தியில் குவிக்கப்பட்டு இருப்பதால் என்னென்ன விதத்தில் மாநிலங்கள் செயல்பட முடியவில்லை என்பதற்கு ஒரு விளக்க நூலாக ஒரு பைபிளாக இந்த நிதிநிலை அறிக்கை இருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது.

அடுத்தாற்போல் விவசாயத் துறையைப் பொறுத்தவரையில், ஒரு புது ரக பருத்தி விதையைக் கோயம்புத்தூரிலுள்ள வேளாண்மைக் கழகம் தயாரித்து இருக்கிறது. நான்கூட சென்று பார்த்தேன். துணை வேந்தரைச் சந்தித்து அது குறித்து அறிந்து வந்தேன். அந்த விதை ஒரு ஏக்கருக்கு 15,000, 20,000, 25,000 (டன்) வரையில் பருத்தி உற்பத்தி செய்யும் என்று அவர்கள் சொன்னார்கள். அதற்கு நம்முடைய அரசாங்கமும் நல்ல விதத்தில் உதவி செய்து வருகிறது. அந்த விதைக்கு சி.பி.எஸ். 156 என்று எண்ணிக்கை தந்து இருக்கிறார்கள். அதற்கு ஊக்கமும் ஆக்கமும் அரசு அளித்து வருவதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) நான் என் தொகுதி பற்றி ஒரு சில கருத்துக்களைக் கூறிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இன்னும் இரண்டு பேர் பேசவேண்டும். நேரம் இல்லை.

**திரு. மா. வே. கரிவேங்கடம்**: ஒரு நிமிடத்தில் என் தொகுதி பற்றி மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: சரி முடித்து விடுங்கள்.

**திரு. மா. வே. கரிவேங்கடம்**: ஆளும் கட்சிக்காரர்களுக்கு எந்தச் சலுகையும் இல்லை. குறுக்கீடுகள் வேறு நிறைய இருக்கின்றன.

அடுத்தாற்போல் இப்போது தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் குடிநீர் பற்றுக்குறை இருந்து வருகிறது. அதைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாலக்கோட்டிலிருந்து மாறனேரி செல்லும் வழியில் சின்னாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டவேண்டும். அதை நெடுஞ்சாலைத் துறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களிடம் இரண்டு ஆண்டுகளாக சொல்லி வருகிறேன்.

சின்னாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டவில்லையென்ற குறைபாடு தொகுதி மக்களுக்கு இருக்கிறது. ஆகவே, அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. ஏ. பாலையா : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அவையிலே 1975-76-வது ஆண்டின் வரவு-செலவுத் திட்டமாக சுமார் 30 கோடி ரூபாய் அளவில் பற்றுக்குறை வரவு-செலவுத் திட்டமாகச் சமர்ப்பித்து இருக்கிறார்கள். அதேபோல் 6 கோடி ரூபாய்க்கு அதிகமாக புதிய வரிகளையும் அறிவித்திருக்கிறார்கள். இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் பார்க்கிற நேரத்தில் இந்த நாட்டிலே இருக்கிற வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி உயர்வு இவைகளைப் போக்குவதற்கான எந்தவிதமான வழிவகைகளும் இந்தத் திட்டத்திலே இருப்பதாகத் தெரியவில்லை.

இந்த வரவு-செலவுத் திட்டத்தில் விலைவாசி உயர்வைப்பற்றிக் குறிப்பிடுகிற நேரத்தில் முதல்வரவர்கள் விலைவாசி உயர்விற்குக் காரணம் மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைதான் என்று சொல்லி, விலைவாசி உயர்வுப் பிரச்னையிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிற நிலைதான் நமக்குத் தெரிகிறது. விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதில் தமிழக அரசுக்கும் பொறுப்பு உண்டு. விலைவாசி உயர்வினால் இந்த நாட்டிலே இருக்கிற மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அரிசி முதலான உணவுப் பண்டங்களின் விலைவாசி ஏற்றத்தினால் வாங்கமுடியாத அளவில் விலை ஏறிக்கொண்டிருக்கிறது. இந்த நிலையில் அரசாங்கம் மாவட்டம் விட்டு மாவட்டம், தாலுக்கா விட்டு தாலுக்கா இந்த இடங்களுக்கு அரிசி போன்ற உணவுப் பண்டங்களைக் கொண்டுபோகக் கூடாது என்று தடை விதித்திருக்கிறது. அது மட்டுமல்லாமல் அரசும், அரசாங்க ஏஜண்டுகளும் உபரி நெல்லைக் கொள்முதல் செய்து ஸ்டாக் செய்து வைத்துவிடுகிறார்கள்.

அதோடு மட்டும் நின்றுவிடாமல் வியாபாரிகள் வெளி மார்க்கெட்டிலே அரிசி விற்கக்கூடாது, மக்கள் வாங்கக்கூடாது என்ற அளவில் ஒரு கட்டுப்பாட்டையும் அரசு ஏற்படுத்தியிருக்கிறது. இதன் காரணமாக மக்கள் வெளி மார்க்கெட்டில் அரிசி வாங்க முடியாத ஒரு நிலையும், அரசால் மக்களுக்கும் போதிய உணவு தானியங்கள் விநியோகிக்க முடியாத நிலையும் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலை மக்கள் மிகவும் கஷ்டப்படுகிற சூழ்நிலையை



ஏற்படுத்தியிருக்கிறது. பொதுவாக அரசு கொள்முதல் செய்கிற நோக்கமே மக்களுக்கு நியாயமான விலையில் அரிசி வழங்கவேண்டுமென்ற கொள்கை அடிப்படையில்தான். நிலம் இல்லாதவர்கள், பற்றுக்குறை பிரதேசத்தில் வாழ்கிற மக்கள், ஏழை எளிய மக்கள் இவர்களுக்கெல்லாம் நிச்சயமாக அரசு நியாயமான விலையில் அரிசி வழங்கியாக வேண்டும். நியாய விலையில் அரிசி வழங்கப்படாமல் இருந்தால் இத்தகைய மக்கள் நிச்சயமாகக் கஷ்டப்படுகிற நிலைதான் தமிழகத்தில் தொடர்ந்து ஏற்படும். ஆகவே தான் அரசு உணவுக் கொள்கையில் ஒரு முடிவான நல்ல கொள்கையை வகுத்து செயல்படவேண்டும். அதாவது நியாயமான விலையில் அரிசி வழங்க வேண்டுமென்று சொன்னால் கட்டாயக் கொள்முதல் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும். கட்டாயக் கொள்முதலை அமுலுக்குக் கொண்டு வந்து கட்டாய ரேஷன் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்து நியாயவிலையில் உணவுப் பண்டங்களை வழங்குவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக ஒரு ஜனநாயக அரசின் கடமை இந்த நாட்டிலே இருக்கிற ஏழை எளிய மக்களுக்கு ஒரு வேளை உணவிற்குக்கூட உணவுப் பண்டங்களை வழங்க முடியாத நிலையில் இந்த அரசு தொடர்ந்து இருந்துதான் ஆக வேண்டுமா? அரசுக் கட்டாய ரேஷன் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்து நியாய விலையில் நிச்சயமாக மக்களுக்கு அரிசியை வழங்கித்தான் ஆக வேண்டும்.

கழிந்த சட்டமன்றத் தொடரில் முதலமைச்சரவர்கள் இந்த சபையிலே ஒரு வாக்குறுதியை அளித்தார்கள். இந்த நாட்டிலேயிருக்கிற வியாபாரிகள் அரிசி முதலான உணவுப் பண்டங்களை கிலோ ரூ. 1.60 முதல் 2.20 வரையிலும் விற்கலாம் என்ற விலையை அரசாங்கம் நிர்ணயித்திருக்கிறது. அதற்கு அதிகப்படி விலையைக் கூட்டி விற்றால் விற்கிறவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்கள் என்ற ஒரு வாக்குறுதியைக் கொடுத்தார்கள். மக்களும் அதன் மீதான நடவடிக்கைகளை ஆவலாக எதிர்பார்த்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகத் தெளிவான அறிவிப்பை சட்டசபையிலே அறிவித்திருக்கிறார்கள்.

ஆகவே, கிலோ ரூ. 1.60 முதல் 2.20 வரையிலும் அரிசி வாங்கலாம் என்ற நம்பிக்கையில் மக்கள் இருந்தார்கள். ஆனால் இன்று என்ன நிலைமை? கேட்டால் சொல்லப்படுகிறது. அந்த விலையில் விற்பதற்கு மத்திய அரசு அனுமதிக்கவில்லை என்று கூறி தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறார்கள். உள்ளபடியே இந்த அரசாங்கத்திற்கு மத்திய அரசு அனுமதி வேண்டுமென்று தெரியாதா?

மத்திய அரசின் அனுமதி பெற்றுத்தான் அந்த விலைக்கு விற்கவேண்டுமென்பது தெரிந்திருந்துங்கூட பொய்யான வாக்குறுதியை மக்கள் நம்புகிற வகையில், நம்பிக்கையை நாட்டு மக்களுடைய உள்ளத்தில் ஏற்படுத்திவிட்டு, கடைசியாக இல்லை என்று கையை விரிக்கிற நிலைதான் இன்று அரசாங்கத்தின் கொள்கையாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே பொது மக்களை ஏமாற்றுகிற வகையில் அறிவிப்புக்களை வெளியிடாமல் பொதுமக்களின் அன்றாட பிரச்னை என்னவென்பதை அறிந்து அவைகளுக்கு ஆவன செய்வதற்கு இந்த அரசு முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வரவு-செலவு திட்டத்திலே கல்விக்கு அதிகப்படியான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. கல்விப் பணிக்கென்று புதிதாக இரண்டாயிரம் ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படப் போவதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்றைய தினம் தமிழகத்தில் பயிற்சி முடித்துக்கொண்டு வேலையில்லாமல் ஏராளமான ஆசிரியர்கள் வேலைவாய்ப்பின்றி திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் மாவட்டத்தில்கூட வயது வரம்பைத் தாண்டியவர்களுக்கு அரசாங்கம் வயது விதிவிலக்கு கொடுத்துங்கூட இன்று வரையிலும் அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்படவில்லை. அதைப் போல் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மிகுந்த அளவில் இருக்கிறார்கள். ஆகவே இந்த அறிவிப்பு மிகமிகப் பாராட்டக்கூடிய ஒன்றாக அமைந்திருக்கிறது.

இன்று நாட்டில் பல்வேறு இலாகாக்களிலே ஊழல், ஊழல் என்று சொல்லப்படுகிறது. ஆனால் இந்த ஊழல் இன்றைக்குச் சர்வகலாசாலை வரையில் கூட வந்துவிட்டது என்று சொல்லிக்கொள்கிறார்கள். உதாரணத்திற்காக இங்கே ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1973-74 ஆம் ஆண்டில் சட்டக் கல்லூரியில் எம்.எல். தேர்வில் ஒரு தனி நபருக்கு பட்டம் கொடுப்பதற்காக அங்கே ஊழல் நடைபெற்றிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அந்த ஊழல் நடந்ததன் காரணமாக சென்னை உயர் நீதிமன்றத்தில் அந்த ஊழலை வைத்து வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இந்த நிலை கல்வித் துறையிலே தொடருமென்றால், கல்லூரிகளிலே படிக்கின்ற மாணவர்கள் தங்களுடைய கல்வியை மறந்துவிடுவார்கள். இந்த அரசாங்கத்தில் படிக்காமல் இருந்தாலும் எப்படியாவது பட்டம் பெற்றுவிடலாம், எந்தப் பட்டம் வேண்டுமானாலும் பெற்றுவிடலாம் என்ற நச்சு எண்ணம் மாணவர்கள் உள்ளத்திலே எழ இடம் ஏற்பட்டு விடும். ஆகவே, இந்த ஊழல் உண்மையிலே நடந்திருந்தால் நிச்சயமாக அரசாங்கம் விசாரித்து, சம்பந்தப்பட்டவர் எவராக இருந்தாலும் அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்து, 1-1-1974-ல் மொழி ஆசிரியர்களுக்கு என்று இந்த அரசு ஒரு உத்தரவை வழங்கியிருக்கிறது. மொழி ஆசிரியர்கள் முதல் நிலை ஆசிரியர்களாக, தகுதி பெற்றிருந்தால் மாற்றப்படுவார்கள் என்று அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் மூலம் தமிழ் மொழி ஆசிரியர்களுக்கு மட்டும் தான் தகுதி பெற்றவர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பிற மொழி ஆசிரியர்களுக்கு ஓராண்டாகியும் அந்தச் சலுகை வழங்கப்படவில்லை. தகுதி படைத்த பிற மொழி ஆசிரியர்களுக்கும் உடனடியாக முதல் நிலை ஆசிரியர்கள் பதவி கொடுக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது). இன்னும் ஐந்து நிமிடங்கள் கொடுங்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். ஏற்கெனவே எ.டி.எம்.கே. மெம்பர்களுக்கு 3 மணி நேரம் கொடுத்திருக்கிறீர்கள். எங்கள் கட்சிக்கு—அம்மையார் அவர்களுக்கு 20 நிமிடமும், திரு. டென்னிஸ் அவர்களுக்கு 10 நிமிடமும் ஆக 30 நிமிடங்கள் வழங்கியிருக்கிறீர்கள். அந்தந்த கட்சியின் 'ஸ்ட்ரெங்தைப' பொறுத்து நேரம் வழங்க வேண்டும். நண்பர் பாலையா அவர்களுக்கு 10 நிமிடம் கொடுத்திருக்கிறீர்கள். இன்னும் 10 நிமிடம் கொடுத்தால் கூட போதாது. ஆகவே, எங்கள் கட்சி உறுப்பினர்களுக்குக் கொஞ்சம் நேரம் கூட்டிக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** யாருக்கும் அதிக நேரம் கொடுக்கவில்லை. குழுக்கிடு இருந்தால் அந்த உறுப்பினர்களுக்குக் கொஞ்சம் நேரம் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** கனம் உதவி சபாநாயகர் அவர்கள் எ.டி.எம்.கே. மெம்பருக்கு 25 நிமிடங்கள் கூடுதலாகக் கொடுத்தார்கள். ஆகவே, எங்களுடைய கட்சிக்கும் கூடுதலாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. செ. கந்தப்பன்:** தலைவரவர்களே, ஸ்தாபன காங்கிரஸ் கட்சி உறுப்பினர் கருத்தை நான் பலமாக ஆதரிக்கிறேன். ஏனென்றால் நாங்களும் பாதிக்கப்பட்டிருக்கிறோம்.

**திரு. ஏ. பாலையா :** 1970 எப்ரல் 1-ந் தேதிக்குப் பின்னல் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட இடைநிலை ஆசிரியர்கள் தொடர்ந்து ஓராண்டுக் காலம் பணி புரிந்திருந்தால் அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று 1974-75 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனல் ஓராண்டு ஆகியும், அடுத்த நிதிநிலை அறிக்கை சமர்பிக்கப்பட்டுவிட்ட பின்றும் அந்த இடை-

நிலை ஆசிரியர்களுக்கு பந்தப்பட்ட நிரந்தர உத்தரவும் சம்பந்தப்பட்ட இலாகா மூலம் பிறப்பிக்கப்படவில்லை. ஆகவே, உடனடியாக அவர்களுக்கு நிரந்தர உத்தரவை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வரவு-செலவு திட்டத்தில் குடும்ப நலத் திட்டத்திற்கு அதிகமான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது நிச்சயமாக வரவேற்கக் கூடியதுதான். குடும்ப நலத் திட்டத்தில் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் மிகச் சிறப்பான முறையில் தமிழ்நாட்டில் இன்றைய தினம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குடும்பக் கட்டுப்பாடு திட்டம் அகில இந்தியாவுக்கும் வழி காட்டுகின்ற அளவில் தமிழக அரசால் செம்மையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. உண்மையிலேயே நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். அதே நேரத்தில் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் பற்றிய பல்வேறு குற்றச்சாட்டுகள் இன்றைய தினம் வந்து கொண்டிருக்கின்றன. உதாரணமாக ஒன்றை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கழிந்த 20-ந் தேதி குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்காக எழும்பூர் மகப்பேறு மருத்துவ மனைக்கு சுமார் 32 வயது மதிக்கத்தக்க பெண் ஒருத்தி தன்னுடைய கணவனுடன் சென்றிருக்கிறார். குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை என்பது ஒரு மைனர் ஆப்பரேஷன் என்பது எல்லோருக்கும் தெரியும். இந்த ஆபரேஷன் செய்யப்பட்ட பின்னால் டாக்டர்களுடைய கவனக் குறைவினால் அந்த பெண் மரணம் அடைந்ததாக செய்தி வந்திருக்கிறது. முறைப்படி தக்க தருணத்தில் அந்தப் பெண்ணுக்குப் போதிய மருத்துவ வசதிகள் செய்ய மருந்து இல்லை என்ற புகாரும் இன்றைய தினம் வந்திருக்கிறது. ஆக, இந்தச் சின்ன அறுவை சிகிச்சையில்கூட உரிய கவனம் செலுத்தப்படாததால் அந்தப் பெண் மரணமடைந்திருக்கிறாள்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இப்போதுதான் நான் இப்படிக் கேள்விப்படுகிறேன். இதுபற்றி புகார் ஏதாவது கொடுத்து, உண்மை நிலை என்ன என்று தெரிந்துதான் இந்தக் குற்றச்சாட்டைச் சொல்கிறீர்களா? எனக்கே இது பற்றி இதுவரையில் தெரியாது, இப்போது நீங்கள் சொல்லித்தான் தெரிய வருகிறது. நீங்கள் கேள்விப்பட்டதாகச் சொன்னது அவ்வளவு சரியல்ல. நீங்கள் புகார் கொடுத்தால் யார்மீது குற்றம் என்பதை தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும். எழும்பூரில் இருக்கிற மருத்துவமனைதான் மகப்பேறு மருத்துவ மனைகளில் சிறந்தது. மகப்பேறு நிபுணர்கள் எல்லாம் அங்குதான் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடத்திலே குறை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் நிச்சயமாக அதன் காரணத்தைத் தெரிந்து கொள்ள வேண்டியதுதான். புகார் கொடுங்கள், விசாரித்து பதில் சொல்கிறோம்.



**திரு. ஏ. பாலையா :** சரியாகச் சொல்ல வேண்டுமானால் நுங்கம்பாக்கம், சூளை மேடு, ரங்கசாமி என்பவரின் மனைவிதான் அந்த பெண். அறுவை சிகிச்சை செய்துகொண்ட பின், டாக்டர்களின் கவனக் குறைவு காரணமாக அவள் உயிர் போகும் தருவாயில் தகுந்த சிகிச்சை செய்யப்படாததினால் மரணம் அடைந்திருக்கிறாள்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மரணம் ஏற்படுவது உலகத்தில் சர்வ சாதாரணம். மருத்துவ மனைக்குப் போகும்போது அவர் எந்த நிலையில் இருந்தார், மருத்துவ மனையில் சேர்க்கும்போது அவர் எந்த நிலையில் இருந்தார் என்ன சிகிச்சை அளிக்கப்பட்டது, எப்படி மரணம் ஏற்பட்டது என்ற விபரம் தெரிந்துகொள்ள எனக்கு வாய்ப்பு இல்லை. ஏனென்றால் இப்போதுதான் நான் கேள்விப்படுகிறேன். ஏதாவது புகார் கொடுத்திருந்தால் விசாரித்து விபரம் தெரிந்திருக்கலாம். லட்சக்கணக்கான மக்களும் குடும்ப நலத் திட்ட அறுவை சிகிச்சை செய்யப்படும்போது இப்படிப்பட்ட புகார்களைச் சொல்லி, அந்தத் திட்டத்தையே சிதைக்கும் எண்ணம் வளர்ந்துவிடக் கூடாது. ஆகையால், இன்றைக்குக் கூட நீங்கள் அதுபற்றி எழுதிக் கொடுங்கள். அதை வைத்து விசாரணை செய்து, முழு விபரமும் தரச்சொல்கிறேன்.

**திரு. ஏ. பாலையா :** இந்தப் பெண் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்காக வந்தவள். வேறு எந்த நோய்க்கான சிகிச்சைக்கும் வரவில்லை. குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்காக வந்த பெண். வந்த இடத்தில் இப்படி...

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தயவு செய்து, விபரமாக எழுதி மாண்புமிகு அமைச்சரவர்களிடமோ அல்லது என்னிடமோ கொடுத்தால், விசாரித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கச் சொல்கிறோம்.

**திரு. ஏ. பாலையா :** நான் இந்தக் குற்றச்சாட்டைச் சொல்லும்போது அரசாங்கம் அதுபற்றி விசாரணை செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் இங்கே குறிப்பிடுகிறேன். அல்லாமல் வேண்டுமென்றே, உள் நோக்கம் கற்பிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குளச்சலிலே அரை கோடி வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கூட்டுறவு படகு கட்டும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்துவதுபற்றி அறிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையிலே 75 நபர்கள் 100 ரூபாய் வீதம் அந்தச் சங்கத்தில் செலுத்தி, உறுப்பினர்களாகச் சேர்ந்து, இராமேஸ்வரம் மண்டபத்தில், 100 ரூபாய் ஸ்டைபெண்ட் பெற்று, ஆறு மாதம் பயிற்சி முடித்து தயாராக இருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-30)

அவர்கள் அந்தப் பயிற்சியை முடித்துவிட்டு வெளியில் வந்து எட்டு மாதங்களாகின்றன. எட்டு மாதங்கள் ஆகியும் அந்தத் திட்டம் இதுவரை தொடங்கப்படவில்லை. வெளியே இதைப்பற்றி பேசிக்கொள்கிற குறிப்புகளிலிருந்து தெரிந்துகொள்வது என்னவென்றால் அந்தப் படகு கட்டும் கூட்டுறவு சங்கத்தை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கான முயற்சிகள் நடக்கின்றன. ஆகவே காலதாமதம் ஏற்படுகிறது என்று தெரிகிறது. உள்ளபடியே குளச்சல் மிகப் பெரிய சிறந்த துறைமுகமாகும். இந்தத் துறைமுகத்தில் இன்றைக்கும் 200-க்கும் அதிகமான படகுகள் கடலில் சென்று தினந்தோறும் மீன்கள் பிடித்து வருகிற நிலை இருந்து வருகிறது. அந்த முக்கியத்துவத்தை வைத்துத் தான் அங்கே படகு கட்டும் கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தும் திட்டத்தையே வகுத்தார்கள். இதை மாற்றுவதற்கான முயற்சி ஏது இருந்தாலும் அதைக் கைவிட்டு—பழைய திட்டப்படி குளச்சலிலேயே அந்தக் கூட்டுறவு சங்கத்தை விரைவாக அமைத்துக்கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப் பட்டது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவில் முடிவுற்று நாளைக் காலை 9-00 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-32 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

## 3. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### *A. Statutory Rules and Orders.*

111. Notification issued in G.O. Ms. No. 2380, Rural Development and Local Administration, dated the 6th November 1974 in regard to declaration of the areas forming the Regional Planning areas under section 10 (4) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 [Tamil Nadu Act 35 of 1972).]

112. Notification issued in G.O. Ms. No. 1858, Rural Development and Local Administration, dated the 17th August 1974 in regard to certain amendments to the Conduct of Election of Madurai Corporation Councillors Rules, 1972. [Laid on the table of the House under section 432 (2) of the Madurai City Municipal Corporation Act, 1971 (Tamil Nadu Act 15 of 1971).]



113. Notification issued in G.O. Ms. No. 1017, Home, dated the 26th April 1974 in regard to certain amendments to the rules for the management of the After-Care Clubs for boys and girls. [Laid on the table of the House under section 44 (4) of the Tamil Nadu Children Act, 1920 (Tamil Nadu Act IV of 1920).]

114. Notification issued in G.O. Ms. No. 1619, Rural Development and Local Administration, dated the 6th July 1974 in regard to an amendment to the rules relating to the assessment and collection of taxes published at pages 41 to 43 of supplement to Part V of the Tamil Nadu Government Gazette, dated the 10th May 1961. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

### *B. Reports, Notifications and Other Papers.*

44. Notification issued in G.O. P. No. 432, Commercial Taxes and Religious Endowments, dated the 10th October 1974, in regard to exemption from Central Sales Tax in respect of the sale of goods to the International Crops Research Institute for the Semi-Arid Tropics, Hyderabad.

இணைப்பு

-ம் பக்கத்தில் 181-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க]

A.—

(a) The following 116 recommendations have been accepted :—

1. *Recommendation No.* (1).—Reconstitution of the existing Service Rules.

2. *Recommendation No.* (2).—Revision of the existing strength.

3. *Recommendation No.* (3).—Creation of General Cadre, Reserve Cadre and a Special Reserve Cadre for the whole State; adoption of common nomenclature for non-gazetted ranks in Armed Reserve and Armed Police.

4. *Recommendation No.* (4).—Revision of Pay scales.

5. *Recommendation No.* (5).—Education of categories of Police Service with other services for the purpose of revision of pay.

6. *Recommendation No.* (8).—Method of selection of Police Constable, Grade II.

7. *Recommendation No.* (9).—Method of promotion to the category of Deputy Inspector and Inspector.

8. *Recommendation No.* (10).—Revision of existing rules for the recruitment of I.P.S. Officers from among graduate Police Officers.

9. *Recommendation No.* (11).—Mode of appointment to the post of Police Constable, Grade I.

10. *Recommendation No.* (12).—Mode of promotion to higher posts in Reserve Cadre and Armed Police.

11. *Recommendation No.* (13).—Mode of recruitment of Police Constable, Grade II in General Cadre by transfer from Reserve Cadre and prescribing test for promotion.



12. *Recommendation No.* (14).—Maintenance of lower average age for Police Constable, Grade II in Armed Police in relation to Reserve and Local Police.

13. *Recommendation No.* (15).—Training period to Sub-Inspector, Police Constable, Grades I and II.

14. *Recommendation No.* (16).—Shifting of Police Training College from Vellore to Avadi

15. *Recommendation No.* (17).—Providing training facilities to Police Constable, Grade II in Police districts to qualify themselves for promotion as Police Constable, Grade I.

16. *Recommendation No.* (18).—Rationalization of special pay and allowances.

17. *Recommendation No.* (19).—Revision of House Rent allowance and payment of House Rent Allowance without certificate for actual rent paid.

18. *Recommendation No.* (20).—Rationalisation of conveyance allowance.

19. *Recommendation No.* (21).—Revision of feeding charges and remaining it as "Bandobust allowance".

20. *Recommendation No.* (22).—Revision of uniform grant to Gazetted Police Officers.

21. *Recommendation No.* (23).—Free supply of uniform to all non-gazetted Police Officers.

22. *Recommendation No.* (24).—Supply of mill made khaki to Police Officers and arrangement for stitching them.

23. *Recommendation No.* (25).—Change in pattern of Police Uniform.

24. *Recommendation No.* (27).—Fixation of pay of direct recruits during the training period.

25. *Recommendation No.* (28).—Continuance of Proficiency Special Pay and Good Service Special Pay.

26. *Recommendation No.* (30).—Rapid provision of quarters to Police personnel.

27. *Recommendation No.* (31).—Reconstructing of the old line huts urgently.

28. *Recommendation No.* (32).—Priority in allotment of line huts to Police Constable, Grade II.

29. *Recommendation No.* (33).—Integration of Benevolent Fund and Centenary Scholarship Fund and raising the contribution by Government.

30. *Recommendation No.* (34).—Police Welfare Units should be geared to make the Department self-sufficient in respect of items of equipment as can be manufactured by them.

31. *Recommendation No.* (35).—Sanction of full pledged Hospital at Madurai expanding the existing Police Hospitals and Dispensaries and separate hospitals to Government servants.

32. *Recommendation No.* (36).—Avoidance of transfer of personnel in the middle of the year.

33. *Recommendation No.* (37).—Judging of work of subordinate officers on detailed study of their work and not on statistical results.

34. *Recommendation No.* (38).—Enlarging the use and scope of the existing Orderly Room procedure.

34. *Recommendation No.* (40).—Abolition of the disparity in the leave privileges between Armed Police and Local Police.

36. *Recommendation No.* (41).—Ban on formation of any Association by Police personnel.

37. *Recommendation No.* (42).—Confining the bandobust duty of police personnel to the circle to which they are attached.

38. *Recommendation No.* (43).—Relieving of police stations from the primary responsibility for performing the function of prohibition enforcement, Traffic control and provision of Armed guards to sub-jails, sub-treasuries, etc.

39. *Recommendation No.* (45).—Reduction of the strength of Police Force consequent on transfer of the duties like prohibition enforcement, Traffic control, Guarding of sub-jails and Sub-treasuries, etc.



40. *Recommendation No.* (47).—Study on the relationship between the sanctioned strength, utilization and indicators of work load in the Police Department.

41. *Recommendation No.* (48).—Realignment of Police Districts.

42. *Recommendation No.* (49).—Creation of Deputy Inspector-General of Police Services.

43. *Recommendation No.* (50).—Increasing the administrative posts at the level of Superintendents and Additional Superintendents of Police.

44. *Recommendation No.* (51).—Realignment of Police Unit jurisdictions in relation to the jurisdictions of Development Districts Revenue Divisions, Taluks, Muncipalities, etc.

45. *Recommendation No.* (52).—Fixation of the strength of Police Circles in relation to the administrative units like Corporations, Municipalities, Panchayats, etc.

46. *Recommendation No.* (53).—Increasing the number of Police Sub-divisions.

47. *Recommendation No.* (54).—Opening of Police stations and upgrading of outposts.

48. *Recommendation No.* (55).—Sanctioning of Deputy Superintendents of Police and Inspectors for Crime in major cities and sub-divisions.

49. *Recommendation No.* (56).—Opening of Traffic Police stations and sanction of staff for traffic investigation.

50. *Recommendation No.* (57).—Fixation of strength of staff to circles, police stations.

51. *Recommendation No.* (58).—Sanction of special prohibition squads.

52. *Recommendation No.* (59).—Increasing the Armed Reserve Platoons.

53. *Recommendation No.* (60).—Opening of Control Rooms in every district headquarters.

54. *Recommendation No.* (61).—Opening of Single Digit Finger Print sections, Photo sections in every district.

55. *Recommendation No.* (62).—Enlarging the Headquarters Wing of every Armed Reserve for the work relating to Transport and Stores.

56 *Recommendation No.* (63).—Increasing the sub-divisions circles and Police stations of Railway Police.

57. *Recommendation No.* (69).—Sanction of staff to each Range for all co-ordination problems relating to Welfare, Housing and sanction of Dog Squad to each Range.

58. *Recommendation No.* (70).—Augmentation of staff to the functional Deputy Inspectors-General of Police.

59. *Recommendation No.* (71).—Opening of five Transport Workshops-*cum*-Training Schools to the Police Department.

60. *Recommendation No.* (72).—Augmentation of Technical staff for the State Forensic Science Laboratory, Police Radio Organisation, Finger-Print Bureau and Computer Centre.

61. *Recommendation No.* (73).—Augmentation of ministerial staff in the Police Department.

62. *Recommendation No.* (75).—Fixation of the strength of the State Police Force.

63. *Recommendation No.* (76).—Allotment of vehicles to every police station, circle, sub-division and Armed Reserves.

64. *Recommendation* No. (77).—Provision of V.H.F. sets to the vehicles of Police Officers covered by Control Rooms.

65. *Recommendation No.* (78).—Provision of vehicles to Railway Police.

66. *Recommendation No.* (79).—Provision of V.H.F. equipped vehicles and ambulances to Control Room.

67. *Recommendation No.* (80).—Scale of vehicles to be provided to functional units at Range and State levels.

68. *Recommendation No.* (81).—Scale of drivers to be provided to the vehicles.



69. *Recommendation No.* (82).—Augmentation of vehicles for police department.

70. *Recommendation No.* (83).—Sanction of Transport Development grant.

71. *Recommendation No.* (84).—Installation of 68-channel micro-wave trunk line.

72. *Recommendation No.* (85).—Installation of Radio telephone, Teleprinters and Facsimile transmitters.

73. *Recommendation No.* (86).—All District Headquarters should be linked by V.H.F. to Headquarters of all Police circles including broadcasting facilities.

74. *Recommendation No.* (87).—Each District Headquarters town should have a Control Room with an adequate V.H.F. network.

75. *Recommendation No.* (88).—The retention of H.F. network.

76. *Recommendation No.* (89).—An adequately staffed Monitoring station for Madras.

77. *Recommendation No.* (90).—A Unit Radio workshop for every district, Research and Development section, store section and Training School at State Headquarters.

78. *Recommendation No.* (91).—Specification of Staff pattern.

79. *Recommendation No.* (92).—Provision of posts and telegraphs, telephones to the Police station, Out-posts, Offices and residences of Police Officers of and above the rank of Inspectors and also for specialized and technical units.

80. *Recommendation No.* (93).—Implementation of the proposals relating to communications should be commenced in 1971–72 and completed by 1974–75.

81. *Recommendation No.* (94).—An annual Development grant of the order of Rs. 30 lakhs should be made to the Police Department to implement proposals relating to improvement of Police Communications.

82. *Recommendation No.* (95).—Single Digit Finger Print Sections should be opened in all Districts where they are not now available.

83. *Recommendation No.* (96).—The staff should be augmented to meet the requirements of work and supervision and to provide adequate promotion prospects within the Finger Print Bureau Organisation.

84. *Recommendation No.* (97).—The Finger Print Bureau should be shifted from Vellore to Madras and located in the same building as the State Forensic Science Laboratory, State Crime Intelligence Bureau, Police Research Centre and Computer Centre.

85. *Recommendation No.* (98).—The staff of the State Forensic Science Laboratory should be augmented to meet the requirements of work and supervision and privide adequate promotion prospects within the organisation.

86. *Recommendation No.* (99).—A Scientific Assistant with an Assistant Photographer borne on the Laboratory establishment should be sanctioned for every district and attached to the District Intelligence Bureau. Every district should have an adequately equipped Photo Section.

87. *Recommendation No.* (100).—A third floor should be added to the existing Laboratory building to accommodate the Finger Print Bureau, Police Research Centre, State Crime Intelligence Bureau and Computer Centre and provide additional space needed by the Laboratory.

88. *Recommendation No.* (101).—A Computer should be installed in the State C.I.D. for processing data on crime and criminal from all over the State.

89. *Recommendation No.* (102).—Adequate promotion prospects should be provided for the staff of the Shorthand Bureau by upgrading one post of Senior Reporter, to the post of Director in the rank of Deputy Superintendent and upgrading five posts of Junior Reporters as Senior Reporters.

90. *Recommendation No.* (103).—The Shorthand Bureau should be shifted from Vellore to Madras and located in the C.I.D. Detachments should be stationed at all Range Headquarters.

91. *Recommendation No.* (105).—The Government of India, should be moved to provide funds to the tune of Rs. 5 crores at Rs. one crore a year over a five-year period on part-grant, part-loan basis for meeting the non-recurring cost of the proposals on Technical modernisation.





92. *Recommendation No.* (106).—In the field of maintenance of law and order, local Police stations must be insulated from the disrupting effects of bandobust and prohibition enforcement and thus enable to perform the regular basic functions adequately.

93. *Recommendation No.* (107).—A special and separate hierarchy of officers should be provided for handling of crime at the Sub-division, Circle and station levels. Along with the augmentation of staff of District Range and State Level Crime Branches and the specialised scientific services, these arrangements should meet completely the Department's requirements for the effective handling of crime.

94. *Recommendation No.* (108).—Special and separate staff should be provided for the regulation of traffic in separate Traffic Police Stations in every local Police Sub-divisions.

95. *Recommendation No.* (109).—A Sub-Department of Traffic Engineering should be set up under the Highways Department with adequate budgetary resources and jurisdiction to execute works in Municipal areas.

96. *Recommendation No.* (110).—The existing State and District Traffic Planning Committee should be reorganised and linked up with the new Sub-Department of Traffic Engineering. The Transport Commissioner and Head of the Traffic Engineering Sub-Department should be the Chairman and Secretary of the State Committee, on which the Police point of view should be represented by the Deputy Inspector-General of Police (Services).

97. *Recommendation* No. (111).—Provision for improved pedestrian safety.

98. *Recommendation No.* (112).—Redistribution of Home Guard Establishment.

99. *Recommendation No.* (113).—Every Police station should have a Vigilance Committee.

100. *Recommendation No.* (114).—The provision of the Computer Centre should improve the availability of criminal intelligence, while the provision of Deputy Inspectors instead of Sub-Inspectors in the Special Branches should improve the quality and objectivity of political intelligence.

101. *Recommendation No.* (115).—Improving the status of Assistant Public Prosecutors.

102. *Recommendation No.* (116).—Attaching Assistant Public Prosecutors to not more than two courts.

103. *Recommendation No.* (117).—One copy of judgment in Magistrate's Courts, especially in cases ending in acquittal or discharge, should be sent to the Superintendent of Police for scrutiny of the efficiency of investigations and prosecutions.

104. *Recommendation No.* (118).—Every Assistant Public Prosecutor I should have a telephone, a library of law books and supply of legal journals.

105. *Recommendation No.* (119).—The Crime Inspector in every Sub-Division should maintain liaison with all courts and prosecuting staff, to ensure the effective progress of prosecution work.

106. *Recommendation No.* (120).—(*a*) The range of cases triable summarily should be enlarged.

(*b*) Honorary Magistrates and Bench Courts should be appointed in the Mofussil as in Madras City to dispose of this range of cases.

(*c*) Courts could also specify fine amounts on summons which the individuals could remit by money order or cheque with a plea of guilty. Such powers exist in Section 130, Motor Vehicles Act and should be extended to a wider range of cases.

107. *Recommendation No.* (121).—Courts may send summons by post and issue warrants in case of non-appearance. This could save Police man-power spent on process service.

108. *Recommendation No.* (122).—A proposal has been made by the Madras City Corporation that a separate Police Station or Police Squad should be established in order exclusively to attend to Police work relating to nuisance, removal of obstruction, protection of Corporation property, etc. It is preferable that the Corporation should set up its own organization for such purposes. The Police Department may assist by providing the services of Police Officer or officers of suitable rank in order to organize, train and supervise the Corporation employees comprising such organization. Joint enforcement effort by such organization and City





Police Stations may be organized in accordance with regular programmes framed for that purpose. Corporation employees enrolled as Home Guards could also render services in this field of work along with the local Police.

109. *Recommendation No.* (123).—Officers inspecting the work of Officers of and below the Sub-division level should be specifically precluded from making any statistical reviews of any kind in their inspection notes. Assessments recorded in periodical confidential reports and in personal files should avoid a statistical basis. Statistical reviews should be restricted only to the State and District levels and should be for the limited purpose of giving senior Police Officers the necessary perspective in which to assess trends and identify problem areas requiring administrative attention.

110. *Recommendation No.* (124).—All complaints made in person or by post to the Police should be promptly acknowledged. Service of endorsement or communications from the Police should be got acknowledged.

When a person is arrested, intimation should be sent by post, to any one to whom the arrested individual may desire the information to be sent.

111. *Recommendation No.* (125).—The Police Research Centre should review and study all Police records and returns for comprehensive rationalisation so as to ease the strain of scriptory work.

112. *Recommendation No.* (126).—The printing press in the Office of the Inspector-General of Police should be enlarged to make the Department self-sufficient in regard to its requirements of printed forms.

113. *Recommendation No.* (127).—The existing relationship between the District Collector and the Superintendent of Police is based upon sound principles and should not be disturbed. The Chief Secretary to Government and the Inspector-General of Police should take steps to foster cordial relations of mutual co-operation between the Indian Administrative Service and the Indian Police Service.

114. *Recommendation No.* (128).—There are a number of shortcomings in the working of local police stations which tend to cause public dissatisfaction and to impair good relations between the

Public and the Police. The nature of these short-comings, as well as the nature of the action required in order to avoid such short-comings have been specified. The Police Department should ensure that action is taken as specified. In particular, action is necessary to ensure that detention of women of Police Stations is avoided as far as possible; and that Police Station lock-ups are remodelled to provide better ventilation and sanitation.

115. *Recommendation No.* (132).—A high-level Committee consisting of 5 members which may be referred to as the Police Administrative Reform Committee should be appointed. The Chief Secretary should be the Chairman and the Inspector-General of Police, the Vice-Chairman of this Committee. The Finance Secretary and the Home Secretary should be two other members. The Committee should have as its Member-Secretary a Police Officer of the Deputy Inspector-General's category. For obvious reasons, it is recommended that our own Member-Secretary should be appointed as Member-Secretary of this high-level Committee.

116. (*a*) *Recommendation No.* (133).—The staff at present sanctioned for the work of the Tamil Nadu Police Commission should be continued for such period as may be found necessary by the Police Administrative Reform Committee. It should be maintained as a special section, which may be referred to as the 'Administrative Reform' section in the Office of the Inspector-General of Police. The Member-Secretary of the "Police Administrative Reform Committee" should be appointed also as Special Officer (Administrative Reform) in the Office of the Inspector-General of police.

(*b*) *The following recommendations were implemented.*—4, 5, 8, 9, 10, 11, 12, 18, 19, 20, 21, 22, 25, 27, 28, 32, 33, 36, 40, 41, 47, 48, 49, 58, 71, 87, 95, 97, 99, 100, 101, 102, 103, 113, 117, 120, 121, 122, 124, 132, 133.

(*c*) Yes.

(*d*) *Recommendation No.* (6).—Direct recruitment to the levels of Deputy Superintendents and Assistant Commandants should be abolished.

The qualification prescribed for the post of Deputy Superintendent of Police by direct recruitment is a degree. It provides scope for appointment of post-graduate student and as the system has worked well it was decided that the existing practice of recruitment at Deputy Superintendent level should continue.



2. *Recommendation No.* (7).—Direct recruitment of Sub-Inspectors and Police Constable Grade I should be made through the Tamil Nadu Public Service Commission.

In view of the high standard of physical fitness and other specialised qualities required in the Police Force, and as the existing practice is working very satisfactorily, it was decided that the direct recruitment of Sub-Inspectors and Police Constable Grade I may be kept outside the purview of the Tamil Nadu Public Service Commission, and continued to be done by the Police Department itself.

3. *Recommendation No.* (26).—The off-duty rules should be rigorously enforced. Off-duty denied during one week should be compensated by an extra off-duty within the next fortnight. Existing provision for an allowance in respect of off-duty denied should be abolished.

As the Police force has to be always prepared to meet important and emergent duties, it was felt that it will not be practical to give off-duty automatically. But in order to effect economy and minimize expenditure arising out of denial of off-duty, it was decided that off-duty may be given as frequently as possible and the expenditure for denial of off-duty limited to Rs. 10 lakhs per year.

4. *Recommendation No.* (29).—A Special Provident Fund Scheme should be sanctioned for the Police Force. By a Government contribution to the account of each subscriber, it should provide a specific compensation for the specially ardous and hazardous characteristics of the police services, an insurance element to cover actual materialization of the hazard and welfare element in the nature of an incentive for family limitation. Rates of contributions and conditions and amounts of benefits should be provided for in the manner specified.

As the Provident Fund Scheme proposed is a contributory Provident Fund Scheme and involves huge expenditure to Government and if sanction is accorded for Police Department only, the other Departments will also press for the extension of a similar scheme to them. It was therefore decided not to accept this recommendation.

5. *Recommendation No.* (39).—All categories of non-gazetted personnel including ministerial and technical personnel should be made eligible for departmental money rewards. Allocation of funds for such rewards should be increased. Apportionment of a part of fines levied in Prohibition and Traffic cases, for rewards to the enforcement staff should be considered.

As the money rewards are intended for executive staff of the Police Department only to be paid for investigation, enforcement and other police duties, there is no case for money rewards to ministerial staff. They might be rewarded by award of 'Good Service Entries', etc. As the apportionment of a portion of amount collected by way of fines in respect of traffic cases carries the hazard of abuse of such powers, it was decided not to accept this recommendation.

6. *Recommendation No.* (44).—Post of Orderlies allocated to Police Stations should be converted to posts of common category of peons or replaced by house-peon allowances to the local Police Officers now eligible for Orderlies.

It was felt that orderlies are necessary for Inspectors and Deputy Superintendents of Police for several functions at their Camp offices, like receiving tapals, visitors and also safeguarding the premises it was decided that the existing system should continue.

7. *Recommendation No.* (46).—The revised number of posts should be redistributed to the local Police Stations under three heads of duties; namely (i) Watch and Ward, (ii) Law enforcement and (iii) General duty, after providing a vacancy reserve reckoned at one-nineth of the number of duty posts.

In view of the need to assess the justification for particular type of identifiable duty, it was considered to maintain the existing detailed duty classification system.

8. *Recommendation No.* (64).—The Railway Police District should have a separate Armed Reserve Unit for four active platoons, apart from 6-1/2 platoons ear-marked for its use from the active platoons of special Local Police Districts. The Railway Police District should also have a separate Control Room, and should have similar staff for its District Crime Branch and District Intelligence Bureau as proposed for the Local Police Districts.



As it was felt that there will not be full-time work in Railway Police District for separate Railway Police Platoons, it was agreed that the existing practice of attaching Railway Police Platoons to Armed Reserves in the districts may continue. Since the Inspector-General of Police has not pressed for Control Rooms, it was decided not to accept this recommendation.

9. *Recommendation No.* (74).—At present there are 41,276 sanctioned posts in the Tamil Nadu Police Services including 'Vacancy Reserve' along with duty posts. The sanction should be revised and revised sanction accorded for 45,000 posts. This total should comprise 43,023 'allocated posts' including 'vacancy reserve' as well as duty posts. The remaining number, 1,977 should be sanctioned separately as a Training and Contingency Reserve which should be distinguished from the allocated vacancy reserve.

The existing position according to which reserves are incorporated in the sanctioned strength, provides greater administrative flexibility. The '*Status quo*' may, therefore, continue.

10. *Recommendation No.* (104).—A State Police Planning and Research Board should be set up to review and co-ordinate all research and development work. Adequate funds should be allotted to all units for the conduct of research. As the Police Research Centre is already attending to the research work, it was decided that a separate State Police Planning and Research Board is not necessary.

11. *Recommendation No.* (129).—All political parties which are represented in the State Legislature should enter into an agreement which may be referred to as the Tamil Nadu Public Security Convention. The terms of the convention should be designed to secure that all local territorial organizations of the convention parties, as well as sectional organizations which are affiliated to the convention parties will co-operate with one another and with all local police authorities in order effectively to preserve the public peace. The Government should take the lead in bringing about this agreement.

By and large, the political parties in Tamil Nadu are co-operating in preserving public peace. Adequate liaison is being maintained by the authorities in charge of law and order with the

political parties. Therefore, it was decided that no separate agreement as proposed by the Tamil Nadu Police Commission is necessary for maintaining public peace.

12. *Recommendation No.* (130).—In every Local Police District a District Public Security Committee should be established in order to give effect in such district to the terms of the Tamil Nadu Public Security Convention. The composition and mode of constitution of District Public Security Committees should be provided for in the manner specified.

The decision taken on Recommendation No. 129 will hold good for this also.

13. *Recommendation No.* (131).—The terms of the Tamil Nadu Public Security Convention should be designed also to secure that the local organizations of convention parties are given equal opportunity to make representations to Local Police authorities in respect of individual complaints and grievances against the Police. The functions of the District Public Security Committee should be so specified as to ensure the provision of such opportunity as well as safeguard the Local Police Authorities against involvement in party politics.

The decision taken on Recommendation No. 129 will hold good for this also.

S. P. AMBROSE,
*Secretary to Government.*

விடை.—

(அ) கீழ்க்கண்ட 116 பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன :—

1. பரிந்துரை எண் (1).—தற்போதுள்ள பணி விதிகளைத் திருத்தி அமைத்தல்.

2. பரிந்துரை எண் (2).—தற்போதுள்ள பணியாளர் எண்ணிக்கையை மாற்றியமைத்தல்.

3. பரிந்துரை எண் (3).—மாநிலம் முழுவதற்குமான பொதுப் பதவித் தாம், ரிசர்வ் தாம், சிறப்பு ரிசர்வ் தாம் ஏற்படுத்தல், படைக்கலம் தாங்கிய ஏமக் காவல் துறை, படைக்கலம் தாங்கிய காவல் துறை ஆகியவற்றிலுள்ள அரசிதழ் பதிவு பெறாத பதவிகளுக்காகப் பொதுவான பெயரை மேற்கொள்ளுதல்.



4. பரிந்துரை எண் (4).—சம்பள விதங்களை திருத்தி அமைத்தல்.

5. பரிந்துரை எண் (5).—சம்பள விதங்களை திருத்தி அமைப்பதற்காக ஏனைய பணிகளுடன் காவல் துறைப் பணிகளை சமப்படுத்துதல்.

6. பரிந்துரை எண் (8).—தாம் II காவலர்களைத் தேர்ந்தெடுக்கும் நடைமுறை.

7. பரிந்துரை எண் (9).—டெபுடி இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர் பதவிகளுக்கு பதவி உயர்வு கொடுக்கும் நடைமுறை.

8. பரிந்துரை எண் (10).—பட்டதாரி காவல் துறை அதிகாரிகளிடையே இருந்து இந்திய காவல் துறை பணி நியமனத்திற்கான தற்போதுள்ள விதிகளைத் திருத்தி அமைத்தல்.

9. பரிந்துரை எண் (11).—தாம்-1 காவலர் பதவிக்கு நியமனம் செய்வதற்கான நடைமுறை.

10. பரிந்துரை எண் (12).—படைகலன் தாங்கிய ஏமக் காவல் துறை படைக் கலம் தாங்கிய காவல் துறை ஆகியவற்றிலுள்ள உயர் பதவிகளுக்கு பதவி உயர்வு அளிப்பதற்கான நடைமுறை.

11. பரிந்துரை எண் (13).—படைக்கலன் தாங்கிய ஏமக் காவல் பதவியிலிருந்து மாற்றுவதன் மூலமும், பதவி உயர்வுக்கான தேர்வினை வரையறுப்பதன் மூலமும், பொதுத்தாத்திலுள்ள தாம் II காவலரைத் தெரிந்தெடுப்பதற்கான நடைமுறை.

12. பரிந்துரை எண் (14).—படைக்கலன் தாங்கிய ஏமக் காவல்துறை, உள்ளூர் காவல் துறை ஆகியவை தொடர்பாக படைகலன் தாங்கிய காவல் துறையிலுள்ள தாம் II காவலருக்கான சராசரி குறைந்த அளவு வயதினை வைத்து வருதல்.

13. பரிந்துரை எண் (15).—சப்-இன்ஸ்பெக்டர், காவலர் தாம் I தாம் II ஆகியோருக்கான பயிற்சி கால அளவு.

14. பரிந்துரை எண் (16).—காவலர் பயிற்சிப் பள்ளியை வேலூரிலிருந்து ஆவடிக்கு மாற்றுதல்.

15. பரிந்துரை எண் (17).—காவல்துறை மாவட்டங்களிலுள்ள தரம் II, காவலர்கள், தரம் I காவலர்களாக பதவி உயர்வு பெறுவதற்கு தகுதியாக்கிக் கொள்ளும் வகையில் பயிற்சி வசதி அளித்தல்.

16. பரிந்துரை எண் (18).—சிறப்புச் சம்பளம், படிகள் ஆகியவற்றை சீரமைத்தல்.

17. பரிந்துரை எண் (19).—வீட்டு வாடகைப் படியைத் திருத்தி அமைத்தல்,-கொடுக்கப்படும் வாடகைக்கான சான்றிதழ் இன்றி வீட்டு வாடகைப்படி கொடுத்தல்.

18. பரிந்துரை எண் (20).—போக்குவரத்துப் படியினை சீரமைத்தல்.

19. பரிந்துரை எண் (21).—உணவுக் கட்டணங்களை திருத்தியமைத்தல், அதை பந்தோபஸ்துபடி என்று மறுபெயரிடுதல்.

20. பரிந்துரை எண் (22).—அரசிதழ் பதிவு பெற்ற காவல் துறை அதிகாரிகளுக்கு வழங்கப்படும் சீருடை மானியத்தை திருத்தியமைத்தல்.

21. பரிந்துரை எண் (23).—அரசிதழ் பதிவு பெறாத காவல் துறை அதிகாரிகளுக்கு இலவசமாக சீருடை வழங்குதல்.

22. பரிந்துரை எண் (24).—காவல் துறை அதிகாரிகளுக்கு ஆலைகளில் தயாரிக்கப்பட்ட காக்கித்துணி வழங்கவும், அவற்றைத் தைக்கவும் ஏற்பாடு செய்தல்.

23. பரிந்துரை எண் (25).—காவலர்களின் சீருடையில் மாற்றம் செய்தல்.

24. பரிந்துரை எண் (27).—நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் காவலர்களுக்கு பயிற்சி காலத்தில் சம்பளத்தை முடிவு செய்தல்.

25. பரிந்துரை எண் (28).—சிறப்புத் தகுதி சம்பளம், சிறப்புப் பணிச் சம்பளம் முதலியவற்றைத் தொடர்ந்து அளித்தல்.

26. பரிந்துரை எண் (30).—காவல் துறைப் பணியாளர்களுக்கான குடியிருப்புகளுக்கு விரைவாக வகைசெய்தல்.

27. பரிந்துரை எண் (31).—பழைய காவலர் குடியிருப்புக்களை விரைவில் புதுப்பித்தல்.



28. பரிந்துரை எண் (32).—தரம் II காவலர்களுக்கு வீடுகளை அளிப்பதில் முன்னுரிமை அளித்தல்.

29. பரிந்துரை எண் (33).—காவலர் நல நிதியையும் நூற்றாண்டு விழா படிப்பு உதவித் தொகையையும் ஒருங்கிணைத்தலும் அரசு அளிக்கும் பங்குத் தொகையை உயர்த்துதலும்.

30. பரிந்துரை எண் (34).—காவலர்கள் உற்பத்தி செய்யக்கூடிய கருவிகளில் தன்னிறைவு அடையும் வகையில் காவல்துறை நலப்பிரிவுகள் விரைவுபடுத்தப்பட வேண்டும்.

31. பரிந்துரை எண் (35).—மதுரையில் எல்லா வசதிகளும் நிறைந்த மருத்துவமனையை ஏற்படுத்துதல், தற்போதுள்ள காவல்துறை மருத்துவ மனைகளையும், மருந்தகங்களையும் விரிவுபடுத்துதல், அரசு ஊழியர்களுக்கு தனிப்பட்ட மருத்துவ மனை ஏற்படுத்துதல்.

32. பரிந்துரை எண் (36).—ஆண்டின் நடுவில் காவலர்களை வேறிடத்திற்கு மாற்றுவதைத் தவிர்த்தல்.

33. பரிந்துரை எண் (37).—சார்நிலைப் பணி அதிகாரிகளின் பணி புள்ளி விவர தகவல் அடிப்படையில் இல்லாமல் அவர்களின் பணி குறித்த விரிவான ஆய்வின் அடிப்படையில் அவர்கள் பணியினை மதிப்பிடுதல்.

34. பரிந்துரை எண் (38).—காவற்படை பிரிவின் அலுவலக அறை குறித்த தற்போதைய பயனையும் செயல்வரம்பையும் விரிவுபடுத்தல்.

35. பரிந்துரை எண் (40).—படைக்கலன் தாங்கிய காவலர், உள்ளூர் காவலர் ஆகியோருக்கு இடையே உள்ள விடுப்பு உரிமைகளில் வேறுபாட்டை நீக்குதல்.

36. பரிந்துரை எண் (41).—காவல்துறைப் பணியாளர்கள் சங்கம் அமைப்பது குறித்த தடை.

37. பரிந்துரை எண் (42).—காவல்துறைப் பணியாளர்கள் எந்த வட்டத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறார்களோ அந்த வட்டத்துக்குள் பந்தோபஸ்து பணியை அவருக்கு வரையறுத்தல்.

38. பரிந்துரை எண் (43).—மதுவிலக்கினை செயல்படுத்தல், போக்குவரத்துக் கட்டுபாடு, துணைச்சிறைச்சாலைகள், துணைக் கருவூலங்கள் ஆகியவற்றுக்கு படைக்கலம் தாங்கிய காவலர்களை வழங்குதல் ஆகிய பொறுப்புகளிலிருந்து காவல் நிலையங்களை விடுவித்தல்.

39. பரிந்துரை எண் (46)..—மதுவிலக்கினை செயல்படுத்தல், போக்குவரத்துக் கட்டுபாடு, துணைச் சிறைச்சாலைகளையும், துணைக் கருவூலங்களையும் பாதுகாத்தல் போன்ற அலுவல்கள் மாற்றப்பட்டதன் விளைவாக காவல் துறையிலுள்ள பணியாளர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல்.

40. பரிந்துரை எண் (47).—காவல்துறையில் நியமிக்க அனுமதிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கைக்கும், பணிச்சுமை அளவுக்குமிடையேயுள்ள தொடர்பினை ஆய்வு செய்தல்.

41. பரிந்துரை எண் (48).—காவல்துறை மாவட்டங்களை மாற்றியமைத்தல்.

42. பரிந்துரை எண் (49).—காவல்துறை டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரல் (பணிகள்) பதவியை ஏற்படுத்தல்.

43. பரிந்துரை எண் (50).—காவல்துறை சூப்பிரெண்டுகள், கூடுதல் சூப்பிரெண்டுகள் அளவில் நிர்வாகப் பதவிகளை கூடுதலாக ஏற்படுத்தல்.

44. பரிந்துரை எண் (51).—வளர்ச்சி மாவட்டங்கள் வருவாய்க் கோட்டங்கள், வட்டங்கள், நகராட்சிகள் ஆகியவற்றின் அதிகார வரம்பு குறித்து காவல்துறைப் பிரிவின் அதிகார வரம்புகளை திருத்தியமைத்தல்.

45. பரிந்துரை எண் (52).—மாநகராட்சி, நகராட்சிகள், ஊராட்சிகள் போன்ற நிர்வாகப் பிரிவுகள் தொடர்பில் காவல்துறை வட்டங்களில் எண்ணிக்கையை முடிவு செய்தல்.

46. பரிந்துரை எண் (53).—காவல்துறை துணைக்கோட்டங்களின் எண்ணிக்கையைக் கூடுதலாக்குதல்.

47. பரிந்துரை எண் (54).—காவல் நிலையங்களை புதிதாக ஏற்படுத்துதலும், தற்போதுள்ள புறக்காவல் நிலையங்களை தரம் உயர்த்துதலும்.

48. பரிந்துரை எண் (55).—முக்கிய மாநகரங்களிலும், துணைக் கோட்டங்களிலும் காவல் துறை டெபுடி சூப்பிரெண்டுகள், இன்ஸ்பெக்டர்கள் (குற்றங்கள்) பதவிக்கு அனுமதி வழங்குதல்.

49. பரிந்துரை எண் (56).—போக்குவரத்து காவல் நிலையங்களைப் புதிதாக ஏற்படுத்துதலும், போக்குவரத்து ஆய்விற்காக பணியாளர்களை நியமிக்க அனுமதி வழங்குதலும்.

50. பரிந்துரை எண் (57).—காவல் துறை வட்டங்கள், காவல் நிலையங்கள் ஆகியவற்றிலுள்ள பணியாளர்களின் எண்ணிக்கையை முடிவு செய்தல்.



51. பரிந்துரை எண் (58).—மதுவிலக்கு சிறப்புக் காவல் படைக்கு அனுமதி வழங்குதல்.

52. பரிந்துரை எண் (59).—படைக்கலன் தாங்கிய ஏமக் காவலர் பிரிவுகளைக் கூடுதலாக்குதல்.

53. பரிந்துரை எண் (60).—மாவட்டத் தலைமையிடங்கள் ஒவ்வொன்றிலும் கட்டுப்பாட்டு அறைகளை ஏற்படுத்துதல்.

54. பரிந்துரை எண் (61).—மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒற்றை விரல் ரேகைப் பதிவுப் பிரிவுகளையும் நிழற்படப் பிரிவுகளையும் ஏற்படுத்துதல்.

55. பரிந்துரை எண் (62).—போக்குவரத்து, பண்டகசாலைகள் தொடர்பான பணிக்காக தலைமையிடத்திலுள்ள ஒவ்வொரு படைக்கலன் தாங்கிய ஏமக் காவலர் பிரிவை விரிவுபடுத்தல்.

56. பரிந்துரை எண் (63).—ரயில்வே காவல்துறையின் துணைக்கோட்டம், வட்டங்கள், காவல் நிலையங்கள் ஆகியவற்றை கூடுதலாக்குதல்.

57. பரிந்துரை எண் (69).—காவலர் நலம், வீட்டுவசதி தொடர்பான ஒருங்கிணைப்புப் பணிக்காக ஒவ்வொரு சரகத்திலும் பணியாளர்களை நியமிக்க அனுமதி வழங்கல். ஒவ்வொரு சரகத்திற்கும் துப்பறியும் நாய்ப்படையை ஏற்படுத்துதல்.

58. பரிந்துரை எண் (70).—காவல்துறை டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அலுவலகத்தில் பணியாளர்களை கூடுதலாக நியமித்தல்.

59. பரிந்துரை எண் (71).—காவல் துறையில் போக்குவரத்துப் பணிக்களறி—பயிற்சிப் பள்ளி ஐந்தினை ஏற்படுத்துதல்.

60. பரிந்துரை எண் (72).—மாநிலச் சட்டம் சார்ந்த அறிவியல் ஆய்வகம், காவல் துறை வானொலி நிலையம், விரல் ரேகைப் பதிவுப் பிரிவு, கணக்கிடும் பொறி நிலையம் ஆகியவற்றில் தொழில் நுட்பப் பணியாளர்களைக் கூடுதலாக நியமித்தல்.

61. பரிந்துரை எண் (73).—காவல் துறையில், நிர்வாகப் பணியாளர்களைக் கூடுதலாக நியமித்தல்.

62. பரிந்துரை எண் (76).—மாநிலக் காவற்படையினரின் எண்ணிக்கையை முடிவு செய்தல்.

63. பரிந்துரை எண் (76).—காவல் நிலையம், காவல் வட்டம், துணைக் கோட்டம் மற்றும் படைக்கலம் தாங்கிய ஏமப் படைகளுக்கு வண்டிகள் ஒதுக்குதல்.

64. பரிந்துரை எண் (77).—கட்டுப்பாட்டு அறையில் பணியாற்றும் காவல்துறை அதிகாரிகளின் வண்டிகளுக்கு மீ உயர் அலைக்கருவிகள் ( பொருத்துதல்.

65. பரிந்துரை எண் (78).—ரயில்வே காவல் துறையினருக்கு வண்டிகள் வழங்குதல்.

66. பரிந்துரை எண் (79).—கட்டுப்பாட்டு அறைக்கு மீ உயர் அலைக் கருவிகள் பொருத்தப்பட்ட வண்டிகள் மற்றும் அவசர மருத்துவ வண்டிகள் வழங்குதல்.

67. பரிந்துரை எண் (80).—சரகம் மற்றும் மாநில அளவிலான காவல் துறை பிரிவுகளுக்கு வண்டிகள் வழங்குதல்.

68. பரிந்துரை எண் (81).—அந்த வண்டிகளின் ஓட்டுநர்களின் எண்ணிக்கையை நிர்ணயம் செய்தல்.

69. பரிந்துரை எண். (82).—காவல் துறைக்கு அதிகமான வண்டிகளை வழங்குதல்.

70. பரிந்துரை எண் (83).—போக்குவரத்து மேம்பாட்டு மானியம் வழங்குதல்.

71. பரிந்துரை எண் (84).—68 வழிகளை உடைய நுண் அலைக் கருவிகள் ( Micro wave ) நிறுவுதல்.

72. பரிந்துரை எண் (85).—வானொலி தொலைபேசி, டெலி பிரிண்டர்கள் மற்றும் சரியான பிரதி எடுத்து அனுப்பும் கருவி முதலியன நிறுவுதல்.

73. பரிந்துரை எண் (86).—மாவட்டங்களின் தலைமையிடங்கள் அனைத்தும் காவல் துறை வட்டங்களுடன் ஒலிபரப்பு வசதிகள் உட்பட, மீ உயர் அலைக்கருவிகளால் இணைக்கப்பட வேண்டும்.

74. பரிந்துரை எண் (87).—மாவட்டத்தின் தலைமையிடங்கள் ஒவ்வொன்றும் மீ உயர் அலைக்கருவிகளுடன் கட்டுப்பாட்டு அறையினைப் பெற்றிருக்க வேண்டும்.



75. பரிந்துரை எண் (88).—ஆங்காங்கே விரவியுள்ள உயர் அலை கருவி அமைப்பை வைத்துக் கொள்ளுதல்.

76. பரிந்துரை எண் (89).—சென்னையில் தேவையான அளவு அலுவல் பணியாளர்களைக் கொண்ட செய்தி ஒலிபரப்பு இடை மறிப்பு நிலையம் (Monitoring station ) அமைத்தல்.

77. பரிந்துரை எண் (90).—மாவட்டம் ஒவ்வொன்றிலும் ஒரு வானொலி சாதனங்களைப் பழுது பார்க்கும் நிலையமும் மாநிலத் தலைமையிடத்தில் ஆய்வு மற்றும் மேம்பாட்டுப் பிரிவு, பண்டகசாலைப் பிரிவு மற்றும் பயிற்சிப் பள்ளி அமைத்தல்.

78. பரிந்துரை எண் (91).—பணியாளர் அமைப்பை வரையறுத்தல்.

79. பரிந்துரை எண் (92).—இன்ஸ்பெக்டருக்கும் அதற்கு மேற்பட்ட பதவியில் உள்ள காவல்துறை அதிகாரிகளின் வீடுகளுக்கும் காவல் நிலையத்திற்கும் புறக்காவல் நிலையத்திற்கும் காவல் துறை அலுவலகத்திற்கும் சிறப்பு, தொழில் நுட்பப்பிரிவுகளுக்கும் அஞ்சல், தொலைபேசி வசதிகள் அளித்தல்.

80. பரிந்துரை எண் (93).—1971-72-ல் தொடங்கப்பட்ட செய்தித் தொடர்பு சம்பந்தமான செயற் குறிப்புகளை நிறைவேற்றப்பட்டு 1974-75-ல் முடித்தல்.

81. பரிந்துரை எண் (94).—காவல் துறை செய்தித் தொடர்பு சீரமைப்பு சம்பந்தமான செயற்குறிப்புகளை நிறைவேற்றுவதற்காக காவல் துறைக்கு ஆண்டு மேம்பாட்டு மானியமாக ரூ. 30 லட்சம் வழங்குதல்.

82. பரிந்துரை எண் (95).—தற்சமயம் ஒற்றை விரல் ரேகைப் பிரிவு இல்லாத மாவட்டங்களில் அவைகளை ஏற்படுத்துதல்.

83. பரிந்துரை எண் (96).—விரல் ரேகை கழக அமைப்பில் வேலைகள் கவனிக்கவும், மேற்பார்வை இடவும் போதுமான பதவி உயர்வு அளிக்கவும் அலுவலகப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

84. பரிந்துரை எண் (97).—விரல் ரேகைப் பிரிவு வேலூரிலிருந்து சென்னைக்கு மாற்றப்பட்டு, மாநிலச் சட்டம் சார்ந்த அறிவியல் ஆய்வகம், மாநில குற்றவியல் புலனாய்வுக் கழகம், காவல் துறை ஆராய்ச்சி நிலையம், கணக்கிடும் பொறி நிலையம் ஆகியவை அமைந்துள்ள அதே கட்டிடத்தில் அமைத்தல்.

**85. பரிந்துரை எண் (98).**—மாநில சட்டம் சார்ந்த அறிவியல் ஆய்வகத்தின் வேலையை கவனிக்கவும், மேற்பார்வை இடவும் தேவையான பதவி உயர்வு அளிக்கவும் அலுவலகப் பணியாளர்களை அதிகப்படுத்துதல்.

**86. பரிந்துரை எண் (99).**—ஒவ்வொரு மாவட்டத்திலுள் உள்ள சோதனைக் கூடத்திற்கும் ஒரு அறிவியல் உதவியாளரும் ஒரு உதவி நிழற்பட உதவியாளரும் அனுமதிக்கப்பட்டு புலனாய்வுப் பிரிவுடன் சேர்க்கப்பட வேண்டும். ஒவ்வொரு மாவட்டமும் தேவையான கருவிகளுடன் நிழற்பட பிரிவு ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும்.

**87. பரிந்துரை எண் (100).**—விரல் ரேகைப் பிரிவு, காவல் துறை ஆராய்ச்சி நிலையம், மாநில குற்றப் புலனாய்வுப் பிரிவு, கணக்கிடும் பொறி நிலையம் ஆகியவற்றிற்கு இடவசதி அளிக்க தற்போதுள்ள ஆய்வுக்கூடக் கட்டிடத்தில் மூன்றாவது மாடி ஒன்று கட்டப்பட வேண்டும். அதற்குத் தேவையான கூடுதலான இடத்தை அளிக்க வேண்டும்.

**88. பரிந்துரை எண் (101).**—மாநிலம் முழுவதினின்றும் கிடைக்கும் குற்றம் மற்றும் குற்றவாளிகள் குறித்த புள்ளி விவரங்களைத் தொகுத்துப் பகுப்பாய்வு செய்ய மாநிலக் குற்றப் புலனாய்வுத் துறையில் கணக்கிடும் பொறியை நிறுவுதல்.

**89. பரிந்துரை எண் (102).**—முதுநிலை நிருபரை டெபுடி சூப்பிரண்டெண்ட் பதவித் தரத்தில் இயக்குநர் பதவிக்கு பதவி உயர்த்துதல் மூலமும் இளநிலை நிருபர் பதவி ஐந்தினை முதுநிலை நிருபர்களாக்குவதன் மூலமும் சுருக்கெழுத்துப் பிரிவில் உள்ள அலுவலகப் பணியாளர்களுக்குப் போதிய பதவி உயர்வு வாய்ப்புகள் அளித்தல்.

**90. பரிந்துரை எண் (103).**—சுருக்கெழுத்துப் பிரிவு வேலூரிலிருந்து சென்னைக்கு மாற்றப்பட்டு குற்றப் புலனாய்வுப் பிரிவில் அமைக்கப்பட வேண்டும். எல்லா சரகங்களின் அலுவலகங்களிலும் சுருக்கெழுத்துப் பிரிவு இணைக்கப்பட வேண்டும்.

**91. பரிந்துரை எண் (105).**—தொழில் நுட்பப் பிரிவுகளைக் காலச் சார்புடன் மாற்றியமைப்பதற்கான செலவுக்குறிப்புகள் குறித்து ஆகும் தொடராயினச் செலவுகள் குறித்து பகுதி மானியம்—பகுதி கடன் அடிப்படையில் 5 ஆண்டுகளுக்கு, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1 கோடி வீதத்தில் 5 கோடி ஒதுக்க வேண்டுமென இந்திய அரசைக் கேட்டுக்கொள்ள வேண்டும்.





**92. பரிந்துரை எண் (106).**—சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்கும் வகையில் உள்ளூர் காவலர்கள் பந்தோபஸ்து பணியிலிருந்தும் மதுவிலக்குப் பணியிலிருந்தும் விடுவிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் தம் முறையான அலுவல்களை ஆற்ற இயலும்.

**93. பரிந்துரை எண் (107).**—துணைக்கோட்ட அளவிலும் வட்ட அளவிலும் நிலைய அளவிலும் குற்றங்களைக் கண்டு பிடிக்க சிறப்பான தனிப்பட்ட அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும். மாவட்டம்/சரக மாநில நிலையில் உள்ள குற்றப் பிரிவுகளில் பணியாளர்களைக் கூடுதலாக்குவதுடன் சிறப்புத் தன்மை வாய்ந்த அறிவியல் பணிகளைப் பெருக்குவதுடனும் குற்றம் வழக்குகளைத் திறமையாகக் கையாள இந்த ஏற்பாடுகள் துறையின் தேவை முழு அளவில் நிறைவு செய்யப்படவேண்டும்.

**94. பரிந்துரை எண் (108).**—போக்குவரத்து முறைப்படுத்தும் பணியைக் கவனிக்க ஒவ்வொரு உள்ளூர் காவல் துணை உட்கோட்டத்திலுள்ள தனிப்பட்ட போக்குவரத்து காவல் நிலையங்களில் சிறப்பான, தனிப்பட்ட பணியாளர்களை நியமித்தல் வேண்டும்.

**95. பரிந்துரை எண் (109).**—நெடுஞ்சாலைத் துறையின்கீழ் போதிய நிதி ஒதுக்கத்துடனும் நகராட்சிப் பணிகளை நிறைவேற்றுவதற்குள்ள அதிகார வரம்புகளுடனும் போக்குவரத்து பொறியியல் துணைப் பிரிவு ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

**96. பரிந்துரை எண் (110).**—தற்போதுள்ள மாநில, மாவட்ட போக்குவரத்து திட்டமிடும் குழுக்கள் திருத்தியமைக்கப்பட்டு புதிதாக ஏற்படுத்தப்பட்ட போக்குவரத்துப் பொறியியல் துணை துறையுடனும் இணைக்கப்பட வேண்டும். போக்குவரத்து கமிஷனரும், போக்குவரத்துப் பொறியியல் தலைவரும் முறையே மாநில குழுவின் தலைவராகவும், செயலாளராகவும் இருக்க வேண்டும். இக் குழுவில் காவல் துறை டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரல் (பணிகள்) காவல் துறையின் பிரதிநிதியாக இருப்பார்.

**97. பரிந்துரை எண் (111).**—பாதசாரிகளின் பாதுகாப்பிற்கு மேலும் வகை செய்தல்.

**98. பரிந்துரை எண் (112).**—ஊர்க்காவலர் பணியாளர் அமைப்பை மாற்றியமைத்தல்.

**99. பரிந்துரை எண் (113).**—காவல் நிலையம் ஒவ்வொன்றும் ஒழுக்கக் கண்காணிப்புக் குழுவைப் பெற்றிருக்க வேண்டும்.

100. பரிந்துரை எண் (114).—கணக்கிடும் பொறி நிலையம் நிறுவப்பட்டால், குற்றப் புலனாய்வுத் தகவல்கள் கிடைப்பது மேம்பாட்டையும் சிறப்புப் பிரிவுகளில் சப்-இன்ஸ்பெக்டருக்குப் பதிலாக டெபுடி இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்பட்டால் அரசியல் நிலைமை பற்றி புலனாய்வு செய்வதன் தரமும் பொருண்மையும் மேம்பாடடையும்.

101. பரிந்துரை எண் (115).—உதவி வழக்கு நடத்தனர்களின் நிலையை உயர்த்துதல்.

102. பரிந்துரை எண் (116).—உதவி வழக்கு நடத்துனருக்கு இரண்டுக்கும் மேற்படாத நீதிமன்றங்களை இணைத்தல்.

103. பரிந்துரை எண் (117).—மேஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்களில் குற்றவாளிகளின் விடுதலையில் முடிவடையும் அல்லது தள்ளிவிடப்படும் வழக்குகளின் நகல் ஒன்று, இந்த வழக்கில் புலன் விசாரணையும் சட்ட நடவடிக்கையும் எந்த அளவுக்குத் திறமையுடன் நடத்தப்பட்டது என்பதைக் கண்டறிவதற்காக காவல்துறை சூப்பிரண்டுக்கு அனுப்பப்பட வேண்டும்.

104. பரிந்துரை எண் (118).—உதவி வழக்கு நடத்துனர்-1 ஒவ்வொருவருக்கும் தொலைபேசி, சட்ட புத்தகங்களடங்கிய நூலகம் ஒன்றுக்கும் வகை செய்யவேண்டும். சட்டம், வழக்குகள் பற்றிய பத்திரிகைகளும் வழங்கப்பட வேண்டும்.

105. பரிந்துரை எண் (119).—வழக்குப் பணிகளைச் செவ்விய முறையில் நடத்துவதற்காக துணைக் கோட்டத்திலுள்ள குற்றவியல் இன்ஸ்பெக்டர் ஒவ்வொருவரும் எல்லா நீதிமன்றங்களோடும், வழக்கு நடத்தும் பணியாளர்களோடும் தொடர்பு கொண்டிருக்க வேண்டும்.

106. பரிந்துரை எண் (120).—சுருக்க விசாரணை செய்யத்தக்க வழக்குகளின் எண்ணிக்கை அதிகமாக்கப்படவேண்டும். இத்தகைய வழக்குகளை முடிவு செய்வதற்கு, சென்னை மாநகரத்தில் உள்ளது போல் வெளியூர்களிலும் கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகளும் பெஞ்ச் நீதிமன்றங்களும் (ஈராயங்களும்) நியமிக்கப்படவேண்டும். குற்றத்தை ஒப்புக்கொள்ளுபவர்கள் பண அஞ்சல் மூலம் அல்லது காசோலை மூலமாக அனுப்பவேண்டிய அபராதத் தொகைகளை நீதிமன்றங்கள் அழைப்பாணைகளில் ( Summons ) வரையறை செய்ய வேண்டும். இத்தகைய அதிகாரங்கள் மோட்டார் வண்டி சட்டம், 130 ஆம் பிரிவில் உள்ளன. இந்த அதிகாரங்கள் மேலும் பல நேர்வுகளிலும் நீட்டிக்கப்படவேண்டும்.



107. பரிந்துறை எண் (121).—நீதிமன்றங்கள் அஞ்சல் மூலம் அழைப்பாணைகளை அனுப்பலாம். வரத் தவறும் நேர்வில் பிடியாணை பிறப்பிக்கலாம். அழைப்பாணைகளைக் காவலர் எடுத்துச் செல்வதனால் ஏற்படக்கூடிய ஆட்படை ஊற்றமும் ( Manpower ) நேரமும் இதனால் தவிர்க்கப்படும்.

108. பரிந்துரை எண் (122).—நகரத் தொல்லை, தடையை அகற்றுதல், மாநகராட்சி சொத்தினை பாதுகாத்தல் முதலிய காவல்துறைப் பணிகளை கவனிப்பதற்கென்று தனிப்பட்ட காவல் நிலையம் அல்லது காவல்படை ஒன்றை ஏற்படுத்தவேண்டும் என்ற செயற்குறிப்பு ஒன்றை சென்னை மாநகராட்சி அனுப்பியுள்ளது. அதற்காக மாநகராட்சி தன்னுடைய சொந்த அமைப்பை ஏற்படுத்திக்கொள்வது விரும்பத்தக்கதாகும். அத்தகைய அமைப்பில் உள்ள மாநகராட்சி ஊழியர்களை நிர்வகித்தல், பயிற்சி அளித்தல், மேற்பார்வையிடுதல் பொருட்டு காவல் துறை அதிகாரி அல்லது அதற்கு நிகரான பதவியிலுள்ள அதிகாரிகளை அனுப்புவதின் மூலம் காவல்துறை உதவலாம். இதற்காக வகுக்கப்பட்டுள்ள முறையான திட்டங்களை ஒட்டி அந்த அமைப்பும், மாநகர காவல் நிலையமும் கூட்டாகச் செயல்படலாம். ஊர்க்காவலராக பதிவு செய்துள்ள மாநகராட்சி ஊழியர்களும், உள்ளூர் காவலருடன் இத்துறையில் உதவலாம்.

109. பரிந்துரை எண் (123).—துணைக்கோட்ட அளவிலும் அதற்கும் குறைவாகவும் உள்ள அதிகாரிகளின் பணியைப் பார்வையிடும் அதிகாரிகள், தங்கள் பார்வை குறிப்புகளில் எந்த வகையான புள்ளி விவர ஆய்வினை எழுதி வைப்பது குறிப்பாகத் தவிர்க்கப்படவேண்டும். குறித்த காலத்திற்கு ஒரு முறையிலான அந்தரங்க அறிக்கைகளிலும் அலுவலர் ரகசியக் கோப்புகளிலும் பதிவு செய்யப்பட்ட பதிவுகள் புள்ளிவிவர அடிப்படையில் அமைந்திருக்கக் கூடாது. மாநில, மாவட்ட அளவில் மட்டுமே புள்ளி விவர ஆய்வுரை அளிக்கப்பட வேண்டும். நிர்வாக முறையில் கவனம் செலுத்தவேண்டிய பிரச்னைகளை மிகுந்த பகுதிகளைக் கண்டறியவும், அப்பகுதியின் நிலைமையைக் கணிக்கவும், முதுநிலைக் காவல் துறை அதிகாரிகளுக்கு அவசியமென தகவல்களை அளிக்கும் வகையில் இப்புள்ளி விவரங்கள் ஆய்வு அமையவேண்டும்.

110. பரிந்துரை எண் (124).—காவல்துறைக்கு நேரடியாகவோ அல்லது அஞ்சல் மூலமாகவோ கொடுக்கப்படும் புகார்கள் அனைத்துக்கும் உரியவாறு பதிலளிக்கப்படவேண்டும். காவல் துறையிடமிருந்து வரப்பெறும் மேல் குறிப்புக்கு அல்லது கடிதங்களுக்குப் பதில் எழுதப்படவேண்டும். ஒருவர் கைது செய்யப்பட்டால் அத்தகவல் யாருக்குத் தெரிவிக்கப்பட வேண்டுமென்று அந்த நபர் விரும்புகிறாரோ அவருக்கு அஞ்சல் மூலம் தெரிவிக்கப்படவேண்டும்.

111. பரிந்துரை எண் (125).—எழுத்து வேலைகளை எளிதாக்கும் வகையில் காவல்துறை ஆராய்ச்சிப் பிரிவு காவல்துறைப் பதிவேடுகளையும், விவரக்கணக்குகளையும் சீரமைப்பது குறித்து ஆய்வு செய்ய வேண்டும்.

112. பரிந்துரை எண் (126).—காவல்துறைக்குத் தேவைப்படும் அச்சிட்ட படிவங்களை அத்துறையிலேயே அச்சிட்டுக்கொள்வதற்கேற்றவாறு காவல் துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அலுவலகத்திலுள்ள அச்சகம் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

113. பரிந்துரை எண் (127).—மாவட்ட ஆட்சித்துறைத் தலைவர், காவல் துறை சூப்பிரெண்டு ஆகியோருக்கிடையே தற்போது நிலவி வரும் நல்லுறவு வலுவான கொள்கையின் அடிப்படையில் அமைந்திருக்கிறது. அது மாற்றப் படக்கூடாது. இந்திய நிர்வாகப் பணிக்கும் இந்திய காவல்துறைப் பணிக்கும் இடையே பரஸ்பர நல்லுறவை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு தலைமை செயலாளரும், காவல்துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரலும் மேற்கொள்ள வேண்டும்.

114. பரிந்துரை எண் (128).—உள்ளூர் காவல் நிலையங்கள் செயல் படுவதில் பல குறைபாடுகள் உள்ளன. இதனால் பொதுமக்கள் அதிருப்தி யடைய நேரிடுகிறது. பொதுமக்களுக்கும் காவல் துறையினருக்கும் இடையே உள்ள நல்லுறவை இது கெடுக்கிறது. அத்தகைய குறைபாடுகளைத் தவிர்க்கும் பொருட்டு குறைபாடுகளின் தன்மையும், எடுக்கவேண்டிய நடவடிக்கையின் தன்மையும் குறிப்பிடப்பட்டுள்ளன. குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை மேற் கொள்ளப்படுகிறதா என்பதை காவல்துறை உறுதி செய்துகொள்ளவேண்டும். குறிப்பாக, இயன்றவரை காவல் நிலையங்களில் மகளிர் காவலில் வைக்கப் படுவதைத் தவிர்க்கப்படுகிறது என்பதை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகிறது. ஆதலால், காவல் நிலையத்தில் சிறந்த காற்றோட்ட வசதியும், துப்புரவு வசதி ஆகியவற்றுடன் காவலில் வைக்கப்படும் இடம் மாற்றியமைக்கப்படவேண்டும்.

115. பரிந்துரை எண் (132).—காவல் துறை நிர்வாகச் சீர்திருத்தக் குழு என குறிப்பிடக்கூடிய ஐந்து உறுப்பினர்களடங்கிய உயர் அதிகாரிகளின் குழு ஒன்று நியமிக்கப்படவேண்டும். தலைமைச் செயலாளர் இக்குழுவின் தலைவ ராகவும், காவல்துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் துணைத் தலைவராகவும் இருக்க வேண்டும். நிதித்துறைச் செயலாளரும், உள்துறைச் செயலாளரும் இக் குழுவின் மற்ற இரு உறுப்பினர்களாக இருக்கவேண்டும். இக்குழுவில், டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரல் பதவித்தரத்திலுள்ள காவல்துறை அதிகாரி ஒருவர்



உறுப்பினர்-செயலாளராக இருக்க வேண்டும். வெளிப்படையான காரணங் களுக்காக காவல்துறை ஆணைக்குழுவின் உறுப்பினர்-செயலாளரே இந்த உயர் அதிகாரிகள் குழுவில் உறுப்பினர் செயலாளராக நியமிக்கப்படவேண்டும்.

116. பரிந்துரை எண் (133).—தமிழ்நாடு காவல் துறை ஆணைக் குழு பணியைக் கவனிப்பதற்கு தற்போது ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பணியாளர்கள், காவல் துறை நிர்வாகச் சீர்திருத்தத்துக்கும் அவசியமெனக் கருதுகிற கால அளவுக்குத் தொடர்ந்து செயல்புரிய வேண்டும். இது காவல்துறை இன்ஸ் பெக்டர்-ஜெனரல் அலுவலகத்தில் தனிப்பிரிவாக இருந்துவரவேண்டும். இதனை 'நிர்வாகச் சீர்திருத்தம்' பிரிவு என்று குறிப்பிடலாம். காவல் துறை நிர்வாகச் சீர்திருத்த குழுவின் உறுப்பினர்-செயலாளர், காவல்துறை, இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அலுவலகத்தில் சிறப்பு அதிகாரியாகவும் (நிர்வாகச் சீர்திருத்தம்) நியமிக்கப்படவேண்டும்.

(இ) 4, 5, 8, 9, 10, 11, 12, 18, 19, 20, 21, 22, 25, 27, 28, 32, 33, 36, 40, 41, 47, 48, 49, 58, 71, 87, 95, 97, 99, 100, 101, 102, 103, 113, 117, 120, 121, 122, 124, 132, 133 ஆகிய பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டன.

(உ) ஆம்.

(எ) 1. பரிந்துரை எண் (6).—டெபுடி சூப்பிரண்டுகள், உதவித் தலை வாய்கள் அளவில் நேரடி ஆட்தேர்வு முறை நீக்கப்பட வேண்டும்.

காவல்துறை, டெபுடி சூப்பிரண்டு பதவிக்கு நேரடி நியமனம் செய்யப் படும் ஒருவர் பட்டதாரியாக இருக்கவேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. இம்முறையானது, பட்டமேற்படிப்பு படித்த மாணவர்களை நியமிப்பதற்கு வாய்ப்பு அளிக்கிறது. இம்முறை நன்கு செயல்பட்டு வந்துள்ளதால், டெபுடி சூப்பிரண்டு அளவில் நேரடி நியமனம் செய்வதற்கான தற்போதுள்ள நடை முறை தொடர்ந்து இருக்க முடிவு செய்யப்பட்டது.

2. பரிந்துரை எண். (7).—சப்-இன்ஸ்பெக்டர், காவலர் (தரம் 1) ஆகிய பதவிகளுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு மூலம் நேரடி நியமனம் செய்யப்பட வேண்டும்.

காவற் படைப்பிரிவில் சேருவதற்கு நல்ல உடற்தகுதியும், பிற சிறப்புத் தகுதிகளும் தேவையாயிருப்பதாலும், தற்போதுள்ள நடைமுறை மிகவும் மன நிறைவளிக்கும் வகையில் செயல்பட்டு வருவதாலும் சப்-இன்ஸ்பெக்டர்கள், காவலர், தரம் 1 ஆகியோரை நேரடியாகத் தெரிந்தெடுக்கும் முறை தமிழ்நாடு

அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவின் செயல் வரம்பிற்கு அப்பாற்பட்டதாக இருக்கலாமென்றும் அவர்களை நேரடியாகத் தெரிந்தெடுக்கும் பணியைக் காவல் துறையே தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

3. பரிந்துரை எண் (26).—வேலை ஓய்வு தொடர்பான விதிகள் கண்டிப்பாகச் செயற்படுத்தப்பட வேண்டும். ஒரு வாரத்தில் ஒருவருக்கு வேலை ஓய்வு தர மறுக்கப்படுமானால் அடுத்த இரு வார காலத்துக்குள் அதற்குப் பதிலாக கூடுதல் ஓய்வு நாள் ஒன்றைக் கொடுத்து அதை ஈடுசெய்யவேண்டும். மறுக்கப்படும் வேலை ஓய்வுக்கு படி வழங்கப்படுவது குறித்த தற்போதைய விதிமுறை நீக்கப்படவேண்டும்.

காவற்படை, முக்கியமான அவசர காலப் பணிகளை எப்போதும் மேற்கொள்ள வேண்டியிருப்பதால், வேலை ஓய்வை வழங்குவது நடைமுறையில் இயலாது எனக் கருதப்பட்டது. ஆனால் சிக்கனமாக செலவு செய்யவும், வேலை ஓய்வை மறுப்பதனால் ஏற்படும் செலவைக் குறைக்கவும் இயன்ற அளவு அடிக்கடி வேலை ஓய்வு அளிக்கப்படலாமென்றும் வேலை ஓய்வு மறுக்கப்படுவதானால் ஆண்டு ஒன்றுக்காகும் செலவு ரூ. 10 லட்சத்திற்கு வரையறுக்கப்படலாமென்றும் முடிவு செய்யப்பட்டது.

4. பரிந்துரை எண் (29).—காவற்படைப் பிரிவுக்குத் தனியாக வருங்கால வைப்புநிதித் திட்டம் ஒன்றிற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட வேண்டும். ஒவ்வொரு சந்தாதாரருக்கும் அரசு பங்குத்தொகை அளிப்பதன் மூலம் கடினமான, தொல்லை மிகுந்த காவல் பணிகளுக்குக் குறிப்பான இழப்பீடு அளிக்க இது வகை செய்ய வேண்டும். இதில் ஆபத்து ஏற்படும்போது ஆயுள் ஈட்டுறுதியும் குடும்பத்திற்கு ஊக்கத் தொகையாக அளிக்கப்படும் சேமநல நிதியும் அடங்கும். இதில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் பங்குத்தொகை வீதங்கள், நிபந்தனைகள், பயனடையும் தொகைகள் ஆகியவற்றிற்கு வகை செய்யப்படவேண்டும்.

திட்டமிடப்பட்டுள்ள வருங்கால வைப்பு நிதித் திட்டம் பங்குத்தொகை பெறும் வருங்கால வைப்பு நிதித் திட்டமாக இருப்பதாலும், அதனால் அரசுக்கு அதிகச் செலவு ஏற்படுமாதலாலும் காவல் துறைக்கு மட்டும் இத்திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்கினால், இதே போன்ற திட்டத்தைத் தங்களுக்கும் நீட்டிக்குமாறு ஏனைய துறைகளும் வற்புறுத்தும். எனவே இப்பரிந்துரையை ஏற்றுக்கொள்ள வேண்டாமென்று முடிவுசெய்யப்பட்டது.

5. பரிந்துரை எண் (39).—நிர்வாகப் பணியாளர் தொழில் நுட்பப் பணியாளர் உட்பட எல்லாத் தரங்களிலுமுள்ள அரசிதழ்ப் பதிவு பெறாத பணியாளர்கள் துறையின் ரொக்கப் பரிசுகளைப் பெறத் தகுதியுடையவராகச்



செய்யவேண்டும். அத்தகைய பரிசுகளுக்குச் செய்யப்படும் நிதி ஒதுக்கம் உயர்த்தப்பட வேண்டும். மதுவிலக்கு, போக்குவரத்துச் சட்டங்களைச் செயற்படுத்தும் பணியாளர்களுக்கு பரிசு வழங்குவதற்காக, மதுவிலக்கு, போக்குவரத்து வழக்குகளுக்கு விதிக்கப்படும் அபராதத் தொகையில் ஒரு பகுதியை ஒதுக்குவது குறித்துக் கருதிப் பார்க்கப்பட வேண்டும்.

புலனாய்வு, சட்டங்களைச் செயல்படுத்துதல், பிற காவற் பணிகள் ஆகியவற்றிற்காகக் காவல் துறையினர் நிர்வாகப் பணியாளர்களுக்கு மட்டுமே ரொக்கப் பரிசுகள் வழங்கக் கருதப்பட்டுள்ளதால் அலுவலகப் பணியாளர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்குவதில்லை. அவர்களுக்கு 'நற்பணிப் பதிவு' வழங்கப்படலாம். போக்குவரத்து நேர்வுகளைப் பொறுத்தமட்டில் அபராதமாக வசூலிக்கப்படும் தொகையில் ஒரு பகுதியை ஒதுக்குவதால் அத்தகைய அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்துவதற்கு இடமளிக்கும். ஆதலால் இப்பரிந்துரையை ஏற்றுக்கொள்ள வேண்டாமென்று முடிவு செய்யப்பட்டது.

6. பரிந்துரை எண் (44).—காவல் நிலையங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேர்முகச் சேவகர் பதவி, பொதுவாக ஏவலர் பதவிகளாக மாற்றப்பட வேண்டும் அல்லது தற்போது நேர்முகச் சேவகரை நியமித்துக்கொள்ள தகுதி வாய்ந்த உள்ளூர் காவல் துறை அதிகாரிகள் வீட்டு ஏவலருக்குப் பதிலாக படிகளைப் பெற வேண்டும்.

காவல்துறை இன்ஸ்பெக்டர்கள், டெபுடி சூப்பிரண்டுகள் ஆகியோரது முகாம் அலுவலகங்களின் அஞ்சல்களை வாங்கவும், வருகையாளர்களை வரவேற்கவும், வளவுகளைப் பாதுகாக்கவும், அவர்களுக்கு நேர்முகச் சேவகர்கள் அவசியம் என்று கருதப்பட்டது. அதனால் தற்போதுள்ள முறை தொடர்ந்து இருக்க முடிவு செய்யப்பட்டது.

7. பரிந்துரை எண் (46).—திருத்தியமைக்கப்பட்டுள்ள பதவிகளின் எண்ணிக்கையில் 1/9 பாகம் காலியிடத்திற்கு ஒதுக்குவதற்காக வகை செய்த பின்னர் எஞ்சிய பதவிகள் 1. பாதுகாவல்பணி, 2. சட்டத்தைச் செயற்படுத்தும் பணி, 3. பொதுப்பணி ஆகிய மூன்று பணி தலைப்புகளின் கீழ் உள்ளூர் காவல் நிலையங்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.

எளிதில் அறிந்துகொள்ள இயலும் குறிப்பிட்ட வகைப் பணிக்கான நியாயத்தை மதிப்பிட வேண்டிய அவசியத்தை முன்னிட்டு தற்போதுள்ள விரிவான பணி வகைப்பாட்டு முறையைத் தொடர்ந்து வைத்து வரக் கருதப்பட்டது.

8. பரிந்துரை எண் (64).—சிறப்பு உள்ளூர் காவல் மாவட்டங்களின் காவல் பிரிவுகளில் இருந்து, இரயில்வே காவல் மாவட்டத்தின் பயனுக்காக ஒதுக்கப்பட்ட 6½ பிரிவுகள் தவிர நான்கு பிரிவுகளைக்கொண்ட படைக்கலம் தாங்கிய ஏமக்காவல் காவல் பிரிவு ஒன்று இருக்க வேண்டும். உள்ளூர் காவல் மாவட்டங்களுக்கு அளிக்கக் கருதப்பட்டுள்ளதைப்போலவே இரயில்வே காவல் மாவட்டத்திலும் கட்டுப்பாட்டு அறை ஒன்று தனியாக இருக்க வேண்டும். மாவட்டக் குற்றப் பிரிவு மாவட்டப் புலனாய்வுப் பிரிவு ஆகியவற்றிற்கு அதே போன்று பணியாளர்களை வைத்திருக்கவேண்டும்.

இரயில்வே காவல் மாவட்டத்தில் உள்ள காவல்படைப் பிரிவுக்கு முழு நேரப் பணி இல்லை என்று கருதப்பட்டதால் மாவட்டங்களிலுள்ள படைக்கலம் தாங்கிய ஏமக் காவல்படையுடன் இரயில்வே காவல் படைப் பிரிவுகளைச் சேர்க்கும் தற்போதைய நடைமுறை தொடர்ந்து இருக்கலாம் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. கட்டுப்பாட்டு அறைகளை ஏற்படுத்துவது குறித்துக் காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் வலியுறுத்தாததால் ஏற்கவேண்டாமென்று முடிவு செய்யப்பட்டது.

9. பரிந்துரை எண் (74)—தமிழ்நாடு காவல் துறையில் (ரிசர்வ் காலியிடம் உட்பட) பணிப் பதவிகளைச் சேர்த்து தற்போது 41,276 பதவிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது திருத்தியமைக்கப்பட வேண்டும். 45,000 பதவிகளுக்கு அனுமதி வழங்கப்படவேண்டும். பணிப்பதவிகள் 'ரிசர்வ் காலியிடம்' உட்பட மொத்தம் 43,023 "ஒதுக்கப்பட்ட பதவிகள்" இதில் இருக்க வேண்டும். எஞ்சிய 1977 பதவிகள், பயிற்சிக்காகவும் 'தற்செயல்' ரிசர்வ்க்காகவும் தனியே அனுமதிக்கப்படவேண்டும். இது ஒதுக்கப்பட்ட காலியிட ரிசர்வினின்றும் தனித்து இருக்கவேண்டும்.

அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை ரிசர்வ் பதவிகளைச் சேர்க்கும் தற்போதைய நடைமுறை எளிதான நிர்வாகத்திற்கு வகை செய்கிறது. எனவே இந்த நிலைமை தொடர்ந்து இருக்கலாம்.

10. பரிந்துரை எண் (104).—ஆராய்ச்சி, வளர்ச்சிப் பணிகள் அனைத்தையும், ஆய்வு செய்யவும், ஒருங்கிணைக்கவும், மாநிலக் காவல்துறையில் திட்டமிடுதல்-ஆராய்ச்சி குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். ஆராய்ச்சியை மேற்கொள்ள எல்லா பிரிவுகளுக்கும் போதுமான நிதிகள் ஒதுக்கப்பட வேண்டும்.



காவல்துறை ஆராய்ச்சி நிலையம் ஆராய்ச்சி பணியை ஏற்கனவே மேற்கொண்டுள்ளதால் மாநிலக் காவல்துறையில் திட்டமிடுதல் ஆராய்ச்சிக்குழு ஒன்றைத் தனியே ஏற்படுத்துவது அவசியமில்லை என்று முடிவு செய்யப்பட்டது.

11. பரிந்துரை எண் (129).—இம் மாநிலச் சட்டமன்றத்தின் உறுப்பினராக உள்ள அரசியல் கட்சிகள் அனைத்தும் தமிழ்நாடு பொது பாதுகாப்பு உடன்பாடு என்று குறிப்பிடக்கூடிய ஓர் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும். அந்த கட்சிகளின் உள்ளூர் பகுதி அமைப்புகளும் அக்கட்சிகளுடன் இணைந்துள்ள பிரிவு அமைப்புகளும் பொது அமைதியைச் செவ்விய முறையில் பேணிக்காக்க ஒன்றுக்கொன்று உதவி செய்து கொள்ளவும், காவல்துறை அதிகாரிகளுடன் ஒத்துழைக்கவும் இயலும் வகையில் மேற்சொன்ன உடன்பாட்டின் நிபந்தனைகளில் வகை செய்யப்பட்டிருக்க வேண்டும். இந்த உடன்பாட்டைக் கொண்டு வருவதில் அரசு முன்னோடியாக இருக்க வேண்டும்.

மொத்தத்தில், தமிழ்நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் அனைத்தும் பொது அமைதியைக் காப்பதில் ஒத்துழைத்து வருகின்றன. சட்டம், ஒழுங்கிற்கு பொறுப்பாக உள்ள அதிகாரிகளுக்கும் அரசியல் கட்சிகளுக்குமிடையே போதிய நல்லுறவு இருந்து வருகிறது. எனவே, தமிழ்நாடு காவல்துறை ஆணைக்குழு பொது அமைதியைக் காப்பதற்கு தெரிவித்துள்ள தனி ஒப்பந்தம் எதும் அவசியமில்லை என்று முடிவு செய்யப்பட்டது.

12. பரிந்துரை எண் (130).—தமிழ்நாடு பொதுப் பாதுகாப்பு மரபு முறைக்கு செயல் வடிவம் கொடுக்கும் பொருட்டு உள்ளூர் காவல்துறை மாவட்டம் ஒவ்வொன்றிலும் மாவட்டப் பொதுப் பாதுகாப்புக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும். மாவட்டப் பொதுப் பாதுகாப்புக்குழு அமைப்பு அதனை அமைக்கும் முறை ஆகியவை குறிப்பிட்டுள்ள முறையில் இருக்க வேண்டும்.

129. ஆம் எண் பரிந்துரை குறித்து எடுக்கப்பட்ட முடிவு இதற்கும் பொருந்தும்.

13. பரிந்துரை எண் (131).—தனிப்பட்டவர் புகார்கள் குறித்தும், காவலருக்கு எதிரான குறைபாடுகள் குறித்தும் உள்ளூர் காவல்துறை அதிகாரிகளுக்கு முறையீடு செய்துகொள்ள வழக்கமான கட்சிகளின் உள்ளூர் அமைப்புகளுக்குச் சமவாய்ப்புக் கொடுக்க இயலும் வகையில் தமிழ்நாடு பொதுப் பாதுகாப்பு மரபு முறைகள் வகுக்கப்பட வேண்டும். மேற்கண்டவாறு அத்

தகைய வாய்ப்பினை அளிப்பதையும் கட்சி அரசியலில் உள்ளூர் காவல்துறை அதிகாரிகள் சம்பந்தப்படாமல் பாதுகாப்பதையும் உறுதி செய்யும் வகையில் மாவட்டப் பொதுப் பாதுகாப்பு குழுவின் அலுவல்கள் குறிப்பிடப்பட வேண்டும்.

129-ஆம் எண் பரிந்துரை குறித்து எடுக்கப்பட்ட முடிவு இதற்கும் பொருந்தும்.

## இணைப்பு-II

[553-ம் பக்கத்தில் 182 ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

### 1974-75-ல் தொடங்கப்பட்ட உட்கோட்டங்களின் எண்ணிக்

| தொடர் எண்ணும், மாவட்டத்தின் பெயரும். | புதிய உட்கோட்டத்தின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 1 செங்கற்பட்டு கிழக்கு .. .. | பொன்னேரி. |
| 2 தென் ஆர்க்காடு .. .. .. | திருக்கோயிலூர். |
| 3 தஞ்சாவூர் மேற்கு .. .. | தஞ்சாவூர் கிராமப்பகுதி. |
| 4 திருச்சிராப்பள்ளி .. .. .. | திருச்சிராப்பள்ளி குற்றப் புலனாய்வு உட்கோட்டம். |
| 5 மதுரை தெற்கு .. .. .. | தல்லாகுளம். |
| 6 மதுரை வடக்கு .. .. .. | உத்தமபாளையம். |
| 7 கன்னியாகுமரி .. .. .. | குளச்சல். |
| 8 கோயம்புத்தூர் கிராமப்பகுதி .. | உடுமலைப்பேட்டை. |
| 9 சேலம் .. .. .. .. | ஆத்தூர். |





